உ

திருச்சிற்றம்பலம்.

வடிவேலன் றுணை.

செங்குந்தமன்னர் குலதீபிகை.

இஃது

திருக்கைலாய பரம்பரை தேவக்ஷத்திரியர்

மரபினரான

உடுமலைப்பேட்டை

வைத்தியம்

பெ. தி. மலையப்ப பண்டிதரால்

பல ஏட்டுப்பிரதிகளினின்றும்

அச்சுப்பிரதிகளினின்றும்

தொகுக்கப்பட்டு

சென்னிமலை போஸ்டுமாஸ்டர்

S. K. சுப்பிராயமுதலியார் அவர்களின்

வேண்டுகோளின்படி

ஈங்கூர். அ. கணபதிமுதலியாரவர்களின்

முயற்சியால்

இந்துதேவஸ்தான கமிட்டிமெம்பர்

மகா-ள-ள-ஸ்ரீ எ. ர. இராமசாமிக் கவுண்டரவர்களின்

பொருளுதவியைக்கொண்டு

ஈரோடு

S. கல்யாணசுந்தர நாயுடு அவர்களது

நித்யகல்யாணசுந்தரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

இதன் விலை ரூ. 2-8-0.

முகவுரை.

செங்குந்தகுலமணிகாள்!

தமிழ்நாட்டின்கண் நம்மதவிஷயங்களை யுணர்த்தும்படியான
நூற்கள் மிகக்குறைவே. எனினும் அவைகள் பெரும்பாலும்
கோவை உலா, பரணி முதலியவான பத்திய ரூபங்களாக விருக்
கின்றன; நாளடைவில் அவைகளும் கவனிப்பாரின்மையால் இர
வியின்முன் மின்மினியொப்ப மறைந்தன. அவற்றுளெல்லாம்
சிற்சிலவே நாளடைவில் தங்கிநிற்பன, மற்றவை யொழிந்த தித்
துணை யெனக் கணக்கிடல் அறிவின் முதிர்ச்சி சிறிது மெய்தப்
பெறாத நாமெங்ஙனம் ஊகித்துரைக் கூடும். ஆயினும் பழமை
யாக விருந்த பல பண்டிதோத்தமர்களால் சிறிது சிறிதாகத் தே
டிச் சேகரித்து வைத்திருந்த அருமையான நூற்களை ஆங்காங்
கு காணப்படுவதாகவும் அறிகிறோம், அதுவும் முயற்கொம்பா
ய்ப் பொதுநன்மையைக் கோரி வெளிவரும் உபகாரியானோர்க்
கு பயன்படுதலின்றி செற்சிதலை முதலியவைகளுக்கு நீங்கா வா
சஸ்தானமாக விருக்கின்றது. அந்தோ! தாமுமுண்ணார் பிறர்
க்கு மீயாரெனும் பழமொழிக்கிலக்கான சில பரமார்த்தப் புண்
மாக்கள் செயல்க ளிவ்வாறாகவும் நங்குலமகிமைகள் நாளடைவி
லழிந்து நம்மனோர் பெருமையும் புகழும் குடத்திலிட்ட தீபமெ
ன மூங்கவும் பல அன்னிய மதவாதிகள் நங்குலமகிமை யிது
வென் றுணராது வாய்ப்பறையாகவும் நாக் கடிப்பாகவும் பலபித
ற்றி தமதாபாச நூல்களினும் பொறித்து வெளியிட்டுவருவதைக்
காணச் சகியா தெண்ணெண்ணித் தவித்து மனம் புண்ணான
நாம் பண்டைநாளாக நம்மரபார் பரம்பரையைப் பட்டாங்க
மாக்கி அன்னோர்களி னுபாசநூற்குப்பைகளை நம் செங்குந்தமன்
னர்குலதீபிகை யெனும் சூரையாலெரித்து நங்குலமகிமை யிது
வாகுமென விளக்கச் செங்குந்தச் சீரியவான்றோர்களால் பண்டு
பண்படுத்தி வைத்திருந்த நூற்களினின்றும் தொகுத்து அவை
கட்கு மேற்கோளாக பூர்வீக ஸ்மிருதிகளில் உண்மையாகிய சில
பாகங்களைச் சேர்த்து தற்கால நாகரீகத்தை யனுசரித்து நம்மா

ண்டியன் சிறுவரொவ்வொருவரும் எளிதி லுணரப் போதுமான இனிய தமிழ் நடையாய் இக்கிரந்தத்தை யெழுதத் துணிந்தனம்.

"எப்பொருள்யார்யார்வாய்ச்சொற்கேட்பினும்
அப்பொருள்மெய்ப்பொருள்காண்பதறிவு"

என்னும் நாயனார் திருக்கூற்றுக்கிணங்க, இந்நூலைக் கண்ணுறும் கன்னியர்கள் குணமொன்றையே நாடிக் குறைகூறார்க ளென்பதூஉம் அஃதே அன்னோர் பெருந்தகைமைக் கழகென்பது மெந்துணிபு,

1905-ளு ஆகஸ்டு மீ

இங்ஙனம்,
வை. பெ. தி. ம.

முன்னுரை.

—:o:—

ஸ்ரீ குமாரக்கடவுள் திருவருள் பெற்று விளங்குந் தன்னியர்களாகிய செங்குந்த மன்னர்களின் சீர் சான்ற சிறப்புகளும் அன்னோர்களினரிய செயற்களும் அம்மரபினர் பெருமையும் புகழும் அக்குலத்திற்கோர் திலகமென விளங்கிக் கலைமகளாரது கனதனப்பாலுண்டு வளர்ந்த கவிச்சக்ர வர்த்தியாகிய ஒட்டக்கூத்தரின் அவதாரமும் அவரியற்றிய அற்புதப் பிரபந்தங்களும் இன்னண பிறவும் கர்ணபரம்பரையாகவும் கரலிகிதங்களாலுங் கேட்டுவந்த அரிய பலவிஷயங்களும் காஞ்சி, சென்னை, புதுவை முதலிய செங்குந்த சங்கத்தலைவர்களால் வெளியிட்ட மேலான தீர்மானங்களையும் எனக்ககப்பட்டுள்ள வரையிலும் இக்கிரந்தத்தின் மூலமாகச் சுருக்கிக் கூறியிருக்கின்றேன். குலாபிமானம் பெரிது முடைய நம்மனோர் யாருமே இக்கிரந்தத்தைப் புகழ்ந்து பெற்றுப் பரவச்செய்வாராயின் இதனைத் தொடர்ந்த மற்றக்கிரந்தங்களையும் வெளியிடுதற் கனுகூலமாகலாமெனவே சித்தமுள்ளேம்,

இங்ஙனம்
வை. பெ. தி. ம.

உ

சிவமயம்.

குமரன்றுணை.

செங்குந்தமன்னர்குலதீபிகை.

காப்பு.

விநாயகர் வணக்கம்

வெண்பா.

செங்குந்த மன்னர் செழுந்தீபிகையொன்றைப்
பொங்குலகிற் போற்றிப் புகலவே—கங்கையா
டங்கமலர் தந்தவெழிற் றந்திமுகத் தோன்வனசத்
துங்கமலர்த் தாளே துணை.

பரசிவத்துதி.

பரவொளியைச் சிதாகாசத் தொளியையெலா மாயியக்கும் பருதி கண்... றவொளியை யண்டங்க ளத்தனையுந் திகழொளியைச் சிவமா யோங்கும் பேரொளியைத் தன்னுருவங் கண்டவா தங் கண்ணொளியைப் போக்கத், தோவொளியை யேய்ந்தில முங்கடந்ததிலத் துள்ளொளியை யுன்னி வாழ்வாம்,

பராசத்தி துதி,

பெத்தநிலை ... புற்றழிலெம் போற்றுயிர்க் கிரங்கிமலம் பரித்தல் சேர்ந்தி, புத்தமுதங் கொடுத்தமுத்தி சாதனமா நடைப யிற்றிப் பவ... னவே ருக்கிச், சித்தமுயிர் சிவமாக்கிச் சிவனருணை டைக்காணுஞ் செயன்மேற் கொண்டு, தத்தமது மனவெளியு டிருக்குமருட் டாயுபய சரணந் தாழ்வாம்,

முருகக்கடவுள் துதி.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கயிலாயமுற்ற வரனருளா லுதித்து வளர்கருணாகரக் குமர வேள், அயில்வேல்விடுத்த சூர்கிளைவேரறுத்தமர சிறைமீளவிட் டருள்வார், பயில்வேதனைச்சிறையி லிடுமீளிபெற்றுவலி படர் சே... றலைசைமயம், மயில்வாகனக்குரிசி லிருவாரிசக்கழல்கண் மறவா துளத்தினினைவாம்,

நந்திதேவர் துதி.

கலிவிருத்தம்.

வெந்தி யங்கா ளீறணி மெய்த்தவர்
புந்தி யந்தலப் போதனைப் போற்றமா
வந்தி யம்பெற வானவ ரேத்திறு
நந்தி யங்கண னந்தனை வாழ்த்துவாம்.

அவையடக்கம்.

குழகுச் செக்குந்த ரீபிகை கூறினேன்
அழகுப் பமொழிக் கான கவிஞரென்
கிழலைத் தீமொழிக் காற்றிட வேண்டுமோர்
மழலைச் சேய்மொழிக் கன்னை மகிழ்வபோல்,

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

செங்குந்தமன்னர்குலதீபிகை.

செங்குந்தமரபினர் மேலோர் என்பதற்கு சாஸ்திர திருஷ்டாந்திரங்கள் வருமாறு.

நாவினுன் மழுவெடுத்த
ஞானப்பிரகாச வள்ளலார் அருளிச்செய்த வீரநாராயணர்விஜயம்
சிறப்புப்பாயிரத்தில்
4-வது கவி.

சிவகாமிஅம்மையார்துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியிடத்தேயுதித்தவாறுபொறிகண்டஞ்சியகன்றுதன்னொண்
பாதமலர்நூபுரத்துநவமணியினினத்தினிறம்பரித்துக்காட்டி
பேதினவசத்திகளாமிவ்விளையாட்டருளுகின்றவிறைவியென்னுந்
தீதிலருட்டில்லையுறைசிவகாமசுந்தரிதாள்சென்னிசேர்ப்பாம்.

(இதன்பொருள்.) சிவபிரான் நெற்றிக்கண்களிடத்துத்தோன்றிய ஆறு தீப்பொறிகளைநோக்கிப் பயந்துநீங்கி, தமது அழகிய திருவடிமலர்களி லணிந்திருந்த பாதச்சிலம்பினுள்ள நவரத்தினங்களின் இனத்தினது நிறங்களைப்பெற்று உருக்கொண்டு, குற்றமற்ற நவசத்திகளாகத் தோன்றப்புரியும், இத்திருவிளையாட்டைச்செய்தருளும் தலைவியென விளங்குகின்ற, கொடுமையற்ற திருவருளுடைய சிதம்பரத்தில் வீற்றிருந்தருளும் சிவகாமசுந்தரியாரது திருவடிகளை எமது சிரசிற்கணிவாம், என்றவாறு.

உ

செங்குந்தமன்னர்குலதீபிகை

இதில் — சிவபெருமான் நெற்றிக்கண்களிற் றோன்றிய தீப் பொறிகளைக்கண் டஞ்சியகன்ற அம்பிகையாரது, திருவடிகளி லணிந்துள்ள பாதச்சிலம்பின் நவமணிகள் சிதறி, அந்நவமணிக ளும் நவசக்திகளாயினவென்பதை இதனாலறிக.

கவி.

நஞ்சயின்றவனெற்றிநாட்டத்தினனல்கு
வெஞ்சுடர்ப்பொறிவெம்மையையாற்றலள்விமலை
செஞ்சிலம்படிதாக்கலினவமணிசிதற
வஞ்சியோடினளித்திறமுணர்ந்தனளகத்துள்.

எனவும்.

எண்ணிலாநவமணிகளினுமையுருவெண்ணத்தாங்
கண்ணினுற்றெறிந்தருளினல்வம்மெனக்கழற
வண்ணமேலோர்வகைமணிக்கொருசத்திகளாக
நண்ணினார்நவசத்திகளமரர்நற்றவத்தால்.

எனவும் வரும் கந்தப்புராணத்திருவிருத்தங்களானுந் தெளிக.

ஈதல்லாமல்.

ஞானப்பிரகாசசுவாமிகள் அருளிய செங்குந்தர் பிள்ளைத்தமிழ்
காப்புப்பருவத்தில் 10-வது கவி.

முப்பத்துமுக்கோடிதேவர்.

காரணிமதிக்கவேல்முப்பத்திரண்டறஞ்சகலவுயிருந்தழைக்கச்
சங்கரனளந்துதருமிருநாழிநெற்கொண்டுதவிராமலேவளர்த்த
பூரணிபயோதரிகவுமாரிமகமாயிதேவிபாதச்சிலம்பிற்
செம்மையுடனேவந்துபூமிதனையாளுமோர்செங்குந்தரைப்புரக்க
காரணியதிருமேனிமாயாவிநோதனுங்கஞ்சாசனக்கடவுளுங்
கரிமுகக்கணபதியுமுருகனற்றேவனுங்கன்னிமாரோரெழுவரும்
[illegible]விரிசெய்யசெவ்வாய்க்கலைமடந்தையுமுளரி[illegible]மங்கையும்
[illegible]மலர்சூழ்கற்பகாடவியில்முப்பத்துமுக்கோடிதேவர்களுமே

எனவும்.

ஷை நூலில் செங்கீரைப்பருவம் 2-வது கவி.

இந்திரன்முதற் றேவர்யாவருங் கயிலைமலை யிறைவன்முன்னின் றாசுர, ன்கலிற்படும்பா டனைத்தையுமொழிந்திட நம்மீசனருளமி ரங்கித், — தந்திடுநுதற்கண்ணி னழலெழுப்புஞ் சுடர்தனைக்கண் டுபார்வதியுளக், தனிலஞ்சியோட வவள்பாதச்சிலம்பிணைகள் தா க்கநவமணிகள்சிதறப், — னைபங்கொடிமடந்தையர் [illegible]ளொன்பதி ன்மராகியே பரமனைக்கண்டவுடனே, பரிவுகொடுகெற்பமாய் வீர வாகுவினுடன் புண்பாகவந்துதோன்றிச், — செந்திருவிளங்க வே வந்தலட்சம்வீரர் செங்கீரையாடியருளே, சேவலங்கொடியா ளர் மேவிடுந்தயவாளர் செங்கீரையாடியருளே.

எனவும்.

ஆந்தமில் விளையாட்டுள்ள வறுமுகக் கடவுடன்னைத்
தந்திடு மெல்லியன்னேன் றனையந் தலைவராக
முந்திய விறல்சேர்மொய்ம்பன் முதலிய விலக்கத்தொன்பா
னந்திதன் கணத்தினேரை நங்கைபா றுதிப்பச்செய்தான்.

எனவரும் கந்தப்புராணத்தாலுமுணர்க.

இதில்— இக்கவிதைகளினாற் பார்வதியாரது பாதச்சிலம்பி லிருந்து முதிர்ந்த நவமணிகளிடத்து நவசத்திகள் உற்பவித்து அதினின்று வீரவாகுதேவர் முதலிய லக்ஷம் வீரர்கள் உற்பவித் ததாக மேற்கவிகள் கூறப்பட்டிருக்கிறது.

பழனித்தலப்புராணம் கடவுள் வணக்கம்

19-வது கவி நவவீரர்.

பாலொளிவெண்ணீற்றினர் செம்பவளவொளிச்
சடையினர்பார் வதிதன்பாலர்
சூலொளிவாட் பலகையர்சூர்முதறடிந்த
வேற்கிறைவர் துணைவர் தூய
வாலொளிய கரெயிற்றர்வீரவாகுவைமுதல
[illegible]ற்றம்
பேரொலொளிரொன்பதின் மரையும்விரைமலர் தூயத்
தூய்ப்பணிந்து போற்றுவாமால்.

(இ-ள்) பால்போலும் நிறத்தையுடைய வெள்ளிய திருநீற்றையுடையவரும், பவளம்போலும் சிவந்தநிறத்தையுடைய சடைமுடியினரும், உமையம்மையாரின் புத்திரரெனச் சொல்லப்படுவோரும், சூலம், ஒளிபொருந்திய வாள், கேடகம் என்னும் ஆயுதங்களை யுடையவரும் சூரபன்மனாகிய முதல்வனைக்கொன்ற வேலாயுதத்திற்குந் தலைவரான சுப்ரமணியக்கடவுளுக்குத் தம்பிமாராயிருப்பவரும் வெண்ணிறத்தையுடைய கூரிய பற்களையுடையவரும் ஆகிய வீரவாகுதேவர் முதலாகவுள்ள இரத்தினங்களின் காட்சிபோல விளங்கும் வீரர்கள் ஒன்பதின்மரையும் வாசனை பொருந்திய புட்பங்களை சொரிந்துசொரிந்து வணங்கி துதிப்பாம்.

சதாசிவமூர்த்தியின் ஆறு திருமுகங்களினின்றும் ஆறு பொரிகள் தோன்றி உலகெங்கும் பாத்தல்கண்டு இறைவி அஞ்சி ஓடினள். அதனாலே அவள் திருவடிச்சிலம்புகளிற் பதிந்துள்ள நவரத்தினங்களும் வீழ்ந்தன அவை ஒன்பதும் ஒன்பது சத்திகளாகி இறைவனைபார்த்த மாத்திரையிலே மோகமுற்று கருப்பவதிகளாயினர். அவரிடத்தினின்றும் தோன்றினவரே நவவீரர் எனப்படுவார் அவர்கள் பெயர்வருமாறு:— வீரவாகு, வீரகேசரி, வீரமாமயேந்திரர், வீரமாமகேஸ்பரர், வீரபுரந்தரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர், வீரராந்தகர், வீரதீரர், என்னும் நவவீரர்கள் உற்பவித்தனர்கள்.

ஈதல்லாமல்:

குமாரதந்திர ஆகமத்தில் சுப்ரமண்யபூஜாவிதி நியாசத்தில் கிரந்தசுலோகத்தின் மொழிபெயர்ப்பு.

வீரவாகுர்வீரமார்த்தாண்ட
வீரகேசரிதாந்தரவீரசூர
கௌரிநேயவீரஉத்தண்டசிலா
வீரபத்மோவீரதெண்டோ.
இத்தியேவம்பூஜயேத்க்ரமாத்.

எனவும்.

தேடுவார் வலமாய்வந்து தெரிசிப்பார் சென்னிமீது
சூடுவார் மலரேதாவித் தொழுதகை கூப்பிநிற்பார்
பாடுவார் காவென்றம்மைப் பரிவினானந்தமாக
வாடுவார்குகன்கைச்செவ்வேற் கருந்துணைக்குந்தமென்றே.

என்று தெய்விகபிரபந்தமாகிய ஈட்டிஎழுபதென்னு மருட்கவியானுந் தெளிக.

இதில் — இக்கவிதைகளினால் வீரவாகுமுதலிய நவவீரரையும் அவர்கள் குந்தத்தையும் சிவாலயங்களில் பூஜித்து வருவதாகவும் மலர்களால் அர்ச்சித்து வருவதாகவும் பாதத்தில் வீழ்ந்து வணங்கிவருவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

செங்குந்த மான்மியக் கவி.

சிவைபதச்சிலம்பினுதிர்மணிவல்லித்
தெரிவையோடொன்பதுமடவார்
சிவபிரான்றன்னைநோக்கினர்கர்ப்பஞ்சேர்ந்து
நம்வீரவாகுடனே
நவவயவரைஈன்றெடுத்தாரன்னோர்
நல்லகுந்தாயுதம்பெற்றே.
உவமையில்குகனற்றுணைவராய்ச்சூர
னொடுக்கினாரென்றுலகளித்தார்.

இதில் — தேவியின் காற்சிலம்பிலிருந்து முதிர்ந்த நவரத்தினங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருபெண்களாய் உற்பவித்ததாகவும் அவர்களிடத்திலிருந்து வீரவாகு தேவர்முதலிய ல[illegible]ர்கள் ஜெனித்ததாகவும், சத்தியினால் செங்குந்தாயுதம் பெற்றதாகவும், ஸ்ரீ கந்தபிரானுக்கு சகோதரர்களென்றும், சூரஸம்மாரம் செய்தவர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

௬ செங்குந்தமன்னர் குலதீபிகை.

இரட்டையர்களருளிச்செய்த
கச்சியேகாம்பரநாதர் உலாப்பிரபந்தத்தில்
சிவகணங்களோடுங்கூட்டி சிறப்பித்தோதிய
கவி.

ஓராயிரத்துத்தொளாயிரவருழிமுதற்
பேராய்நிறைந்தபெருமையரும்.

என்றும் தெய்விகவாக்காற் காண்க.

இதில் — ஓராயிரத்துத் தொளாயிரவரின் வர்க்கத்தினர் செங்குந்தர் என்று கூறியிருக்கிறது.

ஈதல்லாமல்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர் அருளிச்செய்த
ஈட்டிஎழுபதில் 16-வது கவி.

சலம்பிரியாதசூட்டுச்சாவற்கேதனமெஞ்ஞான்றும்
வலம்பிரியாதசெவ்வேட்குறுதுணையாகமன்னுட்
குலம்பெறவீந்தாரென்றங்கொடியுமைதந்தவிட்டி
நலம்பெறுமிந்தக்குந்தர்ப்பரிசுபோனட்டிலுண்டோ.

இதில் — செங்குந்தர்கள் சிவனது மரபினரென்றும் உமையவளால் கைவேலைப்பெற்றனரென்றும் பொருள்தோன்ற கூறியிருக்கிறது.

ஈதல்லாமல்.

மறைஞான சம்பந்தசிவாசாரியர் செங்குந்தர் குலம் “சிவகுமாரனுடைக்குலம்” ஆனதால் மற்ற எல்லாவற்றினும் சிறந்த குலம் எனவும் அவர்கள் கரத்தாற் பரிசித்த கூழ் தேவாமுதத்தினுஞ் சிறந்த சிவப்பிரசாதமாகுமெனவும் கூறினரென்ற

கவி.

உலத்தினிற்புட்பராகமெணியினிற்கதிராமெக்த
புலத்தினிற்கருப்கண்வாவிபூவினிற்கமலஞ்சொல்லுங்
குலத்தினில்வீரக்குந்தம்குன்றினின்மேருக்குன்றந்
தலத்தினின்மதுரைமேலாந்தரமெனுந்தகமைத்தம்மா.

எனவும்.

சொக்கனோமின்னருரைத்தவத்தரைக்குலத்தில்வேத
மாக்களைச்செவைக்கொன்றுன்செய்நன்றிமறந்தானுசா
ஞக்கமதழித்தான்பாவமனைத்துஞ்செங்குந்தர்வீதி
தெக்கிடப்பிச்சைவாங்கித்தின்றிடத்தீருமன்றே.

எனவும் வரும் மதுரைப்புராணத் தலவிசேடப்படலத்
திருத்தங்களாலுந்தெளிக.

அல்லாமல்.

ஈட்டிஎழுபதில் 29-வது கவி.

இந்திரனயன்மாறேவர்யாவர்க்குமுதன்மையாக
வந்தபான்மையினூற்சூலமூழப்படையத்தனுக்கு
முந்தியசாமந்தானுமுதலியராகையாற்செங்
குந்தர்சந்ததிக்குமப்பேர்முதலியரென்றுகூறும்.

(இ-ள்.) இந்திரன் பிரமன் விஷ்ணு முதலிய தே
வாவருக்கும் முதன்மையாக ஆதியி லெழுந்தருளிய
யால் சூலமும் மழுவாயுதமுந் திருக்கையிலுடைய பரம
ஆதிநாமம் முதலியரென்றுந்த தாதலால், அம்மரபில்
ங்குந்தர் சந்ததிக்கும் முதலியரென்று அந்தநாமத்தை
கக்கூறும். எ-று.

இஃது ... குந்தர்களுக்கு முதலியரென்னு ...
ற்குக் காரணங் கூறியிருக்கிறது.

இக்காலத்தில் முதலியரென்பது முதலியாரென மரு...

விஜய[illegible] என்னும் நூலில் வீரவாகுதேவர் துதி.

13-வது கவி.

பேரவாகுப்பிறந்துழலெம்மனோர்
கோரவாகுலக்கூட்டமியாவையும்
பேரவாகுப்பிரான்றுணைக்குத்துணை
வீரவாகுவின்மெல்லடிபோற்றுவாம்.

(இ-ள்.) பேராசைப்பெருக்காற் பூவுலகிற் பிறவியெடுத் துழல்கின்ற என்போன்றவர்களின் கொடுமை மிக்க துன்பத்தொகுதியனைத்தும் ஒழியும்படி ஆகுவாகனராகிய விநாயகக்கடவுளின் சகோதரராகிய முருகக்கடவுளுக்குச் சகோதரரான வீரவாகு[illegible]வரின் மிருதுவான திருவடிகளைத் துதிப்பாம்.

☞ விநாயகக் கடவுளின் சகோதரருக்கு சகோதரர் என்பதற்கு பிரமாணம்.

கவி.

[illegible]பரவாகுவையுடையவனிளவல்பேரருளாற்
[illegible]ரவாகுலம்வானவர்பெறுவகைதொலைப்பா
[illegible]னரவர்குழுஞ்செம்மணிப்பாவைதன்னிடத்தில்
[illegible]ரவாகுவந்துதித்தனனுலகெலாம்வியப்ப.

[illegible]

[illegible]ன்னியதுகேட்டுனைமந்தர்க்கவி[illegible]ருள
வர்க்கெல்லாஞ் சிவன்செ[illegible]வ்வேறு
[illegible]கா[illegible]ல்சுடர்வாளுதவியர்[illegible]யில்
[illegible]ருமேமாரிலக்கந்தனயமோ[illegible]
[illegible]கீர்களுமொன்றிறுங்கட்கிறைநயவ[illegible]
சேனைநீங்கலின்றி

பேலவன்பணித்தனசெய்தொழுதுதிசெ[illegible]
றனவரும்பிசைந்துதாழ்ந்தார்.

என்று வரும் கந்தப்புராணத் திருவிருத்தங்களாலுந் தெளிக.

இதில் — வீரவாகு என்பது சுத்தவீரத்தன்மையுடைய புயங்களைப்படைத்தவ னென்பதை விளக்கிய காரணப்பெயர். வீரத்தன்மையை விளக்கற்குப் புயவலியே முக்கிய மென்ற

கவி.

நாடியபொருள்கைகூடுஞ்ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கு
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே.

என்னும் கம்பராமாயணச் செய்யுளிற் காண்க.

ஈதல்லாமல்.

செங்குந்தவீரர்கள் முசுமுகவேந்தனுக்கு தங்கள்
குலப்பெயரையும் தங்கள் குலப்பெண்ணையும்
கொடுத்தார்கள் என்பதற்கு பிரமாணம்,
கந்தப்புராணத்தின் கவி.

இன்னணம்மவரொழுகுறநுமெய்ம்மிறையுலகிறைவை[illegible]க்கா
தின்னுறும்பெயரின்மற்றிவருறும்வேற்பெயர்சிறுவியாண்டுகு
சொன்னயம்பெறமுசுகுந்த[illegible]வந்தாசெனச்சொற்றிகற்று
மென்னவின்றுண்மல[illegible]னும்பன்னுறுவிபல்பிரின்றான்.

எனவும்.

அந்தமில்வன்மைசான்றவாப[illegible]லம்புயத்தோன்புட்ப
க[illegible]தியென்னுரைபெற்றுள்ளகன்னிகைதன்னைவேட்டுச்

சிந்தைதனி[...]கிழ்வொடுசேர்ந்துசித்திரவல்லியென்னும்
பைந்தொடிதனையயன்பாற்பயந்தனன்பதுமனின்போல்

எனவும்.

ஆத்தகுபொழுதிற்பின்னையனகனேசனகனென்னும்
புத்திரர்தம்மைநல்கிப்புவனிபூண்முசுகுந்தற்குச்
சித்திரவல்லியென்னுஞ்சீர்கெழுபுதல்விதன்னை
மெய்தருவதுவைநீரால்விதிமுறைவழாமலீந்தான்.

இதில் — இக்கவிகளினாற் செங்குந்தமரபினர் ஆதியில் சவீரர்களென்னும் தேவாம்சமுடையரா யிருந்து முருகக்கடவுளின் கட்டளையால் முசுகுந்தனுக்கு தங்கள் குலப்பெயரையும் குலப்பெண்ணையும் கொடுத்து சம்பந்திகளாய் மானவாம்சம்பெற்று அதுமுதல் அரசர்களாயிருந்தார்க ளென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

குமாரக்கடவுளின் கட்டளையை வீரவாகுதேவர் மறுத்ததன்றி
முசுகுந்தசக்கரவர்த்தியை இழித்துக் கூறின வென்பதை
யும் அதைக்கேட்ட குகப்பெருமான் சினந்து மறுத்
ததோடத்திற்கு மானவாம்சமடைவாயெனக்
கட்டளையிட்டனரென்பதைப்பற்றிய
கந்தபுராணக் கவி.

முழுதருட்புரிதருங்கடவுள்சொல்லினைவியேமுடிவதில்லாச்
செழுமகிதன்குடைச்சூர்குலந்தனையடுந்திறவினோங்கள்
பழிப்படையாளுவின்வழிவருஞ்சிறும[...]ன்பாங்கராகி
விழிதொழிற்புரிகிலோமெனமறுத்[...]செய்தாரியாரும்வீரர்.

எனவும்.

ஞானநாயகனவர்மொழிதனை[...]க்கேதாக்குரம்முறைமறுத்தீ
ரானதோர்பான்மையானீர்[...]மானுடவராயவனிமன்னன்

சேனையாயிப்புறம்போற்றியேயபற்பகற்சேர்கீர்த்தன்னர்
வானுளோர்புகழவேநோற்றுநம்பக்கலில்வருதிரென்றான்.

ஈதல்லாமல்.

ஸ்ரீ கந்தவிரதவிலாசத்தில் சுப்பிரமண்ணிய ஸ்வாமி சொல்

விருத்தம்.

விடுத்தாஞ்சொல்லைமாற்றிவிளம்புதல்தகுதியாமோ
தடுத்தெதிருரைக்குந்தன்மைக்ஷத்ரியர்க்குரித்தாஞ்சாபம்
கொடுத்தனநீங்களெல்லாருருவலயமனிதராய்முன்
னெடுத்தவித்தேவதேகமேகிடக்கடவதின்றே.

(இ-ள்) நாம் கட்டளையிட்டதை மறுத்துச் சொல்வது தகுதியாகுமா, அப்படி தடுத்துப் பேசுகிறகுணம் க்ஷத்திரியர்க்கு உசிதமல்லவா, நீங்கள் தடுத்துபேசினபடியால் உங்களுக்கு இந்த தேவதேகம்நீங்கி மனித தேகம்வரக்கடவது என்கிற சாபம் கொடுத்திருக்கிறோம் வீரர்களே. எ-று.

எனவும்.

ஷ௸ விலாசத்தில் நவவீரர்கள் சொல்

கொச்சகம்.

முன்னவனேயெங்களுக்குமோக்ஷமயலாமனித
சின்னதனுத்தந்துவிட்டீர்சிறியோங்களறியாமல்
என்னபிழைசெய்தோமோவேதுமறியோங்குகனே
யின்னமிந்ததேவதனுவென்றருள்வீரெங்கோனே.

(இ-ள்) கேளும் எங்கள் முதல்வராகிய முருகநாதனே ஆசையும் அறியாமையையும் விளைவதற்கிடமாகிய இந்தமானிட தேகங்கொடுத்துவிட்டீர் முன் என்ன வினைசெய்திருக்கின்றோமோ அறிகிலோம் இப்போது இழந்துவிட்ட தேவதேகம் எக்காலத்திற் கொடுப்பீர் எங்கர்த்தனே. எ-று.

எனவும்.

செங்குந்தமன்னர்குலதீபிகை.

ஷ கைலாசத்தில் சுப்பிரமண்ணியர் சொல்

விருத்தம்.

அந்தநாள்சூரபத்மவசுரனைக்கொன்றூகாகம்
வந்துதெய்வானைதன்னைமணஞ்செயும்பேர்தக்கூட்ட
முந்தரம்பையர்களும்மைமோகமேகொண்டாரன்றோ
சுந்தரநீங்கள்கண்டதொடர்பெதம்பிள்ளைகளீரே.

(இ-ள்.) நாம் அக்காலத்தில் சூரபத்மனை ஜெயித்து தேவலோகம்வந்து தெய்வானையை கலியாணஞ்செய்யும்போது அம்மணப்பந்தரில் வந்த தேவகூட்டங்களில் முந்தியிருந்த அரம்பையர்கள் உங்கள் யௌவனத்தைக்கண்டு மோகித்தார்கள் அவர்கள் அழகுகண்டு நீங்கள் மோகித்தீர்கள் அவ்வினைக்கீடாக மக்கட் பிறவிகொடுத்து நாம் அவ்வினையை பூட்டிவிக்கிறோம் இதுதான் றகசியம் என் துணைவரே. எ-று.

எனவும்.

விருத்தம்.

அன்னையால்தந்தருந்தடங்கைகொண்டுலகமித்த
மன்னனுக்காக்கிரமமால்வழங்குவெம்புலியதாகை
தன்னையேயுயர்த்திசோழத்தலைவர்பாற்பிறந்ததேவ
கன்னியர்மணந்துகைக்கொள்குலமிகங்கண்டுவாரீர்.

(இ-ள்.) நமது மாதாவாகிய உமாதேவியால் கொடுக்கப்பெற்ற செங்குந்தங் கையிற்கொண்டு உலகமுழுவதும் ஆளும் ஏகசக்ராதிபத்தியம் இந்த அரசனுக்குக் கொடுத்துவிட்டு என்னால் சூரசம்ஹாரஞ்செய்து அவன் கையிற்பறித்து உங்களுக்கு கொடுத்தப் புலிக்கொடியை இந்த உலகத்தில் நிலைபெற வெற்றிக்கொடியாக காட்டி சோழவரசர்கள் மரபிற் பிறந்திருக்கும் தேவ அரம்பையர்களை மணந்து நவவீரரில் முதல்வீரனாகிய, உன்மரபினரென்னும் பொருள் தோன்றவீர, வாகுவென்பதில், வாகு, என்பது, கையெனவும், வீரம், என்பது, கோள், எனவும், இவ்விரு

கூற்றும் புணர்த்திய தொடர்மொழியில், அ[…] என்னும் உரித்தி லை பண்மை பலர்பால் விகுதியோ, கைக்கோ[ள]ரென்னும் பெய ரையுடைய செங்குந்த குலத்தை அபிவிர்த்தியாக்கிவைத்து நம து பதவி வரக்கடவிர் துணைவரே, எ-து.

ஈதல்லாமல்.

செங்குந்த வேல்பதிகம்

7-வது கவி,

மையிலகுநிவனைகளெய்யவகமுள்ளினரை
வந்தாகாக்குங்குந்தவேல்
வாதமலியுஞ்சட்டிவிரதமிகுமுகருந்த
மன்னவனிருந்தவத்தால்
செய்யமயிலேறுமுருகையனுடனுகவே
தென்னுடுவருகுந்தவேல்
தேவசனுவங்குதசிமானவதனுப்பெற்றிச்
செகமிருத்திடுகுந்தவேல்
வெய்யவனருங்குலத்தய்யுமாமாதரை
மீமணப்புரிகுந்தவேல்
வீராதுமகண்மழக்கிளியையுங்கிளியையும்
வேந்தனுக்கிருந்தவேல்
தொய்யின்முல்மங்கையர்கண்மையனுறமெழினிலவு
சுத்தகவிராங்கை
சுந்தரகந்தவேல்கந்தனுக்கினியவேல்
தூயசெங்குந்தவேலே.

இதில் — நவவீரர்கள் முசுகுந்தச் சோழன் மரபில் தோன்றிய தேவமாதர்களைக் கலியாணஞ் செய்துகொண்ட[தா]கக் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

கந்தபுராணம்

கவி.

அன்னதோர்காலந்தன்னிலரம்பையரவனியாளு
மன்னவர்தம்பாற்சேறன்றிவளர்தலும்வாகைமொய்ம்பின்
முன்னவன்முதலோர்க்கெல்லாமுசுகுந்தவேந்தனுந்தக்
கன்னியர்தம்மைக்கூவிக்கடிமணமியற்றுவித்தான்.

இதில் — தேவமாதர்களுக்கு மணாளர் என்பதைப்பற்றிக் கூற
பட்டிருக்கிறது.

அதல்லாமல்.

செங்குந்தபுராணம் மானவகாண்டம் மணம்புரிபடலம்

34-வது கவி.

தெருண்டோருள்ளக்குருமணியாய்த்திகழும்
குமரன்வரத்தாலும்
சரண்டாவிறையோன்றருமணியேயென்ன
சட்டிவிரதமெனும்
மரண்டான்கொண்டதிணமணியின்குலப்பெண்
கொண்டமுறையாலு
மிரண்டாவருணத்தவராகியிருந்தார்வீரர்
இருநிலத்தே.

இதில் — வீரர்கள் சோழன் மரபில் அவதரித்திருந்த தேவமா
தர்களை மணஞ்செய்து கொண்டதால் இரண்டாம் வ
ணத்தவர் அதாவது க்ஷத்திரியர் என்பதைப் பற்
கூறப்பட்டிருக்கிறது.

அதல்லாமல்.

கந்தப்புராணம் தக்ஷகாண்டம் கந்தவிரதப்படலம்

40-வது கவி.

எனையவீரர்தாமுமியல்புநிவழாமல்வேட்ட
தேனிவர்குழலாரோடுஞ்சிறந்தவில்வாழ்க்கைபோற்றி
பானலங்குதலைச்செவ்வாய்ப்பாலரைநீலவேற்கண்
மானனையாரைநல்கிமனுகுலத்தோன்றியுற்றார்.

இதில் — வீரர்கள் மநுகுலம் அதாவது க்ஷத்திரியர்குலமென்று கூறப்பட்டிருக்கிறது.

அதல்லாமல்.

அகஸ்தியமகாமுனிவர் அருளிய ஜாதிஉற்பத்தி நூலில்

35-வது பாட்டு.

வாரப்பா இன்னமொருவரிசைகேளு
வண்மையாம்வீரர்குலம்விளம்பக்கேண்மோ
தாரப்பாவீரமார்த்தாண்டரென்போர்
தண்மையுறுந்தேவக்ஷத்திரியராகி
கூரப்பா இவர்செயலும்யாதோவெனில்
குவலயத்திற்கொண்டிடுநற்பகையையெல்லாம்
காரம்பாகருவறுத்து அடங்காவீரர்
கருணையாமிவர்குலஞ்செங்குந்தந்தானே.

இதில் — வீரமார்த்தாண்டதேவர் தேவக்ஷத்திரியர் என்றும் பகைவரையெல்லாம் கருவறுத்து அடங்காத வீரரென்றும் செங்குந்தர் குலமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அதல்லாமல்.

கொங்கணர் 716-ல் நந்தீசர்மரபு 22-வது பாட்டு.

மறைவானநந்திசர்மர்பேடுகின்றுல்
மர்க்கமுடன்செங்குந்தகோத்திரமாகும்

நறைவானவேகன்ஸ்மகன்றானும்
நலமானவீரவாகுதேவனென்று
தறையினிலேதேவக்ஷத்திரியனென்று
தருவாகவம்சத்தின்பெரும்பெற்று
உறைவானமுசுமுகனும்வளவனுக்கு
உண்மையாந்துணைவனென்றேதோன்றலாச்சே.

இதில் — நந்தீசர் வீரவாகுதேவனென்றும் செங்குந்த கோத்திரமென்றும் தேவக்ஷத்திரியனென்றும் முசுமுகச்சோழனுக்கு துணைவனென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்,

கருவூரார் 205-ல் 25-வது பாட்டு.

சாதியாயின்னமொருமார்க்கங்கேளு
சாங்கமுடையா ஹுரைப்பென்மைத்தாபாரு
ஆதியாம்வீரகேசரியாந்தேவர்
அன்பானபரிதிகுலஜாதியாரும்
நீதியாம்சேனைக்குத்தலைவனென்று
நிஷ்களங்கமாகவல்லோனுலகிட்டோரும்
பாதியாம்சடையணிந்தநம்பிரானும்
பார்த்துவைத்ததனால்தனிலேகாணலாமே.

இதில் — வீரகேசரிதேவர் சூரியகுலம் அதாவது க்ஷத்திரிய குலம் என்றும் சேனைத்தலைவனென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

போகர்ஜாதி உற்பத்திநூலில் 18-வது பாட்டு.

பாலின்விபூதிப்பரணியின்னங்கேளு
பாங்குடனேநவவீரர்ஜாதிபேதம்

வாகில்லைவரத்தினலுதித்தசித்து
வள்ளலேபூமிதனிலிருந்தசித்து
காவில்லைகொண்டதொருக்ஷத்திரியஜாதி
கருவானஜாதியென்றேசெப்பலாகும்
நாவில்லைசொல்வதற்குயாராலாகும்
நலமாகத்தலைவரென்றேகாட்டலாமே.

இதில் — நவவீர தேவர்கள் க்ஷத்திரிய ஜாதியென்றும் சேனைத்தலைவரென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

திருவள்ளுவர் சருக்கம் 26-வது பாட்டு.

நளராஜபூபதிகொண்ரத்னவீரர்
நன்மைபுருமிப்புவியில்வல்லோராகி
உளராமலம்பாவிந்துணையாலேக்தன்
வாழ்வலியால்காட்சியின்றன்உண்மைகண்டேன்.

இந்தசெய்யுள் மேற்கோள் நூல் இரண்டடியே காணப்பட்டது.

சாமந்தர் என்பது சேனைத்தலைவர் என்பதற்கு சில சாஸ்திர திருஷ்டாந்தங்கள் வருமாறு.

அகஸ்தியர்மரபுவிளக்கநூல் 106-வது பாட்டு.

என்னவே இன்னமொருமார்க்கங்கூர்வேன்
எழிலானகண்மணியேயெழில்வல்லோய்கேள்
நன்னவீரர்மரபுதானும்
நவிலுவேன்காத்திசையுக்கீர்த்தியோங்க
கன்னவேகந்தவேள்சாபத்தாலே
களமானமனுகுலத்தில்தோன்றியுற்ருர்

அன்னவேமுசுகுந்தர்க்கவனிதன்னில்
அன்பாய்ச்சாமந்தராயிருந்தார்பாரே.

எனவும்.

வாசிட்டம் சுக்கிரன்கதை 27-வது கவி.

சாலுவநாட்டிற்பானுமந்திரத்தலைவனானான்
மேலுயர்கற்பகாலம்விஞ்சையர்வேந்தனானான்
வாலுணர்வுளதாயங்கொர்மாதவன்மதலையானான்
சேலுகள்சவ்விரத்திற்சேர்ந்தசாமந்தனானான்.

இதில் — சாலுவதேசத்தில் இந்த சுக்கிரனானவன் சூரியகுலத்துக் காசாரியனானான், பின்பு கற்பகாலம் வரைக்கும் வித்தியாதரற்கரசனானான், மிகுந்த வறிவுள்ளவனானான் ஒரு தபோமுனிவன் புதல்வனானான், சேல்க்கெண்டைகள் குதிக்கா நின்ற சவ்விர நாட்டிற் பொருந்திய சாமந்தனாகப் பிறந்தானென்பதாம்.

☞ இந்தக்கவிகளில் சேனைத்தலைவரென்று சொல்ல வேண்டிய விடத்திற் சாமந்தர் என்று சொன்னார். இதுவுமல்லாமல் சாமந்தன் என்ற பேர் சேனைத்தலைவருக்கே மிக உரியதென்று சில நூலிற் சொல்லியிருக்கின்றது.

எனவும்.

தேரையர் 80-வது பாட்டு.

ஆமப்பா இன்னமொருசெய்திசொல்வேன்
அப்பனேசெங்குந்தர்வகுப்பைக்கேளு
காமப்பாதரணிதனில்மனுமாந்தாதா
கருவாகசந்ததியில்வந்துதோன்றி
சாமப்பாகவவீரதேவர்தானும்
சார்வாகப்படைத்தலையாயவனிமீதில்

காமபாகந்தருடசாபத்தாலே
கனமாய்ச்சாமந்தராயிருந்தார்பாரே.

எனவும்.

பாரதம் பீஷ்மபர்வம் முதற்போர் சருக்கம்

24-வது கவி.

மண்டலீகர்தம்மார்புறையாகவே
மண்டலீகர்தம்வாட்படையோக்கினர்
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கவே
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கினர்.

(இ-ள்.) மண்டலீகர் என்று சொல்லப்பட்ட அரசருடைய மார்புக்கிலக்காக மண்டலீகர் என்று சொல்லப்பட்ட சத்துருவாகிய அரசர் தங்கள் வாளாயுதத்தை வீசினர், சாமந்தர் என்று சொல்லப்பட்ட வில்லைக் கையிலுடைய சேனைத்தலைவர்கள், பலம் பொருந்தி நீண்ட வில்லை யெடுக்க எதிரிகளாகிய அரசர் தங்கள் வில்லைவளைத்த[illegible]ரென்பதாம். எ-று.

இந்தக்கவிகளினாற் சாமந்தர் என்கிற வாக்கியம் வில்லையுடைய சேனைத்தலைவர் என்பதேதவிர வேறல்ல.

அதல்லாமல்.

திருவிளையாடற்புராணம் மெய்காட்டிய படலம்

3-வது கவி.

சவுந்தரசாமந்தனெனத்தானைகாவலனொருவன்
சிவந்தசடைமுடியண்ணலடியவரேசிவமாகக்
கவர்ந்தொ[illegible]கிய நச்சிக்குங்கடப்பாட்டினை யின்றே
[illegible]ந்தரசற்கருமைக்குருந்துணையாகியொழுகுநாள்.

(இ-ள்.) சவுந்தர சாமந்தனென்னும் பெயருடைய சேனைத்தலைவனொருவன் சிவனடியார்களைப் பரமசிவமாகப் பூசித்து

சந்தோஷிக்க அரசன் இருமைக் குருர்துணையின் றலைவனாக நடக்கும் காவலில் என்பதாம். எ-று.

எனவும்,

இதுவும் ௸ படலம் 29-வது கவி.

தெவ்வடுமகிழ்ச்சிபொங்கச்சேனையின்செல்வநோக்கி
யெவ்வெவ்தேயத்திலுள்ளாரிவரெனவெதிரேரின்று
கௌவையின்மனச்சாமந்தன்கையிற்பொற்பிரம்புநீட்டி
யவ்வவர்தொகுதியெல்லாமணியணிதிருவிக்கூறும்.

(இ-ள்.) சத்துருக்களை ஜெயிக்க மகிழ்ச்சியானது வோங்க அரசருக்கு சேனையின் செல்வத்தைப்பார்த்து இவர்கள் எந்தந்த தேயத்திலுள்ளவர்களென்று அரசன் கேட்க உண்மையான மனதையுடைய சாமந்தன் கையிற் பொற்பிரம்பினால் நீட்டிக் காட்டி அந்தந்த சேனையின் தொகுப்பை யெல்லாம் வரிசை வரிசையாக நிறுத்திச் சொல்வானென்பதாம். எ-று.

இந்த கவிகளினுற் சாமந்தனென் [illegible] னுக் கருத்தும் சேனைத்தலைவனென்று வந்திருக்கிறபடியால் சிலர் இந்த சாமந்த னென்கிற பதம் சேனைத்தலைவருக்குரிய தல்லவென்றும் சேனைத் தலைவர் வேறு யென்றும் சாமந்தர் என்கிற ஜாதி வேறென்றும் சொல்லுவார்கள். ஆனால் அதன் விபரத்தை வெளியிடுகிறேன்.

சேனைத்தலைவராய் வரப்பட்டவர்களில் யாரென்றால் அரசன் தெரிசாரணையும் பொக்கிஷத்தையும் கைக்கொள்ள வேண்டிய [illegible]தன்றும், அரசன் சகோதரனாவது அல்லது அரசன் புத்திரனா[illegible] அல்லது சொந்த பந்துவாவது சேனைத்தலைவனாயிருக்க [illegible]ண்டுமென்றும் நீதிநூற்சொன்ன பிரகாரமே சர்வராஜாக்கத் [illegible]காளது வரைக்கும் நடந்தேறி வருகின்றது. [illegible]து யே னென்றால் மந்திரிமுதலான ஊழியக்காரர்கள் ராஜபந்துக்களா[illegible]லாமல் புறச்சாதியாயிருந்தபோதிலும் அதனைப் பெருங்கேடு நிவந்து நேரிடாது சேனைக்கதிபதி புறச்சாதியா யிருப்பார்களே

யானால் அந்த ஜாதிபக்ஷத்தில் அரசு போய்விடுமென்பதற்கு சந்தேகமில்லை யல்லவா; அதைப்பற்றியே முன்னோர்கள் அவர்கள் ராஜபந்துக்களுக் குள்ளவே சேனைத்தலைவர்களை யேற்படுத்தி வந்தார்கள்.

அதற்கு திருஷ்டாந்தரம் சொல்லவேண்டுமானால்—முதல் தேவர்களுக்கு தேவனான ஈஸ்வரருடைய புத்திரர்களாகிய கணபதியும் சுப்பிரமணியரும் வீரவாகுதேவரும் தேவர்களுக்கு சேனைத்தலைவர்களானார்கள். இதுபோல் சூரபத்மா இராவணன் முதலான இராக்ஷஸ வரசர்களுக்கு அவரவர்கள் சொந்த பந்துக்களை சேனைத்தலைவராயிருந்தார்கள். ஆகையால் அரசனுடைய பின்னை அரசனுடைய பந்துக்களே சேனைத்தலைவராக வேண்டிய கிரமமான படியால் அரசனுக்கும் சேனைத்தலைவருக்கும் எவ்வளவும் பேதமில்லை. அரசனே சேனைத்தலைவராவதும் சேனைத்தலைவரே அரசனாவதும் சகசம்.

அதல்லாமல்.

பெ[illegible] கூற்றுவநாயனார் சரித்திரம்

1-வது கவி.

துன்னார்முனைகடோள்வலியால்வென்றுகுலப்படையார்தம
தன்னுமந்ததிருநாவிராளுநவி லுகலமிக்கார்
பன்னுளீசரடியார்தம்பாதம்பரவிப்பணிந்தேத்ற
முன்னாகியநற்றிருந்தொண்டின்முயன்றார்களந்தைமுதல்வனார்.

(இ-ள்.) சத்துருக்களைத் தோள்வலியால் வென்று சிவனடியார்களுடைய பாதத்தைப் பணிந்து துதிசெய்த அடியார்களுடைய திருத்தொண்டின் முயற்சி செய்தார் களந்தையென்னும் பதிக்கு அரசனாகிய கூற்றுவநாயனாரென்பதாம். எ-று.

எனவும்.

ஷை சரித்திரம் 2-வது கவி.

அருளின்வழியாலரசோதுங்க
　　வவனியெல்லாமடிப்படுவார்
பொருளின்முடிவுங்காண்பரிய
　　வகையாற்பொலிவித்திகல்சிறக்க
மருளுங்களிறுபாய்புரவி
　　மணித்தேர்படைஞர்முதன்மாற்றார்
வெருளுங்கருவிநான்குநிறை
　　வீரச்செருக்கின்மேலானார்.

(இ-ள்.) பரமசிவனுடைய கிருபையினால் அரசு செலுத்திப் பூமியின்கண்ணி லுள்ளவர்களெல்லாம் தன்னை வணங்க அளவிடாத மிகுந்த திரவியமும் பிரகாசிக்கின்ற யுத்தத்திலே சிறந்தவனாய் யானை குதிரை காலாள் தேர் முதலானதும் பெருந்து சத்துருக்களானவர்கள் பயப்படும்படியாக யுத்தாயுதத்தில் நிறைந்த வீரச்செல்வத்தில் மேன்மையுடையவ ராணு ரென்பதாம். எ-று.

இக்கவிதைகளினற் - கூற்றுவநாயனர் களந்தையென்னும் பதிக்கு அரசனாக விருந்து பரிபாலித்து... கூறப்பட்டிருக்கிறது.

சுதல்லாமல்.

கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் அருளிய தெய்விகப் பிரபந்தமாகிய ஈட்டி எழுபதில் 50-வது கவி.

தளர்ந்தவருக்குத்திருவுருவத்தன்னையடையார்க்கொருசிங்க
மிளந்தையவர்க்குச்சிலைவேணல்லிசையாற்பொற்பூதரமேயாம்
வளர்ந்தசா... ...ளில்வால்வளைகண்முத்தந்தரும்வளங்கூர்
களந்... ...திகோசன்கைக்குந்தமேபோற்காணுமே.

(இ-ள்.) தளர்ந்துவந்து தன்னை யடைந்தவர்களுக்கு முக மலர்ச்சியை யுடைய அழகிய உருவத்தை யுடையவன் தன்னை

வந்து வணங்காத சத்துருக்களுக்கு ஒப்பற்ற சிங்கம்போன்றவன் இளமைப் பருவத்தையுடைய பெண்களுக்குக் கருப்பு வில்லையுடைய மன்மதனை யொப்பான் அழகிய நிறைந்த புகழ்க்கு பொன்மலையை யொப்பானுகிய நெற்பயிர் வளர்ந்த வலியனது வரம்பில் வெள்ளிய சங்கினங்கள் முத்தத்தை யீனுகின்ற வளப்பமிகுந்த களந்தை முதலிய நகரத்துக்கு அரசனது கையின்கணுள்ள குந்தத்தினது புகழைப்போல ஒருவரிடத்துங் கண்டோமில்லை. எ-று.

இதில் — களந்தை என்னும் நகரத்து அரசன் கையின்கணுள்ள குந்தத்தின் புகழைப்போல ஒருவரிடத்தும் கண்டோமில்லை யென்று கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்,

வீரநாராயணர் விஜயம் சிறப்புப்பாயிரம் 15-வது கவி.

அறுபத்துமூன்றுநாயன்மார்களிற் பதின்மர் துதி.
எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மலர்விழித்தயானைக்குந்துணிந்தோர்வேத
மந்திரமாப்பகர்ந்தோர்நீற்றுண்மைகொண்டோர்
வலமைபெறுமாருரர்மூன்பட்டோர்
வர்விழிதுறக்கண்பெற்றோர்மீதேவன்று,
ணிலவுமுடியெனப்பூண்டோராதிரைக்கணிணிதிய
மளிப்போர்புற்றிபமெரிப்போர்பாப்
பலமூவேந்தர்க்குரைப்போரமுதளிப்போர்குந்தப்
படைக்குலத்திலவதரித்தபதின்மரையும்பணிவாம்.

(இ-ள்.) சிவகாமியாண்டார் கொண்டுவந்த புஷ்பதாமத்தைப் பறித்துதறிய யானையைத் தடிந்த எறிபத்தநாயனாரும், வேதத்தாற்பரியங்களனைத்தையும் மூவாயிரம் திருமந்திரமாகத் திருவாய் மலர்ந்த திருமூலநாயனாரும், திருவெண்ணீற்றினுண்மையைக் கடைப்பிடியாகக் கொண்டிருந்த மெய்ப்பொருணாயனாரும்,

ஆளுடைய நம்பிகள் திருக்கையிலைக் கெழுந்தருளல் றுணர்ந்து யோகத்தால் அவரை நியானித்துக் கொண்டு அவருக்கு முன் சென்றருளிய பெருமிழலைக் குறும்பநாயனாரும், சமணர்களுடன் வாதிட்டுக் குளந்தோண்டிக் கண்பெற்றுக்கொண்ட தண்டியடிகணாயனாரும், சிவபிரான் திருவடி சூட்டப்பெற்றமையையே முடியாகக்கொண்டுலகாண்ட கூற்றுவநாயனாரும், பிரதி திருவாதிரை நக்ஷத்திரந்தோறும் சிவனடியார்கட்குப் பொன்னளித்துவந்த நரசிங்கமுனையரைய நாயனாரும், தமிழிற்கோவைபாடி மூவேந்தர்க்கும் பொருளுணர்த்திவந்த காரிநாயனாரும், சிவனடியார்க்கமுதளித்துவந்த இடங்கழிநாயனாரும், என்று சொல்லத்தக்க செங்குந்தர் குலத்தில் அவதரித்த இப்பதின் மரையும் வணங்குவாம், எ-று,

இந்நூலாசிரியர் செய்த இச்செங்குந்தப் பெருமக்கள்
துதிக்கு முதனூல் பொற்களந்தை புகழேந்திப்
புலவர் செய்த திருக்கை வழக்கமேயாம்.

அதில் —

நாவலூர்நம்பியெனுநாரையூர்நம்பியென
மேவுமிருநம்பியரான்மெச்சுங்கை - சேவினன்ற
றாதிரைதோறெண்ணிலடியவர்க்குப்பொன்னூறு
நீதியவேயளிக்குந்தேசிகக்கை - நீதியொடு
வெம்பகையைவென்றவினைபொருளைமெய்யடியார்
தம்பொருளாயாக்குந்தயாளக்கை - யம்பொன்முடி
வன்றொண்டன்வேதண்டமன்னுமுனையோகாற்ற
தன்றொண்டையாங்குகைத்தமர்ந்துபுக்கை - யின்றொண்டு
செ[illegible]சிவபத்தர்சிந்தைகலங்கப்பழிக்கும்
வெய்யர்வெ[illegible]ணையரிவெற்றிக்கை - துய்யதமிழ்க்
கோவைபலதம்பெயராற்கூறிமூவேந்தரிடந்
தேவைபொருள்கொண்டுபணிதேடுங்கை - பாவினைக்கா

டன்னலுக்கென்றய்ம லரையாயாதமோந்தாண்மூக்
கென்னலன்போற்றுண்டித்தவேற்றக்கை - தன்னளிபொன்

தில்லாரிற்றொண்டர்க்கென் றிட்டநெற்போர்கவர்கேட்
பல்லாரைவின்றேற்றும்பாழிக்கை - புல்லான்

பொரவிளைத்துவஞ்சவாட்புத்தகம்போதிப்பான்
வரவிளக்காதாருயிரிவண்கை - யிரவிகுல

மன்னுயுலகோம்பியாநிதியச்சாலைதிறந்
தென்னுதன்றொண்டர்கொளேக்கிட்டுகை - மின்னர்பொ

னம்பலவன்றாட்டுணையையாயுமணிமுடியாய்
ச்ம்பியணிந்தேயுலகாளுயகக்கை - யம்புவியில்

வெள்விடையோற்காமலரைவீழ்த்தியதும்பிக்கையறக்
கொள்விடைகூரும்பரசாற்கொய்திடுகை - வெள்ளூறுபுல்

வீட்டிவி[ள]க்கெரித்தவின்பணிமுட்டச்சிகையை
நீட்டிவிளக்கெரித்தநேர்மைக்கை - நாட்டக்

குறையையமணர்கொளக்குண்டபெடுத்து
நிறைபுனல்செய்திட்டநிமலக்கை - மறைநெறியின்

மூவாயிரமனைவுமுல்லையானுக்கைபுக்கு
நாவாலினிதுரைத்தக[ன்]னயக்கை.

என பதிநால்வரைக் குறித்திருக்க, இவர் பதின்மரை மாத்திரம் துதித்ததற்கு காரணம் ஆலோசிக்குமிடத்து இவர்க்கு முன்னரே தம்மவர் செயற்கையால் திருத்தொண்ட ணம் இயற்கை திரிந்து வழங்கியதுபோலும். அத்திருக்கைவழக்க லையும் [இ]ன்னுட்குமுன் அச்சிற்பதித்தவர் இந்நூலாசிரியரைப் பின்றொடர்ந்து நால்வரைக் குறைத்தனர். ஆயினு மேறக்குறைய நூறுண்டுக்குமுன் இவ்வாசிரியர் மாணுக்கபரம்பரையிலொ ருவர்,

திருக்காஞ்சி முத்தமிழ்ச்சூரி வீரபத்திரதேசிகர் செய்தருள

செங்குந்த சிலாக்கியமாலை, என்னும் பிரபந்தத்தில்,

ஒப்புயர்வற்றசிவாகமமேழ்நான்கினுண்மையெலா
மெப்புவனத்தும்விளங்கவாமேக்கிக்கிறந்தவுட
லிற்புகுந்தாண்டுக்கொன்றாகவேமூவாயிரமனுவைச்
செப்புறுஞானக்கதிரோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

ஆரணமோதுமபிடேகர்தம்மிலவதரித்துப்
பூரணநற்றமிழ்க்கோவைகள்பாடிப்புரவலர்பா
லேரணவப்பொருள்கூறிப்பொன்பெற்றிறையின்பணிகள்
சீரணவச்செய்திறலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

ஒருநூறுபொன்னையுலப்பிலிகாட்சைவவுத்தமர்க்கு[illegible]
தருநூறிலன்புக்கெதிர்தூர்த்தவேடன்றனித்துற[illegible]
மிருநூறுபொன்றந்திகலும்புறமதரேவிடும்பற்
செருநூற்வாழ்க்கைசிவண்வோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

தன்னரசிற்சைவமாநெறிநிலைவதிகஞ்ச[illegible]நெறிகண்
மன்னுறுநாளிலரன்றொண்டர்க்குண்டிவழங்கலற்ற
வின்னலொடேநெற்களவாடுவோன்முனினையவரே
நின்னநிதியுய்விடுத்தோர்செங்குந்தசிலாக்கியரே.

என[illegible]

[illegible]ருந்தவர்போர்க்குடைந்திட்டோர்க்கு[illegible]ஞம்புகலிடமா
யிருந்தவர்க்காடெய்தச்சென்றமர்வென்றதிலெய்திடு[illegible]பான்
விருந்தருந்தவர்க்காக்குதலன்மிவிமலனிடக்
[illegible]துபணிக்குமளிப்போர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

கருக்கலைநேர்குழற்சங்கிலிகேள்வனைக்காதலித்த
பெருக்கமதாற்சித்தியாவையும்பெற்றவன்பிஞ்ஞகன்பா
லிருக்கைபெறலிந்தாற்றுதயோகிலிணங்கிமுன்னர்
திருக்கயிலைப்பதிமேயோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

பன்முறையாயோதனத்தெதய்த்தமேவல்லன்பட்டிமையாற்
கொன்முறையாய்ந்தரன்சின்னங்குலவுறுகோலமுடன்
சொன்முறைநூல்கரவாண்மறைத்தெய்தச்சோர்வின்றியுயிர்
சென்முறைசெல்லவிடுத்திதார்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

தண்டார்புரத்தைச்சிரித்தெரித்தானையவன்பொறியைத்
தொண்டாதரிக்குமவனடியாரைத்துணிந்திகழ்நாத்
தண்டார்யஞ்சிக்கியெள்வளாறறிபடத்தக்கணமே
செண்டாபுதனிற்செய்திரர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

பாராளுமன்னவன்றேவிமுக்கண்ணற்காம்பைமலரென்
றோராளெடுத்துமோந்தேகலுங்கூந்தலீர்த்தொண்ணசியால்
வாராருங்கோணமரிந்தவர்கேள்வன்கைவாங்கவிட்ட
சீரார்சொன்மாலையுடையோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

வெம்பிவெல்தோளிபல்க[illegible]ண்டாக்கென்றனிசித்[illegible]
கோவையாற்றுதினத்தேகருணைக்கண்டுள்கொள்துதக்கை
காவைமணையைத்தம[illegible]வர்மூலைத்தன்கூலையுன்
சேவைபசி[illegible]டுமாய்[illegible]தார்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

எர்சான்றசெம்பியர்க்கல்லாவிட்டோமுடி[illegible]பன்னைத்தில்லை
யூர்சான்றவர்தன்னோர்தவுமாகுலமுற்றா[illegible]

ணோர்சான்றமாமுடியாகுறவேண்டிநெடுங்கனவித்
சீர்சான்றவாதுபெற்றுண்டோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

என்றுமலர்பறித்தேதரார்த்திக்காரமியற்றுந்தொண்டர்
நின்றலறச்சிந்துந்தும்பியொடைவர்நெடுமழுவாற்
பொன்றவிகுத்திறைமெய்யன்புக்கினுயிர்போக்கவெண்ணிச்
சென்றவுயிரைமீள்வித்தோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

தொகைபெறும்பல்பொருளாற்சிவன்கோயிலிற்றாம்விளக்கிட
டகமகிழ்காலின்மையெய்திக்கணம்புலறுத்துவிற்ற
மிகைகெடலின்றியதையேயெரித்ததுமிக்கின்மையாற்
சிகையெரித்திட்டசெயலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

முகைத்தபொழுதேபெறுங்குருடேகிக்கண்முன்றெரிய
விகைத்தகுயத்தொண்டினின்முற்றிப்புகளீறிலொட்டாத்
பகைத்தவமணர்குருடாகிப்பெத்தற்பணிப்பினவர்
திகைத்துநிலைவிடச்செய்தோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவுமப் பதினொன்று திருத்[illegible]ொண்டர்களும் பாய்ப[illegible]
தமைந்திருக்கக் கண்டாம்.

இஃது வட்டப்பிரதியி லிருந்[illegible]தெடுத் தெழுதியது.

[illegible]தல்[illegible]ல்.

வல்லான்காவியம் தேவ[illegible]ட்சி[illegible]ருக்கம்

43-வது கவி.

நவமணிவீரவேந்தர்[illegible]ற்குலமுடையானென்றுஞ்
சிவமணியணியேயெ[illegible]ன்னத்தேர்ந்தவன்மதிமால்பெற்ற

நவமணிகளமூர்ந்தசச்சங்கரன்சரவணத்துற்
பவமணியளித்தகூத்தன்பதமுடியெனக்கொள்பண்பன்.

(இ-ள்.) நவமணிகளிற் றோன்றிய சத்திகளின் குமாரர்க
கிய நவவீரரென்னும் மன்னவர்களின் சிறந்த குலமுடைய
வர். எக்காலத்தும் ஆபரணமாயுள்ளது உருத்திராக்க மணி
யேயென்று தெளிந்துள்ளவர். மதிமானென்னும் மன்னவன்
அரியதவத்தா லீன்ற புத்திரரத்தினம் விடந்தங்கிய கண்டமுடை
ய சங்காரமூர்த்தியும் சரவணத்தடாகத்திற் குழவியுருவா யவதரி
த்த சுப்பிரமணியக்கடவுளைப் பயந்த பரனுமாகிய எமது நடரா
ஜன் திருவடிகளை முடியாகப்பெற்ற தகைமையர். எ-று.

இதில் — இக்களந்தூரதிபர் திருத்தொண்டரறுபத்துமூவருளொ
ருவரான கூற்றுவ நாயனார் சந்ததியாரெனக் கூறுப.
இதனை "ஆர்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோன
டியேன்." என்னும் ஆளுடைய நம்பிகளருட்பனுவலா
னும்;

நாதன்றிருவடியேமுடியாகக்கவித்துநல்ல
போதங்கருத்திற்பொறித்தமையாலதுகைகொடுப்ப
வோதந்தழுவியஞாலமெலாமொருகோலின்வைத்தான்
கோதைநெடுவேற்களப்பாளனாகியகூற்றுவனே.

என்னும் நம்பியாண்டார் நம்பிகளருளிய திருவிருத்தத்தா
னும் தெளிக.

ஈதல்லாமல்.

விஜயம் [illegible]ன்னும் நூலில் 47-வது கவி.

பகைகிள[illegible]களந்தூர்ப்பாரிலக்குந்தவைவேவ
வாகுரன்[illegible]வைப்ந்துளூட்ட[illegible]னுண்முனைந்துவந்த
வகிதனுமதமாவி[illegible]வலிக்கொடியார்திருக்கச்
சகமதிற்கொன்றுவெற்றிச்சங்கினை[illegible]ர்த்[illegible]ன்றே.

(இ-ள்.) பகைவர்களுடைய படைகளைத் தனக்கு அ[illegible]
மாக்கிக் கொள்ளும் பொருட்டு, கலுத்தூர் என்னும் ஊரிலு[illegible]
பச்சிலைவடிவா யிருக்கும் குந்தம் என்னும் கூரியவேல் பிரக[illegible]
கும் வெட்சி அரசர் வெட்சிமாலையணிந்து, போர்க்களத்தில்
ர்த்தவுந்த கொரேனுகிய யானையானது உயிரிழந்து விழும்[illegible]
கும் தன்னுடைய புலிக்கொடியே இவ்வுலகத்தில் எக்காலத்தும்
நிலைநிற்குமாறுங் கொன்று, அக்களத்திலிருந்து ஜயசங்கமூதி
னர். எ-று. அன்று - ஏ - அசைகள்.

இதில் — முன்னமே அநேக பகைவர்களை முதுகுகாட்டி யோட
ச்செய்து வெட்சிமாலையணிந்து அக்காரணத்தால் வெ
ட்சியரசர் எனப்பெயர்கொண்ட மன்னர் இப்பொழுதும்
இக்குறும்பரசனை வெல்லுவான் வெட்சிமாலையணிந்
தனரென்க, அவ்வரசனையும் ஏனைய அரசர்களையும்
வெற்றிகொண்டா ரென்பான், "வரிக்கொடியமர்த்தி
ருக்கச்சகமதில்." என்றார்.

எனவும்.

ஷ நூலில் 2-வது சருக்கம் 2-வது கவி.

அங்கவிருந்தாவீசனடியவர்க்கடியன்செங்கோன்
மன்னவராஞ்செங்குந்தமரபினனுலகமெங்குந்
சொன்னகோமதிப்பேர்கொண்[illegible]ன்சுந்தரச்சுதனிலாமன்
முன்னவாசிவனேயென்று[illegible]னன்விரதம்பன்னாள்.

(இ-ள்.) அத்திருப்பழுவூரென்னும் தலத்தில் ஆன்மாக்களை
படி[illegible]மகொண்ட[illegible]ரும் வடமூலநாதர்க்கு அடிமைபூண்டவனுகவும்,
செங்கோல்செலுத்தும் அரசர்களாகிய செங்குந்தர் மரபினனுக
வும், உலகெங்கும் புகழ்படைத்த கோமதி என்னும் பெயருடை
யவனுகவுமிருந்த அரசன் அங்குள்ள ஓர் புத்திரனில்லாமையால்,
முதல்வனே! சிவபெருமானே! என்று பலகாலம் பிரார்த்தித்துப்
பல விரதங்க[illegible] அனுஷ்டித்து வந்தனன். எ-று.

இதில் — இச்செங்குந்தமரபினர் ஆதியில் நவவீரர்களென்னும் தேவாம்சமுடையரா யிருந்து, முருகக்கடவுளின் கட்டளையால் முசுகுந்தச்சக்கரவர்த்திக்குச் சம்பந்திகளாய் மானவாம்சம்பெற்று, அதுமுதல் அரசர்களாயினமை தோன்ற "செங்கோன் மன்னவராஞ்செங்குந்தமரபு" என்றார். இம்மரபினர்க்கு இக்காரணத்தானன்றோ தேவாம்சவிருதும் மானவாம்சவிருதும் இரண்டும் வழங்கிவருகின்றன. இவ்வாறிரண்டும் இம்மரபினர்க்கு உண்டென்பதை,

நங்கையர்வேய்த் தோள்பழகு நாகணவா யேகுந்த
கங்கையர்தங் கேதனநீ யாய்த்துரையாய் — துங்கமிகு
காவலொடு வைகித்தங் காவல்மெய் காக்குமெழிற்
சேவலொடு வெங்கையுமாக் தேர்.

என்னும் முத்துக்குமாரதேசிகரருளிய செங்குந்தர் தசாங்க வெண்பாவாலுந்தெளிக.

அதல்லாமல்.

வல்லான்புராணத்தில் 14-வது கவி.

ஓராயிரத்துத்தொள்ளாயிரவருளொருவருட்
சோரனன்மாவிழற்கீழ்த்தேவசிங்காதனத்திருந்து
பாராளுந்திறலுடையபதுமவண்ணன்சுதன்றனியன்
சீராளினிளவரசுசெலுங்காலைமறுபுலத்தார்.

(இ-ள்.) ஆயிரத்துத் தொளாயிரவரென்னும் கூட்டத்தாருள் ஒருவராய்ச் சேர்ந்திருப்பவரும், மாவிருக்ஷத்தின் கீழுள்ள தேவசிங்காதனத்தி லிவர்ந்திருந்து செங்கோல் செலுத்தி யுலகாண்டுவரும் வல்லபமுடைய பதுமவண்ணரென்னும் மன்னவர்க்கு மைந்தருமாகிய தனியனென்பவர் இளவரசு புரியுங்காலத்தில் மறுபுலத்தரசர்கள், எ-று.

இதில் — ஓராயிரத்துத் தொளாயிரவரென்போர் தில்லை மூவாயிரவரைப் போன்று சிவபெருமானுக்கு தொண்டுபுரிவோர். இதனை

தில்லைமாநகர்வாழவாழ்தவசிந்தையர்தணராறைஞ்ஞூ
றல்லதும்பலமடபதித்தவராசரிக்கையிருள்ளபே
ரெல்லையில்லவரியாவருங்களிகொளவிளங்கசரிரிவாக்
கொல்லைவந்தெழவனைவருங்கரமுச்சிவைத்தளமுருகினர்.

என்னும் திருத்தொண்டபுராண வரலாற்றுத் திருவிருத்தத்துள்ள "பலமடபதித்தவராசரிக்கையிருள்ளபேர்" என்பதனையும் இந்நூல் முதலில் காட்டிய இரட்டையரென்னும் தெய்விகப்புலவர்கள் பாடியஏகாம்பரநாதர் உலாக்கண்ணியானும், அன்றியும் மிச்செங்குந்த மரபினர் வசிக்குமிடத்திற்கு மடவளாக மென்பதே பெயரென்பதனை

தம்பதிகுன்றத்தூரின் மடவளாகந்தானுக்கத்திருக்கோயிற்றுமித்தங்கண், செம்பியர்கோனதிருநாகேச்சுரம்போலீதுந் திருநாகேச்சுரமெனவேதிருப்பேர்சாற்றி, யம்புவியிலங்காங்கவைடவங்கட்கானபரிகலத்திருநாள்பூசைகற்பித், திப்பர்புகழ்வளவனாகநிமைச்செங்கோனிமகோதபரியந்தமியற்றுநாளில்.

எனச் சேக்கிழார் புராணத்தும்.

ஆர்ந்தவகாரமரண்மன்றமாவணகூடமயற்
சேர்ந்தநத்தம்பிவைதற்கூழாய்பண்செழுமணிபேர
னேர்ந்தவிடத்தமடவளாகம்மெனவேயீறுவிச்
சேர்ந்தகற்றத்தொடும்வைகுவர்காணித்தச்செங்குந்தரே.

எனச் செங்குந்தர் மாலையினுமுள்ள திருவிருத்தங்களானுந் தெளிக.

சதல்வாமல்.

போகர்நூல் 32-வது பாட்டு.

பண்பானபுலிப்பாணிமைந்தாகேளு
பகருகிறேன்நவவிரர்வர்க்கந்தானே

தண்பானநவசத்திசிலம்பில்த்தோன்றி
    தருவாகநந்திகணத்தவருமாகி
திண்பானசெங்குந்தர்வம்சமாகும்
    இடமுள்ளவளவகுலமணமேசூட்டி
எண்பானசகஸ்திரநூறொன்பான்பாலர்
    இணங்கியேவுலகிலரசியற்றினரே.

இதில் — இக்கவிதையினற் செங்குந்த நவவீரர்களின் மக்களாகிய ஆயிரத்துத் தொளாயிரவரின் சந்ததியார் உலகில் அரசுசெலுத்தி வந்தார்களென்று கூறப்பட்டிருக்கிறது

ஈதல்லாமல்.

அகஸ்தியர் மரபுநூல் 86-வது பாட்டு.

தானனபுலஸ்தியனேதயவுள்ளானே
    தாபரனேதயாநிதியேதகமையோனே
கோனனகுருவினதுபிரகாசத்தால்
    கொற்றவனேபுகலுகிறேன்குவலயத்தில்
தேனனவீரர்குலத்தேவராயர்
    தெளிவுடனேகூறுகிறேன்மாணுக்கற்கு
பானனபரஞ்சுடரேபதிவிளக்கே
    பாடுகிறேன்தேவசிம்மாசனத்தோன்பாரே.

இதில் — தேவராயர் செங்குந்தரென்றும் தேவசிங்காசனாதிபதியென்றும் கூறப்பட்டிருக்கிறது.

எனவும்.

ஷை நூல் 150-வது பாட்டு.

பாரப்பா இன்னமொருசெய்திகேளு
    பண்பானபுலஸ்தியனேபண்புள்ளோனே
சாரப்பாசண்முகற்கிளையோரான
    சருவாகசத்திபுடபுத்திரரையப்பா

தாரப்பாதந்திகைவத்தவருமாகி
    தருவாகவவிர்ம்மரபில்தோன்றி
வாரப்பாவீரசிங்கராயர்தானும்
    வளமானவீரசிம்மாசனத்தோன்பாரே.

இதில் — வீரசிங்கராயர் செங்குந்தரென்றும் வீரசிங்காசனாதிபதியென்றும் இராயரென்றும் கூறப்பட்டிருக்கிறது.

எனவும்.

ஷை நூலில் 169-வது பாட்டு.

காரப்பாபுலத்தியனே கருத்துள்ளோனே
    கருவானவர்னமதுவரிசைகேளு
தாரப்பா தரணிதனில்மனுக்கடங்கள்
    தருவானகுலமதனைவகுத்துச்சொல்வேன்
சாரப்பாசிவலிங்கராயர்தானும்
    சருவாகசெங்குந்தர்குலமேயாகும்
ஆரப்பாகைவேல்வர்வர்ணந்தானே
    அன்பானநவவீரர்தனயர்பாரே.

இதில் — இக்கவிதைகளினால் தேவராயர், வீரசிங்கராயர், சிவலிங்கராயர், கைவேல்வராயர், இவர்கள் செங்குந்த குலமென்றும் தேவசிம்மாசனாதிபதிகளென்றும் ராயரென்றும் பட்டந் தரித்தவர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

எனவும்.

ஷை நூல் 86-வது பாட்டு.

சாரப்பாபுலஸ்தியனே சார்ந்துகேளு
    சருவாகநவசத்திமரபைச்சொல்வேன்
தாரப்பாகணிகையர்தங்குலமேயாகும்
    தருவான அரசுடையதேவியாகும்

நாரப்பாகவவீரர்மக்கள்தன்னை
நலமாகவட்சமென்றமக்களோடு
காரப்பாகந்தவேள்படைக்குத்தானும்
கருவாகத்தலைவராயிருந்தார்பாரே.

இதில் — நவசக்திகளின் மரபு கணிகையர்குலமென்றும் அர னுடைய தேவியென்றும் லட்சத்தொன்பது மக்கள் என்றும் கந்தவேள் படைக்கு தலைவரென்றும் கூறப் பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

ஸ்ரீ கந்தவிரத விலாசத்தில்.

அறுசீர்க்கழிநெடிலடியாசரியவிருத்தம்.

கச்சியெனும்நாட்டிலனகனெனுமரசிருக்கக்கண்டவீரன்
நச்சியநாற்றிசைமுகத்துஞ்சிவபுரமுந்தொந்திபுரநூவிரிஞ்சை
யுச்சிதசோளிங்கபுரநாடொன்றுக்கொருபன்னேழுள்ளநாட்டி
னிச்சயமாய்ச்சனகன்முதற்செங்குந்தமன்னவரைநேமித்தானே.

(இ-ள்.) இந்தவிதமாக வீரவாகுதேவரும் முசுகுந்த மஹா ராஜனும் அனகராஜனை காஞ்சிபுரமென்னு மகாநாட்டில் சிங்காச னத்தி லெழுந்தருளச்செய்து முன்னொருகாலம்[illegible]பதியில் உமா தேவியார் சிவபெருமானை நோக்கி[illegible] தவஞ்செ[illegible]ய [illegible]தபோது அதற்கு நான்கெல்லை வகுத்து கிழ[illegible]த்தெல்லையாகிய [illegible]வபுரத் தில் நந்திகேஸ்பரரையும், தென்புரத்[illegible]தெல்லையாகிய தொந்திபுர த்தில் கணபதியையும், மேற்புரத்தெல்லையாகிய விரிஞ்சிபுரத்தில் ஸ்ரீ கந்தநாதரையும், வடபுரத்தெல்லையாகிய சோளிங்கபுரத்தில் வயிரவரையும் காவலாக வைத்திருந்த காரணங்கருதி நமது பா துகாவித்த வண்ணமே அரசாங்கம் விதிக்கத்தக்க தென்று நினை த்து அவளது காமபீடமே பதிமாசனத்தின் பொருட்டென்றும் சிவபுரநாடும், தொந்திபுரநாடும், விருஞ்சி[illegible]புரநாடும், சோளிங்கபுர நாடும் ஆகிய நான்கும் (அதனது) கேசரங்களென்றும்

௧-வது, சிவபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. மேல்படப்பை, கீழ்படப்பை, ஆத்தஞ்சேரி.
௨. மானாம்பதி, செம்பாக்கம், ஒணத்தோன்று, அகரம்.
௩. முன்னூர், பரமேசுரமங்கலம், மதுராந்தகம்.
௪. திண்டிவனம்.
௫. வக்கரைப்பத்து.
௬. திருவக்கரை, புதச்சேரி, ஒழுகரை.
௭. திரிபுவனம், நல்லாத்தூர்.
௮. திருப்பாலூர்.
௯. மிடையாத்தூர், திருவெண்ணைநல்லூர்.
௰. பனமலை, அனந்தபுரம்.
௰௧. வழுதிலைப்பட்டு.
௰௨. மாப்பரை, வரமாகூர்.
௰௩. பட்டணம், கருங்குழி.
௰௪. மன்னார்கோவில்.
௰௫. பாளையம்.
௰௬. குப்பாக்கம்.
௰௭. சம்பை, திருவரங்கம்.

௨-வது, தோந்திபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. முருகமங்கலம்.
௨. திருவாமாத்தூர்.
௩. திருவண்ணாமலை.
௪. செங்குறிஞ்சி.
௫. கச்சித்திரல்.
௬. சேலம்.
௭. திட்[illegible]கு[illegible]
௮. திருமலைப்பாடி.
௯. திருக்கோவல்.
௰. திருநாகேச்சுரம்.
௰௧. திருச்செம்பள்ளி.
௰௨. சீர்காழி.
௰௩. மாப்பிள்ளைக்குப்பம்.
௰௪. தேவூரு.
௰௫. காட்டூர்.
௰௬. போலகம்.
௰௭. நல்லாச்சேரி.

௩-வது, விரிஞ்சிபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. ஆமூர்.
௨. வாணியம்பாடி.
௩. கொரட்டை.
௪. தருமபுரி.
௫. பவானி.
௬. தாரமங்கலம்.
௭. ஏழாநாடு.
௮. புகழாரை.

௯. பூந்திரை.
௰. திருச்செங்கோடு.
௰௧. வைடாபுரி.
௰௨. அவிநாசி.
௰௩. நஞ்சுண்டகுடி.
௰௪. வகவங்கபாளையம்.
௰௫. கருவூர்.
௰௬. நாமக்கல்.
௰௭. காங்கேயம்.

௪-வது, சோளிங்கபுரநாட்டிற்கு கிளைநாடுகள்.

௧. திருத்தணிகை.
௨. தெளிநாடு.
௩. நெயிநாடு.
௪. திருவடிநாடு
௫. திருமழிசை.
௬. கொரந்தம்பாக்கம்.
௭. திருக்காளத்தி.
௮. தொண்டமாநாடு.
௯. வரைநாடு.
௰. வெங்கட்டகிரி.
௰௧. திருப்பதி.
௰௨. ஜெகந்நாதம்.
௰௩. சிட்டம்பள்ளி.
௰௪. செம்புரம்.
௰௫. வரதபுரி.
௰௬. சந்திரகிரி.
௰௭. காசி. என்பவைகளே,

இதழ்களாக வகுத்து இவ் (72) நாட்டிலும் வீரமக்களாகிய சனகன் முதலாகிய (72) செங்குந்த தலைவர்களை அரசர்களாக நியமித்தார்கள்.

ஈதல்லாமல்.

ஷை விலாசத்தில் முசுகுந்தமஹாராஜன் சொல் விருத்தம்.

திருவளர்காமபீடஞ்சிறந்தருஞ்செங்கோலோச்சு
மருவளர்குந்தவீரமக்களேயுங்களைய
ரொருநவரென்னநீங்களொருநவர்சோழநாட்டில்
வருவதுவேண்டுமங்கிவன்மனுக்குதவவின்றே.

(இ-ள்.) அழகிய காமபீடமாகிய காஞ்சீபுரத்தில் சிறப்பாக செங்கோல் செய்யும் கீர்த்தியுடைய வீரபுத்திரராகிய செங்குந்த

த்தலை[illegible]களே கேளுங்கள் உங்கள் தந்தையர்கள்ஒன்பது மந்திரிகளாக என்னிடத்திலிருந்ததுபோல உங்களில் ஒன்பது மந்திரிகள் என் குமாரனாகிய அங்கிவன்மனிடத்திலிருக்க வாருங்கள் வீரபுத்திரர்களே. (செங்குந்தத்தலைவர்கள்) அப்படியே நல்லதையா மஹாராஜனே.

௧

ஈதல்லாமல்.

தெய்விகப் பிரபந்தமாகிய ஈட்டிஎழுது

53-வது கவி.

புண்டரிகமேகுவளையேதளவமேபூமாவே
பிண்டியேயெ அஞ்சித்தசன்றன்குணம்பிழையாவென்
கண்டவீரகண்டன்புலியூர்த்தனிகாத்தேகிர்
கொண்டபள்ளிகொண்டான்கரதலத்திணைக்கொளுங்குந்தம்

(இ-ள்.) சத்துருக்களைப் புறங்கண்ட வீரகண்டாமணியையுடையோனாகிய சிதம்பரமென்னு நகரத்தைத் தான் தனியரசாட்சிசெய்து காத்துப் பல சிறப்புகளையுமேற்கொண்ட பள்ளிகொண்டானென்னுஞ் செங்குந்தத்தலைவன் கையிற்கொள்ளுங் குந்தமானது, மன்மதன் கையிற்கொள்ளாநின்ற தாமரையும் நீலோற்பலமும் முல்லையும் மாம்பூவும் அசோகுமாகிய ஐந்துபாணங்களும் பெற்றிருக்கின்ற கிளைப்பூட்டன் முதல் கொல்ல வீறுகச் சொல்லிய ஐந்து குணங்க[illegible] போலவே சத்துருக்களுக்குப் போரிளைப்பூட்டல் தொட்டவுறுத்தல் துன்புறுவித்தல் மூர்ச்சையுறுவித்தல் கொல்லல் ஆகிய வவ்வைந்து குணங்களையுஞ் செய்வித்தலினின்றுத் தப்பி[illegible]போதலில்லை எ-று.

எனவும்.

ஷை நூல் 55-வது கவி.

பிண்டிடாமன்பே[illegible]வீர்விளம்பிடாமலோருமின்
மிருண்டிடாமல்வா[illegible]வெதங்கன்சூரபன்மன்பட்டிடக்

கண்டவீரவாகுதேவர்கால்வருங்குலத்துமன்
வண்டுலாவுகண்டியூரன்வயிரவாகுகுந்தமே.

(இ-ள்.) சத்துருக்களே! சூரபதுமன்முதலிய அவுணர்களெல்லாம் நாசமடைய யுத்தஞ்செய்த வீரவாகுதேவராது சந்ததியின் வழியாக வந்த குலத்திற்சிறந்த அரசனாகிய வண்டுகளுலாவி கீதங்களைப்பாடாநின்ற கடப்பமாலையையுடைய கண்டியூரனென்னுஞ் செங்குந்தத் தலைவன் கையிலிருக்கின்ற வச்சிராயுதத்தையொத்த அழகிய குந்தத்தோடு எதிர்க்காமலும் வீணான வம்புவார்த்தைகள் பேசாமலும் ஆராய்ந்தறியுங்கோள், அச்செங்குந்தத்தலைவனுக்கு நீவி ரடிமைத்தொழில் செய்யாமல் வாழ்ந்திருப்ப தெங்ஙனம் ஆகையால் வணங்கிப்பிழைமையுங்கோள். எ-று.

இதில் — வீரவாகுதேவர் கால்வருங்குலத்து மன், எனவே-வீரவாகு தேவருக்குச் சித்திரவல்லியென்னுமொரு குமாரியும் அனகன் சனகனென்னு மிரண்டு குமாரரு முண்டென்றும், அம்மூவரில் பிள்ளைகளின் வழியாகவந்தவர் இச்செங்குந்தத்தலைவனென்றுங் கூறியவாறாயிற்று.

எனவும்.

ஷை நூல் 56-வது கவி.

மூத்தமுதுகுன்றக்குரிசின்முதிருமணவைப்பாராளன்
பாத்தனென்னுமணியன்கைக்குந்தங்கொடுத்துப்பகாவே
பூத்தமார்புத்தார்மதித்துப்பூழிபடவேவீழ்ந்திறைஞ்சிக்
கொத்துச்செங்கைமலர்கூப்பிக்குறுகார்சிறுகிவரக்கண்டான்.

(இ-ள்.) முதுகுன்றத்தில் வாழ்ந்து அரசாட்சி செய்துகொண்டிருந்த பெரிய வரசனும் மணவையென்னு நகரத்திலிருந்து அரசாண்டு கொண்டிருந்த பெரிய வரசனுமாகிய இவ்விருவருஞ் சத்துருக்களால் மிகுந்த துன்பமடைந்து முதுமையால் வலியில்லாதவர்களாய் அரிச்சுனனுக்குச் சமானமான வலியுடையனென்று சொல்லாநின்ற மணியனென்னும் பிள்ளைகையில் தங்கள்

கைக்கு[illegible]தைக் கொடுத்துப் பட்டங்கட்டிச் சத்துருக்களைச் செயம்பண்ணென்று சொன்ன மாத்திரத்தில், முன்னெதிர்த்து யுத்தஞ்செய்த சத்துருக்களெல்லாந் தங்கள் பரந்தமார்பிற் றரித்திருந்த வெற்றிமாலைகளைக் கழற்றி யெறிந்து புழுதி யுடலிற்படும்படியாக மண்ணில் வீழ்ந்து வணங்கித் தாமரைமலர்போன்ற தமது இரண்டு கைகளையுங் கோத்துக் குவித்து அடங்கிவரத் தனது வீரத்தைச்செலுத்தினான். எ-று.

ஈதல்லாமல்.

பிரமனைச்சிறைப்படுத்தினரென்பதற்கு

வல்லான் புராணம் போராடற் சருக்கம் 17,வது கவி.

ஆதிதன்னருளினால்விளங்குமவரமரர்மாதர்மணவாளர்நன்
னீதியாவுயர்குலத்தளோர்தருவைநேர்கரத்தர்விறலாண்மையர்
வேதனைச்சிறையிலிட்டுவிட்டவர்வெகுண்டுளங்கடுகடுத்திடா
வாதரானவர்கள்விழமோதியமராடினாரமரர்பாடினார்.

எனவும்.

பொதியமால்வரைக்குறுமுனிதேறவும்பொருள்சொன்ன
மதியையாறெனவுடையவோர்மூவிருவதனத்தான்
கதியையாற்றியுங்குணத்தொடுபழகியுங்காணு
விதியைமேவலர்நடுங்கிடத்தளையிடுமிளிர்குந்தம்.

ஈட்டி எழுபதென்னும் அருட்கவியாலுந் தெளிக.

ஈதல்லாமல்.

வல்லான்புராணம் போராடற் சருக்கம் 18-வது கவி.

வெள்ளமாகியெழுபொன்னியாறுடையவேந்தரோடுறவுபோந்தவ
தெள்ளிதாயமறநீதிகற்குமவர்தீரவீரமுளசெய்கையோர் [ர்
வள்ளியோர்தொடர்பின[illegible]னோர்க்கினியர்வளைதடிப்படையெடுத்
கள்ளர்மாமறவரொன்னலார்தமிருகாலறக்கடிதுவீசினார். [திடாக்

(இ-ள்.) பிரவாகமாகிப் பெருகுகின்ற காவிரிநதியுடைய சோழவம்சத்தினருடன் சம்பந்தம் பூண்டவர்களும், தெளிவான மநுநீதி கற்றுணர்ந்தவர்களும், தைரியத்துடன் வீரத்தன்மையும் வாய்ந்த செய்கையுடையவர்களும் வள்ளற்றன்மையுடையோரும் நேசத்தால் தம்மைநம்பிச் சரணடைந்தோர்கட் கினியவர்களுமாகிய செங்குந்தவீரர்களும் கள்ளர்களும் வேடர்களும், பகைவர்களுடைய இரண்டு கால்களுமறும்படி விரைவில் வெட்டினார்கள். எ-று.

எனவும்,

ஷை புராணம் ஷை சருக்கம் 20-வது கவி.

முன்பதோடொருபதானநாற்றவர்முறையர்வழிப்புனிதராயினோ
ரன்பர்சூழுமிடங்களாதியருந்தலாதிபமடைந்துளோ [யோ
ரென்புறூனிணமும்விழைந்தலகையெண்ணிலாதன துணங்கை
டின்பினேரகழுகுகளிசேரவமரிட்டநேர்மைசொலன்பட்டதோ.

(இ-ள்.) ஆயிரத்துத் தொளாயிரவர்களுடைய மேலான சந்ததியிற் பிறந்த சுத்தராயினோரும், பத்தர்கள் சூழும் சத்தவிடங் கமுதலாகிய அருமையான சிவாலயங்கட்கெல்லாம் ஆதிபத்தியம் பெற்றுள்ளோருமாகிய செங்குந்தவீரர்கள்; கணக்கற்ற பேய்க்கூட்டங்கள் என்பையும் ஊனையும் நிணத்தையும் இச்சித்துத் துணங்கைகூத்தோடு அகமகிழ்வுகொண்டு நெருங்கவும், கழுகுகளும் கூளிகளும் அன்னமடையவும் போர்புரிந்த நேர்த்தி ஒருவராற் கூறும் அளவையுடையதோ. எ-று.

இலக்கத்தொன்பதின்மராகிய வீரவாகுதேவ ராதியர்க்கு ஆயிரத்துத் தொளாயிரவர் புத்திரரென்பதையும் இவ்வாயிரத்துத் தொளாயிரவர் சந்ததியாரே இவ்வுலகின்கணுள்ள செங்குந்த மரபினரென்பதையும்,

அங்கமிகுமுசுகுந்தன்றொல்கயிலையடைந்தபின்ன
ரெங்கள்வீரன்மொய்ம்பினனுமிலக்கருடனெண்மர்களுக்

தங்கள்சிரர்தமைவிளித்துத்தத்தமதுசிறப்புநல்கி
யங்கிவன்மன்பாலிருத்தியரியதிவமாற்றினரே.

எனவும்.

மாதவமென்னிலவிபற்றிமாறுடைத்தன்மையயீங்கி
யாதினிலடைவெய்தியருண்முறையாலனைவர்களு
மேதகுசீர்க்கந்தகிரிவிரைந்தேகிவேற்கடவுள்
பாதமலர்பணிந்தேத்திப்பத்திமைசெய்துற்றனரே.

எனவும்.

நூறொழிவீராயிரரிவ்வரூமுவர்ச்சிறார்மறையோ
ருறெழுமூன்மூவருமைாறுதொழிலேற்றறநூலிற்
கூறுவிதிமுறைமுறாக்கைகொளவெனச்சிறந்தனரா
வீறியல்சிவன்முகத்துதித்தவிருங்குரவரீட்டமியோர்.

எனவரும் கந்தபுராணத் திருவிருத்தங்களானும்.

ஈதல்லாமல்.

நண்ணரிய வோராயிரத்துத்தொளாயிரரென்றாழிமுதற்
பேராளிறந்த பெருமையரும்.

எனவரும் இரட்டைப்புலவர் இனியவாக்கானும் தெளிக.

ஈதல்லாமல்.

சிவாலயங்கட்கெல்லாம் ஆதிபத்தியம் பெற்றுளோ
ரென்பதை,

விடங்கமேழாதிவீதிவிடங்கமாரூர்வெண்காடு
நடங்கொளுந்தில்லைமதூர்பஞ்சநதந்திசாய்க்காடு
இடங்கொண்மாகாணமேழூமிடைமருதூர்வெண்காடுந்
தொடங்கியதருமவாட்சிச்செங்குந்தர்தொகுதிவாழி.

எனவரும் ஈட்டியெழுபதென்னுந் தெய்விகப்பிரபந்தத்தாலும் தெளிக.

ஈதல்லாமல்.

நெல்லைப்பதிமதுராபுரிகாஞ்சிநெடுவெங்கழுக்குன்
றெல்லைக்கடங்கருங்காசியையாறொடிடைமருதூ
ரல்லைப்பொருங்கமலாலயங்காழியதிகைமுநற்
றில்லைத்தலத்தொறுமெய்க்காவல்பூண்டவர்செங்குந்தரே.

எனவும்.

பரங்குன்றஞ்சீரலைவாயாவினன்குடிபண்ணவர்க்கு
வரங்குன்றிடாத்திருவேரகஞ்சோலைமலைமறத்தி
னுரங்குன்றாகுன்றுதோறுடன்மூன்றும்பதிக்கோதிடத்
திறங்குன்றிடாதிருந்தாதிக்கப்பெற்றவர்செங்குந்தரே.

எனவும் வரும் செங்குந்தர்மாலைத் திருவிருத்தங்களாலுந் தெளிக. துணங்கைகூத்து இருகையு முடக்கிப் பழுப்புடையொத்தி ஆடல்.

ஈதல்லாமல்.

ஷை புராணத்தில் தேவசாட்சிச் சருக்கம்.

57-வது கவி.

புகழுறச்செங்கோலோங்கப்புரவலன்கவிகள்வந்து
திகழவைதன்னைக்கண்டாற்செல்வர்களாகக்காலு
மகனரசங்கமாகியருங்கவிபாடப்பெற்று
மகிழுறவிருந்தானந்தமரான்பதிக்கெங்கவேந்தன்.

(இ-ள்.) இவ்வண்ணம் கீர்த்தியமைப்படி செங்கோல்செலுத்தும் புத்திடங்கொண்டாரென்னும் மன்னவர், விளக்கமுற்ற தமது சபையிற் புலவர்கள்வந்து தன்னைக் காண்பார்களாயின், அவர்கள் உடனே ஐசுவரியவான்களாகும்படி செய்ய என்று

இன்ற மனமுடையார் தனது ராஜரீகத்திற்குரிய அந்தங்களமைத் துள்ள அருமையான பாடல்கள் புலவர்களாற் பாடப்பெற்று மனக்களிப்புடன் அரசாட்சி புரிந்திருந்தனர். அந்ததேசத்தரசன் அச்செய்தியை யுணர்ந்து. எ-று.

இதில் — அரசர்களா யுள்ளவர்கள் வித்வஜனர்களை யாதரித்து உபகரித்து அவர்களாற் பாடல்பெற வேண்டுவ தியல் பென்பதை.

பாடல் பெறுவனே பலர்மெச்ச வாழ்வனே
நாடிய நன்மணங்க ளுடையனே — சேட
னிருங்கடல் சூழ்வைத் திவன்வாழும் வாழ்க்கை
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்.

என்னும் ஔவைபிராட்டியார் அமுதவாக்கானுந் தெளிக.

எனவும்.

ஷை புராணத்தில் 109-வது கவி.

வல்முனாமுபசுப்பிரமண்ணியர்
குலமுலாவியகோமணியன்னவன்
நலமுலாவுபராயணமன்றபோ
பலமுலாவியபான்மையிற்றோன்றினான்.

(இ-ள்.) வல்லமைக்குறையாத உபசுப்பிரமணியரென்னும் நவவீரர்மரபிற் சிறப்புற்ற மாணிக்கம் போன்று விளங்குகின்றவர் அத்திருமுதுகுன்றத்தில வாழ்ந்திருந்த பராயணர் என்னும் வேந்தர் செய்த தபோபல மிகுதியுற்ற தன்மையால் அவதரித்தவர். எ-று.

இதில் — இராமருக்கிளையோராகிய இலக்குமரை இராமாநுசரென்றும், இந்திரனுக் கிளையோராகிய விஷ்ணுவின் அம்சருக்கு உபேந்திரரென்றும் வழங்குவது போன்று, குமாராநுசர்க ளென்றும் உபசுப்பிரமணியர்க

னென்றும் நவவீரர்க்குத் திருநாமம் வழங்குவதால்,
“உபசுப்பிரமண்ணியர்குலமுலாகிய கோமணியன்னவ
ன், என்றார்”

ஈதல்லாமல்,

செங்குந்தர்மாலையில் 47-வது கவி.

நல்லாபரற்குணசங்கீதலோலர்தமிழின்மிக
வல்லாளர்வாதினில்வெல்லவல்லோர்மதிமந்திரப்போர்
கல்லாதுகற்றவர்பல்கலைதேர்ந்தவர்காசினியிற்
செல்லாவழிச்சென்றுவல்லாளனைவென்றவிச்செங்குந்தரே.

இதில் — மகாவல்லமைபொருந்திய வல்லாளனென்னும் அரக்க
னை நவவீரர்களின் சந்ததியார்களாகிய செங்குந்தத்தலை
வர்கள் ஜெயித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்,

தெய்விகப்பிரபந்தமாகிய ஈட்டியெழுபது

62-வது கவி.

தில்லைமூதூர்நடஞ்செய்யுமாலயத்
தொல்லையிற்பொறித்திடுமுழுவைமுத்திரை
யெல்லையிறவொன்பதின்மர்க்காக்கியோர்
வல்லயிற்றுணையொடுமருவுங்குந்தமே.

(இ-ள்.) சபாபதி நடனஞ்செய்யாநின்ற ஆலயத்தையுடைய சிதம்பரமென்னும் பெரிய நகரத்தில் பழமையாக வரசாட்சி செய்துவந்த நவவீரர்களது கொடியிற்றீட்டிய புலியாகிய முத்திரையானது அளவுபடாத விரிவையுடைய நவலத்தீவு முழுமையுஞ் செல்லும்படி செய்வித்தது, ஒப்பற்ற வல்லமையையுடைய வேலாயுதத்தைத் துணையாகக் கொண்டிருக்குஞ்செங்குந்தம். எ-று.

செங்குந்தமன்னர்குலதீபிகை.

இதில் — செங்குந்தத்தின் பெருமையைப்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

ஈதல்லாமல்.

வல்லான் காவியத்தில் தேவசாட்சி சருக்கம்.

140-வது கவி.

கனகமுடியொளிவீசுங்கைலாயபரம்பரையீர்
தினகரனைவென்றவனைச்செருக்களத்தில்வென்றவிறற்
கனவீரவாகுதித்தகைக்கோளக்குலமுடையீ
ரினமிகலாச்செங்குந்தரென்னுமெழிற்றிருப்பெயரீர்.

(இ-ள்.) பொற்சிகரங்கள் காந்திபரப்புகின்ற திருக்கைலாய பரம்பரை யுடையோரே! சூரியனை வெற்றிகொண்ட பானுகோபனைப் போர்க்களத்திற் சயித்த வல்லபமும் மேன்மையு மமைந்த வீரவாகுதேவ ரவதரித்த சிறந்த கைக்கோளென்னுங் குலமுடையோரே! ஓரினத்திற் பகைகொள்ளாதவர்களான செங்குந்தரென்னும் அழகும்செல்வமுமமைந்த பெயரையுடையோரே எ-று

இதில் — இம்மரபினர் திருக்கைலாய பரம்பரையினரென்பதை,

தவகணநாதர்பணிகயிலாயத்தலவதிப
ருவகையிலின்றவெங்கர்தனுக்கென் றுமுறாந்துணைவர்
நவகணவீரர்க்கிலக்கத்தவர்க்குதிநாகரிகர்
சிவகயிலாயபரம்பரையாரெனுஞ்செங்குந்தரே.

என்னும் செங்குந்தர்மாலைத் திருவிருத்தத்தானும்.

ஈதல்லாமல்.

சூரியனைச் சயித்த காரணத்தால் பானுகோபனெனக் காரணப்பெயர்பூண்ட சூரபன்மாவின் புத்திரனை வீரவாகுதேவர் சயித்தாரென்பதை,

ஊனிலங்கலனடு தனுஞ்சென்னியும்வரைநேர்
தோளும்யாக்கையும்வீழ்ந்தனசூரியன்பகைஞ
ஞாலுவந்தனனவனுயிர்வெளவியேநடுவ
னிமொய்ம்பனைவழுத்தியேதென்புலத்தடைந்தான்.

என்னும் கந்தபுராணத் திருவிருத்தத்தானும்

ஈதல்லாமல்.

பூட்டியதேரொடும்போலிந்தபாறவை
யீட்டியதொட்டிவினிறுக்குமைந்தனை
மூட்டியசமரிடைமுடித்துமாசறத்
தீட்டியவீரர்கைச்சிறந்தகுந்தமே.

என்னும் ஈட்டியெழுபதின் திருவிருத்தத்தானும்

ஈதல்லாமல்.

இம்மரபினர்க்குக் கைக்கோளரென்றும் செங்குந்தரென்றும்
பெயருண்டென்பதை,

மாலைக்கைக்கொள்வர்வரிசைகைக்கொள்வர்வளருமணிக், கோவைக்கைக்கொள்வர் கொடையைக்கைக்கொள்வர்பொற்கோயிலின்மெய்க், காவல்கைக்கொள்வர்கருணைகைக்கொள்வர்கடப்பணியும், தேவைகைக்கொள்வர்சிவசமங்கைக்கொள்வர்செங்குந்தரே.

எனவும்,

ஆலசெங்குந்தரமுதசெங்குந்தர்தம்மண்டலர்க்குக்
காலசெங்குந்தர்கடம்பணிசெங்குந்தர்கௌரிதரு
பாலசெங்குந்தர்பழிதீர்க்குஞ்செங்குந்தர்பற்றுதவ
சீலசெங்குந்தர்சிவானந்தராகுமிச்செங்குந்தரே.

எனவும்வரும் செங்குந்தர்மாலைத் திருவிருத்தங்களானுந்தெளிக.

ஈதல்லாமல்.

ஞானப்பிரகாசதேசிகர் அருளிய விக்கலைச்சருக்கத்தில்

43-வது கவி.

மற்றமண்டலமாமுகமென்னவே
யுற்றகாஞ்சிவளநகர்தன்னுளே
பொற்றகொன்றையர்புத்திரராய்த்திகழ்
வெற்றிசேர்நந்திகோத்திரர்மேன்மையும்.

(இ-ள்.) அத்தொண்டமண்டலத்தின் சிறந்த முகமென்று சொல்லத்தக்கதாயிருக்கும் வளப்பமிக்க காஞ்சிநகரத்தினுள்ளே பொன்போன்ற நிறமுடைய கொன்றைமலர்மாலையணிந்த சிவபிரான் புதல்வர்களாக விளங்குகின்ற வெற்றியமைந்த நந்தியெம்பெருமான் கோத்திரர்களாகிய செங்குந்த குலத்தினர்களின் மேன்மையும். எ-று.

இதில் — தொண்டநாட்டிற் சிறந்தது காஞ்சிநகரமே யாதலின், "அம்மண்டலமாமுகம்," என்றும், குமாரக்கடவுளின் துணைவராகச் சிவபிரானருளிய இலக்கத்தொன்பதின்மரின் சந்ததியாராகலின், "பொற்றகொன்றையர்புத்திரர்." என்றும் கூறினர்.

அதல்லாமல்.

வல்லான்காவியத்தில் செங்குந்தப்புலவர்கள் துதி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூடலைக்கர்ச்சக்கத்தார்சிரமசைக்கக்குலவுதில்லையரன்பொற்கா சளிக்கக்கந்தன், பாடல்பகிரெனக்கேட்கக்கம்பருலாப்பாடப்பண் பமையுதிகண்டுரைக்கக்குகன்கோயிலமைக்கப், பீடமையுந்தனி கைமான்மியங்காத்தக்கண்டம் பிறங்கியவாசிட்டவுரைபெருக்க க[illegible]சேர்க்கவொணர்முதற்செங்குந்த நெறிமரபோர்திரு வடிகளினைத்துவாழ்வாம்.

(இ-ள்.) மதுரையென்னும் க்ஷேத்திரத்தில் வாழ்ந்திருந்த கடைச்சங்கத்தார்கள் சிரமசைக்கவும், விளக்குற்ற சிதம்பரத்தில் வீற்றிருந்தருளும் நடராஜமூர்த்தி பொற்காசு அளித்தருளவும், திருச்செந்தூர் முருகக்கடவுள் நம்பீ நீ பாடல்பாடுவாயென்று வேண்டவும், ஏகாம்பரநாதருலாப்பிரசாதமியற்றவும், இலக்கணமமைந்த உரிச்சொல் நிகண்டுரைக்கவும், குமாரக்கடவுளின் ஆலயம் புதுக்கவும், பெருமையமைந்த தணிகைச்சரிதமுரைக்கவும் மகா காந்தத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேசகாண்டத்தையும் திருவாய்மலரவும், உலகெங்கும் பரவியிருக்கும் ஞானவாசிட்டமென்னும் நூலுக்கு விருத்தியுரை யருளிச்செய்யவும், விசேடத் திருவருளைப்பெற்ற பாவலர்கள் முதலாக ஒழுக்கமமைந்த செங்குந்தமரபினர்களின் திருவடிகளைத் தியானித்து ஈடேறுவாம்.

திருவாலவாயின்க ணிருந்த சங்கத்தாரைச் சிரமசைக்கச் செய்தவர் பொய்யாமொழிப்புலவர். சிதம்பரேசர் பொற்காசளிக்கப்பெற்றவர் படிக்காசுப்புலவர். முருகக்கடவுளை பாடும்படி கேட்கப்பெற்றவர் பகழிக்கூத்தர். ஏகாம்பரநாதருலாப்பாடியவர்கள் இரட்டையர்கள். உரிச்சொல் நிகண்டுரைத்தவர் காங்கேயமுனிவர். திருப்போரூரில் முருகாலயமமைத்தவர் சிதம்பர சுவாமிகள். தணிகைப்புராண மருளிச்செய்தவர் கச்சியப்பமுனிவர். உபதேசகாண்டந் திருவாய்மலர்ந்தவர் கோனேரியப்பநாவலர். ஞானவாசிட்டத்திற்கு விருத்தியுரை யியற்றியவர் பிறைசை அருணாசல சுவாமிகள். இவர்களனைவரும் செங்குந்த மரபினராகலின், "செங்குந்தநெறிமரபோர்" என்றனர்.

இவர்கள் இம்மரபினர்கள் என்பதற்கு சில

சாஸ்திர திருஷ்டாந்தங்கள் வருமாறு.

கவிகள்.

உரமசைத்தார்கவிக்குழ்புவியாளுமுசிதன்முன்னுள்
கரமசைத்தார்ப்பட்டுனலமிழ்சங்கக்கவிஞர்பலகை

வரமசைத்தம்பர்வயக்கவுமற்றதில்வாழ்புலவர்
சிரமசைத்தொன்றவும்வைத்தோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

புகழ்பூத்திடுந்தில்லைமேலோனையம்மையைப்போற்றிபெங்கு
மிகழ்பூத்திடாதபொற்காசைப்பஞ்சாக்கரத்தின்படிமே
னிகழ்பூத்தல்பெற்றுப்புள்வேளூர்க்கலம்புகநீட்டியரு
திகழ்பூத்துமின்றசெயலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

புதைதந்தோடமாயேத்திரமன்றுசெற்றபுனிதன்வினை
வதைதந்தோடயார்க்கும்பிள்ளைத்தமிழோதெனவாய்மலர்ந்தே
பதைதந்தோடப்பாவலர்பாடும்வெப்பத்தவர்பாடுகுன்றிச்
சிதைதந்தோடச்செய்ததிறலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

அந்தைதமகன்குருடம்மான்மகன்முடமாகிக்கிழமே
லொத்துறைந்தேதகறுபாடோடணிகொளுலப்பில்கவி
முத்தரிலேதியேகம்பருலாமுன்மொழிந்தெவருஞ்
சித்தமுவப்பத்திரிவோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

படம்பெறுமாந்தர்மருமாரமண்டலமாண்புருட
னிடம்பெறவோங்குமுரிச்சோணிகண்டையினிதுரைத்துக்
குடம்பெருமாமுனிபொப்பத்தமிழைக்குவலயத்திற்
றிடம்பெறவைத்ததிறலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

அங்கயற்கண்ணியருள்வாங்கிச்சாதனமாகியநான்
செங்குமுலவுதச்சாந்தலிங்கன்மொழிக்கின்னுரையும்

பங்கயில்கண்ணுடைவள்ளன்மொழிக்குரையும்பகர்ந்த
சிங்குலவையுற்றதிறலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

மேனுள்வழவூர்மறைநாதருட்பஞ்சம்விட்டிப்பின்னேன்
மாணை[illegible]ட்குமவர்பாலுதிக்தக்கைம்மாமுநவ
ஞானத்[illegible]யகிலத்தவர்தொழுவாய்ந்னைத்த
தேனார்கிள[illegible]புலமைவோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

பிறப்பிலிமின்றபிரான்காதையையவன்பேரருளாற்
றறப்பவருந்துதிப்பக்கச்சியப்பன்முன்சொற்றவறு
நிறப்பகுதிக்கப்புறத்தோர்பகுதியைத்தீஞ்சுவைகள்
சிறப்பவுரைத்ததிறலோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும்.

எட்டுமிரண்டுமென்னீராறுதத்துவத்தேநயங்கி
யொட்டியுமொட்டாவொருபொருளைச்சுட்டியோர்வையெலாம்
வெட்டிவிளக்குகல்வேதாந்தசாகைவிரித்திடுவா
சிட்டவுரைமுனைச்செய்தோர்செங்குந்தசிலாக்கியரே.

எனவும் வரும் செங்குந்த சிலாக்கியமாலைத் திருவிருத்தத்தானுமுணர்க.

ஈதல்லாமல்.

பொய்யாமொழிப்புலவர் பாண்டியனவைக்கட் சென்றகாலம் கடைச்சங்கத்தார் மறைந்து பலகையுடன் பொற்றாமரைத்தடாகத்தில் அமிழ்ந்திருந்தகாலமாகலின், அப்பாண்டியன் அவர்பெயரைக்கேட்டவளவில் ஆச்சரியமுடையவனாய் இப்பெயருமக்குரித்தான துண்மையாயின் பொற்றாமரையில் அ[illegible]ந்த [illegible]லகை மிதந்து அதிற்கடைச்சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மரும் வீற்றிருந்து சிரமசைக்கும்படி பாடுவீரெனக்[illegible] அப்படியே

பாட அப்பலகைமிதந்து அதிற்சங்கத்தார் நாற்பத்தொன்பதின் மரும் கிரமசைத்தனர். இதனை,

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையெனினும்
பாவேந்தருண்டென்னும் பான்மையாற் — கோவேந்தன்
மாறனரிய மதுரா புரித் தமிழோர்
வீரணைப்பே சற்றே மிக.

எனவும்.

உங்களிலே யானொருவ னொவ்வுவனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள் — சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
வேடெடுத்தா லேழெழு வீரே.

எனவும் வரும் வெண்பாக்களாலும், படிக்காசுபெற்ற காரணத்தா லவர்க்கப்பெயர் வழங்கியதென்பதை,

மட்டாருந்தென்களந்தைப்படிக்காசனுரைத்ததமிழ்
வரைந்தவேட்டைப்
பட்டாலேசூழ்ந்திடினுமுவரும்பரிமளிக்கும்
பரிந்தவ்வேட்டைத்
தொட்டாலுங்கைமணக்குஞ்சொன்னாலும்வாய்மணக்குந்
துய்யசேற்றி
னட்டாலுந்தமிழ்ப்பயிராய்விளைந்திடுமே
பாட்டினதுகளினத்தானே.

எனப் பிற்காலத்தார் கூறிய விருத்தத்தானும் தெளிக.

[illegible]ல்.

திருச்செந்தூர் முருகக்கடவுளே பகழிக்கூத்தரைப் பிள்ளைத்தமிழ் பாடும்படி கேட்டனரென்பதை,

பூமாதுபோற்றும் புகழ்ப்பகழிக்கூத்தாவின்
பாமாலைசாத்த விரும்பத்தேமா — வேமங்
கொடுக்க[illegible]வெங்கூற்றுவன்வந்தாலுந்
தடுக்கவதியேமக்காந்தாம்.

என்னு முருகக்கடவுளருளிய வெண்பாவாலுந் தெளிக.

ஈதல்லாமல்.

இரட்டையர்கள் ஏகாம்பரநாதருலாப்பாடின ரென்பதை,

பேதைப்புலவரெண்ணேகாம்பரமுமேசரகெடுப
கா[illegible]தப்புலவிரட்டையர்பாடுங்கலம்பகமு
[illegible]கற்கரியகல்லேகம்பவாணருலாவுமந்த
மாதைப்பனுவலும்பாராட்டுந்தொண்டைமண்டலமே.

என்னும் தொண்டைமண்டலசதகத் திருவிருத்தத்தானு
அறிக.

ஈதல்லாமல்.

வல்லான்காவியத்தில்

சந்தானகுரவர் நால்வருள் மெய்கண்டதேவர், துதி.

பெருநகழிநெடிலடியாசாயவிருத்தம்.

பண்டைக்கபிலர்கோனியாழ்முனியாற்
பரனுணர்ந்தரோமசனுன்முன்
பரசமயக்கோளரியெனக்குகனிப்
பணித்தவாறவற்குவாவருக்க
ணண்டுகற்குலமன்னெடுஞ்செலன்மறுத்த
தகன்மற்றவற்பழியூழ்க்கா
வற்றெருளூழ்ச்சனகாய்சத்தொடுங்கடந்தை
யனுகவுய்த்திரௌரவாகமத்தில்
விண்டதோர்ஞானஞ்சுயசையாப்பாலான்மிசை
விக்கக்கெடிலத்துட்சுவேத
வியலெனுற்பவவில்லொருவிமுவ[illegible]ண்டி
வெண்ணெயைங்கரனிடந்தமிழோர்ச்

ஆண்டிடுங்காராச்சுதைதயெனவாதை
யுலகமுண்டுயமொழிபெயர்த்த
வொப்பின்மெய்கண்டதேவனுண்மலர்த்தா
ளுன்னியெம்வினைகளையொழிப்பாம்.

(இ-ள்.) முன்னொருகால் கைலாயபதியாகிய சிவபெருமான உலகின்கணுண்டாகிய அகம்பிரமவாதிகளின் கோட்பாட்டை நாரதமுனிவராலுணர்ந்து, அதற்குமுன் சமணராதிய புறச்சமயிகள் செய்துவருங் கொடுமையை உரோமசமுனிவராலுணர்ந்தபோது அவரம்சத்தில் தமதிளைய பிள்ளையாரைப் பரசமய கோளரியாய் அவதரிக்கக் கட்டளையிட்டதுபோல, அக்குமாரக்கடவுளின் இளவலாகிய வீரவாகுதேவர் சிறந்த சூரியகுலத்துதித்த முசுகுந்தச் சக்கரவர்த்தியுடன் செல்வதற்குத் தடைகூறிய தோடம்நீங்க அச்சக்கரவர்த்தியை நிந்தித்த தோடத்திற்காக அத்தகைய ஓர் தோடமேற்றுள்ள சனகமுனிவரம்சத்துடனே மகதநாட்டில் திருக்கடந்தையம்பதியில் அயோனிஜராய்ச் செலுத்தி, இரௌரவாகமத்திற் கூறியுள்ளதாகிய ஒப்பற்ற சிவஞானபோதத்தை நந்திதேவருடைய பத்தினியாராகிய சுயசையைக் காராவாகப் புவியில் வரச்செய்து அவ்வாவின் பாலை ஊட்டுவிக்க, அஃதுணர்ந்த பின் [illegible] லநதி தீரத்துள்ள சரவண வனமென்னும் தம துற்பவவிட்டை நீங்கி, மூன்றுவயதில் திருவெண்ணைநல்லூர் விநாயகக் கடவுளிடம் தமிழ்க்கலைகளுணர்ந்து, தாம் தேவாம்சமாகிய காராப்பாலாலுணர்ந்த சிவஞானபோதத்தைத் தாமுண்ட பாலைப்போலவே உலகத்தின்ருண்டு ஈடேறும்பொருட்டுத் தமிழில் மொழிபெயர்த்தருளிய சுவேதவனப்பெருமாளென்னும் மெய்கண்டதேவருடைய அன்றலர்ந்த தாமரைமலரையொத்த திருவடிகளைத் தியானித்து நமது வினைகளைப்போக்குவர்ம். எ-று.

உரோமசமுனிவரம்சத்துடன் குமாரக்கடவுள் ஆளுடைய பிள்ளையாராய் அவதரித்தனரென்பதை

ஒருகலரிதழிதலியிலுழியுலகுபழிபெருகுவழியையினையா
முழுதிடலிலெழுமயிர்கடமூவமுனிகுழுவினெடுகெழுவுசிவினைத்

தொழுதலகிலிழுகுமலமழியும்வகைகழுவுமுரைகழுமனகரப்
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழித
[கையவே.

என்னும் ஆளுடைய பிள்ளையார் அருள்வாக்கானும் தெளிக.

ஈதல்லாமல்.

தசர்மிழலையிறையவர்பாலிமையப்பாவைதிருமுலைப்பா
றேசமுய்யவுண்டவர்தாந்திருமாமகனாராதலினாற்
காசுவாசியுடன்பெற்றார்கைத்தொண்டாகுமடிமையினால்
வாசியில்லாகாசுபடிபெற்றுவந்தார்வாகீசர்.

என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்கானுந்தெளிக.

ஈதல்லாமல்.

குமாரக்கடவுளின் கட்டளையை வீரவாகுதேவர் மறுத்ததன்றி, முசுகுந்தச் சக்கரவர்த்தியை இழித்துக்கூறின ரென்பதையும், அதுகேட்ட குகப்பெருமான் சினந்து மறுத்த தோடத்திற்கு மானவாம்சமடைவாயெனக் கட்டளை யிட்டன ரென்பதை இத்தீபிகையின் 10-வது பக்கம் [முழுகருட்]. என்னும் விருத்தங்களானுந்தெளிக.

ஈதல்லாமல்.

ஒன்பதின்மரும் அவ்வாறே கூறியிருக்க அப்பாவம் இவரைமாத்திரம் சேர்வதெங்ஙனமெனின், அவ்வொன்பதின்மருள் மூத்தோர் இவராகலானும், இவர்முந்திக் கூறியதால் இவர்தம்பிகளும் தமையன் வார்த்தையைத் தட்டாது கூறினராகலானும் அப்பாவத்திற் கிவரேகாரணரென்பது தேற்றம். வீரவாகுதேவரே மெய்கண்டதேவராய் அவதரித்தன ரென்பதை,

மூர்த்தடன்மொய்ம்பனருந்தவமாற்றுமுசுமுகனை
சிந்தைசெய்யுழ்முறைநிற்பவுலகினிரீச்சுரர்கோ

ஞந்தமகதிமுனியானிடத்தோதவுவை
சிந்தச்சுவேதத்துதித்தோர்செங்குந்தசிலாக்கியரே.

என்னும் செங்குந்த சிலாக்கியர்மாலைத் திருவிருத்தத்தானுந்தெளிக.

ஈதல்லாமல்.

சனகாதியர் நால்வரும் சிவபெருமான் முதலிலருளிய வேதார்த்தத்திற் றெளிவடையாது மயங்கி மீட்டும் சிவாகமங்களையுபதேசிக்கப் பிரார்த்தித்த தோஷத்தால், அந்நால்வரும் சிவஞான முதிர்ச்சியுடையராய்ப் புவியில் அவதரிக்க வேண்டியிருந்தலின், முதலில் சனகாம்சத்தை வீரவாகுதேவாவதாரத்திற் கலந்து, (தமதிளையபிள்ளையாருருவாகிய அனற்பொறியை வாயுதேவனோடுங் கூட்டிக் கங்கைக்கணுள்ள சரவணப்போய்கைக் கனுப்பியதுபோல) கெடில நதிக்கணுள்ள சுவேதவனத்திற்கனுப்பினரென்பார், "அற்றொருஞ்ச்சனகாம்சத்தொடுங்கடைக்கணகயனுகவுதத." எனவும் "கெடிலத்துச்சுவேதவியலனுறபவனில்." எனவுங்கூறினர். "மிசைவிக்க" என்பதற்கு, உண்பிக்க வெனப் பொருள்கொள்ளினுமிழுக்காது. சனகாதியர் நால்வரும் முதலில் மயங்கினரென்பதை,

முந்தைவேதமுழுதுமுணர்த்தியே
பெந்தையேகவிருநிலம்போந்துஞ்
சிந்தையொன்றுந்திறனரிதாகவி
னொந்துபின்னருநோற்றலைமேயினர்.

என்னும் கந்தபுராணத்திருவிருத்தத்தானுந் தெளிக.

சுயசை மருத்துவின் புத்திரியும் நந்திபெம்பெருமான் பத்தினியுமென்பதனை, இலிங்கபுராணம் சிலாதரன் மகவுவேண்டித் தவம்பண்ணின அத்தியாயத்தானுமறிக. தீவினை போக்கத்தக்கதும் நல்வினை கட்டத்தக்கது மாயினும், பிறவியறவேண்டுவோர்க்கு இருவினைகளுமறவேண்டுதலின், "எம்வினைகளையொழிப்பாம்." என்றனர்.

௪- காவியத்தில்

ஏனைய மூவர் துதி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விடைத்தேவன்பணிப்பான்மெய்கண்டான்றன்பின்
வியன்கயிலைவிடுத்துமுறைநிட்டாயன்னோன்
புடைத்தேருஞ்சனற்குமாரனாதிமூவர்
புவியிலருணந்திமுனம்புனிதராகிக்
கடைத்தேறச்சகலர்மலமொழிந்துமுத்தி
கைக்கொள்சிவஞானசித்தியாதிநூல்கள்
படைத்தேவருஞ்சைவநெறியையோர்ந்து
பதம்பெறச்செய்திறத்தைநிதம்பரவிவாழ்வாம்.

(இ-ள்.) இடபவாகனராகிய சிவபெருமான் கட்டளையினாலே மெய்கண்டதேவர் அவதாரத்தின்பின், அப்பெருமானிடத்தில் ஞானோபதேச மடைந்துள்ள சனற்குமாரர் முதலிய மூவரும் முறைப்படியே திருக்கயிலையை விட்டுநீங்கி, இவ்வுலகத்தில் அருணந்திசிவாசாரியர் மறைஞானசம்பந்தசிவாசாரியர் உமாபதிசிவாசாரியர் என்னும் மூவராய் அவதரித்து, மும்மலமுடையோர்களாகிய சகலர்களெல்லாம் மலமொழிந்து முத்தியின்பத்தைக் கைக்கொள்ளத்தக்க மார்க்கம் பாலிக்கும் சிவஞானசித்தியார் முதலிய நூல்களை இயற்றி, எல்லாரும் சைவசமயமார்க்கத்தை யுணர்ந்து சிவபதமடையச் செய்துள்ள வல்லபத்தை நாடோறும் துதித்து வாழ்வடைவாம். எ-று.

இங்ஙனம் "விடைத்தேவன்" என்பதற்கு நந்திதேவன் எனப் பொருள் கொள்ளினுமமையும். அத்தேவனிடத்தினு மிவர்கள் ஞானோபதேசம் பெற்றுள்ளாராகலின். இருவரிடத்தினு முபதேசம்பெற்றுள்ள சனகாதியர்களுள்வரில் முன்னோராகிய சனகர் மெய்கண்டாராய் வந்ததுபோலவே, சனற்குமாரர் அருணந்தி சிவாசாரியராகவும் சனந்தர் மறைஞானசம்பந்த சிவாசாரி

யராகவும் சனற்குமார் உமாபதி சிவாசாரியராகவும் அவதரித்தன ரென்பார், "மெய்கண்டான்றன்பின் - வியன்கயிலைவிடுத்துமுறை யிடாயன்னோனை - புடைத்தேருஞ்சனற்குமாரனுமிம்மூவர் - புவியி லருணந்திமுறைப்புனிதராகி" என்றும இம்மூவருள், அருணந்தி சிவாசாரியர் சிவஞானசித்தியார் இருபாவிருபது என்னும் இரண்டு நூல்களும், மறைஞானசம்பந்த சிவாசாரியர் சிவதருமோத்திரம் என்னுமோர் நூலும், உமாபதிசிவாசாரியர், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம், கோயிற்புராணம், சிவபுண்ணியத்தெளிவு என்னும் பத்து நூல்களும் இயற்றினமையின், "சிவஞானசித்தியார்தி நூல்கள்" என்றும் கூறினர்.

ஈதல்லாமல்.

ஷை காவியத்தில்

திருக்கச்சிநகராளவந்தவள்ளலார்துதி

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நச்சிருந்தமணிமிடற்றெம்பெருமானின் கீழ்நகுமொளியுமணி மன்றநடமுங்காணும், பிச்சிவனப்பூமதுவார்காமகோட்டப்பெரு மாட்டிச் சிலம்பகின்றதயஞ்செய்தோர், பச்சிரதங்கமழ்குந்தப் படைப்பேர்கொண்டுபயின்மரபோர்கைலாயபரம்பரைக்கள், கச்சிநகராளவந்தவள்ளலார்தங்க வின்வளருங்கமலவடி கருதிவாழ்வாம்.

(இ-ள்.) விடமணிந்த நீலகண்டத்துடனே ஒப்பற்ற மூவிருட்சத்தின்கீழ் வீற்றிருக்கும் சிவசோதியையும் அழகிய பொன்னம்பலத்திற்புரியும் ஆனந்தநடனத்தையும் சதா தரிசிக்கும் பித்[illegible]வரும், மலர்கள் தேனைச்சொரிகின்ற சோலைசூழ்ந்த காமகோட்டத்தில் வீற்றிருப்பவருமாகிய உமாதேவியாரின் சிலம்பினின்றும் உதித்தவராய்ச் செவ்விய உதிரங்கமழ்கின்ற குந்தமே

ன்னும் ஆயுதப்பெயரைக்கொண்டு விளங்கும் மரபினராகிய திருக்கைலாயபரம்பரையிலவதரித்த, கச்சிநகராளவந்த வள்ளலாரென்னும் ஆசாரியருடைய அழகுமிக்க தாமரைமலர்போலும் திருவடிகளைச் சிந்தித்திடேறுவாம். எ-று.

உமாதேவியார்க்குச் சிவபிரான் திருவுருவத்தையும் நடனத்தையும் சதா தரிசித்திருக்க விருப்பமாகலின், "கச்சிருந்தமணிமிடற்றொருமாவின்கீழ்நகுமொளிருமணிமன்றநடமுங்காணும் பிச்சி" எனவும், குந்தப்படை பகைவர்களுதிரந்தோய்ந்திருத்தலினானும், சிவசத்தியின் சிலம்பிற்றோன்றிய உபசுப்பிரமணிய மரபினர்க்குச் சிவசத்தியே அப்படையையருளி அதனையே தம் மரபிற்கும் பெயராக வளித்தமையானும், "பச்சிரதங்கமழ்குந்தப்படைப்பேர்கொண்டு பயின்மரபோர்" எனவும், இம்மரபோர் கைலாயபரம்பரையினராய் விளங்கலை யுணர்த்துவான், "கைலாயபரம்பரைக்கண்" எனவும் கூறினர். இதனை,

அன்றுளுடைப்பிள்ளைகண்டோங்கும்பாளயமாகிக்கச்சி
நின்றுடுமூருட்சமயாதிதீக்கைநிறுவிமுத்தி
குன்றுவகையிற்றந்தாளவரும்வள்ளலார்குழுவிற்
சென்றுறுமையர்யாருஞ்செங்குந்தசிலாக்கியரே.

என்னும் செங்குந்த சிலாக்கியர்மாலைத் திருவிருத்தத்தானுந் தெளிக.

அம்பிகையார் சிவபிரான் திருக்கோலத்தைச்

சதாநோக்கிக்கொண்டிருப்பரென்பதை,

நகந்தருங்கொடி கண்களா[illegible]ணியே
முகந்திரும்புமுறையிற்றிரு[illegible]மான்
மகிழ்ந்திடங்கதிர்விரமுழுவல்[illegible]
தருந்தருந்தருமென்னத்தயங்குற.

என்னும் பிரபுலிங்கலீலைச் செய்யுளானு முண[illegible]

ஆசையின் மிகுதியே பித்தாகலின், "பிச்சி" என்றனர்.

பிச்சு பித்து என்னுமிரண்டும் ஒருபொருட் சொற்களே, அஃறிணை .... திணைநோக்கிப் பித்தெனற்பாலது பிச்செனவின்று என்க் கூறுவாருமுளர்.

ஏதல்லாமல்,

ஷெ காவியத்தில்

திருவாலவனங்கார்க்கோடகமுனிவர்துதி.

கார்க்கோடன்னிலைபெயரவண்டகோளங் கதிரறக்குலாசலங்களதிரவேண்டிக், கார்க்கோடவருந்தகர்மாப்பற்றிக் காளிக்கதாளம்பற்றித்தவிறற்கைக்கோள்வீரர், கார்க்கொடன்றிருமரபிற்றோன்றியாலங்காட்டரனருணட்டனங்காணவந்த, கார்க்கோடகம்முனிவரருணிறைந்தகனகவனசத்தாழ்கள்கருத்தில்வைப்பாம்.

(இ-ள்.) கடலும் தன்னிலை வேறுபடவும், அண்டகோடிகள் தத்தம நிலைபெயரவும், அஷ்டகுலபர்வதங்களு மதிரவும், திக்குப்பாலகர்கள் திசைமாறவும் அதிவேகமாய்வந்த ஆட்டுக்கடாவைப் பிடித்து, காளியின் கரத்தேந்திய தாளத்தைப் பிடுங்கிய வல்லபமும் ஒழுக்கமுமடைந்த நவவீரர்களின் மேகத்தின் கொள்கையையுடைய சிறந்த குலத்திலவதரித்து, திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்கும் இரத்தினசபாபதியின் திருவருணிருத்தத்தைத் தரிசிக்கவந்த கார்க்கோடகரென்னும் முனிவருடைய திருவருணிரம்பிய பொற்றாமரைபோன்ற திருவடிகளை இருதயத்திலிருத்துவாம்.

கார்கோள் - கடல், கோட்டம் - வேறுபடல், கோள் - கொள்கை. கார்கோள் எனவும் இக்கார கோட எனவும், இயல்பாயிற்க.................வனவாகிய இரண்டும் செய்யுளிசைநோக்கி இரட்டித்து................ ஆட்டுக்கடாவைப் பிடித்ததை,

ஆடலந்தொழின்மேல்கொண்டேயனைவருமிரியச்செல்லு
மேடமஞ்சுறவேயார்துவிளைந்துபோய்வீரவாகு
கோடவைபற்றியீர்த்துக்கொண்டுராய்க்க[illegible]கண்ணி
யேடுறுசேபத்தண்டாரிணையவன்முன்னருய்த்தான்.

எனும் கந்தபுராணத்திருவிருத்தத்தானும் தெளிக.

ஈதல்லாமல்.

ஓதியவேள்வியினுவப்பகாரதன்
போதவேதகர்தனைப்பொங்குதீக்கதா
வேதனைப்படுப்பதைவிரைந்துகட்டியே
சேதனக்குதவினதிருச்செங்குந்தமே.

எனவும்.

காளிகைத்தாளம்பறித்ததை

ஆலங்காட்டினிலரனுடனன்றுவாதாடுங்
கோலங்காட்டியகாளிதன்கொற்றம்போய்வெல்லவ்
பாலங்காட்டியபன்மணித்தாளமேபறித்துச்
சீலங்காட்டியகுந்தர்நற்பெருமையார்தெரிப்பார்.

எனவும் வரும் கட்டி ஏழுபதின் திருவிருத்தங்களானுந் தெளிக.

ஈதல்லாமல்.

சிவபிரானுடன் வாதாடுங்காளி திருக்கரத்தேந்திய தாளத்தைப் பறித்தற்கு வல்லபத்தொடு ஒழுக்கமுமுடையோர்க்கன்றி யலாதாகலின், "கைக்கோள்" என்[illegible] கூறினர்.

ஆகலினன்றோ இம்மரபினர்க்கு[illegible] கைக்கோளர் எனினும் பெயருமமைந்துள்ளது.

இப்பெயருமமைந்துள்ள[illegible]தென்பதை.

உதிதருமத்திறல்வீரரரியணைமேலம்மையுடனுற்றந்[illegible]தன் [க்கி
பதமலர்கள்பணிந்தெழுமவர்க்கண்டுபார்ப்பதி[illegible]ட்டீவாலே

மதியுமிகுதிறலுமெழின் மானமுங்கையெனப்பெறுநம்மைந்தரின் [ஞெ
நியரலர்நந்திகளிச்சுணத்தவரென்றுன்சுருதிப்பொருளாய்வின் [ருன்

என்னும் கந்தபுராணத் திருவிருத்தத்தா லுமுணர்க.

ஈதல்லாமல்.

மேகங்கைம்மா றுகருதா து உலகிற்குதவல்போல, இவ்வீர கரும் எதிருதவிநோக்கா து கருணையால் உதவுவோராகலின் கார்க்கோடன் திருமரபு, என்றனர்.

இக்கார்க்கோடர் செங்குந்த மரபினரென்பதை,

முக்கணனென்போன்முதல்வனோர்தாளண்டமுட்டவிட்டுந
கொக்கவின்றுடும்மரிபைவென்றவுலப்பினலம்
புக்குறுமாலவனத்திற்கார்க்கோடன்புரிமடத்தெதன்
மக்குமெச்சக்கலைதேர்ந்தோர்செங்குந்தசிலாக்கியரே.

என்னும் செங்குந்த சிலாக்கியர்மாலைத் திருவிருத்தத்தா லுமுணர்க.

ஈதல்லாமல்.

ஷை காவியத்தில்

தில்லைவாழ் சேங்குந்தர்துதி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒப்புயர்விலதொன்ற[illegible]லைத்த
லுலகுளவெ[illegible]ஞ்சிவஞானஞ்
செ[illegible]கம்பிரமாணிச்சுரருணரத்
தெரி[illegible]சரசந்தானவாரியரு

செப்பில்பின்னிருவிரந் தபுல்லமுதை
யீய்ந்துபொன்னம்பலத் துவச
மப்புவியேத்தவேற்றுசெங்குந்த
விறைவர்தாட்பணிபுரிந் துய்வாம்.

(இ-ள்.) ஓர் சமானதிகரணமாகிய பரமசிவ முதல்வுடனும், அப்பரமசிவத்தாற் புரியும் பஞ்சகிருத்தியங்களால் பலவாகிய புவனங்களுண்டென்றும் விளக்குகின்ற, வேதாந்தத்தெளிவாகிய சித்தாந்தமென்னும் சிவஞானத்தை, மெய்ஞ்ஞானியர்களால் இழித்துக் கூறப்படும் அகம்பிரமவாதிகளும் அவிச்சாவாதிகளும் தெளியும்படி விளக்கியருளிய சந்தானசாரியர்கள் நால்வருள், சிவானுபூதித் தன்மையிற் குறைவுபடாத மறைஞானசம்பந்த சிவாசாரியரும் உமாபதி சிவாசாரியரும் யாசித்த அற்பமாகிய அன்னப்பாகைத் தந்து, இப்புவியின்கணுள்ளோர் யாரும் துதிக்கும்படியாகத் தில்லைப் பொன்னம்பலவருடைய துவசாரோகண மகோற்சவத்தினைச் செய்யும் பேற்றைவாய்ந்த செங்குந்த மூர்த்திகளுடைய திருவடித் தொண்டுகளைச் செய்து ஈடேறுவாம், எ-று.

தில்லைவாழந்தணரு ளொருவராகிய உமாபதி சிவாசாரியர் காலத்தில் சிதம்பரத்தை யரசாண்டிருந்த திரியம்பகச்சோழராஜன் இவரது பத்தித்திறத்தையும் அதனால் விளங்கும் தெய்விகத் தன்மைகளையும் வடகலை தென்கலை என்னும் உபயகலாவல்லபங்களையும் நன்குணர்ந்து, அவரிடத்தில் தனக்குறித்த மெய்யன்பின் மேம்பாட்டால் சிவிகை, [illegible]கை, திருச்சின்னம், சாமரம், பகற்றீவட்டி, என்னும் இவை[illegible] விருதாகக் கொடுத்து உ[illegible]ரித்து வந்தான். அக்காலில் ஓர்நாள் உமாபதி சிவம், தாம் தினந்தோறும் முடிக்கும் கட்[illegible]ய ஸ்ரீ சபாநாயகரின் உச்சிகால பூஜையை முடித்துவிட்டு, சிவி[illegible] ஆரோகணி[illegible] [illegible]ண்கொற்றக்குடை நிழற்றவும் திருச்சின்ன மூதவும் வெண்சாமரை வீசவும் பகற் றீவட்டி பிடிக்[illegible]வரவும் உலாவருகையில்

எதிர்ப்பட் டெழுந்தருளி வரும் சந்தானகுரவரு ளொருவரும்
அவனுதாச்சிரமியுமாகிய மறைஞான சம்பந்த சிவாசாரியர் இவர்
வருகின்ற ஆடம்பரத்தைக் கண்ணுற்று, ஓய் பகற்குருடரே! வா
ருமென்றழைத்தனர், அதுகேட்ட உமாபதி சிவம் திடுக்கிட்டுத்
திடீரென்று சிவிகையினின்றுங் கீழிறங்கித் தண்டாகாரமாகப்
பணிந்தெழுந்து அவரைப் பின்றொடர்ந்துசெல்ல, அப்போது
சிலதூரஞ்சென்ற மறைஞான சம்பந்தர்க்குத் தீபனமெழ, அக்
கால் தாம் சென்றிருந்தவிடம் செங்குந்தர் வீதியா யிருக்கக்க
ண்டு பெருங் களிகூர்ந்து உமாபதி சிவத்தைநோக்கி, சிவகுமாரா
ஐஞூர்கணாவிது செங்குந்தர் வீதி இதுவாகையால் இவ்வீதியில் நம்
பசியைத் தீர்த்துக்கொள்ளுவோ மாயின் சிவப்பிரசாதமாகு மெ
ன்றுகூறி, அங்கு நூற்பாவை விரித்துக்கொண்டிருந்த செங்குந்
தர்களிடஞ்சென்று தமது பசிதணிக்க ஆகாரங் கேட்டனர். அ
துகேட்ட செங்குந்தர்கள் துணுக்குற்று, சுவாமிகாள்! தேவரீர்
அடியேங்கள் குடிசைக் கெழுந்தருளின் அறுசுவையோடு கூடிய
அமுது படைக்க ஆவலுடையேம். இங்கொன்று மில்லையே:
என்று அநுதாபப்படுகையில் மறைஞானசம்பந்தர் அங்கு நூல்
தோய்ப்பதற்காகக் கொண்டுவந்து வைத்திருந்த கூழினைப்பார்
த்து இதை வார்க்கப்படாதா என்று வினவ, அவர்கள் ஐயோ!
அது நூல்தோய்ப்பதற்குக் கொணர்ந்த உப்பிலாக் கூழென்றோத
அதற்கவர் நீங்கள் கரத்தாற்பரிசித்த யாவும் தேவாமுதத்தினுஞ்
சிறந்த சிவப்பிரசாத மாகுமாதலால் இன்னும் தடைகூறாது கரத்
தில் வாருமென்று கட்டளையிட, அக்கட்டளையை மறுக்கத்துணி
வின்றி அவ்வாறே வார்த்தனர், அதையவ ருண்கையில் முழங்
கை யிரண்டிலும் வழிந்தகூழ் அருகிலிருந்த உமாபதி சிவம்
மாறிமாறி உண்டது. அத்தருணத்தி லவ்வழியே எழுந்தருளிய
ஏனைய தீக்ஷிதர்களிற் சிலர் கண்ணுற்று அருவருப்புடன் சென்
றார்கள். அப்பால் தமதாசிரியரை அரிதிற்பிரிந் தில்லடைந்த
உமாபதி சிவாசாரியர் தமது வழக்கப்படி மறுதினம் உச்சிகால
பூஜைக்குச் சபைக்கெழுந்தருள, முன்னை மறைஞானசம்பந்தரின்
முழங்கையால் வடிந்த கூழைக்குடிக்கையிற் கண்ட தீக்ஷிதர்கள்
பூஜைசெய்ய வேண்டாமென்று தடுத்துவிட்டார்கள். உடனே

யவர் சிதம்பரத்திற்கடுத்த கொற்றவன் குடியென்னும் ஊரில் வசித்து தமது ஆன்மார்த்தமாயுள்ள சபாநாயகரைத் தினமுந் தவறாது பூசித்துக்கொண் டிருக்கையில் ஆனித்திருமஞ்சன மகோற்சவம் நேரிட, அதின் துவஜாரோகணோற்சவம் அச்சோழ ராஜனுடைய தானையால் அஃதுசற்று பேறுதிருக்கக்கண்ட அவ்வரசன் வருந்தி, அடியேன் யாதோர் தவறுமின்றி அரசுசெலுத்தி வருகையில் இவ்விதமாகத் துவசாரோகணம் தடைபடவேண்டிய காரணமென்னையோ; எம்பெருமானே! அதையறிவிக்க வேண்டுமெனத் துதித்துக்கொண்டிருந்தான். அக்கால் நடராஜப்பெருமான் திருவுளமிரங்கி, ஓ சோழனே! நமது தீக்ஷிதர்கள் உமாபதியிடத்தில் அசுத்தமெண்ணித் தூரத்திவிட்டதை நீகவனிக்காமையால் இவ்விதயிடையூறு நேர்ந்தது. இப்போதே கொற்றவன் குடிக்குச் சென்று அவனையும் அவனுசிரியனுக்குக் கூழ்வார்த்த செங்குந்தரையும் அழைத்துவந்து ஏற்றுவித்தால் ஏறுமென்று அசரீரிவாக்கருளினர். அது கேட்ட திரியம்பகச் சோழன் ஆனந்த பரவசனாய்த் தில்லைவாழந்தணர்களுடன் சென்று உமாபதி சிவாசாரியரையும் செங்குந்தரையும் அழைத்து வந்து கொடியேற்றுவித்து, கொடிக்கவியென ஓர் பிரபந்தமும் அவராற்பாடப்பெற்றனன். அன்றுமுதலின்றுவரையில் அச்செங்குந்தர்களே கொடியேற்றி வருகின்றார்களென்பது சரிதமாகவின், அச்சரிதையைச் சுருக்கி இச்செய்யுளி லமைத்திருப்பதையுத்துணர்க. சிவபிரான் ஒப்பற்றவராயிருந்து பஞ்சகிர்த்தியங்களியற்றலால் உலகு விலங்குகின்றதென்பார்.

"ஒப்புயர்விலதொன்றதன்னருளிலேதா னுலகுள"

என்றும், இவ்வாற்றிதலே மெய்யுணர்வாதலின், "சிவஞானம்." என்றும் கூறினர். இதனை,

உலகமேயுருவமாகயோனிகளுறுப்பதாக
விலகுபேரிச்சாஞானக்கிரியையுட்கரணமாக

உலகிலாவுயிர்கட்கெல்லாமிருபயனுக்கிசைந்து
நலமிகுதொழில்களோடுநாட்டகடிப்பனுதன்.

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுந் தெளிக.

ஈதல்லாமல்,

இவ்வாறு உமாபதி சிவாசாரியர் தமதாசியரோடு செங்குந்தரால் வார்த்த கூழுண்டு அவர்களால் கொடியேற்றின்றுக் கொடிக்கவிபாடி யருளினரென்பதை,

நம்புகழோங்க நூலேழப்பாகுனுமிறைதன்கூபாத்
தும்பரமுதினெழுகுமதையுளுமாபதியா
லம்பலவன்றுசமேற்றமாதிக்கமொட்டார்கொடிப்பா
செம்பியனேத்திடப்பெற்றோர்செங்குந்தசிலாக்கியரே.

என்னும் செங்குந்த சிலாக்கியர்மாலைத் திருவிருத்தத்தானும்; மறைஞான சம்பந்த சிவாசாரியர் செங்குந்தர்குலம் சிவகுமாரானுஜர் குலமானதால் மற்றெல்லாவற்றினும் சிறந்தகுலமெனவும், அவர்கள் கரத்தாற் பரிசித்த கூழ் தேவாமுதத்தினுஞ் சிறந்த சிவப்பிரசாதமாகு மெனவுங் கூறினரென்பதை, இத்தீபிகையின் 7-வது பக்கத்தில் காட்டிய (உலகத்தினிற்) என்னும் விருத்தங்களானுந் தெளிக.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

கவிச்சக்ரவர்த்தியாகிய

ஸ்ரீமத் ஒட்டக்கூத்தரென்னுங் கவிசுரர் தோத்திரம்.

கொச்சகக்கலிப்பா.

1. செழுமறைகணான்முகத்தேடியினங்காணாத
முழுமணியாயிலங்குசிவமூலத்தின் விளையாட்டை
மொழிபதமேபோதவல்லதயன்முன்படைப்போகூத்தவெழுப்
பெழுவதெனுஞ் சிங்கலிதன்னெண்ணமெனக்கியம்புதியே.

2. ஒத்துடையகாமறையோருணர்கனகமாயிரத்தெதன்
மாற்றலைவிற்குலோத்துங்கவளவனெடுத்தசென்றங்
கேற்றுநீகேதனமென்னவிர்த்தநிலையதுவொட்டுங்
கூத்துடையர்சின்னதக்குறிப்பிபன்னக்குலமணியே.

3. ஆற்றுக்கேயம்புலிக்கேயகச்சலன்றிருவருளெவ்
பாற்றுக்கேவருகூத்தப்பாமணியைப்போன்ஹுக்கே
சோற்றுக்கேகூறைக்கேசொற்கவிகளெமாக்கச்
சிற்றக்கோளரியணையாச்சிரவணையிலிருந்தனையே.

4. குன்றக்கூதன்முதலாங்குறைகளையவெண்ணியொரு
வென்றிக்கேதனஞ்ஞானவிலக்கவிகட்டலையநூப்ப
வென்றுத்தாங்கவியாசிவ்விகமெல்லாக்கொண்டதினங்
கன்றுக்கேயருகாவின்கருணைமணையரசே.

5. தலையுக்குங்கவியொருவன்றாரணியிலுளனென்னி
னிலையிருக்கும்பாப்பதங்கணெறியுடையபடலங்கள்
[illegible]யிருக்கப்புன்கவிகட்கலைவர்ளோவின்னொருகா
லலையிருக்குமம்புவிகீயவதரிக்கவேண்டுவனே.

6. முச்சங்கத்தாடிருந்தமுதலியர்களாரேனு
முச்சங்கவில்லாமலோங்குதலைப்பலவரிந்த
வச்சிங்கவணையிருக்கவார்பெற்றாருயிர்தந்தார்
மெச்சங்கமாயினையேமெய்க்கூத்தனெனுமருந்தே.

7. ஈட்டியெழுபதென்னுமீர்ங்கவிநீசொல்லுங்கா
லாட்டமிர்தஞ்செவிவாயிலுண்டவருங்கண்டவரும்
வேட்டதலமீதென்னவேதனுக்குஞ்சொலவெளிதோ
தேட்டமிகுங்கூத்தனெனுஞ்செங்குந்தமரபணியே.

8. அற்றவுறுப்பிணைந்தனவுமாங்காயமாறினவு
முற்றதழும்பேகினவுமுயிர்மீண்டுவந்தனவும்
பற்றுமொருநாற்கரணிபரமாவுடதமாமுன்
சொற்றவதில்வாக்கன்றோசுடர்கூத்தமாமணியே.

9. பூவுலகிற்கவியரசபுரிந்தபெரும்புகழுடையோய்
ஆவணிமுற்பக்கமுத்திராடமுந்தன்பூசனையே
யேவர்களுஞ்செய்கின்றாரெண்ணிலருளடைகின்றார்
நாவலவராகின்றாரென்கின்றார்நல்லாரே.

10. தேனுந்துமலர்சோலைத்திருமணவூர்சிவசங்கக்
கோனந்தசிற்சபையெங்கந்தனருட்கூத்தனெனு
மானந்தச்செல்வனைநாசனத்திலலகுபெறி
றனிந்தசெனனமுனைநயந்திரந்தலென்கடனே.

மேற்படியார் சரித்திரவரலாறு.

1. இவ்வுலகின்கண் சத்த மகாதீர்த்தங்களு ளொன்றென காவேரி நதிக் குறையிடமாய் "பொன்னாட்டுக் கொப்பவிளங்குஞ் சோழவளநாட்டிலே, இந்திரபுரிக் கிணையாய்ப் பலவகைப் போக பாக்கியங்களும் புண்ணியச்செயல்களு மலியப்பெற்றுள்ள உறந்தை[illegible] நகரத்திலே, அங்கமுதலிய வறு மூவகைப் பாடைமன்னரு மரசிறைதர ஏகச் சக்ராதிபதியாய் சூரியவமிசத்தனு மனுகுலத்தவனுமாகிய இராஜேந்திர சோழன் தருமநூல் விதி முறைபடி தரணியாவுங்காத் தரசியற்றி வருநாளில்; மாகில் பல்வளங்களாற் றேசுபெற்றோங்கு மணவைப்பதியிற் குருலிங்கசங்கம பத்தித் திறத்துள் மிகச் சிறந்த குறுநில வேந்தராய்ச் சிவசங்க பூபதி என்னும் நாமம் வகித்து ஓர் செங்குந்தமன்ன ரிருந்தனர். இவர்க்குக் கற்பி லருந்ததிக் கொப்பான வண்டார் குழலியென்னும் பெயர்வாய்ந்த ஓர் மனைவி யிருந்தனள். இவ்விருவரும் வள்ளுவதேவரும் வாசுகியம்மனும் போல இல்லற தருமத்தை யினிதில் நடாத்தித் தம்மூர்க் குடிகட் கோருறு சேராதபடி காத்துவருநாளையில், நெடுநாளா யோர் புத்திரப்பேறின்றி மனம் வருந்தி யிருந்தனர். ஓர்கா லிவ்விருவரது நற்குண நற்செய்கை கட்குத் திருவுளமகிழ்ந்த சிவபிரான் ஓரந்தணர் திருக்கோலங் கொண் டெழுந்தருளிச் சிவசங்க பூபதியை நோக்கி, ஓயரசனே! நீவி ரிருவருஞ் சிதம்பரத் தலத்தையடைந்து கனகசபாநாதரைக் கண்டு களிப்பீராயின் உமது மனக்கவலை யொழியுமெனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். அதுகேட்ட சிவசங்கபூபதி அகமகிழ்ந்தவராய் உடனே தமது பத்தினியுடன் பலபரிசனங்கள் புடைசூழ்ந்துவரச் சிதம்பரத் தலத்தையடைந்து, அத்தலத்திற்றனே யோரிடத்தை வாசஸ்தானமாகக்கொண்டு வசித்திருந்து, தினந்தோறுந் தமது மனையாளோடு சென்று சிவகங்கையிலாடி நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு பொன்னம்பலவாணை

ரைக் கண்டு போற்றி ஆனந்தபரவசத்தராகி அவரது திருமுன்னர் நின்றுகொண்டிருப்பர். இவ்வண்ணம் பலநாள் நடந்துவருகையில் ஓர்நாள் கனகசபேசர் கருணைகூர்ந்தவராய் "இனியுனக்கம்பலக்கூத்தனருளுண்டாம்" என்றசரீரிவாக் கருளினர். அதையுணர்ந்த சிவசங்க பூபதியு மவர்மனைவியாருங் களிப்பெனுங் கடலுள் மூழ்கினவர்களாய் இன்று நமக்கு நல்வரங் கிடைத்ததென் றுள்மகிழ்ந்து, தங்கள் பரிசனங்களோடுமத் தில்லையம்பதியினின்று மீண்டு மணவூரை யடைந்து அம்பலவருடைய திருவுருவத்தையு மருட்டிறத்தையும் அனுதினமு மறவாதவர்களாய்த்தியானித்திருந்தார்கள்.

இவ்வாறு சின்னாள்கழிந்தபின் அம்பலத்தின்க ணிகழ்ந்த வாக்கின் மகிமையால் சிவசங்க பூபதியின் பத்தினி கருப்பமுற்றப் பத்துமாதமுஞ்செல்ல, உடனே நல்லோரையில் ஆரியோதயம்போன்று அருஞ்சைவம்பேற வாளுடைப்பிள்ளை யவதரித்ததுபோல அருந்தமிழோங்கி யபிவிருத்தியாமாறு ஓராண்மகவுதித்தது. அம்மகவுக்குத் தாதையார் சாதகன்ம முதலியன நடாத்தி, அசரீரியாய்ப் பொன்னம்பலத்தின்க ணிகழ்ந்தவாக்காகிய "அம்பலக்கூத்தன்" என்னு நாமத்தையே அம்மகவுக்கு நாமமாக வைத்து வழங்கி, நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்துத் தாராட்டிச் சீராட்டிப் பாராட்டிவந்து, ஐந்தாவய தானவுடனே ஓர் நல்லாசிரியனைக் கொண்டு வித்தியாரம்பஞ் செய்வித்தனர். அப்பிள்ளையாரு மம்பலக்கூத்த னருளாலவதரித்தவ ராதலின் சின்னாளிற்றானே பன்னூலும் பயின்று, தமது மரபிற்குரிய தனுர்வேதபண்டிதரால் வில்வித்தை மல்வித்தை - அஸ்திரப்பிரயோகம் - சஸ்திரப்பிரயோகம் - யானையேற்றம் - குதிரையேற்ற முதலியனவும் ஐயந்திரிபற நன்குணர்ந்து, தமது வலக்கரத்தில் குலச்செயல் விளக்கு மறிகுறியாக ஓர் வீரவாளேந்தித் தம்போன்ற மன்னர் மக்களுடன் கூடிச்சென்று கண்டவரெவரும் வியந்து களிக்க விளையாடுவாராயினர். அக்காலச் சிறார் கூட்டத்திற் "கூத்தன்" என்னு நாமமாத்திரந்தானே யழைத்து வழங்கியகாரணத்தால் அவரவ் விளமைப்பருவந்

கடந்து முதியரான காலத்தும் அம்பலமென்ப தம்பரஞ்சென்று மறைந்து, கூத்தனென்னும் பெயரே யாவரும் வழங்கிவந்தது.

இப்பாலிக் கூத்தரிகத்திற் புகழுடம் பெறுதலுண்டாமென வுண்ணுக்கிக் கல்வித்திறமுடைமையே அஃதுண்டாதற்குக் காரணமென நன்குதெளிந்து, இக்கல்வியே பரத்திற்குரிய சாதனங்கட்கும் இன்றியமையாத் துணைக்கருவியாமென வுய்த்துணர்ந்து, அக்கல்விக் கரசியாகிய சரஸ்வதி தேவியாருடைய திருவுருவை ஓர் படத்தின்கண் சிற்பசாஸ்திர விதிப்படி யெழுதுவித்து, ஓர் பூஜாமண்டபம் புதுக்கி அதிலதனை யமைத்தவராய் வேதாகம விதிப்படி பூசித்து அத்தேவியாருடைய திருமந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு ஆகார நித்திரை முதலியவைகளை நீத்து அநேக நாள் விரதங்காத்து வந்தனர். இவ்வாறு பலநாளாக வன்ன பானாதிகளை நீக்கி நித்திரையையு நீத்து விரதங்காத்திருந்த காரணத்தாலோ, அச்சரஸ்வதி தேவியாருடைய திருவுளச்செயல் முன்னிட்டோ, ஓர்நாளிரவில் மிகக் களைத்துச் சோர்ந்து சாய்ந்தனர். அக்காலங்கு நாமகளார் ஆடையாபரணங்கள் யாவும் வெண்ணிறங்குலவத்தரித்த ஓர் பார்ப்பினியாக வெழுந்தருளித் தமது திருமுலைப்பாலையோர் வட்டிலிற்கறந் தூண்பித்துச் சகல கலாநிலய மென்னுமோர் புத்தகத்தினை யவர் கையிற்றந்து அந்தர்த்தான மாயினர்.

2. உடனே கூத்தர் கண்டெளிந் தெழுந்து, திருமுலைப்பாலுண்பித்துப் புத்தகந்தந்து சென்றவர் திசைமுகன் றேவியாரே யென நிச்சயித்துக் கொண்டவராய் தாமுமுன் னடத்திய விரதத்தினை விதிப்படி பூர்த்திசெய்து, அருணோதயமானபின் நித்திய கிருதிகளை முடித்துக்கொண்டு அருந்தவர்க்கு மாதவர்க்கு மன்னதான முதலியன வழங்கி, அத்தேவியா ரெழுந்தருளிய பூஜாமண்டபத்திலேயே தக்க சிற்பர்களைக்கொண்டு வேறோர் சிலாவிக்கிரகஞ்செய் தெழுந்தருளப்பண்ணி, அம்மண்டபஞ் சூழ்வரப் பிராகாரங் கோபுரமுதலிய வங்கங்களோடும் ஆலயஞ்சமைத்து வேதாகம முறையால் நிதமு மும்மூன்று திருமஞ்சன வலங்கார நை

வேத்திய தூபதீப முதலான ஆராதனைகளை நிருத்த கீத வாத்திய கோஷத்துடனே நின்றேற்றிப் பூசித்து வந்தனர்.

3. அப்பாலிக் கூத்தரானவ ரவ்வம்மையாரது கிருபையாற் கிடைத்துள்ள சகலகலா நிலயமென்னும் புத்தகத்தினை இடது கரத்திலேந்தி, வேதோபநிடத சாத்திராகம புராணேதிகாச இலக்கிய இலக்கணங்களைத் தினந்தினே முற்று முணர்ந்து தேர்ச்சி யடைந்த திறத்தினாலும், இன்பத்தையும் வியப்பையுந் தருவதான விசித்திரக்கவி பாடுவதில் மிகவல்லமை பெற்றதினாலும் இயற்றமிழாகரர் சரசகவிப்புலவரென உலகெங்குஞ்சொல்ல விளங்கினர்,

4. அன்றியு மவ்வூரின்கண்ணு மயலூரின்கண்ணு முள்ள வித்துவசனர்கள் யாருந் தமக்கஞ்சி வழிபடத் தக்கதாகவும், ஒண்மை - திண்மை - ஒப்பனை - ஒழுக்கம் - வித்துவயூகம் - விசதத்துவம் - உல்லாசம் - ஆடம்பர முதலியவைகளைக் கண்ட பெரியோர்கள் யாருந் தம்மைச் சாரதாபீட சம்பன்னரென்றும், வரகவியென்றும், வீரகவியென்றும், தெய்வகவி யென்றுங்கூறி மெச்சுவதல்லாமல்; வித்துவசன கோலாகல னென்னுமோர் சிறப்புநாமத்தாலுங் கொண்டாடி யழைக்கும்படிக்குத் தருக்குற்றிருந்தனர்,

5. இப்படிச் சிலநாள் சென்றபின் கூத்தரானவர் தமது மரபிற் சகல இலக்கணங்களுங் குறைவற வமையப்பெற்று ஞானபூங்கோதை யென்னு நாமம் வகித்த ஓர் கன்னிகையை வேதவிதிப்படி மணம்புரிந்து, ஆனந்தக்கூத்தன் என்னு மருங்குமரனை யீன்று, இல்லற வொழுக்கத்தி லெள்ளளவுங் குறைவுறாராய், எல்லாக் கலைஞானங்களினு மொப்பாரு மிக்காரு மில்லாராய், ஈசுரபத்தி - பாசவைராக்கியம் - சீவகாருணியம் - பிரமக்கியான மென்னுஞ் சாதன நான்கையுங் கைவிடாராய், ஆன்மலாபத்திற்குரிய சற்கிருத்தியங்களையே தமக் காபரணமாக மேற்கொண்டொழுகுவாராய் விளங்கி; அப்பால் தமது தந்தை வயோதிக

நசைபடையத் தாமிளவரசாகி, அவர் காலவியோகமான பின் தாம் தமதூர்க் குடிகளைத் தனக்[illegible]ம்பி அரசியற்றிவருகின்றார்.

அக்காலச் சோழமண்டலத்தின் இராஜதானியாகிய உறையூரின்கண் செங்கோல் செலுத்தி யரசாண்டிருந்த இராஜேந்திர சோழன் இவரது பிரபாவங்க ளனைத்தையும் கேள்வியுற்று, தனது மரபினர்க்குப் பண்டை நாள்தொடங்கி அரசிற்குரிய பேருதவி புரிகின்ற செங்குந்த மரபின ரென்பதையு முணர்ந்துமிகக் களிப்படைந்து, இத்தகையரை நமது சமூக வித்துவான்களினு மந்திராலோசனைத் தலைவர்களினும் அக்கிர கண்ணியராக வைத்திருக்கின் மிக்க நலமெய்தலாமெனக் கருதி, அக்கருத்தையோர் திருமுகத் தெழுதிச் சில விராஜசின்னங்களோடு தனது பரிசன பரிவாராதிகளைக் கூட்டி அவருக்கனுப்பினன். அத்திருமுகமுதலியன வரக்கண்ட புலவர் பெருமான் தாமொருவருக்குந் தாழா நிலைமையராயிருப்பினுஞ் சூரியவமிசத்தரு மனுகுலத்தலைவருமாகிய சோழராஜருடைய பரம்பரை தமக்கன்னியமல்லாத காரணத்தை யோசித்துணர்ந்து அவனது கருத்தின்படியிருத்தற் கிசைந்தவராய், உடனே நமது குமாரனாகிய ஆனந்தக்கூத்தனிடத்தில் மணலூரரசுரிமை யனைத்தையு மொப்பிவித்து, அரசன் திருமுகத் தோடனுப்பியுள்ள சிவிகை கவிகை முதலிய இராஜ சின்னங்களோடு வலக்கரத்தில் வீரவாளும் இடக்கரத்திற் புத்தகமு மேந்திய கோலத்தராய்ப் பலவகை வாத்திய கோஷத்துடன் வெளிக்கொண்டு உறையூரை யடைந்து அவனது கொலுச்சபைவாயிலைக் குறுகினார்.

அவர் வரவையுணர்ந்த சோழராஜன் தனதமைச்சர் முதலாயினாரோடு மெதிர்கொண்டழைத்து, அவரது வனப்பையும் - இளமையையும் - கெம்பீரத்தையும் - இடம்பத்தையும் - இலக்கையும் - குசாலையும் - சம்பிரமத்தையும் - வித்துவ பூசத்தையுங்கண்டு சந்தோஷித்து, அவரது கரங்களிலேந்திப் பிரகாசிக்கின்ற வீரவாளையும் புத்தகத்தையு நோக்கி இதென்குறியோ வென்றையுற்று,

அவர் கொண்டுள்ள ஒவ்வொரு மேம்பாட்டினுக்கும் ஆச்சரிய சித்தமுடையவனாய்ப் பெருமைபெற்றவன்போல நின்றான். அவ்வரசன் நிற்கு நிலையின் குறிப்புணர்ந்த புலவர் பெருமான் அவனை நோக்கி,

வாளொருகையேடொருகைவைத்திருக்குங்காரணத்தைக்
கேளிருகைவீதலருக்கிள்ளிக்கோ—நாளுங்
கலோத்துங்கங்காணுக்கவிவாணர்தங்கள்
குலோத்துங்கமாகுங்குறி.

5. என்றிந்த வெண்பாவைக் கூறினர். இவ்வற்புதக்கவியைக்கேட்ட சோழமகாராஜன் அருகில் நிற்கு மமைச்சராதியரை நோக்கி, இவர் "கவிராஜகண்டீரவம் போலும்" எனக்கூறி மிக வியந்தவனாய் அவரைத் தனது கொலுமண்டபத்திற்குக் கைலாகு தந்தழைத்துப் போய்ச் சிங்காதனத்திலிருத்தித் தானுமிருந்து, ஐயா புலவரேறே! நீரின்றுமுதல் புவிச்சக்ரவர்த்தியாகிய நமது சமூகத்திற்கோர் "கவிச்சக்ரவர்த்தியாகவும் பிரதம மந்திரியாகவும்" இருமெனக்கூறி, மனுநூல் விதிப்படி பலசம்பிரமத்தோடு அப்பட்டங்கள் தரித்து அளவற்ற விருது வரிசைகள் தந்து சன்மானித்தனன்.

6. இப்பாலன்னவாகனன் றேவியாராகிய கலைமகளார் ஆணுருவெடுத்தற் கொப்ப விளங்கும் புலவர் பெருமான் அப்பட்டங்களையும் விருதுமுதலிய வரிசைகளையும் பெற்றவராய், அவ்வூரின்கண் தமக்கெனச் சமைத்தலங்கரித்துள்ள அரண்மனைக்குச் சதுரங்கசேனை முதலிய பரிவாரங்களோடும் பற்பல விருது வரிசைகளோடும் வித்வயூகமாகிய வைபவங்களோடும் அந்தணாளர் - கட்டியாளர் - மடைத்தொழிலர் - மிருத்துவக்கலைஞர் - நிமித்திகப் புலவர் - கருமாதிகாரர் - கடைகாப்பாளர் முதலிய பரிசனங்களோடும் தோற்கருவி - துளைக்கருவி - நரம்புக்கருவி - மிடற்றுக் கருவி - கஞ்சக்கருவியென்னும் பஞ்ச வாத்தியங்கள் முழங்கச் சென்று கொலுக்கூடமடைந்து, ஆங்கு மதுர சித்திர வித்தார மென்னும் நாற்கவிகளில் வல்ல நாவலர்களும் இயலிசை நாடக

மென்னு முத்தமிழ்களிற் றேர்ந்துள்ள பாவலர்களும் - எழுத்து சொல் பொருள் யாப்பணியென்னும் பஞ்சலக்ஷணங்களிற் பயின்றுள்ள பண்டிதர்களும் - சிந்தாமணி சிலப்பதிகாரம் வளையாபதி குண்டலகேசி மணிமேகலையென்னும் பஞ்சகாவியங்களைப்பழுதற வுணர்ந்த பண்ணவர்களும் - திருக்குறள் நாலடியார் கல்லாடம் சங்கக்கலி முதலியன கற்றறிந்துள்ள பல வித்வசனர்களும் - ஞானநூலுணர்ந்த நல்லோர்களும் - புராண பாராயணர்களும் - கலைக்கியானச்செல்வர்களும் - தத்துவ சித்தாந்திகளும் - தர்க்க சாஸ்திரிகளுமொருங்கு கூடி, ஐ உலகமாதாவாகிய சாரதா தேவியினுடைய சகலகலாரத்ன பொக்கிசமே! ஜெயம்: ஜெயம்: வாழி: வாழி: என்றேத்திப் புகழும்படிக்குத் தமது சிங்காதனத் தேறியிருந்து, அவ்வவர்களு நடந்துகொள்ள வேண்டிய பணிகட்குக் கட்டளை யிட்டபின் தமக்காக வேண்டுவனவற்றையு முடித்துக் கொண்டவராய் மறுநாள் தொடங்கித் தம்மை மிகவருமை பெருமையோடு மீளழைப்பித்த அரசன் கொலுச் சபைக்குச் சென்று அவைநடு சிங்காதனத்திருந்து, அரசுரிமைக்கான சகல விவகாரங்களையும் ஆண்டளப்பானைபோல் விளக்கி, இயற்றமிழ்த் திரள்களான பலவகைப் பிரபந்தங்கள் - சித்திரக்கவிகள் - இதிகாசங்கள் - புராணங்கள் - காவியங்கள் - கலைக்கியானங்கள் முதலிய யாவு நவரசாலங்காரங்களோடு மழைபொழிவதுபோற் கூறிப் பிரசங்கித்து வருவார்.

7. இப்படி கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் தமதாண்மையின்கண் பல வித்துவ பூகங்களோடும் பரிசன பரிவாரங்களோடு மிருந்துகொண்டு சிகஞ் சிவிகை முதலிய சின்னங்கள் விளங்க விருதுவாத்திய முதலிய விபவங்கள் கோஷிக்க இராஜேந்திர சோழமகாராஜனுடைய கொலுச்சபைக்கு வருவதும் போவதுமா யிருக்கையில், இப்புலவர் பெருமானது நல்வரவால் அதுகாறும் புத்திரப்பேறின்றி வருந்தியிருக்க அச்சோழராஜனுக்கு நல்ல சுப வேளையில் ஓராண்குழவி பிறந்தது. அப்போதரசன் பேரானந்த மடைந்து அக்குழவிக்குச் சாதகன்மாதிகளை வெகு சம்பிரமத்துடன் நடாத்தி நாமகரணஞ் செய்ய வாலோசித்தவனாய், அதில்

நமது புலவர் பெருமான் கூறிய வெண்பாவாகிய விலக்கியத்திற்கு இவனே யிலக்கணமாவனெனத் தனக்குள் மதித்து அவ்வெண்பாவி னீற்றடியிற்குறித்த "குலோத்துங்கன்" என்பதையே வக்குழவிக்கு நாமமாகத் தரித்து வளர்த்துவர, அம்மகவும் வளர்பிறைச் சந்திரன்போன்று நாளுக்குநாளபிவிர்த்தியாய் வளர்ந்துவர, ஐந்து வயதான வுடனே அரசனனவன் தனது கவிசிரேஷ்டருள் பிரதமராகிய கூத்தனரையே அப்புதல்வனுக்குப் போதகாசிரியராக்கி வித்தியாரம்பஞ் செய்வித்துச் சகல கலைகளையு மவராலேயே யோதுவித்தனன். அக்குலோத்துங்கனு மப்புலவர் பெருமான்பாற் சகலகலைகளு மோதிப்பயின்று, இராஜநீதி முதலியனவுங் கேட்டுத் தெளிந்து மேதையாயினன்.

இவ்வாறு நிகழுங்கால் இராஜேந்திரசோழன் தனக்குவயோதிக முதிர்ந்து நிரியாணதசை சம்பவிக்குங்காலம் வருவதையுணர்ந்து தனது புத்திரனுக்குத் திருமண முடித்திராமையைக் கருதி மனம் வருந்தி, இளவரசு பட்டாபிஷேகமேனுஞ் செய்துமுடிக்கலாமென அதிவிரைவின் முயன்று வெகு சிறப்பாகத் தனதமைச்சராதியரைக் கொண்டு மறுபுலத்தரசர் பெரியோர் பிரபுக்கள்முதலாயினோர் முன்னிலையில் நடாத்தத் தொடங்கினன். அத்தருணத்திற் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் இராச குமாரனுக்கு க்ஷேமமுண்டாகும்படி யாசிர்வதிப்பதற்காக ஓர் கவிபாடத் திருவுளங்கொண்டு,

ஆடுங்கடைமணிநாவசையாமலகிலமெங்கு
நீடுங்குடையைத்தரித்தபிரான் -

என்றுகூறி மற்றதையுங்கூறத் தொடங்குமுன் அதுகேட்ட விராஜகுமாரன் தனக்குக் கல்விபோதித்த ஆசிரியர் தன்னைப் புகழ்ந்து துதிக்கின்றாரென்றும் அஃதறிந்து நாம் வறிதிருத்தல் தகுதியல்லவென்றுங் கருதினவனாய்,

- இந்நிலத்திற்
பாடும்புலவர்பணிகொண்டகூத்தன்பதாம்புயத்தைச்
சூடுங்குலோத்துங்கசோழனென்றேயென்னைச்சொல்லுவரே.

என மற்றதையும் பாடி முடித்தான்.

௮. அது கேட்ட பெரியோர்கள் யாரும் அவ்விராஜ குமர னுடைய முதுக்குறைவுக்கு ஆச்சரிய சித்தத்தினராகி, அவனு டைய களங்கமற்ற கருத்தைக்குறித்து "அகளங்கன்" என்னும் பெயரிவனுக்கே தகுமெனக் கொண்டாடினார்கள்.

அத்தருணத்திலவ்விளவரசு பட்டாபிஷேக விபவத்தினைக் காணவந்துள்ள வித்வக் கூட்டத்துள் கலைமகளாரம்சபூதரான ஔவைப்பிராட்டியார் தம்மிடத் தருங்கலைகளோதிக்கொண்டிருக் கும் சில தவப்பெண்கள் பின்றொடர்ந்துவர அவண் வந்திருப்ப தைக்கண்ட சில பெரியோர்கள், அவரை வந்தனை வழிபாடுட னழைத்துப்போய் இராஜகுமாரனைத் தங்களுடைய திருவாக்கால் வாழ்த்துதல் செய்யவேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். அதற் கவ்வம்மையாரிசைந்து,

வரப்புயர.

எனக் கூறிப் பேசாதிருந்தனர். அதனைக்கேட்ட வப்பெரி யோர்களு மற்றையரும் அதன் கருத்தை யறியாதவர்களாகி இராஜேந்திர சோழன் முகத்தை நோக்க, அவன் தனது சமுகத் துப் பிரதம வித்துவானாகிய கூத்தர் முகத்தை நோக்கினான். அக்குறிப்புணர்ந்த புலவர் பெருமான் "வரப்புயர" எனவவர் கூறிய தென்னையெனின்,

வரப்புயர - நீருயரும்,
நீருயர - நெல்லுயரும்,
நெல்லுயரக் - குடியுயரும்,
குடியுயரக் - கோனுயரும்,
கோனுயரக் - கோனுயர்வான்,

என்பது பொருளாமென்றனர்.

௯. அதுகேட்ட யாரும் ஔவைப்பிராட்டியாரருளிய சுருங் கச்சொல்ல லென்னும் இலக்கண மமைந்த வாக்கியத்திறமும், அதற்குப் புலவர் பெருமானருளிய விளங்க வைத்த லென்னும்

[illegible] மமைந்த வுரைக்கும் வியந்து சந்தோஷித்தார்கள். உடனே சோழமகாராஜன் விலையுறப்பெற்ற ஓர் வெண்பட்டுச் சேலையை யெடுத்து அம்மையார் கரந்தி லஞ்சலித்துத்தர, அதை யவர் மறுக்காது வாங்கித் தமதருகில் நின்ற ஓர் தவப்பெண்ணுக் களித்து அரசனைப் பார்த்து,

நூற்றுப்பத்தாயிரம்பொன்பெறினுநூற்சிலை
நாற்றிங்களுக்குணைந்துவிடு—மாற்றலரைப்
பொன்றப்பொருதடக்கைப்போர்வேலகளங்கா
வென்றுங்கிழியாதென்பாட்டு.

எனவோர் கவிதைகூறிச் சென்றனர். இதுவன்றி யவ்விள வரசு பட்டாபிஷேக காலத்திற் பரிசு பெறுமபொருட்டு வேறு சில வித்துவான்கள் குலோத்துங்கச் சோழன் மீது பலவகைப் பிரபந்தங்கள் பாடிவர, அவற்றை யெல்லாம் வருவித்துப் பார்த்த புலவர்பெருமான் சில பலவழூஉக்களோடும் - சில சொன்னயமின்றியும் - சில பொருணயங் குன்றியும் - சில நடைமாறியும் - சில தொடைபிறழ்ந்தும் - இப்படிப் பலவகைக் குற்றங்களோடு மிருப்பக் கண்டு சினந்து, ஒருவாறிக் குற்றங்களின்றி யுள்ளனவற்றைக் கண்டு நயந்து அவ்வவர்கட்குத் தக்க பரிசுதவச்செய்து, உடனே யத்தகைய புன்கவிகளையெல்லாம் பூரண கவிகளாக்க வெண்ணின வராய்த் தம தூண்மனைக்கண் சென்று, "இனி யித்தமிழ்நாட் டெல்லைக்குள் யாவரேனும் இலக்கிய விலக்கணங்களிற் றேர்ச்சி யடையாது கவிராசர்களென வெளி வருவார்களாயின் அவர்களைச் சிறைச்சாலையி லடைத்து வருத்துவதல்லாமல் எமது வீரமாகா [illegible]த்தில் இவ்விருவராகக் குடுமியோடு குடுமி [illegible]டியிட்டுநுக கிச் சோடு கடா வெட்டுவதுபோல நமது வீரவாளால் வெட்டிப் பலியிடுவோம். இவ்வாக்கினைக் கருதி இலக்கிய இலக்கணங்க ளிற் றேர்ச்சி யடைந்து கவிராசர்களாக வெளிப்படுமா றெண்ணங் கொள்ளுவோர் யாவரேயாயினும் அவர்கள் யாருங் கவிச்சக்ரவர்த் தியாகிய நமதனுஞ்ஞைபெற்று அவ்வவர்கட்கு நம்மால் கிருமிக் கப்படுங் கவியிறையை வருடந்தோறுந் தந்து வெளிப்படுவார்க ளாக." என்றோர் பட்டயமெழுதி யாவர்க்கு மதிசிரத்தை யுண்

டாகும்படி கொலுமண்டப வாயின் முகப்பில் ஓர் வெற்றிக் கொடித்தம்பம் காட்டிவைத்தனர்.

10. அதுமுதல் கவிராசர்களாக விருப்பங் கொண்டோர் யாரு நல்லாசிரியனைக் கொண்டு வாசிக்கத் தொடங்கினர்.

இவ்வண்ணங் கூத்தராலவர் தமதரண்மனைக்கண் வெற்றிக் கொடித்தம்ப நாட்டியதை ஒற்றர்களாற் கேள்வியுற்ற இராஜேந்திரசோழன் மிக வியந்து மகிழ்ந்தவனாய், மற்றொரு நாள் தனது புதல்வனை அப்புலவர் பெருமானோடு மழைத்துக்கொண்டு மந்திராலோசனைச் சபைக்கண் சென்று இதனைக் கூறலாயினான். அப்பா குலோத்துங்கா! இப்போதுனக்குத் தனியாய் இளவரசு பட்டாபிஷேகத்தினை இன்றியமையாக் காரியமாய் மிகவவசரத்துடன் செய்துமுடித்ததுபோலச் சற்றுமுன்னர் விவாகஞ்செய்து தம்பதி கோலத்தோடு நமது சிங்காதனத்தேற்றி மகுடாபிஷேகஞ் செய்து முடித்துக் கண்களி கூர்ந்து நோக்கத் தவஞ்செய்யாமற் போயினேன். ஆயினு நமது சூரியகுலத்திற்குஞ் சந்திரகுலத்திற்குமே தொன்றுதொட்டுச் சம்பந்த நடந்து வருவதால் நீயந்த முறைமையைக் கைவிடாதே. இப்போதுள்ள கருணாகர பாண்டியன் மகளையே பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை யினிது நடாத்திப் புத்திரப் பேறெய்தி வாழ்வதுடன், நமதிப் புலவர் பெருமானையே பிரதி பிதாவாக மதித்து இவர் தாஞ்ஞையைக் கடவாமல் மனுநீதி தவறாதபடிச் செங்கோல் செலுத்திச் சகல வளமையும் பெற்றிடுக, என்றாசிர்வதித்துக் கூத்தரை நோக்கி, ஓ கவிச்சக்ரவர்த்தி! இனி நீர் தாமிப்புத்திரனுக்குப் பிரதி பிதாவாயிருந்து பாணிக்கிரகணஞ் செய்வித்துப் பாதுகாக்கவேண்டும். இஃதுமது தலைமேல் விழுந்த பாரம்; என [illegible] தனது புத்திரனை அவர்கையி லொப்பிவித்துப் பிறகப்புத்திரனை யுட்காரச் செய்து அவனது துடைமேல் தனது தலையை வைத்தவண்ணமாய்ப் பிராண வியோகமாயினன். அதுகண்டு கிலேசித்த குலோத்துங்க னதியரைக் கூத்தனார் அசித்தேற்றிப் பிராணவியோகமான வரசனுக்குச் செய்யவேண்டிய தகனசஞ்சயனாதி உரிமைக் கருமங்களனைத்தையும் அவன்

புத்திரனைக்கொண்டு முடிப்பித்தனர். இப்பாலப் புத்திரனாகிய ஸ்ரீலோத்துங்கன் தனது தந்தையின் அநுக்ஞையைக் கையேற்று மனுநீதி முறைப்படி அரசியற்றுவானாகிச் சிலநாள் சென்றபின் தனது போதகாசிரியராகிய கூத்தரைத் தனக்குப் பிரதிநிதியாய் அரசியற்றி வரும்படிக்கு வேண்டித் திக்கு விஜயஞ் செய்யச் சென்று, அதன் முன்னிலையில் தன்னைப் பகைத்தெதிர்த்த கலிங்கராஜன் முதலான அரசர்களைவென்று, தன்னைப் பணிந்தடைந்த அங்கராசனாதிய வரசர்களையாதரித்து மீண்டு, தமிழ்வளநாட்டில் தனக் கிருபுஜம் போன்று விளங்கும் பாண்டி மண்டலாதிபதியையும் சோழமண்டலாதிபதியையும் பண்பிற் சிறந்த நண்பராகக்கொண்டு, தொண்டை மண்டலாதிபதிகளாகிய செங்குந்த மன்னர்களால் பற்பல்தேயங்களினின்று அரசிறை முதலியவைகளையாதேதுமின்றி வாங்கி வரப்பெற்றுத் தனது தந்தை போலேகச்சக்ராதிபதியாய் அரசாண்டு வருகின்றான்.

இவ்வா றொருவருடம் கடந்தபின் இறந்துபோன ராஜேந்திர சோழனுக்குச் சிராத்த நாள்நேர, அக்காலில் நடக்கவேண்டுங் கருமங்களனைத்தையுங் கூத்தரானவர் குலோத்துங்க சோழனைக்கொண்டு வெகு சிறப்பாக முடிப்பித்து, இனி யிவ்விராச குமாரனுக்கு இவனது தந்தையி னபிப்பிராயப்படி திருக்கல்யாணஞ்செய்து முடிக்கவேண்டுமென்னுங் கருத்தைக் கொண்டவராய் ஓர் நன்னாளாய்ந்து, கரிபரியாதிய பரிவாரங்கள் தம்மைப் புடைசூழ்ந்துவரக் கொடி குடை முதலிய விராஜசின்னங்களோடெக்காளம் - பம்பை - தவண்டை - துந்துபி முதலிய வாத்தியங்களோடும் இரத்தினச் சிவிகையி லாரோகணித்து வெளிக்கொண்டு பாண்டிய தேயநோக்கி வருகின்றார். இவ்வாறவர் வருங்கா[illegible]ான ஆரவாரத்தினைக் கேட்ட குலசேகர பாண்டியன் இஃதோர் பகையரசன் நம்மேற் படையெடுத்து வருகின்றான்போலும் எனச் சந்தேகித்துப் பின்னர் சில வேவுகாரரால் சோழராச்சியத்திற்கோர் சுடர்மணித் தீபம்போன்று விளங்குங் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தரது வரவென் றுணர்ந்து சந்தோஷித்தவனாய், உடனே தனது மந்திரிகளாலும் பொற்களத்தை வேளாண்குலத்திலிருக்கும் தனது சமூக வித்துவானாகிய புகழேந்தி யென்பவ

ராஜனும் அவரை யெதிர்கொண் டழைப்பித்துத் தக்க வரன்புமனை
யொன்றை விடுவித்து, அவருக்கு மவரோடும்வந்த பரிசன பரி
வாராதிகட் கெல்லாஞ் சுகபோசன மாதிய பல வுபசாரங்களை
முறைப்படி நடப்பிக்க உத்திரவு செய்தான். அப்படியே யவா
கள் நடத்திவரப் பெற்றிருந்த புலவர்பிரான் ஓர்நாள் கருணாகர
பாண்டியனைக் காணவேண்டிக் கொலுச்சபைக்கண் வர, அமைந்
திருந்த ராசனவரை யெதிர்கொண் டழைத்துவந்து தனது சிங்
காதனத் திருக்கச் செய்து தானுமிருந் துபசரித்து, ஐயா கவிச்சக்ர
வர்த்தி! நீரமது தேயத் தெழுச்சிசெய்தகாரியஞ் சுயேச்சையோ
பிரேரணையோ வென வினவினன். அதற்குக் கூத்தரப் பாண்டிய
ராஜனைப்பரிந்து நோக்கி, ஒமறத்தாறு கடந்தசெங்கோல் வழுதி!
நமதிராஜாதி ராஜனுகிய குலோத்துங்க சோழ மஹா ராஜாவின்
பிதாவானவர் தம்முடைய தேகாவசான காலத்தில் என்னுடனே
சுபச்செய்தி யொன்று சொல்லியிருந்தார். அச்செய்தியைத் தங்
களுக் கறிவிக்கவும் தங்களைத் தரிசிக்கவும் வந்தோமென்றுகூறிப்
பின்பச் சுபச்செய்தியை வெளியிட்டனர்.

அதுகேட்ட கருணாகரபாண்டியன் குறுநகை செய்து, ஐயா
சாரதாபீட சம்பன்னரே! சோழராஜன் பாண்டியராச புத்திரி
யைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளப் பாத்திரனாயின், எங்க
ளினு மவர்களுக்குள்ள பேற்றமென் சொல்லீரென்று வினோ
தார்த்தமாய்க் கேட்டான். அப்போது கூத்த ரதிசயித்தவராய்
அப்பாண்டிய ராஜனை நோக்கி, (அச்சோழராசர்களேறு மல்ல
கதி - மயூரகதி - வியாக்ரகதி - வானரகதி - விடபகதி என்னு
மைங்கதிகளையுடைய சோரமெனப் பெயர்பெற்ற பஞ்சகல்யாணி
யாகிய பட்டவர்த்தனப் புரவிக்குப் பாண்டியரேறுங் கனவட்ட
மொன்றும் அவ்வளவு சமானமாகுமா? மாரிகாலத்திலன்றிக்கோடை
காலத்திலுங் கடல்போ லெங்கும் பரவிப் பெருகிப் பாய்ந்து
பொன் கொழித்து அலையெறிகின்ற வகண்ட காவேரி யாற்றுக்கு
வைகையாற்றையோ நிகராகச் சொல்வது? சிவபிரானது திருவ
டித்துணைக் குவப்பாகச் சோழராசர்களணியும் ஆத்திமாலைக்கு வேப்
பமாலை யீடாகுமோ? உலகத்தைச் சூழ்ந்து கவிந்து சகலாத்மாக்

களுடைய கட்புலனையு மறைக்கின்ற அந்தகாரத்தைப்போக்குஞ் சூரியனுக்கு அச்சூரியன்மு னொளிமழுங்கிப் போகின்ற சந்திரனுப்பாவனே? அதுபோல மகா பிரசித்தமான சூரியகுலத்திற்குச் சந்திரகுலமோ சரியானது? நிகரற்ற வீரமுடையவர்களுக்குள் அதிவீரனானவன் சோழராசனோ பாண்டியராசனோ? வெற்றி பெற்ற சோழராசனுடைய புலிக்கொடிக்குப் பாண்டியராசனுடைய மீனக்கொடியோ விணையானது? பொன்மாரிபெய்த மகிமை தங்கிய உறந்தைப்பதிக்குக் கொற்கைப்பதியோ உவமையாகும்? பெரியோராற் பாடப்பெற்ற சிதம்பரமுதலிய பற்பல சிவஸ்தலங்களையும் அரங்கமுதலிய வனேக விஷ்ணு ஸ்தலங்களையுந் தனகத்திற்கொண்டு எக்காலத்தும் [illegible]மென்ப தணுக விடங்கொடாமல் சீவாதாரமாகிய நெல்முதலிய விளைவுகுன்றாத வளப்பமிகுந்த சோழநாட்டுக்குப் பாண்டியநாடு சரியாமோ?) என்னும் பொருளையுள்ளடைத்து அச்சோழராசருடைய பெருமைதோன்ற

கோரத்துக்கொப்போகனவட்டம்மானை
கூறுவதுங்காவிரிக்குவையையோவம்மானை
யாருக்குவேம்புநிகராகுமோவம்மானை
யாதித்தனுக்குநிகரம்புலியோவம்மானை
வீரர்க்குள்வீரனொருமீனவனோவம்மானை
வெற்றிப்புலிக்கொடிக்கு மீனமோவம்மானை
யூருக்குறந்தைநிகர்கொற்கையோவம்மானை
யொக்குமோசோணாட்டுக்குப்பாண்டிநாடம்மானை.

என்னொருபாடலைக்கூறினர். அதுகேட் டங்கிருந்த புகழேந்திப் புலவர் தம தரசனுக் குவப்புண்டாகும்ப[illegible] கூத்தரை நோக்கி, (அகஸ்திய மகாமுனிவர் திராவிட பாஷையைப் பிரவசனஞ் செய்தது பாண்டி நாட்டின் கணுள்ள பொதிய மலையிலிருந்தோ சோழநாட்டின்கணுள்ள நேரிமலையிலிருந்தோ? சோம சுந்தரக்கடவு ளொப்புச் சொல்லுதற்கரிய அறுபத்[illegible] விளையாடலைச் செய்தது மதுரையிலே[illegible] உறையூரிலேயோ? மகாலட்சுமி சமேதனாகிய நெடுமான் மனுகவதரித்தருளிப்

புலியாகவவதரிக்கவில்லையே, ஆதலால் மீனக்கொடிதானே சிறந்தது, புலிக்கொடிக் கென்னசிறப்பிருக்கின்றது? தேவர்கள்முனிவர்கள் சென்னிமேலேறும் பொன்னடியை யுடைய சிவபெருமானது சடாமகுடத்தின் மேலேறி யிருக்கப் பெற்றது சூரியனே? சந்திரன்றானே: அதனால் மேம்பட்டது சந்திரகுலமோ, சூரிய குலமோ? சமணரை வெல்லும் பொருட்டுத் திருஞான சம்பந்த மூர்த்தியவர்கள் பதிகமெழுதிவிட்ட ஏடானது எதிரேறிக் கரை சேர்ந்தது காவிரிலேயோ? வைகையிற்றானே: அதுபற்றி வைகை யல்லவோ மாட்சிமைப் பட்டது. பேயனுகாம லதற்கு பெரும் பகையாக்கோன்றி அதை விலக்குவது சோழராஜனது ஆத்தி மாலையோ பாண்டிய ராஜ னணியும் வேப்ப மாலையோ? மதுரையை யழிக்கப் பொங்கிவந்த சமுத்திரம் அஞ்சிவந்துபணிந்தது சோழராஜன் காலையோ? பாண்டியராஜன் காலைத்தானே: ஆதலால் பாண்டியராஜன் பராக்கிரமம் ஆரால் சொல்லமுடியும்?) என்னும் பொருளை யுள்ளமைத்து அப்பாண்டிய ராஜருடைய பெருமைதோன்ற,

> அருமுனிவனேரிலோவரைதவித்ததம்மானே
> பொப்பரியதிருவிலையாட்டுறத்தையிலோவம்மானே
> திருநெடுமாலவதாரஞ்சிறுபுரியோவம்மானே
> சிவன்முடியிலேறுவதுஞ்செக்கதிரோவம்மானே
> கரையெதிரல்காவிரியோவைகையோவம்மானே
> கடிப்பகைக்குத்தாதகியுங்கண்ணியோவம்மானே
> பரவைபணித்ததுஞ்சோழன்பதந்தனையோவம்மானே
> பாண்டியனர்பராக்கிரமம்பகர்வரிதேயம்மானே.

என்றொரு பாடலைக்கூறினர். இவ்வணந் தம்போற்சாமர்த்தியமாகப் புகழேந்திப் புலவர் பாடியதைக் குறித்துக் கூத்தரவரது கல்வித் திறத்திற்காகச் சந்தோஷித்தாராயினும், தாமுந் தாசிதனைத் தாரியத்திற்கு உடன்கலந்து பேசி முடிவு செய்யாமல் எதிர் கட்சியாகப் பேசி விக்கினந் தேட முயன்றதென்கிற கோபத்தைத் திமதுள்ளத்தடக்கி ஒன்றும் பேசாது மௌனமா

யிருந்தனர். அப்போது கருணாகரபாண்டியன் அவ்வித்வசிரோமணிகளுடைய வல்லபங்களை மெச்சினவனாய் தனது தந்தைவழி தாய்வழியிலுள்ள பந்து வர்க்கத்தினரை யழைப்பித்துப் புலவர்பிரான் சோழராஜனுக்குப் பெண் பேசவந்த செய்தியைத் தெரிவித்து, அது விஷயத்தி லவர்க ளபிப்பிராயத்தை வினாவினன். அக்காலச் சுற்றத்தினர் தங்களுக்குள் கலந்து பேசி ஆக்ஷேபமின்றிக் கொடுக்கலாமென்றார்கள். அதுகேட்டுணர்ந்த பாண்டியராசன் தனதருண்மைத் திருமகளைச் சோழராச குமாரனுக்குக் கொடுக்கச் சம்மதித்துச் சோதிடர்களைக்கூவிப் பொருந்த நிமித்த முதலியவைகளைப் பார்த்து நிச்சயதார்த்தஞ்செய்து, உத்தராயண புண்ணியகாலமாகிய தைமாதத்தில் விவாகத்திற்கு நாள் வைத்து முகூர்த்தபத்திரிகை யெழுதிக் கூத்தர் கரத்திற் கொடுத்து, ஓ வித்வசன கோலாகலரே! இந்தப் பத்திரிகையில் நிர்ணயித்த தினத்திற்கு முன்னரே இராசகுமார னிவ்விடத்திற்குவந்து சுகமாய்க்கல்யாணஞ் செய்துகொண்டு போகலாமெனக்கூறினன். உடனே கூத்தர் பாண்டியராசனிடத்தினின் றும் விடை பெற்றுத் தமது பரிசனரும் பரிவாரதியருஞ்சூழ அப்பாண்டி மண்டலத்தினின் றும் வெளிக்கொண்டு சோழமண்டலத் திராசதானியாகிய உறையூரையடைந்து, குலோத்துங்கச்சோழன் கரத்தில் முகூர்த்தப் பத்திரிகையைத் தந்து அப்பாண்டியராசன் சபையில் நடந்த செய்திகள் யாவுந் தெரிவித்தனர்.

அதுகேட்டவுடன் மச்சோழராசன் பாண்டியராஜன் சமஸ்தான வித்வானாகிய புகழேந்தியின் மீது சற்றேற சினந்தாயினும், கூத்தர் தந்தமுகூர்த்தப்பத்திரிகையைப் பார்வையிட்ட பின் மனங் களித்தவனாய்த்தைமாத வரவுக்கெதிர் நோக்கி, அது வந்தவுடன் தான் விவாகத்திற்குப்போய் மீண்டு வருமளவுந் தனக்குப் பிரதிநிதியாக இராஜாதிகாரஞ் செலுத்திவரும்படிக்கும் அம்முகூர்த்த தினங்களின் மாத்திரம் அங்ஙனம் வரும்படிக்கு மவரைவேண்டி, உடனே மற்ற மந்திரி பிரதானிகளுடனும் - சுற்றத்தார்களுடனும் - நால்வகைச்சேனைகளும் புடைசூழ வெளிக்கொண்டு பாண்டிநாட்டை நோக்கி வருகின்றான். அவன் வரவையுணர்ந்த பாண்டியராசன்

உடனே பாண்டிய ராசனானவன் பெருங்கோலா டமைத்துவைத் துபசரித்து அரண்மனைக் குமாரனைப்போல புதிதாக அலங்கரித் துள்ள ஒருமனையைக் கழுத்துக் கொண்டுபோய் பதிவிருக்கச் செய்து, நிர்மலமாகப் போகச் செடிக்கப்பட்டு வாழை கமுகு கன்றாட்டி முத்துமாலைகள் புஷ்பமாலைகள் தூக்கிச் சித்திரப் படங்களும் கண்ணாடிகளும் நிறைந்துள்ள அழகிய மணப்பந்தலில் உன்னதமான இரத்ன மேடையின்மேல் நவரத்தினக் கோலமிட்டுப் பூரண கலசங்கள் வைத்துப்பலவகைத் தீபங்களோடு முளைப்பா லிகை முதலியன வைத்து மற்றெல்லாக் காரியங்களும் வழு வின்றி நடத்தும்படி காரியப் பேர்களுக்குக் கட்டளையிட்டவ னும், நியமித்துள்ள சுபவேளையில் கல்யாணப் பிள்ளையையுங் கல்யாணப்பெண்ணையும் திவ்ய தீர்த்தங்களால் ஸ்நானம் பண்ணு வித்து ஆடையாபரணங்களையுங் கந்தசுகந்த புஷ்பாதிகளையுங் கொண் டலங்கரிப்பித்து இவ்விருவரும் மணக்கோலஞ் செய்வித் தழைத்துவந்து முத்துமய மாணிக்கப் பீடத்தின்மே லிருக்க வைத்து, மங்கலவாத்தியங்கள் முழங்க வேதப்பிராமணர்களால் ஓமம் வளர்ப்பித்து அவர்கள் மந்திர வாக்கியங்களைச் சொல்லி யாசீர்வதிக்கச் சாஸ்திரோக்தமாகத் தனது குமாரத்தியாகிய சார தாம்பாள் கரத்தை யெடுத்துக் குலோத்துங்கச் சோழனது கரத் தின்மேல் வைத்துத் தாரைவார்த்துத் தத்தம் பண்ணிக்கன்னிகா தானமாகக் கொடுத்தான். அந்தச் சோழராஜனு மக்னிசாக்ஷி யாயருந்ததி சாக்ஷியாக அப்பாண்டிய ராசன் குமாரத்தியைப் பாணிக்கிரகணம் பண்ணினான். அக்கால் மற்றக்கிரியைகளனைத் துஞ் சம்பூரணமாக நிறைவேறின. இவ்வாறிவைகள் முடிந்தபின் னர் தானம் தருமம் விருந்து ஆடல்பாடல்களாதிய பலவிதவாடம் பரங்களெல்லாம், அந்தத் தை மாதமுதல் ஆறுமாத பரியந்தஞ் சகல விபவத்துடனுஞ் சம்பிரமமாய் நடந்தன.

இங்கிவ்வாறு நடந்துகொண் டிருக்கையில் சோழதேசத் திலே குலோத்துங்க சோழ ராஜனுக்குப் பிரதிநிதி யாயிருந் தப ராண்டு வருகின்ற கூத்தர் அவனது கல்யாண விபவத்தைக் காண வேண்டி யெண்ணித் தினத்திற்கு முன்னமே பிரயாணங் கொள்ள [illegible] த்தேசங்கொண் டிருப்பதையறிந்த சிலவித்துவ

சனங்கள் அக்கல்யாண காலத்திற் பரிசு பெறும்பொருட்டு அவ்வரசன்மேல் தனித்தனியே பலவகைப் பிரபந்தங்கள் செய்துகொண்டு வந்து தங்க ளிஷ்டவனாகிய அக்கூத்தருக்குக் காட்டி யனுக்ஞைபெற்று, அவர் பிரயாணமாகுங்கால் அவரோடுங்கூடிச் செல்லும்படி யத்தனித்திருந்தார்கள். அதையவ் வூரின்கணொரு விறகுதலையன் பெண்சாதியறிந்து, இவர்க ளெல்லா மொருவேலையுஞ்செய்து கஷ்டப்படாமல் பலவகையான பாட்டுகளைப்பாடி எளிதிற் பணஞ் சம்பாதித்துச் சுகமாய்ச் சீவனம் செய்துவர நம்முடைய புருடன்மாத்திரம் காட்டுக்குப் போய்க் காலிற் கடுமுள் தைக்கத் திரிந்து கையுங் காய்ப்பேறக் கட்டைவெட்டி நாள்தோறு மாடுபோலுழைத்து விற்று அரை வயிற்றுக் கஞ்சிக்குமில்லாமல் அவதிப்பட வேண்டியதென்ன? இ[illegible]ரையி லிந்தவுபாயம் தெரியாமற்போயிற்றே! என்று தனக்குள்ளே சிந்தித்து,

“ காரிகைகற்றுக்கவிபாடுவதினும்
பேரிகைகொட்டிப்பிழைத்தனன்று.”

என்பதையவள் சிறிதுமுணராதவளாதலால் அது சுலுவென்று நினைத்துத் தன் புருடனையழைத்து, நீ விரைவிலோர் பாட்டுப் பாடிக்கொண்டு கூத்தனாருக்குக் காட்டி அவரோடுங் கூடவே மற்றைய வித்துவான்களைப்போல நீயுஞ் செல்லுவையேல் நமக்கு நல்லகாலமுண்டாகுமென்று கூறினள். அதுகேட்ட விறகுதலையன் சற்று நிதானித்து, எனக்குப் பாட்டுப் பாடத் தெரியாதாயினும் பெரிதல்ல இதோ கற்றுக்கொண்டு வருகிறேன் என்று கூறித் தெருவிலே புறப்பட்டு வருகிறபொழுது, சில சிறுபிள்ளைகள் மரப்பாவைகளை வைத்து விநோதமாக விளையாடுமிடத்தில் அவர்கள் “மண்ணுண்ணி மாப்பிள்ளையே” எனச் சொல்லக்கேட்டு அதை ஞாபகப்படுத்திக்கொண்டு அப்பாற் சென்றான். அவ்வாறு செல்லுகையில் ஓர் காக்கை கா வென்று கத்தக்கேட்டு “காவிறையே” என்றும், ஒரு சோலையிற் குயில் கூவக்கேட்டு “கூவிறையே” என்றும், ஒரு பிள்ளையார் கோவிலிற் பெரிச்சாளி போடக்கண்டு அதைக் கல்லெடுத்தடிக்கப்போய் “[illegible]ங்களப்பன் கோவிற்பெரிச்சாளி” என்றும் பாடம் பண்ணிக்கொண்டு திரும்பினான்.

அப்பொழுது தன் பிள்ளைகளிருவரை நிற்பாட்டி நீயெங்கே போய் வருகிறாயென, நான் பாட்டுக் கற்றுக்கொண்டு வரப் போனேனாதலால் நீயுங் கொஞ்சங் கற்பிக்கவேண்டுமென, அது கற்பிக்கிறதென்ன "கன்றுபின்கு மலைதென்று" எனப்பாடு கிறதுதானே யென, அதையும் பாட்டென்றே நினைத்து மூவர் விளையாட்டுப் பிள்ளைகளையுங் காக்கையையுங் குயிலையும் பெரிச் சாளியையும் பார்த்துக் கற்றுக்கொண்டவற்றோடு சேர்த்துக் கொண்டு இந்தமட்டுப் போதுமென்று வீட்டுக்குப்போய் அவற் றைத் தன் பெண்சாதியுடனே சொல்லினன். அவள் கொஞ்சம் புத்திசாலி யாகையால் இதில் சோழன் பெயரில்லையே: அஃதவ சிய மிருக்கவேண்டுமே: என்றவள் சொல்லிக்கொடுத்த "சோழங் கப்பெருமானே" என்பதையு மவ்வந்தப் பாட்டுக்கு அந்தி மாகக் கடைசியில் வைத்துக்கொண்டு அச்சமென்பதெவ்வளவு மின்றிக் கூத்தனுடைய வாண்மனைக்கண் வந்தவரைக்கண்டு கும்பிட்டான். அவரவனைப் பார்த்து நீயாரென்ன, சோழராசா வின்மேல் பாட்டுப் பாடி வந்தேனென்ன, அதையவ ரவனையே சொல்லச்சொல்லிக் கேட்டுத் தமக்கு இவன் விறகுதலையனெ னும் நம்மைக்குறித் தாரோ சொல்லக்கேட்டு வந்தடுத்தானென் னும் அடுத்தவனைக் கைவிடாது ஆசிரித சம்ரக்ஷணை செய்வதல் லவோ தெய்வகாருணியத்திற் கழகென்று மெண்ணினவரா யவனை யபிமானித்துத் தாம் பாண்டிய தேசநோக்கிப் பல வித்வபூகங்க ளோடுந் திருக்கல்யாணத்திற்குப் பிரயாணங்கொண்டு செல்லும் போது அவனையு மழைத்துக்கொண்டு சென்று, அத்திருக்கல் யாண காரியங்களைத்து முடிந்து சோழராச குமாரனும் பாண் டியராச கன்னிகையுமாகிய தம்பதிக ளிருவருஞ் சபாமண்டப மேவிச் சிங்காதனத்தின்கண் வீற்றிருந்து கவிச்சக்ரவர்த்தியாகிய தம்மை யருகிலிருத்தி வித்துவான்களாற் பாடிக்கொணர்ந்த பிர பந்தங்களை யெல்லாம் அவ்வவர் தனிதனி பாடக்கேட்டுத், தனது போதகாசிரியர் குறித்தவண்ணம் அவர்கட்கெல்லாம் வெகுமா னஞ்செய்து வருஞ்சமயத்தில் அவ்விறகு தலையனை யழைப்பித் தரசனைக் கும்பிடென்று குறிப்பித்து, இப்படித்தான் ... ர்கள் நீறுபூத்த நெருப்புப்போ லிருப்பார்க ளாதலால் அவ

ர்களுடைய பெருமையை யாரறியத் தக்கவர்களென்று கூறிச் சிவுக்கென் றெழுந்த ஆதனத்தி லவனை யிருமென்றுபசரித்திருந்த பிறகு நீர் பாடிவந்த பாடலைக் கூறுமென்றனர்.

அப்போதவ னெவ்வளவுங் கூச்சமில்லாமல் தைரியத்துடனே,

"மண்ணுண்ணி மாப்பிளையே காவிறையே கூவிறையே
உங்களப்பன் கோவிற்பெருச்சாளி
கன்னபின்னமென்றென்று
சோழங்கப்பெருமானே"

என்று தான் கற்றுவந்த பாட்டை அகலத்தாட்டியாய்க் கூறினான். அதைக்கேட்ட சபையிலுள்ள வித்வசனர்கள் யாரும் இதுநல்ல பாட்டென்று சொல்லிச் சிரித்தார்கள். அக்கால் கூத்தராதரவர்களை நோக்கிச் சினந்து, இது வெண்பா முதலிய பாக்களிலாவது பாவினங்களினாலாவது எதனோடு சம்பந்தப்பட்டது? இதன் பொருள் யாதென்றறிந்து சொல்லுவதல்லவோ வித்வ சாமர்த்தியம்: அதைவிட்டு நகைப்பதென்ன? இவரை யப்பாடலுக் குரை சொல்லச் சொன்னாற் பிரயாச மில்லாமல் வெகு சாதுரியமாக நொடிக்குள்ளே சொல்லுவார், ஆயினும் நூல் செய்தவனே உரை செய்கிறது சம்பிரதாயமல்ல, அதுபற்றி யிவரைச் சொல்லச் சொல்லுகிறது நியாயமன்று, ஆதலால் நம்மிலே யாராவ தொருவர் சொல்லுவதே யுக்தமென்று கூறினர். இவைகளைக் கேட்ட வித்வான்கள் யாரும் வியந்து, இவனெவனோ பித்தம் பிடித்தமத்தனாகவேண்டும், இத்தகையான் தன்வாயில் வந்தபடித் தாறுமாறாக எதையோ உளறினால் அதைப் பாடலென்றும் அதற்குப் பொருளிருப்பதாகவுஞ் சொல்லுகின்றாரே, இருக்கி னிவரே சொல்லட்டுங் கேட்போமென்று தமக்குள் யோசித்துக்கொண்டு ஒன்றும் பேசாமற் சும்மாயிருந்தார்கள்.

அக்காலத்துக் கூத்தர் பொருள் சொல்லத் தொடங்கினவராய்க் குலோத்துங்கசோழனை நோக்கி, இப்பாடலிடையிடையே சில [illegible] குறைந்திருப்பதினால் இணைக்குற ளாசிரியப்பா வாகும். இதன்பொருள் - மண் - பூமியை, உண்ணி - உண்டவனே,

இலக்குமியின், பிள்ளையே - புதல்வனே, கா - கற்பகத்தருவுக்கு, இறையே - தலைவனே, கு - பூமிக்கு, இறைவயே - அரசனே, உங்களப்பன் - உங்கள்தந்தை, கோ - இராசன், வில் - விற்போரில், பெரிசு - பெரிதாகிய, ஆளி - சிங்கம்போல்வாய், கன்று - கன்றவனே, பின்னு - தருமனே, மன்னு - நிலைபெற்றவனே, தென்னு - பாண்டியனையொத்தவனே, சோழங்கம் - சோழ தேயமாகிய அங்கத்தையுடைய, பெருமானே - பெருமையுடையவனே என்பதாம்- (இதுபதவுரை) மகாவிஷ்ணு பிருதிவிபதியென்றபடி நீயுலகாள்பவனாதலால் விஷ்ணுவினம்சம் பெற்றாயென்பார் - மண்ணுண்ணியென்றும், குறைவற்ற செல்வ முடையா யென்பார் - மிக்க செல்வமுடையோனை இலக்குமி புத்திர னென்னும் உலக வழக்குபற்றி மாப்பிள்ளையே யென்றும், போகத்தாற் சுரேந்திரனை யொப்பாயென்பார் - காவிறையே யென்றும், மக்களாய்ப் பிறந்தவர்களில் மிகச் சிறந்தோனாதலால் நரேந்திரனேயென்பார் குவிறையே யென்றும், நீயேயன்றி நின்றந்தை முதலியோரும் அரசாளப்பெற்றவர் தாமென்பார் - உங்களப்பன் கோவென்றும், விற்போரிற் சிங்கம்போலப் புறங்கொடாது பகைவரை வெல்வா யென்பார் - விற்பெரிசாளி யென்றும், பெருங்கொடை வள்ளலே யென்பார் - கன்றுவென்றும், பொறுமையி லக்கன்னனுக்குப் பின்னேனாகிய தருமனே யென்பார் - பின்னுவென்றும், நெடுங்காலமழிவின்றி வாழ்வா யென்பார் - மன்னுவென்றும், தமிழ்ப் புலமையிற் பாண்டிய ராசனைப் போல்வா யென்பார் - தென்னுவென்றும், மலை - நாடு - நகர் - நதி - மாலை - கரி - பரி - முரசு - கொடி - செங்கோல் - என்னுந் தசாங்கங்களி லொன்றாகிய நாட்டிற் பெரியோயென்பார் - சோழங்கப் பெருமானே யென்றுங் கூறினார். (இது பதசாரம்.) உங்களப்பன் - காழூவாயும், விற்பெரிசாளி - பயனிலையுமாம். இச் செய்யுளின்கண் மிண்டயே உவமை யுருவக முதலிய சில வலங்காரங்களு மமைக்கப்பட்டன. இத்தினவகளை யெல்லா மெடுத்துக்காட்டி வீரமுதலிய வெண்சுவைகளுந்தோன்றி விளங்க அரசன் முதலிய வனைவர்க்குங் கௌதுகத்தை விளைக்கும்படி அற்புதமாகப் பிரசங்கித்துச் சமர்த்தித்தார். இவைகளைக்கேட்ட வித்வான்கள் யாரு மிகவு மாச்சரி

யல் கொண்டவராகி, இந்தப் பாட்டுப் பாடினவன் மூடனும் பாடலோ அசைக்காக பெருத்தகுமாயிருந்தும், அவனையோர் வித்வானென்றும் அதையோர் பாடலென்றும் ஸ்தாபித்து அதற்கிலக்கணத்தோடு பொருந்தப் பதப்பொருள்சொல்லிப் பதசாரங்கூறி மேற்கோளுங்காட்டி மெய்ப்பித்தாரே: இவருடைய சாமர்த்தியமே சாமர்த்தியம், இவரை [illegible]கோர் சாரதாபீட சம்பன்னரென்றழைத்தல் சரதமே: என்று மிக வியந்தார்கள். இராஜகுமாரனும் வழியே போகிற ஓர் விறகு தலையனுக்காகப் பாத்தியப்பட்டு அவன் குளறி வழிந்ததையும் பாடலாகக் கொண்டு அதற்கிவ்வளவாக நுட்பித்துப் பொருள் சொல்லிச் சமர்த்தித்த இக்கூத்தனுரைப் பற்றியேனும் அவனைப் பெருமைப்படுத்தவேண்டுமெனக் கருதி, அவனது முதற்கொண்டு குறைவற்ற செல்வத்தினனாய் வாழும்படிக்குச் சகல வெகுமதிகளையுஞ் செய்தனுப்பினான்.

11. அதுகண்ட கூத்தர் சந்தோஷித்து, உடனேயவ்விராஜகுமாரனிடத்தினின்றும் அவன் மாதுலனிடத்தினின்றும் விடைபெற்றவராய்க் [illegible] சேனை பரிவாரங்களோடும் வெளிக்கொண்டு சோழதேயஞ்சென்று இராச்சியதிகாரஞ் செலுத்தி[illegible]னர்.

இப்பால் கருணாகர பாண்டிய ராஜனானவன் திருக்கல்யாணச் சம்பிரமங்கள் முடிந்த ஆறுமாதத் தொடக்கத்தில் தனது பெண்ணுக்கு உசிதமான வஸ்திர பூஷணங்களையும், இரத்தினமிழைத்த பொற்பெட்டி - பொற்றட்டு - பொற்கட்டில் - பொற்றொட்டில் - பொற்குடை முதலானவைகளையும், இரதகஜ துரகபதாதிகளையும், பல சீமை பூமிகளையும், மற்றுமனேகமான பொருள்களுடனே தோழிமார் தாதிமார்களையும் சீதனமாகக் கொடுத்து: இவற்றுடனே புகழேந்திப் புலவரையுஞ் சீதனமாகக் கொடுத்தான். இவையனைத்தும் வரப்பார்த்துக்கொள்ளும்படி குலோத்துங்க சோழராசன் விபரமாய் ஓர் திருமுகத்திற்கண் டெழுதிக் கூத்தரிடமனுப்பினான். அத்திருமுகம் வரக்கண்ட கூத்தர் அதிற்

கண்டுள்ள யாவு மவ்வவற்றின் சாதனத்துடன் வந்து சேரப்பார்த்து ஒப்புவித்துக்கொ[illegible] அவ்வவற்றை வைக்க[illegible]டுந் தானங்களில் வைப்பித்து, பின்னை[illegible]ச் ச[illegible] வித்வானுஞ் சிதனப்பொருளாக வந்திருக்கி[illegible] னென்றறிந்து அவரை வரவழைத்துப் பார்த்தனர். அ[illegible] பார்த்தபோது முன்னர் தாம் பெண் பேசப்போன காலத்[illegible] தமது கட்சிக்கு எதிர் கட்சியாகப்பேசின புகழேந்திப் புலவ[illegible]யிருக்கக்கண்டு, இவன் கல்வித்திறமையால் நம்மையு நாமுத்தேசித்துவந்த காரியத்தையு மதியாது எதிர் பேசினனல்லவா? முன்னொருபோது பாண்டியராசன் நமது சோழராசனிடம் வந்திருந்த வேளையில் ஐராவதத்தினுடைய காற்சங்கிலி யவிழ்ந்ததென் றெழுந்ததென ஆதோரணர் வந்து கூறலும் அதுகேட்ட நாம் வியந்து,

இன்னுங்கழிந்ததில்வேந்தருண்டென்றே
தென்னன்றமிழ்நாட்டைச்சீறியோ—சென்னி
யகளங்காவுன்றனயிராவதத்தி
னிகளங்கால்விட்டதிவை,

[illegible]ர் வெண்பா கூற, அதற்கெதிராக விப்புலவன் நம்மைச் சற்று மதியாது,

தென்னவன்றென்னர்பெருமான்றிறன்மதுரை
மன்னவன்கோக்கவிழ்ந்தின்வல்லிக்கும்—பொன்னிநா
டாளிக்கும்வேந்தாமபயன்குலமகளிர்
தாலிக்குமொன்றேதளை.

என்றோர் வெண்பா பாடித் தனதரசனைக் களிப்பித்த காலத்திலும், மற்றொருபோதோர் சம்பாஷணை முன்னிலையில் மூதலைகாளு மன்னவருள் முதுகுக்குக் கவசமிடாதவன் சோழராசனே [illegible]ன்னுங் கருத்தையமைத்து,

வென்றிவளவன் விறல்வேந்தர் தம்பிரா
னென்றுமுதுகுக்கிடான்கவசம் -

என்றோர் வெண்பா வெடுத்துக் கூறி மற்றதையும் பாடி முடிக்குமு[illegible]னித் தனதாசனைப் ப[illegible]யாது வருமோவெனக் கருதி விரைந்து,

- ஞான்றும்

வெலியார்தொடைகம[illegible]வர்தோன்கையே
வெறியான்புறங்கொடு[illegible]னென்று,

எனத் தான் பாடிமுடித்து மகிழ்ச்சியுற்றபோதும், இன்னு மிப்படி நிகழ்ந்த பலவேளையும் இவனைநாம் நமது சோழராஜ னுக்கும் பாண்டியராஜனுக்குமுள்ள நண்பினையும் இவனது கல்வி யின் பண்பினையு மோகனிச் சற்றிறக்காது வறவிட்டிருந்ததினா லன்றோ அக்காலத்தினு மிவ னெவ்வாறு நமக்கெதிர் கட்சியாகப் பேசும்படிக்காயிற்று? என்று கோபித்து இவன் கொட்டத்தை யடக்கி யாளவேண்டுமெனக் கருதினவராய், உடனே யவரைத் தனியான ஓர் சிறைச்சாலையில் வைப்பித்துத் தமக்குள் வித்துவ சிரேஷ்டரென்னு மதிப்பினால் அன்னபானாதிகளிற் குறைவின்றிப் போஷிப்பித்து வந்தார். இவ்வாறாகப் போஷிப்பித்து வந்தும் புகழேந்திப்புலவர் அச்சிறைக்கணிருக்கச்சகியாராய் வருந்[illegible] னரிது நமது கன்மானுசாரமென் றெண்ணிச் சோழ[illegible] வர வுக்கெதிர் பார்த்திருந்தனர்.

இப்படியிருக்கையில் குலோத்துங்க சோழன் ஆடிமாதத் தொடக்கத்தில் சகலபரிசன பரிவாரங்களோடும் பாண்டிநாட்டி னின்றும் வெளிக்கொண்டு சோழநாடடைந்து தனதிராசதானி யாகிய உறையூரின்கண் வந்து சேர்ந்து, தான் விவாக நிமித்தஞ் சென்றிருந்து மீண்டவரையில் நடந்த காரியங்களனைத்தையுங் கூத்தரால் கூறக்கேட்டுச் சந்தோஷித்து, ஆவணி மாதத்தில் தனது மனைவியை யழைப்பித்துக்கொண்டு இந்திரனுஞ் சசியும் போலச் சகல போகபாக்கியங்களையுங் குறைவின்றி யனுபவி த்துக்கொண்டு சுகமா யரசு செய்திருந்தான். அப்பா லடுத்த தைப் பொங்கலுக்கு மறுநாட் சாயங்காலங் குலோத்துங்க சோழன் மிக வாடம்பரத்துடனே வழக்கப்படி வீதியில் யானைமேற் பவனி

வருகிறான். அப்போது இறைச்சாலைத் தளத்தின் மேலிருந்து அவ்வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த புகழேந்திப் புலவரை சோழராஜன்கண்டு தனதருகி லிருக்குங் கூத்தருக்குங் காட்டி, இவர் தானே தங்களைத் தடுத்துப்பேசிய புகழேந்திப் புலவரென வினவினான். அதுகேட்ட கூத்தர் ஆமென்று மறுமொழி கூற, கவிச்சக்ரவர்த்தியாகிய தங்களையே தடுத்துப் பேசிய இவரது சாமர்த்திய மெவ்வளவென்று அரசன் மீண்டும் வினவ, அதற்குக் கூத்தரவனை நோக்கி, (வேங்கைப் புலிக்குமுன் மான் நிற்குமா? எரிகின்ற கடுநெருப்புக்கு முன் காய்ந்துலர்ந்த வெட்டுக்காடு நிற்குமா? கடற்சுறவுக்கு முன் மற்றச்சிறுமீன்கள் நிற்குமா? சூரியோதயத்திற்கு முன் பனிநிற்குமா? அதுபோற் கல்வி லெனக்கு முன் இவன் நிற்கமாட்டுவானா?) என்னுங் கருத்துத் தோன்ற,

மானிற்குமோவந்தவாளரிவேங்கைமுன்வற்றிச்செத்த
கானிற்குமோவவ்வெரியுந்தழன்முன்கனைகடலின்
மீனிற்குமோவந்தவெங்கட்சுறவமுன்விசும்பனி
தானிற்குமோவக்கதிரோனுதயத்திற்றார்மன்னனே,

என்றொரு பாடலைச் சொன்னார். அதுகேட்ட புகழேந்தி இராசனைப் பார்த்துச் சிரித்து வந்தனஞ்செய்து இக்கப்பாடலை வெட்டிப்பாடவோ ஒட்டிப்பாடவோ வெனக்கேட்க, அரசன் வெட்டிப் பாடவேண்டாம் ஒட்டியே பாடுமென்ன, (அந்த மான் முதலானவை அவரே புலி முதலானவை நானே) எனப் பொருள் படும்படி,

மானவனானந்தவாளரிவேங்கையும்வற்றிச்செத்த
கானவனானவ்வெரியுந்தழலுங்கனைகடலின்
மீனவனானந்தவெங்கட்சுறவமும்விசும்பனி
தானவனானக்கதிரோனுதயமுந்தார்மன்னனே,

என்றப்பாடலையே வொட்டிப்பாடினர். அது கேட்டவுடன் கூத்தருக்கு முன்னினுமதிக கோபமுண்டாகி, இவன் கருவத்தை யின்று மடக்கவேண்டுமெனக் கருதி, உடனே யச்சிறைச்சாலை யதிகாரியை யழைத்து, இன்று முதலவனுக்கு நிதம் முழக்கரி

யும் அதற்கேற்ற வுப்புங் கொடுப்ப தல்லாமல் முன் போன்று அறுசுவைப் போசன மளிக்கவேண்டாமென் றுஞ்ஞாபித்தனர். அதுகேட்டிருந்த சோழராசனென்றும் பேசாமல், அப்புலவன் நமது கூத்தனுர் சொன்னவண்ணம் இறுமாப்புடையனே யென நிச்சயித்து அப்பாற் போயினன். பின்னர் புகழேந்திப் புலவர் மனம்வருந்தி, சோழராஜனுக்குக் கூத்தன் வித்தியாகுருவாகவும் பிரதி பிதாவாகவு மிருப்பது பற்றி அவனை மிகவும் பெருமைப் படுத்தித் தனது சிங்காதனத்திற்கு மேலான உயர்ந்த வாதனத்தில் வைத்து அவனுடைய பாதத்தைத் தனது தலைமேல் தாங்கிக்கொண் டிருப்பதினுல் நம்மைச் சிறைமீட்க வேண்டுமென்பதை நினையாமற் போயினன். இதுகாறு நமது பாண்டியராச புத்திரிக்கு நாமிருக்கு நிலைமை தெரியாதுபோலும். இனியவளறியும்வண்ணம் ஒருபாயஞ் செய்வோமெனக் கருதினவராய் அச்சிறைச்சாலையின் பக்கல் தண்ணீர்க்குப் போகின்ற பெண்மணிகளைச் சாளரத்தின் வழியாகப் பார்த்து, அவர்கள் செவிக் கினிமையாகவுஞ் சுலபத்திற் பொருள் தெரியவும் பாரத சரித்திரத்தைச் சுருக்கி, இக்காலத்திற் சில வெளிய சனங்கள் உடுக்கு தட்டிப் பாடிக்கொண்டு அதனாற் சீவனஞ் செய்துவரும் அல்லியரசிமாலை - பவளக்கொடிமாலை - புரந்திரன் களவு மாலை - என வழங்கு மவைகளைச் செம்பாகமான நடையிற் பாடல்களாகப் பாடி வருவதாயினர். அவைகளை யவர்கள்கேட்டுச் சந்தோஷித்துத் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து அறுசுவை பதார்த்தங்களோடுங் கூடிய போசனுதிகளைத் தினந்தோறு மொவ்வொருவராக முறையிற் கொண்டுவந்து கொடுப்பதானுர்கள். அவைகளிற் புகழேந்திப் புலவர் தாமுண்டதுபோக மிகுதியானவைகளைச் சிறைச்சாலைக் காவற் சேவகருக்குக் கொடுப்பர். அதனுலச் சேவகர்கள் புகழேந்திப்புலவர்மேற் பக்ஷம் வைத்து மிக மரியாதையாய் நடந்துவருவார்கள்.

இப்படி நடந்து வரும்போது ஓர்நா ளிராசபத்தினியானவள் தனக்குச் சீதனமாக வந்த புகழேந்திப்புலவர் கூத்தராஞ்ஞையாற் சிறைச்சாலையி லடைபட் டிருக்கின்றுரெனவும், அரசனு மதுகுறித்து விசாரித்து விடுதலை செய்யாது பராமுகமா யிருக்

கின்றனெனவும், அப்புகழேந்தியே யிவ்விதப் பாடல்களைப் பாடிக் காலங் கழிக்கின்றனரெனவுந் தனது தூதியரால் கேள்வியுற்று மனம்வருந்தி; அத்தினமிரவிலேராசன் சயனக்கிருகத்திற்கு வருங் குறிப்பறிந்து கலகம் பிறந்தால் நியாயம் பிறக்குமென்று அக் கிருகத்தின் கதவைச் சாத்தித் தாளிட்டு அரசனை யுள்ளே பிரவேசிக்கவொட்டாமற் றடைசெய்தாள். அஃதுணர்ந்த சோழேந்திரன் அதிசயித்து, நமது பத்தினிக் கூடல் நேர்ந்த காரணத்தை யறியவேண்டு மென்னுங் கருத்துடையனகி, அரசர்களுக்குள் தொன்று தொட்டு இராசபத்தினிகட்கு ஊடல் நேர்ந்தபோது அவ்வவர்கள் சமூக வித்துவான்களைக் கொண்டு தணிப்பிக்குஞ் சம்பிரதாயப்படி தனது சமூகத்தில் தலைமைப் புலமை நடாத்துபவராகிய கூத்தரை யழைப்பித்துத் தனது பத்தினியி னூடலைத் தணித்துக் கதவைத் திறப்பிக்கும்படி வேண்டி யனுப்பினன். அப்புலவர்பிரா னதற் கிசைந்துசென்று, (தாமரை மலரில் வசிக்கின்ற தேன்போ லினிக்கு நயவசனத்தை யுடைய இலக்குமி போல்வாய்! நீ கதவைத் திறந்துவிடு. திறவா திருந்தாலோ? கோடையிடி யிடித்ததுபோலப் பகைவர் நெஞ்சம் அனுக்குறும்படி புறங்கொடாமற் போர்செய்து வெல்கின்ற சுத்த வீரனும் உனது பிராணநாதனுமாகிய சோழராச னென்னுஞ் சூரியகுலத்தவன் உன்வாசல்தேடி வந்தால் அப்பொழுது சூரியனைக்காணுமல் முகுளித்த தாமரை அச்சூரிய னுதயமாகக் கண்டமாத்திரத்தில் தன்னியல்பாய் விகசிக்கிறதுபோல, உனக்கொருவரு மிதஞ் சொல்லாமலே தனக்குத்தானே விரல்களாகிய விதழ்களையுடைய உன் கையாகிய தாமரையானது திறந்துவிடப் போகின்றது. அதைக்குறித்து யானினி உன்னைப் பிரார்த்திக்கவேண்டிய நிமித்தமென்ன?) என்னுங் கருத்தை யுள்ளமைத்து,

நானேயினியுன்னைவேண்டுவதில்லைநளினமலர்த்
தேனேகபாடந்திறந்திடுவாய்திறவாவிடினே
வானேறனையவிரவிகுலாதிபன்வாசல்வந்தாற்
றானேதிறக்குநின்கைத்தலமாகுந்தாமரையே.

என்றொரு பாடலைச் சொல்லினர். அஃது கணப்பறவையின் செவியிற் பறையறைந்தது போலக் கர்ண கடூர மிருப்பதல்லா

மல் வேற்றுக்குரலாயி ருப்பக்கண்ட இராஜமகிஷி யதிககோ
பங்கொண்டு, ஊதுகிற சங்கையூதினால் விடிகிறபொழுது விடிகிற
தென்பதாக வெண்ணிக் "கூத்தர்பாட்டுக்கிது மாற்றுத் தாழ்ப்
பாள்" எனக்கூறி மற்றொரு தாழ்ப்பாள் போட்டாள்.

12. அதைக்கேட்ட கூத்தர் இராணிக்குப் புகழேந்திநி
மித்தம் நம்மிடத்தில் வெறுப்புண்டாகி இப்படிச் செய்தா
ளென் றுணர்ந்து, அன்பற்ற மாமியாருக்குக் கும்பிட்டாலுங்குற்
றந்தா னென்பதுபோல இனி நாமென்ன சொன்னாலும் இதம
றிக்க மாட்டாளென் றவ்விடத்தைவிட்டு, சுவரினிடத்தில் விரை
யாய்வந்து தாக்கின பந்தானது அங்கிருந் ததைத்துத் திருப்பி
னதுபோலப் பேசாமற் றிரும்பிச் சோழராஜனிடத்திற்கு வந்து,
எழுதுகிற வெழுத்தாணி குதறுகிறதுகண்டு கூர்மழுங்கத் தீட்டு
மளவில் அஃதிரட்டைக் கூர் பட்டாற்போல நான் பாடின பாட்
டைக்கேட்டுக் கூத்தர்பாட்டுக் கிது மாற்றுதாழ்ப்பா ளென்பதா
கப் பின்னுமொரு தாழ்ப்பாள் போடச் சம்பவித்ததென்றுசொல்
லினர். அம்மாத்திரத்தில் குலோத்துங்க சோழன் கிலேச சித்த
னாகி, நமது மனைவிக் கூடல் நிகழ்ந்ததற்குக் காரணம் யாதென்று
தெரியவில்லையே; அவளுக்கு நாமென்ன குறைசெய்தோம்? அவ
ளிஷ்டப்படிக் கெல்லாம் நடத்தித்தானே வருகிறோம். நமக்கா
காதவர்க ளாரேனு மவளுக்குத் துர்ப்போதனை செய்தார்களெ
ன்று நினைப்போமெனினும், அப்படிப்பட்டவர்க ளிங்கொருவரு
மில்லையே; அல்லது சென்மாந்திரத்தின் கன்மானுபவத்தால்
தான் அவள்குணம் பேதித்ததோ? இதென்ன தவக்குறை? அபூர்
வமாக வொருவேளை நம்மிடத்தி லவளுக்கு ஊடல் நிகழ்வது சக
சமே; அஃதாச்சரியமல்ல, இக்கூத்தனு ரவளுக்கு என்ன கொ
டுமை செய்தார்? அவர் மேற் சீற்ற முதிப்பதற் கேதென்ன
வென்று தனக்குள்ளே பலவிதத்திலுந் தீர்க்காலோசனை பண்
ணிப் பார்த்தான். அப்பொழுதவள் தேனப்பொருளாகிய புக
ழேந்திப் புலவரைக் கூத்தர் சிறைப்படுத்தினமையால் அவர்மே
லருமையும், நாமிவர் கருத்துக்கிணங்கி யின்று சிறை மீட்காமை
யால் நம்மீது வெறுப்பும் விளைந்தனவென்று தெளிந்து; அந்த
க்ஷணமே கூத்தரனுமதியாற் சில வேவுகாரரைக் கொண்டு புக

ழேந்திப்புலவரைச் சிறைக்களின்று நீக்கிக் கொணர்வித்துஇராக்கினி கோபத்தையாற்றி அவளைச் சமாதானப்படுத்துமென் றேவினன்,

அவருடனே யந்தப்புரத்திற்குப் போய்த் தமது வரவை அறிவிக்க, அவளவருக்குந் தனதுயிர்த் தோழியைக் கொண்டு ஆசனங் கொடுக்கச் சொல்லி மரியாதை செய்வித்தாள். அவரவ் வாசனத்தின்கணிருந்து இராஜமகிஷிக்குச் சீற்றமாறி மனவருத்தந் தணியும்பொருட்டு மிக்க குளிர்ச்சியு மிருதுவு மதுரமு நயமுமாய்த் தோன்றும்படி, (இருபிளவாகப் பகிர்ந்தமெல்லிய நாவின் ஒருபிளவு போன்ற நுண்ணிதாகிய சிற்றிடையையும், பொற்குழைகளையேந்திய செவியைத்தொடுகின்ற இணைவிழிகளையுமுடைய தெய்வப்பெண் போல்வாய்! ஆகாயத்தினின்று பெய்யு மழையினது வண்மை ஒரு கூறும், இவனது கைவண்மையோ ரிருகூறுமென்று யாவருமதிசயிக்கத்தக்க மிக்க வள்ளற்றன்மையையும் அபிமானமாகிய வாபரணத்தையுமுடைய சோழமகாராஜா உன்னுடைய வாசலைத் தேடிவந்தால், அவர்மே லென்ன குற்றமிருந்தாலும் அதையெல்லாம் பாராட்டுவது பெருமையா? அவரை வாசலுக்குள் பிரவேசிக்கவொட்டாமல் தடுப்பதுந் தருமமா? உன்னைப்போ லுயர்குடியிற்பிறந்த கற்புக் கனிகலமாகிய உத்தமஸ்திரீகள் தம்முயிர்போற் சிறந்த கணவர்கள் செய்த ஒரு பிழை இருபிழைகளை க்ஷமிக்காமல் வன்மஞ் சாதிப்பார்களோ? தண்ணீருமல்லவோ மூன்றுபிழை பொறுக்கின்றது: நீயிவ் வொருபிழை பொறுக்கலாகாதா? "குற்றம்பார்க்கிற்சுற்றமில்லை" எனப் பெரியோர் வாக்கியமிருக்கின்றதே: ஆதலா லிதைக்குறித்துச் சீற்றஞ்செய்யலாமா? "நீராக்கோபம் போராய்முடியும்" என்னு நீதிவாக்கிய மியம்பியதுதானே: இவையெல்லாமுனக்குத் தெரியாததோ? கடல்கொதித்தால் விளாவ நீரெங்கே? உன்சித்தமிரங்கி நீகொண்டுள்ள கோபத்தை நீயே தணித்துக் கொள்ள வேண்டும்.) என்னுங் கருத்தை யுள்ளமைத்து,

இழையொன்றிரண்டுவகிர்செய்தநுண்ணிடையேந்தியபொற்
குழையொன்றிரண்டுவிழியணங்கேகொண்டகோபந்தணி

மழையொன்றிரண்டுகைம்மாறுபரணனின்வாசல்வந்தாற்
பிழையொன்றிரண்டுபொறுத்தரோகுடியிற்பிறந்தவரே.

என்றொருபாடலைச் சொல்லினர். அம்மாத்திரத்தில் படம் விரித் தாடுகின்ற பாம்பின்மேல் மாந்திரிகன் திருநீற்றை மந்திரித்துப் போட்டவுடனே அந்த படமொடுங்கி யுக்கிர மாறினது போல, இராஜமகிஷியின் கோபமானது தணிந்து சாந்தமாயிற்று. சோழமகாராசனஃதறிந்து, படைமுகத்திறு மதிக்கும்வேண்டுமென்பதற் கிசையப் புகழேந்திப்புலவர் தன்றந்த சமஸ்தானத்து வித்துவானென்கிற தாக்ஷிணியத்தா லல்லவோ இராக்கினிக்கு நீங்காவூடல் நீங்கியதென்று அப்புலவர்மேல் மிகவுஞ் சந்தோடங் கொண்டு, அன்றுமுத லொருகுறைவு மில்லாமல் அவரைப் பரிபாலித்து வந்தான். அப்புகழேந்திப்புலவர் மறுநாள் தொடங்கி அரசன் கொலுச்சபைக்கு வருவதும் போவதுமாயிருந்தனர்.

இப்படிச் சின்னாள்சென்றபின் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் குலோத்துங்கச்சோழனை மந்திராலோசனைச் சபைக்க ழைத்துச்சென்று, அப்பனே! உனது பிதாவானவர் தமது தேகாவசானகாலத்தில் உனக்கு முன்னதாகத் திருமணமுடித்து இராச்யபட்டாபிஷேகஞ்செய்து பார்க்கத் தவஞ்செய்யாமற் போயினனென்று வியாகூலங் கொண்டு, அதிவிரைவி லின்றியமையாக் காரியமாக இளவரசு பட்டாபிஷேகத்தினை மாத்திரஞ் செய்து முடித்துத் தேகவியோக மாயினரன்றே? ஆயினுமவரக்கா லென்னிடஞ் சொல்லியிருந்தபடி உனக்குப் பாண்டியராச புத்திரியைப் பாணிக்கிரகணஞ்செய்து பார்த்த வென் கண்களால் உங்களிருவருக்கு மிராச்சியபட்டாபிஷேகமுஞ் செய்துபார்க்க ஆவல்கொண்டிருக்கிறேனெனக் கூறினர். அதுகேட்ட குலோத்துங்கராசனவரைத் தொழுதெழுந்து, ஐயனே! எனது பிதாவானவ ரடியேனைத் தேவரீர் கரத்தி லொப்பித்தபோதே அவரென் பொருட்டுச் செய்யற் பாலனவாகிய காரியங்களனைத்துந் தேவரீருடையதாகும். அவற்றைப்பற்றி யாகவேண்டுவ வனைத்து மாலோசித்து முடித்தருளுக வென்றனன். உடனே கூத்தரானவர் புரோகிதர்க

ளால் நன்றென்று நிச்சயித்துக் கொண்டவராய் நகரமுழுது மலங்கரிப்பித்து, கருணாகர பாண்டியன் முதலான பலவரசர்களையும் பெரியோர்களையும் பிரபுக்களையும் ஏனைய சுற்றத்தினரையுந் திருமுகவாயிலாய் வரவழைத்து, குலோத்துங்கச் சோழனையு மவன் பத்தினியையுஞ் ஜெயாவிஜை பவாவென்று யாவருமொலிக்கத் தக்கதாக இரத்தினகசிதமாகிய சிங்காதனத்தி லேற்றிச் சகல விபவ சம்பிரமத்துடன் வேதாகம முறைப்படி இராச்சிய பட்டாபிஷேகஞ் செய்து முடித்தனர். அன்னவூர்க்குச் சமானமான அந்த[illegible]செல்வர்கள் அட்சதைகளைவாரி யிறைத்தார்கள். அறநூல்கற்ற பெரியோர்கள் யாரும் அனந்தமுறை ஆசீர்வதித்தார்கள். ஔவை முதலிய வித்துவ சிரோமணிகள் அருங் கவிமாலைகளை யணிந்தார்கள். அரம்பையருக்கொப்பான கணிகையர் யாரும் அபிநய நாட்டிய மாடினார்கள். வெற்றிமுரசு, கொடைமுரசு, மங்கலமுரசு முதலிய வாத்தியங்கள் விண்ணுமண்ணும்அதிர முழங்கின. அன்னதானஞ் சொர்ணதானம் பூதானங் கோதான முதலிய பலதானங்கள் அபரிமிதமாய் நடந்தன. மற்றுமுள்ள சிறப்புகள்யாவு மாட்சிமைபெற நடந்து நிறைவேறின.

இவ்வா றிராச்சியபட்டாபிஷேக நிறைவேறியபோது அங்க முதலிய பலதேயத் திராசர்களெல்லாந் தனித்தனி அளவற்ற வாபரணங்கள், பீதாம்பரங்கள், பொற்பிரதிமைகள், பொற்சிவிகைகள் முதலியவைகளோடு பொற்[illegible]யிகள், பொற்கனிகள் முதலானவைகளையும் இரத்தினக்குடங்கள், இரத்தின தளபாடங்கள் முதலானவைகளையும், ஏனைய பல மங்கலப்பொருள்களோடு தத்தமக் குரிய அரசிறைகளையும் அளவற்ற வாத்திய கோஷத்துடன் வரிசையாகக் கொணர்ந்து வைத்து வணங்கி நின்றார்கள். அக்கால் கலிங்கதேயத் தரசன்மாத்திரம் அக்குலோத்துங்க சோழன் தந்தைநாள்முதல் விரோதியாகையால் தான்வராது அத்தகைய வரிசைகளையேனு மனுப்பாது இருமாந்திருப்பதை யுணர்ந்த கூத்தர் சின்னுள்சென்றரசனுக் கறிவிக்க, அவனுடனே பொற்றேரை விளித்து அக்கலிங்கதேயத்தரசன் கருத்தையறிந்து

வரச்செய்து இராச்சிய பரிபாலனத்தைக் கூத்தர்வாத்தி லொப்பு வித்துத் தனது பதிவிரதா சிரோமணியாகிய பத்தினியிடத்தி னின்றும் விடைபெற்றவனாய், இரதகசதுரக பதாதிகளாகிய சதுரங்க சேனைகளோடு செங்குந்த மன்னர்கள் திரண்டு புடைசூழ்ந்துவர இரணபேரி முழக்கத்தோடும் வெளிக்கொண்டுசென்று கலிங்கமன்னனுங் கருதலனைக் கடும்போர்செய்து வென்று, அவனதுகாறுஞ் செலுத்தவேண்டிய அரசிறை முதலிய [illegible]டங்களும் அடைவுடனே பெற்றுக்கொண்டுவந்து தனக்கொப்பாரு மிக்காருமின்றி ஏகச்சக்கிராதிபதியாய் அரசியற்றிவருகின்றனன். இப்படி குலோத்துங்கச் சோழன் கலிங்கதேயத் தரசன்மேற் படையெடுத்துச்சென்று போராடி வெற்றியடைந்து வந்தவுடனே, கவிச்சக்கிரவர்த்தியாகிய கூத்தரானவர் அவ்வெற்றிப்பாட்டைச் சிறப்பித்துக் "கலிங்கத்துப் பரணி" என்றோர் பிரபந்தம்பாடி, அப்பரணியை யச்சோழராசன் சபையில் கருணாகரபாண்டியன் முதலிய பல வரசர்களும் பெரியோர்களும் பிரபல வித்துவசிரோமணிகளுங் கேட்டு வியக்க அரங்கேற்றுதல் செய்கின்றார். அப்போது குலோத்துங்கச் சோழன் அந்நூலிற் றன்கொண்டுள்ள வபிமானத்தை அங்குள்ள பலர்க்குந் தெரிவித்தற் பொருட்டு அக்கலிங்க தேயத்தினின்றுங் கொணர்ந்து தனது பொக்கிஷச்சாலையில் வைத்திருந்த பொற்றேங்காய்ச் சிப்பங்களை வருவித்து, ஒவ்வொரு பாட்டி னரங்கேற்றன் முடிவில் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசாக வுருட்டினன். மற்றைய வரசர்களும் பிரபுக்களும் அப்பிரபந்தத்தி னொவ்வொருறுப்பின் முடிவில் பலவகைப் பரிசுகளை வழங்கினார்கள்.

13. இஃதின்னமையாக முன்னர் குலோத்துங்கச் சோழன் தனதிராச்சிய பரிபாலனத்திற்குக் கூத்தரை நிறுத்திக் கலிங்க தேய நோக்கிச் சென்றபோது புகழேந்திப்புலவர் இக்கூத்தரிடத்தில் நாம் தனியேயிருந்து நிருவகிப்ப தரிதெனக் கருதினவராய் அவ்வுறையூரைச் சார்ந்த மள்ளுவ நாட்டின்க ணுள்ள முரணை நகரிற் சென்று, அங்கரசுசெய்திருக்குஞ் சந்திரன்சுவர்க்கியென்னும்ராசனையடைந்து அவனாற் சம்மானிக்கப்பட்டிருந்து, பின்ன

ரவன் வேண்டுகோளால் வடமொழிக்க ணுள்ள நளன் சரிதையை நவரசாலங்காரத்தோடு நானூறு வெண்பாக்களாற் பாடி, முடித்துக்கொடுத்து அவனைச் சந்தோஷிப்பித்து, சிலநாள் சென்றபின் ஒருநாள் தனியிடத்திருந்து நாமெந்த விதத்திலும் பாண்டியராச குமாரியின் சொத்தாயிருக்கின்றோம்: அதுபற்றி நாம் சோழராசனுக் கடைக்கலம், அவனுத்தரவின்றி யவன்கீழடங்கிய ஓர் சிற்றரசனாகிய விவ்வரசனிடத்திற் சன்மானிக்கப்பட்டிருத்தல் நமக்கேயன்றி நம்மைச் சன்மானிக்கு மிவ்வரசனுக்குங் குற்றமாம்: ஒருவேளை கூத்தனுடைய வாலோசனையால் சோழராசன் நம்மைக் குற்றவாளியாக்கி யூகன்போல தண்டிக்கவு நேரும்: எனத் தமக்கு ளெண்ணினவராய் சந்திரன்சுவர்க்கிபால் தாம் பாடிக்கொடுத்த நளவெண்பா நானூற்றையும் வேறோர் பிரதி எழுதிக்கொண்டு அவ்வரசனிடத்தில் விடைபெற்று உறையூரையடைந்து, கூத்தர் கலிங்கத்துப்பரணி யரங்கேற்றுங்கால் அங்கிருந்துள்ள வித்துவக்குழாங்களோடு தாமுங் கலந்திருந்து மறுநாள் குலோத்துங்கச்சோழன் சபைக்கண் வந்திருந்தனர். உடனே யவ்விராச சபைக்கண் வருமுறைமைப்படி வந்து தமதாசனத்திருந்த கூத்தர் அவரைக்கண்டு நீரிக்கு நெடுநாள் வராதிருந்ததற்குங் காரணமென்னவென்று வினவினர். அதற்குப் புகழேந்திப்புலவர் தாமூரணிநகரத் தரசனாகிய சந்திரன்சுவர்க்கியைக் காணவேண்டிச்சென்றதையும், அவன் வேண்டுகோளால் நளவெண்பாவென்னும் ஓர் பிரபந்தம்பாடிக் கொடுத்துவந்ததையுங் கூறினர்.

அதுகேட்ட குலோத்துங்கச் சோழன் புகழேந்திப்புலவரை நோக்கி, நீர் பாடிவந்த நளவெண்பாவை நமது சமுகத்தி லரங்கேற்றும் கேட்போமென்றனன். அதற்கவரிசைந் தரங்கேற்றி வருங்கால் கூத்தர் அவர்பாடிய வவ்வெண்பாக்களிலுள்ள சொற்பொலிவையும் பொருட் பொலிவையுங் கேட்டுத் தமக்குள் மெச்சினவராயிருந்தும், ஓரிடத்தி லந்திக்காலத்தை வருணிக்கத்தொடங்கி,

மல்லிகையேவெண் சங்கா வண்டூதவான்கருப்பு
வில்லிகணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்

மென்மாலைதோளணிந்துமெல்லநடந்ததே
புன்மாலையந்திப்பொழுது.

என்று பாடிய பாடலைச் சொல்லும்போது கூத்தரவரை நோக்கி, இந்தப்பாட்டில் மல்லிகையரும்பைச் சங்காகவும் வண்டைச்சங்கநாதஞ் செய்வோனாகவுங் கற்பித்தது உசிதமே: ஆயினுஞ் சங்கவாத்தியஞ் செய்வோர் அதன் பின்புறத்தை யல்லவோ வாயில் வைத்தூதுவார்கள்? அதற்கிசைய சங்கு சூத்தும் ஆண்டிவாயு மெனப் பழமொழியு மிருக்கின்றது. அந்தப்படி புஷ்பத்தினடிப்புறத்தில் வண்டுமொய்த் தூதுகிறதாயிருந்தால் தோஷஞ் சொல்லக்கூடாது: அவ்வழக்கமோ வண்டுகளுக்கில்லை: அதை நினையாமற் கற்பித்ததனால் இந்தக்கற்பனை குற்றத்திற் கிடமாயிருக்கிறதென்றார். அப்போது புகழேந்திப் புலவர் சற்று முகம் வாடினவராகி, சங்குசூத்து மாண்டிவாயு மென்றது சகசந்தான். ஆனாலுங் கள்ளுக்குடியனுக்கு வாயென்றுஞ் சூத்தென்றுந் தெரியுமாவென ஒருவாறு சமாதானங் கூறினர். ஓரிடத்தில் தமயந்தி விரகதாபப் படுக்கையிற் சந்திரன் காய்வது அவளுக்குச் சகிக்கக்கூடாமையால் அவள் தனது தோழிமாரை நோக்கிச்சொன்னதாக

செப்பிளங்கொங்கைமீர்திங்கட்சுடர்பட்டுக்
கொப்புளங்கொண்டகுளிர்வானை—யெப்பொழுது
மீன்பொதிந்துநின்றவிசும்பென்பதென்கொலோ
தேன்பொதிந்தவாயாற்றெளிந்து.

எனப்பாடிய பாடலைச் சொல்லும்போது கூத்தரவரை நோக்கி, நீர் நட்சத்திரங்க ளடர்ந்திருக்கின்ற ஆகாயத்தைத் திங்கட்சுடர் பட்டுக் கொப்புளங்கொண்ட குளிர்வானென்றது அதிசயிக்கத் தக்கதுதான். கொப்புளித்தா லக்கொப்புளித்த விடத்திலிருந்து சீயாவது சிலைநீராவது வடியாதோவென்று குசோத்தியமாய்க் கேட்டனர். அதற்குப் புகழேந்திப் புலவர் சீவடியவில்லை சிலைநீர் வடிகின்றது, அஃதிரவின்கண் வானத்தில் நின்று பெய்யும் பனிதானெனச் சமாதானங் கூறினர். இப்படி யுவமேயமங்கட் கொத்திராத உவமானங்களமைந்த சிற்சில வெண்பாக்களைப்பற்

றிக் கூத்தர் கேட்குந்தோறும் புகழேந்திப் புலவர் எற்றப்பாட் டுக்கெதிர் பாட்டாக ஒருவாறு சமாதானஞ்சொல்லிப் பிரசங்கி த்து மு[illegible]த்து, முன்னிருந்த வுற்சாகமாறி அன்றுமுதல் உவகை யற்ற மனத்தோடு அவ்விராச சபைக்கண் வருவதும் போவது மாயிருந்தனர்.

1௫. இப்படி குலோத்துங்க சோழராஜன் சபைக்கண் உவ கையற்ற மனத்தோடு வருவதும் போவதுமாயிருந்த புகழேந்திப் புலவர் ஒருநா ளௌவையாரைத் தற்செயலாய் வழியிற்கண்டு வந் தனஞ்செய்து அவரிவரைப் பரிந்து நோக்கி நீர் பாண்டியராசனி டத்தி[illegible]ம் சோழராசனிடம் வந்தபின் எல்லாவிதத்தினுஞ் சவுக்கியமேயன்றோ வென்றனர். அதற்கவர் கூத்தரால் பட்ட சிரமையையும் அச்சிரமையுண்டாதற்குத் தம்மாலநேர்ந்தவேறுங் கவியுங்கூறி, பின்னர் தாமச்சோழராசனுக் கவன் மனையாளின் சீதனசொத்தாயிருக்கு மதிப்பொன்றேயன்றிக் கூத்தரைப்போ லச் சிறந் திராமையை விண்ணப்பஞ் செய்தனர். அம்மையா ரத னைக்கேட்டு,

வாய்க்கொழுப்புச்சீலைவழியாய்வடிந்தகதை
யேய்க்குமன்றேகூத்தனிலைக்கிறையாய்த்---தாய்க்கழுது
ஞானவமுது[illegible]தை
மானமறியாதுழன்றமால்.

என்றோர் கவிகூறி, நீர்போம் காமவண் வருகின்றேமென்றனு ப்பிவிட்டுத் தாம் சற்றுநேரஞ் சென்றபின் கொலுமுகத் தரச னுங் கூத்தரும் வந்திருப்ப நடந்துபோயினர். அரசனவரைக் கண்டவுடனெழுந்து வந்தனை முதலிய வழிபாடுகள் செய்திருப்ப கூத்தரும் புகழேந்தியும் அஞ்சலி[illegible]துதிப்ப அம்மையா ரிவர்களை நோக்கி,

அன்னனுக்குமாட்டிக்குமப்பன்வைத்தசொத்தாகி
கண்ணுமுங்கள்கீர்த்தியைக்காட்டியும்-கண்ணுவதே
னக்காலச்சென்னியர்போலாகியிச்சென்னிக்கருகி
லெக்காலும்போக்காதிரும்.

என்றோர் கவிபாடிச் சந்திரனென்னு மருத்த[illegible]யுடைய வோர்பதத்தை ஓர் பாவினீற்றடியில் மூன்றிடங்களி[illegible]றையாது வேறுபொருள்படப் பிரயோகித்து நற்றாயிரங்கற்றுறையி[illegible]ல் அரசனைப் பாட்டுடைத் தலைவனாக வமைத்துப் பாடுங்க[illegible]றுகூறினர். அதுகேட்ட கூத்தர் (வாளைகள் வெள்ளத்[illegible]காமல் கோபத்தோ டெழும்பி வேலியிலிருக்கின்ற கமுகமரத்[illegible]ன்மேற் பாய்ந்து அங்கிருந்து துள்ளி மேகத்தைக் கிழித்துக்கொண்டு மழைத்துளியோடு பூமியிலிறங்கத் தக்க வளப்பத்தை யுடைய சோழநாட்டுக்கரசனே! கள்ளத்தனத்தை யுடைய குறுநிலமாக்கள் குலநாசனே! தேவர்களுக்குக் கோபாலனை யொ[illegible]வனே! பூர்வபக்க மூன்றாம்பிறைச் சந்திரனுக்கு அவனுதிக்கு[illegible]மந்தக மாதத்திலும் அவன்கலைகள் வளர வளரத் தனக்குக் காமவ்வளர்)தலால் இன்னல் விரும்பப்பட்டுள்ள என் மகள் தனது சயபுத்தியை யிழந்தவளாகின்றாள்.) என்னுங் கருத்தை யமைத்து,

வெள்ளத்தடங்காச்சினவாளைவேலிக்கமுகின்மீதேதவித்
துள்ளிமுகிலைக்கிழித்துமழைத்துளியோடிறங்குஞ்சோணாடா
கள்ளக்குறும்பர்குலமறுத்தகண்டாவண்டர்கோபாலா
பிள்ளைமதிக்கெம்மகியுமதிபோனதயிழக்கும்பெருமதியே,

எனவிவ்வர்த்தகமாகவே நான்கிடங்களிற் பிரயோகித்துப் பாடினர். உடனே புகழேந்திப் புலவரும் (கழனிகளிலுழுது கொண்டிருக்கின்ற உழவுத்தொழின்மாக்கள் குரங்குகள் வேலியிலுள்ள பலவின்கனிகளைப் பறித்ததென்று அருகிலிருக்கின்ற சங்குகளையெடுத்துவீச, அவர்க[illegible]மே லக்குரங்குகள் மீண்டு மிளநீரைக்[illegible]யான தமிழ்நாட்டரசனே! எனது மக்களின் தனங்களுக்கு நகக்குறி வைத்தவனே! இராஜகுல சிரேஷ்டனே! வெவ்விய கண்போன்ற சந்திரனுக்குங் கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கு மிளைத்[illegible] வருந்தி வேல்போன்ற விழியையுடைய வென்மகள் கண்ணீரை வடிக்கின்றனள்.) என்னுங்கருத்தையமைத்து,

பங்கப்பழனத்துழுநுழவர்பலவின்கனியைப்பறித்ததென்று
சங்கிட்டெறியக்குரங்கிளநீர்தனைக்கொண்டெறியுந்தமிழ்நாடா
கொங்கைக்கமராபதியளித்தகோவேராசகுலதிலகா [வேலே.
வெங்கட்பிறைக்குங்கரும்பிறைக்குமெலிந்தப்பிறைக்கும்விழி

என[illegible]வை கூறியபடி மூன்றிடங்களிற் பிரயோகித்துப் பாடினார்.

15. இவ்வாறு தமது சொல்வினாவுக்கு அவர்கள் சோராது கொடுத்த விடையினைக்கேட்ட ஒளவையார் மீட்டு மவர்களைச் சமிக்ஞை வினாவாலுங் கேட்க வெண்ணினவராய், தமதைந்து விரல்களைச் சேரக்குவித்தும் அவற்றைமூடியுஞ் சிறிது திறந்தும் ஆள்[illegible]விரலொன்றை நீட்டியும் இக்கையுங்கலத் திறந்துஞ் சில சமிக்[illegible]களைக்காட்டி, இவற்றிற்குப் பேரின்பத்திலொருவருஞ் சிற்றின்ப[illegible]லொருவருமாகப் பொருள் தோன்றும்படிக் குப் பாடுகவெனக் கூறினர். அதுகேட்ட கூத்தர் நகைத்து;

ஐயமிடுமினறநெறியைக்கைப்பிடிமி
னிவ்வளவேனுமன்னமிட்டுண்மின்—தெய்வ
மொருவனேயென்றுணரவல்லீரே
லருவினைகள்தீருமறும்.

என்று பேரின்பத்தை யொட்டிப் பாடினர். உடனே புக ழேந்திப் புலவரும்,

இவ்வளவுகண்ணுடையாளிவ்வளவுசிற்றிடையா
ளிவ்வளவு[illegible]பொன்றனிளமுலையா—ளிவ்வளவாய்
னைந்தவுடலாணவமேவுமல்[illegible]தன்று
ஊர்ந்தகணையால்வாடினள்.

என்று சிற்றின்பத்தை யொட்டிப் பாடினர். இப்படி யிவ் விருவகை வினாக்களுக்கும் இவ[illegible]து பாடிய பாக்கள் நான்கை யுங் கேட்டு வியந்த ஒளவை[illegible]ர் அரசனைநோக்கி, ஓ சூரிய குலோத்தமனே! உனது கண்களு[illegible] இரு கருமணிப் பாவைபோன்

றுள்ள இவர்களால் நீயடையாதபே றென்னவிருக் கின்றதென்று கூறி விடைபெற்றுப் போயினர்.

16. இவற்றையெல்லா முணர்ந்த சோழராசன் இனி யிவ் விருவரையு மனமொத்திருக்கச் செய்யவேண்டுமெனக் கருதின வனாய் மற்றொருநா ளவர்களைத் தனியேயோர் அந்தரங்கமான விடத்தி லழைத்துச்சென்று, ஓ வித்துவசிரோமணிகளே! நீங்க ளிருவரு மெனக்கு மென்பத்தினிக்கும் பிதிரார்ச்சிதப் பொருள் களாயிருக்கின்றீர்கள். உங்களை வெல்லவல்ல கல்வித்திறம் பெற் றவ ரொருவருமில்லை. நீங்களொருவரோ டொருவர் வாதாடி வென்றாலல்லது வேறெவராலு முடியாது. மேலுங் குற்றமற்ற புராதனமாகிய நூற் கேள்வியையுங் கூரிய வறிவினையுமுடைய உங்களைப்போன்ற புலவர் சிரோமணிகள் பலர் கூடி ஒருவர்க் கொருவர் விரோதமின்றித் தாம்தாம் பயின்ற சாத்திரங்களில் நுட்பமாகிய விடயங்களையெடுத்து உத்தேச லக்ஷண பரீக்ஷைக ளால் வாதித்து அவற்றின் சாரத்தைக் கண்டுணர்ந்து சந்தோ ஷிக்கின்ற இன்பத்தைப் பார்க்கிலும், வானத்தின்கண் தேவர்கள் வாசஞ்செய்யுஞ் சுவர்க்கத்திற்சென்று அங்கனுபவிக்கு மின்ப மானது என்னவிசேடம்? அப்படி விசேடப்பட்டதா யிருக்குமா யின் அதைநாம் சுருதியுக்தி யனுபவங்களாற் காண்போமென் னுங் கருத்தை யமைத்தன்றோ ஆன்றோர்கள்,

> தவலருந்தொல்கேள்வித் தன்மையுடையா
> ரிகலிலரெஃகுடையார் தம்முட் குழீஇ
> நகலினினிதாயிற் காண்பா மகல்வானத்
> தும்பருறைவார்பதி.

எனக்கூறியுள்ளார்? இதனது தாற்பரியமென்ன நீங்களறியாததா?

> பகையென்னும் பண்பிலதனை யொருவ
> னகையேயும் வேண்டற்பாற் றன்று.

எனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றதே: உங்களைப் போன்றவர்கள் விரோதத்தைப்பாராட்டலாகுமா? எனக்கூறி யங்ஙனே தனியாய்

புகழேந்திப் புலவரை மாத்திரம் அழைத்துச்சென்று இவ்வாறு கூறுகின்றான்.

எனது மனையாள் சீதனப்பொருளாகிய புலவரேறே! இந்தக் கூத்தனரெனக்குப் பிரதி பிதாவும் போதகாசிரியரு மந்திராலோசனைத் தலைவருமா யிருத்தலன்றி எனது சமஸ்தானத்திற்கோர் வித்துவசிரோமணியுமானவர். இவரது கொள்கையோ கல்வியிலுங் கலைக்கியானப் பிரசங்கத்திலுந் தம்மை யொப்பாருமிக்காருமில்லாதபடி வென்றிகொண்டிருக்க வேண்டுமென்பதே: இவர் நமது பிதாவால் கவிராசகண்டீரவமென மெச்சப்பட்டுப் பின்னர் கவிச்சக்கிரவர்த்தியெனப் பட்டந்தரிக்கப் பெற்றவர். இவரால் புன்கவிகளெனப் பெயர் இத்தமிழ் நாடு முழுவதும் பொறுக்கிலுங் கிடையாதபடி கூடியவரையி லொவ்வொருவரும் பூரணக்கவிகளாயினர். இதுபற்றியே யிவரது சபாமண்டப முகப்பில் (பூவுலகிலுள்ள புன்கவிகளையும் பொருளறியாது பாடும் புல்லறிவினரையுஞ் சிறைப்பிடித்தி நமது வீரமாகாளிக்குப் பலியிடுவேம்.) என்றோர் பட்டயமெழுதி வெற்றிக்கொடித்தம்ப நாட்டியிருக்கின்றனர். அதை நீருங் கண்டிலீர். ஆனாலிவர் காருண்ய மனதினையுடையவராதலின், இதுவரையி லப்படி பலியிட்டதைக் காண்கிலம். கவிகளென வெளிப்படக் கருத்துடையோருக்கெல்லாம் அதிற் கவலை தோன்றியிருப்பதை மாத்திரங் கண்டனம். இதனாலன்றோ பெரியோர்கள் யாரு மிவரை வீரகவியென்றழைக்கின்றனர். இதற்குத் திருஷ்டாந்தமாக நீரிவ்விராச்சியத்திற்கு வருமுன்னர் ஓர்கால் இச்சோழமண்டலத்தில் இலக்கிய விலக்கணங்களை நல்லாசிரியர்களிடத்தோதிக் கல்வியிற் றேர்ச்சி யடைந்த நால்வர் கவிச்சக்ரவர்த்தியாகிய இக்கூத்தரிடம் பரிசைக்கொடுத்து வித்துவான்களாகிச் சீவிக்குமாறு, இவர் கொலுமுகத்திருக்குஞ் சமய நோக்கிவந்து விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். இக்கூத்தரவர்களைச் சில கேள்விகளால் ஆராய்ந்து, நீங்கள் நால்வருங் கவிகளாக விருப்பமுறின் னாளை யுதயத்திலே நாலு கோடிக்குப் பாடல் பாடிவாருங்களென்று கட்டளையிட்டார். அவர்களதைக்கேட்டு ஒன்றுந் தோன்றாதவர்களாகி, மிக வியாகூலத்து

டனே முகம் வேறுபட்டு வெளியில்வந்து தங்க ளிருக்கையை நாடிப் போவதானார்கள், அப்போ தவ்வழியாக வந்த ஔவையார் அவர்கள் மிகவருத்தத்தோடும், பேசிக்கொண்டு போவதை யுணர்ந்து, உங்களுக்கு நேர்ந்த வருத்தம் என்னையென்று கேட்டனர், அதற்கவர்கள், அம்மணி! நாங்கள் வித்துவான்களாகச் சீவிக்குமாறு கவிச்சக்ரவர்த்தி யிடத்திற் பரீக்ஷை கொடுக்கப் போயினோம், அவரெங்களைச் சில கேள்விகள் கேட்டதன்றி, நீங்கள் நால்வரும் நாலுகோடிக்குப் பாடல் பாடிக்கொண்டு நாளை யுதயத்துக் கிங்ஙனம் வாருங்களென்று ஆக்யாபித்திருக்கின்றார். இன்றிராத்திரிக்குள் நாங்கள் நால்வரும் நாலுகோடிக்குப்பாடல் எவ்வண்ணம் பாடப்போகின்றோ மெனத் திகைக்கின்றனமென்றார்கள். அதுகேட்ட ஔவையார் மனதிரங்கி—

மதியாதார்முற்றமதித்தொருகாற்சென்று
மிதியாமைகோடிபெறும்,

உண்ணீருண்ணீரென்றுபசரியார்தம்மனையி
லுண்ணாமைகோடிபெறும்.

கோடிகொடுத்துங்குடிப்பிறந்தார்தம்மோடு
கூடுதலேகோடிபெறும்,

கோடானுகோடிகொடுப்பினுந்தன்னுடைநாக்
கோடாமைகோடிபெறும்,

என்னும் பாடலைக்கூறி எழுதிக்கொள்ளச் சொல்லி, நீங்கள் நால்வருந் தனித்தனி ஒவ்வோரடியைச் சொன்மின்க ளென்று கூறிப்போயினர். அந்நால்வரும் சூரியனைக்கண்ட தாமரைபோல் முகமலர்ந்து தங்களிருக்கை யெய்திருந்து, மறுநாளுதயத்திற் போய் நால்வரு நாலடியைக்கூறி இக்கூத்தனை மகிழ்வித்து, இவரால் தனித்தனி விற்பத்திப் பத்திரிகை தரப்பெற்று விடைகொண்டு சென்றார்கள். இதுபோல் நாளது காறுங் கவிகளினை வெளிவர விரும்பித் தம்மை யடுத்தபேர்களைக் கைவிடாதாளுங் கடமையை இவர் கைப்பற்றி யிருத்தலை நிரூபித்துளீர். மேலு

மிவ ரிளமையிற்றானே உமாதேவியாருடைய திருமுலைப்பாலுண்ட திருஞானசம்பந்த மூர்த்தியை யொப்பக் கலைவாணியினுடைய திருமுலைப்பாலுண்டு கல்வியிற்றேர்ந்து சகல கலைகளினும் பயின்று, சாரதாபீட சம்பன்னரென்றும் தெய்வகவியென்றும் வரகவியென்றும் பேர்பெற்றுள்ளவர். அன்றியு நாம் புவிச்சக்ரவர்த்தியாய்ப் புவிராசர்க ளிடத்தினின்றுந் திறை வாங்குவதுபோல இவர் கவிச்சக்ரவர்த்தியாய்க் கவிராசர்க ளிடத்தினின்றுந் திறை வாங்குவதல்லாமல், நமக்கு நால்வகைப்படையாகிய வியூகம் புடைசூழ்ந்திருப்பதுபோல இவருக்குநால்வகைக்கவியாகிய வித்வயூகம் புடைசூழ்ந்திருத்தலால் வித்வசன கோலாகலரென்று விதவராலுங் கொண்டாடப் படுகின்றனர், இத்தகையருக்கு நீர் பாண்டியராசன் சபையிற் பேசியதைப் பற்றியும், இவரென்றேடுலாவந்தகாலத்தில் நீர் கொண்டிருந்த இறுமாப்பைப் பற்றியும், உம்மேல் நேர்ந்த கோபம் என் மனைவியினாட்டலோடொழிந்தது. இனியிவர்க் கும்மிடத்தில் யாதொரு விரோதமுமில்லை, நீர் பாடிவந்த நளவெண்பாவை நமது சபையி லரங்கேற்றிய காலத்தில் விரோதித் தும்மைத்தடுத்து வினவியது, உமது கல்வித்திறத்தையும் யுக்தித்திறத்தையும் வெளியிடவே யன்றி வேறன்று. ஆனல் "மாமியார்மெச்சியமருகளில்லை" என்னு முலகவழக்கின் படி மேலுக்குத் தமதன்பைக் காட்டாமல் உள்ளன்பு கொண்டிருப்பர், ஆதலால் நீரின்று முத லிவருடன் சகோதர பாவனையா யெதிர்பேசாமல் அன்னியோன்னியமாய் நேசித்து மனமொத்திருப்பதே அழகு, என்றுகூறி யழைத்துக் கொண்டவனுப் பின்னரவ் விருவரோடுஞ் சபாமண்டபத்திற்கு வந்து அவர்களைப்பார்த்து, நீங்களிந்நாட்டிலுள்ள திருவையாறை யடுத்த திருநெய்த்தானமென்னுந் தலத்தி லெழுந்தருளியிருக்கு நெய்யாடியீசரைக் குறித்து "நெய்த்தானத்நாணைச்சேவித்தே" என்பது மகுடமாக வரும்படிக்குச் சந்த விருத்தத்தில் ஒவ்வொரு பாடல் பாடுங்க ளென்றான்.

அதுகேட்ட கூத்த ரச்சோழராசனது புத்திகோசாத்துக்கு வியந்து, (விகடக்கவை கவிஞரிடுக்கி உடலைவிட் டுயிரானது அப்

புறப்பட்டுப்போய் விட்டால் அதற்கு முன்பு நகமுஞ் சதையும் போலப் பிரிவில்லாமற்பரிவுற்றிருந்த தாய்தந்தை பெண்டுபிள்ளை முதலிய சுற்றத்தாரெல்லாம் அருமையாகச் சீராட்டிப் பாராட்டிப் போற்றிவளர்த்த உடம்பைச் சுடலைக்குக் கொண்டு போய்க்காஷ்டத்திலேற்றிச் சாம்பராக்கிவிட்டு அங்கொருவருந் தங்காமல் அந்தக்ஷணமே திரும்பித் தாமிருந்த வூருக்குவந்து சேர்ந்து, "செத்தவன்வாயிலேமண் இருந்தவன் வாயிலே சோறு" என்பதற்குச் சரியாய் உண்டுடுத்துச் சுகித்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட [illegible]திகியிலிருக்கின்ற இக்காயத்தின்கணிச்சைவைத் திதைப் போஷிக்கு நிமித்தம் பொருளைத் தேடிவந்து அறஞ்செய்யாமல் வீட்டிற் புதைத்து வைக்கின்றவர்களே! ஆன்மாக்களி னிளை[illegible]பொழித்தற்பொருட்டுச் சங்காரகிர்த்தியஞ் செய்து சகல சராசரங்களும் மாய்ந்தொடுங்கிய மசானத்தின்கண் அஸ்திமாலை யசைந்தாடவும் பேய்க்கூட்டங்கள் சூழ்ந்தோடவும் சடாமகுடத்திலிருக்குங் கங்கை அலையெறிந்தோங்கவும் வலதுகையிலேந்திய மழுவானது சுவாலைவீசவும் காதிலணிந்த சர்ப்பக்குழைகள் நெகிழ்ந்தொளிரவு நிருத்தஞ்செய்கின்ற திருநெய்த்தானத்துப் பரமசிவனைத் [illegible]சித்[illegible] வணங்கி நெறிவழாது நிற்கக்கடவீர்கள்.) என்னுங் கருத்தை யமைத்து,

விக்காவுக்காவித்தாவிப்போய்விட்டாளட்டார்சுட்டேர்புக்கா
ரிக்காயத்தாசைப்பாடுற்றேயிற்றேடிப்போய்வைப்பீர்சிற்பீ
ரக்காடப்பேய்தொக்காடச்சூழப்பாடத்தீவெப்பாடப்பூ
ணைக்காடக்கானத்தாடப்போநெய்த்தானத்தானைச்சேவித்தே.

என்னுமோர் செய்யுளைப் பாடி[illegible]. உடனே புகழேந்திப் புலவர், (அகங்கார மமகாரங்களை மேற்கொண்டு பாசத்திரயமாகிய போராட்டத்திலகப்பட்டு [illegible]விதத்தினு மரணத்தைக் கடக்குமுபாயத்தைக் காணாமல் யமனுக் கிரையாகும்படி யிருப்பவர்களே! பிறகாகட்டுமென் [illegible]னைத்து உங்கள் வாழ்நாளிலொரு கணப்பொழுதாயினும் வீணாகக் கழியும்படி வறிதேயிராமல் முந்தி விரைந்து மந்திர தந்திர வழுவாமற் [illegible]சனை புரிந்து பிரதக்ஷணம் பண்ணிக் க[illegible]ல்போலும் வற்[illegible] நெடிய நீரோடைகளி

ளுள்ள பாரை மீன்கள் விசைகொண்டெழும்பி வரப்பில் மேக
மண்டலத்தை யளாவியிருக்கின்ற கமுக மரத்திற் ருவியேறிப்
போய்ப் பாக்குக் குலைகளை யுதிர்த்து அங்கிருந்து திரும்பி வய
லில் விளைந்த நெற் பயிரினடியில் விழுந்து துள்ளித்துடித்து அந்
நெற்கதிர்களைச் சிதறி அவ்விடத்தை விட்டெழுந்து அதனருகி
லாலைபாடிக் காய்ச்சப்படுங் கரும்பினி ரசப்பாகிற்போய் உழவர்
கள் வாய்க்கினிய உணவாம்படி விழுகின்ற வளப்பமிகுந்த திரு
நெய்த்தானத்தின் நெய்யாடிப் பிரானை நெஞ்சுற நினைந்துதலையுற
வணங்கிப் பத்தி சோராமல் நிற்கக்கடவீர்கள்.) என்னுங் கரு
த்தை யமைத்து,

தற்கோலிப்பூசற்பாசத்தேதப்பாமற்சாகைக்கேகிற்பீர்
முற்கோலிக்கோலிப்பூசித்தேமுட்டாமற்சேவித்தேகிற்பீர்
வற்றுநெற்சேறுடைப்பாரைச்சென்மைப்பூகத்தேதமித்தாவிப்போய்
நெற்றுளுற்றாலைப்பாகிற்சேர்நெய்த்தானத்தானைச்சேவித்தே.

என்னுமோர் செய்யுளைப் பாடினார். இவ்விருபாக்களையுங்
கேட்ட குலோத்துங்கசோழன் இதயமகிழ்ந்து, [illegible]
வும் பாடுவிக்க வேண்டுமென நினைந்து மீட்டு மவ்விருவரையு
நோக்கி, திருக்குறுங்குடியில் நம்பியென்னு நாமங்கொண்டெழுந்
தருளியிருக்கும் பெருமான்மீது இன்னுற்கிட மின்னடுதன வல்
லோசையில் ஒவ்வொரு பாடல் பாடுங்களென்றான். அதுகேட்ட
கூத்தர் (ஐராவதம் - புண்டரீகம் - வாமனம் - குமுதம் - அஞ்ச
னம் - புஷ்பதந்தம் - சார்வபௌமம் - சுப்பிரதீபம் - என்கின்ற
பெயரினையுடைய அ[illegible]திக்கஜங்களுந் திடுக்குற்றுத் த[illegible]க்
தலைவி நிலைபெயர்ந்தோட கறுத்த கடலிற்றைத் துருவும்படி பா
ணப்பிரயோகஞ்செய்த இ[illegible]பிரானுகை வதரித்த திருமாலுக்கு
வாசஸ்தானமாவது, பருத்த மது[illegible]கிய கரும்பு முதிர்ந்து கணு
வெடித்து அதிலிருந்து முத்துத்தெறித்து சிறந்த வண்ணமா
யிருக்கின்ற கொக்கின்வாயுல் வந்துவிழ அம்முத்தை மதுவிழு
ங்கி அடிக்கடி விக்கிக்கக்கா நின்ற சோலைசூழ்ந்த திருக்குறுங்
குடி யென்கிற திவ்யதேசம்.) என்னும் பொருளை யமைத்து,

இக்குளெட்டுக்கயந்தூக்கமுற்றுத்திடுக்கிட்டலற
மைக்கடற்குட்சரந்தைக்கவிட்டோற்கிடமாமதூர
விக்குமுற்பிக்கணுச்சற்றுவிட்டுத்தெறித்திட்டமுத்தன்னக்
கொக்குமொக்குக்கக்கிவிக்குமச்சோலைக்குறுங்குடியே,

என்னுமோர் பாடலைப் பாடினர். உடனே புகழேந்திப்புலவர், (மற்றமந்திரங்கள் போலன்றிப் பிரணவசகிதமாய் ஏகாக்ஷரி திரியாக்ஷரி பஞ்சாக்ஷரி முதலியவைகளுமாயிருக்கின்ற அஷ்டாக்ஷரியென்று மகிமைதங்கிய மூலமந்திரத்தை ஆசாரியனனுக்கிரகிக்கப்பெற்று அதைத் தத்தங் கருத்திற் பதித்து அனவரதமு நியமந்தவறாமல் அனுசந்தித்துத் தொழுது ஸ்தோத்திரஞ்செய்கின்ற பெரியோர்களுக்கு ஈடு யெடுப்புமில்லாத பெருஞ்சிறப்புண்டாகத் தனதழகிய திருவடியைப் பிரசாதிக்கின்ற வட்டமாகிய நெடிய சேஷசயனத்தில் யோக நித்திரைசெய்யு நம்பியெம்பெருமானுக்கு உறைவிடமாவது, சூழ்கொண்ட சங்கினங்கள் வயலிலுள்ள தாமரைப் பொகுட்டில் தத்தித்தவழ்ந்தேறி முத்துக்களைப்பெறுகின்ற வளப்பமுடைய திருக்குறுங்குடியாகிய திவ்ய தேசம்.) என்னும் பொருளை யமைத்து;

எட்டெழுத்தைக்கருத்திற்குறித்திட்டுநித்தம்பரவுஞ்
சிட்டர்கட்குத்திருப்பொற்பதத்தைச்சிறக்கத்தருமவ்
வட்டநெட்டைப்பணிமெத்தையத்தற்கிடம்வாரிசப்பொ
குட்டிலத்துக்குலக்கத்திமுத்தீனுங்குறுங்குடியே,

என்னுமோர் பாடலைப் பாடினர். இவ்வாறிருவருஞ் சமமாக வேற்றுமையின்றிப் பாடிச் சோழராசனை மகிழ்வித்ததன்றி, அதுமுதல் கூத்தர் புகழேந்திப் புலவரிடத்துற்ற கோபமாறினர். அப்புகழேந்திப் புலவருங் கூத்தரை யெதிர்பாடாமலும் பேசாமலும் ஒற்றுமையாயிருந்தனர்.

இப்படியிருக்கையில் குலோத்துங்கச் சோழனுக்குப் புகழேந்திப் புலவர் நம்மது கூத்தரிடத்தில் சரியான மதிப்பு வைத்திருக்கின்றாரோ இல்லையோவென்பதைச் சோதித்துப் பார்க்க

வேண்டுமெனத்தோற்றிய வெண்ணத்தினால் ஓர் நாளப்புலவரைத் தனியே யழைத்துக்கொண்டு, பொன்னியாற்றங்கரையின் வடபுறத்தே சாரிவருகிறான், அவ்வழியே சில்காருகக்கைக்கோளர் சிப்பஞ் சிப்பமாகக் கட்டப்பட்டுள்ள பஞ்சுநூல் மூட்டைகளையுங் கல்வி நூல் மூட்டைகளையு மெடுத்துக்கொண்டு வியர்வை யொழுகச் செல்வதையும், சிலவந்தணர் தேகசுசியோ டுண்டுடுத்துச் சந்தனபுட்பவ லங்கிருதராய்க் களிப்புடன் செல்வதையுங் கண்டான், உடனே யரசன் றனதருகில்வரும் புகழேந்தியை நோக்கி, ஐயா புலவரே! அந்தணர் களிப்புடன் செல்வதையுங் கைக்கோளர் சலிப்புடன் செல்வதையுங் கண்டீரா வென்றனன். அதுகேட்ட புகழேந்திப் புலவர் அக்கைக்கோளரது கல்வியுழி வொழுக்கங்களை அவ்வரசனுக் குவிக்க வெண்ணின ராய் உடனே யவனது கோலத்தை மாற்றி வறியர் வேடங் கரித்துத் தாமுமவ்வாறேயாகி, அடுத்த கிராமத்துள்ளே நுழைந்து பிரம பரம்பரையாகிய நால்வருணத்தருள் முதன் மூவருணத்தோரது மனைக்குட்புகுந்து உடங்கில்லின்க ளுணவுண்டாவென் றுசாவினர். அம்மனைகள்தோறு மவ்வுணவு முதலியன வுள்ளவர்களா யிருந்தும் இல்லையென் றுரைத்தவரும், அதுவுங் கூறாதவரும், பார்த்துச்சிரித்துப் பரிகசித்தவருமாயிருந்தார்களேயன்றி உண்டென் றுணவு படைத்தவர்க ளில்லை.

அப்பால் புகழேந்திப்புலவர் சோழராசனை யழைத்துக்கொண்டு கிடையம்பரையாய் அம்மூவருணத்த ரொழுக்கமேற்ற கைக்கோளர் வசிக்கு மடவளாகத்தினை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் தந்நவாய்க் கைக்கோளராகிய அபிடேகத்தரு மன்னர் புத்திரரும் ஒரு பக்கலிற் கூடி வேதாகம புராணேதிகாசங்கள் முதலியவற்றை வட மொழியினுந் தென்மொழியினும் ஓதலு மோதுவித்தலுமா யிருத்தலுடன் சிலர் வேட்டலும் வேட்பித்தலுமேற்று நடத்திக்கொண்டிருத்தலைக் கண்டு, இவர்கள் வியமங் கட்கிடையூறாக இவர்களை யாம் காணப்போதல் தகுதியன்றென வெண்ணி அரசனை யழைத்துக்கொண்டு மற்றொரு புறஞ்சென்றனர். அவ்விடத்திற் செங்குந்தக் கைக்கோளராகிய அரசரு

மவர்கள் புத்திரரும் வில்வித்தை மல்வித்தை முதலியவைகளைப் பயிறலும் பயிற்றுவித்தலுமாகி யிருத்தலுடன் சிலர் விநோதமாக வாட்போர் தோட்போர்களை நடத்திக்கொண்டிருத்தலைக் கண்டு, இங்கு தாமதித்து நிற்றல் கூடாதென்று வேந்தனை யழைத்துக் கொண்டு வேறொரு புறஞ்சென்றனர். அவ்விடத்திற் காருகக் கைக்கோளராகிய முதலியருமவர்கள் புத்திரரும் நெய்தலும் விற்றலுமா யிருத்தலுடன் சிலர் நெய்வித்தும் விற்பித்தும் வியாபார நடத்திக்கொண் டிருத்தலைக்கண்டு அவருள் கந்தப்ப முதலியாரென்பவர் மனைக்குட் புகுந்து அவர் நேரிலிருக்க நோக்கி உமதில்லிற் சாப்பாடுண்டாவென வினவினர். அதற்கம் முதலியார் (சாகச்செய்யுந்தன்மையெங்கள் கைப்படையாகிய ஈட்டிக்குண்டு. எக்காலத்து மெங்கள் வீட்டில் மேலான அறுசுவை யுணவு விசேஷத்திருக்கும் ஓ நாவலரே! இன்றைக் கெமதுவீட்டிற் றங்கி யிருந்து உங்கட்கு மிக்கிருக்கும் வயிற்றின் பசிதணிய வுண்டு வேண்டிய வஸ்திரங்களையு முடுத்திக்கொண்டு செல்லக்கடவீர்.) என்னும் கருத்தை யமைத்து,

சாப்பாடுகுந்தக்குச்சந்ததமுமெம்மில்லின்
மீப்பாடாமுண்டிமிளிருங்கா— ணுப்பாடு
கொண்டிருந்துமிகுங்குக்கிப்பசியாற
வுண்டேகுமினீருடுத்து.

என்னுமோர் வெண்பாவால் விடையளித்தார். அதுகேட்ட புலவர் மிகமகிழ்ந்து, நாம் முதலிமேற்றுப் பின்னரிவர்தர விசையுங்கால் அதுபெறாது வறிதேசெல்லின் நம்பாலைய நிகழுமென்னுங் கருத்தினராய் உடனே யரசனுந் தாமுமாக அவ்வீட்டிற் றங்கிக் கிருதகுள பாயச முதலியவைகளோ டுண்டு தாம்பூல முதலியவைகளைக் கைக்கொண்டு, (வேதமுதலிய நூல்களை யாராய்ந்தாலும் இவ்வுலகத்திற் சொல்லுகின்ற வருணத்த ரெல்லோருடைய தொழிலைச் செய்தாலும் வேலாயுதத்தை யேந்திய உங்கள் முருகக்கடவுளாற் குட்டிச் சிறைப்படுத்தப்பட்ட பிரமசிருட்டி யாயிருத்த லொன்றுதான் அம்மறையவர்க்குப் பழிப்பை விளைக்

ரும். ஆதலா லம்மனையவரும் உ[illegible] மாயினரை நீகொரார்.) என்னுங் கருத்தை யமைத்து,

> நாலாய்ந்திடினு நுவலிம்மையெல்லோர்தம்
> பாலேய்ந்தசெய்கைபடைக்கினும்—வேலேய்ந்த
> நுங்கந்தனுற்பட்டகொப்பிரமனேநறலொன்றே
> பங்கமென்பர்பார்ப்பாரகத்து.

என்னுமோர் வெண்பாவைப்பாடி விடைபெற்று மீண்டனர். அவ்வாறு மீண்டு வருகையில் முன்னர் தாங்கள் அந்தணர் முதலிய மூவருணத்தா லடைந்த அவமானத்தையும் பின்னர் நம்மூவருணத்த ரொழுக்கங்க ளெல்லா மொருங்கேற்ற கைக்கோளரா லடைந்த சன்மானத்தையும் புகழேந்திப் புலவர் சோழராசனுக்குப் பகுத்துக்காட்டி, இம்மாபின்ராது வீரபானத்தைப்பற்றிச் சில கூறி வந்தனர். அவைகளைக் கேட்டுக்கொண்டு நடந்த குலோத்துங்கச் சோழனை மிகமகிழ்ந்து மற்றைய வருணத்தரை மிகவிகழ்ந்து நகைத்தான். அப்போதவ் வரசனுக்கு விக்கல் தோன்றிப் புகழேந்தியைச் சிறிது சலங்கேட்டுமென்றான். அதுகேட்ட புலவர் அங்குள்ள மற்றொரு கைக்கோளர் வீட்டுத் தலைக்கடையிற் சென்று நின்று சலமுண்டாவெனக் கேட்டனர். அவ்வமையத் தங்கனமிருந்த அருணகிரி முதலியா ரென்பவர், (எமது கைப் படையாகிய கைவேலுக்கே சலமுண்டு. தாங்கள் நிற்கு மெமது மனைக்கண் நீங்கள் தாகந்தீரக் குடிப்பதற்குப் பாலும் பழமுமுண்டு. அடியேன் சொல்லு மிப்பாடலின் பொருளை யுணர்வீரேல் உமக்கிப்பொழுதே யவற்றை மனமகிழ்வுடன் தருவேன்.) என்னுங் கருத்தை யுள்ளடக்கி,

> சலமுண்டு கூர்கத்திற்றங்குமெய்மில்லில்
> பலமுண்டுநீருக்குப்பாலும்—வலமாம்
> பொருள்காட்டுவீரேற்புகழுமுமக்கிப்போ
> தருகாட்டுவேனையுகந்து.

என்னுமோர் வெண்பாவால் விடையளித்தனர். அதுகேட்ட புலவர் வியந்து, அப்பாடலுக் குத்தரவாக (கைவேலைக் கடத்திற்

றுங்குங் கைக்கோள்குல திலகரே! சிருட்டி முதலிய முத்தொழிலை நடாத்துந் தன்மையை மேற்கொண்டு மூன்று தம்பங்களைபோ ந்த அத்திரிமூர்த்திகளை பகைவரை யழித்தலும் அவர்கட்கு வேண்டும் வாத்தை யருளலுமாகிய விரண்டையுமுடைய உங்கள் மரபினரை, அம்மூர்த்திக ளெவ்விதத்திலொப்பாவார்கள்?) என் னுங் கருத்தைத் புள்ளடக்கி,

> குந்தத்தைக்கைக்கொண்டகொற்றவரேகோவாற்றுஞ்
> சொந்தத்தைக்கைக்கொண்முத்தானிகரு—மந்தவும்பர்
> தெவ்வழித்தளிகையுமேசேர்திருத்தலா னுமக்கிங்
> கெவ்விதத்திலொப்பாவரே.

எனவோர் வெண்பாவைப் பாடினர். அதிகேட்ட ... மக லியார் மிகமகிழ்ந்து அவ்விருவர்க்குந் தாகந்தணியப் பாலும்பழ முங் கொடுத்து மிக்கவுபசாரத்துடன் மரியாதைசெய்ய, அரச னும் புலவரு மிகமகிழ்வோடு அவரிடத்தில் விடைபெற்றுக்கொ ண்டு அங்கு நின்றும் வெளிக்கொண்டார்கள்.

17. இவ்வாறவர்கள் வெளிக் கொண்டு அரண்மனையை நோக்கி வருகையில் புகழேந்திப் புலவர் குலோத்துங்கச் சோழ னைப் பார்த்து, ஓ சூரியகுல திலகனே! அந்தணர் முதலிய மூவருணத்தோரது செயலினை மேற்கொண்ட இக்குலத்தினர் சிவபிரானாற் பொதுவாகக் கொடுக்கப்பட்ட கைக்கோளரென் னும் பெயருக்குத் தகுதியாக நடந்து வருகின்றனர். ஆதலா லிவர்களுக்கு அம்மூவருணத்தோரு பொற்பாகார். இத்தகைய குலோத்தமர் கூத்தனெனத் தெரிந்தும் யானவர் குறையுபவந் தெரியாதவனாகையால் ஓர் விநோதமாகப் பாண்டியராசன் சபை யில் அவர்பாடிய பாடலுக் கெதிர்பாடிக் கெட்டேன். போதாக் குறைக்கு நீங்களிருவரும் யானைமேற் பவனி வரும்போதும் அவர் பாடிய பாடலை யொட்டி அவமதித்துப் பாடினேன். முன்பவர் பாண்டியராசனிடம் வந்தது சுபகாரியத்தைப் பற்றியாதலால் அதைக் கலந்துபேசி நிறைவேற்றிய பின்னர் எனது சாதுரியத் தைக் காட்டாமற் போயினேன். அந்தந்தச் சமயத்தான வித்து

வான்களுந் தங்கள் தலைவனைப் பறவித்துவாளு விழுததுரைக்கச்
சகியாரென்பது யாவரு மறிந்ததேயன்றோ? அவ்வுரிமையைக்
கருதியே யானெதிர்பேசத் துணிந்தது. இதுபற்றியே யவருக்
குக் கோபமென்மேல் வைத்தற் கிடமாயது. எல்லா விதத்
தினு மென்னிலவர் மேன்மை இப்போ தறிந்துகொண்டே ராத
லால் இனியவ னவர்கருத்துக் கொத்திருப்பது நிச்சயம். ஆனு
லவ ரின்னுமக் கோபத்தினைச் சேடமு மறவிட்டிருக்கின்றனரோ
அல்லது மேற்கொண்டிருக்கின்றனரோ யானறிகிலேன். என்றச்
சோழராசனுக்குத் தம்மே லிரக்கமுண்டாகும்படிக்குக் கூறிவரு
தலும் இவை யனைத்தையு மரசன்கேட்டு மனதிரங்கி, இவர்நமது
கூத்தனரிடத்திற் சரியான மதிப்பை வைத்திருக்கின்றாரெனத்
தனக்குள் நிச்சயித்துக் கொண்டு தனதரண்மனைக்கண் சென்று
சேர்ந்தனன். உடனே புகழேந்திப் புலவரு மவ்வரசனிடத்தில்
விடைபெற்றுக்கொண்டு தமதிருக்கைக்குச் சென்றனர்.

அப்பாற் சில நாளான பின் அக்குலோத்துங்க சோழன்
எதோவோர்சூழின் செயலால் தனது சமுகத்துள்ள கவிவாணர்
முதலிய பெரியோர்கள் சொல்லும் சொற்களில் கவனம் வைக்கா
திருந்தான். அதைக் குடிகளாற் கேள்வியுற்ற ஔவையார் உவ
காளும் வேந்த னிப்படிக் கிருத்தல் தகாதெனக் கருதிச் சமய
நேரிட்டுப் பார்ப்போமென் றிருக்கையில், ஒரு நாளவ்வரசன்
பொன்னியாற்றுக்குத் தென்கரையிலுள்ள குடிகள் வளத்தையும்
பயிர்வளத்தையுங் காணவேண்டிக் கூத்தனரையும் புகழேந்தியை
யுந்தன்பின் அவற்றைத் தனித்தனி பார்த்துவரச்சொல்லித் தான்
முன்னே பாதசாரியாகப் போகின்றான். அதையுணர்ந்த ஔவை
யார் அவன் பார்வையிட்டுக்கொண்டு போகும் வீதிகளுளொன்
றில் ஓர் வீட்டுத் தெருத்திண்ணையின்மேல் சுவரிற் சார்ந்துட்கார்
ந்து கால்களை நீட்டிக்கொண்டிருந்தனர். அரச னங்ஙனம்வரும்
போது அவ்வம்மையாரை நோக்கி, அருகிற்சென் றஞ்சலி செய்
தான். அம்மையா ரவனைக் கண்டவுடனும் தாம் நீட்டியிருந்த கால்
களில் ஒன்றை மடக்கிக்கொண்டனர். உடனே புகழேந்தியார்
வந்து அரசனருகில் நிற்க, அவரைக்கண்டு மற்றக்காலையு மடக்

கிக்கொண்டனர். அப்பால் கூத்தனாரும் வந்து அரசனருகில் நிற்க, அவ்வளவில் சுவரிற் சாய்ந்திருந்தவர் சற்று நிமிர்ந்து கவிழ்ந்து அதோமுகமாயிருந்தனர். இச்செய்கைகளைக்கண்ட குலோத்துங்கச்சோழன் ஒன்றுந் தோன்றாதவனாகி அம்மையாரை ஏறேறப் பார்த்து நின்றனன். அக்குறிப்புணர்ந்த நாம் அவனை நோக்கி,

காவலர்க்கோர்கான்படங்குந்தற்கேறார்தமக்கிருகால்
கேவலர்க்கோவங்கமெனாங்கேட்டியால் — மேவலர்க்குச்
சிறேறபோல்வாய்செழுங்காவிரிநாடா
யேறேறப்பார்த்துநிற்பதேன்.

எனவோர் கவி கூறினர். அதுகேட்ட வரசன் தான்கருதி வந்த காரியத்தைப் பற்றியும் அம்மையார் செய்[illegible]ய்கைகளைப் பற்றியு முண்டான சந்தேகந் தீர்ந்தவனாய் மகிழ்ந்து, [illegible]கனந்தமுறை யஞ்சலிசெய்து மீண்டு அரண்மனை சேர்ந்து, அது முதல் கவிவாணர் முதலிய பெரியோர்களுடைய சொல்லைக்கடவாது நடந்துவந்தான். அவ்வரசனுக் கறிவுறுத்தலாக ஔவையார் நடத்திக்காட்டிய செய்கைகளைப் பற்றி மிகவியந்த கூத்தரும் புகழேந்தியும் அவனுடன் மீண்டு தமதிருக்கை நோக்கிச் சென்றார்கள்.

இவர்கள் செய லிவ்வாறாக அந்தச் சோழமண்டலத்திலுள்ள திருவழுந்தூரென்னுந் தலத்தில் தன் தாயோடு தனித்திருப்பவளான பார்ப்பன விதவைக்கும் அவ்வூரின்க ணொருகருமமுன்னிட்டு அது முடியுங்காறும் உணவின்பொருட் டவள்பால் வரப்போக விருந்த வேற்றூர் விப்பிரனுக்கும் ஊழின் செயலாற்கூடிய புணர்ச்சியின் வாயிலாய்ப் பிறந்து, அதை யயலவ ரறியாவகை அவ்வூர் தேவாலயத்துள் அணையாடையோடுங் கிடத்தப்பட்டு, காஞ்சிமா நகரத்தில் ஆனைபலிகொண்ட வரசாத்தா னென்னுங் கிராமப் பிடாரிக்குப் பூசைசெய்யும் அந்த நகரத் தோச்சவமிசத் தொருவனுந் திருவெண்ணைநல்லூரிற் சடையப்பிள்ளையென வழங்கும் ஓர் வேளாளப் பிரபுவின் குடும்ப வைத்தியனுமாய் நெடுநாள் காறு மகப்பேறின்றி யிருந்தவனாற் கண்[illegible]த்து ஏகப்ப

னெனப் பேரிட்டு வளர்க்கப்பட்டு, இளமையிற்றானே யவ்வேளாளப் பிரபுவினிடஞ் சூற்றேவலுக் கமைந்து அப்பிரபுவின் மக்களோதுதற் பொருட்டுப் பள்ளிக்குச் செல்லுகையில் அவர்கட்குத் துணையாய்ச் சுவடிகட்டு சுமந்துசென்று, அப்போதச் சிறுவர்களாயினோர் விளையாட்டால் ஏகம்பனென்பதைக் கம்பனெனச் சுருக்கியழைக்க அதுவே யென்றுமாறாப் பெயராய் வழங்கப் பெற்றொரு சிறுவரிருந்தனர். இவர் பின்னரம் மக்கள் சேர்க்கையால் கல்வி பயில்வதில் அவாவு மூக்கமு முடையராய்ப் பழகித் தானம்மக்களோடும் படித்துவருந் திருக்குறளில்;

> நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
> தன்றேமறப்பதுநன்று.

என்னுங் குறளொருநாட் பாடமாக அது தனது சிந்தனைக்கு வருவது கருதிப் பலமுறையுஞ் சிந்தித்துக்கொண்டிருப்ப, அன்றிரவி லவ்வேளாளப் பிரபு காலக்கடன் கழிக்கவேண்டி வயற்புறஞ் செல்லுகையில் அவரேவலாளியர் தீபக் கூடோடு அவர் முன்னதாகச் சென்று அங்கொரு பக்கத்துள்ள அரசமரத்தடியில் நின்றுகொண்டிருக்குங்கால் தான் சிந்தித்துவிட்ட குறள் ஞாபகத்துக்கு வரவும் அதனைப் பாடஞ் செய்து வருகின்றார்.

இவரிங் கிவ்வாறிருக்கச் சின்னாளுக்கு முன் தாம்பிரபர்ணி நதிதீரத்துச் சகலகலா நிபுணனாக விளங்கிருந்த வேதிய வுபாத்தியாய னொருவன் பொன் மிகத்தரு மாணாக்கரை மதித்துக் கல்வி கற்பித்து அஃதில்லாமையைப்பற்றி நெடுநாள் தன்னையடுத்து வழிபாடு செய்திருந்த ஏழை வேதியனொன் மாணாக்கனொருவனை யவமதித்துக் கல்வி சிறிதுங் கற்பியாது தனதில்லிற்குரித்தான பணிவிடைகட்காளாக்கியிருந்த காரணத்தால் அவனொருகால் நோயுற்று வருந்தி யுயிர் துறக்குகையில் "நீர் பிரமராக்கதனாம்" எனக்கூற வதுகேட்ட பணிக்களஞ்சி இனி யெனக்குய்வகை யென்னையெனக் கேட்ப, அவ்வேதியச்சிறுவன் செய்ந்நன்றி மறவாமையைப்பற்றிச் சிந்திப்பவ னெவனேயாயினும் அவனுக்கு நீருணர்த்துள்ள கல்வியை அவன் வருந்தாவகை தானஞ் செய்வி

ராயின் அக்காலுமக் கிச்சாபமொழிந் துய்வகை யுண்டாமெனக் கூறி மானவசரீரத்தை யொழித்துச் சுவர்க்கமடைய, அப்பாலவ் வேதியன் பிரமராக்கதனாகித் தக்கான் யாவன் வருவனென்னெதிர் பார்த்துப் பல்லிடங்களினுந் திரிந்துழன்று சிலபோது தவ்வாச மரத்தின்கண்ணு மிருப்ப, அக்காலிவர் பாடமாக வோதுங் குறளினைக் கேட்டவுடனே பழைய வுருக்கொண் டெதிரிற் றோன்றி நீயார்? என்னை கூறினை? கூறியவண்ணமொழுகவல்லையோவெனக் கேட்ப, இவரு மவ்வுருவை நோக்கி வேதியனென்றெண்ணி வணங்கி ஐயரே! அடியேன் சைவன்; என்பெயர் கம்பனென்பர்; இவ்வூர் வேளாண்குல வள்ளலாகிய சடையப்பிள்ளை யென்பவரேவலன்; அவர் மக்களது பள்ளியிலோதிய திருக்குறளெனக்கு வாராமையால் சிந்தித்திருந்தேன்; அந்தண சிரேஷ்டராகிய தேவரீர் திருவருளிருக்குமாயின் அத்திருக்குறளிற் கூறியவண்ணமொழுக வல்லேனென்றுகூற, அதுகேட்டவப் பிரமராக்கத வேதியன்மனமிரங்கி யாமெதிர் பார்த்தபடி தக்கா னிவனேயாமென்று சிந்தித்து அக்கணமே யிவர் நாவினை நீட்பித்து அதில் கலைமகளார் பீசாட்சரத்தினை யெழுத, அதுபெற்ற விவர் சந்தோஷித்தவனை வணங்கித் தன்பால் குருதக்ஷிணை யில்லாமைக்கு மனம்வருந்தி நிற்ப, அதனைக் குறிப்பாலுணர்ந்த வேதியன் நீ சைவனாதலால் மகா சைவராகிய சீராமன் புண்ணிய கதையினை உனது பாஷையாகிய தமிழ்மொழியிற் பெயர்த்துக் கூறுவதே எனக்குக் குருதக்ஷிணையாமெனக் கூறித் தானேற்றுள்ள மானவசாபத்தை யொழித்துச் சுவர்க்கம் புக்கனன்.

18. இவையனைத்தையுந் தூரத்தே தானே நின்று கண்டுகொண்டிருந்த வேளாண் பிரபுவானவர் சவசமுதித்து வந்து அங்ஙன நிகழ்ந்தவனைத்தையும் இக்கம்பராற் றெள்ளிதி னுணர்ந்து உடனே தனது மனைக்கழைத்துச் செல்ல, அதுமுதலிவரப் பிரபுவின் மக்களினுமேலான கல்விகளைப் பயின்றவராய் இலக்கிய இலக்கண நூல்களையுஞ் சீவகசிந்தாமணி முதலிய காவியங்களையு மோதி மிக வல்லவராகி, இளமை முதலாகத் தன்னை யாதரித்துவந்த அவ்வேளாளப் பிரபுவி னுதவியினால் குழந்தைப் பரு

வத்திலேயே தன்னையெடுத்து வளர்த்த ஒச்சனது மாமிசக்கு ணம் வாய்த்த தன்னிகையை விவாகஞ் செய்துகொண்டு அம்பிகாபதி யென்னுமோர் புத்திரனைப்பெற்று அவனையுந் தன்போற்கல்வியில் வல்லவனாக்கி விவாகமுஞ்செய்து முடித்து, தான் வைதிக வருணா மூவருளு முதன்மையான அந்தணருக்குப் பிறந்தும் தாய்தந்தையர் முறைமாறி யின்ற காரணம் பின்னின்று, தன்ன வமான தச்சமய நேர்ந்து முன்னின்ற தன்ன அவைதிகராகிய சூத்திரரா லெடுத்துவளர்த்து ஆதரிக்கப்பட்டவராதலால் அவர்களை தன்னைமதித்து "கல்வியிற் பெரியன் கம்பன்" எனக் கொண்டாடும்படியாக அவர்களிடஞ் சென்று தனது கல்வித் திறத்தைக் காட்டிப் பிரசங்கித்துப் பலவெகுமதிகளைப் பெற்றுப் புகழ் பெருக விருந்தனர்.

19. இவ்வாறிருத்தலினுங் கன்னையாதரிக்கப் பெற்ற சற்சூத்திர ரிடத்திலேயே தனதபிவிருத்திக் கிடந்தேடாது, அவர்கள் குடிமக்களாகிய சங்கம சூத்திரரும் ஆடெருமை முதலிய பலிகொள்வது போதாது ஆனை பலிகொள்ளும் அரசாக்ஷியென்னும் பிடாரிக்குப் பூசை செய்வோரும் தன்னைக் கண்டெடுத்துப் பாலூட்டி வளர்த்தோருமாகிய ஒச்சவமிசத்திலே வயதினும் வித்தையினும் பெரியராய காலத்தும் ஆலோசியாது [illegible] விவாக முதலியன செய்துகொண்டு அபிவிருத்தியாயினராதலின் அவ்வமிசத்தா ரிடைவிடா தனுசரிக்கின்ற மதுமாம்ச பட்சணத்தைத் தானு மனுசரித்திருத்தற் கிடமுண்டாயிற்று. என் செயவர் பாவம்! "ஊழிற்பெருவலியாவுள மற்றொன் றுசூழினுந் தான் முந்துறும்" என்பது பொய்யோ? இப்பாலிவர் சடையப்பிள்ளையென்னும் வேளாளப்பிரபு தன்னையாதரித்ததற்கு நன்றி பாராட்டலதாக அவர் மரபினுக்குரிய தொழில்களு ளொன்றான உழவுத் தொழிலையு மதற்குரிய கருவிகளையும் விசேடமாய்ச் சிறப்பித்து, "கங்கைபெறுங்காராளர் கருவியெழுபது முரைக்க" என்றெடுத்தெழுபது செய்யுள்களாலாகிய "ஏரெழுபது" என்னுமோர் பிரபந்தத்தைப்பாடி அப்பிரபுவின் சமுகஞ் சென்று, இதை யரங்கேற்றற் குத்தரவாக வேண்டுமெனக் கேட்டனர்.

20. அதற்கவ ரவரை நோக்கி, இப்போது நீ முடித்த பிரபந்தமானது இலக்கியத்திற் சிறந்த பாடல்க ளமைந்தா யிருப்பினும் அதிலுள்ள விஷய மெங்கள் மரபைச் சிறப்பித்ததாக முடிந்ததே யல்லாமல் இவ்வுலகத்துள்ள சகலருங் கொண்டாடத் தக்க சிறப்பினை யடையவில்லை யாதலின், இக்கால் தமிழில் வழங்குந் தொட்ட விலக்கியங்கள் சிந்தாமணி - சிலப்பதிகாரம் - மணிமேகலை - வளையாபதி - குண்டலகேசி - என்னும் பஞ்சகாவியங்களே: அவை யைந்தும் புறச்சமயத்தராகிய சமணர்களா லியற்றப்பட்ட வொவ்வோ ரசாது கற்பனைக்காதைகளா யிருக்கின்றன: என்போன்றவருந் தொட்ட விலக்கியங்களிற் பயில விரும்பின் அக்காவியங்களையே பார்க்க வேண்டியதா யிருக்கின்றது: அவ்வாறு பார்வையிடுவதி லிலக்கியத்தேர்ச்சி யடைவதாயிருக்கினும் இகபரசாதனப் பிரயோசன மடைவதற் கிடமில்லை: நீ மேற்கூறிய விலக்கிய காவியங்களில் நன்கு பயின்றிருத்தலின் அத்தகைய விலக்கியங்களமைய இராம காதையை யாரியபாடையினின்று மொழிபெயர்த்துச் செய்யுள் நடையா லியற்றின் உலகோபகாரமாயிருப்பதுடன் எனக்கு முனக்கும் புகழுண்டாமெனக்கூறினர்.

அதுகேட்ட கம்பர் தனது குருவரனையு மன்னதாதா வரனையு நோக்கி [illegible] யோசித்தவராய் அவ்வாறே யியற்றுகின்றேமென விசைந்து, உடனே யவ்விராம காதையை வசனரூபமாகத் தக்க பண்டிதர்களைக்கொண்டு மொழிபெயர்த்து, அவ்வசனத்தைக் கொண்டு தான் பயின்றுள்ள பஞ்சகாவியங்களி னிலக்கியவிலக்கண நடைக்கிணங்கப் பாலகாண்டமுதல யுத்தகாண்டம் வரையிலுள்ள ஆறுகாண்டங்களைக் கச்சிக் குமரகோட்டத் தருச்சகராகிய கச்சியப்ப சிவாசாரியா ரியற்றியருளிய கந்தபுராணத்தைப் போலவே பன்னீராயிரம் பாக்களாற்பாடி, அக்காவியத்திலாங்காங்கு மேற்கூறிய பிரபு தனக்குச் செய்துள்ள நன்றிவெளிப்பட அவரது புகழைச் சந்தர்ப்பத்திற்கேற்றபடி நூற்றுக்கொரு செய்யுளி லமைத்து முடித்தனர்.

21. இவ்வாறு முடித்தபின் கம்பரானவர் சடைப்பிள்ளையின் சமுகஞ்சென்று, தங்களபிப்பிராயப்படி காவியத்தைப்பாடி

முடிக்[illegible]தலால் அதையேனு மரங்கேற்றுவதற்கு ஓர் நல்ல
நாள் கு[illegible]ு விளம்பரப்படுத்திச் சபைசேர்க்கவேண்டுமெனக்
கூறினார். அதுகேட்ட பிரபுவானவர் அக்காவியத்தை வாங்கிப்
பார்த்து, ஒரோவிடங்களில் தம்மைப்பற்றியுந் தமது மரபைப்
பற்றியுஞ் சந்தர்ப்பத்திற் கேற்றபடி சிறப்பித்திருத்தலைக் கண்டு
கம்பரைநோக்கி, இஃது திருமாலி னவதாரமாகிய இராம மூர்த்
தியின் காதையா யிருத்தலானும், இவ்வுலகை யாளுமரசரெவரா
யாயினும் அவர்கள்யாரு மத்திருமாலி னம்சத்தவரெனப்பெரியோர்
கூறலானும், இக்காவியத் திடையிடையே நம்மைப்பற்றிய நமது
மரபைப்பற்றியும் விசேடமாய்ச் சிறப்பித்திருத்தலானும், இத்
தகைய சிறப்பமையப்பெற்ற விக்காவியத்தை நோக்குமிடத்துச்
செய்ந்நன்றி மறவாத உபகாரஸ்மிருதியா யிருப்பதானும், இவ்
விதிகாசத்தினை நம தரசரேறுன குலோத்துங்கச் சோழராசன்
சபையிலேயே வரங்கேற்றின் இதையாக்கியோர்க்கு மாக்கிவைத்
தோர்க்கு மேலான புகழுண்டாகு மாதலால்; நீ முன்னர் செய்
துள்ள ஏரெழுபதென்னு நூலைமாத்திர நமதவைக்க ணரங்கேற்றி
விருதுவெகுமான முதலியன பெற்றுப் பின்னர் நம்மரசனுக்கிரா
மாயணத்தின் பொருட் டாகவேண்டுங் காரியத்தை விண்ணப்பித்
தநுமதிகொண்டு அவனது சமுகத் தரங்கேற்ற வாரம்பிக்கின்
யாங்களனைவரு மங்ஙனம் வந்து செவிகுளிரக் கேட் டானந்திக்
கின்றோ மெனக் கூறினர். அதுகேட்ட கம்பரு மவ்வாறேயாகுக
வென் றிசைந்தனர்.

உடனே வேளாண்குல வள்ளலாகிய சடையப் பிள்ளையான
வர் ஏரெழுபதென்னு நூலை யரங்கேற்றுதற்கு ஓர் தகுதியான
தினஞ் சோதித்து நிச்சயப்படுத்தி, அத்தினத்திரவிற் சகலருந்
தமது பூக்கா மண்டபத்திற்கு வந்து சபை சேரும்படி தெரிவித்
தனர். அவ்வண்ணமே யாவரும் வந்து சபைசேர்ந்து பிரபுவின்
வருகைக் கெதிர்பார்த் திருக்கையில் சபைக்கு வருவதாகப் புறப்
பட்ட வப்பிரபுவுக்கு இடையில் சகேலர்பாதை சம்பவிக்க, அப்பா
தையைக் கழித்துக்கொண்டுவர வயற்புறஞ் சென்றனர். அந்த
வயலேர்ரத்தி லோர் விடநாக மவரைத் தீண்டவும் அப்பிரபுவான

வர் [பி]ரபந்த மரங்கேற்றுதல் தடைபடா வண்ணம் [illegible]வாவின் விடவேகத்தைச் சகித்துக்கொண்டு சபைக்கு வந்திருந்து பின்ன ரவ்வேகத்தால் மூர்ச்சையடைந்து சாய்ந்தனர். உடனே அங்குள் ளோர் யாவருங் கலக்கமுற்றவர்களாய்த் தகுதியான மாந்திரீக ரையு மருத்துவரையும் வருவித்து, மணிமந்திர வோஷதிகளா லாகவேண்டிய காரியங்களில் முயன்று நடத்துவதானார்கள். அதுகண்ட கம்பரானவர் மிகவருந்தித் தனதிஷ்ட தேவனாகிய ஏகம்பவாணனைத் தியானித்து, திருவெண்ணீற்றைக் கரத்திற் கொண்டு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுள்ளன்போடும் பலமுறை யுச்சரி த்து அரவங்கடித்த வாயிற் றெளித்து,

ஆழியான்பள்ளியணையே யவன்கடைந்த
வாழிவரையின்மணித்தாம்பே — யூழியான்
பூணேபுரமெரித்தபொற்சிலையிற்பூட்டுநின்ற
நாணேயகலநட.

மங்கையொருபங்கன்மணிமார்பிலாரமே
பொங்குங்கடல்கடைந்தபொற்கயிறே — திங்களையுஞ்
ஓதியதன்மே லூருந்தெய்வத்திருநாணே
யேதியவாறேயிறங்கு.

பாரைச்சுமந்தபடவரவே பங்கயக்கண்
[illegible]த்துறங்குமெல்லணையே — யிரமதிச்
செஞ்சடையான் பூணுந்திருவாபரணமே
நஞ்சுடையாய் தூரநட.

என்று மிம்மூன்று வெண்பாக்களையும் பாடித் துதித்தார். உடனே யம்மணிமந்திர வோஷதிகளின் வலியினாலோ, ஸ்ரீபஞ் சாக்ஷர மகிமையினாலோ, திருவெண்ணீற்றின் சிறப்பினாலோ, இவரவர்மீது வைத்த வுள்ளன்பினாலோ, அப்பிரபுவின் னும்பின்னை [illegible]லகில் வசிக்கவிருக்கு மூழினாலோ விடநீங்கித்தெளிந்தனர்.

22. இவ்வண்ணந் தெளிந்தவுடனே அச்சபையின்கணிருந் தோர் யாவரும் வியந்தார்கள். அப்பொழுது கம்பரு மிக மகிழ்

ச்சிலெழுபது மனத்தாய்த் தான்பாடிய ஏரெழுபதென்னு நூலை யரங்கேற்றி முடித்தனர். உடனே யங்கனம் வந்திருந்த வேளாண்குலதிலகர் யாரும் அவருக் கனேக வெகுமதிகள் செய்தார்கள். அக்கால் சடையப்பபிள்ளை யக்கம்பரிடத்து வைத்துள்ள வபிமானத்தாலும், இனியிவ ராமாயண வரங்கேற்றலுக் குத்தரவுபெற்று வருமாறு குலோத்துங்க சோழராசன் சபைக்குப்போக விருத்தலினாலும், வித்துவான்க ளிராசசபைக்குப்போகும்போது ஆடையாபரண விருது முதலிய வலங்காரமின்றிப்போதல் அழகல்லவென் றுமெண்ணிச் சில விலையுயர்ந்த வஸ்திராபரணங்களுடனே ஒரு பூச்சக்கிரக்குடையு மெக்காளமும் பரிசாகக் கொடுத்து விடையளித்தனர். அவ்விடையினைப் பெற்ற கம்பர் அவராற் றரப் பெற்ற வாடையாபரணாதிகளை யணிந்து, ஒருவனை பூச்சக்கிரக் குடை பிடித்துக்கொண்டு வர முன்னதா யொருவனெக்காள மூதிசெல்லத் திருவெண்ணெய் நல்லூரை விட்டு உறையூரை நோக்கிப் போகின்றார். இவ ராடம்பரத்தை வழியிற் கண்ட வன்னியகுல திலகருட் சிலர் தமது குலவளத்தைப் பற்றி ஓர் பிரபந்தஞ்செய்து தரவேண்டுமென வேண்டினர். அதற்குக் கம்பரிசைந்து நீங்கள் பாட்டொன்றுக்குப் பத்துப்பொன்கொடுத்தால் எழுபது பாட்டி லுங்கள் காவற்றொழிலுக்குரிய சிலையைச் சிறப்பித்துப் பாடுவோமென்று கூற, அதுகேட்ட வன்னியரவ்வாறே கொடுப்பதற் கிசைந்தவுடன் "சிலையெ[illegible]" [illegible] பிரபந்தத்தை அவ்விடத்திலேயே தங்கிப் பா[illegible] யவர்[illegible] நியமித்த சபையி லரங்கேற்றி முடித்துத் த[illegible]கு வரவேண்டிய எழுநூறு பொன்னையும் அவர்க ளபிமானித்துக் கொடுத்த பல வெகுமதிகளையும் பெற்றுக்கொண்டு அவைகளைத் தக்கவர்களிடங் கொடுத்துத் தனது புத்திரனிடஞ் சேர்ப்பித்து வெளிக்கொண்டனர்,

23. இப்படி வெளிக்கொண்ட கம்பர் தான் செல்ல[illegible]த்துவக்க உறையூரை யடைந்து தன தாண்டகையாகிய வேளாளப்பிரபுவி னுத்தரப்படி இராமாயண வரங்கேற்றுதலைப் பற்றி ஓர்நா ளிராச சபைக்கண் சிறந்தவாடை யாபரண வ[illegible]

ராய்த் தனது விருதுகளோடும் வந்து குலோத்துங்கச் சோழரா
சனைக்கண்டு, தனதூர் பெயர்முதலிய வரலாற்றையும் தான்வந்த
கருத்தையும் விண்ணப்பித்து, அவ்வரசனுத்தரவினால் தான்பாடிய
காவியத்தில் ஆங்காங்கு விசேட கற்பனையோடுங்கூடிய செய்யுட்
களிற் சிலவற்றை யெடுத்துப் படித்து முதலிலிருந்து முடிவு
வரையிலரங்கேற்றுவதற் குத்தரவளிக்க வேண்டுமென் றீபிரார்த்
தித்தனர். அதுகேட்டவரச னக்கம்பரை நோக்கி, நமது சமு
கத்தி லெவராயினு மெந்நூலையேனு மரங்கேற்றவேண்டின்நமது
சமுக வித்துவ சிரோமணியாகிய கூத்தனு ரநுமதியின்றி யான்
றனியே வங்கீகாரங் கொடுப்பது வழக்கமில்லை யென்றுகூறினன்.
அதற்குக் கம்ப ரவ்வாறே யாகவெனச் சம்மதித்தவராய் அக்கூத்
தர் வருமளவுஞ் சில விநோதமான கதைகளை யவ்வரசன் சிரவ
ணானந்தங்கொள்ளும்படி பிரசங்கித்து வருகிறார். அக்கால் கூத்த
ரானவர் வருமுறைப்படி யங்ஙனம் வந்து அரசனருகி லமைத்
துள்ள தமது சிங்காதனத்திலிருந்து, ஆடையாபரண வலங்கிருத
ராய் வந்துள்ள கம்பரையும் அவருக்கு வேளாளப் பிரபுவாற்
கொடுத்திருக்கின்ற விருதுகளையும் பார்த்து அரசனுலவர் வந்தி
ருக்குங் காரியத்தையு முணர்ந்து, அவர்பாடிய தேவகாதையுள்
நரஸ்துதி செய்திருப்பதை முன்னமே யுணர்ந்துள்ளவ ராதலால்
அவரை நோக்கி, நீர் மொழிபெயர்த்த விதிகாசத்துள் இராம
[illegible]மை சூட்டிய பக்கம் பாடியுள்ள அவ்வோர்
செய்யுளைக் [illegible]மென்றார். அதுகேட்ட கம்பர் மற்றப் பக்கங்க
ளெல்லாவற்றுள்[illegible]மக்களைப் பக்கமா யுள்ள பாடலை விரும்பினு
ராதலால் நமக்கேதோ நன்மை நேருவதாக விருக்கின்றதெனக்
களித்தவராய்,

அரியணையனுமன்றாங்கவங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைக்கவிக்கவிருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்கவெண்ணெயூர்ச்சடையன்றங்கள்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி.

என்னு மிச்செய்யுளைக் கூறினார்.

அப்போது கூத்த ரிஷிகளுங் கொண்டவராய்க் குலோத்துங்
கச்சோழராசனை நோக்கி, ஓ சூரிய குலோத்தமனே! அளவற்ற
தேவர்களாலு முனிவர்களாலுஞ் சுகந்த புஷ்பங்களாலு மகுடத்தை
க்கியுந் தூய வைதிகரான வந்தணராதிய முதன் மூவருணத்தரு
மங்கையாற் றொட்டு வாழ்த்த இந்திரிய நிக்கிரகரும் பிரமதேவன்
மானசபுத்திரர்களி லொருவரும் மனுகுமாரராகிய இட்சுவாகு
வமிசத்தின் புரோகிதரும் வைவஸ்வதமனுவின் காலத்திலிருந்த
சப்தரிஷிகளிலொருவரும் மூவுலகினராலுந் துதிக்கப் பெற்ற
அருந்ததிமணாளரு மாகிய வசிஷ்ட முனிவரால் தரிக்கப்படும்
பெருமைவாய்ந்து அவ்விட்சுவாகு காலமுதலாகச் சூரியகுலத்தர
சர் முறையாகச் சூடிக்கொண்டுவருந் தெய்வத்திருமுடியை அவை
திகரான சூத்திரரெடுத்துக் கொடுக்க அவர் வாங்கித் தரித்தன
ரென்றால் இஃதியாவருக்குஞ் சம்மதமாம். அந்தோ! அளவற்ற
தேவதைகளைப் பலகோடி மந்திரசெபங்களா லாவாகனஞ்செய்து
மகா தெய்வ ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கின்ற வத்திருமுடியை அரு
மறைவேள்விக் குருகராகாத அவைதிக ராவாரா பஞ்சமரென்னும்
பண்ணையாட்களோடு பந்திப்போசன முண்ணுங் கையினால் தீண்
டப்படுவ?

24. இக்கவிஞ னிதிகாசமாயும் பகவத்சரிதமாயு மிருக்
கின்ற இராமாயணமென்னும் பெருங்காவி[illegible]
த்துடன் பழக் கவியாலிற் றானிடங் கல[illegible]லதிற
பலவிடங்களி லிவ்வாறு [illegible]ரஸ்துதிசெய்திருக்கின்றான். இதென்ன
வனியாயம்? தன்னைக்காத்த பிரபுவின்மே லபிமானமிருக்கின்
அவர் மீது தனியே யளவற்ற பிரபந்தங்கள் செய்யலாம். ஆன்
றோர்களெல்லா மான்மார்த்த பூசைசெய்யுங் காலத்திற் பாராய
ணஞ்செய்தற் குரியதாகிய விதிகாசத்திலும் இத்தகைய வசங்கி
தஞ்செய்து வைத்தல் கூடுமோ? இவ்வுலகில் தம்மை யாதரித்தவ
ரையும் பொருளுதவி செய்தோரையும் அமைத்தற்கேற்ற இட[illegible]
களி லமைத்துப் புகழ்ந்து பாடுதல் சிலபுலவர் வழக்காதலால்
அவ்வாறென்னுவோமெனினும், வைதிக வொழுக்கத்திற் சிறந்த
முதன் மூவருணத்தோரை வைத்திருக்கினும் ஒருவா றமை[illegible]

மத்திம மதமெனவாவது சொல்லக்கூடும். அவற்றினும் மிற்பட்டதமாதமமாகிய நான்காம் வருணத்தாரை வைதது மகா கொடுமை. அந்நான்காம் வருணத்தனையினும் பத்தியின் மேம்பட்ட சிவானுபூதிமானாயிருக்கினுங் குற்றமில்லை. சிவானுபூதிமான்கள் கேவலமென்று கைவிடத்தக்க சாதிப்பற்று - சமயப்பற்று - பொருட்பற்று - பூதலப்பற்றென்னு மிவைகளையே பெரும் பற்றுக்கோடாகப் பற்றியிருக்கும் ஓர் கிராமாதிபதியைத் தேவாமிசத்தினரோடொக்கச் சேர்த்துப் பாடுதல் எவ்வாற்றுஞ் சகிக்கற்கரியதாயிருக்கின்றது. அன்றியு மானவர் காதையில் தேவர் செயலைக்கூறி அதைச் சிறக்கச் செய்வது மரபு. தேவர் காதையில் மானவர் செயலைக்கூறுதல் அக்காதைக் கிழிவன்றோ? அத்தகைய காவியத்தை யகில பரிபாலகராகிய அரசவைக்கண் கொண்டுவந்து பிரசங்கிப்பது அவர்களை யவமானஞ் செய்ததுபோலன்றோ? இவன் கோளகப் பார்ப்பானாகப் பிறந்து சூத்திரராற் பரிபாலிக்கப்பட்டுச் சன்மத்தினுஞ் சாதியினும் பிரஷ்டத்துவமடைந்தானாதலால், தான் செய்ய முயன்ற நால் மகா விதிகாசங்களுள் ஓர் பெருங்காவியமாயிருந்தும் அதிற் பெரியோர் பழிக்கத்தக்க பெரும்பிழையினைச் செய்திருக்கின்றான். அத்தகைய காவிய மெத்தகைய சிறப்பினதே யாயினும் அதனை நமதவைக்க ணரங்கேற்றலாகா. இவனுக் கித்தகைய வருத்தங்களுண்டாக எனக்கூறி, (கிழக்காதியவெட்டோடு கீழ்மேலுமாகிய பத்துத்திக்கும் பதறி வருந்தவும் பசியபொன் போன்ற பிரகாசத்துடன் நட்சத்திரங்க ளுதிரவும் பகிரண்டம் வரையிலோங்கியிருக்கு மந்தரமலையென்னு மத்தைக்கொண்டு திருப்பாற் கடலைக்கடைந்த திருமாலி னம்சமாய் உலகரசாட்சியைக் கைக்கொண்டு சகலவுயிர்களையும் பாதுகாக்கு மானபூஷணனே! முத்துப்பந்தரில் வீற்றிருக்குந் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும், கோபத்தையுடைய வேலாயுதத்தையேந்து முருகக்கடவுளினம்சபூதரான உருத்திரசன்மருக்கும், பொதியாசலத்தி லெழுந்தருளியிருக்கும் அகத்தியமுனிவருக்கும், சடாபாரத்தையுடைய சிவ[illegible]சாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும், தாமரைக்கம

லத்தில் வீற்றிருக்கும் பிரம வம்சராகிய திருவள்ளுவ நாயனு ருக்குமல்லாமல்; இந்தப் புன்கவிக்குக் குடையுங் காளமுமேன்?) என்னுங் கருத்தமைந்த,

> பத்துக்கொண்டனதிக்கும்பதயிப்போலையப்
> பைம்பொற்றாரகைசிந்தப்பகிரண்டத்திடைகீள்
> மத்துக்கொண்டுமதிக்குந்திரையாழிநெடுமால்
> வடிவாகிப்புவிகைக்கொண்டருண்மாணுபரனு
> முத்துப்பந்தரினிற்குங்குருளைக்குஞனவேன்
> முருகற்குப்பொதியக்கோமுனிவற்குஞ்சடிலக்
> கொத்தற்குப்பதுமக்கொத்தனுக்குமலதிக்
> கூழைக்கம்பன்றமிழ்க்கேன்குடையுங்காளமுமே.

என்னுமிச் செய்யுளைக் கூறினர்.

25. இவை யனைத்தையுங் கேட்டிருந்த குலோத்துங்க சோழராசனுக்குக் கம்பர்மேற் கோபமூண்டு, உடனே சிம்மா சனத்தை விட்டிறங்கிப் பத்தடிதூரங் கடந்தவரை யுதைக்கப் போயினன். அக்கால் கூத்தர்தடுக்க வரசன்மீண்டு தனதமைச் சரைக் கூவி, அவர் பெற்றிருக்கும் விருது முதலியவைகளைப் பதித்துத் துரத்திவிடக் கட்டளையிட்டனன். அம்மாத்திரத்தி லவர்கள் தன்னருகில் வருமுன் கம்பரானவர் தனது விருது களையு மாடையாபரணாதிகளையுங் கீழே வைத்துவிட்டு, அவ்வா சவைக்கெதிரே சிலதூரம் போய் நின்று,

> காதமிருப்பத்துநான்கொழியக்காசினியை
> யோதக்கடல்கொண்டொளித்ததோ—மேதினியிற்
> குல்லைமலர்த்தேன்சொரியுங்கொற்றவாநீமுனிந்தா
> லில்லையோவேறோரிடம்.

> மன்னவனீயேயோவளநாடெலாமுனதோ
> வுன்னையறிந்தோதமிழையோதினேன்—என்னை
> விரைந்தேற்றுக்கொள்ளாதவேந்துண்டோவுண்டோ
> குரங்கேற்றுக்கொள்ளாதகொம்பு.

26. அன்றையிலுஞாலமகன்றதோவல்லவென்று
குன்றெடுத்துநீ திருத்திக்கொண்டனையோ—யென்று
மடைந்தாரைக்காக்குமகளங்கா துங்கா
நடந்தாயேநாலாறடி.

என்ற வெண்பாக்களைப்பாடித் தூஷிக்கின்றார்.

27. அத்தூஷணைப் பாக்களைக்கேட்ட சிலவொற்றர் ரோடி வந்து அரசனுக் கறிவிக்கவும், அவனுடனே யவரைப் பிடித்து வருமாறு கட்டளையிடக் கூத்தர்தடுத்து, கம்பன் மிகநன்றாய்ப் படித்தவனாயினும் பாமரனேயன்றி வேறன்று. மேலுங் களி யாட்டவிற் கைதேர்ந்தவன். இல்லாவிட்டா லைம்பத்தாறுகாத தூர மாகிய பாண்டிநாட்டுக்கும் எண்பதின்காத தூரமாகிய சேரநாட் டுக்கும் இருபத்து நான்குகாத தூரமாகிய விச்சோழதேசம் இரா சதானியாயிருப்பதென் றறியாதவனோ? எங்கு நகரினு நாடே பெரிதாயிருக்குமென்பதை யுணராதவனோ? செங்குந்த வீரர்களா லாளப்பட்டுள்ள இருபதின்காத தூரமாகிய தொண்ட நாடும் ஏனைய பலநாடுகளு மெதனைத் தலைமையாகவுடையனவென்றுணரா ாதவனோ? ஏதோ நல்ல வித்வானாயிருந்துந் தனதெண்ண நிறை வேறப்பெறாம லவமானப்பட்டு வருந்தி வெறிபிடித்தவன்போலப் பல பிதற்றிக்கொண்டிருந்தால் அதையொரு பொருட்டாக நா மெண்ணுவதுந் தகுதியோ? அவன் பாடிய விதிகாசமோ நம்மு டைய வுத்தரவைக் கொண்டன்று. அதனை யாருடைய வேண்டு கோளாற்பாடி முடித்தானோ அவரிடத்தே தானே சென் றரங் கேற்றல் செய்து பிழைக்கட்டும்: நமக்கேன் அவனோடு வாது? எனக்கூறிச் சோழராசனுடைய கோபத்தைத் தணித்தனர். அம் மாத்திரத்தி லரசன் கோபந் தணிந்தவனாய்க் கூத்தரை நோக்கி, இதுகாறு மிராமகாதை தமிழ்ச் செய்யுட் காவியமா யெவராலுஞ் செய்யப்படாதிருந்து இப்போதிவனாற் செய்து முடித்தும் அஃது அசுத்தகாவியமாய் விட்டமையால் வேறே சுத்தகாவியமாயொன்று செய் [illegible]ங்கின் நம்போன்ற வைதிகர்கட்கெல்லாம் வாசிக்கவும் பூசிக்கவு முபயோகப்படுமென்று கூறினன். அதுகேட்ட கூத்த ரவ்வாறு செய்துவைக்கவேண்டிய தாவசியகமே "யெனக்கூறி ஓ

ரொற்றனை விளித்து; வெளியிற் பிதற்றிக்கொண்டுள்ள கம்பனை அப்பாற் படுத்துங்களென் றேவினவராய்த் தமக்குள் யாது கருதியோ எதிரி லுட்கார்ந்துகொண் டிருக்கும் புகழேந்திப் புலவரை நோக்கினர். அப்போதவர் முகமானது மிக வியசனத்தோடு வாடியிருப்பக்கண்டு அதைக் குலோத்துங்க சோழனுக்குக் குறிப்பாலுணர்த்தினர். அஃதுணர்ந்த சோழன் புகழேந்திப் புலவரை நோக்கி, ஐயா! இப்போதுமது முகம் வேறுபட்டிருப்பதற்குக் காரணமென்னை? அக்கம்பனென்னும் புலவன் இதிகாசங்கட்குள் சிரேஷ்டமான இராமாயணத்தில் இத்தகைய வக்கிரமத்தைச் செய்து வைத்ததைப்பற்றி யாங்களவனை யவமானப் படுத்தியதற்கு மனஸ்தாப முண்டோ வென்றனன். அதற்குப் புகழேந்தியார் சிறிது புன்மு[illegible]மவ்வரசனைப் பார்த்து, (ஓ மிகப்பெருத்த பார்த்திபர்களுடைய [illegible]முடிகளையெல்லாமுடைத்[illegible]துறகிடச் செய்யுங் கஜேந்திர [illegible]னே! நானோ சுபாவமாகவே பிலவிலக்கணக் கவிஞர்களால் [illegible]வாழைச் சோலைபுகும் பித்தனெனப் [illegible]ரெடுத்துளேன். இ[illegible]தகையவனுக்கு முகத்தின் வேறுபாடு ஒருவகை[illegible]ப்பட்டதோ?) என்[illegible]னுங் கருத்துவெளிப்பட

சத்தம்பயிலும்புல[illegible]ர்கதலித்தண்டோட்டப்புகும்
பித்தனிவனென்ப[illegible]னைக்கண்டாற்பெருத்தப்பனைத்து[illegible]
தத்தம்பிறகிடும்பார்வே[illegible]ர்தங்கட்டமகுட
சத்தபாரத்தந்காண்கஜ[illegible]யானைச்சயதுங்க[illegible]

என்றோர் கவிகூறி, ஓ அரசரேறே! அடியேன் பைத்தியக்கார னல்லாவிட்டால் நீங்களிருவரும் சென்ற தைப்பொங்கல் காலத்தில் உலாவருகையில் சிறைச்சாலையின் மேற்றலத்தில் நின்றுகொண்டிருந்த வென்னைப்பற்றி இக்கூத்தனுரைக்கக்கேட்டபோது இவரோர் பாடல்கூற, யானதற் கொன்றும் பேசாதிருந்தற் காற்றது என் பேதைமையாலதை யொட்டிப் பாடவோ வெட்டிப் பாடவோ வெனக்கேட்ப, அதற்குத் தேவரீ ரிவரோடு பலமுறை வெட்டிப்பாடியன்றோ இவ்வித விபத்துக் கிடமுண்டாயிற் றெனவும் இனியேனு மொட்டிப்பாடி யுறவுகொள்ளட்டுமெனவுமுன்னை ஒட்டியே பாடுமென்ற கருத்தைச் சிறிது மோராமல் அப்படி

யொட்டிப் பாடியதினும் வினைவசத்தால் விரோதத்தை யொட்டிப் பாடினேனே யல்லது; நீங்களிருவரு மென்னை மன்னித்து விழைந்துகொள்ளற் கானபடி,

மானேனிலாதந்தவாளரிவேங்கைமுன்வந்திசெய்த
கானேனிலாதவ்வெரியுந்தணன்முன்கனைகடலின்
மீனேனிலாதந்தவெங்கட்குருமுனமவீசுபனி
தானேனிலாதக்கதிர்முனிவேண்டிடிற்குர்மன்னனே.

என்றே னில்வாறு பாடியழக் கூடாது? அறுசுவையோடு கூடிய புசிப்புக்கு அட்டமிச் சனி சேர்ந்து அழுக்கரிசிச்சோறு மதற்கேற்ற வுப்பும் அடியேனுக்கென்று காத்துக்கொண் டிருக் கின்றனவே நானெப்படி பாடுவேன்? ஆதலாலிங்ஙன மக்கம்ப னென்னும் வம்பன் பாடிவந்த அக்காவிய வரங்கேற்றலுக் கிடங் கொடாது அவனைக்கடிந்து அவமானப்படுத்தியதைப்பற்றி எனக் யாதொரு மனஸ்தாபமு மில்லையென்று கூறினர். இவையனைத் தையுங்கேட்ட கூத்தரு லோத்துங்கசோழனை நோக்கி, அப்புல வன் மகா விதிகாசத்திற் செய்துவைத்தது அக்கிரமமோ கிரம மோ என்பதைப்பற்றி இவரை யாம் விசாரிக்கவேண்டுவதில்லை. இவருக்கிவர் மனச்சாக்ஷியே நன்கு விளக்கும். ஆயினும் சர்வ சங்க பரித்தியாகராகிய சந்நியாசிகளுக்குஞ் சாதியபிமானம் விடா தல்லவா? அதனா லப்புலவனை யவமானப்படுத்தித் துறத்தியதின் பொருட்டு மிக்கமனஸ்தாபமுண்டாயிருக்குமென்பதற்கையமில்லை இப்புவிசனங்க ளிடத்தில் துஷ்டசன நிக்கிரக சிஷ்டசன பரிபா லனஞ்செய்யும் புவிச்சக்ரவர்த்தியைப் போலக் கவிசனங்க ளிடத் திற் செய்யுங் கவிச்சக்ரவர்த்தி யானாதலால் எனது கடமைப்ப டிச் செய்து முடித்தேன். இனியென்னை யாரால் யாது செய்யக் கூடுமோ அதைச் செய்யட்டும் பார்த்துக் கொள்ளுவோமென்று கூறி முடித்தனர். முன்னர் வெளியிற் பிதற்றிக்கொண் டிருந்த கம்பரைத் தூரத்தும்படி கூத்தராலேவிய வொற்றன் தன்னிடத்து வருமுன் அக்கம்பரானவ ரவ்விடத்தினின்றும் பெயர்ந்து நேரே திருவெண்ணைநல்லூருக்குப் போகாமல் கட்டிய கோவணத்து டனே வெறுங்கையராய் அன்றிரா முழுவது மோரிடத்தி லன்ன

பாணுநிகட்கு வருந்தியிருந்து, பாண்டியராசன் தன்னைப் பகைத்தவனுடைய மாமனுதலானுஞ் சோராச னிவ்விருவர்க்கு மடங்கியானுதலானும் இவர்களால் நமக்குச் சன்மான முண்டாகாதென் றெண்ணினவராய் இரவிகன்று விடிந்தபின் அங்கோர் கிராமத்தில் வேலியென்னு மாதினால் ஓர் மண்சுவர் கட்டப்படுந் தோறும் அங்குள்ள பிரமராக்ஷசா லஃதிடிக்கப்பட்டு வருகின்றதெனக் கேள்வியுற்று அவ்விடத்திற்குச்சென் றவளைக்கண்டு, இனியச்சுவ ரிடியாவண்ணந் தான் கட்டி முடிப்பதாகச் சொல்லி அதற்குக்கூலி யென்னென்று கேட்டார். அவள் நாழி நெல் கொடுப்பே னென்றனள். அதற்கவ ரிசைந்து தனக்குள்ள பசி வருத்தத்தினால் இடிப்பொடியத்தக்க பிரயாசையோடு மண்ணெடுத்து அச்சுவரைக் கட்டி[illegible] பின்னரப் பெண்பாலிடத் திற் கூலி கேட்டு வாங்கத் திரும்பினார். அவர் திரும்பலும் வழக்கப்படி அச்சுவரான திடிந்துவிழத் த[illegible]ப்பட்டது. அதைநோக்கிய கம்பர் தன்னை முன்னர் வித்[illegible]தானஞ் செய்தாதரித்த பிரமராக்ஷதனைத் தியானித்து.

மற்கொண்ட திண்புயத் தான்மாநகர் விட்டிங்குவந்தேன்
சொற்கொண்ட பா[illegible]ன்சுவையறி வாரிங்கிலையே
விற்கொண்ட பிறைநுதலாள் வேலிதருங்கூலி
நெற்கொண்டு போமள[illegible]வில்லாய்நெடுஞ்சுவரே.

என்றோர் செய்யுளைக் கூறினர். அதுகேட்ட பிரமராக்ஷசு நம்போலொரு ராக்ஷச னிவனுதரிக்கப்பட்டவனென் றெண்ணி அச்சுவரை யென்றும் விழவொட்டாமற்செய் தகன்றது. உடனே கம்பர் வேலியென்பவளிடஞ் சென்று அவள் கொடுப்பதாகச் சொன்ன கூலி நெல்லைப் பெற்று அந்நெல்லைப் புசிப்புக் காக வேண்டுவனவற்றை வாங்கிச் சமைத்துப் புசித்து, அன்றிரவு நீங்கி விடிந்தபி னதற்கப்பால் நெடுந்தூரம் போய்ப் பசியுந்தாகமு மேலிட்டதினால் ஓர் செட்டி வீட்டினுஞ் செக்கான் வீட்டினு நுழைந்து அவனும் பிண்ணாக்கும் யாசித்தார். அவர்க ளவற் றைத் தாராது துரத்தவும் பின்னரோ ரந்தணன் வீட்டில் நுழைந்

ந்த... ...ற்குத் தண்ணீர் தரும்படி வேண்டினர். அவரு மது தராமற் போ போ வென்று துரத்தலும் பசியுந் தாகமுஞ் சகிக்கக்கூடாமையால் மிகவிளைப்புடனே வெயிலி லலுத்துப்போய் ஓர் மரநிழலிற் சேர்ந்து படுத்து, அவ்விடத்தி லேருழவோர் வேளாளனுக்குப் பழையதுவர அதைப்பார்த் தவன்சாப்பிடப்போகுஞ் சமயத்தில் அருகிற்சென்று, தான் தாகத்தாலும் பசியாலு மெலிந்து பார்ப்பார் வீட்டிலுஞ் செட்டிகளிடத்திலு மிரந்து தண்ணீருங்கிடையா தலைந்ததைக்கூறிக் கைநீட்டி நின்றார். அவ்வேளாளன் "ஐயமிட்டுண்" என்னு மான்றோர் வாக்கியத்தை யோசித்தவனுக்குத் தனக்குவந்த அப்பழையதி லொருக்கும் பாதிகொடுத்தன்பிக்கவும் உடனே பசியு மிளைப்புந் தீர்ந்து மகிழ்ந்தவராய்,

> செட்டிமக்கள்வாசல்வழிச்செல்லோமேசெக்காரப்
> போட்டிமக்கள்வாசல்வழிப்போகோமே—முட்டபுகும்
> பார்ப்பாரகத்தையெட்டிப்பாரோமேயென்னாளும்
> காப்பாரிக்காராளர்காண்.

என்றுமோர் வெண்பாவை யவ்வேளாளனை கவிக்கும்படிக்குப் பாடி, அவனு மிரண்டு வெள்ளைமுண்டு தரப்பெற்று இடையிலொன்றுந் தலையிலொன்றுங் கட்டிக்கொண்டு,

> மேழிபிடிக்குங்கைவேல்வேந்தர்நோக்குங்கை
> யாழிதரித்தேயருளுங்கை—சூழ்வினையை
> நீக்குங்கையென்று நிலைக்குங்கைநீடூழி
> காக்குங்கைகாராளர்கை.

என மற்றொரு வெண்பாப்பாடி மகிழ்வித்து விடைபெற்றுச் சென்று, அன்றிரவைப் பட்டினியாற் கழித்து விடிந்தபின் வேறோரூரை நோக்கி நடக்கின்றார். இவ்வாறவர் நடக்கு மார்க்கத்திலவரை முன்னறிந்துள்ள சிலம்பியென்னும் பெயரினையுடையவோர் தாசிகண்டு, இவர் பிரமாசக்தியின் கிருபையினாற் கவிபாடமிகச் சமர்த்தராயிரு நல்லவரென நிதானித் துணர்ந்து தன்னை வாழ்த்துதலாக வோர்பாட்டுப் பாடும்படி வேண்டினள். அதுகேட்டதுங் கம்பரத் தாசியினிடத்தில் திரவிய மிகுதியா யிருக்கு

மென்று கருதி, நீ கேட்டபடி பத்துப்பொன்றரின் வருமோ வென்றார். அப்பொழுதத் தாசி தன்னிடத் துள தாயிருந்த ஐந்துபொன்னைக் கொண்டுவந்து கொடுத்து, இவ்வளவே தற் கால மென்னிடத் துள்ளதென்று கூறினள். அதுகேட்ட கம்பர்,

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழமண்டலமே -

எனப்பாதி வெண்பாவை யவள்வீட்டுத் தெருவாயிலின்மேற் சுவரிற் கரியாலெழுதி, நீகொடுத்த வைந்துபொன்னுக் கிதுவே யெழுதினேனென்று சொல்லிவிட்டு அப்பாலோர் பக்கலிற்போய் அவள் தந்த பொன்னால் உணவுக் காகவேண்டியவை வற்றைச்சேக ரித்துச் சமைத்துப் புசித்து, அவ்வத் தாசி கடைதுபாடலின்மேற் கொண்டுள்ள விழைவால் மற்றப் பொன்னையுஞ் சம்பாதித்துக் கொணர்ந்து நமதெழுதிவைத்த பாதியைப் பூர்த்திசெய்துக்கொள் ளவு மென்றுமெனக் கருதினவராய் அவள் வீட்டிற் கருகிலேயே ஓர் மாடியிற் படுத்து நித்திரை செய்திருந்தனர். அப்பொழுது தவ வீதிமார்க்கமாக நடந்து சென்ற வித்வசிரோமணியாகிய ஔவை யார் பசிமேலிட்டவராய் அந்தத் தாசி வீடுசென்று தெருத்தின் ணைமீ துட்கார்ந்து, அவளாற் றமது பசிதீரக் கூழளிக்கப்பெற் றுத் திருப்தியடைந்து இளைப்பாறிட்டனர். அப்பொழுது தவ்வாயி லின் மேற்சுவரி லெழுதியுள்ள அவ்வரைக் கவியைப் பார்த்து, அத்தாசியா லதன்காரணத்தை யுணர்ந்து "ஏழையாளுக்குக் கருணை யேது" எனக்கூறி,

-பெண்ணாவா
ளம்பொற்சிலம்பியரவிந்தத்தாளணியுஞ்
செம்பொற்சிலம்பேசிலம்பு.

என மற்றப்பாதியையு மவ்வரைக்கவியி னடியிலெழுதி முடி த்து அவளைச் சந்தோஷிப்பித்து விடைபெற்றுச் சென்றனர்.

௨௨. இதன் பின்னர் நித்திரை தெளிந்தெழுந்த தனதெ ண்ண நிறைவேறப்பெறாது நடக்கலுற்ற கம்பர் தானெழுதிய

ளரைக்கவி முழுக்கவியா யிருப்பக்கண் டதிசயித்து, அங்கிருந்த
கிலரா லதுமுடிந்த விதந் தெரிந்துகொண்டு விரைந்து சென்று
அவ்வழியி லவ்வம்மையார் செல்லக் கண்டவராய் இவளாணவ
த்தை யடியெனக்கூறி யடக்கவேண்டுமெனத் தனக்குள் யோசி
த்து அவருகிற்போய் "ஒருகாலில்நாலிலைப்பந்தரடி," எனவவ்
வழியிலுள்ள வயலோரத்தில் முளைத்திருக்கு மாரைக் கீரையைச்
சுட்டி அதன்பொருளைக் கேட்பதுபோற் கூறினர். அதுகேட்
டது மௌவையார் மிகச்சினந்து, இவ்வற்பனுக் கிவ்வளவு கருவ
மாவென் றெண்ணினவராகி,

எட்டேகாலட்சணமேயெமனேறும்பரியே
மட்டில்பெரியம்மைவாகனமே—முட்டமேற்
கூரையில்லாவீடேகுலராமன்றூதுவனே
யாரையடாசொன்னாயது.

என்றோர் வெண்பாவைக்கூறி யப்பால் நடந்தனர், அதனைக்
கேட்ட கம்பர் சகிக்கமுடியாத வெட்கத்தையும் வியசனத்தையு
மடைந்து, ஐயோ! நம்போன்ற வித்வான்கள் நல்ல சுகத்திலிரு
க்க நாமித்தகைய துக்கத்தை யனுபவிக்க லாயிற்றே யென்று
வருந்தி, இவ்வுலகத்தி லெவ்வித வுயர்வு தாழ்வுள்ள சர்வான்மாக்
களுக்கும் வினைப் வியசன மொருதன்மைத்தேயன்றி அந்தஸ்தி
ற்குத் தக்கபடி உயர்வு தாழ் வில்லையென் னுங் கருத்தையமைத்து,

பாலுக்குச்சர்க்கரையில்லையென்பார்க்கும்பருக்கையற்ற
கூழுக்குப்போடவுப்பில்லையென்பார்க்குமுட்குத்தித்தைத்த
காலுக்குத்தோற்செருப்பில்லையென்பார்க்குங்கனகதண்டி
மேலுக்குப்பஞ்சணையில்லையென்பார்க்கும்வியசனமொன்றே

என்னுங் கவியைப்பாடி யொருவாறு தேறினவராய் அண்
டிப்பிழைக்கு மிடமும் வேறுகாணாதவராய் மலைநாட்டை நோக்
கிப் போகின்றார். இவ்வா றவர் போகுமார்க்கத்தில் அன்றிர
வைக் கழித்து மறுநாள் சூரியோதயமாக வெழுந்து கல்மயமான
காடுகளில் நடந்து, சூரிய னத்தமிக்கும் வரையில் வழியிலோர

சிற்றுரேனுங் காணக்கிடையாது வருந்தினவராய் இராப்போது நெருங்கியபின் கொங்குவேளாளர் வசிக்கு நாலைந்து குடிசைக ளுள்ள ஓர் சிறு நகரத்தைக்கண்டு மகிழ்ந்து, அதிலோர் குடிசை யுட்சென்று தான் நாள் முழுதும் பட்டினி காத்ததைக் கூறிப் போசனமிடும்படி வேண்டினர். அக்குடிசைக்காரனாகிய செல்ல னென்னுமோர் கொங்கு வேளாளன் மனைவி தன்னிடஞ் சமை த்து வைத்திருந்த கம்பஞ் சோற்றினைக் கொண்டுவந்து தர, அதைத் தாமென்றும் பார்த்திராதவராதலால் என் செய்வர் பா வம்! அவளை யுறவிறங்கப் பார்த்து நெற்சோறன்றி இத்தகைய சோற்றினை நாமொரு போதும் புசித்ததில்லையே யென்றனர். அதைக்கேட்டவப் பெண்மணியானவள் மனதிரங்கி, அங்குள்ள குடிசைகடோறும் போய் விசாரித்தும் அந்நெற்சோறு கிடைக் கப் பெறாதவளாய் வந்து தன்னிடத்துள்ள கம்பஞ் சோற்றி னையே தர, அதையே யவர் தக்க வனுபானங்களால் தேவாமுத மாயெண்ணிப் புசித்துப் பசிதீர்ந்து இனி யிதுதான் கதியென நினைத்தவராய்,

கல்லங்காடுதனில்விளையாக்கடியநிலத்திற்றுஞ்சுமுனையா
வல்லக்கிருந்தகருங்கூந்தலணங்குக்கணங்குபோலாவாள்
செல்லன்றேவிமனைகடோறுந்தேடித்திரிந்துங்காணாது
நெல்லஞ்சோறேகம்பஞ்சோற்றினைநீகமர்ந்துதிரிவாயே.

என்றோர் பாடல் பாடிக்கொண்டு சில தூரம் போய் ஓர் சாவடியைக்கண் டதிற்படுத்திருந்து, அவ்விரவு கழிந்து விடிந்தபி னெழுந்து பல காடுகளையுந் தாண்டி சேரதேயத்திற்குச் சென்று, அச்சேரதேயத் திராஜனிடஞ் செல்லாமல் அங்கு குடிமக்களா யுள்ள கொங்கு வேளாளரையும் வன்னியரையுஞ் சிநேகித்து, அம்மரபினர்பொருட்டுத் தான் புகழ்ந்து பாடிய ஏரெழுபதை யுஞ் சிலையெழுபதையும் படித்துப் பிரசங்கித்தும் சிலகாலவ்வகை யிற் பிழைப்புற்றிருந்தனர். இப்படி யிருக்குங்காலையில் சேரராஜ னுடைய தந்தைக்குச் சிரார்த்தநாள் நேரிட, அன்னாளில்வ வந் தண ராதலர் வித்வசனர் பெரியோர் முதலியவர்கட்கெல்லாம்

பலவகைத் தானங்கள் செய்கின்றனனெனக் கேள்வியுற்ற வக்கம்பர் நாமும் பலபேரு ளொருவனாகப்போய் ஏதேனு[illegible] கிடைத்த மட்டிற் பெற்றுவருவோமெனக் கருதிச்சென்று அங்குவந்துள்ள வித்வசன கூட்டத்துட் கலந்து காத்திருந்தார். அரசன் [illegible]ர்த்த காரியங்களனைத்தையு முடித்து அந்தணர் முதலிய யாவர்க்கு முறைமைப்படித் தானங்கள் செய்தபின் வித்வசனர்களை வரவழைத்து, அவருட் சில ரொவ்வோர் பிரபந்தங்களைப் பாடிக் கொண்டுஞ் சிலர் தனிப்பாக்கள் செய்துகொண்டும் பின்னுஞ்சில ரேதும் பாடாது வாயற்றுநின்று நிற்போமென்றும் வந்து கூடி யிருப்பதைக் கண்டு, அவருள் முதலிருவர்க்குந் தக்கபடி பரிசு ளுதவி மற்றையரைச் சில வினாக்கள்கேட்டு அவ்வினாக்களுக்கு விடையளித்தபின் அவ்வவர்கட்குத் தக்கபடி பரிசுகொடுத்தனுப்புகிறான். அப்பேர் தவர்கட்கு மத்தியில் நின்றுகொண் டிருந்த கம்பரிடத்திலு மரசன்வந்து, இவ்வுலகில் நிகரில்லாத நான்கு பொருள்களை ஓர் செய்யுளி லமைத்துப் பாடுமென்று கூறினன். அதுகேட்ட கம்பர்,

கங்கைநீர்தனின்மிக்ககடவுணீரெங்குமில்லை
யங்கணின்னொளியின்மிக்கவவிரொளியெங்குமில்லை
மங்கையர்சுகத்தின்மிக்கமாண்சுகமெங்குமில்லை
லிங்கனைபுறவின்மிக்கவெதெங்குமேயில்லைமன்னா.

என்று கூறிக் கைகூப்பி நின்றார். அப்பொழுதோர் மூலையின்கண் முட்டாக்கிட் டுட்கார்ந்திருந்த ஔவையா ரப்பாட்டினைக்கேட்டு, இக்கம்ப னருமையாகப்பாடிய வப்பாடலின் கருத்தை யழிக்க வேண்டுமெனக் கருதினவராய் அச்சோராசன் [illegible]க்கும்படி யுத்தர சத்தமாய் அக்கம்பர் கூறிய நான்கு பொருள்க[illegible] பதிலாக,

கங்கைநீர்தா[illegible]ண்டாங்கருமுகில்பொழியாதாகி
லங்கணு[illegible]ரொளியுண்டாமருக்கன்மேலொளிராணுகில்
மங்கையர்சுகமெங்குண்டாமா னுணவருந்தானாகி
லிங்கனைபுறமெவங்குண்டாமிருந்தனமிலார்க்குமன்னா.

எனக்கூறினர். அரச னதுகேட்டு மகிழ்ந்து உடனே,தனது பரிசனரை யழைத்து அவ்வம்மைக்கு வேண்டுவன கேட்டுக் கொடுமின்க ளெனக்கூறி அப்பாற் போயினன். அது கண்ட கம்பர் [illegible]வெட்கி வருந்தி, அந்தோ! நமக்குப் பரிசளியா விடினும் பாசனைக்க ளவமான நேரிட்டதே: நமக்கு இராசருக்கும் பொருத்தமில்லை போலும். "இங்காதம்பேறனுக்குத் தன்பாவத்தன்னோடே" என்னும் பழமொழி நமக்கே பலித்ததென்று கருதி மீண்டனர். அப்பாலவர் சேரநாட்டிலேயே பல [illegible] களிற் சென்று அங்காங்குள்ள பல குடிமக்க ளுடன் [illegible]ம் கழித்திருக்குங்கால், ஓரூரில் தேவாலயத் [illegible] நடக்கப்போகிறதாகவும் அவ்வூரார் தன் முன்னிலையில் [illegible] நடக்கவேண்டுமென்னவும் கேள்வியுற்று அங்ஙனஞ் சென்றிருந்து, அத்திருவிழாவின் நாள்கள் கழிந்து மாய்விட்டபின் அவ்வூரை விட்டு இருகையில் சூரியன் அஸ்தமித்து எங்கும் அந்தகாரமாய் விடவும் வழிநடக்க அஞ்சினவராய்ச் சமீபத்திலோர் சத்திர மிருப்பக் கண்டு, இச்சத்திரத்தி லிவ்விரவைக் கழிக்கலாமென்று உள்ளிச் சென்றவர் தனியே யிருக்கவும் படுக்கவு மாட்டாதவராய் அதிலோர்பால் பெண்மரு மாடவரும் வேறு வேறாகப் படுத்து நித்திரைசெய்யுமிடத்திற்குப்போய், இருளாகையா லவர்கள் வேறுபாட்டை யறியாதவராய்ப் பெண்டிர் படுத்திருக்கு மிடத்திற் சென்று சயனித்துக் கொண்டனர். அதை யப்பெண்மருட் சிலருணர்ந்து இவன் சோரனோ சோரனோவென வையுற்றுப் பேருங்கூச்சலிட, அதுகேட்டு மற்றைப் பெண்மரு மாடவருந் துயில்கலைந்தெழுந்து அச்சத்திரக் காவலாளர்க் குணர்த்த, அவர்களவரைச் சுற்று இரக்கமின்றி யடித்துப் பிடித்துக்கொண்டு போய்ச் சோராசனுக்குப் பந்துவாகிய தண்டத்தலைவன் முன் விடுக்க, அவனவரைக் கடுஞ்சினத்துடனுருத்து நோக்கிப் பெண்டிர்படுத்து நித்திரை செய்யுமிடத்தே தென் சென்றனை யென்று வினவ, அதற்கு விடைதரா தனக் கொன்றுந் தோன்றாதவராய் நடுங்கி விழிகளில் நீர்ததும்ப அத் தண்டத் தலைவனைப் பார்த்து,

தேரையார்செவ்விளநீருண்ணப்பழிசுமப்பர்
நாரியார்தாமறிவார்காமவரைநத்தாமை.

கோரைவாய்ப்பொன்சொரியுங்கொல்லிமலைநக்காடு
வூரைவாய்மூடவுல்லூழுடிதானில்லையே;

எனவோர் கவிகூறி யழுதனர். அதுகேட்ட வத[illegible]ண்டத் தலைவன், கல்வியில் வல்லோ னாதலால் சற்றுள மிரங்கி, இவ[illegible]ரா லோர்வித்வா னெனவும் அச்சத்திரத்தி லிருட்காலத்துத் தனியே யிருக்க வஞ்சி ஆடவர் பெண்டீ ரென்னும் வேறுபா டறியாதவ [illegible]ம்பா யிருத்தலைக்கண்[illegible]டுத்திருப்பனெனவும் அப் பெண்டீ ரி[illegible]து வினை சக்[illegible]கங்கொண்டு காவற்காரர் வச மொப்புவித்தன [illegible] நிச்சயஞ் செய்துகொண்டு அவனை விடுதலை செய்[illegible].

௨௰. உடனேயவர் சர்ப்பத்தின் வாயி னின்றுந் தப்பிய தவளைபோலக் கலக்க மொழிந்தவராய்க் கடுகி நடந்து, இனியிச் சேரநாட்டி லிருக்க வொண்ணாதெனச் சிந்தித்தவராய்,

சேரலாஞ்சேற்றுநாற்றநிலமெலாங்கல்லுமுள்ளு
மூரெலாம்பட்டித்தொட்டியுண்பதோகம்பஞ்சோறு
பேரெலாச்பொம்மன்திம்மன்பெண்களோநாயுமபேயுங்
காருலாங்[illegible]ட்டைக்கணவிலுமினைக்கொணாதே.

என்றோர் பாடலைப்பாடித் தொண்டநாட்டை நோக்கிச்செல் கின்றார். இவ்வாறவர் செல்லும்போது நமிண்டி யென்னுமோர் குப்பத்தில் சேரநா[illegible]ட்டரசன் பரிசனர் வீட்டுக் காவற்காரராய்க் கையில் வில்லுமம்பு மேந்தியுள்ள சில பள்ளிக ளென்னும் வன் னியர்கள் வழியி லோரிடத்தில் கம்புக் கதிர்களை யறுத்து அவற் றைநிமிண்டியு மூதியுந் தின்றுகொண்டு ஒன்றுசேர்ந்திருக்கப்பார் த்[illegible] ஐயமீர்! நானோர் வித்வான். தொண்டநாட்டுக்குப் போ கின்றேன். அங்கு போங்காறு மெனக்குத் தங்களாலியன்ற பொ ன்னேனும்பொருளேனு முதவுவீராயின், அதனை யுணவுக்காதார மாக்கிக்கொள்ளுவேனென்று வேண்டினர். அதுகேட்ட வப்பள் ளிகள் எங்கட்குப் பொன்னும் பொருளு மிக்கம்பே யாதலின், நீரெங்களைச் சிறப்பித்துப் பாடுவீராயின் இதனையங்குபோங்காறு

ருமக்குதவுவதாக வளிப்போமென்றார்கள். அதற்கவ ருடன்படலும் ஒர் கோணிகையில் போதுமான கம்பளந்து பெய்து கட்டியவர்முன் கொணர்ந்து வைத்தார்கள். அதுகண்டகம்பர் மகிழ்ந்து, இவர்கள் கல்வியறிவில்லாக் கவுண்டர்தாமேயென மதித்து,

குண்டியும்பண்ணையுங்கூடமூளைக்கின்றுகொல்லைக்கப்பை
பிண்டியுவீதியுந்தின்னைவல்லோரிந்தரணிலத்திற்
றகிண்டிபங்காய்த்தன்னைமொட்டையப்பாலெய்யுங்குரக்கன்
கிண்டியிற்பள்ளிகளத்தனைபேர்களுநல்லவரே.

என்றோர் கவியை இழிவுச் [illegible]ப்பாய்ப் பாடினர். அது கேட்ட வல்வேளைப் பள்ளிகள் நம்மை[illegible] சூரரென்றும் நல்லவரென்றுஞ் சிறப்பித்தாரே அதுவே போதுமென மகிழ்ந்து கொண்டாடிக்கொண் டிருக்கக் கம்பரக் கம்பு மூட்டையை யெடுத்துத் தலைமேற் சுமந்துசென்று, அந்த விரண்டுவேளையும் அக்கம்பைப் பொங்கிப் புசித்துக்கொண்டு மலைநாடனைத்துங் கடந்து தொண்ட நாடடைந்தனர். அத்தொண்ட நாட்டின்க ணுள்ளோர் யாருஞ்சகல கலைகளினுந் தேர்ந்தவர்களாய் அடக்கம் - சத்தியம் - இரக்கம் - பொறுமை - ஈகை - நடுநிலை - உபகாரமுதலான புண்ணியச்செயல்களைக் கைப்பற்றிக் களவு - பொய் - வஞ்சம் - பொறாமை - புறங்கூறல் முதலான பாபச்செயல்களைக் கைவிட்டிருப்பதைப் பார்த்து மிகமகிழ்ந்து, அங்கு மாவடித் தேவசிங்காதனத்தில் வீற்றிருந்து குடிமாக்களுடைய குறைபாடுகளையுமுறைபாடுகளையுங் கேட்டு விசாரணைசெய்து அவர்களையெல்லாமநுநீதிமுறைப்படி அறக்கருணையாலு மறக்கருணையாலு மாதரித்து வருஞ் செங்குந்த மன்னர்களைக் கண்டு,

வெற்றியுனைதாதகிக்கும்வேம்புக்கும்பெண்ணைக்குஞ்
சுற்றும்பெருநிழலாய்த்தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந்தொண்டைசெழுநாடுதாங்கு
மறந்தாங்கரத்தவரசு.

என்றோர் கவி கூறினர்.

30. அதுகேட்டவச் செங்குந்த மன்னர்கள் இவன் யாரோ சிறந்த வித்வானென மதித்து அவருடைய வரலாறனைத்துங் கேட்டறிந்து, இவன் சாதை யெவ்வாறாயினு மாகுக கல்வி கற்றோரைக் காத்தளிப்பதொன்றே நமது கடமையென வெண்ணினவர்களாய் அவரைப் பரிவுடன் பார்த்து, உமக்கு நற்கால[illegible] வருமளவும் நமது நாட்டிற்றானே தங்கியிருமென்று கூறிச் சிலகாரியப்பேர்களால் அவரை யாதரித்து வரச் செய்தார்கள். இவ்வா[illegible]ண்ட நாட்டுச் செங்குந்தப் பிரபுக்களாற் கம்பரானவராதரிக்கப்பட[illegible]ருங்கால் ஓர்நா[illegible]ர் செங்குந்த குலதிலக ரவரை நோக்கி, அகப்[illegible]ரு[illegible]றை [illegible]ன்றில் சோழரா[illegible]னைப் பாட்டுடைத் தலைவனுக்கி [illegible]ண்ட நாட்டினரைச் சிறப்பித்துப் [illegible]மென்றனர். அதற்குக் கம்பர்,

நையும்படியேநாங்கொற்றநங்கோன்சென்னிவரைமீதே
யையம்பெறுநுண்ணிடைமடவாயகிலின்றூபமுகிலன்று
பெய்யுந்துளியோமழையன்றுபிரசந்துளியேயிமையாது
வையம்பெறினும்பொய்யுரைக்கமாட்டார்தொண்டநாட்டாரே.

என்றோர்கவி கார்காலக்கண்டு மயங்கிய தலைவிக்குத்தோழி கூறியதாக வெடுத்துத் தொண்டநாட்டினரைச் சிறப்பித்து முடித்தனர். இப்படியந் நாட்டின்கணுள்ள செங்குந்தப் பிரமுகாளொவ்வொருவரும் ஒவ்வொருகா லொவ்வொரு விடயங்களைக் கூறிப் பாடுமென்ன, அவைகளை யவர் சற்று மிடையாது பாடி அவர்களைச் சந்தோஷிப்பித்துக்கொண்டு ஜீவித்து வருகின்றார். இவ்வாறக் கம்பர் சய லிங்கனந் துன்பமனைத்துந் தீர்ந்து துயரமற்றிருப்ப, அந்நனங் குலோத்துங்க சோழமகாராசனுடைய கொலுமண்டபக் காவற்காரர்களிற் சிலர் ஒருநாள்விட் டொருநாள் படுக்கை முறைகொண் டிருப்பார்கள், அவ்வா றிருப்பவர்களுள் ஒரு காவற்கார னவ்வூரிலே யுள்ள காவிரியாற்றுக்குக் கீழ்க்கரை வீதியி லிருந்தான். அவன்மனைவி யவ்வாற்றுக்கு மேற்கரையிற் குடியுள்ள ஓர் சோரநாயகனிடந் தன் கணவன் வீட்டுப்படுக்கை யில்லாதகாலங்களிற் போய்ச் சுகித்து வருவாள். இப்படி நிகழுங்கா லக்காவற்காரன் தன்னுடைய வெளிப்படுக்கை

நாளொன்றில் இராப்போசனங் கையிலெடுத்துக்கொண்டு தன் தொழிலை நாடிச் சென்றான், உடனே யவன் மனைவி தன் சோரநாயகனுக்குச் சில பலகார வகைகள் செய்துகொண்டு அவனிடம் போய்ச் சுகித்துவர இரவை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். இவ்வா றவளிருக்கும்போது இன்றைக்கு வெளிப்படுக்கையன்று சொல்லிப் போன தன் கணவன் சில நாழிகைப்பின் வயிற்றுவலிகண்டு அங்ஙன மிருத்தல் சகிக்க மாட்டாதவனாய் அந்திவேளையில் வீட்டுக்குவர, அதுகண்ட மனைவியானவள் தான் வெளியிற் போதற்குத் தடையாயிற்றே யென்று தனக்குள் வருந்தி வெளியி லவ்வருத்தந் தோன்றாதபடி அவனுக்குப் பலவுபசாரங்கள் செய்து, ஒரு சாமநேரம் வரையில் மெய்ம்மறந்து நித்திரை செய்வீராயின் வயிற்றுவலி யடங்கிப் போமென்று கூறி அவனையோர் பாயலிற் படுக்கவைத்து விரைவி லவன் நித்திரை கொள்ளுமாறு அவனுடலை மெல்ல மெல்லப் பிடித்துக்கொண் டிருந்தாள். அவ னப்பொழுது சற்றுறக்கங் கொண்டதை யவளறிந்து, இதுவே நாம் வெளி தாண்டுவதற்குத் தருணமென்று அவனுடலைப் பிடித்துக்கொண்டிருந்த தனது கரத்தை மெல்ல நீக்கிச் சற்றகன்றனள். அப்போ தவன் பூராவாய் நித்திரை பிடியாதவனாய்ப் புரண்டு விழித்துப் பார்த்து மனைவியைக் கூவினன். அதுகேட்ட மனைவி ஈதென்ன சனியனென் றலுத்தோடி மலவிசர்ஜனத்திற்குப் போய்வருகிறேனென்று கூறினள். அவனதைக் கேட்டது மிது நள்ளிருட் போதாகையால் நீ தனியே போக வேண்டாம் நானும் வருகிறேனென்று கூறி, மெல்ல வெழுந்தழைத்துக்கொண்டு தெருவாயற் கதவைத் திறந்து தானத்தெருத்திண்ணையி லிருந்துகொண்டு அவளையங் கெதிரிலிருக்கு மரத்தின்கீ ழுட்காரும்படி யனுப்பினன். அப்பொழுது குலோத்துங்கச்சோழராஜன் தானெவ்வா றிரவிற் றனியே நகரி சோதனையின் பொருட்டு வேற்றுக் கோலத்தோடுஞ் செல்வதுபோல, அவ்விரவி லவ்வீதியின் வழியாய்ச் சிறிது தூரத்தில் வருகிறான். அத்தருணத்தில் முன்னர் புருடனா லனுப்பப்பட்டவள் அம்மரத்தின் கீழ்ப் போதலும் அம்மரத்தி லொதுங்கியிருந்த காகங்களஞ்சினவாய் "கத்" என்றொலித்துப் பயந்து வேறோர் மரத்தை

நோக்கிச் சென்றனள். உடனே யக்காகவொலிக் கபடமாது பயந்தவள்போல அப்பாவென் றலறி யோடிப் புருடனைக் கட்டியணைத்துக்கொண்டாள். அப்புருட னவளைத் தேற்றி மீளப் போகும்படிக் குத்தரவுசெய்தான். அவளுக் குண்மையாய் மனோபாதையில்லாமையால் சற்றேற பொறுத்துப் போகின்றேன், அதுகாறு நீர் நித்திரை செய்யுமென்று படுக்கச்செய்து தானு மவனருகிற் படுத்துக்கொண்டாள்.

இப்பால் புருடன் சரியான நித்திரைகொண் டுறங்கலும், அதுகண்ட மனைவி மெல்லவெழுந்து தான் செய்து வைத்துள்ள பண்டங்களை யெடுத்துக் கொண்டு வழக்கம்போல் புறக்கடைவாயிற் கதவைத் திறந்துகொண்டு சோரநாயகனிடம் போகின்றாள். அக்கால் முன்னர் தெருவழியாக நகரி சோதனை செய்துவந்த காவலன் காகவொலியினாற் கண்ட காட்சிக்கு வியந்தவனாய் அத்தெருவைக்கடந் ததன் பின்புறவழியாகத் திரும்பிவருகின்றவன் அதேவீட்டுப் புறக்கடை வழியாய் ஓர் பெண்பிள்ளை போவதைக் கண்டு, உடை நடை யுருக்களி லவளேயெனத் தனக்குள் நிச்சயித்துக் கொண்டு ஓர் மரத்தின் மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்தனன். அவளங் கடுத்துள்ள காவேரியாறு மேல்வெள்ளங்கொண் டிருப்பதைக் கண்டு பக்கலிலுள்ள மயானத்தின்க ணெரிந்துகொண்டிருக்கும் ஓர் பிணத்தைக் கால்பிடித்திழுத்துவந்து வெள்ளத்திலிட்டு அதைக்கட்டுமரம்போ லணைந்துகொண்டு போய் அவ்வாற்றைக்கடந்து, அப்பிணத்தைக் கரையின்க ணிருத்தித் தனது சோரநாயகனிடஞ் சென்று கால நீட்டித்ததற் கவன்கொண்டிருந்த கோபத்தைக் காரணங்கூறித் தணித்து அவனுக் கின்பநலத்தை யளித்துப் பின்னரவன்பால் விடைபெற்றவளாய் மீண்டு காவேரியாற்றங் கரைக்கண்வந்து, அங்கு விடுத்திருந்த பிணத்தை முன்போலப் புணையாக்கிக்கொண் டவ்வாற்றில் வருகின்றாள். இவ்வாறவள் வருகையி லோர் முதலையானது அவள் பாதத்தைக் கவ்வியிழுக்க, அதனையவள் மற்றொரு பாதத்தினால் அதிலணிந்துள்ள வெள்ளிகொலுசு அதன் கன்னத்திற்பட வுதைத்துத் தள்ளிக் கரையேறி வந்து பிணத்தையேதாய்

பிரகார மயானத்தி லெறிந்துசென்று தன் வீட்டினை யடைந்து, முன்போலவே புருடனருகிற்போய் சயனித்துக் கொண்டனள். இவை யனைத்தையு மோர் மரத்தின் மறைவிலிருந்து பார்த்த குலோத்துங்கச் சோழராசன் உடனே தனதரண்மனைக்கேகிச் சயனித்திருந்து மறுநாட் காலையிலெழுந்து நித்திய கிருமங்களை முடித்துக்கொண்டு சபாமண்டபத்தின்கண் வந்து, அமைச்சராதிய பரிசனர்களும் புகழேந்தி முதலிய புலவர்களும் ஏனைய பிரபுக்களும் பெரியோர்களும் புடை சூழ்ந்திருக்க மகா சம்பிரமத்துடனே கொலுவீற்றிருந்து, "இவ்வுலகில் காகங் கற்றெனப்பயந்து கணவனை அப்பா வென்றோடிக் கட்டிக்கொள்ளுங்காரிகை யெத்தகையள்?" இதைப்பற்றியோர் கண்டசித்தி யாரேனும் பாடுமினென்று அங்குவந்துள்ள வித்வ சிரோமணிகளுக் குத்தரவுசெய்தனன். அதுகேட்ட புகழேந்தி முதலிய புலவர்கள் யாரும் ஒன்றுந் தோன்றாதவர்களா யொருவரை யொருவர் முகம் பார்த்திருந்தனர், அச்சமயத்தி லரசனுக்கு முன்னேயேகொலுச் சபைக்கண் வந்திருக்கினும் அங்ஙனமோர் சார்பிலுள்ள மந்திராலோசனைத் தலத்தின்கணிருந்து அரசன் கொலுவுக்கு வந்த பின்னர் தாம் வருமுறைப்படி கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் வந்து அவ்வரசன் சமீபத்துள்ள தமதாசனத்திருந்தனர். அப்போதக் குலோத்துங்க சோழராச னவரைப் பார்த்து, தானோர் கண்டசித்திபாடும்படி கவீச்சுரர்களைக் கேட்டதும் அதற்கவர்க ளொன்றும்பேசாது ஒருவரை யொருவர் முகம் பார்த்திருப்பதுங் கூறினன். அதுகேட்ட புலவர் பெருமா னவ்வரசனை நோக்கி,

> கரண்டகண்டத்தொனிக்கஞ்சியமான்கருங்கங்குலிலே
> திரண்டவெள்ளத்திற்பிணமீதுசென்றனள்சேர்ந்தவனை
> யரண்டவின்பங்கொடுமீளக்காம்பற்றவங்கொலுசாற்
> குரண்டகன்னத்திலுதைத்தனள்காணெங்குலோத்துங்கனே

என்றோர் கவிபாடி யவ்வரச னிரவிற் கண்டுவந்துள்ள வர்த்தமானத்தை அந்தச் சபைக்கணுள்ள யாவருக்கும் விளக்கிக்காட்டி அவனையு மகிழ்வித்தனர். இதுபோ லனந்தமுறை ஒவ்வோர்

சமயம் வாய்த்தபோதெல்லாம் பாடியுள்ள கண்டகித்திகளேயன்றி அக்குலோத்துங்க ராச னெவ்வேளையத்துத் தன் சபைக்கண் விவகார விசாரணையாதிக ளொழிந்துள்ளபோது அகப்பொருள் புறப்பொருட்டுறைகளில் யாதேனு மொன்றனைக் குறித்து வினவக் கூத்தரவ்வவற்றிற் கவனுளம் வியப்ப விடைகூறிய கவிகளு மனந்தமாம். அவற்று ளோர்கால் குலோத்துங்க சோழன் "கவி" என்னுங் கலம்பக வுறுப்பினல் ஓர் கவி கூறும்படி கேட்க, அதற்குக் கூத்தர்,

புள்ளிருக்குந்தார்மார்பன் பூம்புகார்வாழ்கவிபெரு
கள்ளிருக்குங்களவையுண்டுஞ்சோர்விலே—முன்னபடி
சொல்லவாவாவிதுரோபதைதையெமுக்கிர்ந்த
தல்லவாமாபாரதம்.

என்றோர் கவி கூறினர். மற்றோர்கா லரசன் "தலைவி சந்திரனை நோக்கிப் பரிதபித்துக் கூறியதாக" ஓர் கவி பாடும்படி வினவ, அதற்கவர்,

என்றுபெறுவேன்யானீசன்றிருமுடிமேற்
சென்றுவிளையாடுகின்றதிபமே—யென்றுஞ்
செருப்புக்குத்தோல்வாங்குஞ்சென்னியகளங்கன்
பொருப்புக்குத்தோளாப்பயம்.

என்றோர் கவி பாடினர். வேறோர்கா லவன் "என்னைத் தலைவி விழியாலும் புருவாலும் வெல்கின்றுளென நற்றாய் கூறுவதாக" ஓர்கவி சொல்லும்படி கேட்க, அதற்கவர்,

பழியும்புகழுமெவர்க்குமுண்டாமிந்தப்பாரினுனக்
கழியுஞ்சிலையுங்கயலுமென்றுலகளங்கதுங்கா
மொழியும்பொழுதெங்கள்பெண்சக்ரவர்த்திமுகத்திரண்டு
விழியும்புருவமுமாகியக்கோவனைவெல்கின்றவே.

என்றோர் கவிசொல்லினர். இப்படி யெத்தனையோ கவிகளுங் கண்டகித்திகளும் பாடித் தன்னை மகிழ்விக்கின்ற கூத்த

ணை ஒருநாள் குலோத்துங்க சோழன் நோக்கி, இராமாயண மொன்று சத்தப்பிரதியா யிருக்கின் நம்போன்றவர் வாசிக்கவும் பூசிக்கவும் யோக்கியதையா யிருக்குமென்று யான் முன்னர் கூறி யிலே னாதலால் அதுபற்றி யாதேனும் யோசித்ததுண்டாவெனக் கேட்டனன். அந்நச் செவியுற்ற கூத்தர் சற்றே யோசித்து, ஒ னதருமைச் செம்மால்! கம்பன் மிகக் கஷ்டப்பட் டருமையாகச் செய்துள்ள காரியத்தில் அவைதிகச் சம்பந்தங் கலந்துள்ள தொன்றுதான் பெருங்குற்றம். அஃதொழிதல்விதத்தேதனு மொழிவதாயின் அக்காவிய மிவ்வுலகிற் செம்மை பெற்றிலகு மென்பதற் கையமென்னை? ஆயினு மது மிக வகலமா யிருத்தலின் உமது கருத்தின்படி நம்போன்ற வைதிகர் இராமபிரா னவதாரமுதலணிமுடி புனைதல் வரையில் நிதமும் பாராயணஞ்செய்து பூசிக்க ஆறு செய்யுளிற் சுருக்கமாயொன் றிருக்கின் மிக நலமாயிருக்கு மாதலால், அவ்வா றிங்கனே முடித்துத் தருகின்றேன். அன்றியு மக்கம்பனே யுழாவதாகிய உத்தரகாண்டத்தை மொழிபெயர்த்தில னாதலாலும், அதுவே சிவசம்பந்தமான சரிதங்கள் சிவபுண்ணிய மான்மியங்கள் சிவதவப் பேறுகள் சிவபத்தித் திறங்கள் முதலானவை மலியப் பெற்றுள்ள தாதலாலும், அதனை மாத்திரந் தனியே "உத்தரராமாயணம்" என வழங்குவதாக வகலமாய்ப் பாடி முடிக்கின்றேன். எனக் கூறினவரா யதேபோதிலங்ஙனே நூறு செய்யுள்களிற் பாலகாண்ட முதலாயுள்ள ஆறு காண்டங்களின் கருத்தைச் சுருக்கிப் பாடி, "உபாசனராமாயணம்" எனவதற்கு நூற்பெயர் சாற்றிக் குலோத்துங்கச் சோழராஜன் கரத்தில் நீட்டினர். அவனதை மிக வாவலோடு மங்கையேற்று வாங்கி விரும்பிய பேர்கட்கெல்லா மொவ்வொரு பிரதியெழுதுவித்துக் கொடுத்தனன். அதன் பின் கூத்தர் சின்னாட்குள் உத்தர ராமாயணத்தைப் பாடி முடித்துச் சோழராசனுக்கறிவிக்க, அவன் தன் மாதுலனாகிய கருணாகர பாண்டியன் முதலிய வரசர்களையும் ஆங்காங்குள்ள பிரபுக்களையும் ஏனைய பெரியோர்களையுந் திருமுக வாயிலாய் வருவித்துப் புகழேந்தி முதலிய புலவர்கள் முன்னிலையில் முன்னரியற்றித் தந்த உபாசன ராமாயணத்தையு மிவ்வுத்தர ராமாயணத்தையுந் தன தவைக்க ளரங்

கேற்றுவிக்கச் செய்தான். உடனே கூத்தனுமதியால் புகழேந்திப் புலவர் உபாசன ராமாயணத்தின்கணுள்ள செய்யுள்களொவ்வொன்றுக்கும் வான்மீக ராமாயணக் கருத்தடங்கலும் விளங்க வெடுத்துப் பொருள் கூறி, உத்தர ராமாயணத்தை யதிலங்காரங் களமைந்துள நவரசாலங்காரங்களுந் தொனித்துச்சோபிக்கப் பிரசங்கித்து அவ்வரசவைக்கண் வந்துள சகலருஞ் சிரவணானந்தமுஞ் சித்தசெம்மாப்பு மடையும்படிக்குச் செய்தனர். இவ்வக வரங்கேறப் பிரசங்கஞ்செய்து முடிந்தபின் குலோத்துங்க சோழராசன் அங்ஙனம் வந்துள மன்னர் மண்டலீகருரியோர் பெரியோர் புலவர்முதலிய பலருக்கும் அமுதபோசனமுண்ணு மமரருங்கண் டேங்கும்படியாக விருந்துமுதலிய மரியாதைகள்செய் துபசரித்தனன். அப்பொழுது கருணாகர பாண்டியன் முதலிய பலவரசர்களும் பிரபுக்களுங் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தனுக்கும் புகழேந்திப் புலவருக்கும் அதிவிநோதமு மளவிறந்தனவுமான வெகுமதிகளும் விருதுகளும் விசித்ரமாகத் தந்து, குலோத்துங்க சோழனிடத்தினின்றும் விடைபெற்றுத் தத்தமிருக்கை நோக்கிச் சென்றார்கள்.

30. இப்படி யாவருஞ் சென்றபின் முன்னர் நடந்த பிரசங்கக் காலத்தில் அரசவைக்கண் வந்து கேட்டிருந்த திருவெண்ணைநல்லூர் சடையப்பிள்ளை சரராமப்பிள்ளை கண்ணுப்பிள்ளை முதலிய வேளாண் பிரபுக்கள் அழுக்காறடைந்த மனத்தினராய்க் கம்பரை நினைத்து, சில வேளாளரை யனுப்பி யவரைத் தேடச் செய்து, பின்ன ரவரிருக்குமிடமறிந்து வருவித்து, உறையூரினின்றும் போயதுகாறும் பட்டபாடுகளனைத்தையும் அவரது வாய்மொழியினாலேயே கேட்டறிந்து விசன முற்றவர்களாய், அவர்களுள் சடையப்பிள்ளை யென்பவர் கம்பரை நோக்கிக் கூறுகின்றார். அப்பா கம்பவாணனே! "ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று சூழினுந்தான்முந் துறும்" என்னும் பொய்யாமொழி நீயறியாததா? ஆயினு முனக்கு நேர்ந்த வாபத்தின் காரணத்தை யோசிக்குமளவில், உன் மனதறியச் செய்துகொண்ட வர்காமியமேயாம்.

தன்னெஞ்சறிவதுபொய்யற்கபொய்த்தபின்
றன்னெஞ்சேதன்னைச்சுடும்.

என்பதுவு மறிந்ததுதானே: இராச சபைக்கண் முன்னர் கூத்தரென்பவர் என்னையு முன் காவியத்தையு மிகப்பழித்துச் சொல்லியவனைத்தையும் யோசிக்கப்புகின், உண்மையாகவேதா னிருக்கின்றன. இவ்வா றக்காவியத்தைப்பற்றி யாதேனுமொரு கேள்வியுங் கேடும் வருமென்றும், இவ்விரண்டும் வாரா தரச னவைக்க ணரங்கேற்ற முடிக்கின் அதனை யாக்கியோனுக்கு மாக்கிவைத்தோனுக்குங் கீர்த்தியுண்டாகு மென்றுமே தான் யான் யோசித் துன்னையனுப்பியது. அந்தோ! முழுவிற் குளிக் கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்ட கதையானதன்றி, அரச மரத்தைப் பிடித்தசனி அதன் சார்பிலுள்ள ஆனைமுகப்பிள்ளையா ரையும் - அப்பிள்ளையாரைப் பூசிக்கும் பெரிய குருக்களையும் - அப்பெரிய குருக்க ளினத்தரான பெரும் கூட்டத்தினரையும் பிடித்ததுபோல, உன்னைப் பிடித்த சனி யுன் வாக்கினின்றும் வந்த காவியத்தையும் அக்காவியத்தை விரும்பிய வென்னையும் எனதினத்தரான பெருங் கூட்டத்தினரையும் பிடித்து, அக்கூட டத்தினர்க் கிதுகாறு மிலைமறை காய்போலிருந்த சில விழுமாப் பும் இழிந்து சிதைந்தழிந்தன. இனி யென்செய் தென்னும். இன்றோர் நன்னாள் குறித்து உன்னைப்போன்ற கவிவாணர்களை யும் பெரியோர்களையுந் திருமுகவாயிலாய் வருவித்து நமது பூங் காமண்டபத்திற் சபை சேர்க்கின்றேன். அச்சபைக்கண் நீ வரு ந்திப்பாடிய காவியம் வசைபட்டொழியாவகை யரங்கேற்றி முடி த்திடுக வென்றனர். அதுகேட்ட கம்ப ரவரை நோக்கி, ஒ என தாண்டகையே! அக்காவியத்தினை மொழிபெயர்த்து முடித்த வந் நாளிலேயே அதனைத் தமது சபைக்க ணரங்கேற்றியிருக்கின், இத்தகைய துன்பங்களெல்லாம் எனக்கு மென்காவியத்திற்கு நேர்வதற் கிடமிராதே: அந்நாள் தங்களபிப்பிராயப்படி இராச சபையி லரங்கேற்ற வனுஞ்ஞை பெறச்சென்று கூத்தரா லவமா னப்பட்டுள்ள யான், அவர் கவிச்சக்ரவர்த்தியாதலால் மறுபடியு மவருத்தரவின்றி இங்ஙன மரங்கேற்றத் தொடங்கிய செய்தியை

யறிவரேல் இராசனவருக் கனுகூலனு யிருப்ப றிச் சூடுண்ட பூனையைப் போல யாது விளையுமோ வென் றஞ்சுகின்றேன், ஆயினு மினி யாது விளையினும் விளைக: இன்னு மோர்கால் யான் தனியே கூத்தரது மனைக்கண் சென்று வருந்தி வேண்டி, அவரனுமதியுடனே யவர் பாடியுள்ள உத்தர ராமாயணத்தையும் வாங்கி வந்து அதன்பி னரங்கேற்றுதல் செய்யின் மிக நலமாயிருக்கும். அந்தோ! இத்தகைய வெண்ண மக்காலத்தி லுதித்து, இராச சபைக்குப் போகுமுன்ன ரவர் மனைக்கண் சென்று காவியத்தைக் காட்டி, அவர் கேட்கும் வினாக்களுக்கு வகையுண்டாக விடை கூறி யனுமதிபெற்றுப் போயிருப்பனேல்; அவர் தக்கோரிடத் திற் பழகிய தயாநிதியாதலாலும், எத்தகைய கவிச்சுரர்களாயினுந் தமக்கெதிர்பேசா தடங்கியிருக்க வேண்டுமென்னுங் கொள்கையை வகித்த அதிபராக்கிரம வீரகவியாதலாலும், ஒருவன் தன்பாற் பலகால் பல குற்றங்கள் செய்தானாயினும் பின்னர் தம்மைத் தாழ்ந்து பணிந்து துதிப்பனேல் அவற்றையெல்லாமறந் தாதரிக்குமியல்பின ராதலாலும், ஒரரிய பெரிய நூல்களி லென்போன் றுய்தல் காரணமா யாதேனுமொரு சேட்டை செய்யத் துணிந்து பணிவோடுந் தெரிவிக்கின் அது பற்றித் தாம் பராமுகமாயிருந்து மன்னிக்கு மாண்பின ராதலாலும், ஒருவா றவர் முன்னிலையி லிங்ஙனேயதை யரங்கேற்றி முடித்திருக்கலாமே; இவற்றையெல்லா மறியாது சின்னாளைக்கு முன் இயற்றமிழ்ச் செல்விக் கிருப்பிடமாகிய பாண்டிமண்டலத் திறைவன் சமஸ்தான வித்வானாய்ப் பிரபலித்திருந்த புகழேந்திப் புலவர் பட்டபாடு புவி யாவுமறியுமே: இனிப் பல வாலோசிப்பதிற் பயனென்னை? இப்போது மவ ரனுமதியின்றி யிங்ஙனமதை யரங்கேற்றப்புகின் மெனக்கும் என்னை முன்னிட்டுத் தங்களாதியர்க்கும் யாதேனுமோர் முன்னிலையிற் கெடுதிவிளையு மென்பதற் கையமில்லை யென்றார். இவை யனைத்தையுஞ் சடையப் பிள்ளை முதலாயினோர் கேட்டு, ஆம்: ஆம்: அரவின்கா லரவுக்கன்றோ தெரியும்? ஆதலால் நீர் சொல்வது சரிதான்: எந்த விதத்தேனு நீரவரிடஞ் சென்று அனுமதி பெற்றிங் காரம்பிப்பதே உத்தமமென்றார்கள்.

உடனே கம்பவாணர் ஓர் நன்னாளாய்ந்து வெளிக்கொண்டு போய் உறையூரை யடைந்து, கூத்த ரிராசசபைக்கணின்றுந் தம தரண்மனையில் வந்திருக்குஞ் சமயமறிந் தங்ஙனஞ்சென்று, அவர் தனியே சாத்விகமாய்ப் புத்திர பௌத்திரர்களோடு குலாவும் வேளையினை விசாரித்து நேரிற்போய் பணிந்தெழுந்து கை கூப்பி நின்றனர். இவரைக் கண்டவுடன் கூத்தர் வியந்து மனவிரக்க முடையவராகி, நீரிங்கு வந்தகாரிய மென்னென்று வினவினர். அத்தயாரச வார்த்தையைக் கேட்ட கம்பர் மீட்டுமவரைப் பணிந் தெழுந்து, ஓ அபயாசஞ்சீவியே, ஓ திராவிடப்புயலே! ஓ கலை ஞானபொக்கிஷமே! முன்னொருநா ளெனது குமாரன் அம்பிகாபதி யின் கல்யாணவாசலில் பாதபூசை செய்யும் வேளையில் இருப்ப தற் கிடம்பெறாது சாலகத்தினோரத்தில் நின்றுகொண்டிருந்த என தாண்டகையாகிய சடையப்பிள்ளை யவர்களின் தரத்தினைக் குறித்துச் சிந்தித்த என் மனைவியை யானோக்கி என்னையனை வைப்பிடமறிந்து வைப்பேனெனச் சமாதானங் கூறியுள்ளேனாத லின், யான்செய்த பெருங்காவியமாகிய இராமாயணத்துள்ளே அவரது செய்ந்நன்றி வெளிப்பட அவர் புகழைச் சிற்சில விடங் களிற் கூறிவைத்துள்ளேன். ஆதலா லதனைப் பொறுத்தருளித் தேவரீரியற்றியருளிய உத்தர ராமாயணத்தைத் தரின், அதனை யான்பாடிய வாறுகாண்டங்களோடுஞ் சேர்த்து அப்பிரபுவின் சபைக்க ணரங்கேற்றி இன்னுஞ் சிலகாலஞ் சீவித்திருப்பேன். இல்லையே லிப்போதே யான் வருந்திப்பாடிய வக்காவியத்துடன் கடலிலமிழ்ந் திறப்பேன். இது திண்ணம்: எனக்கூறிக்கையேந் தினர். அதுகேட்ட கூத்த ரருட்சொரூபியாதலால் இவன் யாவ ராலு மதிக்கப்படுங் கவியாயிருத்தலின் பிழைத்துப் போகட்டு மென்று கருதினவராய் அவரை நோக்கி, ஐயா புலவரே! நீர் கூறி யவனைத்து முண்மையேயாயினும் யாவராலு முபாசித்தற்குரிய தான விதிகாசத்துள் நீர் செய்து வைத்துள்ள வசங்கதத்தால் அஃது யாவராலு மவமதிக்கத்தக்கதாயது. அதுபற்றியே சோழ ராச னும்மீது வெகு சினங்கொண்டவனாயினன். இனியவனுத் தரவின்றி நானுமது விழைவை நிறைவேற்றுதல் கூடாத காரிய மாகும். உம்மை யொத்தோர்க்கெல்லா மோரிடை யூறு நேராது

பரிபாலித்துவரும் கவிச்சக்ரவர்த்தி நானேயாயினும், புவிச்சக்ரவர்த்தியாயுள்ளோனுடைய கருத்துக்கு மீறலாகாது. இது மநுநால்விதி; எனக் கூறிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் குலோத்துங்க சோழனுடைய பட்டவர்த்தன யானையை வாதுவ னவ்வீதி வழியாய்ச் காலாற நடத்திக்கொண்டு போவதைக் கூத்தர் சாளரத்தின் வழியே பார்த்துக் கம்பரை நோக்கி, நீர் சோழராசனு[illegible]மிடத்திற் கொண்டுள்ள கோபந்தணிய இந்த யானை முன்னி[illegible] அவனது பராக்கிரமம் விளங்க ஓர் கவி பாடிக்கொடும், அதையானவனுக்குக்காட்டிக் கோபந் தணித்து உமதபிப்பிராயத்தைக் கூறி உத்தரவு பெற்றுவந்து, நாளையிவ் வந்திவேளைக்கு நீரிங்கு [illegible]ரின் உமது கருத்தின்படி நிறைவேற்றுகிறேனென்று கூறினர். உடனே கம்பர் மகிழ்ந்து,

பம்பெருந்துஞ்சூர்ப்பேரம்பன்மிருகஞ்சேர்காய்
கொடிகழுகுபித்தனையுங்கூடி—வடிவுடைய
கோமானகளங்கன்கொல்யானைபோர்மாடு
போமாறுபோமாறுபோம்.

எனவோர் வெண்பா வெழுதிக்கொடுத்து விடைபெற்றுச் சென்றனர்.

30. அதுபெற்ற கூத்தர் மறுநா ளிராச சபைக்கண் சென்றிருக்கையில் சோழன் விகார விசாரணையாவு முடித் தவகாசமாயிருக்குஞ் சமய நோக்கி அக்கவியையு மக்கவி பாடியதற் கேதுவையுங்கூறிச் சம்மதிப்பித்து வந்து, அவர் கேட்டுக்கொண்டபடியே உத்தரராமாயணத்தைத் தந்து எழுதிக்கொள்ளச்சொல்லினர். உடனே யதனைக் கைபெற்று வாங்கிய கம்பர் அவ்வூரிலேயே தங்கி வேறுபிரதி யெழுதிக்கொண்டு, அம்மூலப்பிரதியைக் கூத்தரிடத்திற் கொடுத்துவிட்டு விடைபெற்றுத் திரும்பினர்.

31. இவ்வாறு திரும்பிய கம்பர் உறையூரை விட்டுத்திருவெண்ணெய்நல்லூரை யடைந்து தனதாண்டகையாகிய பிரபுவினிடம்போய் அவ்வுத்தர ராமாயணத்தைக்காட்டி, அதிலுள்ளவொவ்வோர் பாடலி னருமையையும் பெருமையையு மிக விரிவாயெடுத்

தனைகூறிப் புகழ்ந்து, கூத்தரிடந் தான் போய்ப் பணிவாய்க் கேட்டுக்கொண்டதையும் அதற்கவர் மனதிரங்கிச் செய்த நன்றி யையும் விவரமாய்க் கூறினர்; அதுகேட்ட வீச்சடையப்பிள்ளை முதலிய வேளாண் குலதிலகர் பலரும் வியந்து ஓர் நன்னாளாய்ந்து முன்னமே யெழுபதை இராக்காலத் தரங்கேற்றத் தொடங் கியதனுல் சேர்ந்த வாபத்தினையும் இக்காவிய மரங்கேற்றி முடிக் [illegible]நாட் செல்லுமென்னுங் காரியத்தினையு முள்ளுண[illegible]வர் களாய்த் தமது மரபினரையும் பல கவிவாணர் முதலிய பெரி யோர்களையும் அந்நாட் காலையிற் றமது பூங்காமண்டபத்தின்கண் வந்து சேரும்படிக்குத் திருமுகமெழுதிவிடுத்து, அவர்களனைவரு மங்ஙனம் வந்து சேர்ந்தவுடன் தாங்களுங் கம்பரை யழைத்துக் கொண்டு சென்று, இனி நீருமதுகாவியத்தை யரங்கேற்றவாரம் பிக்கலாமென் றுத்தரவு தந்தார்கள். அதுகேட்ட கம்பரன்று தொடங்கி மகிழ்சிறந்தவராய் மிக வுற்சாகத்தோ டரங்கேற்ற வாரம்பித்து, தன்னிடத் தோதியவோர் கற்றுச்சொல்லியால் அக் காவியக்கவிகளை வாசித்து வரவும் தனது குமாரனுகிய வம்பிகா பதி அவற்றின் பொருள் கூறி வரவும் தானங்காங்கு விசேடித் தமைந்துள கற்பனைகட்குங் கருத்துகட்கும் விரிவுரை கூறிப் பிர சங்கித்து வருகிறர். அந்நாள்களி லோர்நாள் நாமகளம்சத்தின ரான ஒளவையார் தற்செயலா யவ்விடத்து வந்து தனியே தடி யூன்றி நின்றனர். அவர் வரவை யுணர்ந்த கம்ப ரொன்றுந் தோன்றுதவராய் உற்சாகமனைத்து மடங்கி ஈனசுரங் கொண்டு பிரசங்கித்தனர். அதைக் குறிப்பாற் கண்ட வித்வசிரோன்மணி உடல குலுங்க நகைத்து;

காணுமல்வேணதெல்லாங்கத்தலாங்கற்றோர்முன்
கோணுமல்வாய்திறக்கக்கூடாதே—நாணுமற்
பேச்சுப்பேச்சென்னும்பெரும்பூனைவந்தக்காற்
கீச்சுக்கீச்சென்னுங்கிளி,

என்றொரு கவி கூறினர். அக்கா லச்சபையின்கணிருந்த வேளாளருட் சிலரெழுந்து வஞ்சலிசெய்து, அம்மணி! இக்

கம்பரது பாட்டும் பிரசங்கமும் இலேசானதா வென்றார்கள். அதற்கவ்வையார் சிரகம்பிதஞ்செய்து,

வீரகரிருவர்புகழ்ந்திடவேவேண்டும்
வீரனிறையமோதிரங்கள்வேண்டு—மரையதனிற்
பஞ்சேனும்பட்டேனும்வேண்டுமவர்க்கிதை
நஞ்சேனும்வேம்பேனுநன்று.

என்றொருகவி கூற, அவர்க ளவளை மீட்டு நமஸ்கரித்து, அன்னையே! இத்தகைய பாரகாவியம் ஆர் செய்தனர் ஆசலாகு மென்ன, அதற்கு மவ்வையார்,

வான்குருவியின்கூடுவல்லரக்குத்தொல்கறையான்
றேன்சிலம்பியாவர்க்குஞ்செய்யரிதால்--யாம்பெரிதும்
வல்லோமேயென்றுவலிமைசொலவேண்டாங்கா
ணெல்லார்க்குமோவ்வொன்றெளிது.

சித்திரமுங்கைப்பழக்கஞ்செந்தமிழு[illegible]
வைத்ததொருகல்விமனப்பழக்[illegible]த்த
நடையுநடைப்பழக்கநட்புந்தயையுங்
கொடையும்பிறவிக்குணம்.

என்றிரண்டு கவி [illegible]றினர். அப்போ தங்கிருந்த சில புலவ ரெழுந்து வந்து அவ்வையாரை யஞ்சலிசெய்து, அம்மா இக்கம்பனாவர் சகலமு[illegible] கற்றுவல்லாரே: ஆதலி னவரிடத்தில் என்ன குறையு[illegible]தென்[illegible] கேட்டனர். அதற்கவர்,

கற்றதுகைம்[illegible]ண்ணளவுகல்லா துலகளவென்
றற்றகலைமட[illegible]ந்தையோ தி[illegible]ள்—மெத்த
வெறும்பந்தயங்கூறவேண்டாம்புலவீ
ரெறும்புந்தன்கையாலெண்சாண்.

என்றோர் கவி கூறி அவர்கள் கொள்கையை மறுத்தனர். அதுகேட்ட சடையப்பிள்ளை முதலிய சதுர்த்த குலமணிகள்!

பையெழுந்து வந்து அவரைப் பணிந்து, ஓ கலிக்கியானப் பொக்கிசமே! தேவரீர் கவிகளாயுள்ளோரைக் கண்டால் கருணை சுரக்கு முளத்தினராயிருக்க, இக்கம்பரிடத்தி லென்ன வசந் திதங்கண்டு பலமுறையும் வெறுக்கின்றீர்? அப்படி யாதேனு மிருக்கின் தாங்களவருக் மறிவுறுத்தி ஆட்கொள்ள லாகாதா வென்று கூறினர். அதற்கவ்வையார்,

ஆலைப்பலாவாக்கலாமோவருஞ்சுணங்கன்
வாலைநிமிர்க்கவசமாமோ— நீலநிறக்
காக்கைதனைப்பேசுவிக்கலாமோகருணையிலா
மூர்க்கரைச்சீராக்கலாமோ.

என்றுகூறிப் போய்விட்டனர். இவையனைத்தையுங் கண்டுங் கேட்டுமிருந்த கம்பர் மிக்க நாணமுடையவராகி, நமக்கின்னு நல்லகாலம் வரவில்லையேயெனக் கிலேசித்து அத்தினப் பிரசங் கத்தினை நிறுத்தி, மறுநாள் முதல் யதாப்பிரகார மாரம்பித்து ஒ[illegible]வாறக் காவியமுழுது மரங்கேற்றி முடித்தனர். அக்காலவ [illegible]ருட முதலியவற்றை யடைந்து அங்கு வந்திருந்த கவிவாணரு[illegible]ருவர்,

எண்ணியசகாத்தமெண் ணூற்றேழின்மேற்சடையன்வாழ்வு
நண்ணியவெண்ணெநல்லூர்தன்னிலேகம்பநாடன்
பண்ணியவிராமகாதைபங்குனியத்தநாளிற்
கண்ணியவரங்கமுன்னேகவி[illegible]ரங்கேற்றினனே.

என்னுமோர் செய்யுளைப் பாடினர்.

32. அக்காலத் [illegible] சபாநாயகரா[illegible] சடையப்பிள்ளை யென்பவ ரெழுந்து, அங்கிருக்குங் கவிவாணர்களையும் பெரியோர்களையு நோக்கி, இக்காவியத்தி லேதேனுங் குற்றமுளதோவெனக் கேட்டனர். அதற்கவர்க ளிக்காவிய மிவ்வளவு சிறப்புடையதாக வியற்றப்பட்டும் இதிகாசமாயும் பகவத் சரிதமாயுமுள்ள விதில் என்ன நிமித்தத்தால் நரஸ்துதி செய்யப்பட்டிருக்கின்றதென வினவி அந்நிமித்தத்தைக் கம்பராலறிந்து கொண்டவர்களாய்,

ஆயினும் பன்னீராயிரம் பாடல்களில் நூற்றுக்கொன்றாக வடிக்கடிச் சொல்வது யுக்தமல்லவென்றும் அளவுக்குமிஞ்சின லமுதமும் விடமாகுமாதலால் ஆயிரத்திற்கொன்றாக விருந்தாற் போதுமென்றுங் கூறினார்கள். இவ்விரண்டையுங் கேட்ட கம்பர் மனக்களிப்புற்றவன் போலெழுந்து, யானிதுகாறும் பிள்ளையவர்களை நூற்றுக்கொருவராக மதித்திருந்தேன் இப்பெரியோர் எனது மதிப்பைப் பேதைமைப்பாலதாக்கித் தாங்களவரை ஆயிரத்திற்கொன்றாக மதித்தது மிக விசேடமே: என்று சாதுரியமாகக் கூறித் தனக்கவர்களால் நேர்ந்த வவமானத்தை யுள்ளடக்கிக் கொண்டு, அவ்வாறே யாயிரத்திற்கொரு பாடல்வைத்து மற்றவற்றைக் கழித்துத் திருத்தி முடித்து, அக்குலத்துள்ள பல பிரபுக்களாலும் பெரியோர்களாலும் வெகுமதி முதலிய பல சிறப்புகளைப் பெற்றனர்.

இப்பால் கம்பரானவர் திருவெண்ணைநல்லூரைவிட் டெக்கும்போகாமல் தனது வீட்டிற்சென்று புத்திரமித்திர களத்திராதியரோடும் பொருந்தியிருந்து, சின்னாள் கழிந்தபின் தனக்குப் பொருள்வேண்டி வேளாளப் பிரபுக்கள் பலரிடத்[...] வேண்டுமென் றெண்ணினவராய் அவ்வேளாளருடைய கைவளத்தைச் சிறப்பித்துக் கலிவெண்பாவால் "திருக்கைவழக்கம்" என்னுமோர் நூல் செய்துகொண்டு சடையப்பிள்ளையினிடஞ் சென்றவித்து, அவ்வூரா லவர்மரபின் பிரபுக்களனைவரையும் ஓர் நன்னாட்காலையி லப்பூங்கா மண்டபத்தின்கண் சபைகூட்டுவித்து அத்தச்சபையி லந்நூலை யரங்கேற்றத் தொடங்கினர். அத்தருணத் தௌவையார் தற்செயலா யங்ஙனம்வந்து தூரத்தே நின்று, கவிச்சீர் வரையிற் கேட்டுத் திடுக்கென் றச்சபைக்க ணுள்ளோர் கேட்கும்படி,

நாட்டார்கள்காருலக்காட்டார்தங்கை [...]வரு
நீட்டானவெண்கலிப்பாட்டாலிக்கம்பனெஞ்சுவர்போற்
காட்டாதனபலகாட்டியகொள்ளையிற்காலைவெறிக்
கேட்டான்மறந்தொன்றைமாற்றிமற்றொன்றைக்கெடுத்தனனே.

என்றோர் கவியினைப்பாடிச் சிரித்துச்சென்றனர்.

33. அதுகேட்ட கம்பர் வெட்கி, நமக்கு மக்கிழவிக்கு மெய்போது மேழுபொருத்தமென்று சபையாரை நோக்கிக்கூறி, மற்ற நாற்பத்தொன்பது கவிச்சீர்களையு மரங்கேற்றி முடித்துத் தானுத்தேசித்த வண்ணம் அவ்வேளாளப் பிரபுக்கள் பலரிடத்தும் பலவகைப் பரிசுகள் பெற்றுப்போயினர்.

இவ்வாறவ் வேளாளர்பொருட்டுத் திருக்கைவழக்கமென்னு நூல் பாடிப் பரிசு பெற்றுச்சென்ற கம்பர் பின்னுமோர் கால் பொருள்வேண்டியிருந்ததால் அவர்கள் மீது "மும்மணிக்கோவை" என்னுமோர் பிரபந்தம் பாடிமுடித்து அப்பிரதியைச் சடையப்பிள்ளை கரத்திற்றந்து, இதையு மரங்கேற்றுதல் செய்வித்து பல பிரபுக்களா லெனக்குப் பரிசளிக்கும்படி செய்விக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார். அது கேட்ட பிரபுவானவர் சற்றுயோசித்து, இவன் தனக்குப் பொருள் வேண்டும்போதெல்லாம் ஒவ்வொரு நூல் நமது மரபினையே சுட்டிப் பாடுகிறான். இவன் நரஸ்துதி செய்வதற்கஞ்சிலன். "பாடவந்தால்பரமனைப் பாடு" என்று பெரியோர் கூறியிருக்க, அதை யிவன் சற்றுங் கவனிப்பதில்லைபோலும். இவன் முன்னர் பாடிய இராமாயணத்தில் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் முதலிய வித்வான்கள் பலரும் பிழை கூறினர்கள். அப்பிழையினை யொருவாறு திருத்துவித்து அக்காவியத்தை நாமே பாடச்சொன்னோமாகையால் எப்படியாவ தரங்கேற்றுவித்துப் பரிசளித்தனுப்புவது நமது கடமையென்றெண்ணி நிறைவேற்றினோம். பிறகு திருக்கை வழக்கம் பாடினான். அதை யரங்கேற்றுங் காலத்தினு மௌவையார் தற்செயலாய் வந்து கேட்டு அதிலுள்ள பலபிழைகளைக் குறித்துப் பாடிப்போயினர். அப்போதும் பலர் முன்னிலையி லரங்கேற்றத் தொடங்கிவிட்டோமே யென்று அதை முடித்துப் பரிசளித்தனுப்பினோம். மறுபடியு மும்மணிக்கோவை பாடிவந்து கொடுத்து இதையு மரங்கேற்றுவித்துப் பரிசளிக்க வேண்டுமென்கிறான். இப்படி யிவன் பாடுந் தப்புபாடல்களுக்கெல்லாம் பரிசளித்துக்கொண் டிருப்போமாயின், இவையனைத்தையுங் கேள்வியுற்ற நம்போன்ற மற்றை மரபினராகிய பிரபுக்களும்

பெரியோர்களுங் கவிவாணர்களு நம்மை யெவ்விதமாக மதிப்பார்கள்? ஆதலா லிதனை யரங்கேற்றுவதற்கு முந்திக் கல்வி தேர்ச்சியுடைய மற்றையோ ரெவருக்காவது காட்டிக் குற்றமற்றிருக்கி னரங்கேற்றலாம். ஏதேனுங் குற்றமுளதாயிருக்கி னிவன் முகத்திலேயே கிழித்தெறிவோமெனத தமக்குள் தீர்மானித்துக் கொண்டு கம்பரை நோக்கி, ஓர் நல்ல நாளாய்ந்து தெரிவிக்கின்றேன் அப்போதுவத் தரங்கேற்றலாமெனச் சொல்லி யனுப்பி விட்டு இனியா மிதனை யாருக்குக் காட்டலாமென்று யோசித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறவ ரிருக்குநாளி லோர்நாள் தஞ்சை நகரத்திலே கல்வியுணர்ச்சியிற் சிறந்து புலவர் பலராலும் புகழப்பட்டிருந்த அஞ்சனாட்சி யென்னுமோர் தாசியானவள் தலயாத்திரைசெய்து கொண்டு, ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபிரான் தடுத்தாட்கொண்ட திவ்விய க்ஷேத்திரமாகிய திருவெண்ணை நல்லூரைத் தரிசிக்க விரும்பி யங்ஙனமடைந்து, அங்குள்ள சடையப்பிள்ளையின் பிரபாவங்களைப்பற்றிப் பலகால் கேள்வியுற்றிருப்பவளாதலால் அவரைக் காணும்படி யவர் வீட்டிற்கு வந்தாள். அதுகண்ட சடையப்பிள்ளை யவ்வஞ்சனாட்சியின் தாதியரால் அவளது கல்வித் தேர்ச்சியைப்பற்றிக் கேட்டறிந்தது மன்றி அதற்குமுன்னருந்தாம் பல புலவர்களாற் கேள்விப்பட்டு மிருந்தாராகலின் "தேடப்போன மருந்து காலிலகப்பட்டது" என்னும் பழமொழிபோல வெகுநாளாகக் கம்பன்பாடிய மும்மணிக்கோவையை யாரிடங் காட்டுவோமென் றெண்ணியிருக்க நமக்குப் பலரும் புகழும் வித்வசிரோமணி வீடேறிவந்தது நாம்செய்த பாக்கியமென மகிழ்ந்து, அவ்வனிதைக்குப் பலவித மரியாதைகள் செய் துபசரித்துத் தாமு முடனிருந்து மும்மணிக்கோவையைக் கையிற்றந்து, இதனைப்பார்வையிட்டுத் தக்கார் சிறப்புப்பாயிரங் கொடுக்கவேண்டு மென்றனர். அதுகேட்ட வஞ்சனாட்சி யந்நூ பிரபந்தத்திலுட் சில கவிகளை வாசித்துப்பார்த்து, அந்நூ லக்கிராமாதிபதியின் மரபைப்பற்றிச் சிறப்பித்துள்ள சாதிநூலா யிருப்பக்கண்டு, அதைப் பாடினவ னின்னனென அப்பிள்ளையினைக்

கேட்டறிந்துகொண்டு, அதற்கு முன்னரே கம்பருடைய பிறப்பின் வரலாற்றையும் வளர்ந்த விடத்தினையும் கல்வியிற் றேர்ச்சி பெற்றதற் கேதுவையும் பின்னுமவர் குணாதிசயங்களையும் பலராற் கேள்வியுற் றிருப்பவ ளாதலால் இவன் நம்மால் சிறப்புப் பாயிரம் பெறத்தக்கவனென்வெனத் தனக்கு ளமைதித்தவளாய் உடனே தனது கற்றுச் சொல்லியைக்கொண் டெழுத்தாணி கொணர்வித்து எழுதாதிருந்த வந்நூலின் மேலேட்டில்,

> கைம்மணிச்சீரிற்சொற்சிறியாக்கம்பவாணன்சொன்ன
> மும்மணிக்கோவைமுதற்சீர்பிழை.

எனவெழுதி யப்பா லெழுதத்தொடங்கினன். அதை யருகிருந்து பார்த்திருந்த வப்பிரபுவானவர் இவ்வளவில் நிறுத்தும் போதும் போதுமென்று கூறி வாங்கிக்கொண்டு, அஞ்சனாட்சிக்கு வந்தனங் கூறி யனுப்பிவிட்டனர். அதன்பிறகவர் கம்பரை வரவழைத்து அப்பிரதியின் மேலேட்டி லெழுதியிருந்த பாதிப் பாட்டைக் காட்டி, இதனை முற்றும் பாடி முடிக்கி னெத்தனை பிழைக் கிடந்தருமோவெனச் சினந்து, இவ்விதமான புன்கவிகளைப் பாடிப் பொழுதுபோக்கு முனக்குப் பொருளாசையொன்று மாத்திரமிருக்கிற பயனென்னை? ஆதலினினியென்று மித்தகைய பாடல்களைப் பாடிக்கொண்டு நம்மிடம் வரவேண்டாமென்றுகூறி அப்பிரதியைக்கிழித் தவரெதிரே யெறிந்தனர். அப்பொழுது கம்ப ரொன்றுந் தோன்றாதவராகித் [illegible] தலைகுனிந்தவராகி, இன்றோடே நமக்கு மிவ்வேளாளப் பிரபுக்களுக்குமுள்ள சம்பந்தம் அற்றுப்போய் விட்டது[illegible]. இனி [illegible]ங்குச்சென் றெவ்வகை பிழைப்போம்? [illegible] துக்கித்தவராய் மறுமொழி கூறவுந் தோன்றாதவராய்ச் சற்றுநேர [illegible] நின்றுவிட்டுச் சென்றனர்.

34. இக்கம்பர் செயலங் கிவ்வாறாக உறையூரின்கண் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தனார் சிலகாலந் தலயாத்திரை செய்துவரக் கருதி, ஆவணிமாதத்தில் விநாயகசதுர்த்தி விரதத்தினை வேதக்கல்விதிப்படி செய்து நிறைவேற்றித் தமது கருத்தைக் குலோத்

துங்கசோழனுக் கறிவித்து ஒன்றரைவருடத் தவணைக்குள்வந்து சேருவதாகக்கூறி விடை பெற்று, சிவிகைமுதலிய சின்னங்களோடு பரிசனர் யாரும் புடைசூழ வெளிக்கொண்டு காவிரியாற்றுக்கு வடகரையின் கணுள்ள திருக்கோயிலென் னுஞ் சிதம்பரத் தலத்தையடைந்து, அங்கே தமது தந்தையி னன்மார்த்தமாயெழுந்தருளியுள்ள அம்பலவாணரைத் தரிசித்து, "திருக்கோயிலொலியலந்தாதி" என்னுமோர் பிரபந்தம் பாடித்துதித்து, மற்றத்தலங்களையு முறையே தரிசித்துக்கொண்டு "திருவையாற்றுக் கலம்பகம் - திருவானைக்காபதிற்றுப்பத்தந்தாதி" என்னும் பிரபந்தங்கள் பாடி, அக்காவிரியாற்றுக்குத் தென்கரைக்கணுள்ள பல தலங்களையு முறையே தரிசித்துக்கொண்டு, "திருவிடைமருதுாிரட்டைமணிமாலை - திருவாரூர்க்கலம்பகம்" என்னும் பிரபந்தங்களியற்றிப் பாண்டி நாட்டை யடைந்தனர். அங்கரசு செலுத்திவருங் கருணாகரபாண்டியன் சில வேவுகாரரால் அவர் வரவையுணர்ந்து, உடனே யவரை யெதிர்கொள்ளுமாறு சில பரிசனரோடும் வெளிக்கொண்டு அவர் வரும் வழியின்கணுள்ள ஓர் தோப்பினையடைந்து, அங்கே தனது பசுநிரைகளு மவற்றின் கன்றுகளும் உல்லாசமாய் மேய்ந்துகொண்டிருக்கும் விநோதங்களைப் பார்த்துக்கொண் டிருந்தனன். அப்போதவ் வழியாக வந்த கூத்தர் அரசன் தம்பொருட்டவண் வந்திருக்குஞ் சேதியுணர்ந்து அத்தோப்பினுட் சென்று, (செங்கோலைந் தாங்கிப் பகையரசரை யோட்டுகின்ற அழகிய பாண்டியராசன் தனது கையில் வடித்த வேலாயுதத்தைத் தாங்கப்பெற்றும் கோக்களைத் துரத்துந் தொழிலை விட்டானில்லை. இவன் பெருமைபொருந்திய பூபதியேயாயினும் பூர்வங் கோபாலனாயிருந்த குணம்போகுமோ?) என்னுங் கருத்தமைய,

கோலெடுத்துக்கோத்துரத்துங்கோப்பாண்டிமன்னன்வடி
வேலெடுத்துங்கோத்துரத்தல்விட்டிலனே — சால்படுத்த
பூபாலனானாலும்போமோபுராதனத்திற்
கோபாலனானகுணம்.

எனவோர் கவி விநோதமாகக் கூறினர். அதைக் கேட்ட பாண்டிய னுடனே யவரை யாலிங்கனஞ் செய்துகொண்டு, எமதருமைச் சம்பந்தியவர்க ளிங்ஙன மெழுந்தருளப்பெற்றது மிகு பாக்கியமேயெனக் கொண்டாடி யழைத்துக்கொண்டு தனதரண்மனை சேர்ந்து, சிலநாள் தன்னிடத் திருந்துபோகவேண்டி யிசைவித்து, அதுகாறு மவருக்கு மவருடன்வந்த பரிசனர்க்கு நிதமொரு விதமாய் விருந்து முதலிய சிறப்புகள் நடாத்தி உபசரித்து வந்தனன். அக்கவிச்சக்ரவர்த்தியும் கருணாகரபாண்டியனுடைய கருத்து மகிழ்வெய்தச் சின்னாளிருக்கையில் ஓர்நாள் பாண்டியராசன் அர்த்தராத்திரி வேளையில் ஓர் குதிரை மீது தனியே நகரிசோதனையின் பொருட்டுச் சென்று வைகையாற்றின் வடகரையோரமாய் வருகின்றான். அங்ஙனமுள்ள காளி கோயிலில் ஓர் பரிசாரகன் சந்தனமரைத்துக்கொண் டிருக்கையில் அக்காளிகாதேவியின் பரிவாரக் குழாங்களிலுள்ள ஓர் பேய் அவ்விடத்துவந் ததனைத்தின்ன, அரைப்பவ னதனைக்கண்டு சினந்து எட்டப்போவென்று கூற, அது போகா தடுத்தடுத்துத் தொட்ட வண்ணமாயிருக்க, அவனோர் கத்தியைக்கொண்டு அதன் கரத்தைவெட்ட, அவ்வெட்டுண்ட கையோ டது ஒலென்றலறிக் கூச்சலிட்டுக்கொண்டு வெளிவர, அதைக்கண்ட வரசன் வியந்து விரைந்து வந்து தனதரண்மனையிலுள்ள கூத்தனைக் கண்டு, "பேய்கையறுமோ" எனக் கேட்டனன். அதற்கவர் கண்ட சுத்தியாக—

கரைக்குவடக்கி[illegible]க்குங்காளிகா[illegible]ம்மைக்
கரைக்கி[illegible]சா[illegible]தைத்தொட்டப்[illegible]பா—திரைத்து
மறைக்கவ[illegible]யாதவன்பே[illegible]கையைக்
குறைக்[illegible]கன்கத்திகொண்டு.

எனவோர் வெண்பா கூறி மகிழ்வித்து உடனே யவனிடத்தினின்றும் விடைபெற்று, அப்பாண்டி நாட்டின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள சொக்கலிங்கப்பெருமான் மீது "சோமசுந்தரருலா" என்னுமோர் பிரபந்தம் பாடித்துதித்து,

அந்நாட்டின்கணுள்ள மற்றத்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு சென்று சழநாட்டின்கணுள்ள திருக்கேதீச்சர முதலிய தலங்களையு மலைநாட்டின்கணுள்ள திருவஞ்சைக்களமுதலிய தலங்களையுந் தரிசித்துக்கொண்டவராய் கொங்குநாட்டின்கணுள்ள திருவெஞ்சமாக்கூடன் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டிருக்கின்றார். அக்கா லங்கரசியற்றுவோனாகிய சேரராசன் தனது நாட்டில் கவிச்சக்ரவர்த்தி வந்திருக்குஞ் சேதி தெரிந்து, ஓர் நாள் பிராதக்காலையில் ஓரானைமீது தனியே புறப்பட்டு அவரிருக்குமிட நாடிவருகின்றான். அக்கா லவ்வூரின்கண் வசிப்பவளும் விவாகமில்லாதவளுமான ஓர் பெண் வியபிசாரத்தால் ஓராண் குழந்தை பெற்று, அதை யபலவர்தியா வண்ணங் கள்ளியத்தாழையுங் கலந்தோங்கி வளர்ந்த ஓர் காட்டினருகே கிடத்திச் சென்றனள். அவ்வழியா யரசன் வருகையில் சில கழுக்கள் மேலிருந்து கீழிறங்குவதுங் கீழிருந்து மேலெழும்புவதுமாயிருக்கக் கண்டு சமீபத்திற்சென்று, அங்கு கைகளையசைத் தழுது கொண்டிருந்த குழவியை நோக்கி அதன்காரணமென்றறிந்தெரியாதவனாய்க் கிலேசித்து, அதைக் காமேய்த்துக்கொண்டிருந்த சிறுவனை யதற்குக் காவலாக வைத்துச் சென்று கூத்தனாரைக் கண் டஞ்சலித்து, "காட்டிற்கழுகோட்டுங்கை" எனக்கூறி நின்றான். அவனுக்குக் கூத்தர் பிரதியஞ்சலி செய்து,

> கண்டாயோ [illegible]ர்[illegible]ந்தா கானகந் தாக்கள்ளியின்கீழ்
> வெண்டாழை பூத்து[illegible]ளக்கெரியப்—பெண்டாலி
> பூட்டுதற்குமுன்னமொரு[illegible]த்திரனைப்பெற்றெடுத்தாள்
> காட்டிற்கழு[illegible]காட்டுங்கை.

என வோர் வெண்[illegible]கூறிச் சந்தே[illegible]நிவிர்த்தி செய்தனர். அஃதுணர்ந்த சேரராச னகமகிழ்ந்து அ[illegible]ரைச் சின்னாள் தன்னிடத்திருக்குமாறு வேண்டினன். அதற்கவ ரிசைந்து தமது பரிசனரோடு மவனரண்மனையிற் சின்னாளிருந்து விடைபெற்றுத் துளுவதேய நோக்கிச் சென்று, அங்கணமுள்ள திருக்கோகர்ண முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு வடநாடு சென்று திருப்பருப்பதமுதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீகா[illegible]

லயங்கிரிக்குச் செல்ல முயன்றவர் பூர்வந் திருநாவுக்கரசு சுவாமி கள் தமது பாதம் பரட்டளவு தேயச்சென்றுங் காணப்பெருது மீண்டுவிட்டனரேயென்னு மாகுமத்திருலோ எம்மன்னையாகிய காரைக்காலம்மையார் தலையினுல் நடந்தடைந்த தலத்தினை நாம் காலினுல் நடந்தடைதல் கடுங்குற்றமாமென்னுங் கருத்தினுலோ செய்மையிற்றனே நின்று பலமுறை சேவித்துக்கொண்டு மீண்டு, அடுத்த வருடத் தற்பிசிமாத மேருங்கால் ஆன்ருேராற் சான்ருேருடைத்தெனக் கூறப்பட்டுள்ள தொண்டைநாட்டை யண்மினர். அந்நாட்டின் கணக்கர் லாசியற்றிவந்த சிவாமக சுந்தரதேவனென னுஞ் செங்குந்த மன்னன் சில சாரணரால் கவிச்சக்ரவர்த்தி வருகின்ருரென் றுணர்ந்து, உடனே பல வரிசைகளோடு மெ சென் ரெழுந்துவந்து, சின்னு ளந்நாட்டின்க ணிருக்கவேண்டுமெ ன்க வரன்மனையொன்றை யலங்கரித்து விடுத்து, அவர்க்கு மவர் பரிசனர்க்கு மிகவிந ாவகவமான உஞப்பைக ளனுப்புவித் திருந்தனன். அக்கால் கூத்தனுர் நாம் தலயாத்திரையாக வந்து வதிதல் காலங்கழித்தல் கடமையாமெனக்கருதி, அத்தொண்டை மண்டலத்திற் கிராமகாணியாய் திருவலைய பரம்பரை செங் குந்தர் சங்க மாவடி இங்காதன முதலிய ஞாயிற்றுன்ள திருவேகம்ப முதலான சிவத்தலங்களையும் திருவெஃகா முதலிய வைணவத்தலங்களையுந் தரிசித்து, இவ்விருவகைத் தலங்களினு மந்நாட்டினர் ஏனையநாட்டினர் போலாது சமயசளுகூ சன்மார்க் கமாய் நடாத்திவருந் திருவிழாக்கள் முதலியனவைகளைக் கண்டு வியந்து, "திருவேகம்பப்பெருமான் கூற்றிருக்கை - திருக்கச்சியேகாத் தற்பவமாலை" என அரிய பிரபந்தங்கள் பாடித் துதித்து, அடுத்துள்ள திருக்காளத்தி முதலிய தலங்களையுஞ் சேவித்துக்கொ ண்டு மீண்டு அக்காஞ்சிமாநகரியைக் கடத்தற்கரியராய்ப் பின்னுஞ் சின்னு ளங்கணமிருந்தனர். அக்காலத்து சேனபதிசிவாமென னுங் குமரகோட்டத்தி லெழுந்தருளியுள்ள குமாரக்கடவுளுக் குக் கந்தஷஷ்டித் திருவிழா நடந்துகொண்டிருக்குமோர் தினத்தில், அக்கடவு ளுற்சவங்கொண் டெழுந்தருளுஞ் சமயத்தில் வான முற்று மேகங்களெங்கணுந் திரண்டு மின்னிக் குமுறி மழைபெய்

தற் காரம்பித்தன. அப்போ தவ்வாலயத் தருமபரிபாலனர் யா
ரும் வருந்தி நிற்பதைக் கண்ட கூத்தர் வானத்தை நோக்கி,

வந்துமழைபொழியுமவானேவெருசூர்தடிந்த
கந்தன்றிருவிழாக்காலத்திற்—றெருந்தரையா
நீர்த்துளியையூற்றிவிடனேர்த்தியலமாற்றிவிடு
கீர்த்திவருமாட்டென்மொழிகேள்.

என்றோர் கவிகூறினார். உடனே மேகங்கள் யாவுங் கலைந்து உற்சவம் வெகு சிறப்பாய் நிறைவேறின. அக்காலத் தருமபரிபாலனரா லுபசரிக்கப் பெற்ற கூத்தனர் அரசனைக் கண்டு, இனியா மகதநாடு சென்று அங்குள்ள தலங்களையுஞ்சேவித்துக் கொண்டு மாசிமாத மகாசிவராத்திரிக்குள் சோழநாடு சென்று சேர்தல் வேண்டுமெனக்கூறி விடை கேட்டனர். அதுகேட்டவரசன் சற்றுலோசித்து, நமது குமாரனுக்கு வருகிற தைமாதத்தில் திருமணஞ் செய்து முடிக்கப் பிரயத்தனஞ்செய் திருக்கின்றமையால், அக்கால் தேவரீ ரிங்ஙன மெழுந்தருளியிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கவ ரப்படியே யாகுமென்று கூறி விடைபெற்றுப் பிரயாணங்கொண்டு மகதநாட்டினையடைந்து திருவண்ணாமலை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டிருக்கையில், திருவெண்ணைநல்லூரில் கிராமாதிபதியாய் மிகப்பிரசித்திபெற்றுள்ள வேளாண்குல திலகராகிய சடையப்பிள்ளையென்பவர் கம்பவாணராலவர் வரவை யுணர்ந்து, அக்கம்பவாணரையுந் தனது சகோதரர் முதலிய பரிசனர்களையும் பல வரிசை விபவங்களோ டழைத்துக்கொண் [illegible] சென்று வந்தனம்புரிந்து, தேவரீ ரிந்நாட்டின்க ணெழுந்தருளியது யாங்களு மெம் முன்னோர்களுஞ்செய்த புண்ணியப் பயன்கள் யாவும் ஒருருக் கொண்டெழுந்தருளியது போலாம். ஆகலின் தேவரீர் கார்த்திகைத்தீபமகோற்சவமார்கழித் திருமஞ்சன விபவ முதலிய சிறப்புக்களைத் தரிசிக்குமாறு, இன்னு மிங்ஙன மிருத்தல்வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக் கூத்தரிசைந்ததனும் சடையப்பிள்ளையு மவர் சகோதரர்களும் அவர்க்கு மவர் பரிச

னர்கட்குஞ் சில விடுதிமாடங்கள் தேவர்களுங்கண்டு வியக்க விநோதமா யலங்கரித்து விடுத்து, அரசரெந்தப்பொருளைவேண்டு மென வினவினுங் காமதேனுவைப்போ லந்தந்தப்பொருளை யாதோஷமின்றித் தந்து நிதமொருவண்ணமா யுபசரித்து, அந்நாட்டின்கணுங்காங்குள்ள கணிகையரையெல்லாம் வருவித்து ஆடல் பாடல்முதலியவைகளையும் அதிசிரத்தையாய்ச் சிறப்புறச் செய்வித்துவந்தார்கள். அக்காலவ் வாடல்பாடல் செய்துவருங் கணிகையர் கூட்டத்துள் திருவண்ணாமலையினிருந் தவண் வந்துள்ள பிறவிக்குருடரான கணிகையர் நால்வர், அரம்பை யூர்வசி முதலிய தேவகணிகையரு நாணப்புரியும் ஆடல்பாடல்களிற் றேர்ந்துளோர். இவர்களுள் முதாயாயினோள் தாளமொத்த, இவள் மகளாயுள்ளாள் மிருதங்கமொலிக்க, இவட்குப் புதல்வியரான விருவரில் மூத்தா ளிராகமிசைக்க, இளையாள் நாட்டியஞ்செய்வள். இவர்களை யொரு நாள் சடையப்பிள்ளை யரங்கிலேற்றி ஆடல்பாடல் முதலியவைகளைச் செய்விக்க, அவர்க ளப்பிரபுவினுள்ளமு மற்றையர் சிந்தையும் பூரிக்குமாறு அவைகளைச்செய்து முடித்தபின் அவண் வந்துள்ள கூத்தனாது தெய்விகப் பிரபாவத்தை முன்னரே கேட்டுளோராதலால் அவரிருக்குமிடத்துச் சிலர் கொணர்ந்துவர வந்து தீர்க்கதண்டஞ்செய்து, தேவரீரிக் குருட்டுப்பாவிகளை யாட்கொள்ளவேண்டுமென் றிரந்தனர், அதுகண்ட கூத்த ரவர்கள்பா லிரக்கமுற்று,

> கூத்தாள்விழிகணெடுங்கயலேலாங்கூத்தாட்கு
> மூத்தாள்விழிகவின்முழுநீல—மூத்தாள்த
> னுத்தாள்விழிவள்ளிக்கமாந்தா—
> னுத்தாள்விழிகளின்டம்பு.

எனவோர் கவிதைகூறி யெழுப்பணித்தனர். அம்மாத்திரத்தி லவர்கள் இருட்டறையினின்று மவெளிப்பட்டவர் போலாகித் தங்கள் விழிகள் யாவும் விளங்கப்பெற்றெழுந்து, அவ்வரங்கின்கணுள்ள பிரபுக்களையெல்லாங் கண்டு நமஸ்கரித்து விடைபெற்று, இருவினையொப்பு மலபரிபாக முண்டாய் முத்தியின்பமடைந்தாரைப்போலத் தங்கள் வாசத்தலத்தை நோக்கிச் சென்

ரூர்கள். அதுமுத லக்காலவரில் மூதாயொருத்தி நீங்க மற்றை யிர் மூவருந் தக்க பிரபுக்களை நேசித்துக்கூடி, ஆடையாபரண தனதான்யாதி சம்பத்துடனே வாழ்வதாயினர். இப்பாலத் திருவெண்ணைநல்லூரின்கண் வேளாண்குலப் பிரபுக்களாற் சன் மானிக்கப்பட்டுள்ள கவிச்சக்ரவர்த்தியானவர் கார்த்திகைத்தீப மகோற்சவத்தையும் மார்கழித் திருமஞ்சனச் சிறப்பையுந் தரி சித்துக்கொண்டு, "திருவரங்கைவளமியற்றூண்டகம் - திருவெண் ணெயவளவழித்தாண்டகம்" [illegible] மிருவகைப் பிரபந்தங்கள் பா டித் தைமாதமுதலில் தொண்டைநாடுசேர்ந்து, திருக்காஞ்சிநகரி லரசியற்றுஞ் சிவராமசுந்தரதேவனைக் கண்டுகொண்டனர். உட னே யவ்வரசன் தனது புதல்வனுக்குத் திருமணச்சடங்குக்காக வேண்டிய காரியங்களின் முயன்று நடாத்தி வருங்கால் திரும ணடபந்தலில் கூத்தனரை யழைத்துக்கொண்டு சென்று, தேவரீர் திருக்கரத்தால் இக்கல்யாணப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் அநு கரிசிபெய் தாசிர்வதிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தான். அக் கால் கூத்தனர் சகல தேவர்களையு மவர்கள் தேவிகளோடிருப்ப தாகத் தியானித்துத் தம்பதிகளிருவர்க்குந் தனித்தனி அநுக ரிசி சொரிந்து (மானைத்தாங்கிய கையையுடையவரும் - பஞ்சா க்கரத்தையுடையவரும் - பூர்வம் பிரமனுடைய வொப்பற்றவயை மாகிய - சிரத்தினைக் கிள்ளிய உகிராகிய வாளையுடையவரும் - உலகமெங்குந் துதிக்கின்ற பார்வதிதேவியாரைத் திருமேனியி லுடையவருமாகிய சிவபெருமானென்னு மிவரும், சார்ங்கமென் னும் வில்லைக் கையிலேந்தினவரும் - அழகிய சக்கராயுதத்தை யுடையவரும் - பூர்வம் கஞ்சனுடைய வொப்பற்ற வுடலை நாசப் படுத்திய உகிராகிய வாளையுடையவரும் - உலகமெங்குந் துதிக் கின்ற கரிய திருமேனியை யுடையவருமாகிய விஷ்ணுமூர்த்தி யென்னு மிவரும் உங்களை யெக்காலத்திலும் இனிதாகக் காத்த ருளுவார்கள்.) என்னுங் கருத்தமைய மைத்து,

சாரங்கபாணியுஞ்சக்கரத்தர்களுஞ்சனைமு
ளைரங்கன்கொய்தவுகிர்வாளர்—பாரெங்கு
மேத்திடுமையாகரினிதாயிவரும்மைக்
காத்திடுவரெப்போதுங்காண்.

எனவோர் கவி யிருபொருட் சிலேடையாகப் பாடி ஆசிர்வதித்தனர். இப்பாலத்திருமணச் சடங்குகள் யாவு நிறைவேறும் வரையில் கூத்தனு ரங்ஙனமிருந்து, பின்ன ரரசனிட மரிதில் விடை பெற்றவராய் மகதநாட்டின் வழியாகச் சோழநாடு செல்லக்கருதிப் போகையில் திருவண்ணாமலையைச் சமீபித்தனர். அக்காலங்கு தைப்பூச மகோற்சவ நடப்பதைக்கண்ட கூத்தனுர் அவ்வுற்சவ முடிந் தீர்த்தசாம பூசை நிறைவேறும் வரையிலங்கேயிருந்து பின்னர் பிரயாணமாகிச் செல்லுகையில், திடீரென் றுகாயமெங்கு மேகங்கள் பரவி திரண்டு மழை பெய்தற் காரம்பித்தன. அக்காலவர் பரிசனர் யாரும் இம்மழையை நிறுத்தல் நமது கவிச்சக்ரவர்த்திக் கரிதல்லவென்று கருதினுர்கள். அஃதுணர்ந்த கூத்தர் உலகோபகாரமாகப் பெய்யற்பாலதான மழையினைத் தேவகாரியத்தின் பொருட்டன்றிச் சுயகாரியத்தின் பொருட்டு நிறுத்தல் தோடமென்றுகூறி, அத்தருணத் தவ்வீதியில் முன்னம் பிறவிக் குருடராயிருந்து தம்மாற் கண் பெற்றுள்ள கணிகையர்வீடு தோற்றக்கண்டு, அது கபாடபந்தனஞ் செய்யப்பட்டிருந்தமையால் அதைத் திறப்பிக்கச் சிலரையேவினர். அவர்கள் விரைந்துசென்று கபாடத்தினைப் புரத்துத் தட்ட, அக்கால் தலைக்கடைத்தானத்திற் றீபம் வைத்துக்கொண்டு சயனித்திருந்த அக்கணிகையரின் மூதாயானவ ளஞ்சிப் போபோவென்று கடிந்து கூறினள். அதைக்கேட்டுணர்ந்த கூத்தனுர் நகைத்துத் தாமேசென்று, (இருளே யிருளே விழுங்குகின்றதென்று சொல்லும்படி மிக விருண்டு யாதோரிடத்தையுங் காணக்கூடாமல் கண்களிரண்டுங் கைக்கோலின் வழியாகவே செல்லவுண்டாகிய கருங்குருட்டுப்பாதை யாத்திரை செல்வோர்க்கு யாதனை விளக்குமேயென்று பாராமல் அதற்கஞ்சிவந்து தட்டிக் கூவியுங் கடினசிந்தைபோல் போபோவென்று துரத்திய பழைய குருட்டுக் கிழவி! உன் வீட்டின் கபாடத்தினை நீ திறத்தற்குக் கூடாவிடினும் உன் வீட்டினகத்துள்ள தாரைக் கொண்டாவது திறந்திடாய்) என்னுங் கருத்தமைய வமைத்து,

இருளையிருள்விழுங்கியெவ்விடமுந்தோன்று
திருவிழியுங்கோல்வழியேயேக—வருமிரவைப்

பாராதுபோவென்பழையகுருடகதவை
யாராலேனுந்திறந்திடாய்.

என்றோர் கவி கூறினர். அதுகேட்ட கிழத்தாசி இடிச்சத்தங்கேட்ட நாகம்போலஞ்சிக் கண்கள் பழையபடி குருடாகித் தீபவொளியையுங் காணக்கூடாதவளாய்க் கலங்கி, ஓ சுவாமி அடியாள் தேவரீருடைய வரவென்றறியாது செய்த பிழையினைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதுகேட்ட கூத்தருளமிரங்கி, (இருளை யிருளே விழுங்குகின்றதென்று சொல்லும்படி மிக விருண்டு யாதோரிடத்தையுங் காணக்கூடாமல் கண்களிரண்டுங் கைக்கோலின் வழியாகவே செல்லவுண்டாகிய கங்குற்போதைக் களவுமுதலிய விடர்களுக்கேதுவாமேயென்று பாராமல் யாங்களு மதனை யோசியாமல் வந்து கட்டிக் கூவியும் இரக்கமான சிந்தையோடும் வாவென்றழைத்த அம்புபோலு மழகிய கண்களையுடையாளே! உன் வீட்டின் கபாடத்தினை ஈதலிற்குறையாது நிறைவு பெற்றுள்ள உன் கரத்தாற் றிறந்திடாய்.) என்னுங் கருத்தை யமைத்து மேற்கூறிய கவியின் பிற்பாதியை மாற்றி,

இருளையிருள்விழுங்கியெவ்விடமுந்தோன்று
இருவிழியுங்கோல்வழியேயேக—வருமிரவைப்
பாராதுவாவென்பகழிவிழியேகதவை
யாரார்கையாற்றிறந்திடாய்,

எனக் கூறினர்,

35. அம்மாத்திரத்தி லவள் தனது கண்களிரண்டும் விளங்கப்பெற்றவளாயெழுந்து கதவைத்திறந்து வருவித்திருத்தி, தனது புத்திரி பௌத்திரிகளாதியரால் அவரைப் பூசிப்பித்துபசரித்தனள். அம்மாதாயானவள் செய்த வுபசரிப்பிற்கும் அவள் புத்திரி பௌத்திரிகள் செய்த பூசைக்கு முவந்த கூத்தனர் அவர்களை யாசீர்வதித்து விடிந்தபின் பிரயாணமாகிச் சோழநாட்டெல்லையைக் குறுகி, காவிரியாற்றின் வடகரையோரமாக

வே சென்று சிதம்பரத்தலத்தை யடைந்து, சில வேவுகாரரால்
தமது மீட்சியையும் தாமங்கு நடத்த வுத்தேசித்திருக்குஞ் சிவா
ராதனைக் காகவேண்டிய பொருள்களையும் ஓர் திருமுகத்தெழு
திக் குலோத்துங்கசோழனுக் கனுப்பி, அவனால் வரப்பெற்ற
வப்பொருள்களைக்கொண்டு திருவாராதனை சங்கம பூசை முதலி
யன நடாத்தித் தில்லைவா ழந்தணர்களை யெல்லாந் தனித்தனி
பூசித்துபசரித்து அவ்வவர் விரும்பியவற்றை யெல்லா முதவி,
யேனைய வந்தணராதியர்க் களவற்ற தானங்கள் வழங்கிப் பிரயா
ணங்கொண்டு புவனை யென்னும் பட்டணத்தை யடைந்து, அப்
பட்டணத் தருகிலுள்ள ஆலூரில் அரசச் செல்வத்தோடு வாழும்
செங்குந்தத் தலைவர்கள் அங்குச் சபைகூடி யிருத்தலைக் கண்டு
அச்சபையுட் புகுந்தனர். அச்சபையா ரிவரைக் கண்டவுடனே
எதிர்கொண் டழைத்துச் சென்று உபசரித் திருக்கச் செய்து,
க்ஷேமாதிசயங்களை விசாரித்தானபின் அடியில் வருமாறு கேட்
கத் தொடங்கினர். ஐயா புலவரேறே! சில தினங்கட்கு முன்
நான்காம் வருணத்தராகிய காராளருடைய குலவண்மையைப்
பற்றிக் கம்பனென்னு மோர் கவிஞனனவன் ஏரெழுப தென்னு
மோர் பிரபந்தம் பாடித் திருவெண்ணை நல்லூரில் அரங்கேற்றிய
தாகவும், அதன்பின்னர் நான்காம் வருணத்தொருபகுதியான
வன்னியருக்கும் சிலையெழுப தென்னும் ஓர் பிரபந்தம் பாடிக்
கொடுத்ததாகவும் கேள்வி. நம்முடைய மரபு முறைமை மூவரு
ணத்தாருடைய நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டுள்ளதா யிரு
ந்தும், மனுவூர் வேந்தராகிய நீர் இம்மரபிற்கோர் மாணிக்கத்
தீபம்போன்று விளங்கியும், இவ்வுலகையாரு முத்தமிழ்வேந்த
ரும் உம்மைக் கவிச்சக்கரவர்த்தியென் றழைத்துக் கொண்டாடும்
படிக்குப் பிரகாசித்தும், இதுவரை நமது குலவண்மையைப் பற்
றியோர் பிரபந்தமேனுஞ் செய்யாதிருத்த லழகோ? ஆனதால்
நீர் சிலநாள் இவ்விடமிருந்து ஓர் பிரபந்தம் பாடி அரங்கேற்று
தல் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள்.

அதுகேட்ட கூத்தர் அவர்களை நோக்கி, ஓ சபையார்களே
நீங்கள் கொண்ட கொள்கை எனக்கு வியப்பைத் தருகின்றது.

நமது மரபிற்கும் ஓர் பிரபந்தம் வேண்டுமா? மட்குடத்திற்குச் சித்திரமெழுதுதல் தகுதி, பொற்குடத்திற்கும் அஃதெழுதுவா ருண்டோ? முன்னமே குமரகோட்டத் தருச்சகராகிய கச்சியப்ப சிவாசாரியர் தாம்பாடிய கந்தபுராணத்தில், நமது மரபினைப்பற் றிப் பாடாந்தரங்களி லுண்டாயுள சரித்திரங்க ளனைத்தையுந் திரட்டிச்சேர்த்து மொத்தத்திற் பன்னீராயிரஞ் செய்யுளாக முடி த்திருக்கின்றனர். அவரோ வடமொழியினுந் தென்மொழியினு மிகவல்லவராய், ஆசாரியாபிஷேகம் பெற்றவராய், வேதாகமாதி களிற் றேர்ந்தவராய் மிகப் பிரசித்தியுற் றிருந்தவர். அவரப் புராணத்தினைத் தம்மிச்சையாற் செய்யத்தொடங்காது, குமர கோட்டத்தடிகளின் கட்டளையால் அவர் முதலடி யெடுத்துக் கொடுக்கப் பாடி முடித்தனர். அவரப் புராணத்தைப் பாடும் போது தினந்தோறு முடிக்கின்ற நூறு செய்யுட்களையும் ஏட்டி லெழுதி, அவ்வேட்டையு மெழுத்தாணியையும் அக்குமரகோட் டத்தடிகளின் திருவடிக்கீழ் வைத்துத் தமது மாளிகைக்குச் செ ல்லுவார். அக்கடவு ளவற்றைப் பிழையறத் திருத்திவைப்பது வழக்கம். இவ்வாறாகவே யப்பன்னீராயிரம் பாடலும் பாடித் திருத்தமான பின்பு, அச்சிவாசாரியர் அப்புராணத்தைக் குமர கோட்டச் சந்நிதியி லரங்கேற்றி, அத்திருமறையுடனே தந்தச் சிவிகையி லெழுந்தருளி மாடவீதியை வலம் வரும்போது இரு பத்துநான்கு கோட்டத்துமுள்ள வேளாள ரெல்லாம் அச்சிவி கையைத் தாங்கியும், வெண்சாமரம் வீசியும், குடை கொடிகள் பிடித்தும், மங்கல வாத்தியங்கள் முழக்கியும் சென்றார்கள். வைசியர் பலவகைத் தான தருமங்களைச் செய்துகொண்டு நடந் தார்கள். அரசர் நவசந்திகளிலிருந்து மரியாதை நடத்தினா கள். அந்தணர் நாற்புறத்தும் வேதகோஷம் செய்துபோயினர். அக்காஞ்சி மண்டலத்துள்ள பல செங்குந்த மரபினரெல்லாம் கந்தபுராணங் கேட்கவந்த பலவகைச் சனங்கட்கும் அன்னபா னாதிகளை யளித்திருந்தனர். அத்தகைய புராணத்தில் நமது பூர் வோத்தரத்தைப் பற்றிச் சொல்லியிருப்பதே போதுமன்றோ? எனக்கூறினர்.

அதற்கச் சபையார் கூத்தரை நோக்கி, ஐயா புலவர் பெருமானே! நீர் கூறியவனைத்து முண்மையே. எல்லாப் புராணங்களிலும் அவ்வவ் வருண வொழுக்கங்களைப் பற்றியும் செயல்களைப் பற்றியும் விவரமாய்க் கூறியிருக்க, அவ்வவர்களு மேன் தனியே வேறொரு பிரபந்தம் செய்துகொண்டார்கள்? புராணமென்பது பொதுவென்றும், பிரபந்தமென்பது சிறப்பென்றும், புராணமென்னு மிலக்கணத்திற்குப் பிரபந்த மிலக்கியமென்றும் ஆன்றோர்கள் கூறுவது மரபல்லவா? இது தேவரீர் அறியாததா? என்றார்கள்.

அதுகேட்ட கூத்தர் புன்முறுவல் பூத்து, ஓ எனதன்பர்களே! ஆன்மாக்கள் பிரமசிருட்டியின் வயமா யுண்டானபோதே அவ்வவற்றின் குணபேதங்களால் வருணபேதங்களுண்டாய்விட்டன. அவற்றைப் பேதிப்பவருமில்லை, அவையும் பேதப்படா. அவற்றுள் தாழ்ந்த நான்காம் வருணத்தர் மூன்றாம் வருணத்தரா யுயர்வடைய முயலினும், மூன்றாம் வருணத்த ரிரண்டாம்வருணத்தராச் சிறப்படையப் பிரயாசப்படினும், இரண்டாம் வருணத்தர் முதல் வருணத்தராய் மேன்மையடையப் பிரயத்தனஞ் செய்யினும், அவ்வவ் வருணத்தினரும் அவ்வப்பிறவியில் தத்தம் வருணாச்சிரம தருமத்திற் றவறாதிருந்தால் மாத்திரமே மறுபிறவியில் அம்முயற்சியும் பிரயாசையும் பிரயத்தனமுங் கைகூடுமேயன்றி அவ்வப்பிறவியிற் கைகூடா. இதை யுணராமற் பழமையாயுள்ள புராணங்களிலும் இதிகாசங்களிலும் பிரபந்தங்களிலும் தமக்குத்தாமே வரைந்து வைக்கினும் வாய்மதம்பேசினும், அடையும்பயன் யாதுமில்லை. அந்தணருட் கோளகனாகப் பிறந்த கம்பன் பின்னர்ச் சங்கசூத்திரனால் வளர்ந்து அதன்பின்னர் சற்சூத்திரனாற் கல்வித்தேர்ச்சி முதலியன வடைந்தோனாகையால், அந்தச் சற்சூத்திரன் மரபினராகிய வேளாளரைக்குறித்து, அவர்களுழவுத் தொழிலினையும், அத்தொழிலினுக் கின்றியாமையாதனவாகிய ஏர் கொழு கலப்பை முதலிய கருவிகளையும் சிறப்பித்துப் பாடினன். இஃதபிமானம்: பின்னர் சங்கசூத்திரராகிய வன்னியரைக் குறித்து, அவர்கள் காவற்றொழிலினையும்

அத்தொழிலினுக் கின்றியமையாதனவாகிய வில்முதலிய கருவிகளையும் சிறப்பித்துப் பாடினன், இஃது பொருண் மோகம்; இவ்வாறு கற்பனை வாயிலாக வந்த அச்சிறப்பினாற் கண்ட வதிசயம் ஒன்றுமில்லை. "இவ்வுலகிற் செல்வரை யறிஞர் சிறப்பித்துக் கூறி யாசித்தல் போலத் தம்மையாதரித்தோர் யாரேனும், அவர்களைச் சிறப்பித்துப் பாடிப் பரிசு பெறுதல் சில புலவரது கொள்கை. அந்தணர் முதலிய முதன் மூவருணத்தார்களின் ஒழுக்கங்களனைத்தையும் ஒருங்கு பெற்றவராயும், கைலாய பரம்பரையினராயும், நந்திகணத்தவ ரம்சத்தராயும், பசுப்பிரமணியர் மரபினராயுமுள்ள நாம் நமது குலவளத்தைப் பற்றிச் சிறப்பிக்கப் புகுதல்; இயற்கை யழகிற்குச் செயற்கை யழகு செய்தல் போலாம். இந்தச் செயற்கை யழகோ நிலைப்பதன்று. இயல்பிற்றானே பல சிறப்போடுங் கூடிய நமது குலவண்மையைப்பற்றிப் பாடுவிக்க வேண்டில், நம்மினுமுயர்ந்த வருணத்த னொருவனாற் பாடுவித்தலழகு. நம்மிற் றாழ்ந்தோனாற் பாடுவித்துக் கொள்ளுத லழகன்று. ஆகவே நம்மை நாமே சிறக்கப் பாடிக்கொள்வது அதனினுங் குறைவன்றோ? எனக்கூறி யெழுந்து, தமது நித்திய நியம நிறைவேற்றிக்கொள்ளுமாறு அக்கடுத்த வீதியிலிருக்குஞ் பூர்வம் தம தொருசாலை மாணாக்கரும் அந்தண சிரேஷ்டருமான சோமாசியாண்டார் மனைக்குச் சென்று, அவருடன் சிலநேரம் வார்த்தையாடி சிவபூஜாக்கிருகத்திற்குப் போயினர்.

அக்கால் முன் சபைகூடியிருந்த செங்குந்தத்தலைவர்கள் தங்களெண்ணம் நிறைவேறாமையால் மிக வருந்தினவர்களாய்க் கூத்தரது கொள்கையை யுணராமற் சினந்து, இப்புலவன் நமது மரபினனாயிருந்தும் நமது மரபின் பிரபாவத்தை விளக்கவல்ல ஓர் பிரபந்தம் பாடித் தரும்படி கேட்டுக்கொண்டால் நம்மின் மேலானவனாற் பாடுவித்துக் கொள்வதே சிறப்பென்று கூறிப்போய் விட்டானல்லவா? இனி நம்மின் மேலான வருணத்த னொருவனை நமது தந்தையாகிய சிவபெருமானாற் சிருட்டி செய்துகொள்ள வேண்டும்போலும். இவ்வுலகிற் புன்கவிகளாயுள்ளோர் வெளிப்படின் அவர்களை யெனது வீரவாளாற் பொன்றுவிப்பேனென்

ஞேர் வெற்றிக்கொடித் தம்பநாட்டித் தான் கற்றுள்ள கல்வியின் மாத்திரம் அபிமானம் வைத்துள்ள இவன், தான் பிறந்துள்ள குலத்திற் சற்றும் அபிமானமில்லாதவனா யிருக்கின்றான், இத்தகையனை நாம் இவ்வுலகிலிராதபடி கொன்றுவிடுவதே சரியென்று தங்களுக்குள் நிச்சயித்துக் கொண்டவர்களாய், உடனே வளைதடி வாள் முதலிய வாயுதங்களையேந்தி அவரிருக்குமிடத்தை நாடி வந்தார்கள், அதுகண்ட சோமாசியாண்டார் திடுக்குற்று; அவர்களதியுக்கிரத்தோடு மாயுதபாணியராய் வந்த காரணத்தைக்கேட்டறிந்து நடுங்கி, கூத்தர் சிவபூஜாக்கிருகத்திற்குப் போயிருப்பதால் வந்தவுட னவரையனுப்புகின்றேன் அதுவரையில் சற்றிங்கிருங்களென் றிதமாகக் கூறினர்,

அவர்க ளவ்வாறே யிருந்த பின்னர் அந்தணரொன்றுந் தோன்றாதவராய்க் கிலேசித்து, இத்தமிழ்நாடெங்கும் கவிச்சக்ரவர்த்தியெனப் பெயர் பூண்டிருக்கும் பெரியோனை நாம எந்த விதங் காட்டிக் கொடுப்பதென வருந்தி, ஆயினுமப் புண்யமூர்த்தியின் பொருட்டு நமதொரு புதல்வனைத்தரின் இகத்திற் றிரவியுள்ளளவு நமக்குப் பெருங்கீர்த்தியும் பரத்திற் கண்ணவரா லடைதற்கரிய மேலான பதவியுங் கிடைக்கற் கையமில்லையென நிச்சயித்தவராய் உடனே தமது புதல்வனை யழைத்துக் கூறவேண்டுவன கூறிச் சம்மதிப்பித்து, ஓர் பேழையுளவனை யிருத்தி மூடிக் கொணர்ந்து தலைவாயிலினிடம் வைத்து, நீங்கள் கருதிவந்த புலவர் இப்பேழையுளிருப்பதால் இதை யிங்ஙனந் திறவாது சோலைக்களங் கொண்டுபோய்த் திறந்து உங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்களென்று கூறினர், அவர்களதை யவ்வாறே அங்குக் கொண்டு போய்த் திறந்துபார்த்து பிராமணச்சிறுவ னிருப்பதைக் கண்டு பயந்து, உடனே பழையபடி யப்பேழையோடும் அச்சிறுவனை யுபசரித் தழைத்துக்கொண்டுவந்து சோமாசியாண்டாரிடம் விடுத்து, எங்களை ப்ரமஹத்திப் பழிக்காளாக்குதல் உமக்குத் தகுதியோவென்று பெருங் கூச்சலிட்டார்கள். அத்தருணத்திற் கூத்தர் தமது பூஜாக்கிரியைகளைத் துக்குறைவின்றி முடித்துக்கொண்டு அக்கிருகத்தினின்றும் வெளிக்கொண்டு வீதி

யிற் பெருங்கூச்ச லுண்டாயிருப்பதைக் கேட்டு, அக்கூச்சலுக் கேதுவைச் சோமாசியாண்டாரா லுணர்ந்து உடனே யவரோடு தாம் வெளிவந்து, தம்மைக் கொல்லு நிமித்தம் ஆயுதபாணிய ராய் வந்திருக்கும் சபையாரை நோக்கி இதனைக் கூறலாயினர்.

ஓ நற்குலத்தலைவர்காள்! அடியேன் புகல்வதைப் பொறு மையோடுங் கேண்மின்கள்: கம்பன் நல்லொழுக்க மிலனாயினு மகாகவி யென்பதற்கு மறையவர் குலத்த னென்பதற்குஞ் சந் தேகமில்லை. அவன் கற்றுள்ள கல்வித்திறத்தினால் வேளாள ருடைய உழுதொழிற்கான கருவிகளையும் வன்னியருடைய காவ ற்றொழிற்கான கருவிகளையும் வருணித்துப் பாடினான். பெரும் புலவர்களாயுள்ளோர் தேவர்களையும் அரசர்களையும் தமக்காதா வாயுள்ள பிரபுக்களையும், அபிமானத்தாலேனும் பொருள்வேட் கையாலேனும் தனியே புராணங்களாயாக பிரபந்தங்களாயாக அனாவசிது சரிதமுன்னிலையில் வருணித்துப் பாடுதல் மரபு. ஓர் குலத்தினை அக்குலத்தினர் வேண்டுகோளாலேனும் தன்னிச்சை யாலேனும் வறிதே வருணித்தலின் யாதுபயன்?

வளம்படவேண்டாதார்யார்யாருமில்லை
யளந்தனபோகமவரவராற்றால்—விளங்காய்
திரட்டினாரில்லைக்களங்கனியைக்
காரெனச்செய்தாருமில்.

என்னு மான்றோர் வாக்கியம் நீங்களறிந்துள்ளதே: ஆத லால் நான் நமது குலத்தை வருணிக்கமாட்டேன். நம்மைத் தாமே பாடிக்கொண்டார்க ளென்னும் இழிச்சொல்லை நமது குலத்திற்குத் தரமாட்டேன். வேளாளர் ஏர் பூட்டவிட்டால் வேதியராதியர் வேரற்றுப் போவாரென்றும், வன்னியர் சிலையேந் தாவிட்டால் வையகமுற்றும் வரம்பற்றுச் சிதையுமென்றுங் கற் பனைசெய்து பாடுவது எனது வழக்கமன்று. உள்ளதையே கூறி யாவரும் உறுதிகொளச் செய்வேன். தங்குலத்தி லபிமானமும் பிறகுலத்தில் வைமனஸ்யமும் வகிப்பவன் யானன்று. எனதியல் பிவ்வண்ணமாயினும், உலைவாய் மூடலாம் ஊர்வாய் மூடுதலரிது.

எனக்கென முன்னோர் கிடைத்துள்ள பிதிரார்ச்சிதமுஞ்சோழ
ராஜாக்களாற் கிடைத்துள்ள சுயார்ச்சிதமும் எண்ணிலவாதலின்,
எனக்குப் பொருளாசை யில்லையென்பதை இவ்வுலகே யுணர்த்
தும். ஒவ்வோர் சமயத்தரும் தத்தஞ் சமயத்தையே மேலெனக்
கூறி வாதித்தல்போல, ஒவ்வொரு சாதியருந் தத்தஞ் சாதியே
மேலாகக்கூறி வாதிடுதல் வழக்கு. அவ்வழக்கு முடிவி லொழுக்கா
மென்பதற்குச் சான்று, அவ்வக்குலத்தினரது தொழில் விகற்ப
மேயாம். இத்தகைய சமயத்தையுஞ் சாதியையும் பற்றி ஓர்
பிரபந்தங் கூறுமிடத்து அப்பிரபந்தத்தால் யாதேனுமோர் அற்
புதம் விளையின் அதுவே யவற்றை யெல்லாவற்றினு மேலெனக்
கொள்ளற்குச் சாமிபமாகுமன்றோ? ஆதலால் அடியேன் கைலாச
பரம்பரையாகிய செங்குந்தர் மரபிற் றோன்றியுள்ளேனாயினும்,
என்வாக்கில் சத்தியலட்சுமியும் சாரதாதேவியும் சாஸ்விதமாய்க்
குடிகொண்டிருப்பது மெய்யேயாகில், அவர்கட்குச் சகஸ்திர
சாமார்ச்சனையின் பொருட்டு நங்குலத் தலைப்பிள்ளைகள் ஆயிரத்
தெண்மர்கள் இரத்தினைப் பரிசாகத்தருவிரேல் நமதாயுதமாகிய
ஈட்டியைச்சுட்டி, "ஈட்டியெழுபது" எனவோர் பிரபந்தம் பாடி
முடித்து இவ்வுலகினர் வியக்கச் செய்கின்றேன் என்றனர்.

அவர்கள் எக்காலத்தும் தங்கள் செவியிற் கேளாத பயங்க
ரமான அந்தச் சொல்லைக் கேட்டபொழுது திடுக்குற்று, இதெ
ன்ன கோரம்? "கூத்துப் பார்க்கப் போனவிடத்திற் பேய் பிடித்
தது போலவும் - பிள்ளை வரத்துக்குப் போனவள் புருஷனைப்
பலி கொடுத்தது போலவும்" இருக்கிறதே: இவர் நம்மவராயிரு
க்கிறவென்கிற பாத்தியதைப் பற்றிப் பாட்டுப்பாட வேண்டுமெ
ன்று சங்கமாகக் கேட்டாற் கொஞ்சமாவது இரக்கமில்லாமலும்
தாக்ஷிணியமில்லாமலும் ஆயிரத்தெண்மர் தலைகளைக் கொடுக்க
வேண்டுமென்றும், அவைகளும் தாய்க்குத் தலைப்பிள்ளையின்
தலைகளாயிருக்கவேண்டுமென்றும் துணிந்து சொல்லுகிறாரே:
இதென்ன விபரீதம்? எங்கேயாவது தலையும் கொடுப்பார்களா?
இவருக்குப் பாடவேண்டுமென்று மனமிருந்தால் இப்படிச்சொல்
வாரா? பாடக்கூடாதென்கிற எண்ணத்தைக் கொண்டல்லவோ

"ஏட்டாகோடக்காரனுக்கு வழியெங்கேயெனில் போகிறவன் தலைமேலே" என்பார்போல அகடவிகடம் பேசுகின்றார்; இதற்கென்ன வுத்தரம் சொல்லுகிறது என்றொன்றுந் தோன்றாமல் மரம்போல அசைவற்று மௌனமாயிருந்தார்கள்.

அப்போது கூத்தர் நாம் கேட்டகேள்விக்கு நீங்களொன்றுஞ் சொல்லாமலிருக்கிற தென்னவென, அவர்கள் ஐயா! செல்வஞ் சொல்லுக்கஞ்சாது என்பதற்குச் சரியாய், உமக்குக்கேட்க நாக்கூசவில்லை. எங்களுக்கு மறுமொழிசொல்ல நாவெழவில்லை. என்னசெய்வோம்? நம்முடைய மரபின் மகிமை விளங்கும்படி பாடல் பாடவேண்டுமென்று நாங்கள் உம்மைப் பிரார்த்தித்தவிடத்தில், தலை கொடுக்கவேண்டுமென்கிறீர். பாட்டுக்காகத் தலை கொடுத்தவர்கள் யார்? எங்களைக் கேவல அசாத்தியத்தில் கொண்டு வந்துவிட்டீரே யென்றார்கள். அதற்குக் கூத்தர் புன்னகை செய்து, என்னவாணும்! ஆனைமேலேறுவேன் வீரமணிகட்டுவேன் அகப்பட்ட பெயர்களைத் தலையை யுடைப்பேனென்கிற விளையாட்டுப் பிள்ளைகளுக்குள்ள தைரியமும், ஆராவதென்னைத் தூக்கி மாத்திரம் பிடிப்பார்களானால் எதிர்த்தோர்களையெல்லாம் பிணக்காடாக வெட்டுவேனென்கிற முடவனுக்குள்ள வீரமுங்கூட உங்களுக்கில்லையே: ஆர் தலை கொடுப்பார்களென்கிறீர்களே: நமது குமணராஜன் காட்டிற் போயிருக்கும்பொழுது அவன் தம்பியாகிய அமணராஜன் மாச்சரியத்தால் என் தமயன் தலையைக் கொண்டு வருகிறவர்க்குக் கோடிபொன் கொடுக்கிறேனென்று சொன்ன சமயத்தில் ஒரு வித்வான் குமணன்மேற் கவி பாடிக் கொண்டுபோய்ப் பரிசுகேட்க, அவன்

அந்தநாள்வந்திலையருங்கவிப்புலவோ
யிந்தநாள்வந்தெனைநொந்துநீயடைந்தாய்
தலைதனைக்கொடுபோய்த்தம்பிகைக்கொடுத்து
விலைதனைமீட்டுன்வெறுமைநோய்களையே.

என்றோரகவல்பாடித் தன் உடைவாளையுமெடுத்து அப்புலவன்கையிற் கொடுக்கவில்லையா? ஒரு வணிகனுக்காகப் பழைய

னூரில் வேளாளர் எழுபது பெயர் தங்களுயிரைக் கொடுத்துச் சத்தியத்தை நிலைநிறுத்தவில்லையா? இந்தப் பிரதேசத்திலேயே கொஞ்சக்காலத்திற்குமுன் ஒரேரியில் நிறைபெருகி லுடைபடக்க அதன் கரையி னொருபக்கத்தில் கொஞ்சம் மண் கரைந்தோடுவதை அருகிலிருந்த வேளாளனொருவன் கண்டு, இனி யிரவொரு நிமிஷம் சும்மா விருந்தால் கரை யுடைந்துபோமென்றும், அந்த விடத்தை மண்ணை வெட்டிப்போட்டு அடைத்துப் பலப்படுத்துவோமென்றால் அவ்வளவு சாவகாசத்திற்கு இடமில்லையாதலால் முதலுக்கே மோசம் வருமென்று நினைத்துப் பரிதபித்துத் தன்னுடன் உழவுத்தொழில் செய்துகொண்டிருந்தவனைப் பார்த்து, நீ இந்தத் தர்மசங்கடமான தருணத்தில் முன்பின் யோசனை பண்ணாமல் என்னை வெட்டியெடுத்து அந்த வுடைவாயிற்போட்டு அடையென்று சொல்ல அவனப்படியே மண்வெட்டியினால் அவனை யிருதுண்டாக வெட்டிப்போட்டு அடைக்கவில்லையா? உதாரபுருஷனுக்குப் பொருளும் அக்கவிராஜனுக்குப் பிராணனும் திர்ணமாத்திரந்தானே. இஃதோராதிசயமா? தலைகொடுக்கிறதென்பது நம்முடைய குலத்தாருக் கொருவிஷயமல்லவே; நம் முன்னோர்கள் உயிரைவிடுவதற் கஞ்சாத அதிசூரர்களாயிருந்தார்களென்பதையு நீங்கள் கேள்விப்படவில்லையா? முன்னொருகால சாலவமென்னும் தேசத்திலே செல்லூரென்னுங் கிராமத்திலே சோமநாதரென்னுந் திருநாமம் வகித்த சிவபிரானைக் கருதித் தவஞ்செய்து, ஐம்பத்தாறுதேயத் தரசர்களை யெல்லாம் வெல்லத்தக்க வாற்றலும் பலமாயைகள் வல்ல புஷ்பகத்தேரும் ஆகாயகாமி - பூகாமி - வாயுவேகி - மனோவேகி என்னுங் குதிரைகள் நான்கும் வச்சிரவாள் - வச்சிரதண்டம் - வச்சிரக்கவசம் முதலியவைகளும் பெற்று, அனங்கவல்லி யென்னுங் கற்புடைமனைவியைக்கூடிக் காசினியாளும் காவலரெல்லாந் தனக் கரசிறைதர வெற்றிப்புகழடைந்து சகலராச்சியங்கட்குந் தலையாய சோழமகாராச்சியத்திலேயே எக்காலும் வற்றாத சமுத்திரம்போல் ஓரேரியுண்டாக்கி, அதனடியில் யாவராலு மணுகற்கரிய எழுநிலை மாடமொன்று இருப்புஸ்தம்பங்கள்மீது சமைத்து, அதன்

மத்தியிலோர் எல்லைக்குள் தம்பம் நாட்டி அதனுச்சியி லாகாயமெட்டப்படாம் வீடொன்றமைத்து, இவற்றைச்சூழ சத்தப் பிராகாரங்களும் அவற்றில் முறையே போர்வீரர்கள் - சேனாபதிகள் - யானைகள் - குதிரைகள் - சிங்கங்கள் - புலிகள் - செந்நாய்கள் முதலியவு மிருத்தி, நீரகழியு நெருப்பகழியு நிருமித்து, ஆங்காங்கனேக விருக்கங்களும் புட்பச்செடிகளும் வாய்ந்த சோலைகளையும் பூங்காவுகளையு முண்டாக்கி, இக்கோட்டைக்குக் காவலாகத் துர்க்காதேவியையு மாகாளியையும் உட்புற வெளிப்புறங்களில் தாபித்து, தனக்கடங்கிடவா வரசர்களையெல்லாம் அவ்வவர் மனைமக்களோ டருஞ்சிறையிலிருத்தி வருத்தித் தன்னை வெல்லவல்லோர் யாண்டு மில்லையென்னுங் காரணத்தால் வல்லாளனென்னும் பெயரையடைந்து அளவற்ற துர்க்கிருத்தியங்களைச் செய்துகொண்டிருந்தவனை யேழு நாளையில் வென்று அவன் மனைவிக்கு மாங்கலியப்பிச்சை தந்துவந்து சகல ராசர்களுக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்தருளிய வீரர்கள் நம்மவர்களல்லவா?

36. இவற்றையெல்லாம் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கு நீங்கள் புலியானது பூனையாய்விட்டதுபோல இவ்வாறதைரியப்பட்டுப் பின்வாங்குவீர்களாகில், உங்களுக்குப் பாடல் வேண்டுமென்னுமிச்சையேன் உண்டாயிருக்கின்றது? ஆதலாலந்த வெண்ணத்தை விட்டுவிடுங்களெனக் கூறினர்.

இவ்வசனத்தைக் கேட்ட ஆளூர்ச் செங்குந்தத் தலைவர்கள் அதிக உற்சாகங்கொண்டவர்களாகி யாவரும் ஒருமனதாகச் சம்மதித்து, அவ்வாறே யாகுகவென்று கூறிக் கூத்தரால் ஓராணைக் குறிப்பித்துக்கொண்டு விடை பெற்றுப் போயினர். உடனே கூத்தரும் சோமாசியாண்டாரிடம் விடைபெற்று மீண்டு உறையூரை யடைந்து குலோத்துங்கச்சோழனைக் கண்டு, தாம் தலயாத்திரையாகச் சென்று மீண்டவரையில் நடந்துள்ள சமாசாரங்களையெல்லாஞ் சொல்லி, புவனையில் ஆளூர்ச் செங்குந்த வேந்தர்க்கும் தமக்கு நடந்துள்ள சம்பாஷணைகளையும் தமக்காகச் சோமாசியாண்டார் செய்தருளிய நன்றியின் திறத்தையும

இனித்தாம் நடத்தப்புகுங் காரியத்தையும் அத்தினத்தையும் தெரிவித்தனர். அதைக்கேட்ட வேந்தன் ஆச்சரிய சித்தனாகி, உடனே கருணாகரபாண்டியன் முதலிய அரசர்கட்கும் அந்நாட்டு கிராமாதிபதிகளாயுள்ள பிரபுக்களுக்கும் மற்றைய பெரியோர்களுக்கும் கூத்தர் நடத்த விருக்குங் காரியத்தினைச் செப்பி அத்தினத்தையுங் குறித்துத் திருமுகம் வரைந்தனுப்பி, தனதிராஜதானியைச் சேர்ந்த பலவூர்களிலும் வள்ளுவனால் முரசறைவித்தான். முன்னர் கூத்தரிடத்தினின்றும் விடைபெற்றுச் சென்ற ஆறூர்ச் செங்குந்த மன்னர்கள் தங்களையொத்த நாட்டினர்க்கெல்லாம் தாங்க ளுத்தேசித்து நடத்தப்போகின்ற காரியம் இன்னதென்றும், அக்காரிய மித்தினத்தில் நடத்தப்படுமென்றும், அத்தினத்தி லதற்குவேண்டுவன விவையென்றும் திருமுக முன்னிலையில் தெரிவித்தார்கள். அத்திருமுகங்களைக்கண்ட நாட்டாருள் ஒரு நாட்டினரொழிய,

37. ஏனைய நாட்டின ரெல்லாம் மேற்குறித்த தினத்தில் நற்குண நற்செய்கைகளை வாய்ந்த தங்குலத் தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களை மிக வுற்சாகத்துடன் அவ்வவ் விடங்களிலேயே கண்டித்து, அச்சிரங்களைமாத்திரம் வண்டிகளி லடுக்கிக்கொண்டு உறையூரின்கண்வந்து கூத்தருக்குத் தெரிவித்தனர்.

அவரவர்களைப் பார்த்துநோக்கி, ஒ மொழியாருக முதலியார்களே! நமது குலோத்துங்கச் சோழராஜனுடைய சபாமண்டப வாசலில் வீற்றிருக்கின்ற வீரவட்டம் மகிழ நீங்கள் கொணர்ந்த சிரங்களைச் சிங்காசனம்போலடுக்கி, இரத்தப்பாவாடை விரித்து அலங்கரித்து வைப்பீர்கள் அங்ஙனம் யாம் வருவோமென்று கூறினர். அவ்வாறே யவர்கள் குலோத்துங்கச் சோழனுடைய சபாமண்டப வாசலை யடைந்து, அங்குள்ளோர் யாரும் பயந்து நடுங்கிப் பரிதபித்து வியக்கும்படியாகக் கூத்தர் கட்டளையின்படி நடாத்தி அவர் வரவை யெதிர்பார்த்திருந்தார்கள். இவ்வாறேதத் தலைவருங்கண்டு அரும்புகழ் கொள்ளும்படி செங்குந்த குலதிலகர்களாலமைத்து அலங்கரித்த தலையுயர்ந்திருக்கும் சிங்காசனத்

திங்கள் விளங்கும் சிகைகளின், சில பல்லொளிகாட்டி எல்லியு மஞ்சச் சிரித்துவிளங்கின. சில புருவ நெற்றியிலேற உருத்துப் பார்த்தன. சில கண்கள் செம்பநோக்கி அச்சத்தை விளைத்தன. சில மீசைகள் துடிப்ப சிலிர்த்து கோபக்குறியை விளைத்தன. சில வெற்றித்தன்மையை போதுகின்ற கருங்கோடு விழிகள் சுழல வமைத்திருந்தன. சில பார்வை சரீரமெடுத்த பிரயோசன மின்று கிடைத்ததென்று சூரியனைக்கண்டலர்ந்த தாமரைபோல முகமலர்ச்சி கொண்டன. சில முருகக்கடவுளின் திருவருளைத் தியானித்துக்கொண்டு மௌன நிலைமையடைந்ததுபோல விளங்கின. சில வெள்ளிய மூன்றாம்பிறையணிந்த சிவபிரானுக்கே நாங்களெக்காலு மடிமையென்பதற்குச் சாட்சியாக நெற்றிகளிலே திரிபுண்டரங்காணும்படி விளங்கின. சில பகைவர்கள்மீது கோபித்ததுபோல் வீராட்டகாசஞ் செய்துகொண்டன வென்று சொல்லத்தக்க குறியைப்படைத்தன. இத்தகைய காட்சியைப் பார்த்தவர்களனைவரும் இவ்விளவக் கவிச்சக்ரவர்த்தியின் வல்லமைந்தரோ? செங்குந்த வீரர்களின் மாறுபடாத வீரக்காளையோ? கலைமகளாரின் சிறந்த திருவருள்நாளோ? எந்தகையர்க்கு மறபுத்தை விளக்கும் இத்தினக் காட்சியின் புதுமை எவ்வாறும் முடியுமோ வென்னும் எண்ணங்கொண்ட மனமுடையவர்களாய் அலையற்ற சமுத்திரம்போன்று ஆரவாரமற்றிருந்தார்கள். அக்காலத்து குலோத்துங்கச்சோழன் தனது திருமுகங்கண்டு வந்த பாண்டியராஜன் முதலிய நண்பர்களோடும் பல பிரபுக்களோடும் அங்கணமடைந்து, அவ்வவர்களைத் தக்க வாதனங்களி லிருத்தித் தான் தனதாசனத்தில் வீற்றிருந்தபின், வள்ளுவனாற் பறையறைபக்கேட்டுவந்த பலவூராரும் சதுர்வேத பண்டிதரும் சகலாகமபண்டிதரும் ஆசுமுதலிய கவிச்சரர்களும், தத்தமக்கு வகுத்துள்ள தானங்களில் அமர்ந்திருந்தார்கள். அது சமயங் கூத்தர் தமது நித்திய கன்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, உபாசனாமூர்த்தியைப் பூசித்து, அப்பூசாகோலத்தோடும் சிவிகையிலேறிப் பல விருதுகளும் பரிசனங்களும் புடைசூழ மங்கல வாத்திய முழங்க வெளிக்கொண்டு சபாமண்டப வாசலிலிறங்கி அங்குத் தமக்கமைத்துள்ள சிங்காதனத்தின்மே லிவர்ந்து பதி

மாசனமிட்டு வீற்றிருந்து, இனி கூறப்புகுநூல் வி[illegible]யூறின்றி இனிதில் நிறைவேறுமாறு இருகரங்களையுந் தமது [illegible]ரத்தின் மேற்கூப்பிக் கலைமகளாரைத் துதித்தவணங்கி, ஒருகையிற் கமண்டலமும் ஒருகையிற் புத்தகமும் ஒருகையிற் படிகமா[illegible]யுமேந்தி மற்றொருகையிற் சின்முத்திரை தரித்து வெண்டாம[illegible]ப்புஷ்ப்பாசனத்தில் எழுந்தருளியிருக்கும் பாவனையாக அவருடைய திவ்யசொரூபத்தை மனதிலே தியானித்து இரண்டு காப்புச்செய்யுள் கூறி, அவரது திருவருளைப் புகழ்ந்தும் பிரார்த்தித்தும் "சரஸ்வதியந்தாதி" எனவழங்குவதாக முப்பதுபாக்களால் ஓர் பிரபந்தம் பாடிமுடித்து, அவரநுக்கிரகத்தினால் அற்புதமாகவும் அதிசாதுர்யமாகவும் நவரசாலங்காரத்துடனே குலோத்துங்கச் சோழன்முதலிய சகலராஜ[illegible]களும் சிரக்கம்பங் கரக்கம்பஞ்செய்து வியக்கவும்; வேதாகமபண்டிதர்களாகிய விப்பிரசிரோமணிகள் விம்மிதமடையவும், வைசியச்செல்வர்கள் பலர் வந்தனத்தோடு சந்தனபுஷ்பப் பன்னீராதிகளை அங்கு வந்துள்ளவர்கட்கெல்லாம் வழங்கிவரவும், இவர்க்குநாம் ஏவலராயிருந்தும் இப்பிரபஞ்சமெல்லாம் நம்மாலே[illegible]தா னிருப்பதென்று மனப்பால் குடித்து வீணேவாய்மதம் பேசித்திரியும் சற்சூத்திரர் யாரும்வயிறெரிந்து வாயுலர்ந்து வாடவும், சங்கமச்சூத்திரர் யாரும் சந்தோடமடைந்தார்ப்பரிக்கவும், இடிமுழக்கங்கேட்ட நாகங்களைப்போலக் கவிவாணர்கள் எதுந்தோன்றுமற் கலங்க[illegible] முதலில் விநாயகர்காப்பும் பாயிரமுங்கூறி; பின்னர் பூர்வம் சிவபெருமானால்கைக்கோளனெனப் பெயர்தரப்பெற்ற தங்குலத்தினர் உமாதேவியால் துஷ்டஜன நிக்கிரகம் சிஷ்டஜன ப[illegible]பாலனார்த்தங்கொடுக்கவா[illegible]கிய ஈட்டியென்னுமாயுதத்தைச்சுட்டி விண்ணுலகத்திலுள்ள வமரர்கள் யாரும் நீடூழி வாழ்க: நீடூழி வாழ்க: எனவாழ்த்தி எங்குஞ் சுகந்தமுண்டாகக் கற்பக மலர்மாரிசொரியும்படி எழுபதுபாக்கள் பாடிமுடித்து அப்பிரபந்தத்திற்கு "ஈட்டியெழுபது" எனப் பெயர்சாற்றித் தாமிருந்த சிரசிங்காதனத்தினின்று மிறங்கியருளினர்.

அந்தடமே பவர்மீட்டும் அச்சிரச்சிலைகாருணத்தைப்பார்த்து, சரஸ்வதி தேவியினுடைய திருவுருவை மனதிற் றியானித்து, (அறுபத்துநாலு கலைகளும் எங்கும் பிரசித்தமாய் விளங்கும்படி அவைகளுக்கெல்லாம் முதல்வியும் கண்கண்ட தெய்வமுமாகிய வாணிமாதேவியே! நீ சதுர்த்தச புவனங்களிலும் பிரமாதி பிபீலிகை பரியந்தம் எள்ளுக்கு எண்ணெய்போல் நிறைந்திருப்பதும், சமஸ்கிருதம் திராவிட முதலாகிய அஷ்டாதச பாஷைகளிலுமுள்ள பற்பல கல்விகளையும் கற்றுணர்ந்து கற்பனையுடனே ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரமாகிய நால்வகைக் கவிகளும் பாடவல்லவர்களான வித்வஜனர்களை உறுதியாகப் பரிபாலிப்பதும், சகலலோக சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவருடைய நாவிலிருப்பதுபோல அக்கவிஜனர்களுடைய நாவினிடத்தில் நீங்காமற் சதாகாலமும் நீ வீற்றிருந்து வாழ்வதும் சத்தியமாமல்லவோ? அதற்குத் திருஷ்டாந்தமாகத் துவாபரயுகத்தில் வாணாசுரனென்பவன் தன்மேற் படையெடுத்துவந்த துவாரகாவாசனாகிய ஸ்ரீ கிருஷ்ணசுவாமியுடனே வில்லெடுத்துப் போருக்குப்போன சமயத்தில் அவர் சக்கராயுதத்தைப் பிரயோகித்துக் கண்டதுண்டமாகச்சேதிக்க அவனுடைய ஆயிரந்தோள்களும் அறுபட்டுக் குப்பல் குப்பலாக விழுந்துபோயும் நீ அவனது நாவினிடத்தில் எழுந்தருளியிருந்த மகத்துவ பலத்தினாலல்லவோ அவ்வசுரன் உயிர்தப்பிப்பிழைத்தான். இப்படிக்கெல்லாம் நீ மகிமை விளங்கிய கருணாநிதியாயிருப்பதனால், இப்பொழுது தலையையும் உயிரையும் தடையின்றிக்கொடுத்த உதாரகுணமுடைய உத்தம வீரர்களாகிய இந்தச் செங்குந்தர்கள் எனக்குப் பழியும் பாவமும் நேரிடாதபடி பெறுதற்கரிய உயிர்பெற்றெழுந்து தங்களைக்குறித்து நான்பாடிய ஈட்டியெழுபதென்னும் பிரபந்தத்தைப் பார்த்து மனமகிழும்படி கிருபைசெய்யவேண்டும்.) என்னும் கருத்தை யமைத்து,

கலைவாணி நீயுலகிலிருப்பதுவுங்கல்வியுணர்கவிவல்லோரை
நிலையாகப்புரப்பதுவுமவர்நாவில்வாழ்வதுவுநிசமேயன்றோ

சிலைவாணனுவிருந்தாயிரம்புயங்கடுணிக்குமுயர்சிவனுற்றான்
றலையாலிகொடுத்திடுஞ்செங்குந்தருயிர்பெற்றிடநீநகைசெய்வாயே

என்வோர் பாடலைக்கூறித் துதித்தனர்; அம்மாத்திரத்தில் சிங்காதனவுருவா யமைந்திருக்கும் சிரங்கள்யாவும் கூட்டங் கூட்டமாய்ப் புதைபாணமெழுவதுபோல மேலெழும்பிச் சென்று ஆங்காங்குள்ள தத்தமுடல்களைக்காந்தமு மிரும்புமபோல வொட்டிக்கொண்டன.

38. காந்தத்திற்கு இரும்பையிழுக்கும் ஆகருஷண சக்தியும், இரும்பிற்குக் காந்தத்திற்போ யொட்டும் சந்தான சக்தியும் இயல்பாக உண்டானமையால்; அவையிரண்டு மொட்டுகிறது ஆச்சரியமல்ல இப்படிப்பட்ட சக்தியோ அவைகளுக்கில்லாதிருந்தும் தெய்வீகபலத்தால் ஒட்டிக்கொண்டமையால், உடனே யவ்வாயிரத்தெண்மரும் அநாயாசமாய் உயிர்பெற்றெழுந்து இடி மிடித்தாற்போல உரக்கக்கனைத்து, தோள்கொட்டித்தொடைதட்டி மீசை முறுக்கி நகைத்து, ஜெயம்; ஜெயம்; என்று யாவருமிருந்த விருந்த விடங்களில் நின்று ஆர்ப்பரித்தார்கள். அவ்வுறையூருக் கருகுள்ளோர் யாரும் அதிவேகமாயோடி வந்துகூத்தரை வணங்கினர். இவ்வதிசயத்தையும் பிரத்தியக்ஷமாகக் கண்ட வருணகுல பாண்டியன் முதலிய பல தேயத்து மன்னர்களும் இது மகாமகிமையா யிருக்கின்றதென்று அதிசயித்துக் குலோத்துங்கச்சோழனைப்பார்த்து, இத்தகைய தெய்வீகக்கவிபாடவல்ல வித்வசிரோமணியை ஆசிரியராகவும் அமைச்சராகவும் படைத்தவுமது தவமே தவம், இவருக் குமதுதந்தை க[illegible]ரவர்த்தியென [illegible]ந்தது ஒரு பெருமையல்ல, இவரை [illegible]ப்வீகக் கவியென்றே [illegible]வேண்டும், இவரால் நீர் இருமைப்பயனும் எளிதிற் பெற்றீர், என்று கூறிக் கொண்டாடிச் சந்தோஷித்தார்கள். அப்பொழுது கவிவாணர் கூட்டத்துள் கலந்திருந்த ஔவையார் சரேலெனத் தடிபூன்றி யெழுந்து சபைக்கெதிரே வந்துநின்று,

மூவுலகையுங்கடந்தமூதண்டப்பித்திகையை
மேவியதற்கப்பாலுமின்னியதே—பூவிலென்று
மங்காதநால்வேண்டிமாலன் கூத்தற்கிட்டசிரச்
சிங்காதனத்தலைவர்சீர்.

எனவோர் கவிகூறி, சிரகம்பிதங் காகம்பிதங்கொண்டு ஆனந்தநிர்த்தனஞ்செய்தனர். உடனே புகழேந்திப்புலவரெழுந்து,

விண்முகத்தோர் பூமாரிவீசியதுமோர்வியப்போ
மண்[...]த்தேசெங்குந்தர்மாய்சிரங்க—ளெண்முகத்துஞ்
[...]ந்தியதத்தம்முடலைச்சேர்க்கொட்டிக்கொண்டொலித்து
[...]ந்தவிதமெண்ணவருங்கால்.

எனவோர் கவிகூறி, அதுகாறுந் தாம் கவிச்சக்ரவர்த்தியிவிடத்திற் கொண்டிருந்த வெறு[...]பனைத்து நீங்கி அவரை நீ[...] கண்டமூர்த்தியே யெனநெஞ்சுளிருத்தி, இருகண்களினு மானந்த பாஷ்பஞ் சொரிந்தனர். அட[...]பா தங்ஙனம் வந்திரு[...]வித்வசனாயாரும் ஒன்றாகத்திரண் டெ[...]ழுந்து நின்று,

இந்துக்கைக்கோ[...]ரிலை[...]கண்கணான்படைத்த
செ[...]க்கைக்கோ[...]ளிணையாவரே—யந்திப்
பிறையணி[...]க்கோ[...]ருப்பெற்றவன்பால்வைகு
பிறையணி[...]கோளரே[...]நேர்.

எனவோர் [...]கவிகூறி, சிங்காதனவுருக்கொண்டு கலைந்தமீண்ட செங்குந்த[...]லைவர்களை யெல்லா மாலிங்கனஞ்செய்துகொண்டு கைகளைக் [...]டிக் குதித்தார்கள். உடனே யங்குள்ள சனங்கள்யாரும்[...]ந்தமேலீட்டால் தங்கள் கைகளையு[...]ட்டி ஆரவாரித்தார்கள். இவற்றை யெல்லாங்[...]ண்டுங் கேட்டுமிருந்த ஆதிசைவ வேதியரும் சத்தபுவனாதிகாரரும் திருமாலாதியராலு மறியப்படாத சிவபெருமானைச் சதா தரிசிக்கும் பேற்றை வாய்ந்தோரும் சைவர்கட்கெல்லாம் சிவாசாரியர்களாய் அவ்வவர்கள் மாயாமலபந்தங்களைமாய்த்தலென்னி விபூதிப்பிரசாத

மளித் தாட்கொள்பவருமாகிய இல்லைமூவாயிரர் யாருந் திரண்டெழுந்து, இத்தெய்வீகக்கவிக் கி..த்தராகிய செங்குந்தத் தலைவர்கள் முன்னர் கம்பன் ரூத்திரருடைய குல வண்மையைக்கறபித்து ஏரெழுபது இல்லெழுபது என்னு மிரண்டு பிரபந்தங்கள் பாடித் தந்ததைக்கேட்டு இவரால் தாமுமோர் பிரபந்தம் பெறவேண்டுமென்று பிரார்த்தித்தது சகசமே: அதற்காகக் கூத்தனூர் தலைப்பரிசு கொடுக்கவேண்டுமென்றது தமக்குச் சிறப்புப்பெயரும், தமது குலத்தினர்க்கெல்லாம் சிறந்தபட்டமுங் கிடைக்கவேண்டுமென்னும் அபிப்பிராயமே: அவர்களதற்கஞ்சிப்பின்வாங்காமல் தங்களுயிர்க்குயிராகிய தலைப்பிள்ளைகளின் தலைகளைக்கொடுத்தது சுத்தவீரத்தன்மையே: புலவர் பெருமான் பிரபந்தம்பாடி முடித்து மற்றோர்...யால் அவர்கள் தலைப்பிள்ளைகளையெல்லாம் உயிர்ப்பித்ததைமந்திரம் கேவலம் தெரியாதவர்கள் ஞீதா ஜாலவித்தையாயிருக்கின்ற தென்பார்கள். சிலர் மந்திரபலத்தினால் இப்படி முடிந்ததென்பார்கள். புத்திமான்களுக்குள் சிலர் அறுபட்டவறுவாயும் ஒட்டின வொட்டுவாயும் எவ்வளவுந் தெரியாமல் தழும்புந்தோன்றா திருப்பதனால், விசல்லியகரணி-சந்தானகரணி-சமானகரணி- சஞ்சீவிகரணி-என்னும் பரமௌஷதங்கள் நான்கும் இவரிடத்திலிருக்கவேண்டும். அவைகளிற் சந்தானகரணியைக்கொண்டு அற்றவுறுப்புக்களையிணக்கி, விசல்லியகரணியைக்கொண்டு காயத்தைமாற்றி, சமானகரணியைக் கொண்டு தழும்புநீக்கி, சஞ்சீவிகரணியைக்கொண்டு உயிர்கொடுத்தாரென்பார்கள். இவையெல்லாம் சரியல்ல: வாணிகடாக்ஷத்தினாலும், கூத்தனாருடைய வாக்குவிசேஷத்தினாலும், செங்குந்தருடைய வீரகருமத்தினாலும் சத்தியத்தினாலுமே இங்ஙனை நிகழ்ந்..... ஆதலா லிதுமுதல் இக்கவிச்சக்ரவர்த்திக்கு அற்றதலையுமுடை...டப் பூரியகாரணம் புலப்பட ஒட்டக்கூத்தரென்னும் சிறப்புப்பெயரும், இவருட்பட இவ்வினத்தார்க்கெல்லாம் சிரச்சின்காசனாதிபதிகளென்னும் விசேடப்பட்டமும் இந்நிலவுலகெங்கும் வழங்கக்கடவன எனக்கூறினார்கள், அதற்குப் பாண்டியனாதிய மன்னர்களும் ஏனைய .... களும் ...

ஸ்து: சதாஸ்து: என்று பலகாற்கூறி அவ்வொட்டக்கூத்தர்மேல் புஷ்பங்களையும் அக்ஷதைகளையு மழைபோற்சொரிந்தார்கள். கம்பர்முதலிய கவிவாணர்களெல்லாம் தாங்கள் பாடிவைத்துள்ளபிரபந்தங்களில் அதிருப்தியடைந்தார்கள். அவ்வாறே பாடிக்கொண்டவர்களும் அப்பிரபந்தங்களை வெறுத்தார்கள். வைசிய சிரேஷ்டர்கள் பலமுறை வாழ்த்துக்கூறி, ஒட்டக்கூத்தரையும் அவரினத்தாரையும் வந்தித்தார்கள். சற்சூத்திராகிய வேளாளரேயன்றி அவர்களினகமடையரா யுள்ளோரும் அக்கணமே யழுக்காறடைந்து, இதுமுத லிம்மரபைப் புறங்கூறிப் பழிப்பதே நமது கடமையென்று கைய்ற் கங்கணங் கட்டிக்கொண்டவர்களாய் முகங்கருகிச் சென்றார்கள்.

39. அக்கால் கவிச்சக்ரவர்த்தியார் தமதினத்தாராகிய கைக்கோளரது மூவகை யொழுக்க [illegible]லகளையும் தமக்கவர்கள் செய்த உபகாரத்தையும் உதாரகு[illegible]த்தையும் வெளியிட வேண்டுமெனக் கருதினவராய், (பூர்வம் [illegible]வபிரான் தேவகண்டகராகிய சூரபன்மாதியரை யதஞ்செய்யவேண்டித் தம்பாலுதிப்பித்தருளிய ஸ்ரீ சண்முகதேவருக்குக் [illegible]னிட்டோற்பத்தி செய்து அவர்கள் மூவகையொழுக்க[illegible]களைக்கண்டுகைக்கோளரெனப் பெயர்தரப்பெற்றதற்கேற்ப அ[illegible]ண ரொழுக்கத்தினராய்த் தந்துவாயரென்னும் பெய[illegible]று வேதாகமாதிகளை யோதுதன்முதலிய பஞ்சயாகங்களை [illegible]நிமுறைநடாத்தி இப்புவியினுக்கோர் ஊறும் வாராத நிலைமையைத் தந்தவரும், அரச ரொழுக்கத்தினராய்ச் செங்குந்தரென்னும் பெயரேற்று இவ்வுலகில் துஷ்டஜனநிக்ரகமும் சிஷ்டஜன சம்ரக்ஷணமுஞ்செய்து யாவருக்கும் ஒருவரையொருவர் மதித்து நடந்துகொள்ளத்தக்க வபிமானத்தை நிலைக்கத் தந்தவரும், வைசிய ரொழுக்கத்தினராய்க் காருகரென்னும் பெயரேற்று உழுதன்முதலிய பவத்திற் கேதுவான பலதொழில்களினும் செய்தற்றொழிற்கு நிகரில்லையென அதனையே ஸ்வகதொழிலாகப்பெற்று [illegible]தனுண்டாய கலைகளை யெடுத்து இவைகளை விற்றுப் பிழைப்[illegible]ன்கவென்று வணிகருக்குச் சிவகொப்பாய

ங்கற்பித்து அவர்கள்கையிற் றந்தவரும், எத்திசையினுமுள்ள
புலவர்கள் பலரும் பாடின சாத்திரக் கருத்தோடுங்கூடிய தமிழ்
ப்பாமாலைகளுக்குப் பரிசாக அளவிறந்த திரவியங் கொடுத்தவ
ரும், இவைகளெல்லாம் அதிசய மல்லவென்று நான் பாடிய ஈட்
டியெழுபதென்னும் பிரபந்தத்திற்குப் பெருநிலையாகத்தங்களரு
மைத்தலைமைப்புதல்வர்களுடைய தலையைத் தந்தவரும், முடிவிற் சா
மானியனாகிய பொற்கொல்லனொருவன் றன்கையிலானமட்டும்பரு
ம்படியாகச் செய்த பொன்னுபாணத்தைச் சமர்த்தனாகிய மற்
றொருவன் றன் கைத்திறங் காட்டும்படி திருத்திச்செய்து மணி
பதித்துக் குந்தனமிழைத்துத் தந்ததுபோல வெடுகோளாகச் சிற
ப்பின்றி வழங்கிவந்த கூத்தனென்னும் எனதியற்பெயரை அற்
றதலையு முடனொட்டப்பாடிய காரணம் புலப்பட ஒட்டக்கூத்
தன் என்னும் விசேஷணத்தாற் சிறப்பித்துத் தந்தவரும் இம்ம
காநுபாவர்களே.) என்னும் இவ்வாறுவகைக் கருத்துக்களையு
மமைத்து,

நிலைதந்தார் புவியினுக்குப்பாவலருக்குமபிமானநிலைக்கத்தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச்சீவனஞ்செய்திடவென்றேகையிலையா
[ண்டும்,
விலைதந்தார் தமிழினுக்குச்செங்குந்தரொன்கவிக்குநிலையாகத்தான்
றலைதந்தாரெனக்கொட்டக்கூத்தனெனும்பெயரினையுந்தாந்தந்
[தாரே.

40. என்றொரு பாடல்பாடி ஆவூர்ச் செங்குந்த மன்னரை
ப்புகழ்ந்து மகிழ்வித்தனர். இதனைக்கேட்ட கருணாகர பாண்டி
யன் முதலிய வரசர்கள் அற்புத சித்தராகி, ஆலோசிக்கு மிடத்
தில் பிரமபரம்பரையாராகிய நால்வருணத்தரும் சிவபரம்பரைய
ராகிய தீக்ஷைக்கோளருக்கு நிகராகா ரென்பது சத்தியம்; சத்தி
யம்; சத்தியம்; எனமுக்காற் கூறிச் சந்தோஷித்தார்கள். குலோ
த்துங்கச் சோழன் தலைகொடுத்த நாட்டினர்க்கெல்லாம் தண்டி
கைமுதலிய விருதுகளும் பல பரிசுகளும் வழங்கி, அவ்வவர்கட்
கரசுரிமையும் இரதகஜதுரகபதாதிகளுங் கொடுத்துப் பலமரி

யாதைகள் செய்தான். பாண்டியன் முதலிய பலதேயத்து மன்னரும் பலவெகுமதிகளைத்தந்து சந்தோஷிப்பித்தனர். சதுர்வேத பாரகராகிய அந்தணசிரேஷ்டர்கள் பல வாசிகள்கூறிப் பெயர்ந்தனர். வைசியச்செல்வர்கள் பிரபந்தங்கேட்கவந்த ஜனங்களுக்கெல்லாம் உண்டிமுதலியன வழங்கி யுபசரித்தார்கள். ஒட்டக்கூத்தரும் ஏனைய நாட்டினரும் அப் பாண்டியனாதிய பார்த்திபரோடு குலோத்துங்கச் சோழனிட்ட விருந்தையுண்டு விடைபெற்றுச் சென்றார்கள்.

இவ்வாறு கவிச்சக்ரவர்த்தியால் விளைந்த தெய்வீகத் தன்மையைக் கண்டிருந்த புகழேந்திப்புலவர் இவையனைத்தும் நனவோ கனவோ எனப்பிரமித்து ஒன்றுந்தோன்றாதவராய்ப் பின்னர் தமது மனதில் அவரிடத் தச்சமும் அன்பு முடையராகி, இத்தகை நற்குண நிதியாகிய பெரியோரை முன்னர் நாம் அவமதித்திருந்தது நமது பேதைமையேயன்றி வேறன்றென்றும், ஒருவன் பெரியோர்களுள்ளத்திற் பிழைப்பட விருத்தல் பெரும்பாவத்திற் கிடமாமென்றும், நாம் செய்துள்ள பிழையை இன்னுமவருள்ளத்தில் வைத்து நம்மை யவமதித்திருப்பதும் அன்றியதை விடுத்து மதிப்புற்றிருப்பதும் எவ்வித வுபாயத்தால் அறிந்துகொள்ளக் கூடுமென்றுந் தமக்குள் ஆலோசித் திருந்தனர். இவ்வா றிருக்குநாளில் ஓர்நாள் கவிச்சக்ரவர்த்தியாருக்குச் சரீரத்தில் அதியுட்டினமுண்டாகி, அவ்வுட்டினத்தால் நாவரோசகமுற்றுப் போசனாதிகளில் இச்சையின்றி நோயுற்றவராய்ச் சின்னாள்வரையில் இராஜசபைக்கு வருதலற் றிருந்தனர். அதை யுணர்ந்த குலோத்துங்கச் சோழன் ஒருநா ளவரது தேகோட்டினந்தணியும் படியாகவு நாவுக்குருசியுண்டாகவும் சில பலகார வகைகளும் பாயசவகைகளும் தக்கவர்களைக்கொண்டு செய்வித்து, தனதருமை யமைச்சர்களுள் இருவரைக்கூவி, இவற்றை நமது ஒட்டக்கூத்தரிடங் கொண்டுபோய் உண்பித்திடுமின்களெனப் பணித்தனன். அவ்வமைச்சர்களு முடனே யவற்றைக் கைக்கொ

ண்டு சென்றார்கள். அதுகண்ட புகழேந்திப்புலவர் இந்நோய் வாயிலாய் நாமுசிதமும் போய்க்கண்டுகொண்டு உபசரித்து வருவோமாகில் நம்மீதவருக்கு விசேட பட்சமுண்டாகி நாம்செய்துள்ள பிழையை முற்று மறந்துவிடுவரென் றெண்ணினவராய், உடனே யரசனை நோக்கி நானு மவர்களுடன்போய் ஒட்டக்கூத்தரைக்கண்டு வருகின்றேனென்று கூறி விடைபெற்றுப்போயினர்.

அக்கால் முற்பட்டுச்சென்ற வமைச்சர்கள் ஒட்டக்கூத்தரரண்மனைக்கண் சென்று, அவரை யவர்பத்தினியும் சில பரிசனருங்கூடி உபசரித்திருத்தல் கண்டு, தாங்கள் கொணர்ந்த பண்டங்களை யங்ஙனம் வைத்துத் தங்களை யரசனனுப்பிய காரணத்தைத்தெரியப்படுத்தினர். இவர்கட்குப் பின்வந்த புகழேந்திப்புலவர் அதுகாறு மவரரண்மனைக்கண் வராதவராகையால் அவர் சயனங்கொண்டிருக்கு மிடத்திற்கு வெளிப்புறத்திற்றானே சற்று நின்று, சமயமறிந் துள்ளேசெல்லுவோமென் றிருந்தனர். அத்தருணத்தில் உட்புறத்திருந்த வமைச்சர்கள் தாங்கள் கொண்டுவந்த பண்டங்களின்பெயரையும் அவற்றின் சுவையையுந் தனித்தனி சிறப்பித்துக்கூறி அவற்றையுண் ணும்படிக் கூத்தரைவேண்ட, அவர் நீங்கள் கொணர்ந்த பண்டங்கள் என்னுயிரினுஞ்சிறந்த ஒரேந்தலால் அனுப்பப்பட்டனவேயாயினும் அவற்றின் சுவை நமது சமயாசாரியராகிய நால்வரால் திருவாய்மலர்ந்தருளிய அருட்பாக்களின் சுவைக்கும், கல்லாடர்முதலிய கனத்தசங்கப்புலவர்களாற் செய்துள அருந்தமிழ்ப்பாக்களின் சுவைக்கும், பெருந்தேவனாரியற்றிய பாரதவெண்பாவுக் கிணையாக நமது புகழேந்திப்புலவரியற்றிய நளவெண்பாவின் சுவைக்கும் இணையாகுமோ? ஒருபோது மாகா? ஆயினு மத்தகைய பாக்களில் சில கொணர்ந்து என்செவிக்கூட்டி, நீங்கள் கொணர்ந்த பண்டங்களை வாய்க்கூட்டினல்லது தனியேபுசிக்கவென்றாமனென்றெனக்கூறி மறுத்தனர். இவையனைத்து மறைவிலிருந்து கேட்டிருந்த புகழேந்திப்புலவர் ஆச்சரிய மடைந்தவராகி, அந்தோ! நாம்பாடிய நளவெண்பாவின்மேல் நிர்த்தாக்ஷண்யமாய்ப் பல பெயருமறியப்

பகிரங்கமாகக் குற்றங்கூறிவந்த இவர், இப்பொழு தந்தரங்கத்தில் வியந்து சமாசாரியர் சங்கரர் முதலிய சான்றோர்களுடைய வாக்கிலேயும் நமது வாக்கினை ஒன்றாகமதித்துச் சிறப்பிக்கின்றார். இதென்ன வதிசயம்? சகலசாஸ்திரங்களையும் சம்பிரதாயமாய் வழுவிலதிச் செவ்வனேகற்றுணர்ந்தோராகையால், புறத்தில் வியக்காவிடினும் அகத்தி லுள்ளூற நமது கல்வியினருமைகளைத் தெரிந்து வியந்துகொண்டிருக்கின்றார். "மனத்துக்கண் மாசிலனாத லனைத்தறன் ஆகுல நீர பிற" என்றபடிக்கிவர்மனதில் தருமம் நிலைத்திருக்கிறது. என நிச்சயித்தவராய் இதோ "நளவெண்பா" என்றுட்புறத் தோடிவந்து ஒட்டக்கூத்தரை மார்பிறுகக் கட்டியணைத்துப் புளகாங்கிதராகி, தாம்பாடிய நளவெண்பாவில் சொற்சுவை பொருட்சுவைமுதலியவைகள் மிகுதியாக மலிந்துள்ள சில வெண்பாக்களைக்கூறி அரசனனுப்பியபண்டங்களைப் பலவுபசாரங்களோ டேற்பித்து, இனித்தேவரீர்பால் வடியே னல்லினும் பகலினும் வந்திருந்து தங்களுக் கிச்சையான [illegible]கல்களை வாசித்து இதயங்களிக்கச் செய்வேனென் றோதி அமைச்சரோடு தாமும் அவர்பால் விடைபெற்று அரிதிற்பிரிந்து குலோத்துங்கச் சோழன்பால் வந்து, தாங்கள்போய்வந்த செய்தியைத் தெரிவித்தனர். அதுகேட்ட வரசன் புகழேந்தியை நோக்கி, நீர்கொண்டிருந்த சந்தேகம் இன்றோடு நீங்கிற்றோவென்று கேட்டு மகிழ்கூர்ந் திருந்தனன். அதுமுதற் புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தரைத் தமது குலகுருவினும் மேலாகப்பாவித்து அவர்பால் வேற்றுமையற்றவராகி, அன்றுமுதல் இராப்போதினும் பகற்போதினும் அவரண்மனைக்கண்சென்று அவருக்கிருந்துபசாரஞ்செய்துகொண்டு, அவரெவ்வேளையி லெந்தநூலை விரும்புகின்றாரோ அந்தவேளையி லந்நூலை வாசித்து அவருள்ளமின்புறும்படி நடந்துகொண்டுவருகின்றார்.

உறையூரின்கண் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரும் புகழேந்திப்புலவரும் இருக்குநிலைமை இவ்வாறாக, திருவெண்ணெ நல்லூரில் முன்னர் சடையப்பிள்ளை யென்னும் வெள்ளாளப் பிரபு

னால் வெறுக்கப்பட்டுச் சென்ற கம்பவாணர் தனது காலநிலைமையைப்பற்றி மிகக் கலக்கமுற்றவராய் சோதிடநூல் வல்லொருவனை யடுத்து, எனது காலபல மெவ்வாறிருக்கின்றதோ அதனை யாய்ந்துணர்த்திக் கிரகசாரதோட மேதேனுமிருக்கின் அத்தோடத்திற்குப் பரிகாரமும் ஆய்ந்துணர்த்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அதுகேட்ட சோதிடன் அவரது திதிநிலை கரணநிலை யோகநிலை கிரகநிலை முதலியவற்றை யாய்ந்து இவற்றினால் யாதொருதோடமு மில்லாமையறிந்து, ஆருடசாத்திர நிலைமைப்படி ஓராகாமிய தோட மிருப்பக்கண்டு அவ்வாகாமியம் தேவகாதையில் நாஸ்துதிசெய்வதற் குடம்பட்டதே யெனவுணர்த்தி இதற்குப்பரிகாரம் சின்னாள் தலயாத்திரைசெய்து ஆங்காங்கு திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள சிவபெருமானையும் தேவமூர்த்தியையும் சேவித்து வருவதுவே சிறப்பாமெனக்கூறினன், உடனே கம்பநாடவர் தனது புத்திர மித்திரகளத்திராதியரோடு வெளிக்கொண்டு அம்மகத நாட்டிலுள்ள தலங்களையும் அதற்கு வடபக்கத்திலுள்ள தொண்டநாட்டிலுள்ள தலங்களையும் அதற்குமேற்பாரிசத்துள்ள கொங்குநாட்டிலுள்ள தலங்களையும் சேவித்துக்கொண்டு சோழநாடடைந்து, அங்கு காவிரியாற்றுக்குவடகரையிலுள்ள தலங்களையெல்லாஞ் சேவித்துக்கொண்டு தென்கரைக்கணுள்ள தலங்களைச் சேவித்து வருகின்றார். அந்தச்சமயம் கூத்தனார் சரீரசாட்டியத்தோடிருந்த சமயமாதலால் அதைத்தனதனுகூலனாயிருந்த வொருவனாற் கேள்வியுற்று, புதுக்கோயில் சமைக்கப்போய் புராதனக்கோயிலை யிடித்தவாறுபோலவும்-தன்மனெறியைச்சாரப்போய் அதன்மனெறியை யடைந்ததுபோலவும்-கங்[illegible]ல்நானஞ்செய்யப்போய் கடுந்தவர்க்கூறு கருதியதுபோலவும்- இந்நோயாலேது மிறக்க[illegible]வென்று கோரி, தனதுபாசனைப்பொருளாகிய [illegible]தை மனதிற் றியானித்தவராய் உடனே தன் குமாரனாகிய அம்பிகாபதியால் வடமெழுத்தாணியுங் கொணர்வித்து,

இன்றல்லோகூத்தனிறக்குநாளென்கவிதை
யின்றல்லோராசசபைக்கேற்குநா— ளின்றல்லோ
பூமடந்தைவாழ்ப்புவிமடந்தைவீற்றிருக்க
நாமடந்தைநூல்வாங்குநாள்.

என்றொரு வெண்பா வெழுதி முடித்தார். எழுதிமுடித்தவக்கணமே தானுடிடிந் துயிர்துறந்து அங்ஙனே சாய்ந்து விழுந்னர். அதுகண்ட குமாரனவன் அவரெழுதிய வெண்பாவைப் படித்துப் பார்த்து ஓவென்றலறி யழுது, ஐயோ! தலயாத்திரை செய்து தாபமொழிக்கவந்து தந்தையைக்கொன்ற பாவத்தைத் தலைமேற் சுமந்துகொண்டதுபோ லாயதே; ஒருவனால் தனக்குக்கேடுவரநேரினும் அஃதூழின் செயலெனவெண்ணிப் பொறுத்தலன்றித் தானவனுக்குக் கேடுவர வினைத்தல் தகுதியோ? தன்வினை தன்னைச்சுடுமென்பது பொய்யோ? ஓ தெய்வமே! இவ்வுலகிற் கெடுவான் கேடுநினைப்பா னென்பதின்பயன் என்றந்தைக்கே வாய்த்ததே: என்று பிரலாபித்தவனும் அயிலுங் கூத்தர் குணமென்னுங்குன்றமேறி நின்றோராதலால் அவரிடத்தேசென்று சரண்புகுவோமெனத் துணிந்து, உயிர்துறந்த பிரேதத்தைப் பதனப்படுத்தி வைக்கும்படிக்குத் தனது தாயைத்தேற்றித் திட்டஞ்செய்து, அதிவேகமாயோடி ஒட்டக்கூத்தர் அரண்மனைக்கண் சென்று அடியற்ற மரம்போற் கீழேவீழ்ந்து கோவென்றிரைந்தழுதான். அதுகண்ட கூத்தர் தமக்குள்ள சீரமெலிவையுங் கருதாது புகழேந்திப்புலவரைப் பிடித்துக்கொண்டு சயனத்தினின்று மெல்ல வெழுந்துவந்து அவனையெடுத்துத் தேற்றியிருக்கவைத்து, உனக்கு நேர்ந்தவாபத் தென்னென்று வினவினர். அதற்கவன் மறுமொழிசொல்லக்கூடாதவனாய்த் தனது தந்தையா லெழுதியுள்ளவேட்டை அவரெதிரிலெறிந்தான். அதைப் புகழேந்தியா மைந்தன்கொடுக்கக் கூத்தர்வாங்கி வாசித்துநகைத்து, அந்தோ! இவனுக்கு நாமென்ன தீங்குசெய்தோம்? இவனிதிகாசமாகிய இராமாயணத்திற் செய்துள்ள தகாதகாரியத்தைப்பற்றித் தண்டித்தோம். அஃதான்றோராயுள் ளோரெல்

லாம் அங்கீகரிக்கத் தக்கதேயன்றி வேறன்று. அவன் நல்ல கவியாயிருந்தும் இவன்பால் நிகழும் பேதைமைப்பு[illegible]க் கென் சொல்வது? என்று பரிதாபங்கொண்டவராய் அ[illegible]பிகாபதியை பழவேண்டாமென் றாறுதல் சொல்லித் தேற்றி எழுத்தாணிகொணர்வித்து, தமதிஷ்ட தேவதையாகிய கலைவாணி[illegible]யத் தியானித்து, அவனெழுதிய வெண்பாவில் (இறந்த நாளென்பதையும் வாங்குநாளென்பதையும்) அறக்கிறித்தள்ளி (இருந்தநாளெனவும் பூட்டுநாளெனவும்) எழுதிவைத்து, எற்கு நா[illegible]ளன்பதைமாத்திரம் இனியேனுமிவன் சீர்பெற்றிருக்கட்டு மென்னுஞ் சிவகாருணியத்தால் இருந்தபடி விடுத்து,

> இன்றல்லோகூத்தனிருந்தநாளென் கவிதை
> யின்றல்லோராசசபைக்கேற்குநா—ளின்றல்லோ
> [illegible]மடந்தைவாழப்புவிமடந்தை[illegible]றிருக்க
> ந[illegible]மடந்தைநூல்பூட்டுநாள்.

[illegible]என்று விளங்கும்படி யமைத்தவராய் அவன்கையிற்றந்து, இனிமுதலுன் றந்தை யாவராலும் மகாகவியென் ற[illegible]ழ்ந்து சிறந்து வாழ்கவென்று கூறி விடைதந்து தமது சயனக்கிருகநோக்கிச் சென்றனர்.

41. இங்[illegible]கயவ்வேட்டைத்திருத்தி அவன்கையிற் றந்த போதே அங்கே [illegible]றந்துபோயுள்ள கம்பவாணர் உயிர்பெற்றெழுந்து, சில நாழிகைக்குப்பி[illegible] நற்காட்சிபோடும் வந்த தனது புதல்வனால் நடந்த காரியத்[illegible]னைத்தையுங் கேட்டு வியந்து அவனையாலிங்கனஞ்செய்து களித்து, ஓ என்னரும்பெறன் மகனே, "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த-மக்கட்பே றல்ல பிற" [illegible]னும பொய்யாமொழியாகிய இலக்கணத்திற்கு நீ இலக்கியமாயினையே; இனியெனக் கென்[illegible]றை? மாசற்ற கல்விகேள்விகளைக் கலைகைப்பூண்ட கூத்தருக்கு [illegible]ன்செய்த தீமையாளையனுபவிக்கும்படி நேர்ந்ததல்லவா? அப்படி நேர்ந்தும் தமது சிவகாருணியத்தினால் "இன்னாசெய்தாரை யொறுத்த லவர்

நாண-நல் [illegible]யன்செய்து விடல்'' என்னும் இலைமையை என்னிடத்தில் நா[illegible]டி ஆதரித்தனரே: இதற்கென்னல் செய்யத்தக்க கைம்மா[illegible]ன்னவிருக்கின்றது? என்றவரைப் பலவாறு துதித்து, அதுமுத[illegible] யாவராலு மகா கவியென்று சொல்லும்படிக்கு விளங்கிப் பா[illegible]ண்டிநாட்டை நோக்கிச்சென்றனர். இங்கே கூத்தனோடு மிரு[illegible]ந்த புகழேந்தியார் கம்பர்செய்த துற்கிருத்தியத்தையும் அதற்கு[illegible]க் கவிச்சக்ரவர்த்திசெய்த நற்கிருத்தியத்தையும் பலகாலெண்ணி வியந்தவராய்க் குலோத்துங்க சோழனுக்கும் ஏனைய வமைச்சர் முதலாயினோருக்கும் அதனை யறிவித்து, ஒட்டக்கூத்தர் சரீர[illegible]வாரோக்கியம் பெற்று இராஜ சபைக்கு வந்தபின் கம்பர் தமது [illegible]ரபினரைப்பற்றித் "திருக்கைவழக்கம்'' என்னுமோர் நூல் செய்த[illegible]போலச் செங்குந்தமரபினர்க்கும் அத்தகைய நூலொன்று தாமே செ[illegible]து கூத்தரை மகிழ்விக்கக்கருதி நாற்றறுபத்துமூன்று கவிச்[illegible]ர்கொண்ட கலிவெண்பாவாற் பாடிக்கொணர்ந்து, அவரனுமதி[illegible] பெற்றவராய்ச் சோழராசன் முதலிய பலவரசர்களும் பெரியோர்களும் தங்கள் சிந்தை களி[illegible] கேட்க அரங்கேற்றுதல் செய்து வருகின்றார். அக்காலங்கு வித்வக்கூட்டத்து விருந்து ஆதிமுத லந்தம்வரையிற் கேட்டுணர்ந்த ஔவைப்பிராட்டியார் மெல்லத் தடியூன்றி யெழுந்து அரசவைக்குமுன் சென்று நின்று,

என்றும்பெருங் காட்சியென் [illegible]ம்பெருங்[illegible]கல்வி?
யென்றும்பெருமொழிமற்[illegible]ன்றும்பெருவினையே
யென்றுவிக்கைக்கோள்கைக்[illegible]ேனோர் நூலானுலும
நன்றீதுநன் றீதுநன்று.

என்றோர் கவிகூறிப் போயினர். அதுகேட்ட[illegible] சோழராசன் முதலிய பலவரச[illegible]ரும் பெரியோர்களும் செங்குந்த குலதிலகரும் அனேகம[illegible]ய் புகழேந்தியாரை கொண்டாடிப் பல பரிசுகள் தர, அவைகளைப் பெற்றுகந்த புலவர் சிரோமணி ஒட்டக்கூத்தருள்ளத்திற் கிசைந்தவராய் எங்கும் புகழ்பெருக விரு

ந்தனர். இங்கிவர்கள்செய லிவ்வாறாக - முன்னர் தனதாகாமி யத்தாலுண்டான தோஷத்தை யொழித்துக் கொள்ளுமாறு தேவாலய தரிசனார்த்தமாகச் சென்று மகதநாடு தொண்டநாடு கொங்குநாடென்னு மிடங்களிலுள்ள தேவாலயங்களைத் தரிசித்துக் கொண்டு சோழநாடடைந்து பூர்வமோர் சிவபத்தனைக் கொல்வான்கருதிப் பின்னரவனாலேயே அரிபிரமாதியர்க்குங் காணற்கரிய அமலன் திருவடியைக் காணப்பெற்ற நம்பனைப்போல ஒட்டக்கூத்தரைக்கொல்வான்கருதிப் பின்னரவராலேயே மகாகவியென்னுமோர் சிறப்புப் பெயர்பெற்றுப் பாண்டிநாட்டை நோக்கிச்சென்ற கம்பரானவர் அங்குள்ள தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு வருகையில், அந்நாட்டின்கணுள்ள ஓர் சிற்றரசன் அம்பிகாபதியை நேசித்து, அதனைத் தமது தந்தையாற் கூறி, யிங்ஙனஞ் சிலகாலமிருந்து வருகிறேனென்று சொல்லினன். அதற்குச் சம்மதித்த கம்பர் மற்றையரோடும் பிரயாணங்கொண்டு தனது வாசத்தலமாகிய திருவெண்ணைநல்லூரிற் சென்றிருந்தனர். அம்பிகாபதி பல சிறப்புகளோடும் அக்குறுநில மன்னன் குடும்பவித்துவானாகி, அவனால் பொருள் வருவாயுண்டாக்கிக் கொண்டு மிகு கஷ்ட சீவனத்தோடிருக்கும் தனது தந்தைக்கும் அவ்வருவாயிற் பாதியனுப்பி அவ்வரச னுள்ளங்களிக்க நடந்து வருகிறான். இப்படிச் சில வருடஞ் சென்றபின் அம்பிகாபதி தன்னிடத்துப் பேதைப்பருவந்தொடங்கி வாசித்துக் கல்வியிற் றேர்ச்சிபெற்ற அவ்வரசன் மகளிடத்தில் அந்தரங்கமாய்ப் பல சரசவார்த்தைகளுந் தொழில்களு நடத்திவந்து, அவள் பெதும்பைப் பருவத்தினளாய் அந்தப்புரத்தினின் றகன்றுவரக் கூடாத காலத்திலும் அவற்றை யொழித்திலனாதலால் பின்ன ரிருவருமொருவர்க்குந்தெரியாதபடி கூடுவதும் பிரிவதுமா யிருந்தனர். இவ்வாறிவர்கள் களவுப் புணர்ச்சியிற் [illegible] சேர்ந்தவர்களாய் நடந்துகொண்டு வருவதை அரசன் தனது [illegible]த்தினியாலும் அவள் பாங்கியராலுங் கேள்வியுற்று, இதை யெவ்வா[illegible]கண்டு நிச்சயிக்கக்கூடுமென்று கருதி ஓர் நா[illegible]ன்று தனக்கு ஒரு விருந்து

முன்னிலையில் கண்டுணரக்கூடுமென் றெண்ணினவனாய் அந்நாட்டினும் புறநாட்டினு முள்ள வித்துவான்களுக்கெல்லாம் தனித்தனி திருமுகமெழுதியனுப்பி வருவித்தான். அப்போது கம்பரும் வந்தனர். அரசன் வந்த வித்துவான்களோடு அம்பிகாபதியையு மழைத்துக்கொண்டு போசனச்சாலைக்குட் சென்று, அவர்களைத் தனித்தனி ஆதனங்களி லிருக்கச்செய் திலைபோடுவித்துத் தனது மகளையே பதார்த்த வட்டிலை யெடுத்துப் பரிமாறப் பணித்தனன். அவள் பதார்த்தவட்டிலை யேந்திப் பரிமாற வருதலைக் கண்ட அம்பிகாபதி தன்னுளடக்கக்கூடாத் காம மிகுதியால் சற்று மீறி ஓர் கவிபாடத் தொடங்கி-

இட்டடிநோவவெடுத்தடிகொப்புளிக்க
வட்டில்சுமந்துமருங்கசைய-

என் றரைக்கவி பாடியவளவில், கம்பர் தன் பிள்ளையின் குணமறிந்தவராதலால் சந்தேகித்து, இவ்விருந்தின் காரணம் யாதாயினு மாகுகவெனத் துணிந்து அவன் மற்றதையும் பாடி முடிக்குமுன்-

கொட்டிக்
கிழங்கோகிழங்கென்றுகூறுவாணாவில்
வழங்கோசைவையம்பெறும்.

எனப் பாடிமுடித்து, அச்செய்யுளைச் சற்றுமுன் வீதியில் கொட்டிக்கிழங்கு விற்றுச்சென்ற ஓர் வனிதைமேலேற்றி அரசனை மயங்கவைத்தனர். அக்காலவரசன் தன் பெண்ணை உட்புறத் தனுப்பிவிட்டு, இவனவன் றந்தையாதலால் வெண்டயிர் கடைவாள் வெண்ணெய் திரண்டெழுஞ் சமயத்தில் தாழியுடைத் தடுமாற்றங்கொண்டதுபோல நமதெண்ணங் கெடமாற்றஞ் செய்தான். ஆயினுமினை வேறொருபாயத்தா லறிந்துகொள்ளலாம். எனத் தனக்குள் தேறிப் பரிசாரகரால் அப்பதார்த்த முதலியவைகளைப் பரிமாறச்செய்து, அவர்கள் யாரும் புசித்தபின் தாம்பூல முதலியவைகளைத் தந் தனுப்பிவிட்டனன்.

அவர்களுள் கம்பர்மாத்திரம் தமதுகுமாரனு[illegible]வாராப த்து நேரவிருக்கின்றதென வெண்ணி, அந்நாட்டு[illegible]சின் னுள் அவ்வரசனுக்குத் தெரியாமலிருந்தனர். அதுமுதல் அவ்வ ரசனானவன் சந்தேகவிருத்தியடைந்தவனாகி, ஓர் நாள் அம்பிகா பதியைநோக்கி, நீ பேரின்பவிடயமாய் நூறு கவியும் சிற்றின்ப விடயமாய் நூறு கவியும் ஒன்றிலொன்று சிறிதுங் கலவாது பாடவல்லையோவென்று வினவினன். அதற்கவ் வம்பிகாப பாடவல்லேனெனக் கூற, அது கேட்டவ்வரசன் நாளை யு[illegible] மந் திராலோசனைச் சபைக்க ணிருப்பேனாதலால் நீ அங்குவந்தி ருந்து அதனை முடித்திடுகவென்றனன். அக்கட்டளையைப் பெற்ற அம்பிகாபதி காமுகர்க்கறி கண்ணில்லை யென்பதற்கொ ப்ப அரசன் கொண்டிருக்கும் சூழ்ச்சியை அறிந்துகொள்ளாத வனாய் தனது களவொழுக்கத்தால் அவ்வரசன் மகளைக் கண்டு, நாளை மந்திராலோசனைச் சபைக்கண்ணே நடத்தப்போகிற காரி யம் இதுவெனக்கூறி, நீ யந்தவேளையில் அ[illegible] அறையில் வந்திருந்து பேரின்பப்பாடல் நூறும் பாடிமுடிந்த பின் உன் முகத்தை யான்காணும்படி சாளரத்தின்வழியாக நிற் பையேல் சிற்றின்பப் பாடலென்னு நெருப்புக்கு நின் முகதரிச னமானது நெய்யூற்றியது போலாகி மிக வலங்காரத்தோடு முடி யும். அதனையரசன் என்மீதாவலுடையவனாவன் நீயுங்கேட்டுக் களிக்கலாம். என்று கூறினவனாய் மறுநாள், அரசன் கட்டளைப படி மந்திராலோசனைச்சபைக்கு வந்தனன். அரசனந்தினம் தன தமைச்சர்களைக்கொண்டு சிலவித்துவான்களையும் பெரியோர்களை யும் வருவித்து, அவர்களோடு மந்திராலோசனைச் சபைக்கண் வ ந்திருந்து, தானங்ஙன நடத்தவேண்டிய மந்திராலோசனை யாவு முடிந்தபின் அம்பிகாபதியைநோக்கினன். அவனக் குறிப் புணர்ந்து, தன்னருகிலோர் கற்றுச்சொல்லியிருந் தெழுதிக்கொ ண்டுவரத் தான் பேரின்பப்பாக்களில் [illegible]ணூற்றொன்பதா வது பாடலைப் பாடுகிறான். அக்கால் [illegible]றைவி லிருந்துகேட் டெண்ணிவந்த அரசன் மகள் [illegible]ளா டெண்ணி நூறுபாடலு மாய்விட்டதென்க[illegible]ழுந்து நின்று, தன்

முகத்தைச் சாளரத்தின்வழியே காட்டிநின்றாள். அவள் முகத்தைக் காண்டலும் அம்பிகாபதி கற்றச்சொல்லியைக் கேட்டே அதுமுணர்ந்துகொள்ளாது காமவயத்தனாகலா லவசரப்பட்டு, அத்தொண்ணூற்றொன்பதாவது பாடல்பாடி முடித்தவுடன் ஒற்றின்பா பாடலுக் காரம்பித்து,

சற்றேபருத்ததனமேகுலுங்கத்தரளவடந்
அற்றேபசையக்குழையூசலாடத்துவர்கொள்செவ்வாய்
நற்றேனொழுகநடனசிங்காரநடையழகின்
பொற்றேரிருக்கத்தலையலங்காரம்புறப்பட்டதே.

என்னும் பாடலைப் பாடினன். உடனே யரசன் கற்றச்சொல்லியாலு மற்றையாரும் பேரின்பப்பாடலில் ஒன்றுகுறைவென்றும் இதற்குள் சாளரத்தின் வழியே ஓர் கன்னிகையின் காட்சி காணப்பட்டதென்றுங் கூறக்கேட்டு, அங்கிமிடமே சிறைச்சாலை [illegible]ரியை வருவித்து, இக்கவிஞனை யான் மறுவுத்தரவு செய்யு[illegible]ரையிற காவற்படுத்துகவெனக் கட்டளையிட்டவன் கையி லொப்புவித்து, அவனவனை யழைத்துக்கொண்டு சென்றவுடன் தனது சமுகத்துள்ள பெரியோர்களையும் புலவர்களையு நோக்கி, அம்பிகாபதி தன்னிடத்தோதிய பெண்ணைத் தனையையென நினையாது செய்த காரியத்தையும் அக்காரியத்தி னுண்மையைக் கண்டுபிடிக்குமாறு கவிகளாயுள்ளோர்க்கெல்லாம் ஓர் விருந்துகூறி வருவித்ததையும் - அவ்விருந்தி லவன் தந்தையால் கைக்கெட்டினகனி வாய்க்கெட்டுமுன் சிதைந்ததுபோல் தனது கருத்து நிறைவேறுமற் போனதையும், - அதுபற்றியேதான் இத்தகைய சூட்சியால் சாக்ஷிமுன்னிலையி லறியவேண்டி உங்களை வருவித்ததென்பதையுங் கூறி; இவனெங்கள் க்ஷத்திரிய மரபினனேயெனு மிருக்கின் பொங்கியும் புறம்போகாது காக்குந்தன்மை போல ஒருவாறிவனை [illegible]றுக்கொள்ளலாம்: இவன் றந்தையோ பார்ப்பானுக்கும் பார்[illegible]ன விதவைக்கும் பிறந்த கோளகனும்: [illegible]னக் கோளகப்பா[illegible]பாலகவேனு மிராமல் ஓரோச்சக் குல[illegible]னால் வளர்க்கப்பட்டு அவ்[illegible]ரச்சக் குலத்துப் பெண்ணையே [illegible]ந்து வேளா[illegible]க் குலத்தாரும் வன்னியக்குலத்தாரும் பிற

ப்படையப்பட்டவனும்: அவன் பிள்ளை யிவனும்: இவன் நமது பெண்ணுக்குக் கல்வி கற்பிக்கப்புகுந்து இத்தகைய வஞ்சத னுக் குடம்பட்டான்: ஆதலா லிம்மிண்டனுக் கெத்தகைத்தான தண்டனை விதிக்கலாமென் றுயோசித்தான். இவையனைத்தும் கேட்ட பெரியோரும் புலவரும் அரசனைநோக்கி, ஓ பூபதியே இத்தமிழ் வழங்கு நாடுகளிலுள்ள கவிகளையெல்லாம் ஆதரிக் கவு மாக்கினை செய்யவும் கவிச்சக்ரவர்த்தியென வொருவ ரிருக்கி ன்றார். அவர் புவிச்சக்ரவர்த்தியாகிய சோழமகாராஜனுக்குப் பிரதிநிதியானவர். இப்புவிச்சக்ரவர்த்தி பூதலவாசிகளிடம் வரி யிறை வாங்குவதுபோல, அக்கவிச்சக்ரவர்த்தி இவன் றந்தை முதலிய எத்தகைய கவிவாணரிடத்தும் கவியிறை வாங்குவர். ஆனதா லவருக்காவின்றி யெத்தகைய பேரரசரும் தங்கள் சுயே ச்சையாற் றண்டிக்கற் கிடமில்லை. அவரையிவ் வற்பகாரியத் தம் இங்ஙனம் வருவித்தலு மரியாதையன்று. இங்ஙனம் நிக ழ்ந்த காரியங்களையும் அவற்றிற் கேதுவையும் ஓர் திருமுகத்தெ ழுதி யனுப்புதலு முறைமையன்று. ஆதலின் தக்கவமைச்சரை விடுத்து, நடந்துள்ள காரியங்களனைத்தையும் வாய்மொழியா லறிவிப்பித்து, அதற்கவர் விதிக்குங் கட்டளையை யறிந்து வரச் செய்தல் உத்தமமென்றுகூறி விடைபெற்றுச் சென்றனர். அங்கே சிறைக் கடைப்பட்டுள்ள அம்பிகாபதி அரசன் மகள் மேற்கொண்ட விரகதாப மொழியாதவனாகி, இனித் தனக்கு நேரிருக்குந் தண்டனை எத்தகையதோ வென்றுங் கருதாத வனாய் அவளையே தன்னுள்ளத்திருத்தி,

உருகியுடல்கருகியுள்ளீரல்பற்றி
யெரிவதவியாதென்செய்வேன் — வரியரவ
நஞ்சிலேதோய்த்தநளினவிழிப்பெண்பெருமா
ணெஞ்சிலேயிட்டநெருப்பு.

வீரமுண்டோமதன்கையம்பி[illegible]வேர்தவிழ்கைக்கு
நேரமுண்டோவஞ்சிநேர்பட்டகாலையினெஞ்சைவிடப்

பேரமுண்டோசொலவொண்ணுதகாமப்பெருநெருப்புக்
கீரமுண்டோவையனேயென்ன[...]மினிச்சொல்வதே.

மைவடிவக்குழலியர்தம்வதனத்தைதீக்கொவ்வாமதியேயமானே
செய்வடிவைச்சிற்றிடையைத்திருநகையைவேய்த்தோளைத்தெய்வமாக
விவ்வடிவைப்படைத்தவடிவெவ்வடிவோயானறியேனுண்மையாகக்
கைபடியத்திருடிகளைப்படைத்திவளைப்படைத்தனனற்கமலத்தோ
[னே.

என்னும் பாடல்களைப் பாடிக்கொண்டு [...]ருந்தினின்றான். அப்போது கம்பராானவர் தன் குமாரன் சிறைக்களாடைபட்டானெனக் கேள்வியுற்று, அந்நிமிடமே யச்சிறைச்சாலைக்கருகிற் சென்று, அச்சாலைக் காவற்காரர்களை வேண்டித் தான் வந்திருக்குஞ் சேதியை அவனுக்குணர்த்தும்படி செய்து, அவன் சாளரத்தின் வழியாய்த் தன் முகங்காட்டி நிற்பக்கண்டு,

இக்காலிதுவினையுமென்றெழுத்துத்தானிருக்க
வென்னுலேயாவதொன்றுமில்லையே — யென்னுலே
வந்ததுதான்பாமகனேதவிர்ப்பவர்யார்
மு[...]தயினிசெய்தவினையே,

எனவோர் கவிகூறியழுதனர். அதுகேட்ட வம்பிகாபதி காமவிசார மினைத்து மடங்கி யொன்றுந் தோன்றுதவனுகி,

இக்காலிதுவினையுமென்றெழுத்துத்தானிருக்க
வென்னுலேயாவதொன்றுமில்லையே — யென்னுலே
வந்ததுகாணையாவருமிழையையார்தடுப்பா
ரெந்தைதமதுதேவர்செயலே,

எனவோர் கவிகூறித் துக்கித்தனன். அதுகேட்ட கம்பர் தனக்குளொன்றுந் தோன்றுதவராய்க் கிலேசித்து, இனி நாமிவ்வூரிலிருக்கின் முன்னர் விருந்திட்டபோ திவன் கூறவெடுத்த பாடலின் கரு[...]த அரைப்பாட்டிலறிந்து மறைத்து மற்றதைப் பாடிமுடித்த குற்றம் நம்மிலிருப்பதால் ஓர்கால் நம்மையுஞ்

சிறைக்குளாக்க நேருமே: நாமிந்நிமிடம் திருவெண்ணை நல்லூருக்குப் போய் நமதாண்டகையிடத் திவ்வாபத்தைக் கூறின், அவர் சகல வேந்தர்களாலு மறியப்பட்டுள்ள பிரபுவாதலின் இவனை யெவ்வாற்றாலேனுஞ் சிறைக்கணின்று மீட்பதற்கான வாலோசனையிற் றலைப்படுவரே: என்றெண்ணினவராய்த் தனது கருத்தைக் குமாரனிடங் கூறி விடை பெற்றுச்சென்று திருவெண்ணைநல்லூரையடைந்து, தன் மனைவியோடுஞ் சடையப்பிள்ளையினிடஞ் சென்று, தன் குமாரனால் நடந்துள்ள காரியத்தினையும் அக்காரியத்தினுண்மையை யறியுமாறு அரசனடத்திய செய்கைகளையும் அச்செய்கைகளிலொன்றால் தனது குமாரனகப்பட்டுக்கொண்டு சிறைக்க ணடைப்பிக்கப்பட்டதையும் விபரமாகக் கூறி, இத்தருணமவனை யெவ்வாற்றாலேனும் அச்சிறைக்கணின்று மீட்பதற்கான வாலோசனை செய்து தங்கள் பௌத்திரனைப் பாதுகாக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். இவையனைத்துங் கேட்ட பிரபுவானவர் இக்காரியத்தில் யான் பிரவேசிப்பது அதருமமு மபகீர்த்தியுமென்று கூறி மறுத்தனர். அதுகேட்ட கம்பர் பின்னு மவரை மன்றாடக் கூடாதவராய் மனைவியோடு மீண்டு தனது மனைபுகுந்து, "வகுத்தான்வகுத்தவகையல்லாற் கோடி - தொகுத்தார்க்குந் துய்த்தலரிது." என வான்றோர் வாக்கியத்தைக் கூறித் தேறித் தன் மனைவியையுந் தேற்றிக்கொண்டிருந்தனர் இங்கிவ்வாறாகச் சிறைக்கணிருக்கும் அம்பிகாபதியைப்பற்றி அரசனானவ னாலோசித்துத் தனதமைச்சனைக்கூவி, நீர் கவிச்சக்ரவர்த்தியைக்கண்டு நடந்த காரியங்களனைத்தையும் விபரமாகக்கூறி இத்திருமுகத்தை யவர்கையிற் றந்திடுகவென்று ஓர் கவி-

கதிரவனுமம்புலியுங்காணக்கம்பன்சே
யதிவிரகெனையைக்களித்தா — னிதுகுறி
யாற்றாதகோபமடங்கக்கவிக்கரசாங்
கூத்தாவென்செய்தல்குணம்.

... என்றெழுதிக்கொடுத்தனன். அதுபெற்றவமைச்சன் உறையூரடைந்து, கூத்தனார் தமதரண்மனையிலிருக்குங் காலைபுகுந்து போய் அம்பிகாபதியா லந்தரங்கமாய் நடந்துவந்த துற்காரியத்தையும் - அதைக் கேள்வியுற்ற வரசன் அதனுண்மையைக் காணுமாறு செய்த செய்கைகளையும் - அச்செய்கையிலொன்று அவன் றந்தையாகிய கம்பராற் பிழைபோனதையும் - வேறொருஞ் செய்கையா லவனகப்பட்டுக் கொண்டதையும் விபரமாகக்கூறி; அரசன் கொடுத்த திருமுகத்தை அவர் கையிற் றந்தனன். அதுகண்ட கூத்தர் சற்றாலோசித்து, சோரமாதிய பல குற்றங்களினுஞ் சோரக்குற்றஞ் சாதுக்களாலுஞ் சகிக்கற்கரிது. அதை யிவ்வுலகாளு மரசனது குடும்பத்திலேயே செய்தல் அதியக்கிரமம். இத்தகைய வக்கிரமத்தை இனி வேறொரரசனுக்குப் பயன்படற்குரியளான கன்னிகையிடத்துச் செய்து கெடுப்பது மகா பெருங்குற்றமாகும். இவன் கல்வியில் தன் தந்தையைவிடச் சிறந்தவனைப் போலவே அவனது நடையினுந் தான் சிறந்தவனென் போலும்? இத்தகையனுக்குக் கொலைத்தண்டனையன்றி வேறில்லையென்று கருதினவராய் ஓர் திருமுகத்தில்-

பனிப்பகையுந்திங்களுமேபார்த்தசெயலாறு
லுனக்கினியான்சொல்லுவதொன்றுண்டோ — கனத்த
வழுவதனின்மகட்குவைத்தானைமன்னா
கழுவதனிலேற்றக்கடன்.

42 என்றோர் கவியெழுதி அவ்வமைச்சன் கையிற் றந்தனர். அதுபெற்ற வமைச்சன் அவர்பால் விடைபெற்று மீண்டு பாண்டிநாடடைந்து, தனதரசனிடத்தி லத்திருமுகத்தைக் கொடுத்தனன். அதனை வாங்கிப்பார்த்த மன்னன் உடனே சிறைச்சாலையதிபதியை வருவித்து, அவனா லம்பிகாபதியைக் கழுவின்கணேற்றுவித்தனன்.

43. [illegible]ராகத் திருவெண்ணெய் நல்லூரில் தனது குமாரனுடைய நிலைமை எவ்வாறிருக்கின்றதோவென் றேங்கி

அவலித்திருக்கின்ற கம்பளவாணரானவர் சிலரால் "உமது குமா
ரன் பாண்டிநாட்டுச் சிற்றரச னொருவனால் வெட்டப்பட்டிறந்தா
னும்," என்று சொல்லக்கேட்டு, இது நிச்சயமா யிருக்கலாமெ
ன்று கருதிக் கதறி யழுது புத்திர சோகத்தில் மூழ்கி,

மட்டுப்படாக்கொங்கைமாதர்கலவிமயக்கத்திலே
கட்டுப்பட்டாயென்னகாதல்பெற்றுய்ம தன்மையப்பிறந்
பட்டுப்பட்டாயினுந்தேறுவையேயென் றுபார்த்திருந்தேன்
வெட்டுப்பட்டாய்மகனே தலைகாவின்விதிப்படியே
பார்ப்பேதனாலமொருகடம்பியாளப்பனிமதியச்
தாரப்போனொருதம்பிபின்வரத்தானுந்துணைவியுடன் [ஞ்
வரப்போனமைர்கருத்தாதைபொருதுயிர்மாய்ந்தனனெ
சரப்போவெனக்கிங்கினியாருவமையுரைப்பதற்கே.

என்று பாடிப்புலம்பி, தானதிகாரனும் வேளாளர் முதலிய சூத்திரரையன்றி வேறொரு வேதியரை வேந்தரை வைசியரைச சிறிது மதியாதிருந்த இராமப்பனைத்தான் குன்றி, அதுமுதல் வேளாளர் முதலிய சூத்திரராலுந் தனது குமாரனுடைய துர்க்கிருத்திய துர்மரண மூன்னிலையில் தனக்கு நேர்ந்த அவமானத்தால் சன்மான வெகுமானங்களற்றுக் கஷ்ட சீவனத்தோடு கலிச்சக்கரவர்த்தியாருடைய காலத்திற்குப் பின்னருமிருந்து, அரிய கற்பிற் சிறந்தவளான தனது பத்தினியும் அப்புத்திரசோகத்தாலும் புன்காலமின்மையினாலு மிளைத்து வருந்தி இறக்கப்பெற்று, அப்பால் தனக்கென வோரிடமின்றிப் பல நாடுகளிலுங் காடுகளிலுந் திரிந்துழன்று பாண்டிநாட்டின்கண் வந்து, அங்ஙே தனது குமாரனைக் கழுமரத்திலேற்றிக் கொன்ற அவ்வரசன் வேட்டஞ்செய்ய வெண்ணி வைகையாற்றங்கரைக்கண் வந்திருக்கையில் அவனை நேரிற்கண்டு பலவாறுன துர்ப்பாஷைகளால் நிந்தித்து வைது, அவற்றினைக்கேட்ட அரசன் தனதஞ்சிச்சரால் தன்னை யின்னனென் றுணர்ந்து சினந்து அவன் கரத்திருந்த வில்லில் ஓரம்பினைத் தொடுத்துவிட, அது தன் மார்பினூடுருப்பாய அம்மாத்திரத்தில் மரத்தினின் யிடைந்து.

வில்லம்புசொல்லம்புமேதினியிலிரண்டுண்டு
வில்லம்பிற்சொல்லம்பேமேலதிகம் — வில்லம்பு
பட்டதடாவென்மார்பிற்பார்வேந்தாநின்குலத்தைச்
சுட்டதடாவென்வாயிற்சொல்,

எனவோர் கவிபாடி உயிர் துறந்தனர்.

44. இவர் சரிதம் பின்ன ரிவ்வாறாக முன்னர் உறையூரின்க ணரசுசெலுத்தியிருந்த குலோத்துங்கசோழன் சில நாள் இடமாறியிருக்க வெண்ணங்கொண்டு தனது பஞ்சசிங்காதனப் பதிகளுளொன்றாகிய குடந்தையம்பதிக்கேக வுத்தேசித்து, தனதமைச்சர் முதலிய பரிசனங்களையும் தனது மனைவிமக்கண் முதலிய சுற்றத்தினரையும் ஆனை சேனையாதி பரிவாரங்களோ டங்ஙனமனுப்பி, உடனே தானும் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரையும் கவிராசசேகரராகிய புகழேந்தியையும் தனதருகி லிருத்திக்கொண்டு இரதாரூடனாய்த் தனியே செல்கின்றான். அக்கால் தனதருகிலுள்ள வவ்விருவரால் இலக்கிய விலக்கண விதிகாச புராணசுலோகியாதிகளில் தனக்காவசியகமான விடயங்களைப்பற்றிக் கேட்டுச் சந்தேகநிவர்த்தி செய்துகொண்டு வருபவன், அவர்களாலேயே சற்றுநேரம் அகப்பொருள் புறப்பொருட் டுறைகளினுஞ் சில கேட்கவிருக்குந் தனது விருப்பத்தை அவர்கட்கறிவித்தனன். அதுகேட்ட கூத்தனார் அவனையே யத்துறைகட்குத் தலைவனாக்கி,

செந்தமிழோராருப்பவன்புசெய்யவந்தசோழவள்ளல்
சந்ததமுஞ்சேரநாடாழ்குழலே — வந்தனைசெ
யைங்கரனைவேலவனையன்றழற்கண்வந்தவனைச்
சங்கரனைவாசகிலை[illegible]தான்.

என்றோர் கவி[illegible]யாங்கிதலைவிக்கும் பகைவெல்லுந்திற முரை[illegible]த்தாக் கூறினர், உடனே புகழேந்தியார்:-

வாரிதாளஞ்சொரியமாமலையினூடுருவிச்
சேரனமர்நாடளவுஞ்சேர்ந்ததே — மூரிமத
னம்போடலைகின்றவாபிழைக்குநீகுதிரைக்
கொம்போகுலோத்துங்காகூறு.

என்றோர்கவி, பாங்கி தலைவற்குத் தலைவி நிலையோதியதாகக் கூறினர். இவ்வாதிருவருமாறிமாறிக் குடந்தையம்பதிக்குப் போய்ச் சேரும்வரையில் பாடிக்கொண்டுவர, குலோத்துங்கசோழனவைகளை மிகு விருப்போடு கேட்டுக்கொண்டு சென்று தனதரண்மனையிற்புக்கி யிருந்தனன். இரு பெருங் கவிகளும் அங்கு தமக்கென நியமித்துள்ள இடங்களிற் போயிருந்தனர். இப்பா லரசனவன் தனது பரிசன பரிவாராதிகள் தத்தந் தொழில்களை நடத்திவர மனைமக்களாதியரோடுகூடி அரசியற்றி வருகாலில், அக்குடந்தையம் பதியிலே உத்தரசைவரென்னும் வீரமாகேஸ்வரர்வதியும் வீரசிங்காதன மடத்திலுள்ள சங்கமர்களிலொருவர் ஓர்நாட் காலையில் திருஞான சம்பந்தமூர்த்திக ளருளிய தேவாரப்பதிகங்களு ளொன்றாகிய திருவீழிமிழலைப்பதிகத்துள், "கல்லானிழற்கீழாயிடர்காவாயெனவானோ - ரெல்லாமொருதேராயயன்மறைபூட்டிநின்றுய்ப்ப - வல்வாய்பெரிகாற்றீக்கரிகோல்வாசுகிநாண்கல் - வில்லாலெயிலெய்தானிடம்வீழிம்மிழலையே," என்னுந் திருவிருத்தத்தைச் சொல்லிக்கொண்டு ஒட்டக்கூத்த ரமனைக்கண் பிட்சைக்குச் சென்றார். அப்பொழுது கூத்தர் இராஜசபைக்குப் போமாறு வெளிக்கொண்டு வருகையில் அச்சங்கமர் தமதரண்மனைத் தலைவாய்தனி னின்று பாடிக்கொண்டிருக்கும் அச்செய்யுளில் வழுவிருக்கக் கேட்டு, நீ யிதன் பொருள் தெரிந்து பாடுகின்றனையா அல்லது தெரியாமலே பாடுகின்றனையாவென்று வினவினர். அதுகேட்ட சங்கமர் அவர் கவிச்சக்ரவர்த்தியென்றறியாதவராகையால், உனக்கதன் பொருள் தெரியுமோவென்று உதாசினமாகக் கூறினர், அப்போது புலவர்பெருமான் மிகக்கோபங்கொண்டு, நான் பெரியோர்கள் பாடலின் பொருளறியாது பிழைபடக் கூறுவனோவென்று கேட்டால் அதன்பொருளை

உனக்குத் தெரியுமாவென என்னையா கேட்கின்றாயென்று அச்சங்கமரது கன்னத்தில் தமது கையால் உரத்தறைந்து சென்று அங்குப் பரிசனராற் கொணர்த்து நிறுத்தி வைத்துள்ள தமது சிவிகையிலேறிக் கொலுச்சபைக்குட் போய் அங்ஙனந் தமக்கெனவுள்ள ஓரறையுளே வீற்றிருந்தனர். இங்ஙனமவர் கையறைப்பட்ட சங்கமர் அவ்வறையைச் சகிக்கமாட்டாமல் கீழே வீழ்ந்து உயிர்துறந் திறந்தனர்.

இவ்வாறச்சங்கம ரிறந்த செய்தியுங் காரணமும் வீரசிங்காதன மடத்திலுள்ள மற்றைச் சங்கமர்கள் கேட்டு வருந்தி, ஒல்லென்றலறித் தெழுந்து தங்கள் குருவாயுள்ள மனைய மல்லைய தேவருக் கறிவித்து, அவரிடத்தினின்றும் ஓர் வாளுமுத்தரவும் பெற்றுக்கொண்டு வேறு சிலரால் அச்சங்கமப் பிரேதத்தை மடத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும்படிக்குத் திட்டஞ்செய் தனுப்பி அரசனரண்மனைக்கண் வந்து சூழ்ந்துகொண்டார்கள். அப்பொழுதவ் வரண்மனையினின்றும் சபாமண்டபத்திற்குச் செல்ல வருகின்ற குலோத்துங்கச் சோழன் விபூதி யுருத்திராக்க லிங்கதாரண மாதிய சிவசின்னங்கள் வாய்ந்த அச்சங்கமர் கூட்டத்தைக் கண்டவனாய்ச் சற்றுநின்று, அவர்கட்கெல்லாம் சரணார்த்திகூறி நமஸ்கரித்து, நீவிரிங்கு வந்தகாரியம் என்னவெனக் கேட்டான். அதுகேட்ட சங்கமர்கள் ஓவென்றிரைந்து, ஒட்டக்கூத்தரால் தம்மிலொருவர்க்குநேர்ந்த விபத்தைக்கூறி, அப்புலவனமது அரண்மனையின்கண் வந்திருக்கின்றானாதலால் அவனையெங்கள்வச மொப்பித்தருள்கவென்று கேட்டார்கள். அதைக் கேட்டமாத்திரத்தில் அரசன்வருந்தி நடுங்கி நெடுமூச்செறிந்து, அந்தோ! அந்தோ! என்றலறி, அரனடியார்க் கெளிவந்தருளுங் குருலிங்க சங்கமமென்னு மூர்த்தங்கள் மூன்றினும் ஒவ்வொன்றே வழிபடுவோர்க்கு மிகப் பயன்றருவனவல்லவா? அம்மூன்று மொருங்கே சேரப்பெற்றுள்ள இச்சங்கம மூர்த்திகளின் மேன்மையை யாவரால் அளவிட்டுரைக்க முடியும்? ஆயிரம் பிளவுள்ள நாக்களையுடைய ஆதிசேடனாலு முடியாதே; அத்தகைய சங்-

கமர்க்கும் இத்தகைய தீங்கு நேருவது அழகோ? ஆ சங்கரா! எனக் கண்கலுழ்ந்து கவிழ்ந்து அச்சங்கமர்களைப் பலமுறை நமஸ்கரித்து, ஓ குருலிங்க சங்கமமூர்த்திகளே! இந்தச் சங்கமக் கொலையினால் நேர்ந்த பழிக்குப் பரிகாரம் சிவாகமங்களிற்றேடி விரைவில் முடிக்கின்றேன். என்பொருட்டு சுவாமிகளனைவரும் அபராதமன்னிப்புத்தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேனென்று கூறினான். அதுகேட்ட சங்கமர் அரசனுடைய கருத்தையுணர்ந்து, ஓ மனுகுலத்தவதரித்த மன்னரேறே! நீர் கூறியது சரதமே. கொலையென்பது மற்ற நான்கு பாதகங்களிலுந் தலைப்பட்டது. இதற்கெந்தச் சிவாகமங்களிலும் பரிகாரமேயில்லை. ஓர்கா லிருந்தபோதிலும் இது சங்கமக் கொலையாதலால், அப்பரிகாரம் இதற்குப் பயன்படாதென்று கூறினார்கள்.

அப்பொழுதரசன் மீட்டுமச் சங்கமர்களை வணங்கிநின்று; ஓ சிவசரணர்களே!

மனைவிசெய்திடும்பாவங்கண்மகிணருக்காகுந்
தனையர்செய்திடும்பாவங்கடந்தையர்க்காகுஞ்
சினமில்சீடர்செய்பாவங்கடேசிகர்க்காகு
மனைவருஞ்செயும்பாவங்களரசனுக்காமால்.

என வான்மீகர் வகுத்திருப்பதால் - எனதரசின்கீழ் நடந்த இந்தச் சங்கமக் கொலைக்கு யானே பாத்திரவானாகின்றேன். என்னைக் கொன்று பழிதீர்த்துக் கொள்ளுங்களென்று பணிந்தனன். அதுகேட்ட சங்கமர் அவனது ஜீவகாருண்யத்திற்கு வியந்து, பூர்வம் தேர்ச்சக்கரத்தின் கீழ் அகப்பட்டிறந்த ஓராவின் கன்றுக்காகத் தமது அரசிளங்கன்றினைக் கொடுத்த மநுவினுதித்த மன்னனாதலால் இப்பொழுது நேர்ந்த பழிக்குத் தனதுயிரையே கொடுக்க இசைந்திருக்கின்றானென்று ஆலோசித்தவர்களாகி, ஓ சாரதாசமேதனே! உலகிலுன்னையொத்த புண்ணியசீலரையுங் கொலைசெய்வாருளரோ? அவனவன் செய்த நல்வினைத் தீவினைப் பயன்களை அவனவனே யநுபவிப்பனன்றி மற்றையவரனுபவியாதுங் கூடுமென்னும் விதியுண்டுளதோ? நாங்கள் முன்

கூறிய செய்யுளின் கருத்து அப்படியல்லவே: மனைவி தனயர் பிடர் குடிகள் ஆகிய இவர்கள் தீவினைச் செய்கையுடையார்களெனத் தெரிந்தும், அவர்கள் தஞ்சொற்கடவாமற் கீழ்ப்படிகின்றவர்களாயிருந்தும், அத்தகையரை நல்வழி போதித்துத் திருத்தாமலிருந்ததனால் அந்தக்கணவன் தந்தை குரு மன்னன் ஆகிய இவர்கள் அத்தீவினையைச் சம்மதித்தவர்களாக ஏற்படுதலின்; அவர்களுக்கு மப்பழிப்பயன் அடையக்கூடுமென்று குறித்ததேயன்றி வேறன்று. ஆதலால் - இங்ஙனம் யாங்கள் வந்தகாரியம் கொலைபுரிந்தவனைக் கொல்லவேயன்றி வேறில்லை[illegible]க் கூறினார்கள். அப்பொழுது குலோத்துங்கன் மீட்டு நெடுமூச்செறிந்து வருந்தி, ஓ வீரமாகேசர்களே! இத்தினம் நீங்களனைவரு மடாலயம் போயிருந்து நாளைவருவீரேல், உங்கள் கருத்தின்படியே அப்புலவனைத் தருகின்றேனெனக் கூறினன். அம்மொழியைக் கேட்டமாத்திரத்தில் சங்கமர்களனைவரும் கடலலைகள் போலச் சீறிக் கூக்குரலிட்டு, ஓ ராஜாதி ராசனே! இங்கிடமப் புலவனைத் தந்தாலொழிய, நாங்களுமரண்மனை வாய்தலைவிட்டு எங்கள் மடத்திற் புகேமென்று கூறி ஆரவாரித்தார்கள்.

அதுகேட்டவரசன் அவர்களைக் கையமர்த்தி நிறுத்தி, அருகிலிருக்குமோர் அமைச்சனை யழைத்து, இப்பொழுதேசென்று என் புதல்வனை இவ்விடத்திற் கழைத்துவரக் கடவாயென்று கட்டளையிட்டனன். அவ்வாறே யவ்வமைச்சன் அரசிளங்குமாரனிருக்கும் அரண்மனைக்கண் சென்று, உமது தந்தை யும்மை வரவருளினரென்று கூற உடனேயவ்வரசிளங் குமரன் விரைந்து வந்து தந்தைதாளிற் பணிந்தனன். அரசனக் குமாரனைக் கண்ட மாத்திரத்தி லெடுத்துத் தன் மார்போடணைத்து உச்சிமுகர்ந்து, கண்களினின்று நீர்த்தாரைகளைச் சொரிந்து இதனைக் கூறுவதாயினன். ஓ பாலசூரியனை நிகர்த்த பாலகா! இங்ஙன நமது கூத்தனால் நிகழ்ந்த காரியத்தினை நீயுங் கேட்டிருப்பாயல்லவா? அக்காரியத்தினைப் பற்றி இச்சங்கம மூர்த்திகள் அவ[illegible] வந்திருக்கின்றார்கள், ஆனதாலவராலுண்டான

பழிக்குத் தீர்வும், எனக்கிவ் வுலகுள்ளளவும் கேடிலாப் புகழும் நின்றுற்றுறுதவேண்டும் என்னேந்தலே யென்று கூறித் துக்கித்தனன். அதற்கிராஜகுமாரன் - ஓ என்றந்தையே! வேத சாத்திரங்களில் தாய்தந்தையர் சொல்லுஞ் சொல் எத்தகையதாயினும் தனயராயினோர் அதைத் தள்ளாதேந்தி நடத்தல் வேண்டுமென்று கூறியிருக்கின்றன வன்றோ? அப்படியிருக்கச் சூரியவம்சத்திற் பிறந்த பிள்ளைகளே தாய்தந்தையர் சொல்லையும் ஆசாரியர் சொல்லையும் கடந்தால் அக்கொடியார்க்கு இந்நானிலமிடந்தருமா? அவர்கட்கு நானிலமென்பது நரகமேயன்றோ? ஒருவன் மனை மக்கள் தனம் கனம் இரதகஜ துரகபதாதிகள் கவிகை சிவிகை ஆரம் வீரம் இவை முதலியவை[...] சம்பாதித்தல் அரிதன்று. சற்குணசீலனென்னும் பெயரைச் சம்பாதித்தலேயரிது. இந்தச் சரீரத்தினது நிலையாமையைப் பற்றி, "உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி- விழிப்பதுபோலும் பிறப்பு" என்றான்றோர்கள் கூறியிருக்கின்றபடி, என்றைக்கேனு மழிய விருக்கின்ற இக்காயத்தை பொருட்பொருளாகவெண்ணி, அடியேன் [...]ருடைய வாக்கினை மறுப்பவனல்லேன். நமது கு[...]ருடை[...]வத்திற்குப் பழிவராதாதென்று நம்மில் மேலான குலத்தினரான ஓர[...]னருமன்றோ தாம் அரிதிற்பெற்ற பிள்ளையைப் பேழையில்வைத்துக் கொலைசெய்துவிடும்படி கொடுத்துவிட்டனர். அன்றியு[...]ரினத்தா ரவராலோர் பிர[...]தம் தங்கள் மாபைப்பற்றிப் பாடவேண்டுமென்று விரும்பி, அதற்குப் பரிசாகத் தங்களுடைய அறிவினு மாற்றலினுஞ் சிறந்த ஆயிரத்தெட்டுத் தலைப்பிள்ளைகளின் சிரங்களை அரை நிமிடத்திற் கொடுத்தது இவ்வவனி முழுவது மறியுமே. இத்தகைய பெரியோ[...]ன காரியத்திலும் யான் பிழைத்திருத்தல் தகுதியோ? இனியவ்வங்கலிங்க சையோகராகிய சங்கமருடைய உயிருக்கு என துயிரை வாங்கும்விதம் யாதோ, அதனைச் சந்தோஷத்தோடுஞ் செய்யலாமெனக் கூறிப் பணிந்தனன்.

இவ்வண்ணம் தன் புத்திரன் கூறியவனைத்[...]ன் கேட்டு, அமரர் விரும்பும் அமுதெனச் செவியாரவுண்[...]ழுக்

53

து, உடனே பக்கலில் நிற்குமோர் சேனைத்தலைவனால் ஓர் மூடுப்பல்லக்கினையும் ஆட்களையுந் தருவித்து, அதில் தன் குமாரனையேற்றி மூடிக் கொணர்ந்து சங்கமர் மடத்தின் மத்தியில் வந்து நிறுத்தி, சிவசரணருயிர்வாங்கிய இவனைச் சற்றுந் திரை நீக்கி முகம்பாராமலே கொண்டுபோய் உயிர்வாங்கி விடுமின்களெனக் கூறித் தனது சபாமண்டப நோக்கிச் சென்றனன். அம்மாத்திரத்தி லச்சங்கமர் யாவரும் அம்மூடுபல்லக்கினை யெடுப்பித்துக்கொண்டு காற்றினுங் கடுகிச் சென்று கொலைக்கள நண்ணி, சிலர் அரசனுத்தரவின்படி முகம் பாராமலே சிவசரணரையழைத்துக் கொல்வித்திடுவோ மென்றனர். சிலர் முகம் பாராமலே ஒருவனை யுயிர்வாங்குதல் முறைமையன்றென்று மறுத்தனர். சிலர் சிவனடியாரைக் கொன்றபாவியை நமது கண்ணாற் பார்த்தல் கூடாதென்றன்றோ, அரசனிவன் முகத்தைப் பாராமலே கொலைசெய்மின்களென் றுத்தர வளித்தன னென்றனர். சிலர் அரசனிந்தக் கன்னியின்மேல் அன்புவைத்திருப்பவ னாதலாலும், இவனை நாம் கண்ணாற் பார்க்கவொட்டாமலே மூடுபல்லக்கிலிருத்தி அனுப்பியதாலும், நமக்கும் இவனைப் பார்க்காமலே கொலைசெய்து விடும்படி உத்தரவு செய்திருப்பதாலும், அரசனிக் கன்னிமேல் வைத்த அபிமானத்தினால் தானே யப்[illegible]கின்றேனென்று முதலிற் சொன்னதனாலும் பலவிதத்தினாலுஞ் சந்தேகத்திற் கிடமாகின்றது. ஆகலால் நாமிவன் முகத்தைப் பாராமற் கொலைசெய்து [illegible]ல், ஓர் பா[illegible]தனுக்குச் சகாயஞ்செய்த கிரியைக் கொன்ற கதையாய் முடிந்து விடுமென்றனர். சிலர் இதுவே சரியெனக் கூறித் திடீரென்று திரையை விலக்கியெடுத்து அப்பா லெறிந்தனர்.

அப்பொழு தரசிளங்குமரன் மேகமறைவினின்றும் வெளிப்பட்ட பால சூரியன்போலக் காணப்படுதலும் சங்கமரனைவரும் [illegible]காணாத துன்ப மடைந்தவராய் அக்குமாரனைத் தங்கண் மார்[illegible]கப்பற்[illegible] எங்களரசிளஞ்சிங்கமே! உனைக் கொல்ல உனக்[illegible]ருமுண்டோ? என்று கடல்போல விரைந்து கண்

ணீர் சொரிந் தழுதார்கள். அத்தருணத்தி லிராஜகுமாரனவர் களை நோக்கி, ஓ தவசிரேஷ்டர்களே! நீங்கள் மனத்தி லெண்ணிவந்த காரியத்தை முடித்தற் கென்ன தடையென்று கேட்டனன். அ தற்கவர்க ளவலித்த மனத்தர்களாகி, ஐயனே! கொடிய பாதகங் களுக்கெல்லாந் தலைமையானது சங்கமர்கொலை. அந்தகைய கொலைசெய்தோனை உன்பிதாவானவ ராதரித்து, இவ்வுலகையெ ல்லா மனுநெறி முறைவழா தாளவல்ல வுன்னை அவனென்று மறைத்துக்கூறி யனுப்பினர். இது தகுமோ? எங்கட்கு நேர்ந் த பழியைத் தீர்த்துக் கொள்ளப்போய், வேறொரு பெரும்பழி யை வாங்கிக்கொண்டு வந்ததுபோலாயிற்றே; அந்தோ! ஈதென் ன பாவம்? என்று கூறிக் கிலேசித்தார்கள். அப்பொழு திராஜ குமாரன் அவர்களைநோக்கி, ஓ சிவானுபூதிமான்களே! அடியே ன் சொல்வதைத் தயைசெய்து கேளுங்கள். என் பிதாவும் யா னும் மனதொத்துக் கூறியதைச் செய்வதில் என்னபாவம்? எங் கள் சூரியகுலத்துதித்த பிள்ளைகளெல்லாம் தங்கள் தாய்தந்தை யர் சொல்லால் இராஜரீகமுதலிய சிறப்புகளனைத்தும் இழக்க நேரினும் அச்சொல்லைக் கடவாது பரிபாலனஞ் செய்து, பரம பதியினுடைய திருவருளைப் பெற்றுப் புகழடைந்தார்கள். அடி யேனந்தகைய சீலத்தைக் கடக்கக் கூடுமோ? ஒன்று மாலோசி யாது என்றந்தை சொற்படி நடவுங்களென்று கூறினன்.

இவ்வாறவ் விளங்குமரன் கூறிய சொற்கள் சங்கமருடை ய செவிகளில் சுருக்கென்றேறலும் தங்கள் நெஞ்சம் கன்றியயர் ந்து நெடுமூச்செறிந்து, ஒன்றுந் தோன்றாதவராய்க் கண்கலுழ்ந் து, இவ்வுலகிலிவ் வரசிளங்குமரனை யொப்பவரு முண்டோ? "மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை - யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்னு மான்றோர்வாக்கியத்திற் கனு பவம் இவன்பாற் கண்டனமாதலால், இவனுக்கிவனே யொப்ப ன்றி வேறில்லை யென்று தமக்குள் மதித்து, அரசகுமாரனைத் தழுவியணைத்து, ஓ சூரியகுலத்தை விளக்கவந்த சுடர்மணித் தீபமே! என்றும் பரஞ்சுடர் சிவபெருமானுடைய திருவருளை

நம்பி யிருக்கின்றவர்களாதலால். ஏதோ தற்செயலாய் உன்றந்தையின் சொல்[illegible]டந்து திரை[illegible]க்கி பார்க்கும்படி யாயிற்று. என்று கூறி அ[illegible]பல்லக்[illegible] டவனை யெடுப்பித்துக்கொண்டு மீண்டு, குலோத்துங்கச் சோழன் சபாமண்டப வாய்தலுக்கெதிரில் விடுத்து, ஓ இராஜாதிராஜனே! ஒருவராலு மன்னித்தற்கரிய கொலைசெய்தோனை யாதரித்து அவனுக்கிடாகச் சத்தியத்தி லொப்புயர்வற்ற உமது மதலையைக் கொலைக்கள மனுப்பினீரே: இப்படி யாவர் செய்யத்துணிவார்? இனியேனு முமக்கு யாங்கள்கேட்பது தருமமாயிருக்கின் அக்கவியைத் தந்திடுக: இல்லையேல் நீருமது வீரவாளினால் எங்களனைவரையு மாய்த்திடுக: என்று கூற[illegible]ளனமுற்றிருந்தார்கள்.

அதுகண்ட வரசன் அவ்வித்தமனத்தனாகி, அந்தோ! நமது கவிராஜ சிங்கத்தினுக்குப் பதில் புவிராஜ சிங்கத்தினை யனுப்பியும் நமக்கு நேர்ந்த ஊழுக் கொழிவுகாணேனே: இனி என்செய்வது? என வருந்தி யிருக்குங்கால் மற்றோர்பாலிருந்த ஒட்டக்கூத்தர் சில சாரணரால் நடந்த காரியங்களனைத்தையுங் கேட்டறிந்து, சமீபலின்று குலோத்துங்கச் சோழராஜனிடம் வந்து ஓ அரசரேறே! என்னால் நேர்ந்த பழிக் கென்னையே அனுப்புகவென்று கூறினர். அதுகேட்ட வரசன் சிவசிவ வென்று தன திருசெவிகளையும் பொத்திக் கண்கலுழ்ந்து நிற்க, அதுகண்ட கூத்தர் அரசனைத் தேற்றி விடைகேட்க, அரசனென்றுந் தோன்றாதவனு யயர்ந்து, தன திருகரங்களாலும் ஒட்டக்கூத்தரைத் தழுவி, ஓ என்னுயிர்க்குயிராகிய உத்தமப் பொருளே! இதுகாறும் தேவரீரை எனக் கிருமைநலத்தையு மளிக்கவந்த சிவபிரானேயென் றெண்ணியிருக்கின்றேன், இது சத்தியமேயாயின் தேவரீரை இச்சங்கமரனுப்பும்படி கேட்டுக்கொள்வதாலும், தாமும் போக உடன்பட்டிருப்பதாலும், சிவிகை முதலிய சின்னங்களுடன் போய் தேவரீர் விரைவில் வந்தருள்கவென் றனிதிற் கூறினன். அதுகேட்ட கூத்தர் இச்சிவசரணர்கள் பாதசாரிகளாயவர நாம் தனியே சிவிகையேறிச் செல்லுதல் மரபன்றெனக்

கருதினவராய்த் தாமும் அவர்களோடு பாதசாரியாகவே செல்வ தாயினர். அப்போது ...தலோத்துங்கச்சோழன் கொலுமுகத் திருக்க மனதின்றி மிக ...பாகூலத்தோடு முகம் வேறுபட்டு அரண்மனையை நோக்கிச் செல்கின்றான். அந்தச் சமயத்தில் ஔவைப்பிராட்டியார், தற்செயலாய்வந் தெதிர்ப்பட, அரசனவ ரிடத்தில் கூத்தருக்கு நேர்ந்த விபத்தைக் கூறித் துக்கித்தனன். அதுகேட்ட வம்மையார்-

காட்டிற்பிறந்தவரெல்லாகடுங்கரராதியார்முன்
பூட்டுசிம்யாதனத்தாயிரத்தெண்மர்க்கும்போனவுயிர்
மீட்டகவிச்சக்ரவர்த்திக்கிங்கோர்சங்...மசனுக்குக்
கூட்டுவதோவிதையர்குமாரகுலோத்துங்கனே.

எனவோர் கவிதைகூறி யவனைத் தேற்றி யனுப்பினர். மு ன்னர் பாதசாரியாய்வந்த ஒட்டக்கூத்தரை அச்சங்கம ரழைத்து க்கொண்டு கொலைக்களநோக்கிப் போகும்பொழுது சூரியனுன வன், இக்கவிச்சக்ரவர்த்தி நமது குலத்தினருக் கனுகூல னுத லால் இவனுக்கு நம்மாற்கூடிய உபகாரஞ் செய்ய வேண்டுமென க் கருதினவனுய் மேற்கடலை நோக்கிச் சென்றனன். அத்தரு ணத்தில் கூத்தர் சங்கமர்களை நோக்கி, ஓ சுவாமிகளே! இப்பொ ழுது யான் சிவபூசை செய்யுஞ் சமயமாதலால் அது முடித்து வருகிறேனென்று விடைகேட்டார். அதற்கவர்கள் சிவபூசை யைக் கடக்கலாகுமோ? எங்கட்கு மிதுவே சிவபூசை செய்யுங் காலமாதலால் யாங்களும் அதை முடிக்கச் செல்கின்றோம், நீரு முடித்துக்கொண்டு வாருமென் றுத்தரவு செய்தார்கள். உட னே கூத்தர் அங்குள்ள அரிசொன்னதிக்கரையிற் சென்று மூழ் கிப் பூசைக்குரிய பொருள்களைச் சேகரித்துக்கொண்டு, திருவெ ண்ணீறு முதலிய சிவசின்னங்களைத் தரித்து, உருத்திராக்க வட த்தைக் காத்திலேத்திப் பஞ்சாக்கரத்தினைப் பலமுறை யுச்சரித் துத் தமதான்மார்த்தமாகிய சிவபிரானை ஆகம விதிப்படி ...த்து, தூபதீப நிவேதனமாதிய வைதிக மானதத்தால் மந்திரலோ

பங் கிரியாலோபமின்றி நிறைவேற்றி, தங்கெழுந்தருளியுள்ள முனீச்சாளம்மை யென்னும் பத்திரகாளி கோயிலுட் சென்று கதவைமூடித் தாள்பூட்டிக்கொண்டு அத்தேவியைத் தியானித்திருந்தனர். அப்போதச் சங்கமர் யாரும் தங்கள் சிவபூசா காரியங்களை முடித்துக்கொண்டுவந்து, ஒட்டக்கூத்தர் பத்திரகாளியாலயத்துட் சென்று கதவைமூடித் தாள்பூட்டிக்கொண் டிருப்பதைக் கண்டு, அச்சங்கமருட் சிலர் இவனை யிப்போதே கதவையுடைத்து வெளியிற் கொணர்ந்து கொலை செய்துவிட வேண்டுமென்றனர். மற்றுஞ் சிலர் இவன் கோயிலுட் சென்றிருப்பதன்றி அந்திப்பொழுது சமீபித்துவிட்டதால், இப்பொழுதிவனைக் கொல்லக் குறித்தல் நன்றன்றென்று மறுத்தனர். இன்னுஞ் சிலர் குற்றமற்ற கலைகளை யெல்லாங் கற்றறிந்துள்ள இவன் தேவாலயத்துட் சென்று தியானஞ் செய்யுந் தருணத்தில் அதனை நாம் குலைக்கவெண்ணுதல், முன்னோர் காலத்தில் மார்க்கண்ட முனிவனைச் சிவபூசையி னின்றுங் கலைத்த மறலியி னியல்புக் கொப்பாமென வசனித்தனர்.

இவ்வா றவ்வவர்களும் வசனித்திருந்தபோது முன்ன மேற்றிசை நோக்கிச் சென்ற சூரியனானவன், இருதலைக்கொள்ளியினுறும்பொத்து அவலித் திருக்கின்ற கவிச்சுரனது துனிப்படலத்தைப் பனிப்படலத்தோடு நாளைவந் தொழிக்கின்றேனென்று சொல்லிப் போவான்போல் விரைவில் அம்மேற் கடலில் மூழ்கி மறைந்தனன். அக்கால் பூர்வமாயனானவன் கிருஷ்ணாவதாரத்தில் தனது சக்கரத்தாற் சூரியனை மறைத்தபோதி லுண்டாகிய தன்மையொத்துச் செக்கர்வான் றோன்றியது. ஆகாயத்தில் புன்னையரும்புகள் புட்பித்தல்போன்று தாரகாகணங்க ளுண்டாயின. பாவலர் பெருமானுக்கு நேர்ந்த பழியைப்போல எங்கும் கங்குல்வந்து மூடியது. தாமரை முதலியவைகள் குவிந்தன. அல்லி முதலியவைகள் மலர்ந்தன. மயில் குயில் முதலிய பறவைக் கூட்டங்கள் யாவும் பல சோலைகளிற்சென் றொடுங்கியுறங்கின. சரஸ்வதியினுடைய முகத்தினையொப்பச் சந்திரன்

கீழ்த்திசைக்கடலி லுதயமாயினன். குலோத்துங்கச் சோழரா ஜனுடைய புகழைப்போல எங்கும் வெண்ணிலாவீசியது. ஆதி சேடன் தனதாயிரம் பணாமுடிகளாற் சுமக்கும் இந்தப் பூமியை வீரலட்சுமி குடிகொண்டிருக்கின்ற தனதொருதோளாற் சுமக் குங் குலோத்துங்கச் சோழ னுச்சிமேற் கவித்து விளங்குவதா ன வெண்கொற்றக் குடையையொத்துச் சந்திரனானவன் தனது ஷோடசகலைகளோடும் பிரகாசித்தனன்.

இவ்விதச் சின்னங்களுடன் இராக்கால நெருங்கலும், சிவ யோக நிலையினராகிய சங்கமரனைவரும் பத்திரகாளி கோயிலைச் சூழ்ந்துகொண்டு காவல் செய்வார்போ லிருந்தார்கள். அக் கோயிலுள்ளே தியானஞ்செய்திருந்த புலவரேறுக்கு அக்கோ யிற் றலைவியாகிய முனைச்சாளம்மை தனது நிசரூபக் காட்சிகொ டுத்தருளி, உமக்கென்னால் யாதாகவேண்டி இங்ஙனம் வந்திருக் கின்றீர் கூறுமென்று வினவினள். அதுகேட்ட கூத்தர் : என்ன ம்மையே! இப்பதியின்கண் வீரசிங்காதன மடத்துச் சங்கமரி லொருவரை ஓர் காரணத்தாற் கோபித்துக் கன்னத்தி லறைந் தேன். அவரவ் வறையைத் தாளமாட்டாது உயிர்துறந்தனர். அப்பழி யென்னைவிட் டகலுமாறு அவரை யுயிர்ப்பித்தருள்க. இதுவே நீ ரெனக்குச் செய்யவேண்டிய உபகாரமென்றும், இத ற்காகவேதா னடியேன் உம்மை வந்தித்தனென்றுங் கூறினர். அதுகேட்ட காளி அவரைப் பரிவுடன் நோக்கி, ஓ புலவரேறே! அந்த வீரசிங்காதன மடத்தில் வீரபத்திரக்கடவுள் கொலுவீற் றிருக்கின்றனர். அவரை நீர் பாடித் துதித்தால் உமது விருப் பம் உடனே நிறைவேறுமென்றனள். அதுகேட்ட கூத்தர் அவ்வீரபத்திரக் கடவுள் தக்ஷயாக மர்த்தனஞ்செய்த அதிவீர பராக்கிரமத்தை மனதி லுன்னாதவராகி, தாம் திரிகரண சுத்தி யாய்ச் சந்திர சடாதரமூர்த்திக்குச் செய்துவருந் தொண்டின் பயனைச் சோதிக்கவெண்ணியோ? அத்தொண்டை யுலகறிந்துய் யுமாறு வெளிப்படுத்தக் கருதியோ? மற்றியாதோ நினைந்தோ? அக்கால் தாம் பல்லான சிறையில் அடைபட் டிருப்பவன்போல்

திருந்தும் வுத்தரியத்தை விடாமல் காளியைப்பார்த்து, அம்மணி நீர் மொழிந்தபடி வீரபத்திரக் கடவுளைப் பாடித்துதிக்க ஓர் தீபமும் ஏடெழுத்தாணியுந் தருகவென்று கேட்டனர். அவளவ்வாறே மூன்றுங் கொணர்ந்து வைக்க, ஒ முனைச்சா ளம்மையே! அடியேனவ் வீரபத்திரக் கடவுள் செய்தருளிய தக்ஷயாக மர்த்தனத்தைக் கூறித் துதிக்கப் போகின்றேன், அத்துதியை நீர் எழுதிக்கொண்டுவரின் விரைவில் முடியுமென்று கேட்டுக்கொண்டனர். அதர்க்குக் காளி யிசைந்து, தனது கரங்கள் நான்கில் படையரசாகிய சூலாயுதத்தினை யேந்த ஒரு கரமும், தீபத்தகளியை யேந்தியிருக்க ஒருகரமும், ஏட்டினைப்பிடிக்க ஒரு கரமும், எழுத்தாணியைக்கொண் டெழுத ஒரு கரமுமாகி அவரெதிரிலிருந்தனள்.

அஃதுகண்ட கூத்தர் வெண்டாமரைத் தவிசில் விற்றிருக்கும் உலகமாதாவாகிய சரச்சுவதி தேவியாரை வந்தித்து, அவ்வந்திப்பா லகத்திற் காட்சியாகிய அவளது திருவடிக் கமலத்தில் தமது கண்ணிணைகளை நிறுத்தி, அந்நிறுத்திய கருத்துடன் புலனைந்தையும் புறம்போகாமற் பூரணபுத்தியிற் பொருத்திப் பரணிப்பிரபந்தம் பாடி வருகிறார். இவ்வாறு பாடிவரும்போது காளி கரத்தி லேந்தியிருந்த தீபமானது யாது காரணத்தாலோ கம்பித் தசைந்தது. அதுகண்ட கூத்தர் சினந்து காளியை யுறுத்துப் பார்த்து, அடியேன் தத்துவசொரூபியாகிய கடவுளைத் தியானித்து வஸ்து நிச்சயத்தை வழுத்துங்காலத்தில் சற்று மஞ்சுதலின்றித் தீபங் கம்பிதப்பட்டலையக் கரத்தை யசைப்பதேன்? என்று கூறித் தமது கைவிரலைந்தையு நீட்டி அவள் கன்னத் தறைந்தனர். அவ்வறைதலைச் சகித்த காளி என் செய்வள்? நாம் தகளியையேந்திச் சகாயப்பட்டுத் தரையில் அறைபெற்றோம்: ஈதென்ன பாவம்? இது முன்னொருவரை யறைந்து வந்ததற்குச் சாக்ஷிபோலும்; அகங்கா ரனைவர்க்கும் ஆலகாலம்போன்ற யாமே இப்புலவர் பெருமானது விற்றழும்பும வாட்டழும்பு மேவிய கையினால் அறையுண்டு வருந்துவதானால், சாமான்ய வலியின

ரான் சங்கமர்பட்ட விதத்தைச் சொல்லவும் வேண்டுமோ? இவர் கல்வியிலும் வீரர் களத்திலும் வீரர்போலும்; எனத்தனக்குள் ஆலோசித்துக் கொண்டவளாய் இன்றொருவிசை மற்றொருதாடையும் பழுத்துவிடப் போகுமென்று பயந்து, வெகு சாக்கிரதையோடும் அசையாத படிக்குக் கம்பம்போல் தப்பித்திருந்தனள். அக்கால் கூத்தர் சினமாறினவராய்த் தாம் பாடத்தொடங்கிய பரணியென்னும் பிரபந்தத்தை எண்ணூறு செய்யுளிற் பாடி முடித்தனர்.

அப்பொழுது சந்திரனென்பவன் முன்னோர்கால் நமது வமிசத்தாசனைப் பழித்தவனிவனாதலால், இனியிவன் வெளிவரின் நம்மையும் பழிப்பனென் றஞ்சி யோடி மறைந்ததுபோல மேற்றிசைக்கடலின் மூழ்கி மறைந்தனன். உடனேவல்லிருளொழியும்படிக்குச் சூரியனென்பவன் கிழக்கிசைக்கடலில் உதயமாகி, அந்தருணத்தில் கூத்தருக்கு ஊழின்வலியா லுண்டாகிய துயர்க்கடலைப் பெயர்த்தெடுப்பது போலத் தனது கற்றையங் கதிரொளிங் கயிற்றோடு மேலெழுந்து வீசிப் பிரகாசித்தனன். அதுகண்டு கங்குலென்னு மங்கையானவள் காசினியெங்கும் பரவிய வெளியிருளோடு, கவிச்சுரருடைய தூய மனத்தை நெருங்கியிருந்த துன்பமென்னு மகவிருளையு மழைத்துக்கொண்டு எங்குந் தலைகாட்டாது மறைந்தனள்.

அக்கால் காளிகோயிலைச் சூழ்ந்துகொண்டிருந்த மகேச்சுரரெல்லா மெழுந்துசென்று புலவர்பெருமானை வெளியில் வரும்படித்துக் கூவ, அவர் வராமலே யானிங்கெழுதிய பிரபந்தத்தைப் பார்மின்கள் இதோ வருகின்றேனென் றிதமாய்க்கூறி அக்கோயிற் கதவின்கணுள்ள புழையின் வழியாக நீட்டினர். அதையவர்கள் நல்லதென்று வாங்கி வாசித்துப்பார்த்து, இது நம்மிஷ்ட தேவதையாகிய வீரபத்திரக்கடவுளுடைய பிரபாவத்தைப் பற்றிக் கூறியிருக்கின்றதென மகிழ்ந்து, கவிச்சக்ரவர்த்தியின்மேற் றாங்கள் கொண்டிருந்த சீற்றத்தை யொழித்துக் கதிரைக்

கண்ட கமலம்போல அகமுமுகமு மலர்ந்தவர்களாகி, அவரைக் கொல்லக் கொணர்ந்துவந்துள்ள கத்தியை அக் கதவின் புழையுள் நீட்டி, நீரிதைக் கைக்கொண் டஞ்சாது வெளிவந்து உமது மகிமையறியா துறுகண் செய்யவந்த எங்களை மன்னித்தல் செய்ய வேண்டுமெனக்கூறி யழைத்தனர். அதுகேட்ட புலவர் பெருமான் ஆச்சரியமடைந்து, உள்ளே யிருந்தபடி அச்சங்கமர்களைக் கூவி, ஐயமீர்! அடியேனு லியற்றிய பெருங்கோறனுக்கு உள்ள நைந்தோராய்க் கொல்ல முயன் றழைத்துவந்த நீங்கள் இத்தகைய தயவான வார்த்தை சொல்லுவதற்குக் காரணமென்ன வெனக் கேட்டனர். அதற்கவர்கள் ஒட்டக்கூத்தரைக் கூவி, ஓ கவீச்சுரரே! எங்கள்வீரபத்திரக் கடவு[illegible]மன் குமாரனாகிய தக்கனுடைய யாகத்தை யழித்த பிரபாவத்தைப் பற்றி நீர் ஓர் பிரபந்தஞ்செய்து தந்ததாலும், இன்னு நீ ரிருந்தால் இத்தகைய பிரபந்தங்கள் எண்ணிலவற்றைப் பாடுவித்துக் கொள்ளலாமென்னு மவாவினாலும், இங்ஙனம் யாங்களும்மைக் கொல்லக் கொணர்ந்த கத்தியை உம்மிடத்தே யொப்பித்தோமென்றார்கள். அதுகேட்ட கூத்தர் உடனே கபாடந் திறந்து வெளிவந்து அஞ்சலிசெய்து நின்றனர்.

அவரை யச்சங்கமர் யாரும் பரிந்து நோக்கி, ஐயா அருங்கவிப் புலவரே! பூர்வம் நக்கீரருரைத்தருளிய திருமுருகாற்றுப்படை யென்னும் பிரபந்தத்தை முருகக்கடவு ளேற்றுக்கொண்டு அவரைப் பூதச்சிறையினின்றும் விடுவித்தருளியது போன்று, அவர் சகோதரராகிய வீரபத்திரக்கடவுளும் நீர் பாடியருளிய பரணியென்னு மிப்பிரபந்தத்தை ஏற்றுக்கொண்டு உமக்கு நேர்ந்திருந்த பழிச்சிறையை விடுவித்தருளினர். நீ ரிப்பொழு தியற்றித்தந்த இப்பிரபந்தத்திற்குத் தாத்தக்கபரிசு இப்பூவுலகமும் பொன்னுலகமுமேயாயினும் தகுதியன்று. அதனுடைய கீர்த்தியானது திரிலோகங்களுமுள்ள வரையில் நிலைநிற்குமென்று கூறினார்கள். இவையனைத்தையுங் கேட்ட புலவர் பெருமான் சங்கமக் கொலைக்குத் தளர்ந்து நொந்திருந்த சிந்தையோடும்

அவர்களை வணங்கி, ஓ வீரமாகேசர்களே! அடியேனா லியற்றப்
பட்டுள்ள பொல்லாத தீங்கு என்னைவிட் டொழியும் வகை எவ்
வாறென்று வினவினர். அதற்கவர்கள் - ஓ கவீச்சுரரே! நாம
ரூபக் கிரியைகளற்ற கடவுளானவர் நாமரூபக் கிரியைகளோடுங்
கூடிய ஆன்மாக்களைக் காத்து, அவர்கள்பாற் பிணிக்கப்பட்டுள்ள
மும்மலங்களும் பொடிபடும்படியாகக் குருலிங்க சங்கமமென்னு
மூன்று வடிவங்களோடும் அவர்களுடைய தூல சூக்கும காரண
மென்னு முத்தேகங்களினும் பொருந்தி யிருப்பர். ஒருவ னத்
தகைய தேகத்தி னின்றும் ஒரு துளி யிரத்தம் கீழே விழச்செ
செய்வாராயின், பிரமஹத்தி, சிசுஹத்தி பசுஹத்திகளை யன்றி
இரண்டு கோடி கருப்ப ஸ்திரீகளை வதைத்த பாவங்களினும்
கோடிபங் கதிகமென்பது சிவாக்கினை யாதலால், நீர் செய்த வ
தைக் கொப்புயர் வுண்டோ? முன்கூறிய குரு லிங்க சங்கமமெ
ன்னு மூன்றுளுஞ் சிறந்தது சங்கமம். அந்தச் சங்கமரைத்
திரிகரண சுத்தியோடுந் தரிசித்தவர்க்கு சிவகதி கிடைக்கு மெ
ன்பது வேதநிச்சயம். நீருமிப்போ தவ்வாறு தரிசித்தீ ராத
லால், இனி யப்பாவ மும்மைவிட் டொழியு மென்பதற்குச் சந்
தேக மில்லை யென்றார்கள்.

அப்பாலச் சங்கமர் யாரும் அவ்வரும்பெரும் புலவரை அ
ன்போ டாலிங்கனஞ்செய் தழைத்துக்கொண்டு சமுத்திர கோ
ஷம் போல ஆரவாரித் தெழுந்து நேரே தங்கள் மடாலயத்திற்
குச் சென்று, அந்த மடாலயத்தின் மஹாசந்நிதானமாகிய மல்
லையதேவர் திருவடிகளிற் பணிந்து நின்று, தாங்கள் போய்வந்த
செய்தி யனைத்துங் கூறி, வீரபத்திரக்கடவுள் சந்நிதானத்தின்
கண் வந்து இதனை யாலோசிக்கத் தொடங்கினர். இறத்தலும்
பிறத்தலு மில்லாது அனாதியாயுள்ள நமது வேதத்தில், இறத்த
லும் பிறத்தலுமுள்ள உயிர்களுக்குள்ளே அங்கலிங்க சையோக
ராயிருக்கின்ற வீரமாகேசருக்கு, இறத்தலும் பிறத்தலும் அவ்
விலிங்கத்தை புறுதலின்றி வேறில்லையெனச் சொல்லப்பட்டிருக்
கின்றது. ஆயினுமிச் சங்கமருடைய உயிரகலுங் காலத்தில்

ஞர் இங்ஙனஞ்செயல் முன்னிலையா யகன்றது. இஃதுலகுக் கிடர் விளைத்தற்குக் காரணமாகும். ஆதலா லினிப் புன்செயலாலகன்ற உயிரை மீட்டுப் பொருவினுடலிற் சேர்ப்பதே சரியென்று ஆலோசித்தவர்களாய், மனமுதலிய நால்வகைக் கரணங்களுள் இடை முதலிய வறுவகை இலிங்கங்களை யமைத்து வைகுவோராகிய தங்களுக் கறிவை விளக்குங் குருபரனுடைய அடித்துணைப் புனலை யேற்றுச் சென்று, இறந்து கிடக்கும் அச்சங்கமருடைய வங்கத்திலாட்டி, உண்மாசை யகற்றும் வெண்ணீறை யுடன் முழுவதும் பூசி, நெற்றியிற் றங்கள் கரத்தை வைத்து எழுந்திரும் எழுந்திருமெனக் கூறினார்கள். அம்மாத்திரத்திலவர் சுழுத்தியினின்றும் சாக்கிரத் தடைந்தவர்போ லெழுந்து, கரதலங்களை நீட்டிக் கண்களை விழித்துத் தலையை நிமிர்த்தி நாற்றிசைகளையு நோக்கி, மெல்லமெல்லச் சென்று தமது குருநாதனுடைய திருவடித்தாமரைகளிற் பணிந்து சிவத்தியானஞ் செய்திருந்தனர், மற்றிருந்தோ ரானந்த பரவசராகி வீரபத்திரக் கடவுள் சந்நிதியின் முன்பு அக்கினி குண்டஞ் சமைத்து, கவிச்சக்ரவர்த்தியாகிய [illegible] அவர் பாடிய தக்கயாகப் பரணியை அரங்கேற்றுவித்தார்கள்.

அவ்வரங்கேற்றல் முடிந்தபின் ஒட்டக்கூத்தர் அப்பிரபந்தத்தை அம்மடாதிபதியாகிய மல்லையதேவர் கரத்தில் நீட்ட, அதுபெற்ற குருசுவாமியார் அவர் செய்துள்ள நூலைக் கசிசயித்தவராகி, உடனே செம்பொன் முதலிய திரவியங்களோடு பட்டுப் பீதாம்பர வசனங்களையும் பலவாபரணங்களையும் சிவிகை கவிகை முதலிய சின்னங்களையும் காகளம் கொடி முதலிய விருதுகளையும் சந்தோஷமாகக் கொடுத்தருளினர். அவைகளனைத்தையும் ஒட்டக்கூத்தர் அகமகிழ்வோடு மேற்று அனந்தமுறை தீர்க்கதண்டஞ் செய்து விடைபெற்று, மற்றச் சங்கமர்களனைவருக்கும் சரணார்த்தி கூறி வெளிவந்து, தாம் பரிசாகப் பெற்ற பொருள்களையெல்லாம் சிலரால் எடுப்பித்துக் கொண்டு சிவிகையேறி கொடி குடை முதலிய சின்னங்கள் விளங்க முரசு காளமுதலிய

வொன்று மகா மகிமையுள்ளனவாகும். அன்றியு மவர் செய்துள இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் உலா பரணி கோவை மடல் முதலிய பிரபந்தங்களும் எண்ணிலவாம். அவற்று ளொவ்வொன்றும் சொன்னயம் பொருணய முதலிய அமைந்துள்ளனவாகும்.

இவ்வண்ணம் குலோத்துங்கச் சோழன் முதலிய தமிழ்வேந்தர்கள் முழுதுங் கொண்டாட விருந்த ஒட்டக்கூத்தர் வயோதிகதசை யடைந்தவராகி, இராசசபைக்கு வருதலும் போதலு மொழித்து, அச்சோழராச னுபசரித்தவரச் சின்னாள் சீவித்திருந்து; பின்னர் தமக்குப் பிராணவியோக மடையுங்கால நேரிடலும்; அக்காலச்சோழன் முதலிய பல அரசர்களும் பரிசனர்களும் அவரைப் புடைசூழ்விருந்து, அத்தருண மவர்க் [illegible]தவேண்டிய பணிகளை [illegible]டாத்திவந்தார்கள். அப்பொழுது குலோத்துங்கச் சோழராசன் அவரைத் தனது தந்தையினு மேலாக மதித்துள்ளோ னாதலால் [illegible] பாவுக் காற்றுனுப் வருந்தி அவருகிற் சென்று, ஓ [illegible]ந்தையனே! இதுகாறு மெனக்கும் என்னரசுக்கும் பெருந்துணையா யிருந்த தேவரீரைப் பிரிந்து யானுய்யும் வகை எவ்வகையோ வறிகிலேன். அறமாதிய புருஷார்த்தங்களை எனக் கங்கையாமலகம் போலத் தெருட்டி யாட்கொண்டருளிய தேவரீருக்கு யான் செய்யத்தகுங் கைம்மாறு யாண்டு யாதுளது? தென்பாண்டி நாட்டில் பல சங்கப்புலவர்கள் அங்கைதோறும் ஒவ்வோராம்சமாக விருந்து விளையாடல் செய்யும் கலைமகளார், தேவரீர் நாத்தில் அவ்வம்ச மடங்கலும் கொண்டிருந்து விளையாடப் பெற்ற பிரபாவத்தை இனி யாவரிடத்திற் காணப்போகின்றேன்? இவ்வுலகில் குணகடல் குமரி குடகம் வேங்கடமென்னு நாற்பாங் கெல்லைக்குள் அமிழ்தினு மினியதாய் விளங்கு மருந்தமிழ்மாது இனிப் புன்கவிகளாற் பட்டு யாதாகுவளோ? இதுகாறு மப்புன்கவிகளென்னும் புடுகளை யங்குந் தலைகாட்டி வாராதபடி யடக்கிப் பூரணகவிகளை யெல்லாம் போற்றி யாதரித்தருளும் தேவரீருடைய திவ்யகாருண்யத்திற்கு

யாரை யொப்பிடலாம். ஒப்பிடவேண்டில் தம்மையடுத்த தொண்டர்களுடைய அசுத்தமாயா காரியங்களை விளக்கி சுத்த மாயா காரியங்களை யூட்டி யாட்கொண்டருளும் சிவபிரானைத் தான் ஒப்பிடல் வேண்டும். மேலும்தேவரீர் அற்பகவி நிக்கிரகரும் அருங் கவிரக்ஷகருமா யிருத்தலையால், துஷ்டசனநிக்கிரகரும் சிஷ்டசன ரக்ஷகருமாகிய விண்டுவையு மொப்பிடலாமே யன்றி வேறெவருளர்.

அன்றியு மிளமையிலேயே வெண்டாமரைத் தவிசினரான கலைமகளாரைத் தியானித்துக் களைத்து, அவரோர் பார்ப்பினியாக வந்து திருமுலைப்பாலை ஓர் வட்டிலிற் சுறந் தூண்பிக்க உண்டு, அவராற் சகலகலா நிலைய மென்னும் புத்தகத்தினையுந் தரப்பெற்று, எங்குஞ் சாரதாபீட சம்பன்ன ரென் றியாவரானு மழைக்க விருந்த பிரபாவத்தை; இன்று மினியென்றும் தேவரீர் திருவவதாரஞ் [illegible] திருமணலூரிற் பிரத்தியக்ஷமாகக் காணும்படிக் கிருக்கின்றதே. [illegible] சிவத்தலயாத்திரையாகச் சென்றபோது திருக்காஞ்சி நகரில் தேவ [illegible]பதிசமென்னுங் குமரகோட்டத் தெழுந்தருளியுள்ள சண்முகக[illegible]வுளுக்குச் சஷ்டிவிழா நடத்துகையில், வானமுழுது மேகங்கள் பரவி மழை பெய்வதற் காரம்பித்தலையும் அதுகண்ட அத் தேவாலயத் தருமபரிபாலனர் திருவிழாவை நடத்துவதற் கில்லையேயென்று கவலையுற்றலையுங் காரியத்தையு நோக்கி, உடனே யோர் கவிபாடி அம்மழையைத் திருவிழா நிறைவேறும் வரையில் நிறுத்தியருளிய அற்புதச் செய்கையும்; திருவண்ணாமலைக்கண், பிறவிக் குருடராயிருந்த தாசிக ளிருவர் தமது பிரபாவத்தைக் கேட்டுவந்து தாழ அவர்கட்குக் குருடுநீங்கிக் கண்தெரியுமாறு ஓர் கவிபாடி யாட்கொண்டருளிய கருணையும் இவ்வுலகுள்ளளவு மொருவரால் மறக்கற்பாலனவோ? மற்றொருகால் தேவரீர் மரபினராயுள்ள இவூர்ச் செங்குந்த வீரர்கள் நால்வருணத் தூட்டாழ்ந்த சூத்திரருக்கு நன் குலவண்மையைப் பற்றி ஓர் பாவலனாற் பல பாமாலை சூடப் பெற்றனரென்று தாமும் பெறக்கருதி விண்ணப்பஞ் செ

ய்ய. அப்பாவலவச் சூத்திரர்கள்மீது வைத்த அபிமானப் பெருக்கினாலும் அருக்ரன விழைவினாலும் அநேகமாகக் கற்பித்துப் பாடிய பிரபந்தங்கள் போலாது தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர்களது சிரங்களைக் கொய்து சிரச்சிங்காதன மிட்டு அதினின்று மோர் பிரபந்தம் பாடிக் குலவண்மையை விளக்கி, மீட்டுஞ் சிரங்க ளவற்றி னுடலோடு சேர்த்து உயிர்பெற் றெழுமாறு ஓர் கவிபாடி யெழுப்பியருளிய தெய்வீகத் தன்மையை இம்மூவுலகங்களு மறியுமே;

வேறொருகால் முதல்வருணத்தினர்க்கு ஊழின் செயலால் முறைமாறிப் பிறந்தும் அவரோடேயே கலந்து நில்லாது கடைவருணத்தரைக் கூடி அவர்களையே கனப்படுத்தக் கற்பித்துப் பாடி அவர்களால் சன்மானமும் வெகுமானமும் பெற்றிருக்கும் கம்பனானவன், எல்லா வைதிகராலும் பூசா காலத்தில் பாராயணஞ் செய்யத்தக்க மகாவிதிகாசத்துள் அவர்களைக் கலந்து பாடிய காரணத்தால் தேவரீர் கோபித்து [illegible]நூலவனை யவமானப் படுத்த, அதையவன் தெரி[illegible]த்தித் தேவரீர் சரீர சாட்டியங் கொண்டிருக்[illegible] இக்கோபமிலனு மிறக்கானேனென்று தனதுபாசனப் பொருளாகிய பிரமரக்ஷசைத் தியானித்து ஓர் கவிபாடித் தானே யிறக்க, அஃதுணர்ந்த புதல்வன் அக்கவியினைத் தேவரீர்க்குக்காட்டி எனது தந்தைக் குயிர்ப்பிச்சை தரவேண்டுமென்றிரக்க, உடனே யக்கவியினைத் திருத்தி அவனுயிர்த்தெழச் செய்து அவனு[illegible] கதுமுத்தல் வழங்குவதாக ஓர் சிறப்பு நாமமுந் தாட்கொண்ட ஜீவகாருண்ணியத்தின் சீர்த்தியை அடியே னென்னென்று துதிக்கவல்லேன்?

பின்னொருகால் கும்பகோண வீரசிங்காதன மடத்துச் சங்கமமூர்த்தியால் நேர்ந்த ஒரு பெரும்பழிக்காக அம்மடத்தி லெழுந்தருளியுள்ள சங்கை வீரபத்திரக்கடவுள்மீது பிரபந்தஞ்செய்யும் பொருட்டு, ஆக்கலாதிய ஐந்தொழிற்கு மதிபனாயுள்ள சிவபிரானோடு சற்று மஞ்சாமற் றருக்கி வாதாடுபவளான மகா பத்திரகாளியையுந் தேவரீர் குற்றேவல் செய்பவருக்கொப்ப வி

ருக்கி, அவளெழுதிவரப் பாடிமுடித்த அப்பிரபந்தத்தின் வரலாற்றை இவ்வுலகில் யாரறியாதார்? இவ்வனைத்தையு மறிந்தேயன்றோ கவிமகளா ரமிசத்தினரான ஔவைப் பிராட்டியார் "தாய்க் கழுது - ஞானவமுதுண்டசைவநாயகன்" எனத் தேவரீரைத் திருஞானசம்பந்த மூர்த்தியோடொப்பக்கூறி யதன்றி, மற்றொரு சமயத்தில் "காவலர்க்கோர் கான்மடங்குக் கற்றோர்க் கிருகாலங் - கேவலர்க்கோ வங் மெலாங் கேட்டியால்" என்று யானும் புகழேந்தியாருந் தேவரீருடைய பெருந்தகைமையை யறியுமாறு விதந்து கூறினர். இத்தகைய பிரபாவங்க ளெண்ணிலவாகப் படைத்த தேவரீரைப் போல இனியான் காணப்பெறுவதும் உண்டுகொலோ? என்றின்னும் பல கூறிக் கிலேசித்தான்.

அ[illegible]பொழுது கூத்தர் அவ்வரசன் படுங் கிலேசத்திற் கிரங்கினவரா[illegible]ல விதனைக் கூறுவதாயினர். கேளும் என தன்மிற் சிறந்த வந்த[illegible] கடவு ளென்பதற்குச் சகலமுங் கடந்த பொருள் என்பதருத்தம். [illegible]க்கடவுளி னருள் சருத்திகன்மருள் நீக்கினோர்க்கே யாம். ஆகவே யவ்வரு[illegible]ருவான சிவவுருவங்களையுஞ் சத்தியுருவங்களையுஞ் சிந்தையி னிருத்தித் தியானிப்போர்க்கு எந்தக்காரியங் கைகூடாததாகும்? அத்தகையர்க் கெத்தகைய பயனும் அங்கையாமலகம்போ லணுகும். இதுபற்றி நீரினி யறியற்பால தொன்றுமில்லை யாதலால் இஃதிப்படி நிற்க, இவ்வுலகின்கணுள்ள மானிட வருக்க[illegible]தினர்க்கு வருணபேதங்கள் பலவாம். [illegible] [illegible]யெல்லாம் அவர்சட் கருஞானப் [illegible]யன்றி வேறன்று. அவற்று ளுயர்ந்த வருணத்திற் பிறந்தோர் சிரேஷ்டரென்றும், தாழ்ந்தவருணத்திற்பிறந்தோர் கனிஷ்டரென்றும் சொல்லுவது அறிவின்மை. அஞ்ஞானமகன்ற விஞ்ஞானம் எந்தவருணத்தில் யாவனிடத்தில் விளங்குகின்றதோ அந்தவருண[illegible]மும் அவனுமே சிரேஷ்டமெனு வறி யுய[illegible] கன்மத்தினால் வருணமல்லது ஜென்மத்தினால் வருணமில்லையென்பது க[illegible]நிச்சயம். இந்த வருணவிஷயத்தில் உயர்வு தாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானமை யன்றி வேறன்று.

வொன்று மகா மகிமையுள்ளனவாகும். அன்றியு மவர் செய்
துள இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் உலா பரணி
கோவை மடல் முதலிய பிரபந்தங்களும் எண்ணிலவாம். அவ
ற்று ளொவ்வொன்றும் சொன்னயம் பொருணய முதலிய அமை
ந்துள்ளனவாகும்.

இவ்வண்ணம் குலோத்துங்கச் சோழன் முதலிய தமிழ்வே
ந்தர்கள் மூவருங் கொண்டாட விருந்த ஒட்டக்கூத்தர் வயோதி
கதசை யடைந்தவராகி, இராசசபைக்கு வருதலும் போதலு
மொழிந்து, அச்சோழராச னுபசரித்துவரச் சின்னாள் சீவித்தி
ருந்து, பின்னர் தமக்கும் பிராணவியோக மடையுங்கால [illegible]ட்
டும்; அக்காலச்சோழன் முதலிய பல அரசர்களும் பி[illegible]ர்க
ளும் அவரைப் புடைசூழவிருந்து, அத்தருண ம[illegible]ரகவே
ண்டிய பணிகளை நடாத்திவந்தார்கள். அப்பொழுது குலோத்
துங்கசோழராசன் புலவரைத் தனது தந்தையிலு மேலாக மதி
த்துள்ளோ னாதலால் அ[illegible]ரியுற் றாற்றுறைய வருந்தி
அவரருகிற் சென்று, "என்னையனே! இதுகாறு மெனக்கும்
என்னரசுக்கும் பெருந்துணையா யிருந்த தேவரீரைப் பிரிந்து
யானுய்யும் வகை எவ்வகையோ வறிகிலேன். அறமாதிய புரு
ஷார்த்தங்களை எனக் கங்கையாமலகம் போலத் தெருட்டி யாட்
கொண்டருளிய தேவரீருக்கு யான் செய்யத்தகுங் கைம்மாறு
யாண்டு யாதுளது? தென்பாண்டி நாட்டில் பல சங்கப்புலவர்கள்
அங்கைதோறும் ஒவ்வோரம்சமாக விருந்து விளையாடல் செய்யு
ம் கலைமகளார், தேவரீர் கரத்தில் அவ்வம்ச மடங்க[illegible]
டிருந்து விளையாடப் பெற்ற பிரபாவத்தை இனி யாவரிடத்திற்
காணப்போகின்றேன்? இவ்வுலகில் குணகடல் குமரி குடகம்
வேங்கடமென்னு நாற்பாங் கெல்லைக்குள் அமிழ்தினு மினியதா
ய் விளங்கு மருந்தமிழ்மாது இனிப் புன்கவிகள்பாற் பட்டு யா
தாகுவளோ? இதுகாறு மப்புன்கவிகளென்னும் புடுகளை எங்
குந் தலைகாட்ட வாராதபடி யடக்கிப் பூரணகவிகளை யெல்லாம்
போற்றி யாதரிக்கவரும் தேவரீருடைய சிவகாருண்யத்திற்

யாரை யொப்பிடலாம். ஒப்பிடவேண்டில் தம்மையடுத்த தொ
ண்டர்களுடைய அசுத்தமாயா காரியங்களை விலக்கி சுத்த மாய
காரியங்களை யூட்டி யாட்கொண்டருளும் சிவபிரானைத் தான் ஒப்
பிடல் வேண்டும். மேலும்தேவரீர் அற்பகவி நிக்கிரகரும் அருங்
கவிரக்ஷகருமா யிருத்தமையால், துஷ்டசனநிக்கிரகரும் சிஷ்ட
டசன ரக்ஷகருமாகிய விண்டுவையு மொப்பிடலாமே யன்றி
வேறெவருளர்.

அன்றியு மிளமையிலேயே வெண்டாமரைத் தவசினரான
கலைமகளாரைத் தியானித்துக் களைத்து, அவரோர் பார்ப்பினியா
கவந்து திருமுலைப்பாலை ஓர் வட்டிலிற்சறந் தூன்பிக்க வுண்டு,
அவரா சகலகலா நிலய மென்னும் புத்தகத்தினையுந் தரப்பெற்
று, எங்குஞ் சாரதாபீட சம்பன்ன ரென் றியாவரானு மழைக்க
விருந்த பிரபாவத்தை; இன்று மினியென்றும் தேவரீர் இருவவ
தாரஞ் செய்தருளிய திருமணலூரிற் பிரத்தியக்ஷமாகக் காணும்
படி யிருக்கின்றதே: ஓர்கால் சிவத்தலயாத்திரையாகச் சென்ற
போது சிறுக்காஞ்சி நகரில் தேவ சேனாபதீசமென்னுங் குமர
கோட்டத் தெழுந்தருளியுள்ள சண்முகக் கடவுளுக்குச் சஷ்டிவி
ழா நடத்துகையில், வானமுழுது மேகங்கள் பரவி மழை பெய்
வதற் காரம்பிக்கவேயும் அதுகண்ட வத் தேவாலயத் தருமபரி
பாலனர் திருவிழாவை நடத்துவதற் கில்லையேயென்று கவலையுற்
றதையுங் காரியத்தையு நோக்கி, உடனே யோர் கவிபாடி அம்ம
ழையைத் திருவிழா நிறைவேறும் வரையில் நிறுத்தியருளிய அ
ற்புதச் செய்கையும்; திருவண்ணாமலைக்கண் பிறவிக் குருடராயி
ருந்த ஒருவர் தமது பிரபாவத்தைக் கேட்டுவந்து தாழ
அவர்கட்குக் குருடு நீங்கிக் கண்டெரியுமாறு ஓர் கவிபாடி யாட்
கொண்டருளிய கருணையும் இவ்வுலகுள்ளளவு மொருவரால் மற
க்கற்பாலனவோ? மற்றொருகால் தேவரீர் மரபினராயுள்ள அனு
ச் செங்குந்த வீரர்கள் நால்வருணத் தட்டாழ்ந்த சூத்திரருங்
தங்கள் குலவன்மையைப் பற்றி ஓர் பாவலனற பல பாமாலை
சூடப் பெற்றனரென்று தாமும் பெறக்கருதி விண்ணப்பஞ் செ

யை. அப்பாவலனச் சூத்திரர்கண்மீது வைத்த அபிமானப் பெருக்கினாலும் அருத்தன விழைவினாலும் அநேகமாகக் கற்பித்துப் பாடிய பிரபந்தங்கள் போலாது தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெழுமர்களது சிரங்களைக் கொய்து சிரச்சிங்காதன மிட்டு அதினின்று மோர் பிரபந்தம் பாடிக் குலவண்மையை விளக்கி, மீட்டுமச் சிரங்க ளவற்றி னுடலோடு சேர்த்து உயிர்பெற் றெழுமாறு ஓர் கவிபாடி யெழுப்பியருளிய தெய்வீகத் தன்மையை இம்மூவுலகங்களு மறியுமே;

வேறொருகால் முதல்வருணத்தினர்க்கு ஊழின் செயலால் முறைமாறிப் பிறந்தும் அவரோடேயே கலந்து நில்லாது கடைவருணத்தரைக் கூடி அவர்களையே கனப்படுத்தக் கற்பித்துப் பாடி அவர்களால் சன்மானமும் வெகுமானமும் பெற்றிருக்கும் கம்பனெனவன், எல்லா வைதிகராலும் பூசா காலத்தில் பாராயணஞ் செய்யத்தக்க மகாவிதிகாசத்துள் அவர்களைக் கலந்து பாடிய காரணத்தால் தேவரீர் கோபித்து அடியேனவனை யவமானப்படுத்த, அதையவன் நெஞ்சலிருத்தித் தேவரீர் சரீர சாட்டியங் கொண்டிருந்தபோது இக்கோயாலேனு மிறக்கானேனென்று தனதுபாசனப் பொருளாகிய பிரமாஸ்திரத்தைத் தியானித்து ஓர் கவிபாடித் தானே யிறக்க, அம்பனார்க்கு புதல்வன் அக்கவியினைத் தேவரீர்க்குக்காட்டி எனது தந்தைக் குயிர்ப்பிச்சை தர வேண்டுமென்றிரக்க, உடனே யக்கவியினைத் திருத்தி அவனுயிர்த்தெழச் செய்து அவனுக் கதுமுதல் வழங்குவதாக ஓர் பிறப் [illegible] சிவசாருண்ணியத்தின் கீர்த்தியை அடியே னென்னென்று துதிக்கவல்லேன்?

பின்னொருகால் கும்பகோண வீரசிங்காதன மடத்துச் சந்கையமூர்த்தியால் நேர்ந்த ஒரு பெரும்பழிக்காக அம்மடத்தி லெழுந்தருளியுள்ள சங்கை வீரபத்திரக்கடவுண்மீது பிரபந்தஞ்செய்யும் பொருட்டு, ஆக்கலாகிய வெந்தொழிற்கு மதிபனாயுள்ள சிவபிரானோடு சற்று மஞ்சாமற் றருக்கி வாதாடுபவரான மகாபத்திரகாளியையுந் தேவரீர் குற்றேவல் செய்பவருக்கொப்ப வி

ருத்தி, அவளெழுதிவரப் பாடிமுடித்த அப்பிரபந்தத்தின் வரலாற்றை இவ்வுலகில் யாரறியாதார்? இவ்வனைத்தையு மறிந்தேயன்றோ கலைமகளாரமிசத்தினரான ஔவைப் பிராட்டியார் "தாய்ச்சமுத்து - ஞானவமுதுண்ட சைவநாயகன்" எனத் தேவரீரைத் திருஞானசம்பந்த மூர்த்தியோடொப்பக்கூறியதன்றி, மற்றொரு சமயத்தில் "காவலர்க்கோர் சான்மட்க்குங் கற்றோர்க் கிருகாலங் - கேவலர்க்கோ வங் மெலாங் சேட்டியால்" என்று யாதும் புகழேந்தியாருந் தேவரீருடைய பெருந்தகைமையை யறியுமாறு விதந்து கூறினர். இத்தகைய பிரபாவங்க ளெண்ணிலவாகப் படைத்த தேவரீரைப் போல இனியான் காணப்பெறுவதும் உண்டுகொலோ? என்றின்னும் பல கூறிக் கிலேசித்தான்.

அப்பொழுது கந்தர் அவ்வரசன் படுங் கிலேசத்திற் கிரங்கினவராய் மெல்ல விதனைக் கூறுவதாயினர். கேளும் எனதன்பிற் சிறந்த எந்தலே! கடவு ளென்பதற்குச் சகலமுங் கடந்த பொருள் என்பதருத்தம், அக்கடவுளினருள் சருத்தின்மருள் நீங்கினோர்க்கே யாம். ஆகவே யவ்வருளுருவனை சிவவுருவங்களையுஞ் சத்தியுருவங்களையுஞ் சிந்தையி னிறுத்தித் தியானிப்போர்க்கு எந்தக்காரியங் கைகூடாததாகும்? அத்தகையர்க் கெத்தகைய பயனும் அங்கைபாமலகம்போ லுறும். இதுபற்றி நீரினி யறியற்பால தொன்றுமில்லை யாதலால் இஃதிப்படி நிற்க, இவ்வுலகின்கணுள்ள மானிட வருக்கத்தினர்க்கு வருணபேதங்கள் பலவாம். ஆயினு மவையெல்லாம அவ்வக் கன்[illegible]யன்றி வேறன்று. அவற்றுளுயர்ந்த வருணத்திற் பிறந்தோர் சிரேஷ்டரென்றும், தாழ்ந்தவருணத்திற்பிறந்தோர் கனிஷ்டரென்றும் சொல்லுவது அறிவின்மை. அஞ்ஞானமகன்ற விஞ்ஞானம் எந்தவருணத்தில் யாவனிடத்தில் விளங்குகின்றதோ அந்தவருணமும் அவனுமே சிரேஷ்டமென வறியும். கன்மத்தினால் வருணமல்லது ஜென்மத்தினால் வருணமில்லையென்பது சுருதி நிச்சயம். இந்த வருணவிஷயத்தில் உயர்வு தாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானமை யன்றி வேறன்று.

இ[illegible]ற்குப் பெரியோரால், "நல்லகுலமென்றுந் தீயகுலமென்று
ஞ்[illegible]சொல்லளவல்லாற் பொருளில்லை-தொல்சிறப்பி-னொண்பொரு
ளொ[illegible]ன்றோதவங் கல்வியாள்வினை - யென்றிவற்றானாகுங்குலம்"
என[illegible]றும், "நலத்தின்கணாரின்மைதோன்றின்வனைக் குலத்தின
க[illegible]யப்படும்" என்றும் கூறியிருத்தலே சான்றாம். இத்தகைய
வருணத்தினைகளிற் பட்டு வாய்மதங்கொண்டு திரிவோர் பலராயி
னும், அவருள் யாதொருவனும் என்வருணத்தைச் சிலாகிக்கவந்
தவனல்லன். என்வருணமென்பது அவ்வருணங்களிற் கலவாத
த[illegible]யிருந்துகொண்டே அவ்வவ்வருண வொழுக்கங்களனைத்தை யு
மேற்றதாகிப் பிரமபரம்பரையி லுண்டான அவ்வவ்வருணங்களை
ப்போவாது சிவபரம்பரையில் ஒரேதன்மையதா யுண்டாயிருந்
ததை விளக்கவேண்டி, அவ்விளக்கமுங் - கற்பனைவாயிலாகவந்து
கடைப்பட்டுப் போகாதபடி கடவுள்வாயலாகவந்து கனம்பெற்
றிருத்தற்பொருட்டுச் சிரச்சிங்காதனமிட் டோதியதெனவறி
மின். அன்றியும்-ஒருயானையே பிறவிக்குருடருக்குப் பலவாதல்
[illegible]ருணங்களெனவும், இவ்வருண[illegible]
ன்றி எவர்க்கு மவ்வொன்றாகவே நின்று விளங்குவதெனவும்
யாவருமறிதற்பொ[illegible]ருட்டே அவ்வாறோதியதென்றுணர்க. அல்லா
மலும்-ஆசுமுதலிய நாற்கவிகளினும் வல்லாரெவரோ அவரே
கவீச்சுரரென் றழைக்கப்படுவர். அக்கவீச்சுர ரெவ்வருணத்தோ
ராயினும், அல்ல தெவ்வாச்சிரமத்தோராயினும், "அவர்க்குக்கா
ணருங் கடவுளுங் கையாற்காட்டிய வேலையைக் கருத்தாய் முடி
க்குமென்றால் ஓர் காளிசெய்து முடித்தலோ வரிது.

அக்கவீச்சுரத்தன்மையும் ஈச்சுரபத்தி பாசவைராக்கியம்
ஜீவகாருண்யம் பிரமஞானம் என்னு நான்கு சாதனங்களும் தம
க்குள் கூடியிருந்தால்தான் பயன்படும். இவற்றி லெள்ளத்தனை
தப்பின் மலையத்தனை நரகங்கள் முன்னிற்கும். தெரி[illegible]மதிறவை பி
ரோர்க்கும் அதற்குத்தக்க தண்டனை யுண்டாவ[illegible] வண்டி
யின் சக்கரம்போற்சுழன்று செனனமரண மென்பவை யொழி
யா. இவையவர்க்கெக்கா லொழியுமெனின்-மேற்கூறிய[illegible] சாதன-

ங்களால் அகம்பாவ சித்த, [illegible] மகனுக்கா லொழியும். அப்போது சகலவா பாகங்களும் தாமேயாய் விளங்குவர். சமஸ்த தேகாதிகளினும் விபுவாய் விளங்குபவர்களுமாவர், மிகப் பரிசுத்தம். அஃது மாயாமயக்கி லகப்பட்டு மருண்டிருப்பதாயது. அம்மாயா சகிதமான உடலுக்கும் மாயாரகிதமான வான்மாவுக்கும் சற்றும் சம்பந்தமேயில்லை. இவ்விரண்டையு மொருவன் எக்கால் வேறாகக்காண்பனோ அக்கா லவனிருந்தவிடமே முத்தி. இவ்வாறிருளுமொளியு மில்லா விடத் திருந் துபார்க்கிற் சகலமுமெளிதிற்றோன்றும். இத்தகைய ஞானசொரூபந் தானேயிருக்க அதைக்கைவிட்டு உலகத்தைத் தானென்றெடுத்துமேற்போட்டுக்கொண்டு எத்தனைநாள் திரிகின்றானோ, அத்தனை நாள்வரையில் தன்னைத்தா னறிகின்றவறிவு அவனுக்குச்சற்றும் வராது. இவைநிற்க முன்னமுமக்கு இளவரசு பட்டாபிஷேகஞ் செய்ய எத்தனித்த காலத்தில் யான் உமது தந்தை முன்னிலையில் இகலோகவாழ்வினுக்குரிய புருஷார்த்தங்கள் நான்கினையு முணார்த்தவேண்டி, [illegible] மாற்றாதுகொடுத்தலாகிய அறத்தைப்பற்றியும், அவ்வறத்தின் வழியினுலே சேகரிக்கப்படும் பொருளைப்பற்றியும், அப்பொருளினாலனுபவிக்கும் இன்பத்தைப்பற்றியும், அவ்வின்பத்தினாலடையப்பெறும் வீட்டினைப்பற்றியும், வேதாகமமாதியசுருதிகளிற் கன்மகாண்டத்துட்கூறிய விதிகளின் படிக்குப் போதித்திருக்கின்றேனன்றோ? இனிப்பரலோகவாழ்வடையப் போகின்ற யான், அப்பரலோக வாழ்வினுக்குரிய புருஷார்த்தங்களையும் அச்சுருதிகளில் ஞானகாண்டத்திற் கூறியவிதிகளின்படிக்குப் போதிக்கின்றேன் மனதைப் புறம்பிற் செல்லாதபடி நிறுத்திக்கேளும்.

இவ்வுலகத்தி லத்தகன்மையி லகப்படும் உயிரும், நாய் நரி கழுகாதிகளுக் கிரையாகும் உடலும், விவேகமற்ற பாமரர்நெஞ்சிற் பொருட்படும் பொருளும் ஆகிய விம்மூன்றையும் யானெனதென்றது கடவுளுக்குத் தத்தஞ்செய்து கொடுத்துவிடுதலாகிய சர்வசங்க பரித்தியாகமே அறம். இவ்வறத்துக்குப் பலனாகப்

றைந்த பிரத்தியேகாத்ம சைதன்யமான நித்தியவஸ்துவே பொருள். இப்பொருளின் வியாபகத்தாலுதித்த சர்வசாட்சியாகிய பூரணானந்தமே இன்பம். இவ்வின்பாதீதமான அகண்டைக ரசத்தால் சாகுவிவாசனையாதிகளுந் கரைந்து விடுவதே வீடு. இத்னவிந்நாலகையும் பரலோக வாழ்வினுக்குரிய புருஷார்த்தங்களெனக்கொண்டு, இப்பரம புருஷார்த்தங்களால் சொரூபஞான நிஷ்டாபராயிருந்து, இப்பிரபஞ்ச வாழ்க்கையில் சனகராஜனைப்போலப் புளியம்பழமும் ஓடும்போல ஒத்திருந்தும் பற்றற்று, இராச்சிய பரிபாலனஞ்செய்யும் என்று கூறி முடித்தனர்.

உடனே யருகிலிருந் திவையனைத்தையுங்கேட்ட புகழேந்திப்புலவர் கண்களுழ்ச்சிமோடும் அவருடைய காருண்யப் பிரபாவங்களனைத்தையும் எடுத்துக்கூறித் தோத்திரஞ்செய்து, ஓ சத்தசாட்குண்யமூர்த்தியே! தேவரீரை யோசிக்குமிடத்துச் சமயகுரவராகிய நால்வருமே ஒருருவாகி யவதரித்தவிரெனக் கூறற்பாலதன்றி, ஔவை யெம்மனைப்போல அருளுடையபிள்ளையாரை மாத்திரமகூறுதலும், அதனை நமதாசபெருமைவிளைந்தது விளைதுரைத்தலும் அழகு மன்றிருக்கின்று. அவை யெவ்வாறெனில் தேவரீரிளமையிலேயே கலைமகளாருடைய கனதனப்பாலுண்டு அவரால் சகலகலாநிலைய மென்னுமோர் புக்தகத்தாற்பெற்று, புன்கவிகளைக் களைந்து, பூரணக்கவிகளை யாதரித்து, அகத்தியம் தொல்காப்பிய முதலிய இலக்கணநூல்களிற் குறிப்பாத அருமையான விதிகட்கெல்லாம் வேறேரிலக்கணநூலு மிலக்கியநூல்களுஞ்செய்து, உயிர்பிரிந் துடல்வேறு தலைவேறு யிருந்த ஆயிரத்தெண்மரையும் அறைகொடிப்போதி லுயிர்ப்பித்து, அவர்முதல் புலவர்களுக்கெல்லாம் இலக்கியமாக்கு [illegible] ஓர் சிறப்புப்பெயரை யவனியுள்ளளவும் விளங்குவதாக நிறுத்திய மகிமையால்; இளமையிலேயே திருநீலநாயகியம்மையார் திருமுலைப்பாலுண்டு, அதுவாயிலாய் வேதாகமாதிகளை யுகாரணரப்பெற்று, புறச்சமயிகளைக் களைந்து, அகச்சமயிகளை யாதரித்து, அருந்தமிழ் நூற்புக்களாகிய இலக்கணங்கட் கிலக்கியமாக அனே

கஞ்சித்திரகவிமுதலியன வியற்றி, ஆருயிர் துறந்த தழலினால்வெந்திருந்த வென்பினை அரைக்கொடிப்போதி லங்கம்பூம்பாவையாக்கி, அச்சாபுரத்தின்கண் தமது திருப்பெருமணத்திற்கு வந்தசகலருக்கும் ஆனந்தவீடளித்தருளிய ஆளுடைய பிள்ளையாருக்கொப்பவும்; தேவரீர் சரீரசாட்டியத்தோ டிருக்கையில் அதனலிறப்பிக்கும்படி தனதுபாசனைப் பொருளாகிய பிரமராக்ஷசனென்னுமோரலகையை வேண்டிக் கவிபாடித் தானேயிறந்த கம்பனென்னும் புலவனை அக்கவியினை மாற்றி யுயிர்ப்பித்துக்காத்து, வீரசிம்மாதன மடத்துச் சங்கமரிடநேர்ந்த கொலைப்பழிக்குப் பழியாக மற்றைச் சங்கமர்யாரும் கொலைசெய்வான் பொருட்டுக்கைக்கொண்டு போகையில் அவர்கள் யாரும் விம்மிதமடைந்தவர்களாக ஓர் பிரபந்தம்பாடி மீண்டு, இறந்த சங்கமரை யுயிர்ப்பித்த காரணத்தால் அச்சங்கமமூர்த்திக ளாசிரியரால் பலசன்மானமெருமான விருதுகளும்பெற்ற பிரபாவத்தால்; ஒழிதற்கரிய சூலைநோயொருது மீனக்கண்ட சமணர்கள் தங்களுக தேவனைப் பிரார்த்தித்து விடவுணவையிடவும் பிறப்பிக்கமுயன்ற முயல்வுகளின்று தப்பி [illegible] னலுமோரக் கருதாதுவிடுத்து. ஓரானைக்காலி லிடறச்செய்துங் கற்றூணிற்பிணித்துக்கடலிலெறிந்தும் இறப்பிக்கமுயன்ற காரியங்களை அருமையானபதிகங்கள்பாடித் தமது சமயத்தாராமீண்டு, பின்னரச் சமயத்தரால் சன்மானமு முபசாரமு மரியாதையும் பெற்றிருந்த ஆளுடையவரசுகளை நிகர்ப்பவும்; தேவரீரிருமுடவரு மிருகுருடருமான நால்வர் கவிகளெனப் பேர்பெற்றுய்யுமாறு அனேகநாள் கடைவாயிலிற் காத்துப் பின்னர் கட்டளைப்படி காலவருநாலு கோடிக்கும் [illegible] அவ்வடகு விற்பத்திப்பத்திரமவித் [illegible] ரித்து, திருக்காஞ்சிநகரில் தேவசேனாபதிஸ்வாமியென்னுங் குமரகோட்டத்தில் சஷ்டிமகோற்சவ நடத்துதற்கிடையூறாய்வந்த மழையினை ஓர் கவியாற்றடுத்து அது நிறைவேறச்செய்து, பின்னரம்மழையைப் பூர்த்தியாய்ப் பெய்வித்த கீர்த்தியினால்; திருவாரூரில் பரவையார் வீட்டின் கடைவாய்தலில் பூமாலையு மடைக்காயுமேற்றுக் காத்திருந்த கூனனுக்கும் குருடனுக்கும் அவ்வுட

த்துறையொழித்துக் காத்து, திருவையாறென்னுந் தலத்தினைத் தரிசிக்கவேண்டிச் செல்லுகையில் அதற்கிடையூறுகவந்த காவிரியாற்று வெள்ளத்தை ஓர் பதிகத்தால்விலக்கி வழிக்கொண்டு சென்று, பின்னரவ்வெள்ளத்தைப் பூர்த்தியாய்ச் செல்வித்த ஆருடைய நம்பிகளுக் கேய்ப்பவும், தேவரீர் திருவண்ணாமலையிற் பிறவிக் குருடராயிருந்த நாசிகனால்வர்க்கு ஓர் பாவினால் கண்கள்விளங்கச்செய்து, குடத்தையும் பதியில் சிவசத்தியி னம்சத்தளான காளிகாதேவி கையில் ஏடுமெழுத்தாணியுங் கொடுங்கொண்டெழுதிவர ஓர் பிரபந்தம்பாடி, அதுபாடுகையில் நீபருமனிலையால் ஓர் குற்றநேர வெருண்டு அதனை முடித்தருளிய மகத்துவத்தால், தில்லைவாழந்தனர் வேண்டுகோளின்படி உற்பவந் தொட்டுக் கூமையாயிருந்த ஓர் வளவர்கோன்மகளைத் திருச்சாழலென்னுஞ் செந்தமிழ்ப்பாக்களாற் பேசுவித்து, அம்பலவாணரே தமதங்கையில் ஏடுமெழுத்தாணியுங்கொண் டெழுதிவரத் திருமுறைபாடி, அத்திருமுறையி னோர்சார் அவ்வம்பலவாணரால் பிழைநேரவருந்தி முடித்தருளிய ஆளுடையவடிகளைப் போலவும் ஆரம்பசத்துணியா[illegible]டைய பிரபாவத்தைப்பற்றிக் கல்விப்பெரு[illegible]னுங் கலைஞானச்செல்வத்திலும் சமயாசாரவொழுக்கினும், அரசனசக்க வியூகத்திலும், தெய்வீகத்தன்மையினும், திண்மையொண்மையாதிகளினும், சிவபத்தித் திறத்திலும், சீவகாருண்யமிகுதியினும், பிரபுத்துவச்சிறப்பினும், பிரமஞான நிட்டையினு மாராயுமிடத்து, அந்நால்வரையன்றி வேறெவரை யொப்பிடவல்லேம்? ஆதலாலினித் தேவரீரைப் போல ஒரு புனிதமூர்த்தியைக் காணப்பெறுவதினும், எங்கேனு மிருப்பதாகவேனுங் கேட்கப்பெறுவேமோ? என்றிவ்வாறு பல கூறி வியாகுல சிந்தையோ டிருந்தனர்.

இவையனைத்தையுங் கேட்டிருந்த கவிச்சக்ரவர்த்தியார் புன்முறுவல் பூத்துப் பு[illegible]ழேந்தியாரைக் கண்விழித்துப்பார்த்து, எனதன்புக்கணியா[illegible]ரே? நீர் கூறியவனைத்தையும் யானுபசார வார்த்தையாகக் கொ[illegible]ளத்தக்கதேயன்றி, அப்பரமாசாரியரு

டைய பாததூளிக்கும் பற்றுதயான் வேறெவ்வாறு கொள்ளற் பாலன்? இவ்வுலகின்கணொருவனுடைய கல்வி கலைஞானம் சமயாசாரம் சற்சனநேயமுதலிய யாவும் அவனுடைய வியற்கை யான குண நிலைமையினால் விளங்கும். அக்குணம் சாத்துவிக விராசத தாமதமென மூவகை. அவற்று ளுத்தமமாயுள்ள சாதுவிகமே மேலானது. இராசத தாமத குணமுடையோர், சாத்திர விரோதியரும் சமரசப் பகைஞரு மாவார். அபேதமாகிய கடவுள் சத்துவகுணமுடையார்க்கே அனுக்கிரகம்பண்ணும். அ[illegible]குணத்தைவகித்தோர்க்கு எவற்றினும் பேதாபேதங்கள் தோற்று. அத்தகையோர்க்கு மரணவேதனையென்பதில்லை. இராசத தாமதகுணத்தால் வீணை யகம்பாவங்கொண்டு வாதாடிக்கெட்டபேர், உலகர் மெச்சும்புகழினுக் காசைகொண்டு பழிபாவங்களுக்காளாகுவர். அதிகமாய்ப் பொருளைப் படைத்தோர் அதனை யெப்படி பிறர்க்குத் தோற்றுதபடி காப்பார்களோ, அப்படிக்கே சத்துவகுணமுடையவர்கள் மௌனத்திருந்து ஆயவேண்டுவனவற்றை யாய்ந்தேறி என்றுயாருக மோக்ஷவீ டடைகுவர். உலகம் வியக்கப் பேச[illegible]யிலிருக்க யோக்கியனன்று. இவ்வுத்தமமாகிய சா[illegible]ன்மசாதுக்கள் தன்மசாதுக்கள் என விருவகையர். இவருள் [illegible]ன்மசாதுக்களாவார் பிறவினுஞ் செய்கையினு மானவ ரம்சத்தினராகவே யிருந்துகொண்டு கோபபாபாதிகளில்லாமல் சாத்திரவிசாரமுஞ் செய்யாமல் ஒருவர் சொல்வதையு முணராமல் வறிதே சும்மாவிருப்பவர்கள். தன்மசாதுக்களாவார் பிறவியில் மானவாம்சத்தினரா யிருந்தபோதினும், செய்கையில் தேவாம்சத்தினராக விளங்கிச் சாத்திர விசாரணையினால் சாதன நான்குளும் பழகிப் பொய்யனைத்தையுமகற்றி மெய்யனைத்தையுங் கைக்கொண்டு மேலான ஞானபதத்தை நாடியிருப்பர். ஆதலா லிந்த ஞானபதத்தையே நல்லறமெனக் கொண்டு, இப்பூபாலனிடத்தில் உயிருக்குயிராய் உணர்வுக்குணர்வாய் என்னைப்போலிருந்து, மந்திராலோசனையிலும் தந்திராலோசனையிலும் தலைமைப் பு[illegible]மைபெற்று இன்புற்றிருக்கக்கடவீர். நீர் பாடிய நளவெண்பாக்களிலுள்ள சொற்சு

வை பொருட்சுவை முதலியவைகட்கு ஆலகாலத்தோடுங் கூடிக் கெட்ட அமுதத்தை யொப்பிடுவ தறிவின்மையாதலால், இன்று முதல் உமக்கு "வெண்கவிப்புலி" என்னு நாமமும் எங்கும் விளங்கி வழங்கக்கடவது என்று கூறி முடித்தனர்.

அப்பொழுது குலோத்துங்கச் சோழராஜன் மனைவியானவள் நாமும் அப்பெரியோனைப் பார்த்துவருவோமென்னும் விழைவினால் அங்ஙனம் வந்து, தனது கமல மலர்போன்ற கரத்தினால் அவரது திருமுகத்தை மெல்லத் துடைத்து அருகில் நின்றனள். அஃதுணர்ந்த கவிராஜசிங்கம் அவ்விராஜ பத்தினியைப் பரிவோடும் பார்த்து, ஓ எனதம்மணி! இக்காலேனும் உன்னை என் கண்குளிரக்கண்டு வசனித்தற்கேபோலும் இதுகாறும் என்னுயிர் நீங்காதிருப்பது. உனக்குன் பிதாவால் கொடுக்கப்பட்டுள்ள சீதனச் சொத்துக்களில் ஒன்றாகிய புலவர்கோனுக்கு யான் வேறானவனென் றெண்ணற்க. அதுவிஷயத்தைப்பற்றி நீயுன் கணவனை லக்ஷித்தேயிருக்கலாம். ஆனதனாலேயே நீ இப்போது என்மீது கிருபைவைத் திங்ஙனம் வந்தனைபோலும்? அம்மா சாரதா! ஒருவன் பெறுதற்கரிய பொருள்களுள் கற்பெனுங் கலங்கா நிலைபெற்ற மனையாளினும் உயர்வாகிய பொருள் யாதுளது? ஓர் மரக்கலத்தை யாதாரவாகக்கொண்டு கடற்கரை யேறுகின்றவர்களைப் போல, ஓர் புருஷனில்வாழ்க்கைத் துணையாகக் கற்புடைமனைவியைக் கொண்டு பிரமசாரி வானப்பிரத்தன் சன்னியாசி முதலாயினோரை யுபசரித்தலாதிய அறங்களைச் செய்து மோக்ஷக்கரையேறுவன். இவ்வுலகில் மாதமும்மாரி பெய்தலென்பது, வேத மோதுவோர்க் கொருமழையும் செங்கோல் செலுத்துவோர்க் கொருமழையும் கற்பிற் சிறந்தோர்க் கொருமழையுமென் றன்றோ வகுத்திருக்கின்றது? ஆதலால் உன் கணவனுடைய அரசாட்சிக்கும் ஆன்மலாபத்திற்கும் ஆதாரம் நீயன்றி வேறில்லையென்று கூறி, முன்னையே மற்றை மனை மக்களாதிய சுற்றத்தினரும் வர அவ்வவர்கட்கெல்லாம் தக்க புத்திகள் பலவும் போதித்து, அருந்தவர்க்கு மாதுலர்க்கும்

அன்னதான முதலியன வழங்கச்செய்து, புகழேந்திப்புலவரால் தமிழ்வேத பாராயணம் பண்ணுவித்து, குலோத்துங்கச் சோழ ராஜனை நோக்கி, ஓ என்னரும்பெருந் துணைவனாகிய இராஜேந்திர சோழராஜனுக்கினிய மதலாய்! இயான் குருலிங்க சங்கம மூர்த்திகளாகிய வீரமா கேசருக் கடிமைப்பட்டுளேனாதலால், என் சரீரத்தைச் சமாதிக்கிரியையின் வாயிலாய் அடக்கஞ் செய்திடுக. என்று கூறிப் பதுமாதனங்கொண்டு, சின்முத்திரைப் ற்ற கரத்தராய் முத்தி பஞ்சாக்கரத் தியானத்தோடு ஆவணிமாதப் பூர்வபக்கம் உத்திராட நட்சத்திரங் கூடிய சுபதினத்தில் சிவசாயுச்சிய பதவி யடைந்தனர். இவ்வாறு கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் தேகவியோகமான செய்தியைப் புவிச்சக்ரவர்த்தியாகிய குலோத்துங்கன் உடனே சிலசாரணரால் பலவூரின்கண் அவருக்குந் தனக்கும் இஷ்டருமினத்தருமா யுள்ள எல்லோர்க்குந் தெரிவிக்க, அஃதுணர்ந்து வந்துகூடிய சனங்களில் அவரறிவு ஆற்றல் கல்வி செல்வம் பொறுமை வாய்மை உறுதி ஒழுக்கமுதலிய பிரபாவங்களைப்பற்றிப் பேசிப் புகழாதார் ஒருவருமில்லை. அதனாலங்கொரு சாமநேரமளவும் சத்தமேகங்களு மொன்றுகூடிப் பெய்தல்போன்று பேரொலியாகியிருந்து பின்னரவைபெய்தலை விட்டபோதுள்ள தன்மைபோன்று நிசத்த முண்டாயது. அக்கால் கவிச்சுரர் குழாத்துள் வந்திருந்த கலைமகளாரம்சத்தினரான,

ஔவையார்.

நூற்றெண் பதின்காத நூங்கு நறு ர்தமிழி
னேற்றமினி யென்னா யிழியுமோ — போற்று
புவிராசர் யாரும் புகழுமொட்டக் கூத்தக்
கவிராசன் காட்சியிலாக் கால்.

புகழேந்தி.

என்கவிஞத்தன்மையிருந்தென்பயன்றருமே
புன்கவிஞப்பூடணைத்தும்பொங்குமே — மின்கவிஞ

ரெப்பிண்டவைப்பின் றியிளைப்பரோகூத்தனுயி
ருய்ப்பிலதாயோயவுறின்.

கம்பன்.

இ[illegible]லோராசசபைக்கென்கவிதையேற்குநா
[illegible]றவொன்றைவைத்தாளியல்பெவிதோ — வன்றே
யிறவாமின்றேற்குயிரீவிக்கூத்தன்சீர்த்தி
மறவாநின்றய்வனேயன்.

என விம்மூவரும்பாடி அவர்மீது தாங்கள் வைத்துள்ள உட்கருத்தை வெளிப்படுத்தி அவரது தேகவியோகத்தை யாற்றாராய் வருந்தி மிகப் பரிதபிக்க, புலிச்சுரர் குழாத்துட் கலந்து சம்பாஷித்துக்கொண்டிருந்த,

குலோத்துங்கன்,

ஒன்றேயுரைப்பனுயர்பாணிவிபுலவோரைகவி
வன்றேயொழிந்தகல்லாரியச்செம்மையருளுருவக்
குன்றேயவனையளிக்கூத்தனென்றோடுகுலாவல்விட்ட
வின்றேயொழிந்தவியற்றமிழ்ச்செம்மையிருநிலத்தே.

என்று பாடிக் கிலேசித்துப் பின்னரொருவாறு தேறினவனாய் அவரது சமாதிக் கிரியைகளனைத்தையும் சாங்கோபாங்கமாக வேதாகம விதிப்படி நிறைவேற்றி, அந்தணர்க்கு மாதுலாமாக வேதாகம... அளவற்ற தானதருமங்களை வழங்கி, அங்கக் காரியார்த்தமாக வந்திருந்த புலிராஜர் கவிராஜர் முதலிய பலருக்கும் தக்க மரியாதைகள் செய்தனுப்பினன்.

இப்படி தமிழ்நாடெங்கும் பிரபலித்திருந்த கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் தேகாலசானமடைந்த பின்னும், அளவற்றபேரவருடைய பிரபாவங்களைக் கருதித் தியானித்துத் தங்க ளிஷ்ட காமியங்கள் நிறைவேறப் பெற்றவர்களாயினர். இதற்குச்சான்று மிற்றைக்கேநக்குறைய வைனுனாறு

வருடத்திற்குமுன் ஆன்றோராற் சான்றோருடைத்தென்று கூற
ப்பட்டுள்ள தொண்டைநாட்டிற் சிராஜதானியென விளங்கும் காஞ்
சிமாநகரின்கண், மநுநீதிமுறையிற் றவறாதவனாய் வருணாச்சிரம
தருமங்களையுஞ் சமயாசார வொழுக்கங்களையு[m] வழுவினவனாய்
விஜயமார்த்தாண்டனென்னும் ஓர் குறுநிலமன்ன[னி]ருந்தான்.
அவன் கொலுச்சபைக்கண் உத்தியோகஞ் செய்ப[வ]ருள், ஒரே
பெயர் வாய்ந்தோ ரிருவரிருந்தனர். அவரி லொருவன் செங்கு[ந்]
தன், மற்றொருவன் வேளாளன். இவரிலொருவனை யாதேனு
மோர் காரியார்த்தமாக அரசனழைக்குங்கால், மற்றொருவன்
வந்தெதிராகுவன். இவ்வாறு பலகாலு நிகழ்வதை அரசன்
யோசித்து, அவ்விருவரையு மொருபோதழைத்து, உங்களிடு கு
றிப் பெயரையேனும் சிறப்புப் பெயரையேனும் வேறுபட மாற்
றிக்கொண்மின்களெனக் கூறினன். அதற்குச் செங்குந்தன்
இடுகுறிப்பெயரை மாற்ற யார்க்குமியலா. சிறப்புப்பெயரோ
வென்றால் மற்றைய மரபினர்க்குப் பலவாயிருத்தல்போல எம்ம
ரபினர்க்கின்றி, யாண்டு மெக்காலத்தும் ஒன்றாகவே யிருத்த
லால் அதனையு மாற்றப்படாதெனக் கூறினன். இதுகேட்ட வர
சன் வேளாளனை நோக்க, அவன் இவர் மொழிந்ததில் மற்றைய
மரபினரைப்பற்றிக் கூறியது சாதமேயாயினும் எமது மரபினர்
க்கும் அவ்வாறின்றி, யாண்டு மெக்காலத்தும் ஒன்றாகவே யிரு
த்தலால் அதனை மாற்றப்படாதெனக் கூறினன். அக்காலரச
னிருவரிடத்தும் சமநோக்கஞ் செய்து, இந்தச் சந்தேகத்தினை
யாவரால் உள்ளபடியுணர்ந்து நிவர்த்திக்கக் கூடுமென்று வினவி
னன். அதற்குச் செங்குந்தன் கைலாய பரம்பரையில் வந்த சந்
தானசிரியர் நால்வருள், உபசுப்பிரமணியரான வீரவாகு தேவ
ரிடமிசைபெற்றுச் சனகமகாமுனிவ ரவதாரமாய் விளங்கும் சுவே
தவனப் பெருமாளென்னு மெய்கண்டதேவ ராதினத்தின்கண்,
பூர்வமோர் சிவானுபூதிமானாய்ப் பிரசித்திபெற்றிருந்த சிற்றம்ப
லநாடிகளின் பிரதம மாணாக்கருளொருவராய் இவ்வூரின்கண்
ணே இவர்க்கு மிவர் மரபினர்க்கு மாசிரியராகி, ஞானப்பிரகாச
தேசிகரென்னும் அபிடேகத் திருநாமம் வாய்ந்த ஓர் புண்ணிய

சொரூபியுளர். அவரை யழைப்பித் தச்சாதியின் உள்ளபடி யுணரக்கூடுமென்று சொல்லினன். அப்பொழுதரசன் வேளாளனை நோக்கி, உமக்கிது சம்மதமாவெனக் கேட்டனன். அதற்கவன் றனக்குஞ் சம்மதந்தானென்றுகூறி, பின்னரிச் செங்குந்தர் அந்தேசிகர் சொல்லிய உண்மையிற் பிறழ்ந்து வேறொருவரை யழைப்பித்தல் கூடாதென மொழிந்தனன். அதற்குச் செங்குந்தன் ஒருபோதும் பிறழேனென்று கூறினன்.

அதுகேட்ட வரசன் உடனே யவ்வாசிரியரைத் தனதமைச்சரைக்கொண் டழைப்பித்துத் தக்க வாதனத்திலிருத்திச் சபைக்க ணிகழ்ந்த சரிதத்தினைக்கூறி, இச்சந்தேகத்தினை நிவர்த்தித்தருள்கவென வேண்டினன். அதற்குத்தேசிகர் அரசனைநோக்கி, ஓ காவலனே! ஒருவன் தனது தலைபோங் காலநேருமாயினும், தனது நெஞ்சாலறிந்ததிற் பிறழாது உண்மையே சொல்லுவனாயின், அவன் தானதருமாதிகள் செய்தவரினுந் தலையாவன். ஆதலாற் பொய்சொல்லாமைக் கொப்பாகிய புகழ்ச்சியில்லை. அந்தணர் முதலிய நால்வருணத்தருள் கடையாய வருணத்தாரான சூத்திரருள்ளே யான் சற்சூத்திர மரபென்னும் வேளாளர் குலத்தில் அவதரித்தோனேயாயினும், அம்மரபினர்க்கெல்லாம் சமய தீக்ஷைமுதலியன செய்வித்து அவர்களைச் சன்மார்க்க நெறிக்கண் சாரவிடும் ஆசிரியனாகி, அவர்களாற் செய்யப்படும் உபகாரத்தினாலேயே சீவிக்குந் தன்மையன். இத்தன்மையனைச் சத்தியலட்சுமி குடிகொண்டிருக்கின்ற இவ்விராஜசபைக்கண் வருவித்து, இருவகை மரபினர்க்குமுண்டாயுள்ள சிறப்பு நாமத்தைப்பற்றி உண்மையை விளக்கவேண்டுமென்று கேட்டால், சாதியபிமானமும் சமயாபிமானமும் சன்னியாசிக்கும் விடா வென்பதற்கொப்ப, அம்மரபிரண்டனுள் ஒன்றன் பற்றினனாகிய யான் அச்சாதியபிமானத்தினாலும் அதனாற் பெறும் ஊதியத்தினாலும் முறைபிறழ்ந்து பொய்சொல்வேனாயின், பின்னர், என்னெஞ்சமென்னைச் சுடுவதோடு எரிவாய் நிரயங்களுமென்வரவுக் கெதிர்பார்த்திருக்குமன்றோ? என்னை யொத்தோர், 'நெஞ்சையொளி

த்தொருவஞ்சகமில்லை என்னு மான்றோர்வாக்கியத்தை மறக்கின், உலகமும் அவ்வுலகத்தையாளு மரசரும் அவ்வரசினால் நிகழுந் தருமமும் அத்தருமத்தினாற் பொழியு மழையும் என்னாகா நிற்கும்? பெரியோர்களுக்குப் பொய்சொல்லாமையே பேரின்ப வீடென்று வேதாகமபுராணேதிகாசங்கள் மூக்காலு முறையிடுகின்றதால், உண்மையே பேசுவன் கேளுமென்று கூறலாயினர்.

இவ்வுலகின்கணுள்ள மானிடவருக்கத்தினர்க் கெல்லாம் நான்குவகையாக வருணபேதமுண்டான காலத்திலேயே, ஓதல் வேட்டலாதிய ஒழுக்க நிலையேற்ற அந்தணராதிய முதன் மூவருணர்க்கும் ஐயர்முதலிய சிறப்பு நாமங்க ளுண்டானபோது, அவ்வொழுக்க நிலையின்றி அம்மூவர்க்கு மடிமைப் பிள்ளைகளாக விருந்து ஏவல்செய்யு மொழுக்கத்தினரான நான்காம் வருணர்க்குப் பிள்ளையென்னுஞ் சிறப்புநாம முண்டாகி, அம்முதன் மூவர்க்குங் காலதேச வர்த்தமானங்களால் அச்சிறப்பு நாமங்கள் பலவாறானமைபோல, நான்காம் வருணர்க்கும் அவை பலவாறாயினவென்பது யாண்டும் பிரசித்த நிச்சயம். அவ்வாறாயினும் அச்சிறப்பு நாமங்கள் யாவும் ஆதியிலுண்டான அவ்வப்பெயர்ப் பொருளையே தரும். இச்சபைக்கண் விவகாரமுகப்பில் நிற்கு முதலியென்னுஞ் சிறப்பு நாமம் அவற்றை யொப்ப தன்று. அஃது ஆதிபிரமோற்பத்தி தேவர்கட் கெல்லாந் தலைவரான சிவபிரானுக்குரிய சிறப்பு நாமமாதலால், அச்சிவகுமாரர்களாகிய செங்குந்த மரபினர்க்கே எத்தேசகால வர்த்தமானங்களினும் சிறப்பு நாமமாய் விளங்கும். அதனை வேறொரு மரபினர் வகித்தல் விளக்கினொளியை மின்மினி வகுத்திருக்க லொப்பாம். மேலும் அதன் பெருமையைத் தேவர்களில் அயனரியரனென்னு முத்தேவர்கள் சொல்லல்வேண்டும். முனிவர்களில் முத்தமிழ் வேந்தராகிய அகத்தியமுனிவரே கூறற்பாலர். மானிடரில் கவிச்சக்ரவர்த்தியும் பிரசிங்காசனாதிபதியு மாகிய ஒட்டக்கூத்தரே விளக்கத்தகுவர். இவ்வாறாயின் என்னையொத்தவன் அதன் பெருமையைத்கூற வல்லேனென்றெழுத லறிவின்மையேயாம். ஆகலின்

அதனைச் செங்குந்தமரபினர்க்கு மாற்றப்படா வேளாண்மரபினர்க்கோ அடிமைப் பொருளைக்காட்டும் சிறப்புநாமங்கள் அனந்தமுள வாதலின் மாற்றிக்கொள்ளப்படுமென்று கூறி முடித்தனர். இவையனைத்தையுங் கேட்டிருந்த வேளாளன் முகங்கருகி வியர்த்து விழிசிவப்பச் சினந்து, ஞானப்பிரகாச தேசிகரை ஒருமனைப்போ லுருத்துப்பார்த்து, ஓய் தேசிகரே! அன்னமிட்டார் வீட்டிற் கன்னமிட்டார் கூட்டுள் நீர் தலையாவீர் போலும். செங்குந்தமரபோர் ஒருவர்க்கே முதலியரென்னுஞ் சிறப்புநாம முரியதென்று சத்தியமாகக் கூறுவீராவென்று உரப்பிக் கேட்டனன். அதற்குத் தேசிகர் எனது நாவினால் மழுவெடுத்துக் கூறுவேனென்றனர்.

அதுகேட்ட வரச[illegible]கவியந்தனாய் அத்தேசிகரது பிரபாவத்தை விளக்க வெண்ணியோ? அவரை யுதாசினமாகப் பேசிய வேளாள னகத்தை யடக்கக் கருதியோ? செங்குந்தன் சொல்லைத் தெளிய வெண்ணியோ அத்தேசிகரைப் பார்த்து, ஐயா சைவசமயாசாரியரே! எவ்வாற்றானேனும் இவ்விருவருங் கூறியவற்றுள் உண்மையறியவேண்டுமென்பது என்கருத்து. நீரு நாவினால் மழுவெடுத்துக் கூறவல்லேனென்று மொழிந்ததால், அவ்வாறு செய்யற் கியல்வீரோ வென்று கேட்டனன். அதற்குத்தேசிகர் இப்போதே யிவ்விராஜசபையின்கண் எரிமூட்டி ஓர் மழுவையமைத்து வைத்திரும், ஒருசாமத்திற்குள் இச்சபைக்கு நேரேயிருக்கின்ற பூசாமண்டபப் பூங்காவிற்போய்ச் சிவபூஜை முடித்துக்கொண்டு வருகின்றேனென்று கூறிச் சென்றனர். உடனே வேந்தன் தனது நண்பராயுள்ள பிரபுக்களையும் பெரியோர்களையும் சில தூதரா லழைப்பித்து, அங்ஙன நிகழப்போகின்ற அற்புத மிதுவென்று அப்பட்டண முழுவதும் வள்ளுவனைக் கொண்டு முரசறைவித்தான். அம்முரசி னோசையைக்கேட்ட அந்தணர் முதலிய நால்வருணத்தினரும், சிவபிரானுடைய முகத்தினு மகத்தினுந் தோன்றினவர்களாகிய சிவாசாரியர்களுஞ் செங்குந்தவீரர்களும்; இன்னுமுண்டான புறவருணத்தினரும் புறச்சமய

த்தினரும் அவ்விராஜ சபைக்கண் வந்து, எள்ளிட விடமின்றி எங்கு நெருங்கி நிறைந்தார்கள். அக்காவிராஜனானவன் தனது சபைக்கு நேரேயுள்ள வெள்ளிடைவாசன் மத்தியில் ஓர் நிக்குண்டஞ் சமைப்பித்து, அதிலோர் மழுவை யுண்டாக்கி யமைக்குமாறு மந்திரிகட் காக்கியாபித்தான். அவர்களு மவ்வாக்கினைப்படி முடிப்பதின் முயன்றிருந்தார்கள்.

இங்ஙன நிகழ்வ திவ்வாருக அங்ஙனம் பூங்காவை நோக்கிச்சென்ற ஞானப்பிரகாச தேசிகர் அங்குள்ள சித்திரப் பொய்கையு ளிறங்கி நீராடி, மரவுரி முதலியன வுடுத்திப் பூசாமண்டபஞ் சென்றிருந்து, விபூதி யுருத்திராக்க முதலிய சின்னங்களைத் தரித்து, தமதான்மார்த்த பூசனையை விதிப்படி நிறைவேற்றி, ஸ்ரீ சண்முகக் கடவுளுடைய திருவுருவத்தை மனதிற்கருதி அவரது சடக்கர மந்திரத்தினைத் தியானித்துக்கொண்டு யோகு செய்திருந்தனர். இவ்வாறப் பெரியோன் யோகுசெய்திருப்பதால் சூரியனுடைய கிரண வெப்பத்தை யடக்கவேண்டுமென மேகபடலங்கள் அ[illegible] நெருங்கித் தழைத்துகொண்டமை போல, அப்பூங்காவிலுள்ள தருக்கள் யாவும் வெப்பந்தோன்றுதபடி நெருங்கி ஒன்றுடனொன்று தழைந்துகொண்டு விளங்கின. அவ்வறவோனியற்றும் யோகினுக் கரவங்கூடாதென் றெண்ணிய வாயுவானவன், அத்தருக்களிலுள்ள தளிர்களுக்கும் அசைவுண்டாகாதபடி மெல்லமெல்ல வீசினன். மேலுமப் பூங்காவிற் சஞ்சரித்துள்ள பறவைகள் யாவும் பூர்வம் ஆலவாய்ச் சுந்தரர் முன்னிலையில் நம்மினத்தோருட் சிலர் யோகநிலையுற்றுச் சுகமடைந்த வாறுபோல நாமுமித் தபோதனர் முன்னிலையில் யோகநிலையுற்றுச் சுகமடைவோமெனக் கருதியோ? அன்றி நம்மினத்தோரை யோகிலிருத்த அக்காலவ் வாலவாய்ச் சுந்தரர் எழுந்தருளியது போல இக்காலித் தபோநிதி எழுந்தருளி யிருப்பதால் நாமுமவ் வியோகினுக் கருகாவோமென்னும் பக்குவநிலை[illegible]க் காட்டவெண்ணியோ? அன்றி மேலுள் நம்மினத்தோருட் சிலா இத்தவ சிரேஷ்டர் செய்யும்யோக நிலையாலன்றோ நற்கதிபெற்றார் இக்காலத்தகைய யோகநிலைக்கு ந

ஞ்செயல்களினால் ஊறுதர லாகாதென மதித்தோ? ஒலித்தல் பறத்தல் முதலிய செயல்களற் றிருந்தன.

இங்கே பூஜாமண்டபப் பூங்காவின் செயலிவ்வாறாக, அங் கிராஜசபைக்கண் மூட்டிய தீக்குண்டமானது பூர்வம் தாருகாவனத்திருடிகள் மூட்டிய யாககுண்டம்போ லோங்கி யெரிந்து நாற்புறத்தும் பற்றி ஒருவரையு நெருங்கவொட்டாமற் றகித்தது. அந்த யாககுண்டத்துட் டோன்றிய மழுவாயுதத்தைப் போலத் தீக்குண்டத்துளிட்ட இரும்பானது ககத் தகாயமாய்ப் பழுத்துப் பிரகாசித்தது. அம்மழுவைச் சிவபிரான்மீது விடுக்கவெழுந்த அவ்விருடியைப்போலத் தொல்லர்க ளவ்வெரியிரும்பை இருமுனையினுங் குறடினாற் பிடித்தெடுத்து நின்றார்கள். அக்கால் ஞானப்பிரகா[illegible]சிகர் தமது நியம நிட்டைகளை முடித்துக்கொண்டு, கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தனை மனதிற்றியானித்து, அவரது பிரபாவத்தைத் துதித்து, ஐயனே! பூர்வம் குலோத்துங்கச் சோழமகாராசனுடைய கொலுமண்டப வாயலின்கண் தமது மரபினரா லமைத்த சிரசிங்காதனத்திருந்து

இந்திரனயன்மாறேவர்யாவர்க்குமுதன்மையாக
வந்தபான்மையினற்குலமழுப்படையத்தனார்க்கு
முந்தியநாயகர்தானுமுதலியராகையாற்செங்
குந்தர்சந்ததிக்குமப்பேர்முதலியவொன்றுகூறும்.

என்று தேவரீர் மொழிந்தது சத்தியமேயன்றோ? இத்தகைய சத்தியவாக்[illegible] இவ்விஜயமார்த்தாண்ட மகாராஜனுடைய கொலுமண்டப வாயலின்கண் யான் நடத்தப்போகின்ற பிரமாணிக்கத்திற்கு யாதோ ரிடையூறும் வாராமல் தேவரீரே முன்னின்று காத்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்து, அம்மழுவை யேந்துமா றெதிர்வந்த சிவபிரானைப்போல் அப் பூசா மண்டபத்தினின்று மெழுந்தருளிப் பூங்காவின் [illegible]யில் வருவாராயினர். இவ்வாறவர் வருங்கால் கொலுமண்டபத்தின்கண் அவை[illegible] யெதிர்நோக்கி யிருந்த அரசன் முதலியோருடைய விழிகட்கு

அவருடைய தோற்றமானது வேலாயுதபாணியாகிய பாலசுப்ர
மணியக் கடவுளைப்போன்றும், அவரது திருமுகமானது களங்க
மற்ற பூரணசந்திரனை நிகர்த்தும், அவரது திருமேனிச் சுற்றி
லுந் தோன்றிய ஒளிப்பிரபையாவும் சோடச கலைகளை யொத்
தும், அவர் திருமுடிமீது கவிந்துநின்ற தருக்கள் யாவு மேகபட
லத்தை யுறழ்ந்தும், அத்தருக்களி லலர்ந்துள்ள புட்பங்கள் யா
வும் அம்மேகபடல மத்தியிற்றோன்றுந் தாரகாகணங்களைப்பொ
ருவியும், அம்மலர்களினின் றிறையு மகரந்தங்கள் யாவும்அந்தர
வாசிகளாகிய தேவர்கள் கதம்பங்களைவாரி யிறைப்பதை யொப்
பவும் விளங்கின. இப்படி விளங்கிய ஞானப்பிரகாச தேசிக
ருடைய வரவை அரசன் முதலியோர் கண்ட மாத்திரத்தில் திடீ
ரென்றெழுந்து நடுங்கி மெய்சிலிர்த்து, அ[illegible]கரமெவன் றிருகரங்க
ளையுஞ் சிரமேற்கூப்பி, விழிகளி லானந்த நீர்பொழிந் தாரவாரி
த்து, பூமியிலடியற்ற பனைபோல வீழ்ந்து பணிந்தார்கள்.

அக்கால் தேசிகர் வரவரத் தமது சுயரூபத்தோடு குண்டத்
தீச்சிகைக்கு நேரே கொல்லரா லேத்தப்பட்டுள்ள மழுவுக் கெதி
ரில்வந்து, ஊங்காரஞ் செய்து நின்று நாவை நீட்டி யேந்தப்
பாய்ந்தனர். அதுகண்ட வரசனும் பெரியோர்களும் ஆ! ஆ!
வென்றோடித் தடுத்து, ஓ சுவாமி! தேவரீருடைய வாய்மையை
நிலைநிறுத்தப் பிரமாணஞ் செய்யவும் வேண்டுமா? தேவரீர் தரிச
னமாத்திரத்திலே இச்சபைக்கண் வந்துள்ள யாரும் யாமும்
சிவானந்த வாழ்வைப் பெற்றோம். இத்தகைய யாங்கள் இனி
[illegible] தேவரீரை இந்நிலைக்கண் வரச்செ
ய்த வபராதத்தினை மன்னித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்
தார்கள். அதற்கவர் சம்மதியாது முன் சொன்னபடி என்னுயி
ரைச் சிறிதளவேனுந் தீண்டாது விட்டேனென்றுகூறி யாக்கிரமித்
து, மீட்டுமம் மழுவினெதிரே நாவை நீட்டிப் பாய்ந்தனர். அந்
நாவின் பரிசமதன்மீது பட்ட மாத்திரத்தில் திருவருட்செயலா
ல் பாராளும் பார்த்தி[illegible]ப் பழிசம்பவிக்கு மென்றோ? செங்
குந்த மரபினர்க்குத் [illegible]ந்தாலுலம் விளையு மென்றோ? அழல்வடி-

வாய்ச் சிவக்கெரிந்திருந்த அம்மழுவானது விபூதித்துண்டம் போல் வெளுத்து நீறுகித் தூகளுருக்கொண்டு பறந்து, அரசன் முதலியோருடைய சரீரங்களிற் சென்று படிந்து, அவ்வவர்கள் பாலடைந்திருந்த வெளிமாசோடு உண்மாசையுந் தொலைத்துப் பிரகாசித்தது. அங்கதுகண்ட சனங்கள் ஜயஜயவென்று கூறிக் கைகொட்டி ஆர்ப்பரித்தார்கள். அந்தணராதிய பெரியோர்கள் அக்ஷதையையு மலர்களையுந் தூற்றி ஆரவாரித்தார்கள்.

இப்பா லரசனனவன் சகல வாத்தியகோ[illegible] முதலிய சம்பிரமங்களுடன் ஞானப்பிரகாச தேசிகரைச் [illegible]விகையிலேற்றித் தானும் சதுரங்க சேனைகளாதிய பரிசன[illegible]ள் அவரைக் கூடி நகரியை வ[illegible]மாகவந்து, அவரை யவரது [illegible]டாலயத்தி லிறக்கிப் பணிந்து அ[illegible]ற திரவியங்களைப் பரி[illegible]கத் தந்து விடைபெற்றுத் தன திருக்கையை யடைந்தனன். அன்றுமுத லின்றுகாறும் அத்தேசிகரை யாவரும் நாவிஞன் மழுவெடுத்த ஞானப்பிரகாச வள்ளலாரென்னுஞ் சிறப்பு நாமத்தாற் றுதிசெய்வதாயினர். இக்காரியங்களனைத்தையுங் கண்டிருந்த வேளாண்மரபினர் யாரும் அவரைச் சன்மானித்தலும் அவர்பாலுபதேசம் பெறுதலுமற்று, அழுக்காறடைந்த மனத்தினராய் அகல நின்றார்கள். அதுகண்ட செங்குந்த மரபினர் அவரைச் சன்மானித்து, அவரது மடாலய விருத்திக்குக் குறை நேராதபடி காத்து வருவாராயினர். அதுபோலவே நாளதுகாறும் அம்மடாலய பரிபாலனங்களைச் செங்குந்த மரபினரே நிறைவேற்றி வருகின்[illegible]. இத்தகைய பிரபாவத்தை யடைந்த ஞானப்பிரகாச வள்[illegible]லார் தம்மைச் சன்மானித்துள்ள செங்குந்த மரபினரைச் சிற[illegible]பித்து, ஆறுயிரஞ் செய்யுளில் ஓர் புராணமும் பல பிரபந்தங்களும் இவ்வுலகுள்ள வரையில் நிகழுவதாக *அருளிச்செய்தனர். அவர்க்குப்பின் அவ்வாதீனக் கர்த்தராய் வந்த பெரியோர்களும் உலா பரணி பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைச்* செய்து, அச்செங்குந்த மரபினரால் சன்மானிக்க[illegible]ட்டிருந்தார்கள்.

இவ்வாறல் வள்ளலாரைப்போலவே பலர் தங்களிஷ்ட சித்தியாக வேண்டி, கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரைப் பூசித்துத் தியானித்தும் அதனைப் பெற்றுப் பிரபலித்திருந்த சரிதங்கள் பலவாம்.

ஓர்கர்ணபாரம்பரியக்கதை.

—:o:—

இராஜேந்திரசோழனுக்கு இராஜராஜசோழன் கங்கைகொண்டசோழன் இராஜேந்திரசோழன் என வேறு மூன்றுபேர்களுளவென்றும், இவனுக்கோர் புத்திரியேயன்றித் தன தரசினைத்தாங்க ஓர் புத்திரனில்லாமையைப்பற்றிக் கூத்தரோடாலோசித்துக் கருணாகரபாண்டியனுக் கட்டமான் மனைவியாயுள்ள தன் பெண்ணின் குமாரனாகிய விசயதரனை அபிமானப் புத்திரனாகவேற்று அவனது நற்குணங்களை நிதானித்து அக்கூத்தர் தன்னிடம் வந்தபோது கூறிய "வாளொருகை" என்னும் வெண்பாவினீற்றடியிற் குறித்த "குலோத்துங்கம்" என்பதையே உயர்தினையாண்பால் விகுதிகூட்டிக் "குலோத்துங்கன்" என வேறு பேருமிட்டு இளவரசு பட்டாபிஷேகஞ் செய்து வைத்தனனென்றும், இவ்வபிஷேக காலத்தில் காணும்வாரா தரசிறைபுஞ் செலுத்தா தகங்கரித்திருந்த கலிங்கராஜனை யடக்கி வெற்றிகொள்ளுமாறு இராஜராஜசோழன் வனடைநகர்க்கரசனும் தனது சேனாபதியுமாகிய கருணாகரத்தொண்டமானோடு படை விடுத்து வடதிசைநோக்கிச் சென்று துங்கபத்திரிநதியுங் கிருஷ்ணாநதியுங் கூடுமிடத்துள்ள கூடல் சங்கமத்தில் அக்கலிங்க நாட்டரசனோவலால் வந்து தன்னையடக்கிய குந்தளதேயத்தரசனையும் அவன் தலைவனாகிய வக்கலிங்கனையும் வென்று சிறைப்படுத்தி மீண்டுமவர்கள் வேண்டவிடுத்து வந்தனனென்றும், அதன்பின்னர் குலோத்துங்கன் நடுநாட்டினர் வேண்டுகோளால் திருவண்ணாமலை

திருவதிகை முதலிய பல விடங்களில் வேட்டஞ்செய்யக் கருதிப் போயிருந்தனனென்றும், அதைக் காஞ்சிநகர்க் கரசனாகிய சிவராமசுந்தரதேவனும் கருணாகரத் தொண்டமானும் முணர்ந்து அந்நகர்க் கழைத்து வந்து சம்பிரமங் கொண்டாடிக்கொண் டிருக்கையில் வயோதிகனான இராஜராஜசோழனுக்குக் காலவியோக தருண நேரிட்டதென்றும், அஃதுணர்ந்த கூத்தர் குலோத்துங்கனைத் திருமுகம் விடுத் தழைப்பித்து மரணயாதனையி லிருக்கு மரசன்பால்விட அவனவனுக் குணர்த்தவேண்டுவ வுணர்த்திக் கூத்தரிடத்துங் கூறவேண்டுவ கூறி அவர்கையிலவனை யொப்புவித் துயிர்துறந்தன னென்றும், அப்பா லொருவருடமானபின் இறந்துபோன பெரியவரசன் கருத்தின்படி இளவரசனுக்குக் கருணாகரபாண்டியன் மகளாகிய தியாகவல்லியைப்பேசி அப்பெண்ணினது நாமப்பொருத்த மொன்று நலனற்றிருத்தலை யறிந்து சாரதாம்பாளென மறுநாமங்கூறி மணஞ்செய்து முடித்து மறுவருட மகுடாபிஷேகமுஞ் செய்து நிறைவேற்றினரென்றும், அக்கால் பலதேயவரசர்களும் வந்து தங்களரசிறையோடு பலவரிசைகளையுந் தரக் கலிங்கதேயத்தரசன் மாத்திரம் பழைய பகையைப் பாராட்டி வராமலிருக்க அதைக் கூத்தராலுணர்ந்த குலோத்துங்கன் தன் கருத்தி லிருத்தித் தான் திக்குவிஜயஞ் செய்துவரச் சிந்தையி லெண்ணிக் கூத்தரைத் தனக்குப் பிரதிநிதியா யரசாளவைத்துச் சகல சைனியங்களோடுங் காஞ்சிநகரடைந்து கருணாகரத்தொண்டமானைக் கலிங்கதேசஞ் செல்லவிடுத்துத் தான் சிவராம சுந்தரதேவ ராஜனோடு கீழ்த்திசை முதலிய முத்திசைகளிலும் விஜயஞ்செய்து வடதிசைக்கண்வந்து அக்கருணாகரத் தொண்டமானால் கலிங்கதேசத் தரசனைச் சிறைப்படுத்தித் தனது ஜயஸ்தம்பத்தினை நாட்டி வந்தனனென்றும் ஓர் கர்ணபாரம்பரியக்கதை கேட்டுளேம். இக்கதை மேற்கூறிய சரித்திரத்துள் ஐந்தாம்பக்கமுதல் இருபத்து மூன்றாம் பக்கம் வரையிலுள்ள சரித்திரத்தினு ளடங்கிய விடயங்களில் ஆங்காங்

சமைத்துக்கொள்ளத் தக்கதேயாம். சிலர் குலோத்துங்கச்சோழனுக்குப் பெண்கொடுத்தோன்பெயர் கருணாகரபாண்டியனென்று வரகுணபாண்டியனென்பர். அஃதெப்படியோவறியேம்.

ஒட்டக்கூத்தர்சரித்திரம் முற்றுப்பெற்றது.

சோதனைப் பத்திரம்.

—:o:—

12 பக்கத்து "அன்னையால்" என்னும்பாட்டில் 2-வது வரியில் புலிபதாசை என்பதை புலிபதாகை என்று வாசித்திடுக.

107-வது பக்கத்து 25-வது வரியில் "[illegible]லவார்" என்ற மொழிக்குமுன் "இருமுடவருமிருகுருடருமான" என்பதனைக்கூட்டி வாசித்திடுக.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

அவத்தாரண்யபதகனமென்னும்

கவனக்குறிப்பட்டவணை.

1. இவ்வாறு திருமுலைப்பாலூட்டிச் சகலகலா நிலயமென்னும் புத்தகத்தினைத்தந்த நாமகளாரது திருவடியைப் பாராட்டிப் பிற்காலத் இக்கூத்தர் (ஈட்டியெழுபது) என்னும் பிரபந்தம் பாடியபோது அதன் காப்பாக வியற்றிய (சரஸ்வதியந்தாதி) என்னு நூலில்

> உரைப்பாருரைக்குங்கலைகளெல்லாமெண்ணிலுன்னையன்றித்
> தரைப்பாலொருவர் தரவல்லரோ தண்டரளமுலை
> வரைப்பாலமுதுதந்திங்கெனைவாழ்விக்குமாமயிலே
> விரைப்பாசடைமலர்வெண்டாமரைப்பதிமெல்லியலே.

எனத் துதித்திருக்கின்றனர். இங்ஙனமிருப்ப வந்தால் "மகாகவியாகிய கம்பராற்செய்யப்பட்டது" எனப்புரட்டி அச்சிட்டு வழங்கலாயது. இப்புரட்டைப்பற்றி மேல்வருஞ் சரிதையில் இடம்வாய்ப்புழி விளங்க வுரைப்பாம். அன்றியு மிக்கூத்தனருக்குப் பிற்காலத் திருந்த ஓர் வித்வ சிரோமணியும் அதற்குச் சான்றாகத் தனியனாய்

> காளியருளாற்பொய்யாமொழி நூல்கற்றான்
> கம்பனேபிரமராக்கதனாற்றேர்ந்தான்
> நீளவுமையருணகிரிக்கனுலாய்ந்தான்
> நெடுங்கூத்தன்வாணிதனப்பாலுண்டோர்ந்தான்
> கோளில்பரையாற்காளமேகிலாசானன்
> குவலயத்திலிப்படிமுன்னுளிற்பல்லோர்

வாணனலவும்வரகவிகளிருந்தாரின்னும்
வழுக்கவிகளிருக்குநிலைகுக்சொணுதே.

எனக் கூறியிருத்தலேயும், திருச்செய்ஞ்ஞலூர் நாவினூன் மழுவெடுத்த ஞானப்பிரகாச தேசிகர் தாம்பாடிய வீரநாராயணர்விஜயமென்னும் நூலில்

கலியாணர்காக்கவொருக்கலையரசுசெய்யும்வாணிகலசக்கொங்கை
கவியரசுக்திருவமுதூட்டரவருந்திக்கழகமெனுநற்பைங்கூழ்மேற்
சவிபெறத்தாவுறமுகில்போற்றயங்குபெரியோன்றங்கன்றனைக்கூடுமன்னு
பவிபொருங்கையனிறபகையைப்பராத்தகவேரமுடிச்சும்வணம்படர்த்த
[வாணன்

எனக் கூறியிருத்தலேயுங் காண்க.

மேலுமக் கம்பரென்னும் புலவரைப்பற்றியுள்ள பல கர்ணக் காதைகளினும் கற்பனைக் காதைகளினும் அவருக்குக் கலைமகளார் தமது கனதனைப்பா லளித்தனரென்னுங் காதையை இதுகாறுங் கண்டிலேம். கன்னபாரம்பரையினுங் கேட்டிலேம். ஆயினுமிப் புரட்டும் பொய்யும், இனியிவ்வெத்தாரண்யத்தில் ஆங்காங்கு யாருக்கவனிக்கக் குவிக்கப்படும் இத்தகைய புரட்டுகளும் பொய்களும், இக்கலியுக முடிந்த நாலாயிரத்துத் தொளாயிர வருடத்திற்கு மேற்பட் டொழிந்தனவேயாம். இப்போதச் கலியினது ஐயாயிரவருடப் பிரளயம் அப்புரட்டுகளையும் பொய்களையும் பொன்றுவிக்க அடுத்து நிற்பதால், இனி யெப்படியோ?

2. இவ்வாலய மின்று முளது. இதனை வெழுந்தருளியுள்ள தேவியாரை அடுத்த பலவூரின்க ளுள்ளோரும் வந்து வழிபட்டுத் தங்கவிஷ்ட காரியங்கள் பெற்று வருகின்றனது இன்றுங் காணலாம்.

3. சோழமண்டல சதகம்

ஆரவாரவிலக்கணநூலோர்தமுழுவகைதந்தெதிர்நூல்
பாரின்மீதுதமிழ்க்கூத்தன்பாடியமைத்தான்பயின்றோர்க்கே
வீரசோழனுடனிருந்தவந்தேவீரசோழியநூல்
வாரமேறவரங்கேற்றிவைத்தார்சோழமண்டலமே.

தன்றியும், கம்பர் திருக்கைவழக்கம்

பேரியலைச்சாற்றுமொட்டக்கூத்தன்சரசவிசொல்லப்பா
லாற்றநீர்காற்கொணர்ந்தவாண்மைக்கை

என விருத்த லறிக.

4. தொண்டமண்டல சதகம்

நூலார்கலைவல்லசெம்பியன்கேட்கக்கொடித்துவித்த
கோலாகலவொட்டக்கூத்தனையன்றுதற்கோலியென்ற
மேலார்கவிசொல்லிசெய்த்தானத்தேசென்றுமேவிக்கொண்ட
மாலார்களத்தைப்புகழேந்தியுந்தொண்டமண்டலமே.

என விருத்தறிக. இது பழைய ஏட்டுப் பிரதியின்கணுள்ளபடி. நூதன அச்சுப்பிரதிகளில் "வித்த-என்பதனை-மிக்க" என மாற்றியது போதாமல் "மேவிக்கொண்ட-என்பதனை-வென்றுகொண்ட" என மாற்றினர். கூத்தர்பால் விகற்பித்து நின்ற புகழேந்தியார் "தற்கோலி" என்ற ஏக்கவியைக் கூறியது அவரை விகற்பமின்றி மேவிக்கொள்ளவேயன்றி வென்று கொள்ளவன்றென்பது இதுபற்றிப் பிற்கூறியுள்ள சரித்திரத்தாற் றெள்ளிதின் விளங்கும். அன்றியு மேற்கூறிய சோழமண்டல சதகமும் இத்தொண்டமண்டல சதகமும் அவ்வம்மண்டலங்களிலுள்ள சற்சூத்திரரென்னும் வேளாளர்பொருட்டுப் பாடியதென்பதற்கு நூலவற்றின் முதலினு முடிவினு மமைத்துள்ள காப்புச்செய்யுளும் வாழ்த்துச்செய்யுளுமே சான்றாம். இங்ஙனமாக வந்நூல்களைச் செங்குந்தகுல திலகருஞ் சிவானுபூதிமான்களு மாகிய பொய்யாமொழிப்புலவரும் படிக்காசுப்புலவரும் பாடியதென வழங்குவர். அவையிரண்டு மச்சற்சூத்திரர்க் கனுகூலப்பிரபந்தங்களாயிருத்தலன்றி அவற்றுள் பலவிடங்களில் அப்புலவர்கள் மரபுக்குப் பிரதிகூலமான விடயங்களும் அச்சற்சூத்திரருடைய சில கற்பனைக் கதைகட்குச் சார்பாயுள்ள கவிகளும் புகன்றிருத்தலின் அவர்களவற்றைப் பாடியதென்பது அங்கீகரிக்கத் தக்கதன்று. ஒர்கா லவர்கள் சாதிவைடம்மியமுஞ் சமயவைடம்மியமுஞ் சற்றும் இல்லாத செங்குந்தமரபினருஞ் சிவானுபூதிமான்களுமாயிருத்தலின், அச்சற்சூத்திரர் வேண்டுகோளுக் கிணங்கிப் பாடியிருத்தல் கூடும். அவ்வாறவர்கள் பாடித்தந்ததைப் பிற்காலத்துண்டான அவ்வைடம்மிய வினரால் தங்கள் கருத்துக்குங் கற்பனைக்கதைகட்கு மிணங்க மேல் மாற்றியதுபோல மாற்றியிருக்கலாமென்பது வெளி.

5. இச்சிறப்பு காமரு மவர்க்கிருத்தலைப்பற்றி மனம்பொருதோர் ஓர் வைணவசமயாசாரியாகிய நாதமுனி யென்பவரால் கம்பனானருக் கிடப்பட்டதென (ஆதியிற் செல்லனென் றழைக்கப்பட்டோனாகிய வொருவன் பின்னர் செல்லப்பனுவ் அதன்பின் செல்லப்பனவர்களாய் அப்பால் மஹாராஜராஜஸ்ரீ செல்லப்பனவர்களென் றழைக்கப்பட்டானென வழலைக் காதையொப்ப) முதலில் கம்பனென் றழைக்கப்பட்டோனாகியவவர் பின்னர் கம்பநாட்டனாய் அதன்பின் கம்பநாட்டாழ்வானாய் அப்பால் தெய்வப்புலமை கம்பநாட்டாழ்வானெனப் பெரியோரா லழைக்கப்பட்டா ரெனபதற்கும் வேறு சில கற்பனை விடயங்களுக்கும்

அம்பரா வணிசடையரனயன்முத
லும்பரான்முனிவரால்யோகராஜய
சிம்பராற்பிணிக்கருமிராமவேழஞ்சேர்
கம்பராம்புலவரைக்கருதிருக்குவாம்.

எனவும்,

கம்பனுடனுமைமெவிசாற்றுபூங்
கொம்பனுடன்மொழுனிராமப்பேர்ப்
பம்பநாடழைக்குங்கதைபாச்செய்த
கம்பநாடன்கழறலையிற்கொள்வாம்

எனவும்,

தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லா
மராவு மரமாயிற் றன்றே — யிராவணன்மே
லம்புகாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி.

எனவும்,

வாழ்வார் திருவெண்ணைநல்லூர்ச்சடையப்பன்வாழ்த்துபெறத்
தாழ்வாருயரப்புலவோர்கவிகுன்தாணசலப்
பேழ்வார்கதிரினுதித்ததெய்வப்புலமைக்கம்பநாட்
டாழ்வார்பதத்தைச்சிந்திப்பவர்க்கியாதுமரியதன்றே.

எனவும் பூர்வஞ் சில வபியுக்தரால் பாடியதாகப் பாடிவைத்த பாட்டுகளோடு இதற்குமோர் பாடல்

அம்பிலேசிலையைநாட்டியமரர்க்கன்றமுதமீந்த
தம்பிரானென்னைத்தானுந்தமிழ்மேற்சிலைநாட்டிக்
கம்பநாடுடையகோமான்கவிச்சக்ரவர்த்திபார்மேல்
நம்புபாமாலையாலேநரர்க்குமின்றமுதமீந்தான்.

எனப் பாடிவைத்தனர். இப்படி சைவப்பற்றினராகிய கம்பனை வைணவ ரெனச் சாதிக்கப்புகுந்த சழக்கர்க் கிது பெரிதோ? கவிச்சக்ரவர்த்தியென் னுஞ் சிறப்புப்பெயர் கூத்தனார்க்கே யுளதெனபதற்குத் தாமே [illegible]ரமையத் திற் பாடியுள்ள "வீரபத்திரபரணி" என்னும் பிரபந்த முடிவில்

வாழிதமிழ்ச்சொற்பெருகித்தநூற்றிரன்
வாழியிசைக்கப்புரத்தநாற்கவி
வாழியநாகவெல்பதற்றநூற்றவர்
வாழிகவிச்சக்ரவர்த்தி[illegible]த்தனே,

எனவும்,

ஆக்கப்பெருக்கம்புவத்தில்வாழியே
யாற்றங்கரைச்சொற்கிழத்திவாழியே
கோக்கன்றெறச்செய்குலத்தர்வாழியே
கூத்தன்கவிச்சக்ரவர்த்திவாழியே.

எனவுந் தாமே பாடியிருக்கின்றனர். இச்சிறப்புநாமம் கம்பருக்கு ஏற்பட் டிருக்கின் இவ்வணம் பாடியபுகா ரென்பது இவர் கல்வி கேள்வியி ற் சிறந்தோ ரிஷ்சாதபடியாலன்றோ? இங்ஙனமே கம்பர் தாம்பாடிய செய்த் தை னாலிலும் [illegible]த்தகைய தனிப்பாடல்களிலும் இத்தகைய வல்ல பெருந் தைய சிறப்புநாமத்தையுந் தமக் குளதென்பதற்குச் சான்றாக வியற்றிவை த்திலர். அன்றியும் ஒளவையாரிவர் சில பிரபல வித்துவ சிரோமணிகளும் அக்கூத்தனாரைப்பற்றிக் கூறியுள்ள செய்யுட்களில் இக் கவிச்சக்ரவர்த்தி யென்னுஞ் சிறப்புநாமத்தை யாண்டுங்கூறவில்லை ஆங்காங்கு கண்டிலேமாதலின் மேலுமக்கூத்தர்க் கவிச்சக்ரவர்த்தியென்னு நாமமுட்பட மூற்காலத்த னவும் பிற்காலத்தனவுமாய், அம்பலக்கூத்தர் - இயற்றமிழாசிரியர் - சரச விப்புலவர் - சாரதாபீடசம்பன்னர் - மாகவி - வீரகவி - தெய்வகவி - வித்து வசனகோலாகலர் - கவிராஜகண்டீரவம் - சித்தசிங்காசனாதிபதி - ஒட்டக் கூத்தரெனப் பன்னிரண்டு திருநாமங்களுள. இவற்றை மேல்வருமவர் சரித்திரத்தினன்றி அவரியற்றியுள்ள பல பிரபந்தங்களிலும், அவரைப்பற்

றிப் பிற்காலத்தவர் கூறியுள்ள தனியன்களினும் பல நூல்களினுங் காண லாம்.

6, இவையனைத்தையுங் குறித்து வீரசிங்காசனபுராணத்தில்

ஆசுகன்மதுரஞ்சித்ரம்வித்தாரமானநாற்கவிகள்வல்லவரு
மறைதரும்மியலுமிசையுநாடகமுமானமுத்தமிழ்கள்வல்லவரு
மலிவாமெழுத்துச்சொற்பொருள்யாப்புமகிழலங்காரம்வல்லவரு
மன்னியசிந்தாமணியருங்குளாமணிவளையாபதிமற்றுங்
காசில்குண்டலகேசியுமவளர்மணிமேகலையெனும்பஞ்சகாவியருங்
கருதுமீரடிமூன்றுவடிச்சங்கக்கவிகள்கல்லாடம்வல்லவருந்
தேசவாவிவலிஞானவீசுரருந்திகழ்புராணமுஞ்வல்லவருஞ்
செப்பிலொப்பில்தர்க்காதியவ்லவருஞ்செயசெயவெனப்பகழ்ந்தி
[லவன.

வெய்யவன்குலத்துதித்திசைவிளங்கியவேந்தன்
வையகம்புரந்தருளகளங்கன்வாழ்மன்றில்
பொய்யில்பாரதிபுருடனமெய்மெகித்ததுபோன்று
மையிலாக்கவியர்ஒட்டக்கூத்தன்வாழ்ந்தனனால்.

எனக் கூறியிருத்தலைக் காண்க.

அன்றியுமிக் கூத்தர் எல்லாப் பிரபந்தங்களையு மொழிந்திற் பாடவல்ல வித்தாரகவி யென்பதற்குப் பிற்காலத்தோரகவி

வெண்பாவிற்புகழேந்திபரணிக்கோசயங்கொண்டான்விருத்தமென்னு
மொண்பாவுக்குயர்கம்பன்கோவையுலாவந்திகளுக்கொட்டக்கூத்தன்
கண்பாயகலம்பகத்திற்கிரட்டையர்கள்வசைபாடக்காளமேகம்
பண்பாகப்புனைசந்தம்படிக்காசலாதொருவர்பகரொணாதே.

எனக் கூறியிருத்தலையுமறிக. இதில் "கோவையுலாவந்திகளுக்கு" என் றிருந்ததைக்காணச் சகியாதோர் "கோவையுலாவந்தாதி" என மாற்றி வழங்கவைத்தனர்.

7. இதை "பாடும்புலவர்புகழொட்டக்கூத்தன்" என மாற்றிவழங்கு வர், "பாடும்புலவர்பணிகொண்டகூத்தன்" என்பதைப் பார்க்கச்சகியாத தில சொற்புரட்டர். அன்றியும் "பாடும்புலவர்புகழ்மின்றகூத்தன்" எனவும் பாடம். இவ்விரண்டையு மொழித்துப் புகழொட்டக்கூத்தனென

மாத்தியதில் அவ்வகைக்கண் கெட்ட அவ்வியப்புல்லர் காலவழு விருத்தலைக் கருதிலர் போலும்.

8. இப்படி நிகழ்ந்துள்ளதை மாற்றிச் சிலர் ஔவையாரையே யதன் பொருளைத் தெரித்தல் வேண்டுமெனக் கேட்ப, அதற்கவ ரவ்வா றுரைத் ததாகக் கூறுவர். இது மரபுவழு: கவியுரைப்போரே யதன்கருத்தையு ரைப்பது அவர்க்குங் கனமுமன்று. சில ரதன்பொருளைக் கம்பர் விளக்கி யதாகவுங் கூறுவர். அரசனாயினான் தனது சமுகவித்துவானால் விளக்கக் கூடாதவழி அயலினுள்ளோரை நோக்க, அவ்வாறு விளக்குதல் கூடும். இல்லையேல் அது விதிவழு.

9. இவற்றைப்பற்றி பிற்காலத்திற் சிலகவிகள்

குட்டுதற்கோபிள்ளைப்பாண்டியனிங்கில்லை
குறும்பியளவாய்க்காதைக்குடைந்துதோண்டி
யெட்டினமட்டறுப்பதற்கோவில்லியில்லை
யிரண்டொன்றாய்முடிந்துதலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக்கூத்தனில்லை
விளையாட்டாக்கவிதைதனைவிரைந்துபாடித்
தெட்டுதற்கோவறிவில்லாத்துரைகளுண்டு
தேசமெங்கும்புலவரெனத்திரியலாமே.

என்றும்,

தென்மதுரைவேப்பத்தூர்சங்கவண்ணர்
சிரச்சைப்பச்சிதைந்தோடச்செய்யும்வீரத்
தன்மைசொன்பொய்யாமொழியான்பகழிக்கூத்தன்
றாழ்கவிஞர்தலைசாய்த்துத்தக்கோர்தம்பால்
நன்மையினற்றிலதாங்குங்கவிச்சரேச
சமன்முதலானோரின்னாநிலத்தி
லின்மையினாலன்றோபுன்கல்விகற்றோ
ரெல்லாரும்வல்லாராய்மகிழ்கின்றாரே.

என்றும்,

கல்லார்க்கசடறவீணேகவிஞரெனத்திரிவா
ரெல்லாமறிந்தவர்போலிறுமாப்பரிவர்க்கிடம்

வல்லான்கவியொட்டக்கூத்தனைப்போற்றிறைவாங் கிடுவோ
ரில்லாமையாலல்லவோவெங்குறிப்படியெய்தினரே.

என்றுங் கூறியிருத்தலைக் காண்க.

10. இக்கதை கூடக்கூறவிக மிக்கனமாக - முன்னை செளவையொம் மன்னை இராஜகுமாரனை வாழ்த்துதலாக் "வரப்புயர" எனக்கூறியதற்குக் கம்பர் பொருளுரைத்தாரென விநோதமாயச் சிலரெழுதிவைத்ததுபோல இதற்கு மல்லவோர் பவிரமாயணம்பாடி யரங்கேற்றியதெனக் கட்டிவைத்த ஒட்டக்கூத்தர்சரித்திரமெழுதிவைத்தனர். எதிற்சேரத் தெழுதின பெழுதுக. அதில் சோழராச னிக்கம்பரானவர் வழியேபோகிற வீரகவியனைக்காகப் பாத்தியப்பட்டு அவன் குளறி வழிந்ததையும் பாடலாகக்கொண்டு அதத் திவ்யமாக ராட்பித்துப் பொருள்சொல்லிச் சமர்த்தித் தைப்பரத்தியாயது அவனைப் பெருமைபடுத்தவேண்டும்' என முன்னை யெழுதினோர் பின்னர் "அரசன் மீட்டுமொருகா லன்று கவிபாடிவந்த வித்துவான் வரவில்லாமையினைக் கண்டுகொண்டு அவன்வாக்கைக் கேட்க வேண்டுமென நினைப்பிப்பாளுகில் அவனது பணடோசம் வெளிப்பட்டு மாறு செளக்கியத்திற்குக் குறைவு வருமென்று கம்பர் தனது கற்றுச்செசவலியின் விட்டுக் கவிவிலவனை யழ சமர்த்தனும்படி செய்துவைத்தார்" என் மெழுதிவைத் திருக்கின்றனர். இந்த முன்னுக்கும் பின்னுக்கு முரணுகின்பனை பற்றிலபோதும்; அரசனைய னித்தகையனென வறிந்திருந்தும் அவனை யாதுகாரணங்கருதி யீட்டு மழைப்பிக்கத் துணிவன்? அவனைக் கல்வியாளுக்கக் கலைஞனியாலுங் கூடுமோ? இப்பொய்க்குப் பொருத்தமில்லை யென்பது புலமுறிவினர்க்கும் புலப்படுமே. கம்பராமாயணம் பாடி யரங்கேற்றியதெனவுள்ள ஓர் வகைநூல் கூட்டுக் கதையைப் பற்றிப் பின்னு மிடம்பெற்றழி விளக்குதும் ஆண்டு கண்டுதெளிக.

11. இதை "ஒட்டக்கூத்தன்பாட்டுக் கிரட்டைத்தாழ்ப்பாள்" எனக் கூறியதாக இவருக் கம்பெயர் வராமுன்னமே, "பாடும்புலவர்பணிகொண்டகூத்தன்" என்றிருத்தலைப் "பாடும்புலவர்புகழொட்டக்கூத்தன்" எனத் திருத்தியதற்கொப்பக் கூறுதல் காலவழு. அன்றியு மது "எத்தப் பாட்டுக்கெதிர்ப்பாட்டில்லை" எனவும், கல்லாடம் படித்தவனோடு மல்லாடவேண்டாம்" எனவும் வழக்கும் பலவகை வழக்கச்சொற்கள் போல அவரது பாட்டின் திறத்தைக் காட்ட வழங்குமோர் வழக்கச்சொல்லேயன்றி வேறு காரணத்தைக் குறித்து வழங்குவதன்று.

12. சிலர் "வெண்பாவிற்புகழேந்தி பரணிக்கோ செயங்கொண்டான் விருத்தமென்னு மொண்பாவுக்குயர்கம்பன்" என விருக்குந் தனிப்பாடலின் கருத்தை யுணராது, இப்பரணியென்னும் பிரபந்தத்தினைச் செயங்கொண்டானென்னுமோர் புலவராற் செய்யப்பட்டதெனக் கூறுவர். கௌசொட்டிப்புலவரது பேரொன்றே வழங்கிற்பதன்றி, அக்காலவிருந்ததாகவேனும் இப்பிரபந்த மவராற் செய்யப்பட்ட தாகவேனும் யாதொரு சாதனமுங் காண்கிலம். வெண்பா பாடுவதிற் புகழேந்தியும், விருத்தம் பாடுவதிற் கம்பரும், கலம்பகம்பாடுவதி லிரட்டையரும், வசைகவிபாடுவதிற் காளமேகமும், சந்தக்கவி பாடுவதிற் படிக்காசு புலவருஞ் சிறந்தவர்களானாற்போலப் பரணிப்பிரபந்தம் பாடுவதிற் செயங்கொண்டான், சிறந்தவரென்பது கருத்தேயன்றி; இவர்கள் மற்றப்பாக்களும் பிரபந்தங்களும் பாடத்தெரியாதவரென நினைத்தல் கூடுமோ? அன்றியும்

வாக்குக் கருணகிரி வாதவூரன் கனிவு
தாக்குக்குத் திருஞான சம்பந்தன் — நெருக்கு
நக்கீர தேவனே பண்புக்குச் சுந்தரனுஞ்
சொற்பரிவுக் கப்பரெனச் சொல்.

என்பது மொன்று. ஆயினிவர்களு ளொருவர்திற மற்றொருவர்க் கில்லையென்பது யாங்ஙனம். இவ்விரு தனிப்பாக்களின் கருத்தை யுய்த்துணருமிடத்து, ஒவ்வொருவர்க் கொவ்வொன்றி லியற்கைத்திறமு மற்ற வற்றிற் செயற்கைத்திறமுமா மென்பது வெளி.

13. இஃதிங்ஙனமாக — [illegible] கூத்தருக்கும் புகழேந்திக்கு நிகழ்ந்ததாகப் பலபிதற்றி அப்பிதற்றல்களிற் கம்பர் பிதற்றல்களையுஞ் சிலகலந்து வரைந்து முடித்தபின், புகழேந்தி கூத்தரைத் தமக்குள் பகைவராக நினைந்து அவரைக் கொலைசெய்யத் துணிந்து காலம்பார்த்திருந்து ஒருநாளிராத்திரி யவர் படுக்கைவீட்டில் ஒருவருக்குந்தெரியாமலோர் பெரிய கருங்கல்லைச் சுமந்துகொண்டுவந் தொளித்திருந்தன ரென்றும், பின்னரங்கே கூத்தருக்கு மவர் மனைவிக்கும் போஜனவிஷயத்தில் நேர்ந்த சம்பாஷணையால் தாமவரை விரோதமின்றிக் கலந்துகொண்டனரென்றுங் கற்பித்து வரைந்திருக்கின்றனர். இக்கற்பனை யப்புகழேந்தியாரது கனத்தைக் குறைக்குமென வறிந்திலர்போலும். அந்தோ! இவர்க் கப்புலவரிடத்தில் வைத்துள்ள வபிமானம் வெகுநேர்த்தி! வெகுநேர்த்தி! வித்து

வான்களாயினோர் ஒருவரையொருவர் வெல்லவேனும் அல்லது கொல்லவேனும் வேண்டில் தங்கள் வித்துவ சாமர்த்தியத்தாலேனும், தெய்வ பலத்தாலேனும், வேறெவ்வித மந்திரதந்திரங்களாலேனு மவற்றை முடிக்கின் அவர்க்குங் கனமுங் கீர்த்தியுமுண்டாம். இப்படி திருட்டுப்பட்டிகள் போலப் படுக்கையறையிற்போ யொளித்துக்கொண் டிருந்து நித்திரைவேளையிற் றலையிலோர் பெருங் கருங்கல்லைப்போட்டுக் கொல்வதினாலுண்டாகுங் கனமுங் கீர்த்தியும் எத்தகையவோ வறிகிலம். இத்தகைய கதையினை யெழுதியோர் "மகா பண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது" என்றுள்ள கதையினைப் பார்த்தேனும், அருணகிரிநாதர் பகழிக்கூத்தர் முதலாயினோர் வில்லிபுத்தூரார் வேப்பத்தூர் சங்கத்தினர் முதலானவர்களை வென்ற சரிதங்களைக் கேட்டேனு மெழுதலாகாதா? உலகாளு மகாசனோடு சமானமான தானத்திலிருந்து சகல மந்திராலோசனைகளையுங் கலைக்கியானப் பிரசங்கங்களையும் விளக்கிச் சிவிகை முதலிய பல சின்னங்களோடு வருவதும் போவதுமாயுள்ள ஓர் சமஸ்தான வித்துவானுடைய சரீரமானது சுகந்த புஷ்பங்களையுஞ் சிறந்த சாஸ்திரங்களையும் நவரத்தினக் கற்கள் பதித்த கணையாழி பவித்திர முதலிய மோதிரங்களையுஞ் சுமப்பதல்லது, ஒரு பெரும்பாரமானதும் ஒருவன் தலையையுடைத் துயிர்போக்குவதுமான கடுங்கருங்கல்லையுஞ் சுமக்கத் தகுவதோ? அன்றியும் புவிச்சக்ரவர்த்தியைப்போன்று கவிச்சக்ரவர்த்தியாயுள்ள கூத்தரது அரண்மனை வாயில் தோறும் எத்தனை காவலாளரிருப்பர்? அதிலவர் படுக்கையறையுள்ள வந்தப்புறத்திலே லக்ஷ்மி சமையன்றிப் புருடர் நுழையக் கூடுவதோ? அல்ல திவரொருவரே தனித்துக் காலம்பார்த்து ஒருவருக்குந் தெரியாதபடி இராப்போதிற் சென் றொளித்தனரெனினும் ஒரு பெரிய கருங்கல்லைச் சுமந்துகொண்டு பல காவல்களையுங் கடந்து செல்லத் திருட்டுப் புன்மாக்கட்கும் அசாத்தியமாயின், கல்வியினும் - செல்வத்தினும் - நாகரீகத்தினும் - பிரபுத்துவத்தினும் - பெருமையினும் - ஒழுக்கத்தினும் - கீர்த்தியினும் - தயாளத்தினும் - சிவகாருண்யத்தினும் - ஈச்சரபத்தியினும் ? பிரம்மக்கியானத்தினும் மற்றுமுண்டான வெல்லா மாட்சிமைகளினு மிக்காராயுள்ள இப்புலவரேறக்குச் சாத்தியமாமா? இத்தகைய பெருந்தகைமையார் அத்தகைய சிறுதகைமையான புன்றொழிலை செய்ய வுள்ளத்தினு நினைப்பரோ? ஓ அறிஞர்களே! அவ்வாறு நினைத்தனரேல் அவரென்ன கண்டகரா? சபலரா? மூடரா? மூர்க்கரா? நீசரா? நெறியிலாரா? மற்றெத்தகையரென நினைத்து இத்தகைய கட்டுக்கதையினை அவர்பொருட்டு மிக வபிமானத்தோடியை சட்டி அவரைக் கொலைசெய்யத் துணிவு மபாவி யாக்கினர். அக்கூத்தர்

புகழேந்தியின் பாடலிற் கொண்டுள்ள வியப்பைப் புறத்திற் காட்டாவிடினும் அகத்தின்கண் மதிப்புற் றிருந்தன ரென்பதும் இவரதை யுணர்ந்திலர்தன ரென்பது முண்மையேயா அவ்வுண்மை வேறு விதமாய்ப் பின் வருங் காதையிற் றெள்ளிதின் விளங்கும். ஆண்டறிஞக் கண்டபின் இத்தகைய கதைப்புரட்டர் முகத்தில் இனியதனைக் கையாடாதபடி ஒரு மண்டல மளவுங் காறியுமிக.

14. இவ்விருவகைக் கவிகளும் பாடியதற்குக் காதை யிங்ஙனமாக- இக்காதையை வேறுவிதமாய்ப் புரட்டிக் கூத்தர் மூன்றுமதிக்கு நான்குமதியாக வைத்துப் பாடியதி லிரண்டை யொழித்துப் "பின்னைமதிகண்டம் பேதைபெரியமதியுமிழந்தானே" என மாற்றி, அதற் கௌவையார் "ஒட்டா வொருமதிகெட்டாய்" என்றோதி யவரை யிகழ்ந்ததாகக் ஓதித்தங்கள் அறிவின்மையையு மழுக்காறையும் வெளிப்படுத்தினர். ஒட்டா வொருமதி கெட்டா யென்பதிலுங் காலமு விருத்தலைக் கண்டிலர். எவ்விதத்தேனு மவரை யிகழ்வதே சாலுமென இத்தகைய பொய்யும் பொருளையுமான வாக்கியங்களை நெடுநாள் விரதமிருந்து கற்றுக்கொண்டனர் போலும். என்செய்வர் பாவம்! நுண்ணறிவுடையோர் மற்றைய மூன்றடிகட்கு மாற்றிய வோரடிக்கு முள்ள சொற்சுவை பொருட்சுவைகளைக் கண்டு தெளிந்து, கூத்த ரொவ்வோரடிக்கு மொன்று மதிவைத்து வேறு பொருள்படப் பாடவெனினும் ஒன்றேனுந் தவிராது பாடவல்லா ரென்பதை யறியக்கடவர். ஆயினு மித்தகைய வல்லியப் புல்லர்க்குக் கூத்தர்மீதுள்ள வைட்டமியம் பெரிதன்றோ? அன்றியு மக்கூத்தர் "பின்னைமதிக்கெம்மதியமென்றன் பேதையிழக்குமெருமதியே" என மூன்று மதியைவைத்துப் பாடியதாகவுங் கூறுவர். இம்மூன்ற ஙக்கச் சததியற் றிரண்டேவைத் தப்பாடினரென்பது இனிய ஒவ்வி கேள்விக்கரிற பயிலாத சனர் கொள்கையென் றுணர்க.

நல்லறிவிற்சிறந்த நண்பர்களே! இப்புரட்டிலு மாற்றலும்புராதனத்தஎ இக்கால் நூதனத்தவாய அவ்விருவகைக் கவிகளும், பின்வரும் இருவகை வெண்பாக்களும் பாடியதற்குக் காதை இவ்விதமாகச் சில புல்லறிவிற் சிறந்த புலவர்களாற் கற்பித்துக் கச்சிறப்பதித்து வழங்கி வருகின்றன. அவை வருமாறு—(ஒருநாள் உறையூரிலே குலோத்துங்கசோழன் தன் சமஸ்தான வித்துவானான ஒட்டக்கூத்தனும், பட்டமகிஷியுடன் வாண்டியகாட்டி விருந்து ஸ்ரீ ஜயாகவுந்த புகழேந்திப் புலவரும் தொடர்ந்துவர, பாதசாரி

யாய் உலாவிவரும் வீதிகளிலொன்றில் ஒரு வீட்டுத் தெருத்திண்ணையில் இரண்டு கால்களையும் நீட்டிக்கொண் டுட்கார்ந்திருந்த ஒளவையார் சோழனைக் கண்டவுடன் ஒரு காலை மடக்கிக்கொண்டனர்; அருகில் புகழேந்திப்புலவர் வருதலைப்பார்த்தவுடனே மற்றக்காலையும் மடக்கிக்கொண்டனர்; அவர்களை அடுத்தாற்போல வந்த ஒட்டக்கூத்தனைக் கண்டவுடனே இரண்டு கால்களையும் நீட்டினர். இதனைக்கண்ணுற்ற ஒட்டக்கூத்தன்: அவமானமும் சீற்றமு மூண்டவனாய் ஒளவையாரை நோக்கி, "ஓ கிழவி! இவ்வாறு என்னை அவமதித்தது என்னை?" என, ஒளவையார், "அரசன் கிரீடாதிபதியாதலால் அவனுக்கு ஒருகாலையும், புகழேந்திப்புலவர் ஒரு மகாவித்துவானானமையால் அவருக்காக இரண்டுகாலையும் மடக்கினேன். நீயோ கல்வியறிவில்லா வீண்புலமை பாராட்டு மொரு மூடனாகையால் இரண்டு காலையும் நீட்டினேன்" என்று சொல்லி, "உண்மையாகவே நீயும் புகழேந்தியைப்போல் ஓர் சிறந்த வித்வானாயின் சோழனையும், அவனாட்டையுஞ் சிறப்பித்துச் சந்திரனுக்குப் பெயராகும் ஒரு பதத்தை யொருபாவினீற்றடியில் மூன்றிடங்களில் பிரயோகப்படுத்திப் பாடும் பார்ப்போம்" என்று சொன்னார்.) என்பதொன்று: (ஒளவையார் சோழனுடைய சபையினிடத்தில் தாம் இரண்டு கால்களையும் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பர். அக்காலையில் கம்பநாடர் அங்கு வருவாராயின் அவர் வரவைக்கண்டமாத்திரத்தில் இரண்டு கால்களையும் முடக்குகிறதும், புகழேந்திப்புலவர் வருவதைக்கண்டால் வலக்காலையும், சோழனைக்கண்டால் இடக்காலையும் முடக்குகிறதும், ஒட்டக்கூத்தரைக் கண்டால் இரண்டுகாலையும் நீட்டியபடி யிருத்தலும் வழக்கம். இதைப் பலமுறை ஒட்டக்கூத்தர் கண்டு, இந்த ஒளவையானவள், சிறந்தவராகிய கம்பநாடருக்கும், உனக்கும் செய்யும் மரியாதையைப் பற்றி யான் ஒன்றும் சொல்லவில்லை. புகழேந்திக்கு வலக்கால் முடக்குகைக்கும், எனக்கு இருகாலையும் நீட்டியபடி யிருத்தலுக்கும் யாது காரணம்? இதை நீ ஒளவையினிடத்தில் கேட்டறியென்று சோழராசனிடத்தில் ஒட்டக்கூத்தர் சொல்லிக்கொண்டனர். அவ்வாறு ஒளவையார் செய்வதைச் சோழராசனுங் கண்டு எம்பெருமாட்டியே ஒட்டக்கூத்தரும், புகழேந்தியாரும் ஒத்தபுலவர்களாயிருக்க, ஒட்டக்கூத்தருக்கு இரண்டுகாலையும் நீட்டியபடி யிருத்தலும், புகழேந்தியாருக்கு வலக்காலை முடக்கலும் உமக்குத் தகுதியன்றே யென்றனன். நான் செய்வது தகுதிதானென்று சொல்லி, இருவரையும் அழைத்துத் தமது கையால் சில குறிகளைக்காட்டி, இவற்றிற்கிணங்க ஒரு வெண்பாச் செய்யாயென்று ஒட்டக்கூத்தரைக் கேட்டனர்.) என்பதொன்று: இவ்விரண்டு

காதையுள் ஔவை நால்நீட்டியதினும், கவிகேட்டதினும், பிறவற்றினும் ஒன்றாக் கொன்று முரணுற்றிருத்தலை யூகித்தறிக. ஆயினுமிவ் விருவகைக் காதைகளும் விநோதரச மஞ்சரியினின் றெடுத்துத் தனியே அச்சிடப் பட்டனவாம்.

அவ்விநோதரசமஞ்சரி யென்னும் புத்தகமோ? ஏறக்குறைய நாற்பது வருடத்திற்கு முன்சென்னைத் துரைத்தன வித்தியாசாலையில் தமிழ்ப் பண்டிதரா யிருந்த அ. வீராசாமி செட்டியார் என்பவரால் அவரவ ராவசிகமாக வறியவேண்டிய விடயங்களான தெய்வக் கொள்கை - கற்றாய்ந்தொழுகல் - கற்பு நிலைமை - செய்ந்நன்றி மறவாமை - காலமேதவியல்பு முதலியனவைகளோடு வசிப்போர்க்கு வியப்பையு நயப்பையு முண்டாக்கத் தக்கவையான சில விநோதக் கதைகளையும் ஔவையார் - ஒட்டக்கூத்தர் புகழேந்தி - கம்பர் - காளமேகமாகிய பூர்வ வித்துவசிரோமணிகளின் சரித்திரங்களையுஞ் சேர்த் தச்சிடுங்கால், சாதி வைடம்மியமுஞ் சமயவைடம்மியமுமாய்ப் பொறாமை புறங்கூறல் முதலிய புன்னெறிகளைப் பூட்டினமாகப் பூண்டுள்ள சிலர் பன்னூல் பாடுபட்டு அவ்வித்துவ சிரோமணிகள் விஷயத்திற் கற்பித் தெழுதிவைத்த சில பொய்க்கதைகளையுந் தந்திட்டு வெளியரங்கமாக்கும் படிக்குத்தர, அக்காலத்துள் தானுமொருவராய்த் தாக்ஷிண்யத் தலையேறப் பெற்றுங் கற்கண்டினூடு கல்லுப்பையுங் கலந்து வைத்ததுபோல் நிரவி அச்சிடப்பட்ட தொன்றன்றி அறிந் திலகு வாய்ந்துணர்ந்த அறிவுடையோரால் அங்கீகரிக்கத் தக்கவையன்றென்பது வெட்டவெளி. இதுபற்றியே யச்சிலவற்றைப்பற்றிக் கண்டிப்பதினால் ஒரும் பயன் யாது மில்லையெனக்கருதி விடுக்க விடுக்க, அவைகளைப்பின்னும் விருத்திசெய்வதற்கு அவ்விநோதரசமஞ்சரியின் கணுள்ள கற்பிதக்காதைகளை ஆதாரமாக்கிக்கொண்டு தெளிவிலா வறிவினராய் வித்தியாசாலைகளிற் கற்குஞ் சிறுவர்களும் பிறரும் வாசித்து நம்பியுழலுமாறு இடைவிடாதுபதித்தின்புறுகின்றனர். இவ்வினைத்தா னிவ்வாறு செய்ய வுடம்படினும் அவ்வித்தியாசாலைகட்குத் தலைவராயுள்ளார் அவற்றை யாய்ந்துள்ளபடி செய்வித்தற் கெண்ணாதோ வெனின், அவர்கள் திராவிடபாஷையிற் றேறாத ஆங்கிலேயர் என்செய்வர் பாவம்! அவ்வித்தியாசாலைத் தலைவரும் அவர்களனுமதிபெற்று இவ்விலாசப் பொய்க்கதைகளை வெளியரங்கஞ் செய்கிற வித்துவான்களும் "விளையாட்டாக்கவிதை தனை விரைந்துபாடி - தெட்டித் தேகோவறிவில்லாத்துரைகளுண்டு - தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே," எனறபடி விளங்கியிருக்கின்றனர். என்செய்வது? இப்பொய்க்கதைகட் கெல்லாம் அக்கால் புராதனத் தாயகராயிருந்த அ. வீராசாமி செட்டியா

வரகூடிமாத்திரம் திராவிடபாஷையிற்றேர்ந்து அவருக்குத் தலைவரா யிருந்த கலம்பொருந்திய பெர்சிவேல் ஐயரவர்களே கேட்காது அவரிவ் வப்படிக் கற்பிட வறிதே யிருந்தனரென்றால், இக்காலிருக்கும் கண்மூடி களாவ துரைகள் யாதறிவர்? இத்தகைய பொய்க் கதைகளைக்கட்டும் புல வர்க்குப் பூரணத்தைச்சொனே: அவ்விநோதரசமஞ்சரி என்னும் புத்தகத்தில் அச்செட்டியாரால் பதித்திருப்பது (ஔவையார் நேசிசனாகச் சோழனு டைய சமஸ்தான வித்துவானாகிய ஒட்டக்கூத்தனைப் பார்க்கிலும் சோழன் மேலவிக்ரமஞ்சரீதனமாக வந்த புகழேந்திப்புலவரே மிகச்சிறந்தவரென மதித்திருந்தாள். அப்படியிருக்கச் சோழன் ஒருநாள் தன்சபையில் ஔ வையைநோக்கி, "ஔவையே! ஒட்டக்கூத்தன் புகழேந்தி ஆகிய இவ்விரு வர்களில் யார்சிறந்தவர்" என்றுகேட்டான். அதற்கு ஔவை தானே புகழேந்தியை உயர்த்திச் சொன்னால் சோழனுக்கு விரோதமாகத் தோற் றுமாதலால், அதைக்குறிப்பாய் எல்லோருக்கும் அறியச்செய்யவேண்டு மென்றெண்ணி, ஒட்டக்கூத்தனை நோக்கிச் சந்திரன் என்னும் அருத்தத் தைக்கொண்ட ஒருபதத்தை ஓர்பாவினீற்றடியில் மூன்றிடங்களில் பிரயோ கப்படுத்தும்படிச் சொன்னாள்.) என்பதே: இதில் - ஔவையார் தெருத் திண்ணையிலேனும் கொலுச்சபையிலேனும் தமது கால்களை நீட்டிச் சொ ன்னதாகக் காண்கிலம். கைகளை நீட்டிச் சொன்னதாகவே கண்டுளோம். இவ்வாறு கைகளைநீட்டிச் சொல்லியதில் ஔவை கூத்தரைப்பார்க்கிலும் புகழேந்தியே சிறந்தவரென மதித்துத் தாமே யவர்மீதிரங்கிச் சொல்லிய தாக விருக்கினும் ஒருவாறுபொருந்தும்: குலோத்துங்கசோழன் தனக்குப் பிதாவும் - போதகாசிரியரும் - மந்திராலோசனைத் தலைவருமாயுள்ள கூத்தரை, முன்னர்தனக் கிளவரச பட்டாபிஷேகஞ் செய்தகாலத்தில் அவர் தன்னை வாழ்த்துதலாக

"அலைகடை மணி யமையாய் லகிலமெங்கு
நிலைக் குடையைத் தரித்தபிரான்"

என்று பாடியபோது ஆசிரியர் தன்னைத் துதிப்பது நீதியல்லவென்று விரைந்து

"[illegible]தனிலைத்திற்
...
பாடும் புலவர்ப பணி[illegible]கொண்டகூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென்றேயெனைச் சொல்லுவரே."

என்றவரைத் தானே துதித்துப்பாடி அதனை முடித்த பத்திமையை ம

ந்து அவரெதிரிலேயே மரியாதையின்றி "ஒட்டக்கூத்தன் புகழேந்தியாகிய இவ்விருவர்களின் ஆர் சிறந்தவர்?" என்று கேட்டன னென்றால் இது கல்வியறிவில்லா மூடரும் நகைப்பதற்குரியதா? அல்லது சோழனுக்குத் தன் தாயினையவளவிற் சிறந்து உயர்ந்தருளான புகழேந்தியைச் சிறையிலிட்ட காரணத்தால் கூத்தர்பால் முன்னிருந்த பக்ஷமே குறைந்து மரியாதையற்றுக் கேட்டனனெனினும், அஃதுணர்ந்த வம்மையார் "நாமே புகழேந்தியை யுயர்த்திச்சொன்னால் சோழனுக்கு விரோதமாகத்தோற்றும்" எனவெண்ணுதல்வேண்டுமே? இஃதென்ன திக்கொன்று முரணுமன்றோ? இப்பொய்க் கதையைப்பற்றி அ. வீரசாமி செட்டியாருக்கு அதியாவசியமில்லையாயினும், இதைக்கற்பித்துக்கொடுத்த அய்யர் தாமதீனியும் அவர்க்கக்கால் தமிழ்க்கூடாததா யிருந்தபோதும், ஆன்றவருக் கதியாவசிகமா யிருந்தவை கம்பருக்குரிய இவ்வகைக் கற்பனைக்கதைகளே யாமென்பதற்கு அவரவற்றிற் சித்திரித்துள்ள சில கதைகளே சான்றாம்.

இப்புராதனப் பொய்க்கதையின் றன்மை இம்மட்டில் நிற்க, மேற்கூறிய நூதனப் பொய்க்கதை யிரண்டின் முதற்கதையில் ஔவையார் கூத்தரை நோக்கி, "புகழேந்திப்புலவர் ஒரு மகாவித்துவானாகையால் அவர்க்காக இரண்டுகாலையு மடக்கினேன், நீயோ கல்விநிறைவில்லா வீண்புலமை பாராட்டுமொரு மூடனாகையால் இரண்டு காலையு நீட்டினேன்." எனக்கூறியதாகப் புகழேந்தியை யுயர்த்திக் கூத்தரை தாழ்த்தியதில் அவரடைந்த பெருமையென்னே? இவரடைந்த சிறுமையென்னே? அப்புகழேந்தி கூத்தரால் ஆறுமாதமளவுஞ் சிறைச்சாலையி லடைபட்டு அதிலவருந்திரவால் கீர்த்தரு மாழாகசரியும் அதற்கேற்ற வுப்பும் பெற்றுச் சீவித்திருக்கச் சகியாது இதுவுங் கன்மானுசாரமெனவெண்ணி அவ்வழியிற் றண்ணீர்க்குப் போகிற ஸ்திரீகள் கேட்க இதவான பாடல்கள்பாடி அதனவர்கள் கொணர்ந்து தந்த உண்டியைப் புசித்துழன்றது மறைந்துபோமா? இரண்டாங்கதையில் "ஔவையார் சோழனுடைய சபையில் இரண்டுகால்களையு நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பார். அக்கால் கம்பநாடர் அங்குவருவாராயின் அவர் வரவைக் கண்டமாத்திரத்தில் இரண்டுகால்களையு முடக்குவதும் ஒட்டக்கூத்தரைக் கண்டால் இரண்டுகால்களையு நீட்டியபடி யிருத்தலும் வழக்கம்" எனவும், இதைப்பலமுறை ஒட்டக்கூத்தர் கண்டு சோழனை நோக்கி, "இந்த ஔவையாரவன் சிறந்தவராகிய கம்பநாடருக்குச்செய்யு மரியாதையைப் பற்றி யான் ஒன்றுஞ் சொல்லவில்லை. எனக்கிருகாலையு நீட்டியபடி யிருத்தலுக்கு யாதுகாரணம்? இதை நீ கேட்டறி," எனவும் பிரார்த்திக்கலானார்— அக்கம்பர் தானபாடிய இராமாயண

முன்னிலையில் கூத்தரால் சினக்கப்பட்டும், அஃதுணர்ந்த சோழராஜனை அழைக்கவரப்பட்டும், அக்கால் வேளாளராலும் வன்னியராலும் தான் பெற்றிருந்த விருது முதலியன இழக்கப்பட்டும், உடனே கட்டிய கோவணத்தோடே அயலூருங் காருடனுஞ் சொல்லாமலோடப்பட்டும், இரண்டொருநாள் குடிக்கத் தண்ணீருங் கிடைப்பதரிதாகி உதராக்கினியால் வேகப்பட்டும், அக்கால் செட்டிவீட்டினுஞ் செக்கான்வீட்டினும் அவலும் பிண்ணாக்கு மிரக்கப்பட்டும், அவையுங்கிடைக்காது ஒருழவன் தனக்கென வைத்திருந்த பழங்கஞ்சி தரக் குடிக்கப்பட்டும், அவனு லிடைக்குந் தலைக்கு மிரண்டுமுழ முண்டுகளைப்பெற் றுடுக்கப்பட்டும், அப்பாலோர் பெண்பாலுக்கு மட்சுவர்கட்டி நெற்கூலி வாங்கப்பட்டும், மற்றொரு தாசியிடம் பாடலின்பொருட்டுப் பொன்பெற்று அவளை வஞ்சித்த முன்னிலையில் ஒளவையால் அடா! ஆர்க்குமாகாத வலங்கைணமே: அடா! எமனேறு மெருமைக்கிடாவே: அடா! சலதிவாகனமாகிய கழுதையே: அடா! கூரையில் [...]த குட்டிச்சுவரே: அடா! குலராமன்தூதாகிய குரங்கே: என வையப்பட்டும், பின்னர் சேரநாடு சென்று அந்நாட்டினரால் கள்ளனெனப் பிடிக்கப்பட்டும், அச்சேரநாட்டரசன் செய்யும் சிராத்தத்தில் யாசகம் வாங்கப்போன சமயத்தும்— அன்றுநீங்கி மீட்டுஞ் சோழநாடடைந்து வேளாளர் பொருட்டுத் திருக்கைவழக்கம்பாடிப் பிரசங்கித்த காலத்தும்— அவர்களவையில் முன்னர் கூத்தராற் கழிக்கப்பட்ட இராமாயணத்தை அரங்கேற்றிய வேளையினும் இன்னுமித்தகைய பலவமையத் தெல்லாம் அவ்வேளாளையாற் பலவாய் நிந்திக்கப்பட்டும், அவ்வேளாளர் பொருட்டு மும்மணிக்கோவைபாடி ஓர்வித்தவ சிரோமணியாகிய தாசியால் அவமானங்கொள்ளப்பட்டும், இக்கூத்தரிறக்க ஓர் நிமைக்கவிபாடித் தானே மாண்டு பின்னர் தன் மகனது வேண்டுகோளால் இவராற் பிழைக்கப்பட்டும், அப்பாலம்மகனாலேயே தானெழுதுரையனால் அவமர்த்தியு டையப்பட்டும், இப்படியிலை பலவாய வெத்தனையோ துன்பங்களெல்லா மெய்தப்பட்டுழன்ற காதையெல்லா மறைந்துபோமா: இத்தகைய பொய்ச்சரித்திரக் கட்டியோர், சற்குணசீலராகிய புகழேந்திப்புலவர் கூத்தனுரைக் கொல்லவேண்டி ஓர் பெருங் கருங்கல்லைச் சுமந்து கொண்டுபோய் அவர் படுக்கையறையி லொளித்திருந்தனரென ஓர் போலிக்கதை கட்டிய மூடரினும் பெருமூடர்போலும். இவர்கட்கேற்ற கேடென்னையோ? அந்தோ! இரண்டொன்றும் முடிந்து தலையிலகப்போட்டு வெட்டும் கோறத்தண்டனைக் கதிகாரியான கூத்தரே கல்விநிறைவில்லா விண்புலமை பாராட்டும் ஒரு மூடராகுல், இதனினும் தாழ்ந்த கொய்தற்றண்டனைக்குக் குட்டற்றண்டனைக்கும் அதிகாரிகளான வில்லிபுத்தூரரும் பிள்ளைப்பாண்டியரும் யா

தாருவர்! இத்தகைய தொழில்களைத் தங்களுக்கிளைத்த கவிகள்பாற் செ[illegible]லுத்தத்தக்க அதிகாரிகளென்பதனால் அவர்கள் கவியரசின் கீர்த்தி ஒ[illegible]றுக்கொன்று மேலாமெனல் கருத்தேயன்றோ? இடைவிடா திருவேதொழிலாகப் பொய்க்காதைக ளெழுதப்புகும் புல்லர்கள், இத்தகைய சா[illegible]றுகளைன்றி மேல் செய்யுட் சான்றோவொரு மெய்க்காதையைக் கண்[illegible]டேனும் இனி யிவ்வாறனவினைத் தொழில்களை இயற்[illegible]துயவரா? ஒருக்காலு முய்யார்; அவர்கள் முடிவிலுய்யப் பெறுதல் உல[illegible]ா சீரையமே. ஔவையார் தமது கால்கீட்டி நடத்திய காதை வேறாக இ[illegible]வாபாசப் பொய்க்கதையையே தாபிக்குமாறு இனியொருகால் வேறொரு செய்யுட் சான்றாக ஓர் கள்ளக்கவி யுதிக்கவு நேரும். ஆயினுமக் கள்ளக்கவி யித்தகைய சான்றாகட்கு முன் தாம் தலையெடுத்த வரிதெனக் கருதி நாணி உதித்தவிடத்திற்றானே உருக்குலைந்தொழிக.

ஒ கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த கனவான்களே! ஒரு பாவினீற்றடியில் மதியென்னும் பெயரை வேறு பொருள்பட மூன்றுவைத்துப் பா[illegible]டச் சத்தியற்றவரா அற்ப கவிகளைக் கண்டால் இரண்டொன்றாய் முடிக்து [illegible]லையிறங்கப்போட்டு வெட்டுவர்? அன்றியும் தாழ்கவிஞர் தலைசாய்த்துத் தக்கோர் தம்பால் நன்மையினூற் நிறைவாங்குங் கவிச்சக்ரேசனாகுவர்! அவ்வாறு மூன்று மதிவைத்துப் பாடுதல் [illegible]திவில்லா மோழைக்கு முற்றாத காரியமன்றே: அச்செய்யுளி னீற்றடியி[illegible]களை யூன்றிச் சிந்தித்தமாத்திரமே கல்வியுணர்வில்லாக் காந்தையரும் இ[illegible]வொரு மதி புரட்டப்பட்டதென உணர்வார்களே: இல்லையே [illegible]ந்தகலத்திற் கொட்டுவைத்துப் பற்றுவிப்பதுபோல ஒருபதிப்பில் "பிள்ளைமதிகண்டம்பேதை" என்றும, மற்றொருபதிப்பில் "பிள்ளைமதிகண்டப்பேதை" என்றும், வேறொருபதிப்பில் "பிள்ளைமதிகண்டேபேதை" என்றும், பின்னொரு பதிப்பில் "பிள்ளை மதிகண்டெ[illegible]பேதை[illegible] என்ற மொருவாறின்றிப் பலவாறாய்ப் பிதற்றிப் பதித் தழிவதேன்? இத்தனைப் பேதையு ளோம்புலனுகர்ச்சியற்ற ஐம்பேதை யொன்றில, அதுதாமே யாகவின். உள்ளதை மாற்றி இல்லதைப் புணர்[illegible]ம் புல்லர்க் கொருவாரோ? பலவாறே: ஒட்டா வொருமதியென்ற பிதற்றவ[illegible], [illegible]ட்டாயென்[illegible] ஔவை வைக்கச்சொன்ன மூன்றில் அவரொன்றை [illegible]ட்டதற்கு நே[illegible]கவைத்து, ஒட்ட[illegible]வொருமதிவிட்டாய் எனப்பிதற்றலானார்தா? கெட்டாயென்றால் மாத்தி[illegible]தானே[illegible]இவர்களீடற்ற விழிகுலக்கீர்த்தி எங்கும் பொங்கா நிற்கும்? ஆ க[illegible]ர்க[illegible]ளவ்வம்மையார் "நீயோ கல்விநிறைவில்லா வீண்புலமைபாராட்டு[illegible]மாருமூடன்" என

சசெல்வியுளாரேல், அம்மாத்திரையிலேயே அவர் தமக்குச் சனதனப் பாலூட்டி யாட்கொண்ட கலைவாணியினமிசத்தராயினு மாகுக வென்று அவரது நீட்டிய கால்களிரண்டையு மீர்த்து மேலேறத்தூக்கி அப்புகழேந் தியின் [illegible]லேயே கற்பாறைமீது செற்போரைவாரி மோதுவதுபோ லவன் றொரு நிமைக்குட் குடருசெசுவிட்டுச் சிதைய மோதுவர்? இவர் முன்னோன் சூரபன்மன் குமாரனாகிய அக்கினிமுகனுக்குத் துணைப்படையாகவெ தெதிர்த்த ஓர் வீரமாகாளியைக் கூந்தல்பிடித் தீர்த்துச் சுழற்றி ஆகாயத்தெறிந்து பின்பவளடைக்கலப்புக விடுக்க மரபிற்பிறந்ததன்றி, அக்காளியோர்கால தாம்பாடிவரும் பிரபந்தத்திற்குப் பணிப்பெண்ணாயிருந்தபோது அப்பணி யிற் குறைநேரச் சினந்து அவள் தாடைபிளக்க வறைந்த தறுகண்வீர ராதலின், அவருடைய தயாரசத்திற்கோ? மற்றோர்கால் பல பெரியோர் களாலுக் தமக்குத் தமது மரபினர்க்கும் பொன்னுலகோர் பூமாரிபெய்யச் [illegible]ரச்சின்னாசனாதிபதிகளென்னும் பெயர்தரப் பெற்ற சிறந்த காதையொன் றும் போதுமே! இக்காதையில் தமது மரபினர் பரிசாக வளித்த "ஒன்றல் லவல்ல" ஆயிரத் தெண்மருடைய அறுதலையு முடலுமொட்டப் பாடிய சரணம் புலப்படக் கூத்தனென்னு மியற் பெயரை ஒட்டக்கூத்தனென் னும் விசேஷணத்தாற் சிறப்பித்துப் புலவெரியோர்களால் இன்று மழைக் கப்பட்டு வருதலை யாராயுமிடத்து, கல்வியறிவில்லாக் கயவரும் அவனை நினைக்குந்தோறு முளைமூ முடலு நடுங்குவார்களே: அவனைக் கல்வியறி வில்லா வீண்புலமை பாராட்டு[illegible]ரு மூடனென்றும் ஒட்டாவொருமதி கெட்டா னென்று மெழுத[illegible]ந்த உள்ளமுங்கரமு மெத்தகையவோ? அன்றியுங் குலோத்துங்க சோழ[illegible] "[illegible]ம்புலவர் பணிகொண்ட கூத்தன் பதாம்புயத்தைச் சூடுங்குலோத்துங்க சோழன்" என் றெழுதிய வணக்கஞ் செய்திருக்கின்றா னென்பதையும், அப்புகழேந்தி கூத்தராலெக் குள்ளாகிச் சிறைக்களிருந்ததை நேரிற் கண்டே தனது பட்டமகிஷியின் சீதனப் பொருளானவருக்கு இங்ஙன நேர்ந்ததேயென்று [illegible]மானம் சற்றுமில னாய்க் கூத்த ராணையை மறுத்தழிக்கக் கூடாதவனாயிருந்தா னென்பதை யும், மீட்டவர் "மானிற்குமோ" என்று பாடிய பாடலுக் கப்புகழேந்தி எதிர் பாட்டொன்றோட்டி விரோதித்துப் பாடியபோது அறுசுவை[illegible] தி யோடகூடிய அன்னபானாதிகளை விலக்கி அழா[illegible]சியு மதற்[illegible]ற வப்பு மளிக்கக் கட்டளையிட்டதற்கு முகங்கோணாமல் அவருடை[illegible] வாக்கினை யைத் தடுக்கக் கூ[illegible]தவனாய்ச் சென்றா னென்பதையும், தன் பகையரசர் பொருட்டே[illegible]பரிபா[illegible]த்தின் பொருட்டேனும் வெளிக்கொள்ளுங் கால் தனதுரகசியமை[illegible] கூத்தனையே பிரதிநிதியாகவைத்துச் செல்லும்

வழக்கத்தினையும், இவையெல்லாமன்றி மேல்வருஞ்சாதையின்படி ர்கால் குடந்தையம்பதியி லவருக்குக் கொலைப்பழி நேர்ந்தபோது அப்பழிக்குத் தனதரசிளஞ் சிங்கமாகிய குமாரனை அனுப்பி யிருக்கின்றன னென்பதையும் இப்புல்லரு மறிந்தபடியா யிருக்க: அத்தகைய வரசனெனிற் கற்றறி மூடருங் களியாட் டயர்வோருமாகிய கம்பரையன்றி வே கவிஞரைக் கனவினும் பழியாத ஔவைப்பிராட்டியார் கூத்தரை மூடனென்று சொல்லிப் பின்னரிம் மூதூலகில் மூரிபெற்றிருக்கக் கூடுமோ? ஆகலா வித்தகைய பெரியோனை இழித்துரைக்குமவரைக்காணில், அவர்க ளக்குலக்கருது நெஞ்சினும் உரைக்கும் வாயினும் எரியிட்டிருக்கிய எஃகின் குழம்பை இடைவிடாதெடுத்து விடுக. அப்பா லந்தக னிருக்கின்றான்.

15. இவ்விருவகை வெண்பாக்க ளுண்டானதற்கே திங்ஙனமாகச் சிலர் ஔவையார் மதுரைச்சங்கப்புலவரை வெல்லுங்கித்தம் அத்தகைய வசைகளைக் காட்டிப் பொருள்கேட்டனரெனவும், அதற்கவர்கள் "இவ்வளவு கண்ணுடையாள்" என்னுஞ் சிந்தின்பவெண்பாவால் விடையளித்தனரெனவும், பின்னர்தாமே "ஐயமிகிமின்" என்னும் பேரின்பவெண்பாவாற் பொருள்கூறி அவர்களை யவமானப்படுத்தினரெனவும் வழங்கி வருகின்றனர். அவரோடு மச்சங்கத்தின்ரை யவமானஞ் செய்வான் பொருட்டுச்சென்ற இடைக்காடருந் திருவள்ளுவரு மிருக்கத்தாமே பொருள் விரித்தாரென்பது மரபுவழுவாயிருத்தலின் அது பொருந்தாது. சிலர் புகழேந்திமாத்திர மவ்வம்மையாரிடம் அவ்வாறு கேட்கவு மவர் பேரின்ப வெண்பாவாற்பொருள் வழங்கின ரென்பர். இவ்வா றவ்வம்மையார் தனியே புகழேந்தியைக் கண்டு கேட்கவும் அவர்தமக்குப் பொருள்கூறவு மேதேனுங் காரணமிலாதலாலும், சிற்றின்பவெண்பா பிரயோசனமற்றுச் சேட்சென்று நிற்றலாலும் இதுவும் பொருந்தாது. மேற்காதையிற் கூறியவண்ண மொருவா றனம் வேறுபட்டிருந்த புலவர் சிரோமணிகளின் திறத்தை அரசனுக் குணர்த்துமாறு சில சைகைகள்மாத்திர மவ்வம்மையார்செய்து இவைகட்குப் பொரு ளிருவரு மிருவகையாய்ச் சொல்லப் பணித்தனரென்பதும், அவ்வாறே யவர்கள் தனித்தனிச் சொல்லினரென்பதும் எவ்வாற்றினும் பொருந்தி நிற்பதன்றிச் சில பெரியோர்களா ன்னபாரம்பரியமாகவுங் கேட்டிலேம்.

16. செங்குந்தரைத்தையுட் கைக்கோளரென்பது த்தரெனும் மரபினர்க்கு காதியிற் பிராணுற்றந்த இயற்கைப்பெயர் குப் பொருள் "ஒழுக்கத்தின் கொள்கையோர்" என்ப. அவ்வொழுக்கம் தகைவா

ழுக்கம் வலங்கையொழுக்கம் என விருவகைப்படும். இவ்விருவகையொ
ழுக்கத்தினது மரபின ரேற்றுளோராதலால் பிற்காலத்தார் "தந்துவா
யர்-காருகர்" என்னு மிருபெயருடனொட்டிச் செயற்கைப்பெயர்களையுங்
கற்பித்து வைத்தனர். இக்கற்பிதப்பெயர்கள் பூரவந் தாண்டவராயப்புலவ
ரென்போரால் அவ்வச்சாதியார் காவலிலமைக்கோர்த்த நூதனப்பெயர்க
ளைச்சேர்த் தச்சிட்ட திவாகரத்தி லொழிய, அதற்கு முன்னுள்ள கையெழு
த்துத் திவாகரத்தினும் பிங்கலந்தை நிகண்டு முதலிய மற்றக் கருவிநூல்
களினும் சுருதி மிருதி யிதிகாசபுராண மாதியவைகளினுங் கிடையா.
இத்தகைய நூல்களிற் கிடப்பனவெல்லாம் பிரமபரம்பரையராகிய அந்தணர்
அரசர் - வைசியர் - சூத்திரர்- என்னு நால்வருணத்தர் பெயர்களுஞ் செய
ல்களும், அந்நால் வருணத்தர் நம்முன் மாறியதனு லுண்டான அனுலோ
மப்பிரதிலோமராதிய சங்கர வினத்தர் பெயர்களுஞ் செயல்களு மன்றிச்
சிவபரம்பரையரைப்பற்றி யாண்டும் யாதுமில. இச்சிவபரம்பரைய ரெ
ன்போர் ஆதிசைவராக விளங்குஞ் சிவாசாரியர்களுஞ் செங்குந்தர்களுமே
யேறுறவருமலர். இவருட் சிவாசாரிய ரந்தணப்படிவத்தராயுஞ் செங்கு
ந்தரரசப்படிவத்தராயும் விளங்குவர். இவர்கள் தேவப்பிராமணர் தேவக்ஷ
த்திரிய ரெனவு மழைக்கப்படுவர். கைக்கோளர்க்குச் செங்குந்தரென்னு
நாமம் ஆதியி லுமாதேவி யருளித்த குந்தப்படையால்வந்தது. இக்குந்தங்
கைக்கோளருக்கெல்லாம் பொதுவாயினும் அவருளரசப்படிவ மேற்றோர்
க்கே சிறப்பாம். பூர்வம் [illegible] இலக்கத்தொன்பது தேவக்ஷத்திரி
யர்களா யிருந்து பின்னர் தமது சேட்டபிதாவாகிய சுப்பிரமணியக்கடவு
ளாஞ்ஞையால் மனுகுலத்தில் மானவ க்ஷத்திரியர்களாகி அக்குலத்தி லக்கட
வுள் கட்டளையா லவதரித்த தேவமாதர்களைத் திருமணஞ்செய்துகொண்டு
தங்கள் வழித்தாய் ஆயிரத்துத் தொளாயிரவரைத் தந்தன ரென்பதும், அவ்
வாயிரத்துத் தொளாயிரவர் சந்ததியோரே அக் கைக்கோள ரல்லது செங்
குந்தரென்பதும் புராண சித்தாந்தம். இவர்களுள் தனித்தனி யந்தணரர
சர் வைசியரென்னும் வேறுபாடின்றி அவர்களிருவகை யொழுக்கங்களை
யு மொற்றுமையோடு மேற்றுச் சாதிசமயாசார நிலைகளிற் றவிருநரு
நிற்போரைச் சகசவினத்தரென்றும் தவிர்ந்து நிற்போரைச் சங்கரவினத்
தரென்று மழைக்கப்படுவதன்றி, அனுலோம பிரதிலோமாதிய வருண
கள் கிடையா. ஆதலின் வேதமோதி வேள்விபுரியுந் தகைமை [illegible] தந்
தவாய்க் கைக்கோளரெனவும், படையின்று புவிபுரக்குந் தகைமையரைச்
செங்குந்தக் கைக்கோளரெனவும், மறங்கடந்து வணிகஞ்செய்யுந் தகை
மையரைத் [illegible] கைக்கோளரெனவுங் கூறினும்: இஃதிங் குணமாகச்

சில நிவிலிகள் "கை" என்பதற்கு ஒழுக்கமெனவும் "கைகோள்" என்பதற்கு ஒழுக்கத்தின் கொள்கையெனவுங் கூறிப் பின்னருயர்திணைப் பன்மை விகுதி சேர்த்துக் "கைக்கோளர்" என்னுங்கால் ஒழுக்கத்தின் கொள்கையோரெனப் பொருள் படுத்தாது, நெய்வாரி, வோர் சாதியாரெனப் பொருள் படுத்துவர். கைக்கோள ரென்னு மிப்பெயர் முதனிலைதிரிந்த தொழிற்பெயரடியிற் பிறந்த கோளரென்னும் பெயர்ப் பகுபதவ் கையென்னும் பலபொரு ளொருபெயர்ச் சொல்லோடு இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலையாய் வைதிக நல்லொழுக்கத்தைக் கொண்டோரெனப் பொருள்பட்டுச் சந்தித்தவழி அந்தணர்க் கொப்பாகவும், ஈட்டிமுதலிய படைவகுப்பைக் கொண்டோரெனப் பொருள்பட்டுச் சந்தித்த வழி அரசர்க்கொப்பாகவும், எழாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராய் கையின்கணெழுந் தொழிற்பயனையே கொண்டோரெனப் பொருள்பட்டுச் சொல்லெச்சப்புணர்ச்சியாய்ச் சந்தித்தவழி வைசியர்க் கொப்பாகவு நிற்கு மென்ப திலக்கணவிதி அன்றியுமிக் கைக்கோள ரென்பதற்கு உபசுப்பிரமணியராகிய வீரவாகுதேவர் மரபின ரென்னும் பொருள் தோன்ற, வீரவாகு என்பவற்றில் "வாகு" என்பது கையெனவும் "வீரம்" என்பது கோளெனவும் இவ்விரு கூற்றும் புணர்த்திய தொடர்மொழியில் "அர்" என்னு முயர்திணைப் பன்மைப் பலர்பால் விகுதிசேரக் கைக்கோள ரென்னும் பெயர் மருவியதென்பது மற்றொருவிதி. இவ்விதிகளை யெதனையு நோக்காது உழுதற்றொழிலினைப்போல நெய்தற்றொழிலுஞ் சிறுபான்மை வைசியர்க்கும் பெரும்பான்மை சூத்திரர்க்குமே யுரித்தாய் கைக்கோளருட் சிலர் சீவனார்த்தம் அறத்தாறற்ற தொழிலென வல்லைகையேற்றிருப்ப நெய்வாரிலோர் சாதியாரெனப் பிதற்றுவரேல், வணிகர்-வேளாளர்-வன்னியர் சாலியர்-செம்படவர்-மறவர். குறவர் முதலாயினோருள் எந்தச்சாதியார்? இவர்கள் யாருந் தத்தஞ் சாதித்தொழில்களோடு இந்நெய்தற்றொழிலினையுங் கையாடிவருகின்றன ராதலின், நெய்வார்க்கு நிகண்டில் "பொருந்தரேவேதனர் பேற்றுக்காருகர்நெய்வார்பேர்" என்றிருப்பதன்றிக் கைக்கோளரென்றிருப்ப யாண்டுங் காண்கிலம்.

முன்னோர்களானதேயத்தரு பிந்துதேயபாஷைகளிற் றேர்ச்சிதோரு மாக்ஷ வீரமாமுனிவென்பவர் திவாகரம் நிகண்டு பிங்கலந்தைமுதலியகருவி நூல்களைக் கொண்டுசெய்த ஓர் சுத்தத் தமிழ்ச்சதுரகராதியானது பலவித்துவசிரோன்மணிகளாற கொண்டாடிக் கையாடப்பெற்றிருக்கச் சின்னாட்கு முன் சாதித்துவேஷிகளுஞ் சமயத்துவேஷிகளுமாயுள்ள சில போலிவித்துவான்களால் தங்கள் கொள்கைக்கிணங்கப் புரட்டிய பெயர்களையும் பொருள்களையுஞ் சேர்த்தச்சிட்டுவழங்குவதும் பேறறிவற்ற பேதையருங் கண்டேளனஞ்செய்யத்தகுவதுமான மற்றோரகரத்தப் பேரகராதியில் கைக்

கோளரென்னும் பெயரைச்சேர்த்து அப்பெயர்க்கு நெய்வாரிலோர் சாதியாரெனப் பொருள்படுத்திப் பதித்திருப்பதை நோக்கிய விவேகசூனியருட் சிலர், சிறுவோரா லோதப்படு நூலாதாரமுதலிய சிறுபுத்தகங்களினும் பெரியோரா லோதப்படும் பாகவதமுதலிய பெரும்புத்தகங்களினும் ஏனையபல நவீனநூல்களினும் நேரேதுவாய்க் கைக்கோளரென்னும் பெயரைப்புணர்த்தி, நெய்வாரெனப் பொருள் விரித்து, அந்நெய்வார் தீண்டப்படாதோரென வரைந்து தங்கள் வெள்ளறிவின்றன்மையையும் தங்களீன சாதிச் செயல்களையும் வெளிப்படுத்துவர். இதற்குச்சான்று சிவக்கியான சுவாமிகளால் தமிழிற் செய்யுள்ரூபமாக மொழிபெயர்த்துள்ள காஞ்சிப்புராணத்தை வசனரூபமாகச் செய்வான் றொடங்கிய ஓர் புன்கவி தனதறிவின்மையினாலோ அல்லதப் புல்லியர்போதெறிக் குட்பட்டோ—தலவிசேடப் படலத்தில்,

விப்பிரர்கண்முதனூல்வர்சங்கரர்நெய்தொழிலர்பயிர்வினைஞர்செக்கார்
செப்பிடையர்தச்சர்கொல்லர்பொன்வினைஞர்தேவகணிகையர்கண்கூத்தர்
விற்புருவப்பாத்தைமுதலோர்தெருக்கள்கலப்பின்றிவெவ்வேறாகிப்
பொற்பமண்டகண்ணெழுங்காய்மதிக்கணிசெய்கதிர்களெனப்பொலியுமாங்
[கண்

என்னுஞ் செய்யுளின் கணுள்ள "நெய்தொழிலர்" என்னும் பதத்திற்குக் கைக்கோளரெனப் பொருள்படுத்தி யச்சிட, அதுகண்ட வம்மரபினருட் சிலராலவர் பன்முறை பாதகாப்புத் தாடனஞ் செய்யப்பெற்றுப் பின்னரது பதித்துள்ள வேடுகளிற் செலவானவைபோக மற்றையவேடுகளை யெல்லாங் கிழித்தெறிந்து புதுக்கிச் சேர்த்தனரெனக் கேட்டுளேம். அன்றியும் மற்றோர் பெருங்கவி யப்புராணத்திற்குப் பதவுரை யெழுதி யச்சிட்டு வெளியிடுங்கால் அந்நெய்தொழிலரென்னும் பதத்திற்குக் "காருகர்" எனப் பொருள்படுத்தி யிருப்பவுங் கண்டுளேம். இப் பெருங்கவிக்கு மப் புன்கவிக்கு முள்ள தாரதம்மியத்தை ஆய்ந்துணர்ந்த வறிவினையுடையோரே யறியத்தக்கது. இத்தகைய புன்றொழில்களைப் பலகால் நாணுதலின்றிச் செய்துவரும் புன்குல மாக்களையும் புன் கல்விச் செருக்கரையும்

கூர்த்துநாய் கவ்விக் கொளக்கண்டுந் தம்வாயாற்
போத்துநாய் கவ்வினா ரீங்கில்லை — நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு.

என்றும் பெரியோர் வாக்கியத்தினைப் பாராட்டி விடுக்க விடுக்க, என்கெ டவர் பாவம்!

[illegible]றுவதொன் றின்றியும் பெற்றேனே போலக்
கறு[illegible]கொண் டேலாதார் மாட்டும் — கறுவினாற்
கோத்தின்னா கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து:

என்றபடி தங்கற்பியற்கையாயுள்ள அவ்விழி தொழிலினின்று மொழி யார்கள். இத்தகைய சயவர்க்கு என்சொல்லி யென்னும்? இக்கைக்கோ ண்மரபினருட் பெரும்பாலார் சூரியவமிசத்தரான சோழராஜ பரம்பரை யொடுங்கவுந் தங்களரசு மாண்மையு மோய்ந்து குறும்பரசுங் கொடுங்கோ ன்மையு மோங்கி மழைகுன்றி விளைவஃகி வறுமை மேலிட்டமையால் ஒழு க்கம் வீரியங் கல்வி, செல்வ முதலியன குன்றி.

உடைப்பெருஞ்செல்வருஞ்சான்றோருங்கெட்டுப்
புடைப்பெண்டிர்மக்களுங்கீழும்பெருகிக்
கடைக்காறலைக்கண்ணதாகிக்குடைக்கால்போற்
கீழ்மேலாய்நிற்குமுலகு.

என்றபடிக் கிருக்கு மிக்காலத்து இக்கால வேற்றுமை யெவ்வெவற் றெய் வுழுத வெவ்வெவ் வுயிர்களுக்கு சேருவதும் பின்னர் நீங்குவதும், உடை மை-வறுமை-பெருமை-சிறுமை-மெய்ம்மை-பொய்ம்மை-நன்மை-புன்மை- முதலியன எச்சாதியருள்ளு மெச்சமயருள்ளுங் காலங்கொண்மைக் கொத்த படி யமைவ[illegible]ம் பின்ன ரழிவதும், கடவுள் பேதங் கலாபேதஞ் சமயபே தஞ் சாதிபேதமுதலியன பலவாயினும் அவற்று ளொவ்வொன் றொவ் வொர்கா லுயர்வதும் பின்னர் தாழ்வது மியற்கையென் றுணராது இவ்வா று சாதிவைஷம்மியமுஞ் சமய வைஷம்மியமுங்கொண் டழிகின்றனர். இவர்கட்கு சேர்க்கைக ளென்னையோ? பூர்வமிக் கைக்கோளருட் சிலவே ளைகள் தமது சிவஞானத்தின் பொருட்டேனுஞ் சிவதரும பரிபாலனத்தின் பொருட்டேனுஞ் சகிர்தமானகோ[illegible] கைத்தொழில் பெறக்கருதித் தங்கள சே வ்[illegible]ட பிராதிருவாகிய முருக[illegible]டவுளை வந்தித்தபோது, அக்கடவுள் மற்றய [illegible]ங் கணங்களையு முனிவ[illegible] க்கணங்களையு செய்தற்கருவிகளாகவுஞ் சிவ கணங்களை செய்வாராகவு[illegible] கொண்டு அவர்கள் வசிக்கு[illegible]டவளாகத்தின்க ண்ணெழுந்தருளி அத்தொழி[illegible] யக்கணங்களாற் செய்வித்துக்காட்டி. இத் தொழிலொன்றே யெல்லாத்தொழிலினும் பவமற்றதும் பலன்றருவது மான தொழிலென்று கூறி யாட்கொண்டன ரென்னு மைதிகத்தை நாள துகாறும் அம் முருகக்கடவு ளாலயங்களுட் சிலவற்றில் "[illegible]வாடுமுற்ச வம்" எனப் பாருளோ ரறியச்செய்யும் விழவின் விபவத்தையேனு மேன் கண்டு தெளிந்திலர்? அன்றியு மிச்செய்தற்றொழில் கைக்கோளர்க்குரிய சாதித்தொழிலாயின் உழுதற்றொழிலுங் காவற்றொழிலும் வேளாளர்க்

கும் வன்னியர்க்கு முரித்தாய சாதித்தொழிலெனக் க[illegible]ரண[illegible]த்தொழில்களையு மவற்றிற்குரிய கருவிகளையுஞ் சிறப்பித்து "ஏரெழுபது-சிலையெழுபது" என்னு நூல்களைச் செய்ததுபோலக் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தர் அந்நெய்தற் றொழிலையும் அதற்குரிய கருவிகளையுஞ் சிறப்பித்து - "தறியெழுபது" என்றொரு நூல் செய்யாது கைக்கோளரென்போர் செங்குந்தரென்னுஞ் சிறப்பு நாமத்தினை யுடையோரென்றும், அச்செங்குந்தர் தேவமானவ க்ஷத்திரியர்களாய்ச் செவ்வேளுக்குஞ் செம்பியர்க்குஞ் சுற்றத்தினரன்றிச் சேனைத்தலைவரு மாவரென்றும், அவர்க்குத் தொழில் பகைகளைந் துலகோம்ப லென்றும், அதற்குக் கருவியாயுள்ளது குந்தமாகிய வீட்டியென்றுங் குறிப்பித்து அவ்வேரெழுபதுஞ் சிலையெழுபதும் போல வறிதே கற்பனைவாயிலாயொழியாது வானோருங் கண்டதிசயித்து மலர்மாரி பெய்துவாழ்த்தச் சிரச்சிங்காதனமிட்டேச் சாரதாதேவி முன்னிலையிற் சத்தியவாக்காய் ஏன் "ஈட்டியெழுபது" என்னும் பெயரால் ஓர் நூல்செய்து; இந்நூலேனைய தெரிவில் நூல்போலாது தெய்வீக நூலென நிலைக்கவும், இருகூறு யிறந்து கிடந்த சிரங்களு முடல்களு மினிதி னொன்றியெழவும், ஏன் மீட்டும் "எழுப்பெழுபது" என்னுமோர் நூலினையு மியற்றி யருளினர்? இவையனைத்தையு மாய்ந்துணராதவர்களாம் அழுக்காறு கொண்டழியு மப்புலவர்க்கு இக்கொள்கை பூர்வங் கூத்தர்மீது மாத்திர மன்றி அவர் மரபின்மீதுங் கொண்டுள்ள வைடம்மிய மென்பதைப் பின்னு மிடம் பெற்றுழி விளக்குதும்.

இம்மரபினர் சிவகுமாரர்களாய் அவ்வாற் கைக்கோளரெனப் பெயர் பெற்றன ரென்பதையும், பின்னருமாதேவியால் "அயில்" அல்லது "ஈட்டி" என்னுங் குந்தப்படை பெற்றுச் செங்குந்தரென ஒரேதப் பெயருமடைந்தன ரென்பதையும், அக்கால் தேவக்ஷத்திரியராக விருந்த விவர்கள் பின்னர் தங்கள் பிராதிருவி னுஞ்ஞையால் மானுடக்ஷத்திரியராகிய மனுகுலத்தவரோடு கலந்து அம்மனுகுலத் தவதரித்திருந்த தேவமாதர்களை மணந்து பலபுத்திரப்பேறடைந்து அம்மனுகுலச் சம்பந்தர்களா யிருந்தன ரென்பதையும், அப்புத்திர வருக்கத்தினரே [illegible]னதுநாறுந் தனியே யோர் சிவபரம்பரையராய்ப் பிரம பரம்பரையான அந்தணராதிய முதன் மூவருணத்தினரது வைதிக லௌகிகத் தொழிலேற்று ஆதிசைவவந்தணரைப் போன்று ஆதிசைவ க்ஷத்திரியர்களா யிருக்கின்றன ரென்பதையும்,

உதிதருயித் திறல்வீ ரரியனைமே லம்மையுட னுறைந்த காதன்
பதமலர்கள் பணிந்தெழலு மவர்க்கண்டு பார்ப்பதியைப் பரிவா னோக்கி

நதியுமிரு திரளும்மதியின் மானமுங்கை யெனப்பெறுகம் மைந்த ரின்னோர்
புதியரலர் நந்திதனிக் கணத்தவரென் றன்கருதிப் பொருளாய் நின்றனை.

எனவும்,

தேவியதுகேட்டுமைந்தர்க்கயிலருளவவர்க்கெல்லாஞ்சிவன்வெவ்வேறு
தாவில்சுடர்வாளுதவிவியர்ப்பில்வருவோரிலக்கத்தனயரோடு
நீவிர்களுமொன்றிநங்கட்கிறைவஞ்சியசேயைநீங்கலின்றி
யேவலவன்பணித்தனசெய்தொழுகுதிரென்றனவருமிசைந்துதாழ்ந்தார்.

எனவும்,

ஆனகாலையிலாறுமாமுகமுடையமலன்
கோனவன்றனக்கருளுவான்மஞ்சைமேல்கொண்டு
தானைவீரனுமெண்மருமிலக்கருஞ்சார
வானுளோர்களுங்கணங்களுஞ்சூழ்வுறவந்தான்.

வந்துதோன்றலுமன்னவர்மன்னவன்மகிழ்ந்து
கந்தவேளடிபணிந்தனன்கைதொழுதப்பரவ
வந்தமில்பகல்விரதங்களாற்றினையதனு
லெந்தநல்வரம்வேண்டினையதுபுகலென்றான்.

என்றகாலையின்முகருமுகமுடையவனெந்தாய்
நன்றுபாரெலாமெனதுசெங்கோலிலேநடப்பான
வென்றிமொய்ம்பினனுதியாய்வீரரையெல்லா
மொன்றுகேண்மையிற்றுணைவராத்தருதியென்றுரைத்தான்.

மன்னனிவ்வகைவேண்டுகோள்வினவுறுவள்ள
லன்னவானனக்குதவுவமென்றருள்புரிந்து
மின்னைவாட்படைவீரமொய்ம்பன்முதல்விளம்புந்
துன்னுதானையந்தலைவரைநோக்கியேசொல்வான்.

கோற்றல்கூடிய[illegible]களும்மினுமெம்பா
லேற்றமேதகுமன்பினுனெழுகடற்புவியும்
போற்றவைகுவானீவிர்களாங்கவன்புடையே
யாற்றல்சான்றிடுதுணைவராயிருத்திரென்றறைந்தான்.

முழுதருட்புரிதருங்கடவுள்சொல்வினவியேமுடிவதில்லாச்
செழுமதித்தண்குடைச்சூர்குலந்தனையடுந்திறலினோங்கள்

பழிபடப்பாணுவின்வழிவருஞ்சிறுமகன்பாவகராகி
விழிதொழிற்புரிகிலேனெனமறுத்துரைசெய்தார்யாரும்வீரர்;

ஞானநாயகனவர்மொழிதனைக்கேட்டெம்முறைமறுத்தி
ரானதோர்பான்மையாளீவிர்மாறுடவராயவனிமன்னன்
ஞானநாயகருநற்றுணைவருமாதிர்பின்றலைவனேக
வானுளோர்புகழவேநோற்றுநீபக்கலில்வருதிரென்றான்;

ஐயன்வாய்மொழியினால்வீரமொய்ம்புடையகணதியாளோர்
துய்யமாணிடவராயத்தொல்லைநாளுடையதோர்சுதனமேற்று
மெய்யெலாம்வியர்வுறப்பதைபதைத்தேங்கியேவிழுமமிக்குப்
பொய்யரேம்பிழைபொறுத்தருடியாலென்றுபொன்னடிபணிந்தார்;

கமலமார்செய்யசேவடியின்மேற்றாழ்ந்துகைதொழுதுபோற்றிக்
குமரவேள்விடைதனைப்பெற்றுயானவரெலாங்கொற்றமன்னன்
றமர்களாயொழுகினர்சேமியம்புடையுடைத்தருமமூர்த்தி
யமரர்சேனைவலாயாங்கவன்பின்செலுமமைதியேபோல்.

இன்னணமவரொழுகுறலுமெம்பிரானுலகிறைத்தையைநோக்கா
நின்னுழைப்பெயரின்மற்றிவருநும்வேற்பெயர்நிறுவியாண்டென்
சொன்னயம்பெறமுன்[illegible]குந்த[illegible]தாகெனச்சொற்றிநற்று
யென்னகின்றான்மறைந்தன்[illegible]னிலும்பன்னொறுநவியல்பினின்றான்.

ஆயதோர்காலையின்முகமுகத்திறையவனுடல்வேற்கை
நாயகன்பொற்பதம்வந்தியாநிற்பநல்லருள்புரிந்தே
பாயபொன்சுடர்மணித்தேர்கையம்புரவியும்படைகளாறு
மாயிரும்பூதருந்தானுமக்கிலைதனின்மறைதலுற்றான்.

மறைந்தனன்குமரனேசமன்னவன்மகிழ்ச்சிகொண்டு
சிறந்திடுகரு[illegible]ரன்னுந்திருநகரசின்மேவி
யறந்தருமாடவீதியளப்பிலபுரிவித்தாங்கே
நிறைந்திடுவீரர்தம்மைநிலைபெறவிருத்தினனே.

ஆயவர்தங்கட்கெல்லாமரும்பெறலாக்கமுள்ள
தேயமுங்கரிதேர்வாசித்திரள்களும்வரிசைமுற்றுந்
தாயபல்சனங்களாருந்தொகுதியுமுதவித்தண்ட
நாயகமுதல்வராகநல்கினன்ஞாலமன்னன்.

அன்னதோர்காலந்தன்னிலரம்பையரனையராளு.
மன்னவர்தம்பாற்றோன்றிவளர்தலும்வாகைமொய்ம்பின்
முன்னவன்முதலோர்க்கெல்லாமுசுகுந்தவேந்தனந்தக்
கன்னியர்தம்மைக்கூவிக்கடிமணம்புரிவித்தான்.

அந்தமில்வன்மைசான்றவாடலம்பெயத்தோன்புட்ப
கந்தியென்றுரைபெற்றன்னகன்னிகைதன்னைவேட்டுச்
சிந்தையின்மகிழ்வாற்சேர்ந்துசித்திரவல்லியென்னும்
பைந்தொடிதன்னையன்பாற்பயந்தனன்பதுமமின்போல்;

அத்தகுபொழுதிற்பின்னையன்கனேசனகனென்னும்
புத்திரர்தம்மைமகல்இப்புவனியாண்முசுகுந்தற்குச்
சித்திரவல்லியென்னுஞ்சீர்கெழுபுதல்விதன்னை
மெய்த்தகுவதுவைநீரால்விதிமுறைவழாமலீந்தான்;

வினையவீரர்தாமுமியல்புளிவழாமல்வேட்ட
தேனிவர்குழலாரோடுஞ்சிறந்தவில்வாழ்க்கைபோற்றிப்
பானலங்குதலைச்செவ்வாய்ப்பாலரைநீலவேற்கண்
மானனையாரைநல்கிமனுகுலத்தொன்றியுற்றார்.

எனவும்,

[illegible]முசுகுந்தன்சொற்கயிலையடைந்தபின்னை
வெங்கள்விறன்மொய்ம்பினனுமிலக்கருடனெண்மர்களுந்
தங்கள்சிறார்தமைவிளித்துத்தத்தமதுசிறப்புநல்கி
யங்கிவன்மன்ப[illegible]லிருத்தியரியதவமாற்றினரே.

மாதவமெண்ணிலவியற்றிமாணுடத்தன்மையைநீங்கி
யாதி[illegible]லடலெவ்வியருண்முறையாலனைவர்களு
மேதகுசீர்க்கந்தகிரிவிரைந்தேகிவேற்கடவுள்
பாதமலர்பணிந்தேத்திப்பத்திமைசெய்துற்றனரால்;

நாலெழுமீராயிரரினுவலுமவர்ச்சிறார்மறையோ
ருறெழுமுன்மூவருண்ணாறுதொழிலேற்றறநூலிற்
கூறுநெறிபிறழாக்கைகோளொரைச்சிறந்தனரா
லீறில்சிவன்முகத்துதித்தவீருங்குரவீட்டம்போல்.

எனவும் வருங் கந்தபுராணத்திருவிருத்தங்களாலுணர்க. இக்கந்தபுராணமோ? அதனையச்சிடுங்கால் சில சேர்ப்புரட்டுஞ் சொற்புரட்டு மடங்கிருப்ப

தோடு, பாப்புரட்டும் படலப்புரட்டும் பலவாதலின் அதிலுதவுவன சில உதவாதவை பல. இவ்விரண்டற்கும் பூர்வமே கந்தநாத னருட்டிறத்தாற் செய்த அத்தெய்வீகநூலே வழிநூலாகக்கொண்டு கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தனூர் கலைமகளா ரருட்டிறத்தால் இக்கைக்கோள் மரபினராற் சமைத்த சிரச்சிங்காதனத் திருந்து கடவுளர் கற்பக மலர்மாரிசொரியச் சார்பு நூலாகச் செய்துள்ள மற்றொரு தெய்வீக நூலாகிய "ஈட்டியெழுபது" என்னுநூ லெவருப் பிரசித்தமாயுள்ள தாதலால், அதனை முறையே வாசித் துணர்க.

இவையன்றி மேற்குறித்துள மூவகைக் கைக்கோளருள் தந்துவாயர் கல்விநூல் பயிலும்வாயராகிய அந்தணவகுப்பின ரென்பதற்கும்; செங்குந்தர் படைபயின் றலகோம்புவோராகிய அரசவகுப்பின ரெனபதற்கும், காருகர் பவமற்ற தொழிலாகிய நெய்தலையேற்ற வைசியவகுப்பின ரென்பதற்கும், இந்நெய்தற் றொழிலைக் கந்தநாத னருட்டிறத்தாற் கைப்பற்றிச் செய்தன ரென்பதற்கும், ஏனைய வுழவு முதலியன பவமுற்ற தொழிலெனபதற்கும், ஈட்டிக்குமேருக்குமுள்ள தாரதம்மிய மிற்றிற்றென்பதற்கும், ஈட்டிப் படைவகித்த கைக்கோளர்குல மெல்லாக் குலங்களினு மேலானதென் பதற்கும், ஒவ்வோர் காலவேற்றுமையால் கடவுளாதியர் மாறி மேலது கீழாய்க் கீழதுமேலா யமையுமென்பதற்கும் உதாரணம்

மறைநூலதாகியவைதிகநூலினுமாசில்பல
முறைநூலதாகுமிலெளகிகநூலினுமுத்திநெறி
யறைநூலதாகியவத்விதநூலினுமாயறத்தின்
சிறைநூலதாகியவெந்நூலுந்தேர்ந்தவர்செங்குந்தரே.

தாயரும்பன்னகன்மாணைக்கர்யாருந்தழைந்துவா
சேயரினெண்ணிமுகமேயகமேநெடிதவர்க்கே
யாயருநூல்பலவாய்கொண்டுரைத்தவினான் றதந்து
வாயரென்றோர்பெயர்பூண்டனர்செங்குந்தர்மண்டலத்தே.

சமையவிசேடநிருவாணதீக்கைதரித்தலுட
னமையபிடேகமும்பெற்றங்கவர்குலத்தாரியரா
யிமையமுதற்சேதுவரைக்குமினிதுறைந்து
இமையவிளக்கெனயாண்டும்விளங்குவர்செங்குந்தரே.

மேவும்,

பிறவியினூடேகுலச்சீர்பேணியிருமைப்
பிறவியினூடொல்காப்பெருங்கை - மறைமுதல
வோதுவித்தகத்தொழிலையுற்றமைடந்தார்க்கவற்றை
யோதுவித்துமந்தணச்சீரென்றுங்கை - பூகமுறைய்

வேட்டுவித்தகத்தொழிலைவேட்டுமடைந்தார்கவ்ற்றை
வேட்டுவித்துதல்விசைகொள்வேணக்கை - சேட்டமுறு

முத்தரச்சைவத்தீக்கையோடுசமயத்தியவா
முத்திறத்தீக்கைப்பரவுமுத்திரைக்கை - யொத்துவரு

மாதுலர்பாலீதலறப்புரிந்துமற்றவர்பா
லேதுகொடேற்றேந்தல்கொளுமேகக்கை - போதமாடு

வாதவூரெந்தையணிவாசகமுன்னுபதமிழ்
வேதபாராயணஞ்செய்விற்பனக்கை - யோதுபுறச்

சட்சமயம்பாறவெணில்சார்சமயம்வீரவுற
வுட்சமயமாறினையுமோம்புங்க - தட்சணமெண்

பின்னங்களையுமணிபீடுறகூறுசிவச்
சின்னங்களைவிருத்திசெய்யுங்கை - மன்னுபரம்

போற்றுசரிகைமுனும்பொய்தீரொழுக்கமெனச்
சாற்றுமொழிநான்கினுணூற்றாழ்விற்கை - தேற்றமுறு

நேமங்ளாற்றேறளர்நேர்தேசிகர்மூன்று
நாமங்களையணிந்தநான்மறைக்கை.

எனவும்,

துலையினுமிஞ்சுசிறையுடையாரொருசொல்லுடையார்
மலையினுமிஞ்சியமன்னர்பகைக்கினுமற்றவராற்
புலையினமபோர்த்தபல்புங்கமெண்கோடிபுகினுந்தங்கள்
சிலையினிற்கைவைக்குமுன்னேயொழிப்பார்செங்குந்தரே.

நேரானகுந்தஞ்சமதாடுநேரிசனிவ்கரிகை
கூரானசூரிசந்த்ராயுதஞ்செய்யம்புகோல்வடிவே
லேராருநேமிகழுமுளைகேதியினையிலவசி
சீர்மூன்றும்பதினெட்டாயுதத்தருஞ்செங்குந்தரே.

அங்கமருணமவர்த்திசவ்வீரமொடாந்த்ரமெழிற்
றெங்கணம்வங்கங்கலிங்கங்குடகர்திகழ்துளுவங்
கொங்கணமச்சமலையாளமாளவங்கோறில்சிந்து
சிங்களமாதியபல்தேயம்வென்றவர்செங்குந்தரே.

வாமவிரு,

கோதிவேட்டாருலலகயோம்[ப]ப்பகைகளைந்து
நீதியரசச்சிர்சிறத்துங்கை - [மா]தவர்பா

லோரொன்பான்புண்ணியங்க[ளை]யாதியற்றியமர்க்
[கீரைவன்]பாறையுதங்கவேந்து[ங்]கை - சாருங்

குடைகொடிதேர்பீலிநரைகொள்தோரணமுன்
படையுடையுஞ்செம்மையிற்கொள்பங்கை - யடையலர்தங்

கோரக்கலிக்களத்திற்கூறுபுலித்தண்டையோடு
வீரக்கழற்கால்கொள்வெற்றிக்கை - நேரு

மறமாதிகாற்பொருளுமாய்கலனுப்பூண்டு
மறமாதியவொழிக்குமாக்கை - திறமாக்கோ

பாலெட்டுங்கண்ணுடைப்பார்த்தருளிமன்பதைக்கோர்
நாலெட்டுமோந்தருமகாட்டுங்கை - சால

வேருணச்சி[ர]மமெனமெய்யோம்பியாண்டும்
வருணச்சிரமமதிவாழ்கை - தெருளுடைத்

துட்டசனரெப்பாலுந்தன்னுதழித்தகற்றிச்
சிட்டசனரைக்காக்குஞ்சீர்சால்கை - யட்டதிக்குந்

தேறுமன்னரென்பெயருந்தேர்தலைவரென்பெ[ரு]ங்
கூறுமுறையாலணிசெங்குந்தக்கை.

எனவும்,

கணத்தாலுங்காருகச்செய்தொழிலாலுங்கணிக்கரிய
தனத்தாலுந்தங்களுக்கீடுமுண்டோவிந்தத்தாரணியின்
மனத்தாலும்வாக்கொடுகாயத்தினாலுமுன்மற்றொருவர்
சினத்தாலுந்தங்களினத்தாரைக்காப்பவர்செங்குந்தரே.

பட்டுக்குநூல்கொண்டிழைத்தோடித்தோய்ந்தபற்பாவைநெய்தே
மட்டிட்டுமாறும்வியாபாரத்தான்முன்மலரவனைக்
குட்டித்தளையிட்டகோலாகலக்குகனென்குமரச்
செட்டிக்கிளையாந்செட்டிகளாவரிச்செங்குந்தரே.

வானம்வளரும்பசுக்கள்வளருமசம்வளருந்
தானம்வளருந்தருமம்வளருந்தமிழ்முதல
ஞானம்வளருஞ்சிவஞானபோதநலம்வளரு
மானம்வளர்க்கின்றசெங்குந்தரெங்கும்வளர்தவினே;

ப்பறாகு;

வேதமொடுவேள்விவிளைந்துபொருளீட்டியா
னீதமொடுகாத்தீதனேருங்கை - பாதகநேர்

வெய்யதொழிலாமுழுதல்வேண்டாதரம்வளர்க்குந்
துய்யதொழிலாநெய்தறோயுங்கை - யுய்யநீத

மூக்காற்பெறுநியமமூட்டாவகைகீறுத்தி
யெக்காலுமெய்ப்பிறொழிலேற்குங்கை - சொக்கை

யுரியார்க்குமேனையுறகணுளர்க்குஞ்
சரியாநெறித்தொழிலுட்டாழ்ங்கை - கரியாய்வீ

யூனக்காக்கும்முயிரையோம்புந்தொழிலு[illegible]
மானங்காக்குந்தொழிலேமல்[illegible]ங்கை - யீனமுற

கீண்டார்தநேயச்செறிவின்றிமெய்யுறவு
பூண்டாரோடாகுதொழில்பூணுங்கை - சேண்டருநீ

வெய்யின்ம[illegible]பனிகால்வீசான்[illegible]மவியாமே
துய்யநிழறொழிறோய்சுத்தக்கை - மையமில்சீர்க்

கல்[illegible]பெருங்கேள்விகணக்கினைநற்றானதன்மம்
வில்[illegible]ஞானஞ்செய்தொழின்மேவுங்கை - புல்சருகா

[illegible]கொளலன்றியுயிர்க்கண்ணூறிற்கோடெரி[illegible]ண்
[illegible]கொளலாந்தொழிதீர்புங்கக்கை - துங்கமில்புன்

கூழ்மாக்தவோர்க்குங்குறைவிலாக்கொற்றவர்க்குஞ்
சூழ்மானக்காவறொழிற்சூழுங்கை - தாழ்வின்மிகு

கட்பணைத்திணுஞ்சசியாற்காண்டணையேமிக்குசெனப்
பெட்பினொடுமேற்றதொழில்பெற்றயுங்கை - நட்பிலுற

தென்புலத்தராதியர்க்குச்செய்மகமோரைந்தினைத்த
மின்புகொடுசெய்தேயிமைக்குங்கை - தன்பில்

தயாவிருத்தியெட்டாற்றருபோசமெட்டும்
வியாதமின்றிமேயாங்குவிமலக்கை - நியாதமுறு

நற்குணமோர்பத்தினையுநாடிமற்றோர்பத்தாகுந்
துற்குணத்தைநாடாதவொண்மைக்கை - நிற்கு

முபகாரமீரேழுயிர்க்குடற்குமோம்பி
யபகாரமியாண்டுமெனுமைங்கை - சுபகார

மெய்செயற்சீர்மாருதமெய்ம்புகொண்டோர்பத்தாகும்
கையியச்சீர்மாருதவண்மைக்கை - மெய்சிரவ

ரேத்துமுதலியரென்றேதலைமைநாமத்தாற்
றேற்றியெனுந்திக்கிலுஞ்சொல்செட்டிமைக்கை-

எனவும்,

செங்கண்மாலுந்தியந்தாமரையினூல்வாங்கிதிங்கள்வட்டத்திழைத்துத்
தேவரலகாகவே[illegible]முனிவர்பாவோடசேர்ந்தவிழைவிழுதுதோய்ந்து
பங்கயன்றன்முகம்படமரமதாகவேபச்சைசமால்முன்றண்டதாய்ப்
பரிவாலகத்தியன்விழுதுகோலணி[illegible]தாய்ப்பணிசேடன்வலிகயிறதாய்
வெங்கட்சடாமுனிவிசைக்கோலதாய்வேதவின்முனிமிதிப்பலகையா[illegible]
மேலானமகதிமுனிகாடாவிலோடமுன்விரித்தபாவதனைநெய்து
சங்கரன்மதலையிப்பவமிலாத்தொழிலைச்சமைத்துய்மினெனவிண்ணுளோர்
சயசயெனவாழ்த்தக்கையேற்றுமெ[illegible]கக்கோளர்சருவ[illegible]லமும்வாழியே.

பின்னேய்ந்த

கூர்வேற்கைப்பெம்மான்செங்குந்தர்க்கறம்விளங்க
யேர்வேட்கையோடுமெழுந்தருளிப் - பேர்வேட்கை

பாவோடின்றதெனப்பாவனையிற்செய்திடுமப்
பாவோடுமுந்சவ்மும்பார்த்திலரே.

எனவும்,

பூதலத்தி ரெணவையும் வள்ளுவரு மற்றைப்புலவோருமுழுதொழிலைப் புகழாராயில், நீதயலசேர்தலினூற்றீண்டார்நேயஞ்செறிதலினூல்வெயில் பனிகான்மழைமுன்னுலோர், போதும்வயல்செல்லலூருரேரைப்பூட்டார் புன்செய்பயிர்நன்செய்பயிர்போற்றூர்யாரு, மாதவினாலன்றோபூவளியர்த ம்பாலடிமைவேளாண்குடியேலாக்கினரே.

வானத்தைநோக்கிப்பல்லினத்தையோம்பிவளர்த்திடினு
மூனத்தைநாடுமுடல்சிச்சிவேறோருழைப்பிற்சையா
லானத்தையுண்டுநல்லாடையைச்சுற்றியசுத்தமின்றி
மானத்தைக்காப்பதன்றோமக்களுக்குள்ளமாட்சிமையே.

மாற்றத்கரியவளமார்மயிலையில்வள்ளுவன்றோ
னேற்றக்குலக்கிடையெத்தனை[illegible]தொழிலெண்ணப்பட்டு
மாற்றற்கணிகலைசெய்தல்கொண்டேடையலங்கரித்தான்
சோற்றுக்கலையுந்தமக்கைக்குக்கோபஞ்சரக்குமென்றே.

பாவலச்செந்நாப்புலவன்செங்குந்தரைப்பார்த்தபின்னர்க்
காவலம்வாசிநலங்காணநெஞ்சக்கிசிந்துருகி
நூலம்பாநலமோடேகலைநலநோக்கியதன்
மேலைவமென்றபொருணலந்தேர்ந்துவிளக்கினனே.

செய்யுந்தொழிலனைத்துஞ்சி[illegible]தூக்கிப்பார்க்கில்கலை
நெய்யுந்தொழிற்குநிகரில்லை[illegible]யன — வையமிசைத்
தென்னுமறையாற்பொருளைச்செந்தமிழினா[illegible]
வள்ளுவனார்கொண்டதல்லவா.

வரையெடேனெனுன்றனெ[illegible]னுடல்வாடிப்
பாரைநக்கிப்போவாய்பதறாதே — பாரிலிழைக்
கைவிலெடேனெனுடுக்கக்கந்தையற்றான்மானமும்போ
யையவுயிரிருக்குமென்றும்.

உண்ணாதுசெங்குமுலாவித்திரியலாங்
கண்ணால்நமதிருப்பைக்காண்பாரார் — அண்ணா
உடுக்காதுன்னூரினிலுமொன்றியுலாவ
வடுக்குமோவார்மதிப்பவர்.

ஒ[illegible],

[illegible]தொழிலேதென்னவுயர்குறள்சொல்வள்ளுவர்க்குச்
செய்தொழில்கற்பித்தமைத்தசேட்டக்கை.

எனவும்.

தட்டியிசைபாடினன்கூத்தன் – ஏரினிசைபாடினன்கம்பன்
கட்டிவளமூவுலகுசெலும் - ஏரின்வளமண்ணுலகுசெலும்

ஈட்டிக்கெதிரேற்றினனிருப்பன் - ஏருக்கெதிர்கூற்றுவனிருப்பன்
ஈட்டியிறைகள்கரத்திலகும் - ஏரார்குடிகள்கரத்திலகும்
ஈட்டிதிறைகொண்டுலகோம்பும் - ஏரத்திறைதந்துடலோம்பும்
ஈட்டிதெய்வீகம்விளைக்கும் - ஏர்தீங்கரநிதமைவிளைக்கும்
ஈட்டியாருந்தொழற்குரித்தாம் - ஏர்மண்ணுழற்கேயுரித்தசனுல்
ஈட்டியிசைக்குநிகராமோ - ஏரினிசையிவ்வுலகீரே.

எனவும்,

உலத்தினிற்புட்பராக மொளியினிற்கதிராவைந்து
புலத்தினிற்கருங்கண்வாவிப் பூவினிற்கமலஞ்சொல்லுங்
குலத்தினிற்செய்யருந்தங் குன்றினின்மேருக்குன்றந்
தலத்தினின்மதுரைமேலாந் தரமெனுத்தகைமைத்தம்மா.

கோக்களைமின்னனுரைத் தவத்தரைக்குலத்தில்வேத
மாக்களைச்சிசுவைக்கொன்றான் செய்ந்நன்றிமறந்தானுசா
னுக்கமதழித்தான்பாவ மனைத்துஞ்செங்குந்தர்வீதி
தெக்கிடப்பிச்சைவாங்கி யுண்டிடத்தீருமன்றே,

எனவும்.

மேலாயமறைகளெல்லாங்காலமாறி மெலிந்துமறைந்தப்பான்மீளுதலுமுண்டு
மேலாயதெய்வமெலாங்காலமாறி மெலிந்துமறைந்தப்பான்மீளுதலுமுண்டு
மேலாயசமயமெலாங்காலமாறிமெலிந்துமறைந்தப்பான்மீளுதலுண்டாமே

எண்ணில்பலநூல்கள்நால்வேதத்துள்ளு மெழுமேனுமவ்வவற்றுளொன்றேமேலாம், எண்ணில்பல்தெய்வநாற்றிசையினுள்ளு, மெழுமேனுமவ்வவற்றுளொன்றேமேலாம், எண்ணில்பலமதங்காஞ்சாதியுள்ளு மெழுமேனுமவ்வவற்றுளொன்றேமேலாம், எண்ணில்பலமரபுகளுள்வருணத்துள்ளு மெழுமேனுமவ்வவற்றுண்மேலொன்றுமே.

எத்தனையோபார்ப்பாரிவ்வுலகமெல்லா மிருந்தாலுங்குலப்பார்ப்பாரிலக்கத்தொன்றே, எத்தனையோவரசரிவ்வுலகமெல்லா மிருந்தாலுங்குலவரசரிலக்கத்தொன்றே, எத்தனையோவணிகரிவ்வுலகமெல்லா மிருந்தாலுங்குலவணிகரிலக்கத்தொன்றே, எத்தனையோவேளாரிவ்வுலகமெல்லா மிருந்தாலுங்குலவேளாரிலக்கத்தொன்றே.

எம்மரபினுளருஞ் செங்கோல் வேந்தருண்டு எம்மரபினுளருங் கொடுங்கோல்வேந்தருண்டு, எம்மரபினுளரு நற்றகவிகளுண்டு எம்மரபினுளருங்கல்லாக்கயவருண்டு, எம்மரபினுளரும்பெரியோர்சிறியருண்டு எம்மரபினுளருஞ்

செல்வர் வறியருண்டு, எம்மரபினுளும் புனிதர் புலையருண்டு-எம்மரபினுளும் கற்புக்களவுமுண்டே." எனவும் செங்குந்தர்மாலை, செங்குந்தர்மரபவிளக்கம், செங்குந்தர் திருக்கைவழக்கம், தனியன்கள், மதுரைப்புராணம், தேவகீதை முதலியவற்றுள் கூறியிருத்தலைக் காண்க.

இதுகாறுங் "கைக்கோளர்" என்பதற்குப் பொருள் இதுவென்று பல வநுபவங்களையு மேற்கோள்களையுங் காட்டி விவகரித்து வந்ததால், வைதிகவினைகட்கும் லௌகிகவினைகட்கும் இன்றியமையாத "ஒழுக்கக்கோட்பாட்டினர்" எனப் பொருள்படுத்தாது "செய்வாரிலோர்சாதியார்" எனப் பொருள்படுத்து மறிவிலிகள்வாயில் அயவாப்பேறக் கடாவப்பட்டது.

17. இக்கம்பருடைய பிறப்பின் வரலாறும் இவர் கல்வியிற்றேர்ச்சியடைந்த விதமு மிவ்வாறாகச் சிலர் - ஓர் வடநாட்டரசனுக் காண்மகவுண்டாக அம்மகவிருக்கிற் பிறந்த குடியு நாடும் பாழாமெனச் சோதிடர்கூற அது கேட்டவரச னக்குழவியைப் புறங்காட்டிற் கிடத்துவித்தா னெனவும், அதனை யவ்வேரச்சன் கண்டெடுத்துத் தனதிட்டதெய்வப் பெயராகிய ஏகம்பனென்பதனைப் பெயராகவிட்டு வளர்த்துவரச் சற்றே பெரியனாயகாலத்து அவ்வேரச்ச னிறந்தலும் அவன் [illegible] பிழைப்பின்போகுடிச் சடையப்பிள்ளை யென்பவர் சாரிற் [illegible]இருந்து காலத்தைக் கழிக்க அக்கால் சிறுவர்கள் விளையாட்டால் [illegible]னென்பதைக் கம்பனென்னு மாத்திரத்தானே யழைக்கப்பட்டிருந்தன ரெனவும், இதனாலேயே யிவர் பிறப்பில் க்ஷத்திரிய குலத்தராகவே கொள்ளவேண்டும் அல்லாக்கால் சாவினுக் கஞ்சாத் தறுகணாண்மையும் அரசரை யெதிர்க்கும் வீரமுடைமையும் ஏனைய சாதிக்குள் நிகழாதெனவுங் கூறுவர். அரசரொழிய வந்தணராதிய மூவருணத்தருள் ஒருவர் மனைவியையாண்டு மடிபோர்புரிந்து மிருந்திலர்போலும். சில ரிக்கம்பனைரச் சைவ வேளாளரெனவும், அல்லாக்கால் க்ஷத்திரியராயினோர் இவரோடு சமபந்தி போசனஞ் செயபாவிசையாரெனவுங் கூறுவர். ஆனால் வைதிகவொழுக்கமற்றுத் தம்மிலிழிஞரையுங் கல்வி செல்வ முதலிய விருக்கின் கனப்படுத்தித் தம்மினத்துட் சேர்த்துக்கொள்ளுந் தகைமையாகிய நான்காம் வருணத்தரோடு அஃதே [illegible]மையராகிய இரண்டாம் வருணத்தர் சமபந்திபோசனஞ் செய்வார்போலும். ஆ! ஆ! இஃதற்புத மற்புதம்!! அந்தோ! காஞ்சீரன் [illegible]த தில்லறதருமங் கூறிய வத்தியாயத்தில்

கட்டிலிற்பீடத்தனிலிருந்தருந்தக்கப்பரைதனிலுணலாகா
வுட்டெளிமறையோரவிந்தசோறமிழ்தம்வேந்தர்சோறுவந்தபாலடிசி

வெட்டியரளித்தவடிசினல்லடிசில்பின்னவரினிதுமூரல்
கொட்டியகுருதியாதலாற்பின்னோரிடத்துணல்குறிப்பினுமாகா,

என்றிருத்தலையும்,

இறந்துளோர்மகளிர்புணர்முலைப்போகந்துய்த்திடினளப்பருங்கால
மிறந்துழிமலத்திற்புழுவதாய்நரகினெய்துவர்பின்னவரிடத்தி
னறம்பயில்விஞ்ஞைகற்றனோரவர்பாலரும்பொருளேற்றனோரவர்பாற்
பெறும்பொருளதனால்வேள்வியாற்றினர்கள்பிழைப்பருநரகிடைச்சேர்வார்,

என்றிருத்தலையும்,

பிற்காலத்தவராற் கூறியுள்ள தனியன்கவி விதைப்பற்றியும் அவ்வேளாண்மாக்களுடைய சுபாவங்களைப் பற்றியும்

அன்னமளிபபோர்வேளாளராடைதருவோர்வேளாளர்
முன்னையோர்தம்பணியினைத்தாமுயன்றுமுடிப்போர்வேளாள,
ரின்னியக்கன்புரிந்திட்டிவெழிவான்காப்போர் வேளாள
ரென்னிவிவர்பாலுணவாகாதேற்றலராகாதெனவெல்லனே,

என்றும்,

பூதலத்திற்பரத்தையரேசரீரோபகாரரெனப்புகல்வர்மேலோ
ராதெனத்தஞ்சாதிபுகுமவர்க்கெல்லாமுபசாரராவார்வேளா
ளீதலவேகீர்த்தியழவெலவற்றினைத்தம்பாற்பெயினுமெய்திற்றனபோ
லாதல்செயுஞ்செபலிவர்பாலுளததனால்வேறியென்றுமறையலாமே,

என்றும்,

தாதையிவரென்றணைக்கிலராய்த்தந்தையிவரென்றறிகிலரா
யோதுமரபொன்றுற்றிலராயுடனுற்பவித்தார்கட்கெவருந்
தீதில்கோயிற்குசியருமாகச்சேர்த்தார்தாமுகிதி
யாதிபுணர்ப்பாலகமடையராய்ப்பின்வேளாண்மாக்களென்பார்,

என்றும்,

வீறுசமணைக்கழுவேற்றுமெனுளிரிந்துகொண்டைகட்டி
நீறுபூசியாடையுடுத்திகச்சழுத்திலவர்போன்றீழவ்
கூறுசென்னையாதியினிற்குலவும்விலிலியச்சுருதி
சேறியவராய்ப்பின்சைவத்திறத்தவேளாளரும்பலரால்,

என்று

மண்ணிடிக்குமொட்டராய்மயிர்சுழிக்கும்வினைஞராய்
மறலியென்னவழிமறிக்குமறவராய்வெங்குறவராய்ப்
பண்ணெடுக்குகூட்டுவப்பரதராய்மீன்வலைஞராய்ப்
பாணராய்வண்ணாராய்ப்பணித்தசெய்யுமாளராய்ப்
புண்ணெடுக்கும்வளுவராய்ப்பொருந்துமின்னபேரெலாம்
பொருள்படைத்துவேடமாறிப்பூமியின்கணொருவருங்
கண்ணெடுக்கவரியராய்க்காராளரோடேராளமாய்க்
கலந்துதம்மையொப்பவர்களிக்குளில்லையென்பரே.

என்றும்,

எண்ணரியவிலக்கியமுமிலக்கணமுங்கற்றோ
மெப்பயனுமடைந்தறியோர்தப்புவழக்கதனிற்
கண்ணதனாற்கண்டாப்போற்பொய்சாக்ஷிகூறக்
கற்றறியோங்கணிகையர்பாற்றூறெனினும்போகோ
மண்ணுழுதுபிழைக்கும்வேளார்குலத்திற்பலரை
மாட்டுவிக்குந்தரகிரியாய்மருவி[illegible]டிபோகோம்
[illegible]ண்ணதனாலுறுகூலிவாங்கியுண்[illegible]த்தெரியோம்
[illegible]ழைக்குமவகையெப்படியென[illegible]ருகுவதில்[illegible].

என்று மின்னும் பலவா யிருத்த[ங்]களை யேன் கண்டு தெளி[ந்]து இத்தகைய பிதற்றல்களைப் பேசுவதில் நின்று மொழிந்திலர். இ[வை]யனைத்து மிவ்வாறாகப் பின்னு மிக்கம்பரை வேளாளரே யென மற்றொ[ரு] விதத்தாற் [சா]திப்பர். அதாவது:—"செங்குந்த மரபினராகிய கூத்[த]ர் தமது மரபினர் வேண்டுகோளுக்கிணங்கித் தமது மரபுக்குரிய க[ரு]வியாகிய ஈட்டியைச்சுட்டி ஓர் பிரபந்தம் பாடியதுபோல, வேளாண் ம[ர]பினராகியதாமும் தமது மரபினர் வேண்டுகோளுக்கிணங்கித் தமது மரபு[க்]குரிய கருவியாகிய ஏரைச்சுட்டி ஓர் பிரபந்தம் பாடினர்" என்பதேயாம். ஆயின் கூத்தர் த[ம]து மரபின் கீர்த்தியைத் தாமே பாடுவதிற் குறை[வு]ண்டாய் பயனற்றொழியுமெனக் கருதியன்றோ தம்மை வேண்டினோ[ரை]க்கொண்டு சிரச்சிம்மாதனமிடுவித்து அதன்மீ திருந்து பாடி அப்பாட[லு]கள் சத்தியமென்றிவ்வுலகின்கணிலைபெற அறுபட்டிருந்த பல சிரங்களுமுடல்களு மொட்டியெழ ஓ[ர]ற்புதத்தை விளக்கி அக்காரணத்தால் தாமும் ஒட்டக்கூத்தரென்னுஞ் சிறப்பு நாமத்தினைப் பெற்று ஒரு குறைவுமின்றிப் பயனடைந்து தமது மரபினர்க்கும் அப்பயனடையச் செய்தனர். அவ்வாறிவர் விளக்கியடைந்த பயனுந் தனது மரபினர்க் கடையச் செய்த பயனு மென்னை? இவர் மரபிற் கித்தகையதோர் அற்புதம் விளக்கவேண்டுவ தாவசியகமின்றெனின், தன்னைத் தனது மரபினர் வேண்டலும் தான்

பாடலும் ஆவசியகமின்றாம். ஆகவே ஓர் காரணங்கருதிப் பிற மரபின ராலன்றோ பாடுவிக்கவும் பாடவும் வேண்டும்? அவ்வாறு பாடுவதினும் பாடுவோர் பாடப்பெற்றோராகிய இருவரன்றி ஏனைய மரபினர் யாரும் வியந்து இது சத்திய நூலென நம்புமாறு ஓரற்புதம் விளக்காவிடின், அவ்விருவரு மந்நூலா லடையப்பெறும் பயனென்னை? ஆதலால் சாதிநூல் சமயநூலென்னு மிரண்டினையும் இவ்வுலகினர் சத்திய நூல்களென நம்புமாறு தாபிக்கப்புகுவோர் அவ்வவற்[illegible]ற்கோ ரற்புதம் விளக்காவிடின் பயனற்றொழியுமென்பதை எனுங்கித் துணர்ந்திலர்?

இம்மாத்திரந்தானோ? சிலரிவர் கம்பநாட்டிற் பிறந்ததாற் கம்பநாடரென்று வழங்கியதென வுரைப்பர். அக்கம்பநாடென் றொருநாடு எக்காலத்தினு மிருந்ததாய்த் தெரியவராமையின் அது பொருத்தமுடைத் [illegible]ன்று. சிலர் கம்பநாடரன்று, கம்பநாடாரென் றிருத்தல்வேண்டு மென்பர். அந்நாடாரென்பதோர் சாதிக்குச் சிறப்புப்பெயராதலின், இவரைச் சாதியிற் (சாணான் சாண்டான்) என்று கூறல்வேண்டும். அச்சாணாராயினோர் தேவிகோட்டத்தின்கண்ணு ம[illegible]சவைக்கண்ணு மணுகற்குரிய நல்லாமையானும், இவரிவ்விரண்டிடத்தும் பன்முறை யிருந்துளாரென[illegible] ழுப்கலானும் அது[illegible] சிலரியர் [illegible] றி[illegible]மின்றித் தன் பேர் சொல்[illegible]வும் வகையறியா திருந்தமைப[illegible]தி தென்[illegible]டில் "கொம்பு" என[illegible]லதாய மரக்கிளையைக் "கம்பு" என வழங்குவது[illegible]லப்பேரிட்டு வழங்கினரென்றும், சிலரக் கம்பினை யிவர் கையில் வை[illegible]திருந்தமையால் அப்பெயரிவருக் காயதென்றுங் கூறுவர். இவ்விருகூற்று[illegible]மேற்போந்த "நாடர் - நாடார்" என்னு மிருகூற்றுக்கு[illegible] விரோதமாதலறி[illegible]. இவையனைத்து மிங்ஙன மிருப்பச் சிலரிவர் கம்பங் கொல்லையை இள[illegible]மைப் பருவத்[illegible]க் காத்ததாற் கம்பரென்று வழங்கியதெனக்கூறி, (பா[illegible]பதசையில் உயிரபுரமென்னுங் கிராமத்தின்கணுள்ள தினைப்புனத்தை உ[illegible]ாத்தியாயரேவலாற் காத்துவந்து ஓர்கா ளப்புனத்தை மேய்ந்த காளிங்கரா[illegible]னென்னு மதிகாரியின் குதிரையைத் தமக்கு 'வித்தியா வரப்பிரசாத [illegible]ருளிய காளிகாதேவி யனுக்கிரகத்தால்,

வாய்த்த[illegible]யிரபுரமாகாளியம்மேகேள்
காய்த்த தினைப்புனத்திற்காலைவைத்துச் [illegible] சாய்த்துத்
கதிரைமாளத்தின்றகாளிங்கராயன்
குதிரைமாளக்கொண்டுபோ.

[illegible]னப்பாடி யதையிறப்பித்துப் பின்னரவ் வுபாத்தியாயர் வேண்டுகோளால் "குதிரைமீளக்கொண்டுவா" என வதையே மாற்றிப்பாடி யக்குதிரையை யுயிர்ப்பித்தவர் பொய்யாமொழிப் புலவராயிருக்க) அக்கதையை

யிவருக்காக்கித் திணையொன்றனையே வெள்ளிடை மலைபோற் குறித்துள்ள வெண்பாவிருக்க அத்திணையோடுங் கலந்த கம்பங் கொல்லையென வேறு பொருள்படுத்திச் சற்று நாணமில்லாது நாப்பறை கொட்டுகின்றனர். இவர்கட் கிவ்வாறு கதைகளையுங் கவிகளையு மாற்றலும் புரட்டலும் என்று மாறாத் தொழிலேபோலும். இவையனைத்தையு முய்த்துணரு மிடத்துக் கம்பர் மகா கவியாயும் இதிகாசங்களு ளொன்றாகிய விராமாயணத்துள் தங்கள் மரபைப் பற்றிப் பலவிடங் ரித் சிறப்பித்ததன்றித் தனியேயும் ஏரெழுபது முதலிய நூல்களை யியற்றியோராயு மிருத்தலின், இவருக் கியற்கையாகச் சன்மத்தின் கண்ணுஞ் சன்மித்தபின் பயின்ற சாதியின் கண்ணு மிருந்துள்ள விழிவை மறைப்பான் கருதிய வேளாளரும் வைண வருஞ் செயற்கையாற் கற்பித்துவைத்த கட்டுக் கதைகளெனவே கருதத் தக்கனவாம். அன்றியு மிக்கம்பரது பிறப்பினைப்பற்றிப் பிற்காலத் தோர் கவி விநோதார்த்தமாக,

ண்டர்போற்றிடமாயனிவ்வுலகனைத்துமுண்டவகுதலா
ந்தலங்கையுமரக்கர்சேனையுய ன்வயிற்றினிலல்லவோ
தண்டிரைக்கடல்சூழவோங்கு தென்னிலங்கையில்ராவணன்
தையைச்சிறைவைத்துளானெ த்தேடி டிசெப்புவான்
பண்டிராவணன்ராமவாளியாற் த்துமாமுடியற்றிடப்
பார்த்தார்சொலக்கேட்டதாரதைப்பகரும்பாவலன் றன் ான்
கண்டதுண்டமதாக்குவேன்கவிசொன்னவன் றலைகண் லன்
கம்பவாணனென்கும்பவாணனுகள்வச்சுளையின்கா யே.

எனவிருந்தலையுங் காண்க.

மேலுமிக் கம்பருக்கித்தகைய விழிதகவு பிறப்பி ல் சேருமென்றறிக் துளரேல், கபிலதேவர் தமதகவலில் "பறையர் வீட் ல் வள்ளுவர்வளர்ந் தனர்," எனக்கூறியிருந்ததைத் "துள்ளுவர் வீட்டில்வ ளுவர்வளர்ந்தனர்," என விக்கால் மாற்றியதற் கொப்ப வக்காலே அப்ப றயருக்குந்தமக்குமு ள்ள சுவாவப்படி வேற்றுமையின்றி அவரைத் தம் னத்துட் சேர்த்துங் கொண்டதன்றித் தம மரபிலோர் பெண்ணுங்கொடு துச் சன்மானித்தது போல இவரையுந் தம் னத்துட் சேர்த்துப் பெண்கொடுத்துச் சன்மானித்துக்கொள்ளுவர். இப்போதென் செய்வர்பாவம், ஒன்றுந்தோன்றாமல் தட் டுக்கெட்டுத் தடுமாறி மிரளமிரள விழிக்கின்றனர். எத்தனையோ வகையாய் எண்ணியெண்ணி வரைகின்றனர்.

(18) சைவப்பற்றினராகிய விக்கம்பரை வைணவரெனச் சாதிக்கப் புகுந்த வம்மதத்தர் "கம்பநாட்டாழ்வான்" என மாற்றியதற் கொப்ப

இவர் குமாரனுக்குரித்தா யின்றும் வழங்கிவரும் "அம்பிகாவதி" என்னும் பெயரை "அம்பிகாவலன்" எனமாற்றி வழங்கவு மாயினர்.

(19) இவ்வேரெழுபதென்னு நூலைச் சற்றேறக்குறைய ஐம்பது வருஷத்திற்கு முன் அச்சிடப்புகுந்த வேளாண்குல திலகரும் வித்துவ சிரோமணியுமாகிய - சாரம் - குமரப்பக் கவிராயரென்பவர் இன்னாட்டினுந் தென்னாட்டினுமிருந்து அளவற்ற ஏட்டுப் பிரதிகளை வரவழைத்துச் சரி பார்த் தச்சிட முயன்றபோது, இரண்டு செய்யுட்க ளங்கெங்க விடயத் தைப்பற்றியுள்ளனவோ அவை யெந்தப்பிரதிகளினு மில்லாமலே யிருந்த மையாற் கிடைத்த அறுபத்தெட்டுச் செய்யுள்களையே பதித்து வெளியிட் டனர். அவர்க்குப் பின் - நல்லூர் - ஆறுமுகநாவலர் முதலியோர் பதித்த பதிப்புகளினும் அவ்வறுபத்தெட்டுச் செய்யுள்களுக்கு மேலில்லையாக, கடைமுறை யிதுகாறுமியாண்டுங் கேட்டிராத (கச்சித்தலைச் செங்கோட் டைத் திறவன் மகனார் திருநாகந்தையரால் செய்யப்பட்ட ஏரெழுபதுரை) எனவிளக்கி, (இவ்வுரையைப் பொருள்சொல்லித் தெழுதுவித்தோர் அப்பொருள் வரவா லல்லும் பகலுங் கஷ்டப்பட் டெழுதியோர் இவ்வாறெழுதவித் தெழுதுங்கால் அருகிருந்து கண்டோரின்னுமவ் டனருப்ப) வேளாளர் [illegible] சில நூற்றாண்டிற்கு ரென வன் சரிதந்தோடும் வரைந்து, இவ்வுரையு மூலமுஞ் சில பதினொ ண்டின்முன் பல பிரதிகள் தேடியாய்ந் தச்சிட்ட வித்துவசிரோமணிகளு க்குக் கிடைத்தலின்றி இப்போது கிடைத்ததென வோதிச் சூத்திருட் டலைமையராய வேளாளரை வைசியரெனத் தாபிக்கப்புகுந்து வைசியரை மூன்றும் வருணத்தராக முறைமைப்படி பாடியுள்ள பாடல்க ளொவ்வொ ன்றுக்கும் பல பாடபேதங்கற்பித்து அச்சிட்டு வெளிப்படுத்திய - தொழு வூர் - வேலாயுதப்புலவர் தனது பதிப்பில்; ஐம்பதாவது செய்யுளுக்குமேல் (அரிவாட்சிறப்பு - ஏறுப்புறுத்தற்சிறப்பு) என விரண்டு விடயங்களை நூத னமாகவெடுத்துப் பாடிச் சேர்த்து அந்நூற்குறையை நிரப்பினர், இவ் வாறு நிரப்பவேண்டியது அக்குலத்தருங் கவிகளுமாயுள்ளோர்க் காவசிய கவாக, அவ்விரண்டு செய்யுளுங் கம்பரே பாடியதென்றும் இத்தகையசுத் தப்பிரதி யிவ்வுரையோடு தென்னாட்டிலொன்று மின்னாட்டிலொன்று மிப் போது கிடைத்ததென்றும் அப்புலவர் தாமெழுதிய சாகவுள்ள முகவுரை யில் வெளியிட்டனர். இனியப்பாடல்கள் கம்பரது வாக்கேயாயினுமாக அல்லது வேறுவாக்கே யாயினுமாக, எமக்கதனாற்போந்த வாதாவியுங்க ளொன்றுமில்லை யாதலால் இது நிற்க - அக்கச்சித்தலைச் செங்கோட்டைத் திறவன் மகனார் திருநாகந்தையா ரென்னும் இரண்டுமுழப் பேருடைய போலியுரைக்காரர் ஜடனுரிதனர் வெண்பமாலையுள் வேளாண்வாகையென

மேன்மூவருமனம்புகலவாய்மையான்வழிமொழிந்தன்று
மூவருநெஞ்சமராமுற்றியவாவ
ரேவவெதிர்கொண்டுமீண்டுரையா-னேவல்
வழுவான்வழிநின்றவண்டார்வயலு
ளுழவானுலகிற்குயிர்

எனக்கூறிய வெண்பா பொருளானு மரபானுந் தம்முண் மாறுபடுதலால் அது பொருந்தாதெனமறுக்கவெனவும்,

செறுதொழிலிற்சேணோங்கியானறதொழிலுமெடுத்துரைத்தன்று
உழுதுபயன்கொண்டிருநிலையோம்பிப்
பழுதிலாப்பண்டம்பகர்ந்து - முழுதுணர
வோதியழல்வழிப்பட்டோம்பாதவீகையா
னாதிவணிகர்க்கரசு.

என்[..] வாணிகவாகை யொழுக்கமே இன்று மவ்வேளாண் மரபின் கண் வ[..] கிற்றல் காண்டு மன்றி [..]வ்வேளாண்வாகை வெண்பாவினு[..] [..]றியவழுக் கியாண்டுங் கண்டிலமாதலின் சான்றோர் செய்யுட்கண்[..] பல[..]பாடபேதம் வந்தாற்போலுமெனவும், பிற்காலத்துள்ளாரிற் சில[..]ழுக் காற்றி னிங்ஙனம் வரைந்து வழக்கினரென்னினு மிழுக்காமெ[..]வும், ஆகவே சதுர்த்தருரிமையை வேளாண்வாகையுட்கூறல் போலி[..]ற்றென் றொழிகவெனவும், தொல்காப்பியம் பொருளதிகாரத்து ந[..]னார்க் கினியார் அகத்திணையியன் முதலிய பலவிடங்களினு மரபிய[..] சூத்திரத்தும் அகப்பாட்டு, ஐங்குறு, கலித்தொகை முதலிய பிறவிடத்[..] வேளாண் மாந்தரைச் சதுர்த்தரெனவே வகுத்துரை யெழுதினரா[..]லோவெனின் பிறிதொடுபடா தன்றன் மதங்கொளலாய் வேதவழக்கு, [..]மிருதிவழக்கு முரணினு முரணுக தாம்பிடித்தது சாதிப்பதே துணிவா[..]க் கூறுத லவரியற்கையாமெனவும், அவருரையாற் பொருளதிகார மர[..] பலவரம்பழிந்தனவாதலின் அவ்வுரை போலியுரையென் றொழிகவென[..]வுங் கூறித் தாமே வரம்பழியா துரைவரைய உள்ளபடி பல பாடபேத[..] கற்பிக்க அழுக்கா றின்றி மரபியலேடங்கூ[..] எவர்க்கு மியாண்டு மெக்காலத்து மகப்படாத நூல்களையு முறைகளையு[..] சம்பாதிக்க மரபுநிலை திரியாத பல கதையினை வரைய என்னிற் பெரியாரிலையெனத் தருக்கியதன்றி; அந்தணராதிய நால்வருணத்தரும் பிரமனுருவிற் றோற்றியதனு லவன் மக்களாயிருப்ப அவருள் காராளரென்னும் வேளாளரைக் கங்கை மக்களென்ற தென்னெனின் ஆண்டு மறைகூறியது முதற்படைப்பின் றோற்றத்தினை யென[..], ஈண்டிந்நூல் கூறியது கங்கையின் வரமக்களென்னுங் கற்பபேதத்தினை யெனவும், மண்மகள் புதல்வ ரென்பது மதுவெனவும், இவரே கங்கை

மக்களான வைங்கரற்கு மறுமுகற்கு மொப்பாரெனவும், இவரே யெல்லா
மரபினருள்ளு மேலான வைதிக மரபினரெனவுங் கூறினர். இவரறவு
மெமக்குண்டாகு மிலாப மொன்றுமில்லையாதலி னிதுவுநிற்க, அப்பிரமன்
பதத்துதித்த சூத்திரரு ளொரு வகுப்பினராகிய வேளாளரைக் (குல
வைசி.... விக்கால்) வைசியரு ளொரு வகுப்பினரென்றும் சூத்திர
ராவார் குலால ராதியரென்றுங் கூறி, அச்சூத்திர ரென்போர் முதன்
..வர்க் கேவல் செய்வோரும் உழுதல் நெய்தல் பசுக்காத்தல் குயிலுவஞ்
செய்தலென்னும் வினைகளினாற் பொருளீட்டுவோரு மாவாரெனத் திவா
கரமுதலிய பல கருவிநூல்க ளெங்கெங்கும் பறைசாற்றி யியம்பு மியற்
கையையும் பூர்வமோர் சோழராசன் தனக்கு வேளாளக் கன்னிகைகளிட
த்தினின்ற முதித்த மக்கள்மேல் வைத்த வபிமானத்தால் குயவர் நாவிதர்
மு..லாயினோரைப் பதினெண்குடிமாக்களாக வகுத்து இவர்கட்கு வேளா
ளரைத் தலைவராக்கிச் சற்சூத்திரரென நிறுத்தி இச்சற்சூத்திரராற் சன்
மானிக்கப்படாத தனது மக்களுக்கினத்தர் து....யத்துப் பல கு...
..ளைக் கூட்டிச் தொண்டமண்டலத்து விருத்தி யாட்கொண்ட ..செயற்
..யையுந் துறந்து வேளாளரென்போர் யாரும் வைசியரேயன்றி...
சூ.திரருமன்றெனச் சாதித் துரை..வைத்தனர். இச்சாதனை யைக்கண்..
இவ்வணிகருங் கம்மாளரும் வன்னி..ருஞ் சாண்டாரு மூன்றையே ..
குந்த.. வேதபாரகரும புவிவேந்தருமெனச் சாதித்துக் (குலவேந்தர்
குன்றிய..க்கால்) பலநூல்கற்பித் தச்சிடுவராயினர். அம்மம்ம!! ஈதென்ன
கொள்ளையே.. வறிகிலம்.

அன்றியு ..க்கொள்ளையோடு கொள்ளையாய் ஓ நல்லறிவிற் சிறந்த
நண்பர்களே! கை..கோளரென்போர் திருக்கைலாய பரம்பரையரும் சிவ
நந்திகோத்திரரு.. கௌரி புத்திரரும் காங்கயன் சோதரரும் மனுகுல
வேந்தர் வரப்பிரசா..ரு ..வ......டற் கெடுத்துக் காட்டாகக் காந்த முத
லிய நூல்கள் கையா..லகம் போன் றிருந்தும், இக்கால் யாதினுங் கேள்வி
யற்றச் சாதுக்களா..ருப்போர் அக்கைக்கோளரென நினைந்தோ மறறி
யாது கருதியோ பூர்..மோர் பெரியோன லுபகாரார்த்தமாய்ப் பல சுருதி
மிருதிகளை முதனூ..ாகக் கொண்டாய்ந்து உள்ள..டி சுருக்கிப்பாடியுள்ளி
சாதிநூலொன்று பழைய வேட்டுப் பிரதியாக இ..னு மெண்ணற்றன
விருக்க அதை யச்சிடத் தொடங்கிய வவ்வற்பசா..தியர் அதிலவர்களைப்
ப..றிச்

செட்டியர்கன்னிதன்னைத்திருமறையாளன்புல்க
விட்டமாய்வருங்கைக்கோளரிருங்கொடிக்கயிறுபின்னிச்
சிட்டராலயத்துக்கேற்றதிருக்கொடியாடைநெய்வார்
நட்டுவர்தாமுமாவார்நாடகத்தொழில்கள்பூண்டு.

என்னுங் கவியை நூதனமாகப் பாடிச்சேர்த்து, (சிறியோரால் வாசிக்கப்படு மூலவாதார முதலிய சிறு நூல்களினும் பெரியோரால் வாசிக்கப்படும் பாகவத முதலிய பெருநூல்களினும் அவர்களைத் தீண்டப்படாத பஞ்சமருளொருவகுப்பினரெனப் பிதற்றிப் புன்குலமாக்கட்குப் பிராதிருக்கனாய்) அச்சிட்டதன்றிச் சென்னைக் கலாசாலையினுமொன் றதனைப்போற் கடிதப்புத்தகத் தெழுதிவைத் திருப்பதை இன்றுங் காணலாம். அன்றியுஞ் சற்றேறக்குறைய நாற்பது வருடத்திற்கு முன் இயற்றமிழாசிரியராகிய திருத்தணிகை விசாகப்பெருமாளையர் முதலிய பிரபல வித்துவான்களால் பரிசோதித் தச்சிற் பதித்துள்ள "தனிப்பாடற்றிரட்டு" என்னுமோர் புத்தக மின்றுமிருப்ப அதிலிச்சாதி வைஷம்யமுஞ் சமய வைஷம்யமுங் கொண்டுள்ள புல்வர்கள் "கம்பரால் பாடல்பெற விரும்பிய ஒரு கைக்கோளன் மனைவி தன் புருஷனை யொளித்து வைத்துக் கம்பரைத் தன்னிடத்து வரும்படி செய்தனள். கம்பர் வீட்டில்வருதலும் அந்தக்கைக்கோளன் ஒரு குறுந்தடியைக் கைக்கொண்டு கம்பரை அடிக்கவரும்போது அவர்பாடியது" எனவோர் கதை கற்பித்து,

மய்க்கிளையானவிழிக்கிளைவெருண்டுமருட்டியிருட்டறையில்
பொய்க்களவாகப்புகுந்ததுமன்றிப்புணர்ந்ததுமில்லையடா
கய்க்கிசைவானகுறுந்தடிகொண்டுகழுத்தைநெரிக்கவருங்
கய்க்களவாவென்றங்கையடாகின்றுரமடாவிடடா.

எனவோர் செய்யுளைப் பாடிச்சேர்த்து மறு பதிப்புக்களில் பதித்து வருகின்றனர். கல்வியிற் பெரியன் கம்பனென்பதற்கிணங்கப் பலவிலக்கண விலக்கியங்களிற் றேர்ந்து மகாகவியென [illegible] விளங்கு மிவருடைய வாக்கில் இத்தகைய வாபாசம் பதப்பிரயோகங்களை இரங்கித்தொடுத்து வைக்க முதலிலும் எய்துவனவோ? இவரித்தகைய விழிதொழிலாக் கிசைந்து ஓர் அர்த்தனையொப்பக் களவியலிற் றிருட்டுப் பட்டிகள்போன்று சென்றனராயின் இவரைப்பற்றி வெகு பிரதாபத்தோடு "கம்பர் சரித்திரத்துவொரு பகுதி கம்பரிராமாயணம் பாடியரங்கேற்றியது." என்றுள்ள காதைகளின் கதி என்னாகா நிற்கும்? ஓர் விதவாளுற் பாடல்பெற விரும்பி வரவழைப்போர் வந்தபின் ஓர் குறுந்தடியைக்கொண் டடிப்பித்துத் தானோ தாமப்பாடல் பெறவேண்டுவது? இஃதெத்திசையி லெவ்வூரி லெக்குலத்தில் நடக்கின்ற சம்பிரதாயம்? ஆனால் செட்டிகள் கன்னிகைக்கும் திருமண யாளனுக்கும் பிறந்த குலத்தினராகிய அக்கைக்கோளமாது தான் தாசிகளில் வேறான வேசியும் தனது கணவன் நட்டுவனுமாய் கொடிக்கயிறு பின்னலும் கொடியாடை நெய்தலுமாகிய இழிதொழிலைச் செய்யு மினத்

தினராதலின், அவளுக்கு மவன் கணவனுக்கு முள்ள இயற்கை யறிவுக் கேற்றவண்ணஞ் செய்தனர். ஈதே யவர்க ளெத்திசையினு மெவ்வூரினு நடத்திக்கொள்ளுஞ் சம்பிரதாய வொழுக்கம். இத்தகைய வொழுக்கத்தை யுடையவர்க ளானபடியாற்றான் "ஒழுக்கக்கொள்கையோர்" எனப் பொருள்படுவதான கைக்கோளரென் றவர்களுக்குச் சாதிப்பெய ருண்டான தின்றித் தீண்டப்படாதோ ரெனவும் பேசப்படுகின்றனர். இதிற் கேள்வியென்னை? என்று மவர்க ளித்தகைய விழிகுலத்தரு மிழி தொழிலின ருமாய்த் தீண்டப்படாரா யுள்ளவரென் றுணர்ந்துள்ள கம்பர் தன்னை வருவித்தால், தீண்டப்படுவோராகிய பஞ்சமரோடு திரிபின்றிப் பழகுந் தயாதிகள் நேயராகிய விவர் எவ்வாறு வரற்குத் துணிந்தனர்? இக்கம்ப ரெப்பொழுதாயினு மெவ்விடத்திற்கேனும் போகவரச் சம்பவித்தால் தனியே கால்நடையாய்ப் போகாமல் சோழராஜன் விரும்பிக்கொடுத்த பட்டுப்பீதாம்பரங்களை யுடுத்தி, மாணிக்கத்தாலாகிய சங்குசக்ரக் கடுக்கனும் நவரத்ன கண்டியும் வச்சிரப்பதக்கமும் ஆணிமுத்து மாலையும் அபரஞ்சிக் காப்பும் கல்யாணக்கொலுசு மணிந்து பாண்டியராஜ னபிமானித்துக் கொடுத்த தந்தப்பல்லக்கிலேறி, குடகதேசாதிபதி கொடுத்த யானைகளும் மார்வாடி தேசாதிபதி கொடுத்த ஒட்டகங்களும் சிந்து தேசாதிபதி கொடுத்த குதிரைகளும் ஆந்திர தேசாதிபதி கொடுத்த கண்டவாள விருதுகளும் பெருங்கூட்டமாக ஒரு ராஜாவின் தண்டு வருவதுபோல் தன்னைச் சூழ்ந்துவரும்படி, சிலர் சுவேதசத்திரம் கவிக்க சிலர் சாமரம்வீச சிலர் திருச்சின்ன மூத சிலர் மற்றும் பலபல விருதுகள் பிடிக்கக் கட்டியக்காரர் "புவிச்சக்ரவர்த்திகள் போற்று தெய்வீகக் கவிச்சக்ரவர்த்தியாங் கம்பநாட்டாழ்வா ரவர்கள் வருகின்றார் பராக்" என் றெழுச்சி கூறி முன்னே நடகப் பிரயாணஞ் செய்வது வழக்கமாகுமே? இவையனைத்தையு மங்கே நிறுத்திவிட்டு என்னமே[illegible]ப் வந்தனர்? ஆனால் "பொய்க்களவாகப்புகுந்ததுமுண்டு" என்றபடி யோர்புல்லிய தூர்த்தகோலங்கொண்டு குறுந்தடியினடிக்காக் கூவாது வந்தனர் போலும். ஆ! ஆ! ஆ! இது வியப்பினும் வியப்பு விபரீத வியப்பு; ஓ நண்பர்களே! இதையுஞ் சற்றாய்ந் துணர்மின்கள். அந்தோ! இவர்கள் தம்மைத்தாம் குல ஸ்ரேஷ்டரெனக் கூறிக் கொள்வதோடு நில்லாது ஏனை யவர்குலத்தவனை யிப்படி யவதூறுபேசி யழிகின்றனர்?

இன்னுமவ் வேரெழுபதென்னு நூலுக் கப்போலியுரைக்காரர் கற்பித்தெழுதிய விற்பன வுரைகளுள்ள வற்புதங்களை விரிக்க விரிக்க இவ்வா வம் பெருகுமாதலி னிம்மட்டில் நிறுத்தி, இனி யந்நூலினதப் போலியுரையைப் பற்றியும், அந்நூற் றலைவரான வேளாள ரயன்மக்க ளென்றுள்ள வருமைகெடக் கல்லாமக்க ளென்றதைப் பற்றியும், அக்கங்கை

மாக்கள் களிமாக்கள் போலாத கணிகைமாக்க ளென்பதைப்பற்றியும், அக்கணிகைமாக்களே கங்கா குலத்தரான வேளாளர் அல்லது காராளர் எனைய குலாலர் முதலாயினோர் சூத்திரரென்பதைப் பற்றியும், ஆதிகாலத் தொன்றுயுதித்திருந்த சூத்திரரே பிற்காலத் தோரரையனால் சற்சூத்திரருஞ் சங்கரசூத்திரரு மானாரென்பதைப் பற்றியும், தொண்டமண்டலத் துயர்தனுவவேளாள ருண்டானதைப் பற்றியும், இவ்வேளாளர் செய்துவரு யாருடாட்டால் இவரி லுட்பிரிவினர் செய்துவரு மிழிதொழிலைப் பற்றியும், அன்றியு மிம்மரபினர் சைக்கோளராகிய செங்குந்தமரபினரைத் தங்களழுக்காற்றினாற் புறம்பழித்துத் திரிவதைப்பற்றியு முற்காலத்தும் பிற்காலத்துமிருந்த சில கவிகளாற் கூறியுள்ள தனியன்கள் முறையே,

> உச்சிக்குடுமியுமாபதியுருபமன்யவுமுன்னுரைத்தநெண
> வைச்சுத்திகழ்தொண்டர்க்கதைக்காம்வழிநூலினைத்துங்கழிநூலாய்ச்
> சுச்சித்தலத்துச்செங்கோட்டத் திறவன்மகனேரெழுபதுக்கு
> மெச்சிச்செய்தவுரையாலேவெறும்பொய்யாகிமெலிந்தனவே,

எனவும்,

> கன்னகன்றனாலத்தேகம்மைக்குக்காராளர்
> தண்ணுமகாசாயின்மிருனாலீ - ரண்ணுமா
> னூர்க்கோவநணைனுக்கோகாளிலமான்சந்தனுக்கோ
> வார்க்கோபிறந்தாரவர்,

எனவும்,

> நால்வகைவருணத்தோர்க்குநான்முகன்றன்றாய்த்திறுக்
> கால்வழிவந்தோமென்றேகன்மைசதாவெனப்பேளார்
> மேல்வருமூவர்தம்மில்வேறுகிவைதிகத்தின்
> டால்வனுத்திடக்கீழீயேன்பதுங்தல்காமென்னல்போலும்,

எனவும்,

> கங்கைமக்களெல்லாங்கணைதிகைபோலப்
> பொங்கிவழிகின்றபுதுமையென்னே - செங்கு
> மிழிகுலத்தோரெல்லாமிருங்குலத்தராய்த்தம்
> பழியுணராதோதுவதைப்பார்,

எனவும்,

ஐங்கரனைச்செவ்வேளை யன்றரன்பாற்கௌரிதரக்
கங்கைமகாரென்றியம்புங் காதையென்னே - யிங்கொருவளை
வைப்பாட்டியாட்டிதருமைந்தனைத்தன்சேயெனல்போ
லொப்பாரிக்காதையெனவுன்.

எனவும்,

கங்கைமகார்முன்னவரோகௌரிமகார்முன்னவரோ
வென்கிதனைக்கேட்கில்விடையெய்தலாஞ் - சங்கரற்குக்
கௌரிமுனோகங்கைமுனோசாந்தபுராணாதிகளைச்
சௌரியத்தோடாயத்தரும்.

எனவும்,

கௌரிகுலத்தோர்கைக்கோளர் - கங்கைகுலத்தோர்காராளர்
கௌரியரனைமணந்துள்ளான் - கங்கையரனைக்கலந்துள்ளான்
சௌரிக்கரனேபதியாவன் - கங்கைக்கனேகர்பதியாவர்
கௌரியரற்குக்காந்தையென்ப - கங்கையரற்குக்கணிகையென்ப
கௌரியரற்கேமகப்பெறுவள் - கங்கைபலர்க்குமகப்பெறுவள்
கௌரியறத்தாளொழுகுபரை - கங்கைமறத்தாளொழுகுதிரை
கௌரியபின்னையரற்காவள் - கங்கைபின்னையரற்கதனால்
கௌரிகுலத்துக்கிணையாமோ - கங்கைகுலமிவ்வுலகீரே;

எனவும்,

பஞ்சமர்செய்வேளாண்மைபாவமெனவோர்ந்துமேன்
றஞ்சமெனக்கொண்டா[...]த்தரே - புன்செய்முனாந்
தானியப்பேராவலினாற்றாய்போலறங்கடந்தா
ரேனிதனைக்கேட்பதினி.

எனவும்,

ஆதிகாலத்தயன்பதத்திலன்மியுதித்தோர்குலாலர்முனாய்
நீதிசான்மூவருணருளுஞ்சேர்ந்துபணிசெய்சூத்திரரே
லோதுகற்பமொன்றுருத்திரனார்கணிகைக்குதித்தவரவ்
வேதுகொடுசற்சூத்திரரென்றிமைப்பாரவரேசங்கரராம்.

எனவும்,

ஆண்டாண்டென்னவெத்தனையோவாண்டாய்வேசநெறிநின்றே
னப்பாலென்னாலாகாமேயண்டிப்பிழைக்கவுலகத்தனி

வீண்டாரெவரேயெனப்பலவாய்நேடித்திரிந்தேன்குத்திரரே
நிலைத்தாரவருளொருவனையானேசித்தேற்பான்சென்றடைந்தே
னீண்டேன்வர்தாய்முன்னோனேயென்றான்பின்னோனானென்னோ
டிணைக்குலத்தோரிருவோருமில்லாதொழிந்தாரென்குறையைத்
தோண்டாதேயென்னலும்வார்த்தைத்தொழிலோனெனைநீயேற்றிடெ
றூய்மையலவேயெனவிக்காறூய்மையிதுவென்றேனுவ
னோண்டாயிடறிவீழ்ந்திட்டாவென்னிலிதுவோர்கரடியெவ
னிசைப்பான்போன்றாய்பறையோடுண்டோர்காப்பேன்பாலுறலாமோ
வேண்டாம்விதியன்றெனயானிவ்விதியின்றைட்கெம்விதியாக [பான்
விதித்தான்விதியென்றேன்வேளானெனக்கோர்விதியோதுகவென
பூண்டேபூணூல்பள்ளியரும்புலைச்சான்றருஞ்சத்திரியப்
பொருவில்குலத்தோரெனவாதுபுரிவாரதைநீகண்டிலையாற்
றூண்டாதேமற்றதில்வசியர்தாமேயாமென்றுரைத்திடுவென்றேன்
றப்பாமேகாராளனதிற்றரித்தானெனையும்பரித்தானே.

எனவும்,

பார்தனிற்பறைகொழுத்தாற்பள்ளியென்பார்
        பள்ளிமிகக்கொழுக்கில்படையாட்சியென்பார்
நேருமிவர்கொழுக்கிலகமடையராகி
        நிமைப்பின்மெலமெலவேளாண்குடியாமென்பா
ரூருளிவர்பூவசியரெனவேயெங்கு
        மூளறியொமிற்பெருங்குலத்தோருளரோவென்பார்
சோநரிவர்செயுமலேவோகோடாகோடி
        சுருதியெலாம்புரட்டிவிடத்துணிவர்தாமே.

எனவும்,

...டுகரிக்கால்வளவன்சோனாட்டுவேளாண்பாவையரை
மண்டுமுறையாற்குத்திரர்மூவறுண்மேலாய்மன்னவிடுத்
தண்டுமக்கட்கினர்துளுவத்தாய்ந்துகூட்டவவர்பலருந்
தொண்டநாட்டுளுயர்துளுவவேளாரென்னச்சொலவாழ்ந்தார்

எனவும்,

தொண்டமண்டலவரிசைமூவாறுகுடிமக்கடொல்லைநாண்முதலாகவே
தங்கமிகுநாவிதன்குயவன்வண்ணானேலைசொன்னபடிவரைகணக்கன்
கண்டகம்மாளர்வணைசயைவர்வாணியர்மூவர்கர்தமலர்மாலைகாரன்
கலைமீதுசாடோட்டுபாணன்றலைக்கடைக்காவல்புரிபள்ளிவலைஞன்

பண்டுமுற்றூராணமதிக்குவிடைட்யன்விருதுபாடியாடெடறியுமோச்சண்
பதினெண்மர்குடிமக்களனைவருங்காராளர்பணிசெய்துபலமுறைமையுங்
கொண்டுபரிவட்டமுங்கட்டியேவருவரிக்குவலயமதிக்கவேதான்
கூறறியகச்சிவாமேகம்பராலயக்குமுதத்திலிட்டலிபியே.

எனவும்,

சூத்திரருக்குள்ளேசற்சூத்திரரென்றோதியே
ரேத்துமவரெவ்வாறுமெய்தினர்காண் — மாற்றிவிழிப்
பொன்போன்றசங்கரர்தாம்போந்திலரேலெத்தொழிலு
மன்போந்தவர்க்கேமொழி.

எனவும்,

சாந்தகுடிமக்களும்பின்சார்ந்தவருமுன்னவரோ
டேற்றமுறவெய்திலிழிவன்னே — தோற்றறுங்கா
வல்வருந்தாமாகியவ்வத்தொழிலேற்றிங்
கெவ்வமறச்செய்தாரெவர்.

எனவும்,

மனுமுறையாலுலகோம்புமன்னரென்னுண்
மாய்ந்தாரோவன்றேயெம்மரபுமாறி
யினமதிலாச்சங்கரரெண்டிக்கும்பொங்கி
யிருந்தனத்தாற்கீழினைத்தாழ்மேலாயோங்கிக்
கனமதுநகவீனநூல்கழறிச்சென்னைக்
கலாசாலைதனிலேற்றிக்களிப்பரின்றோர்
கனிசொலவன்னியர்சான்றோற்றிற்பர்வேளார்
வெலிவிலையணிகரென்பநாடுங்காலே.

எனவும்,

காசினியிற்கண்ணுளராவாரெல்லாங்
கலைபயிலந்தணர்தாமாக்கத்தாதிற்பர்
நீசமுறுசாண்டார்வன்னியர்தமிற்போர்
நீட்டிச்சத்திரியரெனநேர்சாதிப்ப
ரேசவெலமவிலையணிகர்முழுமோசத்தா
லெங்குந்தாஞ்செங்குந்தரெனநூற்செய்வர்

கூசல றவசியர் தாமெனவேளாளர்
குரைத்தெழுதிவிடுப்பர்கலிக்கூத்திரமே.

எனவும்,

மறைபெருக்கிற்பசுவாமோபூளைகுயோங்கி
வளரின்வயவரியாமோமதயானைக்கு
வரையெனசிற்பினுமெருமைசிசரோமாக்கு
வாலைபமொப்போவண்புலவீர்வேத
வுணர்தெரியந்தணர்க்கோவர்நேரோசாண்டா
ரொர்டுக்காவற்பள்ளியர்கோமாக்கட்கீடோ
தரையிலிலேவணிசர்குந்தர்க்கெதிரோவேளாளர்
தாளாளர்க்கிணையோநீர்சாற்றுவீரே.

எனவும்,

காராளராயுள்ளார்கைக்கோளரைக்கண்டால்
ராந்போற்பின்னேசிரிப்பதே - ஞோராவான்
கூத்திமகன்கால்வந்தார்கொண்டாள்பால்வந்தாரைச்
சூத்திரன்பினேசாரோசொல்.

எனவும்,

கைக்கோளர்செங்குந்தரென்றுற்காராளரேலா
மெக்கோளினுமழுக்காறெய்துவதேன் - பொய்க்கோண்
மடுக்கென்றுமாய்க்குதங்கண்மங்கையர்போற்றுவி
படுக்கென்றறுமெனல்யாக்கு.

எனவும் வருவனவற்றுணர்க.

இதனால் பூர்வஞ் சம்பராவியற்றப்பட்டுப் பலவாண்டுகட்கு முன் புலத்துவான்களாற் பல பிரதிகளைக்கொண்டாய்ந் தச்சிட்டுள்ள எடுமுபதே சரியென்றும், இப்போ சில வாண்டுகட்குமுன் பதில் தம்மை நான்காம் வருணத்தரென வள்ளதற்கு நாணியோருடைய வேண்டுகோளால் பலபாடபேத முதலியன கற்பித்து வேளாளராவார் மூன்றாம் வருணத்தரென்றுங் குலாலராதியோரே நான்காம் வருணத்தரென்றுங்குறிப்பிட்டுச்செய்துள்ள வுரை போலியுரையென்றும், கச்சித்தலைச் செங்கோட்டத் திருவண்மகனூர் திருநாகத்தையாரென்னு மோருரையாசிரியர் முக்காலத்துமிலையென்றும், இப்போலி யுரையாசிரியருக்குச் சிறப்புப்பாயிர

மளித்த திருத்துருத்தி பொன்னிகுடிக்கிழாரு மற்றுனவரேயென்றும் சற்றேறக்குறைய பதினெண்டுக்கு முன்புதான் இவ்வுரையெழுதி யச்சிடப்பட்டதென்றும் பல பிரமாணத்தோகேர் தாபித்து; இவ்வுலகி லந்தணசாதிய வைதிகவொழுக்கமேற்ற உயர்வருணத்தரொழிய சூத்திரரென்னும் ஏனைய விழிவருணத்தர்யாருங் கல்வி செல்வ முதலியவற்றூற் பெருகப்பெருக வருணநிலைகளினும் பெருகுமாறு முயலுத லியல்பாதலால் அவ்வளவி னில்லாது கற்புடைப் பெண்டீரிடத்தும் பல களங்கத்தினை நிருமிக்குங் கணிகையரைப்போல மேற்கூறிய வைதிகவொழுக்கத்தினரா யொழுகுநின்ற கைக்கோளரென்னு மரபினர் காலவேறுபாட்டால் தங்கள் கலங்குன்றிக் கவக்கமுற்றிருக்குமிக்கா லவர்களைப் புறம்பழிக்கு மற்பமாக்கட் கறிவுறுத்தியதென வறிக.

20. அக்கந்தபுராணமுங் கம்பராமாயணமுஞ் சாதிப்பற்றையுஞ் சமயப்பற்றையு மேற்கொண்டு பல பிதற்றித்திரியுஞ் சழக்கர்களால் தட்டுக்கெட்டுத் தடுமாறியுள்ளன. இவ்விரண்டுள் சாதிப்பற்றையுடையோர் கந்தபுராணத்தின்கணுள்ள துணைவர்வருபடலத்தில்,

உதிதருமத் திரல்வீ ரரைவரை மேன்மையுடனிருந்தநாதன்
பதமலர்கள் பணிந்தெழுனுமவர்க்கண்டு பார்ப்பதியைப்பரிவா னோக்கி
மதியுமகு[illegible]மெழின்மானமுங்கையெனப்பெறுநம்மைந்தர்.

என்றதில் 'கை' என்னுமோர்பதத்தைக் களைவான்கருதி மதியுடையர்திறலுடையர் மானவருங்கலத்தினர் நம்மைந்தர்" எனவும், "தேவியது கேட்டுமைந்தர்க் கயிலருளவர்க்கெல்லாஞ் சிவன்வெவ்வேறு, தாவில் சுடர்வாளுதவி" என்றதில் 'கயில்' என்னுமோர்பதத்தை யகற்றக்கருதி "தேவியதுகேட்டு மைந்தர்க்கருள்புரியவவர்க்கெல்லாஞ்சிவன் வெவ்வேறுதாவில்சுடர்வாளுதவி" எனவு மாற்றிய வண்ணம் பலசெய்யுள்களைமாற்றியதல்லாமல், கந்தவிரதப்படலத்தில் 33-வது செய்யுளுக்குப்பின் "இன்னணமவரொழுகுறலு மெம்பிரை" என்றதையும் 126-வது செய்யுளுக்குப்பின் "நூறெழுமூயிரராய் நுவலுமூவர்ச்சிறூர்" என்றதையு மடியோடெடுத்தொழித்ததுபோலப் பலசெய்யுள்களை இருந்தவிடந் தெரியாதபடி கொத்தோடெடுத்தொழித்தும், இப்படலத்திற் கப்பாலிருந்த திக்குவிசயப்படலந் திசாபாலனைப்படல முதலியவைகளை உருவில்லாமற் சிதைத்தும் 10346 செய்யுள்களாக்கி அச்சிட்டு வழங்குவாராயினர். இவ்வாறச்சிட்டு வழங்குங்கால் அதற்குமுன்னரே வெகுரூர் பிரபல வித்துவானும் சிவானுபூதிமானுமாயிருந்த பெரியோனால் பலபிரதிகளைக் கொண்டாய்ந் தச்சிட்டுவெளிப்படுத்திய தொண்டமண்டல சதகத்துள் "கந்தப்புரமு மறுநான்கு கோட்டகத்தாரு மொன்றாய்க், கந்தப்புராணம் பன்னி

ராயிரஞ்சொன்னகச்சியப்பன், நந்தப்பல்லக்குஞ் சிவிகையுந்தாங்கியச் சன்னிதிக்சே, கந்தப்புராண மரங்கேற்றினர் தொண்டமண்டலமே." என்றிருந்த வோர்செய்யுள் இன்றுமிறவாதிருப்ப அதனிரண்டாமடியை "கந்தப்புராணம் பதினாயிரஞ் சொன்னகச்சியப்பன்" எனத் தங்களுக்காற்றினுக்கிணங்க மாற்றவுமாயினர். இதுபோலவே சமயப் பற்றையுடையோர் கம்பராமாயணத்துள் திருவவதாரப்படலத்தின் கண்ணே,

சுடுதொழிலரக்கராற்றொலைந்தவானுளோர்
கடுவ[illegible]ளைவடிகலந்துகூறலும்
ப[illegible]பாருணர்ந்தவப்பரமன்யாமினி
யவைதில்லெனமறுத்தவரையேயினான்.

எனவிருந்த செய்யளினீற்றடியில் "மறுத்தவரொடேகினன்" எனவும், "[illegible]ழுந்தனர்கடகளிற்றிறையுந்தாமரைச், செழுந்தவிசுகந்தவத்தேவும்" என்றதை எழுந்தனர்கறைமிடற்றிறையுந்தாமரைச், செழுந்தவிசுகந்தவத்தேவும்" எனவு மிப்படி யநேகஞ் செய்யுள்களைத் திருத்தியுஞ் சில செய்யு[illegible]ள முதலறவொழித்துங் கெடுத்ததுபோதாமல், ஆளுடையபிள்ளையார்

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சர
மேவியசிந்தையினார்கடம்மேல்வினைவீடுமே.

எ[illegible]றும், ஆளுடையவரசுகள்

முற்றினநாள்களென்றுமுடிப்பதேகா[illegible]மா
யுற்றவன்போர்களாலேயுணர்விலாவரக்கர்தம்மைச்
செ[illegible]வால்செய்தகோயில்திருவிராமேச்சரத்தைப்
[illegible]ற்றிநீப[illegible]வுநெஞ்சேபடர்சடையீசன்பாலே.

என[illegible]ர்,

திருவாய்மலர்ந்திருப்பதன்றி இன்னும் பல பெரியோர்களாற் கூறியுள்ளனவற்றையும், ஓர்தனியன்

கரைசெறிகாண்டமாறுகதைகளாயிரத்தின்மேலாம்
பரவுறுசமரம்பத்துபடலநூற்றொருபானுமீற
யுரைசெயும்விருத்தம்பன்னீராயிரமிராமகாதை
வரயிருகப்பன்சொன்னவண்ணமாமென்பமாதோ.

என்றிருப்பதையும், இவைகட்கிணங்க தூர்வாசராமாயணம் போஜசம்பு இரகுவமிசம் மகாவீரசரித்திரமெனச் சில உபநூல்களிருப்பவைகளையு முணராமல்; பிரயகத்திப்படலம் திருவிராமேச்சரப்படல முதலியவற்றை எங்குமில்லா தொழித்து ஏறக்குறைய 10511 செய்யுள்களாக்கி அச்சிட்டு வழங்குவாராயினர். அந்தோ! அன்னியதேசவாசிகளாய் இங்கிராஜரீகஞ் செய்யவந்துள்ள ஆங்கிலேயர்களால் பாண்டியராஜ் சமஸ்தானத்தினின் றுஞ் சோதித்தெடுத்த சில சாசனங்களை யாராய்ந்து சற்றேறக்குறைய எண்பது வருடத்திற்குமுன் (கர்னல் மக்கின்சி) என்பவரைக்கொண்டு தொகுத்தெழுதுவித்து (அக்ஸ்போர்ட்டு) என்கிற பட்டணத்தில் சமஸ் கிருத பாஷைக் குபாத்தியாயராகிய (ஹோரெஸ்ஹோமென்-வில்ஸன்) என்பவர் முன்னிலையி லச்சிட்டு வெளிப்படுத்திய (பாண்டியதேசத்தின் சரித்திரம்) என்னும் புத்தகத்தில், இராமராவண ரிலங்காசயம் பண்ணின பிறகு மன்னாருக்கெதிரே யிருக்கிற ஒரு சின்னத்தீவிலே ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து அந்தத் தீவுக் கதுமுதல் (இராமேசுரம்) என வழங்குவதாகப் பேர்கொடுத்து அந்தலிங்கத்தையு மாலயத்தையும் ஆதி சேதுபதியினு டைய விசாரணைக்குள்ளே யிருக்கும்படியாகவும் மேற்படி தலத்திற்கு வரப்பட்ட பெரியோர்களை விசாரணை பண்ணிக் கொள்ளும்படியாகவு மேற்படுத்தார். ஆதி சேதுபதியென்கிறது சேதுவுக்கு முதல் ராஜாவென் றர்த்தம்" என்று பதித்திருப்பதையேனும் பார்த்துத் தங்கள் மதத்தில் வைத்த செருக்கை யொழிக்க கிலையார்களா? கொடியர் கொடியர்! மகா கொடியர்! ஸ்ரீ குமரகோட்டத்தடிகள் கிருபையால் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிக ளருளிச்செய்த கந்தபுராணத்திற் கையிட்டுக் கெடுத்த கடும்பாதகரினுங்கொடியர்.

இவ்வுலகின் கண் வித்துவ சிரோமணிகளா யுள்ளபேர் ஓர் நூலை நூதனமாகச் செய்யுமிடத்துஞ் செய்துள்ளநூற் குரைசெய்யுமிடத்தும் அல்லதவைகளையாய்ந் தச்சிடு மிடத்தும் அவைகட்குச் சம்பந்தமான உப நூல்களினும் பாடாந்தரங்களினு முள்ள சங்கதிகளையுந் தேடியாராய்ந்து சேர்த்துப் பின்னும் விருத்தி யாக்குவதை யொழித்து, சில சங்கதிகளைக் களைந்து வேறு சிலவற்றைப் புணர்த்தலும், களையச் சக்தியன்றிக் கிடந் ததற்கிடுசெய்தமைக்கச் சத்தியறற விடுத்தலும், அவைகட் காதாரமாயு ள்ள நூலகளை வேறுபடுத்தலும், வேறுபடுத்தக் கூடாதவை யாயின் அவ ற்றையாண்டும் வெளியாகாதபடி மறைத்தலும், ஏதேனுமோர் நூல்களு க்கு முரைகளுக்கு மாக்கியோன்பெய ரில்லாவிடின் அந்நூல்களையுமுரை களையுஞ் செய்தது தாமேயென வச்சிட்டுச் சாதித்தலும், பூர்வமிருந்த வித்துவான்களில் பெருநூல்கள் பல செய்து பிரபலித்திருந்த சிலவர் வேறு சாதியராயும் வேறு சமயத்தராயு மிருந்தும் அவர்களைத் தஞ்சாதிய

ரென்றுந் தஞ்சமயத்தரென்றுஞ் சொல்லிப் பிரசங்கித்தலும், எவரேனும் பொதுவாய்ச் சாதியைப்பற்றியுஞ் சமயத்தைப்பற்றியுஞ் செய்துள்ள நூல்களிற் றஞ்சாதியிழிவையுந் தஞ்சமயவிழிவையு முயர்த்திப் பிறசாதி யுயர்வையும் பிறசமய வுயர்வையுந் தாழ்த்திச் சேர்த்து வெளிப்படுத்தலும், பிறசாதி நூல்களையும் பிறசமய நூல்களையும் அவைக்குரியா ரவற்றைக் வெளியாரிருத்தல் கண்டு அவைகளிருக்குமிடந் துருவிச்சென்று கைக் கொண்டு அவற்றைநீட்டும் வெளியிற் றலைகாட்டாதபடி யிறப்பித்தலும் இக்கலிகாலத்தன்மையே யன்றி வேறன்று. இங்ஙன மேற்கூறியவற்றிற் செல்லார் தனித்தனியே திருட்டாந்த மெடுத்துக் காட்டுவமெனின், அத் தகை[illegible]யான செயலினருட் பலரிக்கால் இறந்துளோரு மின்னு மிருந்து [illegible]ருமா யிருத்தலின் அதனு லெமக்குண்டாகு மூதிய மொன்றுமில்லை யாதலால் இவ்வீனச் செயல்களைக்கண்டு மனநொந்த சில பெரியோர்க ளாற் செய்துள்ள தனியன்கள்

தென்றமிழ்நாட்டிடைக்கருவிநூலாயோங்குந்
திவாகரம்பிங்கலனைநிகண்டாதியோடு
துன்றுபுராணங்கள்பிரபந்தங்கள்மேலோர்
சொலும்பெரியகதைகள்சிறுகதைகள்யாவு
மென்றசமயத்தருஞ்சாதியுளும்பொல்லா
வினப்புரட்டர்தோன்றிமிகவோங்கினரோ
வன்றுமுதற்றொன்மைநிலைமாறிவிட்ட
தப்பப்பாவினியவற்றையாவொணுதே.

எனவும்,

ஈதென்னகொள்ளையோவறியேன்றுன்று
ளெத்தனையோபுலவர்நால்வருணத்துள்ளும்
பேத[illegible]விருந்துபலநூல்கள்செய்தார்
பொரு[illegible]லுக்குரையுமிகவரைந்துவிட்டா
ரோதவற்[illegible]பர்காணுநூலையெல்லா
மொக்கவேதாஞ்செய்ததென்னச்சில்லோர்
காதலொடும்வெளியாக்கிப்பேரு[illegible]
காரானரெனக்கதையுங்கற்பிப்பாரே.

எனவும் வருவனவற்றானுணர்க. இந்நிலைமையில் கீர்த்தி கம்ப ராமாயண த்தை வடநூலினின்றுந் தமிழில் மொழிபெயர்த்துத் தன்தாண்டகையா கிய சடையப்பிள்ளை பல முறை நினைப்பூட்டிவர நீத மேறக்குறைய ஐம் பது பாக்களாகப் பதினைந்து மாதத்தில் பன்னீராயிரம் பாக்களிற் பாடி

முடித்தனரெனப் பெரியோர்களாற் கன்ன பாரம்பரையாய்க் கேட்டுள்ளேம். இஃதிங்ஙனமாக வதிற் றுங்கள் களைந் தொழித்துவிட்ட பாடல்கள்போக நீக்கிருப்பன வாகிய 10511 பாடல்களை நீத மெழுநூறுகப் பதினைந்து தினத்திற் பாடியதெனக் கற்பித்ததன்றி அதற்கொத்தபடி யக்காலத்தோரபியுத்தராற் செய்யப்பட்டதென, (கம்பநாடனென்பதற்குங் கம்பநாட்டாழ்வா னென்பதற்குக்கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாழ்வா னென்பதற்குத் தெய்வப்புலமை கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாழ்வா னென்பதற்குத் தனித்தனி கள்ளக்கவிகள் பாடிவைத்தற் கொப்ப) ஓர்பாடல்

> கழுந்தராயுனகழல்பணியாதவர்கதிர்மணிமுடிமீதே
> யழுந்தவாளிகடொடுசிலையிராகவவபிநயகவிநாதன்
> விழுந்தனூயிறதெழுவதன்முன்மறைவேதியருடனூராய்ந்
> தெழுந்தனூயிறவிழுவதன்முன்கவிபாடினதெழுநூறே.

எனப் பாடிவைத்தனர். எத்தேசகாலமுங் கற்பனைக் கதைகளோடு அவைக் கேற்ற கள்ளக் கவிகளும் பாடிக்கொண்டு காலங்கழிக்குங் கயவர்க்கு என்றுகா நிற்கும்.

21. இஃதிங்ஙனமாக வைணவப் பற்றினராகிய கம்பர் மகா வைணவராகிய இரா[illegible]மபிரானது சரிதத்தைத் தமிழிற் செய்யுட் காவியமாக வியற்றப்புக்கு அவர தவதாரமுத லணிமுடி புனைதல் வரையிலுள்ள சரிதங்களை வரன் முறைப்படிப் பாடி முடித்திருக்கத் தேனெழுகுந் துழாயலங்கற் றீர்த்தனுக் கன்புடையார்போற் றிரியும் வஞ்சமான முடையாராகிய பஞ்சராத் திரியரிற் சிலர் அக்கம்பரையு மவர்பாடிய வக் காவியத்தலைவரையும் வைண[illegible]த் துட் சேர்த்து அச்சேர்க்கைக் கிணங்க வக்காவியத்துட் கிடந்த பல பாக்களையும் படலங்களையும் அச்சிடு முன்னே சிலவு மச்சிட வாரம்பித்தபின் பலவு மாக மாற்றியு நீக்கியும் வரம்பழித் தொழித்தது போதாமல், "கம்[illegible] ராமாயணம் பாடி யரங்கேற்றியது" எனவொர் கட்டுக்கதை [illegible]கா திட்டத்திடனுண்டாக்கி அதிற்றங்கள் கொள்கைக் குரித்தாய் [illegible]ப்பவேண்[illegible] வனைத்தையும் "இராமாயணம்பாடக் கம்பரைச் சடைய[illegible]ள்ளை கேட்டுக் கொண்டதாக வாரம்பித்து அவரதைப் பாடி யரங்கேற்றி அதன் முன்னிலையி லவர் பலவரசர்களாலு[illegible]ர்களாலுஞ் சதுரங்கசேனை முதலி[illegible] பல வெகுமானங்களும் விருதுக்களும் பெற்று அவரவ் வெகுமான விருதுக[illegible]டும் வெளிக்கொண்டு செல்லுகையின லுண்டாகு ம[illegible]ங்களைத் துரைத்தனத்தார் வருஷவாரியில் தங்களுக்குவரு மேல்வாரத்தில் (கம்பர் போனவழிகண்டு கழித்த திவ்வளவு) என்று கழித்துக் குடிகளுக்குக் கொடுப்பது வழக்கம் என்பதாக முடித்துள்ள வரையில்" ஆங்காங்கு சந்தர்ப்பத்திற் கேற்றபடி நிரப்பியுள்ள கற்பனைக்காதைகளும் அக்காதைக

னுக்கொத்த கள்ளக்கவிகளும் இக்கால் கல்வியறிவி[illegible]ர் பலர்க்கும் அஃதுள்ளார் சிலர்க்கும் உறுதிக்காதைகளு முண்மைக்கவிகளுமாய்க் [illegible]ம்படி விளங்குவனவன்றோ? அத்தகைய பல காதைகளில்

ஈசானமுகத்திலெவற்றையும்படைத்து
மெண்ணியதற்புருடமுகத்தாற்றிதித்துங்
கூசாதவகோரமதாற்சங்கரித்துங்
குளிர்வாமமெனுமுகத்தாற்றிரோபவித்து
நேசமுறசத்யோசாதத்தினாலே
நிகிலமெலாமனுக்கிரகித்துநின்றபின்னர்
மாசிலதோரீசானமாதியான
மாமுகத்திலாதிசைவமரபைத்தந்தார்.

அனாதிசைவசுத்தபுவனத்தராகு
மத்தனார்தமைப்பூசைபுரியும்வண்ணந்
தனாதிவமிசத்தர்களாமாதிசைவர்
தமக்காதியத்தியத்தைத்தாமளித்து
மனாதியொருங்கறுவகைதீக்ஷையும்புரிந்து
வளர்தருமாசாரியபீடத்திருத்தி
யெனாதுதொழிலைந்தையும்பெற்றுலகமெல்லா
மிப்பற்பத்தாவளிப்பீரென்னவீந்தே.

சற்பமெனுமிப்பூதியதனையித்தக்
காசினியிலெவ்வகையாச்சிரமத்தோர்க்கு
மொப்பாகநீரளிக்கின்யாமளித்த
வுண்மையதாஞ்சத்தியஞ்சத்தியமுரைத்தோம்
பொற்பாணவிதன்பெயர்சற்பானுகற்பம்
பொருந்துமுபகற்பமிவைபோகம்வீடு
தப்பாமலளிக்குமிதுவேதத்துண்மை
தவரியாகமத்திருக்குஞ்சாரந்தானே.

எனச் சிவலிங்கோற்பவ மான்மியத்திலு[illegible] "ஆவாவிருவரறியாவடி தில்லை யம்பலத்து மூவாயிரவர்வணங்கநின்றோன்" எனத் திருக்கோவை யாரிலு மருளியபடிச் சிவசம்பந்தராய் பல சைவர்க[illegible]லெல்லாரு மாசாரியர்க ளாய் அவ்வவர்களுடைய மாயா மலபந்தங்களை மாய்த்தலெண்ணி விபூதிப் பிரசாதமளித்து ஆட்கொள்பவராயும், சுத்தபுவனாதிகாரிகளாயும், விண்டு வயனியராலு மறியப்படாத திருவடியைச் சதா தரிசித்திருக்கும் பேற்றினை யுடையவராயுமுள்ள தில்லைமூவாயிரவருடைய வரம்பில் [illegible]டைமை

வரம்பிலாற்றலுடைமை முதலிய சுபாவகுணங்களைத் தமக்கியற்கையாக வுள்ள வரம்பிலஞ்ஞானமுடைமை வரம்பிலழுக்காறுடைமை முதலிய வற்றினால் இழித்தல்செய்யக் கருதி, கம்பர் திருவரங்கத் தந்தணருத்தர வின்படி தான்பாடிய வக்காவியத்திற்குக் கையொப்பம் வாங்குமாறு அ மூவாயிரவரு மொருங்குசேரு மற்றநோக்கி யிருந்தனரெனவும், அத விரைவிற் பெருததா லவர்வருந்தித் துயிலுறுங்கால் அவரது சொப்பனத் தில் தில்லை கோவிந்தராஜரெழுந்தருளி அவர்க ளொருங்குசேரு மற்றந் தெரிவித்தன ரெனவும், அஃதுணர்ந் தவர்செல்லுங்கால் மூவாயிரவரும் விடாகந் தீண்டியிறந்த தம்மகவுக்காக ஒன்றுசேர்ந் திருந்தார்களெனவும், அதுகண்ட கம்பர் தனது வரவின் காரணத்தை யவர்கட்குத் தெரிவித்துப் பின்னர் தானவர்கள் வேண்டுகோளால் இறந்துள்ள மகவை யிம்மூன்று வெண்பாக்கள் பாடி யுயிர்ப்பித்தாரெனவும், அதுகண்ட தில்லைமூவாயிர வர் கம்பரை யுள்ளபடி தம்மினுஞ்சிறந்த மகாத்மாவென மதித்துப் பயந்து உடனே யவரை யுபசரித்துத் தலையில் நெருப்பு விழப்பட்டவர்களைப் போலப் பரபரப்பாக வந்து அவரிடத்திருந்த காவியத்தை வாங்கிப் பா வையிட்டு இவருக் கொப்பான வித்வானும் இவ்விராமாயணத்திற் கொப் பான காவியமு முண்டோவென ஸ்ரீ சிவபெருமானையு மவர்செய்தருளிய சிவாகமங்களையுமே யன்றி ஏனைய தேவர்களையு மாகமங்களையுஞ் சொப்ப னத்திலுஞ் சிறிது மதியாதவர்களான தாமனைவரு மிகவியந்து மதித்துத் தங்களுக்குள்ளே பிரமானந்த மடைந்தவர்க ளாயினும் (குணத்தைமாற் றக் குருவில்லை) என்பதற் கேற்பத் தங்கள் சுபாவகுணம் போகாமல் ஏதேதோ சில வவரைக்கேட்க அதற்கெல்லா மவர் தக்க விடையளித்த பின் அக்காவியத்தின் பாயிரக்கவிகளு ளொன்றாகிய

நாடியபொருள்கைகூடுஞ் ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே.

என்னுங் கவியுளடங்கிய பொருள்களைப்பற்றிச் சில கேட்க அவைகட்கு மவர் தக்கவிடையளிக்கவும் "நீடியவரக்கர்சேனைநீறுபட்டழிய" என்ற தற்கு நீர் வேறெதைச் சொன்னாலுஞ் சொல்லிக்கொள்ளும் அந்தராக்கதச் சேனை [illegible] பினது நீறுபட்டுத்தானழிந்ததென்று "அப்படி யோரறிவில்லாப்பேதையர் கொள்ளைக்கீராய்ச்" சாதுரியத்தோடுஞ் சொல் லிச் சரிசரியென் றொப்புக்கொண்டு கையொப்பஞ் செய்தன ரெனவும் பிதற்றி யுள்ள பல பிதற்றல்களில்; அவ்வெண்பாக்கள் மூன்று மரவந் தீண்ட [illegible] தில்லை மூவாயிரர் மகவை யுயிர்ப்பிக்கப் பாடிய வெண்

பசக்கனெனச் சாதித்தது மெய்யா? அல்லதக் கம்பரே [illegible]னபாடிய வேளாளரது திருக்கைவழக்கக் கவியடிகளி னொன்றில் ஏரெழுப தரங்கேற்றுகையி லவ்வரங்கத்திற்கு வர வெளிக்கொண்ட சடையப்பிள்ளை வழியி லரவால் தீண்டப்பெற்று வந்து மூர்ச்சையடைந்தபோது பாடிய வெண்பாக்க ளென்பதற் கடையாளமாகப் "பாவலர்தா - மேரெழுபதோதியரங் கேற்றுங்களரியிலே காரிவிடாகங்கடிக்குங்கை," எனப் பாடிவைத்தது மெய்யா? இதனுக் கெடுத்துக்காட்டி யாகத் தொண்டமண்டலசதகத்துள்

அழுவதுங்கொண்டுபுலம்பாதுஞ்சண்டதுமறைத்தே
ரெழுபதுங்கொண்டுபுகழக்கம்பவாணனெழுப்பவிசை
முழுவதுங்கொண்டொருசொற்பேசகெய்யின்முழுகிக்கையின்
மழுவதுங்கொண்டுபுகழ்கொண்டதாற்றொண்டமண்டலமே.

எனவுங் கூறியிருப்பதா லிவையனைத்தையுங் கல்வி யறிவிற் சிறந்த க[illegible]ன்க ளுய்த்துணர்ந்து இத்தகைய வாபாசப் பொய்யர் முகத்தி லவ்வாபாசப் பொய்க்கதையைக் கிழித்தெறியக் கடவர்.

ஒட்டக்கூத்தர் சரித்திரச் சுருக்கமென முன்னரொருவர் நச்சிற் பதித்தோர் மேற்கூறிய மூன்று வெண்பாக்களைக் கம்ப ரிராமாயணம் பாடித் திருவெண்ணெநல்லூரி லரங்கேற்றத் தொடங்குகையில் அவ்வரங் கேற்றுங்களத்தை நாடிவந்த சடையப்பிள்ளைக் கிவ்வாபத்து நேரிட அப் போது பாடியதாகப் பதித்திருக்கின்றனர். அஃதவர் பாடியுள்ள திருக் கைவழக்கத்திற்கு முரணாயிருப்பதை யறிந்திலர்போலும்.

22. இச் சிலையெழுபதைக் கம்பர் (வேளாளரைப் பாடிய வாயால் வேறொருவரைப் பாடேன்) என்னுங் கோட்பாடுடையவ ராதலால் அவர் செய்திலரெனச் சிலர் கூறுவர், அதனைச் சிலர் தடுத்து, (வேளாளரைப் பாடிய வாயால் வேந்தரைப் பாடேன்.) என்பதே யவர் கொள்கை யென் றும், அதற்கவர் பிற்காலத் தோர்கவி

வேளாளரைப்பாடிவேந்தரைப்பாடேனென்றான்
வாளார்கவிக்கம்பன்வாய்மையே - கேளா
யவைநிகரைப்பாடியவாயாலவரைப்பாடி
னவைதருமென்றோர்ந்தநலம்.

எனக்கூறியிருத்தலே சான்றென்றும், வைதிகரெர்ழிய மற்றைய கன்னர் [illegible] ம்பட்டர் முதலியோரு ளெவரேயாயினுந் தனக்குப் பொருள்தர

வல்லராயின் க... யின்றிப் பாடுவ தவரது வழக்கமென்... அதற்கவர் பிற்காலத் தோர்கவி

காசுக்குக்கம்பன்கருணைக்கருணகிரி
யாசுக்குக்காளமுகிலாவனே - தேசுபெறு
மூழுக்குக்கூத்தனுவக்கப்புகழேந்தி
கூழுக்கிங்கௌவையெனக்கொள்.

எனக்கூறியிருத்தலே சான்றென்றும், அவ்வாறே யவர்பாடிய தனியன்க ளிற் சில முறையே

ஆழியானாழியயனெழுத்தாணியென்பார்
கோழியான்குன்றெறியவேலென்பா - னாழியா
னங்கைமழுவென்பானருள்பெரியமாவண்ணோச
ிங்கனுலேக்களத்திற்சென்று.

எனவும்,

சிரம்பார்த்தானீசனயன்றேவிதனைப்பார்த்தான்
கரம்பார்த்தான்செங்கமலக்கண்ண - னுரஞ்சேர்
மலைவெருத்ததிண்புயத்துவண்ணானைசிராமன்
கலைவெருத்தநேர்த்திதனைக்கண்டு

எனவும்,

ஆரார்தலைவணங்காரரார்தங்கையேயடா
ராரார்தன்சத்திரத்திலாரமுதார் - சீராருந்
தென்புலியூர்மேவுஞ்சிவனருள்சேரம்பட்டத்
தம்பிபுகான்வாசலிலேதான்.

எனவு முள்ளவைகளே சாக்ஷியென்றும் வற்புறுத்திக் கூறுவர். இச்சரித் திரத்தினை யெழுதியோரு மிவ்வனுபவங்களை யெல்லா நோக்கியே சில ... தயு மவர் பாடியிருப்பாரெனச் சேர்த்துக்கொண்டனர் போலும்.

... இவ்வுலகறியப் பஞ்சமரென்னும் பண்ணையாட்களோடு வேளா ளருளாடவரும்பெண்டிரும் வித்தியாசமின்றிக் கலந்துண்டு வாழ்வரென் பதற்கு அவ் வேளாண்குலத்துள் நடக்குஞ் சுபா சுபங்களில் நாடுடைத் தப் கூறுங்கால் "பறையரோண்டநாட்டார்" எனக்கூறி யழைத்தலுந் திச் சுபங்களில் விருந்து முதலிய மரியாதைகட்கும் அசுபங்களில் ருதக

முதலிய க[illegible]களுக்கும் அப் பண்ணையாட்களு மூரிமாசேன்பதைஇன்றுங் காணலாம். இதுபற்றிக் கம்பரவ் வேளாளர்மேற் பாடிய திருக்கை வழக்கத்தில்

பாரிய,

வீரபொ[illegible]யன்வீயாமலோர்கரத்திற்
சோறுபடைத்துண்டகடர்மணிக்கை.

எனக் கூறியதன்றிப் பிற்காலத்தோரராற் செய்யப்பட்டுள்ள தொண்டமண்டலசதகத்துத் தனியன்களினும்

தரையார்மழையுந்தபனனும்போலத்தடையுமின்றி,
யுரையாதுநீசனெனுமிண்டமையாலுமொருனமின்றித்
திரையார்புவியிற்புகழேபடைத்துத்தினந்தினமும்
வரையாதுவள்ளன்மைகாட்டுவதாற்றொண்டமண்டலமே

எனவும்,

கந்தவுயிர்தனையளித்தான்கிடங்கில்வேந்தன்
வயலூரானமடங்கர்தெனவுதைத்தான்
செந்தமிழோர்கிளைவளர்த்தான்வேலூர்மன்னன்
செம்பியன்முன்வழிநடந்தான்பேறையூரா
னந்தமுனநாணளித்தான்வீராதி
யடையாதவாசலானிடையாலத்தூ
னந்தமுடனமுதுண்டான்போரலூரா
னடைப்பரியாவிரசங்கொடுத்தானுறையானே.

எனவும்,

அன்னுளிற்குமுணன்றன்சிரசையீந்தா
னகளங்கச்சோழனொருபிள்ளையீந்தா
னென்னுருந்தமிழ்க்கூத்தன்கவிதைக்காக
வொராயிரஞ்செங்குந்தர்முதற்றலையையீந்தார்
ணபன்னுகமணிகொடுத்தானொருவேளாளன்
பறையனேனெடாக்கவுண்டானன்னைசோம
னின்னுளிலடிபொறுத்தான்பிரமராய
னீன்றகலியுகராயாயினியமாலே,

எனவும்,

வெறும்பறையரோடுசிலவேளாண்பறையர்
குறும்பொடுவெள்ளாடெனக்கூடுற்றூர் - நிறஞ்சொலக்கேன்
நாக்கைபுருவிரண்டுங்கண்டகண்களாலுற்று
நோக்கியழைத்து நுவல்,

எனவும்,

மாங்காட்டுவேளாண்மகளை மணமகன்பாற்
போக்காட்டிற்பண்ணைபுணர்ந்தான்கா - ளூங்கா ளூ
மக்கண்மெய்தீண்டலுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்செவிக்கு.

எனவும்,

கள்ளாலடவோர்பறைவெறிமீறியுன்காதலியாடையுரீஇத்
தள்ளாநிற்றலுமேயடவோடிதடுத்திர்த்தனனேடா
கொல்லாளுதலடாவடலேசெங்குந்தனென்றோர்தியடா
வெள்ளாளாவடாவடவ்வெள்ளாட்டியைக்கேள்விடடா

எனவும்,

காய்த்தாடுதெங்கெனக்கொங்கையையாட்டியென்கண்ணெதிரே
நீய்த்தானெற்குற்றலுநீண்டதெண்கோசநெடுங்கணக்கன்
போய்த்தாவென்றோதியவப்பணமாரதுபோடியுனைச்
சாய்த்தானவோட்ச்குநீவார்த்தானகூட்சகுஞ்சரிப்பட்டதே.

எனவும்,

செங்குன்றூர்வேளாண்சிறுமியரேனோடபறையோ
டங்காடிக்கண்வந்தலைகின்றூர் - தங்கொழுநர்
போதாமளவுநன்செய்புன்செய்க்குழைத்து றங்கு
மேதாவிடிப்பவர்தீமை,

எனவும் வருவனவற்றானுணர்க.

24. இச்செய்யுளைக் கூறியதற்கே இங்ஙனமாக இதனடித்தடியிற் குறித்துள்ள பெய்யுரைக்களைந்து பொதுவாக்கி ஒருரும் பேருமில்லாத வித்வான் குலோத்துங்கச் சோழராஜன்மேல் பாட்டுப் பாடி வந்தானெனவும், ஓர் சமூக வித்வானைப் படைத்துள்ள எத்தகைய இராஜ சபையின்கண்

னும் வேறொரு வித்வான் யாதேனுமோர் பாடலையேனும் பிரபந்தத்தையேனும் பாடிக்கொண்டு வரின் அச்சமுக வித்வான் பார்வையு முத்தரவுமின்றி இராஜனது சன்மானமும் வெகுமானமு மவனுக்குக் கிடையாதாக) அப்பாடலுக் கவன் வியந்து பல வெகுமதியோடு குடை காளா முதலிய விருதுகளுங் கொடுக்க வுத்தேசித்தா னெனவும், அப்போது கூத்தர்கண்டு மனம்பொறாராய் இச்செய்யுளைப் பாடித் தடுத்து அன்றுமுதல் கவிபாடி வருபவர்களை யெவரையும் வேறு பேதமின்றிப் பிடித்துச் சிறைச்சாலையிலடைப்பித்துச் சயலட்சுமி சம்பத்துலட்சுமி சகலகலாலட்சுமிகளின் வடிவத்தினளான தேவி கொலுவீற்றிருக்கின்ற நவராத்திரி காலத்திலவர்களை வெளிப்படுத்தி இவ்விருவராகக் குடுமியோடு குடுமி முடிபோட்டு இறக்கி நிற்க நிறுத்திப் பிடாரிக்குச் சோடுகடா வெட்டுவதுபோல (அப்பிடாரியினுங் கொடியானாகிய வத்தேவிக்குமுன்) சற்று மிரக்கமென்பதில்லாமல் அவர்கள் தலைகளைப் பதைக்கப் பதைக்க வெட்டி வழக்கமாய்ப் பலி செலுத்தி வருவ துண்டெனவும், அது பற்றிக் கூத்தரைக் குறித்துப் பிற்காலத்தார் "இரண்டொன்றாய் முடிந்து தலையிறங்கப்போட்டு வெட்டுதற்கோ கவியொட்டக்கூத்தனில்லை" எனப் பாடியிருக்கின்றன ரெனவும், இவ்வழக்கப்படி புகழேந்திப் புலவர் சிறைச்சாலையினகத் திருந்தகாலத்திலும் அனேக வித்துவான்களைப் பிடித்தடைத்து வைக்க அதை யவர்பார்த்து ஐயோ! சண்டாளன் பாவமென்பதும் பழியென்பதும் பாராமல் தன்னைப் போன்ற புலவர்களை இவ்வாறு சிறைப்படுத்திவெட்ட மனந்துணிந்தானே! என வியசனங் கொண்டவராய் அச்சாலையிற் பலவகைக் குற்றவாளிகளாயடைபட்டிருப்பவர்களுக்குள் தாழ்ந்த குலத்தரான அம்பட்டன், குயவன், வண்ணான், கருமான், தச்சன், தட்டான், வேளாளன் இவர்களைத் தெரிந்தெடுத்து அச்சிறையிருப்பிலேயே சம்பிரதாயத்துடன் இலக்கிய விலக்கணங்கள் பயிற்றி அதிக சமர்த்தர்களாம்படிச் செய்தா ரெனவும், பின்னர் நவராத்திரி சமீபித்தபோது பத்தாநாளாகிய விசயதசமியினன்று தேவி சன்னிதிக்கு முன்னே இரண்டு பக்கங்களினும் போடப்பட்டுள்ள நாற்காலிகளில் மேசோழராசனொன்றிலுங் கூத்த ரொன்றிலும் கத்தியையுருவிக் கையிற் பிடித்தவண்ணம் எதி ரெதிராக வுட்கார்ந்திருந்தன ரெனவும், அக்கால் கூத்தர் முந்தி சிறைச்சாலை யதிகாரியைநோக்கி உன் வசத்துள்ள படித்த கடாக்களைப் பிடித்துவாவென்று கட்டளையிட்டன ரெனவும், அவ னதிக வியசனத்துடன் போய் சிறைச்சாலைக் கதவைத் திறந்து அங்கடைபட்டுள்ள வித்துவான்களை யெல்லாம் வெளியில் வரும்படி யழைக்க வவர்கள் ஐயோ தெய்வமே! இன்றைக் கேறக்குறைய நூறு பேர் வரையில் நறுங்கி யிறக்கும்படிச் சம்பவித்ததே! என வயிறலைந்து கண்ணீர்விட் டழுதுகொண்டே வெளியில்வர அப்போது புகழேந்திப் புலவர் மனங்கலங்கி அந்தோ! இவர்களிற் பெரும்பாலார் சொறபக் கல்வி

யைக் கற்றவர்களா யிருப்பதனால் அந்தக் காலாந்தகன் ,கேட்குங் கடின கேள்விக்கு உத்தரஞ்சொல்லத் தெரியாமல் விழிப்பார்களே: அதுகண்ட பாதக னனியாயமாய்ப் பதைக்கப் பதைக்க வெட்டி யெறிவானே: என்று நினைத் தவர்களை யெல்லாம் பின்னே நிறுத்தித் தம்மிடத்திற் சந்தேக விபரீதமறக் கல்வி பயின்ற அம்பட்டன் முதலிய வெழுவரை ஒருவன்பி னொருவனாய்க் கூத்தர் முன்னே போகும்படி திட்டஞ்செய் தனுப்பினரெ னவும், அவர்க ளவ்வாறே சென்று அவர்கேட்ட கேள்விக்கு அவமதிப் போடுங் கூடிய பல தூடணப் பாக்களால் விடை கொடுத்தார்களெனவும், அதனாற் கூத்த ரவமானமடைந்து வெட்கி அக்கினிதேவனுக் கபிடேகம் பண்ணியவாறாய் முகங்கருகி அதுகாறு மவரைப் பிடித்திருந்த அகங்கார மாகிய துஷ்டப்பேய் விட்டுத் தொலைந்த தெனவும் (அக்கூத்தனார் கல்வி யிற் றேர்ச்சியில்லாது கவிகளென வெளிவருவோர்க் கச்ச முண்டாகு மாறு தமது வெற்றிக்கொடித் தம்பத்தின்கணெழுதிக் கட்டியுள்ள பட்டயத்தின் கருத்தையும் அக்கருத்துக் கிணங்கப் பிற்காலத்தொருவர் அக்கூத்தனாரது பராக்கிரமம் விளங்குமாறு பாடியுள்ள "குட்டுதற்கோ" என்னும் கவியினையுமே யாதாரமாகக்கொண்டு) ஒரு பொய்க்கதை கட்டியதற்கேற்ற சில கள்ளப்பாக்களும் பாடிவைத்து மகிழ்ந்தார்கள். அக்காலத்திற்றானே யதையுணர்ந்து கண்டிப்பவரின்மையால், அச்சியந்திர சாலைக ளுண்டாகிய விக்காலத்தில் பலவகைப் புத்தகங்களிலும் கற்றுவல்லோருங் கற்றுவல்லோரல்லாரும் உண்மையென்று நம்பத் தக்கதாக மனங் கூசாது பதித்து வருகின்றனர். கூத்தர் கவிச்சக்ரவர்த்தி யாதலால் கல்வியைக்கசடறக் கல்லாமுன்னே கவிகளென வெளிவருவோர்க் கெல்லாம் இத்தகைய கடுந்தண்டனை யுண்டாமென ஓர் பட்டயமெழுதிக் கட்டியதல்லாமல், அத்தகைய கடுந்தண்டனையை யாரிடத்திலேனுஞ் செலுத்தியதாக யாதேனுமோர் சாதனமுண்டோ? மேலுமக் கூத்த ரிளமையிலேயே பல பெரியோர்களால் வித்வசன கோலாகலரென்றும் சாரதாபீட சம்பன்னரென்றும் வரகவியென்றும் வீரகவியென்று மழைக்கப்பட்டு, இன்னுந் தெய்வ கவி முதலிய பல சிறப்பு நாமங்களால் யாவருங் கொண்டாடித் துதிக்க வீறிக் கவிகளா யுள்ளோரெல்லாந் தமக்கடங்கித் திறைதந்து பணிசெய்ய அதிக வீரியத்தோடு மிருக்கினு வன்றோ இவ்வுல கனைத்துக்கு மேகச் சக்ராதிபதியா யரசியற்றுவோனாகிய குலோத்துங்கச் சோழமகாராஜனும் "பாடும்புலவர்ப்பணிகொண்டகூத்தன்" எனவும், அவரது "பதாம்புயத் தைச்சூடுங்குலோத்துங்கசோழனென் றேயெனைச்சொல்லுவரே" எனவுங் கூறித் துதித்திருக்கின்றான். இயற்கையிலேயே ஈசுரபத்தி சிவகாருண்ய முதலிய சாதனங்களைத் தமக்கங்கமாகப் பெற்றுள்ள கூத்தனாரை இவ்வா றிழித்துரைக்கு மிழிகுலப் பாவிகட்கு என்ன நிரயமோ?

இத்தகைய கொடுஞ்செய்கைக்குக் கூத்தனுர் குடம்பட்டிருக்கினுஞ் சூரிய வமிசத்தனு மனுகுலத்தவனுமாய் மன்னுயிர்களைத் தன்னுயிர் போற் பாதுகாத்துச் சிவாலயப்பிரதிட்டை முதலிய சிவபுண்ணியங்களை இடைவிடா தோம்பி நீதி முறைமையிற் கோடாது.

ஆடுஞ்சடைமணிகாவசையாமலகிலமெங்கு
நீடுங்குடையைத்தரித்தபிரான்.

என்றதற்கிணங்க வரசு செலுத்துவோனுகிய சோழராசனு மொத்திருந்தனனென்றால், இதனை நம்பத்தக்கவர் யார்? அல்லது சோழராச பரம்பரையில் இந்தக் குலோத்துங்கச் சோழராசன் மாத்திரந்தான் கொடுங்கோல் செலுத்தினனென யாதேனுமோர் திருட்டாந்தமுள்ளதா? இந்தச் சோழராஜனை லோர்கால் சினக்கப்பட்டு நிந்தித்துச்சென்ற கம்பரும் அந்நிந்தனைக் கவியுள், "என்றுமடைந்தாரைக்கொல்லுமகளாங்காதுங்கா" என்றது "என்றுமடைந்தாரைக்காக்குமகளாங்காதுங்கா" என வவனியல்பை யெடுத் துரைத்தாரே: அன்றியு மக்காலத்திருந்த பல பெரியோர்களுமவனை யருட்சொருபியெனத் துதித்துப் புகழ்வதல்லாமல் வீரசிங்காசனமடத்தாசாரியவபிடேகம்பெற்ற வோராருந்தவரேறுமன்றே

ஆதவக்குலத்தினிலவதரித்தரு
ளோதமில்சிவநெறியிறையுங்குன்றிலாய்
ம[illegible]தவர்பத்தியுமனுவிஞ்ஞானமு
மோ[illegible]ன்னிடத்துண்மைகண்டனம்.

மானிடப்பிறப்பினையன்னி[illegible]னர்க்கெலா
மூனமதுற்றிடுமொன்றுற்றகி[illegible]
யானதையுணர்ந்தகளங்கனென்னும்பேர்
தேனலர்தாரினுய்சிவனளித்தனன்.

எனக்கூறி கேரிற்புகழ்ந்து கூத்தனுரையும்

அருங்கவிப்புலவநீயறைந்தசெய்யுளுக்
கிருங்கடலுலகமுமேமமாகுமே
தரும்பரிசாயினுந்தக்கவாகுமோ
நெருங்குகின்புகழ்நிலைநிற்குமென்றுமே,

எனத்துதித்தவர் கவித்திறத்தினைக் கொண்டாடினுரே: இதுபோலவே பிற்காலத்திருந்த பெரியோரும்

கும்பமுனிவரன்கொண்ட குண்டிகையிற்பிறந்தேகி
யிம்பர்நிலந்தனைவிளக்குமெழில்கொளுங்காவிரியிருபா
லம்புவியையரசாளுமரசர்கோனடற்செல்விக்
கும்பர்புனைமணிமகுடமொத்திலங்குபுயமலையான்.

வேல்கொண்டவிழிவாணிவீற்றி[illegible]க்கும்வியனாவான்
மால்கொண்டமலர்மாதுவாழ்ந்திருக்குமணிமார்பன்
கால்கொண்டகழலரனுக்கன்பாகுங்கருத்தாவா
னூல்கொண்டநெறியினர்க்குகோன்மைதிகழ்தருவாவான்.

அருளினூழியடலுக்குராமனே ,
மருளிலாமையில்வாழ்த்துசனகனே
பொருள்குபேரனற்புத்தியிற்பொன்னனே
யுருள்கொடேரினனுண்டமிழ்க்கும்பனே.

தராதலங்குடைத்தண்ணிழற்காத்துவிண்
பராவுவாசவப்பண்பினன்வையகத்
தராசராசனெனும்பெயராகளங்
கராவசற்குணத்தாலகளங்கனே.

என்றவ் வரசனை வியந்து கூறியதன்றிக் கூத்தரையும்

வெய்யவன்குலத்துதித்திசைவிளக்கியவேந்தன்
வையகம்புரந்தருளகளங்கன்வாழ்மன்றில்
பொய்யில்பாரதிபுருடன்மெய்யடுத்ததுபோன்று
மையிலாக்கவிவரனொட்டக்கூத்தன்வாழ்ந்தனனால்.

என்றிது முதலிய பல பாக்களால் வியந்து அவர் கீர்த்தியைச் சிறப்பித்திருக்கின்றனரே: மேலும் புவிச்சக்ரவர்த்திகளாயுள்ளோர் தமக்குக்கீழாய வரசரை யடக்கி யாண்டு அடங்காரை யக்கணமே சிறைப்படுத்தித் தண்டிக்கு முறைமையைத் தமது பட்டயத்தி லெழுதிவைத்தல்போலக் கவிச்சக்ரவர்த்தியாகிய [illegible]த்தர் தமக்குக்கீழாய கவிகளை யடக்கி யாண்டு அடங்காரை யக்கணமே சிறைப்படுத்தித் தண்டிக்கு மியல்பினராகலின் அத்தண்டனை[illegible] பொதுவாக அவர் பட்டயத்தின்க ணெழுதிவைத்தபடி பிற்காலத்தார் "குட்டுதற்கோ" என்னும் பாடலிற் குறித்துவைத்தனர். அப்பாடலுள் முறையே பில்லைப்பாண்டியரையும் வில்லிபுத்தூராரையுங் கூத்தரையுமமைத்து

குட்டுதற்கோபிள்ளைப்பாண்டியனிங்கில்லை
குறும்பியளவாய்க்காதைக்குடைந்துதோண்டி
வெட்டினமட்டறுப்பதற்கோவில்லியில்லை
இரண்டொன்றாய்முடிந்துதலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக்கூத்தனில்லை.

எனப்பாடிய தென்கருதியோ வெனின், கிராமாதிபதி, தேசாதிபதி, பூமிதிபதி என்னு மூவரு முறையே அடிக்கற்றண்டனை, அறுத்தற்றண்டனை, ஆருயிர்த்தண்டனை என்னு மூவகைத் தண்டனைகள் செய்தற்குரியராயிருத்தல்போலக் கவிவீரராகிய பிள்ளைப்பாண்டியனார் குட்டுதற்றண்டனையுங் கவிராசராகிய வில்லிபுத்தூரார் கொய்தற்றண்டனையுங் கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தனார் கோறற்றண்டனையுஞ் செய்தற்குரியராயிருந்தனரென்பதை விளக்குவான்கருதிப் பாடியதேயன்றி இம்மூவரு மொருவரு மத்தகைய தண்டனைகளைக் கையாடியதாக யாதொரு சரிதமு மிதுகாறு முளதெனக் கேட்டிலம். ஆனாலிவர்கள் கல்வியின்கண் முறையே அற்புவீரமும் அதிவீரமும் அதிதீரவீரமும் படைத்துளாரென ஆன்றோரா லுமவ்வவர் செய்துள அரும்பாக்களாலு மறிந்துளோம். ஆனதினலன்றே யிவர்களிருந்தகாலத் தற்பகவிகளை யாய்ந்துதேடினுங் கிடையாராகி இக்காலளவிலராயுளரென்பதற்குச் சான்றாக

விளையாட்டாக்கவிதைதனைவிரைந்துபாடித்
தெட்டுதற்கோவறிவில்லாத்துரைகளுண்டு.
தேசமெங்கும்புலவரெனத்திரியலாமே,

எனக்கூறி யப்பாடலை முடித்தனர். மேலு மரசர்களுக் கோதியிருக்கு நீதி நூல்களில் மாதா, பிதா, குரு, புரோகிதர், புராணிகர், வேதப்பிராமணர், தபசிகள், வித்துவானர், விகடகவிகள் சத்தவீரர், தானாதிபதிகள், தூதர், சுற்றத்தார், பிணையாளர், வறியர், பாவலர், அடைக்கலம் புகுந்தோர், போக மாதர் என்னு மிப்பதினெண்மரும் பகைவராலுங் குற்றஞ்செய்யினும் இவர்கள்பாற் கோறலென்னுங் கடுந்தண்டனையைச் செலுத்தலாகாதெனச் சொல்லியிருக்கின்றதே: அந்நீதி நூல்களையுண்டாக்கிய மனுகுலத்தவனான சோழராசன் அவ்விரண்டிலொன்று மில்லாதவர்களாய்ச் சிறையிருப்பினின்றும் வந்த ஏழைக்கவிகளைக்கொல்ல மனந்துணிந்[illegible]த்தகைய கொடுஞ்செய்கையை யெண்ணவெண்ண இரும்புழிக்கி நடுங்குமாயின், இதனையுளதாகக் கற்பித்தெழுதிவைத்த பாவிகளிதயம் இரும்போ? கல்லோ? மரமோ? மற்றியாதோ வறிகிலம். இயற்கையிலேயே கொடுங்கோல் செலுத்துங் குணமில்லா வரசனே யாயினுங் கவிஞரிடத்திற் கடுந்தொழில் செய்யக் கனவினு நினையானே;

செங்குந்தமன்னர்குலதீபிகை.

அன்றியுங் குலோத்துங்கச் சோழனுக்குக் கூத்தர் பிரதி பிதாவும் பிரதிநிதியும் போதகாசிரியரும் மந்திராலோசனைத்தலைவரும் சமூகவித்துவானுமாயிருக்க அவரையவமந்திரி லம்பட்டன்முதலிய விழிகுலத்தருஞ் சிறையிருப்பினின்று வந்தவருமான வெகுவவர் அவர் கேட்ட கேள்விக்கடங்கி யுத்தரஞ்சொல்லித் தப்பித்துக்கொள்ளாது சந்நிதானத்தெதிர்பாடி அவர் மிக வாட்டமுங் கலக்கமுங் கிலேசமுங் கொள்ளவைத்து அவமானப்படுத்தினார்களென்றால், அரசன் கொடுங்கோலனாய்க் கத்தியேந்திய கையுடனிருத்தலின் அவர்களையு மவர்கட்குக் கல்வி கற்பித்த வாசிரியனையும் உடனே கண்டதுண்டமாக்கிச் சித்திரவதையல்லவோ செய்வன். அப்படிச்செய்யா தவர்கள்பாடிய கவிகட்குச் சந்தோஷித்துக் கூத்தரிடத்தவமதிப்பையா கொள்ளுவன்? மேலு மக்கூத்தரால் முன்னர் பாண்டியராசசமஸ்தான வித்துவானாயிருந்து பின்னர் சோழராசமகிஷியின் சீதனப்பொருளாய்வந்த புலவர் சிரோன்மணியாகிய புகழேந்தியே அச்சோழராசனறியப் படாத பர்பெட்டுப் பின்பயன் மனைவி முன்னிலையி லொருவாறு தப்பிக்கொண்டனரென்றால், இவ்வற்பர்களவருக்கு மவர்சொல்லைக்கடவாத சோழராசனுக்கு மெம்மாத்திரம்? அந்தோ! உமாதேவி, இலக்குமிதேவி, சரஸ்வதிதேவியென்னு முத்தேவிகளினங்கத்தராய் வைதிகர்களான வந்தணராதியோர் வேதாகம கோஷத்துடன் வந்திப்பவெழுந்தருளு முழுமுதற் றேவிக்குமுன், மானைப்போன்று துள்ளி நிலைபெருதலையு மனைதொன்றனையே பலி[illegible]தல்லாது துரியவடிவாகிய வச்சாந்ததேவதைக்கு நரபலியுங் கொடுப்பதுண்டோ? இத்தவிதி யெந்த வாகமத்துளது? இத்தகைய பொய்க்கதைகளைச்கட்டிப் புறவுருணைத்தரைத்துவஷிக்கும் புலையர்கட்குள்ள புந்தி யென்ன புந்தியோ? இவர்களோ டொருகலத்துண்ணும் பெரும் புலையர்க்கும் இப்புல்லியபுந்தி பொருந்தாதே: இப்பொய்க்கதைவி லம்பட்டன்முத லெழுவர் பாடியதாகக்கூறிய கவிகளில் தட்டானுக்கும் வேளாளனுக்குமமைத்த கவிகளிரண்டனுள் கூத்தனார்க்குப் புகழேந்திப்புலவர் சிறைக்கணின்று நீங்கியபின் அளவற்றநாள் கடந்து பாடிய "ஈட்டியெழுபது எழுப்பெழுபது" என்னு மற்புதப் பிரபந்தங்கள் முன்னிலையில் பல பெரியோர்களாலும் பேரரசர்களாலும் வாய்ந்த ஒட்டக்கூத்தரென்னுஞ் சிறப்புப் பெயரை முன்னர் "பாடும்புலவர்புகழொட்டக்கூத்தன்" என்பதிலும் "ஒட்டாவொருமதிகெட்டாய்" என்பதிலும் "ஒ[illegible]என்பட்டுக்கிரட்டைத்தாழ்ப்பாள்" என்பதிலும் வைத்துக் கெட்டதுபோலக் க[illegible]லோசியாது வைதுக் கெட்டனர். என்செய்வர் பாவம்! உண்மைக் கவிதையினுள்ளபடி விளக்கும். கள்ளக்கவிகட்குக் காலமேது க[illegible]சேத. மேலு மம்பட்டனுங் குயவனும் பாடியதாகக் கூறுங் கவிகளிரண்டு மேற்கூறிய தெய்வீகமு லிரண்டு முண்டானபோது

கம்பராலபிமான முன்னிலையினு மரும்பொருள் முன்னிலையினும் பாடியுண்டாயிருந்த "ஏரெழுபதும் சிலையெழுபதும்" இழிந்து சிதைந்தொழிந்த காலத்தில் இந்நூல்களுக் குரியோர் மனம்பொருராய் அக்கூத்தரைப் புறம்பழிக்கவேண்டிச் செய்துவைத்த பூர்வக் கவிகளென நம்பலாம், அவ்விரண்டும் வி[illegible] விடையுமாக விருத்தலின் மூன்றையைந்தும் பிறகாலத்தில் வந்த சில பேதைகளாற் பாடிவைத்தனவெனத் தெள்ளிதின் விளங்குகின்றதன்றோ? இனிச் சிலகாலேக்குள் ஒச்சன், நீச்சன், வலைஞன், புலைஞன், மறவன், குறவன், ஒட்டன், இரட்டன் முதலியோர் பாடியதாகச் சில கவிகள் வெளிப்படும் போலும், இத்தகைய கள்ளக் கவிகட்குங் கற்பனைக் கதைகட்குந் தனிப்பாடற்றிரட்டுப் பட்டிகைகளே புத்தகச்சாலையும் வைப்புச் செப்புகளாயிருத்தலின் இவ்வுலகின்க ணொருவனுக்குக் கலைமகளாருடைய கருணையி லணுவளவேனு மில்லாது கல்வியிற் பயிறல் நேரா. அத்தகைய கல்வியைச் சிறிதளவேனுங் கற்றுக் கவிகளாயிருப்போரைச் சிறைக்கணிருத்திக் கொலைசெய்யுங் கூற்றன் கூத்தனாயின் அவரிடத்தி லகப்பட்டிறந்த வாயிரந்தலைகள் அக்கலைமகளாருடைய கிருபையால் மீள வொட்டிப் பிழைத்தெழலும், ஓர்கால் தம்மாலிறந்த சம்சமருயிர் வீரபத்திரக் கடவுளருளால் வியப்பவந்து கூடலும், அருட்சத்தியம்சத்தினராகிய மகாகாளி துர்க்கை முதலிய தேவதைகள் அவரிட்ட வேலைலைத் தட்டின்றி நிறைவேற்றலும், அவதானங் கண்டசித்தி முதலிய விநோத வித்தைகளை அணுவினுமெளி[illegible]காட்டாத்தலுமாகிய தெய்வீகத் தன்மை எளிதில் விளங்குமோ? இவற்றையேனுங் கல்வியறிவில்லாமொழிய வேண்டியருய்த்து நோக்கி இத்தகைய புன்றொழில்களைக் கைவிடாரோ? அன்றியும் புகழேந்திப் புலவர் சிறைக்கணிருந்த காலத்தை வரையறுக்கப் புகில் சற்றேறக்குறைய நாலைந்துமாத காலமே: இந்த நாலைந்து மாத காலத்துள் கல்வியுணர்ச்சி சிறிதுமற்ற அம்பட்டன் முதலிய வெழுவரை அச்சிறையிருப்பிற்றானே கல்வி கற்பித்துச் சாம்பிரதாயத்துடனே இலக்கிய விலக்கணங்களைப் பயிற்றுவித்து அத்தகைய கவிகளைப் பாடத்தக்க சமர்த்தர்களாம்படிச் செய்தனரென்றால், இது நம்பத்தக்கதா? புலுக வேண்டிற் பொருந்தப் புலுகுகவெனப் புல்லியரும் புகலுவார்களே: இன்னுமிப்பொய்க்கதையைப்பற்றி யெழுதப்புகின் மிகவிரியுமென்றஞ்சி இவ்வளவில் நிறுத்தினோம். இனியேனும் நற்குலத்திற் பிறந்து நல்லொழுக்கம் பூண்டோர் இவ்வினைத்தையு மூகித்துணர்ந்து "எரியாற்[illegible]னுமுய்வுண்டாமுய்யார், பெரியார்ப்பிழைத்தொழுகுவார்" என்னும் பொய்யாமொழியைக்கருதி இத்தகைப் பொய்க்கதைகளைப் பொறியாப்பொறியிற் பொறித்துவைத்தலினின்று மொழிவாரக்கடவர்; [illegible] குலத்திற் பிறந்து இத்தகைய விழிதொழிலினையே தயதொழுக்கமாகக்கொண்டுள்ள கடை கேட்டுக் கயவர்க்கு என்சொல்லி யென்னும்?

கப்பிகடவதாக்கலைத்தன்வாய்ப்பெயினுங்
குப்பைகிளைப்போவாக்கோழிபோன் — மிக்க
கனம்பொதிந்தநூல்விரித்துக்காட்டினுங்கீழ்தன்
மனம்புரிந்தவாறேமிகும்.

என்பதும்,

பொற்கலத்துட்டிப்புறந்தரினுநாய்பிற
ரெச்சிற்கிமையாதுபார்த்திருக்கு — மச்சீர்
பெருமையுடைத்தாக்கொளினுங்கீழ்செய்யுங்,
கருமங்கள்வேறுபடும்

என்பதும் பெரியோர்வாக்கன்றோ? இவையிம் மட்டேநிற்க- கூத்தரைப்பழி ப்பான் கருதிய வக்கயவர், அவர் கம்பரைப்பற்றிப் பாடிய "பத்துக்கொண் டனநிற்கும்" என்னுஞ்செய்யுளி னீற்றடியில் அக்கம்பரது பெயரையு மவ ர்கற்றுள்ள கல்வியினியல்பையுங் குறித்துக் "கூழைக்கம்பன் றமிழ்க்கே ன்" எனவிருந்த சீரைத் தாங்கள் கற்பித்த விக்கட்டுக்கதைக் கிணங்கக் "கூழைத்தண்டமிழுக்கேன்" எனமாற்றிக்களித்தனர். அம்மாற்றலிற் கூழைத்தமிழுக்குத் தண்மைன்னுமடை தகுதியற்றிருத்தல் என்குறித் தற்கோ வறிகிலம். ஆனுலிவ்வாறு மாற்றமுயன்ற வக்கயவர்க்கு அக்கா லக்களியாடலில் மதி[illegible]குற்றதுபோலும், அந்தோ! "சலம்பற்றிச்சால் பிலசெய்யார்மாசற்ற, குலம்பற்றிவாழ்துமென்பார்" என்னும் பெரியோர் வாக்கியத்தையேனு நற்குடியிற்பிறந்தோர் நன்கு கருதி, இனி யித்தகை விழிதொழிலினின்று மிறங்கி இப்பொய்க்கதையினை மேல் தலையெடுக்கா வகை நீயிவிட்டுத் தீய்ப்பார்களாக.

25. இவ்வெண்பாக்கள் மூன்றனுள் முதல்வெண்பாவின் மூன்று மடியைக் "கொல்லிமலைத்தேன்சொரியுங் கொற்றவா நீமுனிந்தால்" என வும், நான்காமடியை "இல்லையோவெங்கட்கிடம்" எனவுங்கொண் டச்சி ட்டு வழங்குவர். கொல்லிமலை சேரராசனுக்குரியதாகலானும், இக்கம்ப ரொருவரே [illegible]ராசனுற் சினக்கப்பட்டவராகலானும், அவ்விரண்டும் [illegible]ருத்தா. அரசராயினோர் பகைகிரை கவர்தற்பொருட்டுச் சூடுவது குல்லைமலராகலினுலும், இக்கம்பரொருவரே தனித்துச் சோழராசன்பாற் சென்றனராகலினும், "குல்லைமலர்த்தேன்சொரியுங் கொற்றவா நீமு னிந்தால்" எனவும், "[illegible]லையோவேறோரிடம்" எனவு மிருத்தல்வேண் டும். அன்றியும் "குல்லைமலர்த்தார்புனையுங்கொற்றவா" எனக் கூறுவா ரு[illegible] தமிழ்வழங்கு நாடுகள் மூன்றற்குஞ் சோழனே பேரரச

ஞாகவின், நேரிமலையோனுகிய வவனைப் பொதியமலையோனென்னினுங் கொல்லிமலையோனெனினு மிழுக்காதே யென்பர். ஆயினு மித்தகைய சந்தர்ப்பத்திற்கது சிறவாமையறிக. இரண்டாவது வெண்பாவின் முதலடியை ''மன்னவனுநீயோவளநாடுமுன்னதோ'' எனக்கொண்டச்சிட்டு வழங்குவர். சோழராசன் தமிழரசருள் [illegible]வனுஞ் சோழநாடு தமிழ்வழங்குநாட்டுள் முதன்மையுமா[illegible], அவ்வாறு வழங்குதலிற் சிறப்பின்மையும் உரிமையாட்சிப்பிறழ்வு முண்டாகலின் எவ்வாற்றினும் பொருந்தா. 'மன்னவனீயேயோவளநாடெலாமுனதோ' என்பதேசரியானபாடமென்ப. முன்னையதால் நீயுமோரரசனோ இந்த நாடுமுன்னதோ என்றருத்தமாதலறிக. அன்றியு மிவ்வெண்பாவில் ''என்னை'' என்னுந் தனிச்சீர் முதல் வெண்பாவி னந்தத்துள்ள ''எங்கட்கு'' என்பதற்கு முரணுதலையு மோர்க. இவையனைத்தையு மாலோசிக்கப்புகின் ''எழுதினவனேட்டைக்கெடுத்தான் படித்தவன் பாட்டைக்கெடுத்தான்'' என்பதற்கிணங்கப் பாடபேதம் வந்தாற்போலும். மூன்றாவது வெண்பாவின் முற்பாதியைமாத்திரம் ''கம்பர் சரித்திரத்துளொருபகுதி'' எனவுள்ள வோர் கட்டுக்கதையிற்கலந்தச்சிட்டு வழங்குவர், அதன் பிற்பாதியால் அக்காதையின் கீர்த்தி கழியுமெனக்கொண்டுபோலும். ஆயினு மவ்விருபாதியுந் தனிப்பாடற்றிரட்டிற் றன்மைகெடா திருத்தலே சாலும். இஃதிவ்வாறாயினு முற்கூறிய வெண்பாக்களிரண்டையு முறைமைப்படி திருத்தி யச்சிடலாகாதா? எக்காலத்து மெந்தக்காதையைக் கட்டிவிடுவோம், எந்தக்கவியைக் கற்பித்தெழுதுவோம், எந்தச்சாதியைப் புறங் கூறித்திரிவோம், எந்தச்சமயத்தை நிந்தைசெய முயல்வோமென இதுவே பெருந் தொழிலாய்க் கைக்கொண்டுழலுஞ் சழக்கர்க்கு அதன்கண் கருத்து செல்லுமா? ஒருக்காலுஞ் செ[illegible]லாதென்பதுண்மை.

26. இம்மூன்று வெண்பாக்களையுங் கம்பர்பாடியதற்கே திங்ஙனமாக ''கம்ப ரா[illegible]யணம் பாடி யரங்கேற்றியது'' எனவோர் கற்பனைக் காதையை மிகவிறப்பனத்தோடு மெழுதிவைத்ததுபோல், எத்தனையோ பகுதிகளும் விகுதிகளுமாய் விரிந்துள்ள சரித்திரச்சம்பன்ன சாம்பிராச்சியராகிய வக் ''கம்பர் சரித்திரத்து ளோர்பகுதி'' என வேறோர் [illegible]ட்டுக்காதையை மிக திட்டத்தோடு மெழுதத்துணிந்து வரைந்துவைத்[illegible], ஓர்நாளந்திவேளையில் குலோத்துங்கச் சோழராஜனுங் கம்ப[illegible]ங்காவிற் போ[illegible]யுலாவுகையில் அச்சோழராசன் (பித்தம்பிடித்த [illegible]த்தனு[illegible]லால்) தற்செயலாய்க் கலகலவென்றுடல்குலுங்க நகைத்தானும், அதுகண்ட கம்பரவனைப்பார்த்து (சன்மத்திலுஞ் சாதியினு மதிசிரேஷ்ட[illegible] தனக்கு அவன் சகோதரி குமாரனுந் தானவனது சமூகவித்துவ[illegible]லால்) ஓ மருமானே! ஏன் சிரித்தீரென்றாராம். சோழராசனதற்கு (பூ[illegible]வம் விறகு

தலையனாயிருந்து பின்பு வேந்தனானேனாதலால் தனக்குவாய்ந்தவ்வ பேர சபாக்கியத்தைத் தானே ம[illegible]த்து) அம்மானே! இந்தராச்சியமு மிதிலடங் கிய பிரசைகளும் நமக்கைக[illegible]மல்லவோ வெனச் சிரித்தேனென்றானும். அதுகேட்ட கம்பர் (கடவுட்ட[illegible]மை யுடையோராதலால்) உமக் கவை யெல்லா மைக்கமாயினும் எனக்[illegible] நீ ஐக்கமல்லவோ வென்றாராம். அப்போது சோழராசன் திகைத்து (சமபா[illegible]ன்னினு முயர்ந்த மண்டலாதி பதியாதலால் அவரைக்கடிவதற்குப்பயந்து படைமுகத்திற் புறங்காட்டி யோடுவானைப்போல) ஒன்றும்பேசாமல் திட்டிவாசலால் நுழைந்துபோய் மஞ்சத்திற்படுத்துத் தனது மனைவியாற் கொணர்ந்த சிற்றுண்டியைப்புசி யாது வியசனத்தோடிருந்தானும். பின்னர் (தமது நலத்தை விலைகொடு ப்பவர்க்கெல்லாம் விற்பதல்லது அதற்காவா ராகாதாரென்னும் வித்தியா சம் பாராத தாசிகள் நேசனாதலால்) அவன் வைப்பாட்டியாகிய பொன்னி யென்னுந் தாசி அவனைத் தேற்றியுண்பித்து (இயற்கையிலேயே தாசிகட் கெல்லாந் தனதுபிள்ளையுந் தானுமா யடிமைப்பட்டுள்ளோராகிய) அக்கம் பரைத் தனதில்லின் கணழைப்பித்து ஓர் சூளுறவா லவரிடத்தினின்று மடிமைப்பத்திரம்வாங்கி அரசன் கையிற்கொடுத்துச் சந்தோஷிப்பித்தா ளாம். மறுநாள் சோழராசன் (அறிவில்லாச் சிறுப்பிள்ளைத் தன்மையோ னாதலால்) தனது சபாமண்டபஞ் சென்றிருந்து கம்பர் வந்தவுடனே பலர் முன்னிலையில் அப்பத்திரத்தைக்காட்டி (அற்பரிடத்திலு மரும்பொருள் வாங்க வெட்கமில்லாது வீண்கவிபாடித்திரியுமவரை) உமக்கு வெட்கமில் லையா வென்றானும். அதற்கவர் "தாசிப்பொன்னிக்குக்கம்பனடிமை" என்றதிலுள்ள தன் கையொப்பத்திற்கு வேறுபொருள் கூறினாராம். அதனாலரசன்(கல்வியறிவில்லாதவனாகையால்) தான் கொண்டிருந்த விருமா ப்புந் தலைதெரியாத சந்தோஷமு[illegible]றவாடி அணிமேலறவிட்ட காய்போ லவரை யேறவிறங்கப்பார்த்து (அவைதிகராகிய சூத்திரரிடத்தொழிய மற்றெந்த வைதிகரிடத்துஞ் சன்மானமும் வெகுமானமுங் கண்டறியாரா யிருக்க) நானுமக் கிதுவரையிற் கொடுத்திருக்கின்ற ஆடை[illegible]யாபரணங்களை யும் விருதுகளையும் வைத்துவிட்டு எனது தேசத்திரமற் போய்விடுமென் றானும். அக்காவிம்மூன்றுவெண்பாக்களில் இரண்டு பூர்த்தியாகவு மற் றொன்று ([illegible]ன்னை யுதைக்கப் பத்தடிதூர நடந்துவந்ததாக விருத்தலின்) பாதியாகவு[illegible]டி இதோபாரு மும்மைவிட்டுப் போகும்பொழுது கட்டி ன[illegible]ாவனா[illegible]ாடேபோய் (படைவிழந்துள்ள பகைவனைப் படைசெரு [illegible]கோடும் வர[illegible]செலு[illegible]ச்செல்லு மரசனைப்போல் அவரை மீண்டும் [illegible] ச்சொன்னதார்?) தி[illegible]ம்புங்கா லுமக்கு மேலானவனாய் உம்மிடத்திற் கப் பம்வாங்கிவருகிற[illegible]க்[illegible]ல்வரன் எனக்கடைப்பைக்காரனாய்த் தாம்பூல மடித்துக்கொடு[illegible]த்ததக்க நிலைமையுடனே வருகிறேனென்று பிரதிக்கினை

செய்து சென்ற (தமிழ்வேந்தர்மூவருள் தலைமையானவனும், முச்சுடர்வ
மிசத்தில் முதன்மையானவனும், மனுகுலத்தினு மேலானகுலத்தவனும்,
கார்முகர்முதலியவங்கங்களில் மிகச்சிறந்தவங்கங்களை யுடையவனும், நாக
ரீகம்- செல்வம்- கல்வி- போகம்- பிரதாபமுதலியவைகளை மேன்மேலாக
ப்படைத்த பிரஜைகளையுடையவனும், அரிச்சந்திரன்- நளன்- முசுகுந்தன்
புருகுற்சன்-புரூரவன்-, கார்த்தவீரியன்- சிபி முதலானவர்களைப்போல
ஐம்பத்தாறு தேயத்தையும்வென்று தனதாணைக் குட்படுத்தியுள்ள சக்ரேஸ்
வரனும்,

நீரெலாஞ்சேற்றுநாற்றநிலமெலாங்கல்லுமுள்ளு
மூரெலாம்பட்டிதொட்டியுண்பதோகம்பஞ்சோறு
பேரெலாம்பொம்மன்றிம்மன்பெண்களோநாயும்பேயும்
காருலாங்கொங்குநாட்டைக்கனவிலுநினைக்கொணாதே.

என்றோர்கவி தானே பாடியபடிக்குள்ள மகாமேன்மையான கொங்குமுத
லிய நாடுகளைத் தனக்கிராஜதானியாக வுடையவனுமாகிய) சேரமகாராஜ
னிடஞ்சேர்ந்து (அரசரைபோலக் கருமாதிகாரர் - கடைகாப்பாளர் - மரு
த்துவக்கலைஞர் - நிமித்திகப்புலவர் முதலிய குழூஉக்களையுடைய) கம்பரு
க்குத் தானடைப்பைக்காரனெனக்கூறி அத்தொழிலிலிருந்தாராம். அவ்
வச் சேரராசனிடத்துள்ள வித்வசனர்செய்யும் பிரசங்கத்திற்குமேல் தான
திகப் பிரசங்கஞ் செய்துவந்தமையால் அரசனதிசயித்துத் தனக்கவருயி
ருந் தானுடலுமாக வெண்ணி அன்னியோன்னியமாய்ச் சிநேகித்து
(கோளகப்பார்ப்பானுகவேனு மிராமல் சூத்திரருட்கலந்து வாழ்பவரான
அக்கம்பரைப்போற் றானுமொருவனுதலால்) தன்னுடனேயிருந்து சமபந்
திபோசனம் பண்ணும்படி மற்றவித்வான்களினு மவரைப் பதின்மடங்
கதிகமேன்மையாய் வைத்திருந்தானாம். அது கண்ட வித்வசனர் (சோழ
ராச்சியத்தினின்றுந் துரத்தப்பட்டுச் சேரராச்சியத்திற்சேர்ந்து எத்தனை
யோநாள் கொங்குவேளாளரிடத்தும் பள்ளியர் படையாட்சியர் கவுண்டர்
சவுண்டர்முதலாயினோரிடத்தும் இரந்துண்டிடந்தவரை யவர்களறியார்க
ளா?) அவரிடத்திற் பொறாமைகொண்டு ஓர் தந்திரயுக்தியால் தங்களரசனுக்
குச்சவரஞ்செய்யும் அம்பட்டனுக்கவர் பங்காளியென மெய்ப்பித்தார்களா
ம். அதையுணர்ந்த வரசன் வெட்கிச் சிலவேவுகாரரை யனுப்பிச் சோதனை
செய்ததினாலும் அவ்விருவரும் பாரிசத்தெழுதிக்கொண்டுவந்து காட்டித்
தன்பாற்செய்யு மூழியத்திற் பாதிகேட்டதினாலும் அம்பட்டனென்பதுண்
மையெனநம்பி (க்ஷத்திரியர் குலத்தினு மவர்கள் தலைமைக்கொட்டு மயிர்
கழிக்குஞ் சிரஞ்சீவியர் குல மேலானதே நாமிவனோடு [illegible]ந்தி போசன
ஞ்செய்ததிற் குற்றமில்லை என வொருவாறு தேறி) உடனே [illegible]டப்படி யா

கட்டுமென்றனும், பின்னர் கம்பர் தன்னிடத் தரசனேற்றுள்ள வவமதிப்பைக் தளையக்கருதிக் கலைமகளாரை இடதுகாற்சிலம்பு தருமாறு தியானிக்கவும் (முன்னர் சோழராசனாலுண்டாயுண்டு தன்சீரையெல்லா மிழந்த காலத்தினும், பின்னரவ்வரசனைக்கஞ்சி யவ்வூரைவிட்டோடி இரண்டொருநாள் பட்டினியிருந்த பொழுதினும், ஓர் பெண்பால் தரு நெற்கூலிக்காக இடுப்பொடியத்தக்க பெருங்கஷ்டத்தோடு மண்ணெடுத்துச் சுவர் கட்டிய வேளையினும், கோமுட்டிவீட்டினுஞ் செக்கானகத்தினும் பார்ப்பானகாரத்தினும் பசியாலுந் தாகத்தாலு மெலிந்து அவலும் பிண்ணாக்குந் தண்ணீருந்தரும்படி பிச்சையெடுத்த சமயத்தினும், அக்கலைமகளாரம்சபூதரான ஔவையார் தனது துர்நடத்தைக்குக் கோபித்து அடா விவேகமற்ற வவலக்ஷணமே! அடா எமனேறு மெருமைக்கடாவே! அடா மூதேவிவாகனமாகிய கழுதையே! அட கூரையற்ற குட்டிச்சுவரே! அடா குலராமனது தூதவன் வர்க்கத்திற்பிறந்த குரங்கே! என்று பலவாராய் வைதலையினும், இன்னுமவராலும் வேறுசிலவராலும் பலமுறை பலர் கூடியுள்ள சபைக்கணெல்லாம் அவமான மடைந்த சந்தர்ப்பங்களினும், முடிவிலோர் சிற்றரசனால் பிள்ளையுந் தானுமாய்த் துர்மரண மடைந்த பக்கத்தினு முதவாத) அத்தேவியாரது கிருபையினால் அஃதவ ரக்கிட் சந்திலவர் இருந்ததாம். அதையவர் சேரராசனுக்குக்காட்டி அது முன்னிலையிலவன் தன்னை யின்னுவென் றறிதல் செய்விக்க, அப்போதவ்வரச னிந்தச்சிலம் புமக்கெவ்வாறு கிடைத்ததென வினவ, இதனை யணிபவர் கலைமகளாராதலால் அவளை நீர் தரிசிக்கவேண்டில் இதோ வருவிக்கிறேனென்று கூறித் தியானிக்க, அம்மாத்திரத்தி லவர்வந்து சேரராசனாதியர் காணும்படி நிர்த்தஞ்செய்து (தமது கணவனாகிய பிரமதேவனைக் கொண்டோ அல்லது தாய்வீட்டுச் சீதனமாகவோ இவ்விரண்டுமின்றித் தாமே கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கிடைத்திருந்த வப்பொருளை ஒருகாலவர் மீட்டுந் தராமல் வைத்துக்கொண்டா லென்செய்வோ மென்னுங் கருத்தால்) எங்கடா கம்பா சிலம்பென்று கேட்டுப் பெற்றுக்கொண்டு போய்விட்டாராம். கம்பரிவ்வாறங்ஙனமிருப்ப — முன்ன ரவரைக் கடிந்து துரத்திய சோழராசன் (அவராற்பட்ட வவமானத்தையும் அவராற்கேட்ட தூஷணவார்த்தைகளையும் இலச்சையற்றவனாதலால் மறந்து) பிரிவாற்றானாய் வருந்தி ஒற்றரைக்கொண் டெங்கெலாந் தேடுவித்து (தனக்குமேலானவனாகிய) சேரராசனிட மிருப்பதறிந்து உடனே தயைசெய்தனுப்பும்படிப் பிரார்த்தித்துத் திருமுகமெழுதினானாம். அதனாற் கம்பர் பலவைபவங்களோடு சோழதேசம் போய்ச்சேர்ந்து அவ்[illegible]னுஞ் சேரராசனை வருவித்துத் தனது பிரதிக்கினையை நிறைவேற்றின[illegible]ரா யவனை யனுப்பிவிட, அப்பிரதிக்கினையை நிறைவேற்றவந்த வச்[illegible]ரானை (பலகாலுடனிருந்து பழகியுள்ள) சோழராசன் (குருடனை[illegible]) கண்டுணராது (எவருமுணர்தற்கரிய குழந்தைப்

பருவத்தளாய் கொலுச்சபையில் விளையாடல் செய்திருந்த) தன்மகளுணர்த்தவுணர்ந்து கம்பரைக்கூவி எனுமக்குத் தாம்பூலங்கொடுத்திருந்த சேரமகாராசனை யனுப்பிவிட்டீ ரென்றானும். அதற்கவர் (தான்பாடிய வேரெழுபதென்னுங் [illegible]திநூலில் அச்சோழராசனைக் குறித்து

முடியுடையமன்னவரின் மூவுலகும்படைத்துடைய
கொடியுடையமன்னவரிற்குலவுமுதற்பெயருடையான்.

எனப்பாடியதையும் - அவனாற் பின்னர் சினக்கப்பட்டுத் தனதாடையாபரணாதிகளோடு விருதுகளையு மிழந்து ஊரைவிட்டோடி ஓர் தாசிமீது பொருள் விழைவால் பாடல்பாடிய காலத்தினும் எல்லா நதிகளினுஞ் சிறந்தது காவிரிநதியே; எல்லாவரசரினு மேம்பட்டவன் சோழராஜனே; எல்லாமண்டலங்களினுந் தலையானது சோழமண்டலமே: என்னுங்கருத்தை யமைத்துத் "தண்ணீருங்காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவதுஞ்சோழமண்டலமே" எனப்பாடியதையு மறந்து, உமக்கு மேலாயிருக்கும்மிடத்திற் கப்பம்வாங்கிவருகிற மன்னர் மன்னன் உமதருகில் தனது பரிவாரங்களை விட்டுத் தனியே வந்திருக்கையில் அவனை நீர் (இராசநீதியறியாத கொங்கோன் மன்னனாதலால்) பிடித்துச் சிறைப்படுத்தி அவனுடைய (எல்லாவிதத்தினு முயர்வுடையதிற் சிறந்த) ராச்சியத்தை (எல்லாவிதத்தினுந் தாழ்ந்தராச்சியத்தையுடைய) நீர் கைப்பற்றிக் கொள்வது எளிதென்றல்லவோ வனுப்பிவிட்டே னென்றாராம். அக்கம்பருடைய சூட்சும புத்திக்குச் சோழராசன் மெச்சினனும். இவ்வாறாக முன்னமக்கம்பர் பலகற்பனைகளைச் சிந்தாமணி முதலிய பலகாவியங்களினின்றும் பொறுக்கித் தான்பாடிய இராமகாதையிலமைத் தலங்கரித்ததுபோல், அவருக்கென் றொருகாதையை யவ்வாறெந்தக் கட்டுக்கதைகளினின்றேனும் பொறுக்கிப் பலகற்பனைகளை யமைத் தலங்கரித்து வைத்தல் மரபெனக்கருதிக் கேட்பாரில்லாமையால் தங்கள் மனம்போனபடிக் கெல்லாம் வரைந்து வைத்தனர். இதனுள் கூர்த்த புத்தியை யுடையோர் குலோத்துங்கச்சோழன் தன்னிச்சையாய் உதைத்ததுமுதல் அவ்வரச னக்கம்பரை மெச்சியவரையிலுள்ள கற்பிதங்களை யுய்த்து நோக்கின், முதற்கோணல் முற்றுங்கோணலான காதையாய் முடிவுபெறுமென்பதற் கையமென்னை? இஃதெவ்வாறாயினு மிதனுள் கூத்தனுரைப்பற்றிய தூடணங்க ளொன்றுமில்லை யாதலால் இதனைப்பற்றி யின்னுமெடுத்து விரித்துரைக்க மனமிலம். ஆயினு மடங்காக்களியனோ டவனியாளுங் காவலனை யொப்பாக்கிக் கதைகட்டப்புகின் எவ்வாறொத்துவரும்? குளிக்கப்போய்ச் சேற்றினைப்பூசிக்கொண்ட கதையாமன்றோ.

அன்றியு மிக் கட்டுக்கதையி னட்டநடுவே (சரஸ்வதியந்தாதி) என்றுமோர் நூலைப்பற்றிய குட்டிக்கதையானது கூப்பிடுவாரின்றி, இரண்டாட்டிலூட்டிய வோர் குட்டியாட்டைப்போல மிரளமிரள விழித்தபடி குந்திக்கொண்டிருக்கின்றது. அதனையெடுத் தாட்டுவிப்போமெனில் - சற்றேறக் குறைய வைம்பது வருடத்திற்குமுன் ஒ[illegible]தணக்கவியதனை யச்சியந்திரத்திற் கிடத்தி வெளிப்படுத்த முயன்றபோது ஆக்கியோன்பெயரிற் சந்தேகங்கொண்டு பலரை வினவ, கம்பரினத்தரான சூத்திரருட் சிலர் கம்பர் தனது சிறபருவத்தோர் பிரமரர்க்கதனால் நாமகளார் திருமந்திரத்தினை யுபதேசிக்கப் பெற்றுத் தியானித்தபோது அவர் காட்சிதர வககாற் பாடியதெனவும், சிலர் - கம்பர் சோழராசனோடு பிணங்கிச் சேரராசனோடு கலந்திருந்தகாலத்து அவ்வரசன் வேண்டுகோட் கவரைவருவித்தபோது பாடியதெனவும், இவைகட்குச் சான்று மெம்முன்னோராற் கஷ்டப்பட்டெழுதிவைத்த காதைகளே யெனவுங் காட்டி அவருள்ளத்தை மயங்கவைத்தனர். கூத்தரினத்தரான செங்குந்தர் - பூர்வங் குலோத்துங்கசோழராசன் முதலிய பல வரசர்கள் பெரியோர்கள் வித்வசனர்களாதியர் முன்னிலையில் எங்கள் மரபின் கீர்த்தியை யவர் விளக்கவேண்டிச் சிரச்சிம்மாதனமிட்டு எங்களாயுதமாகிய ஈட்டியைச் சட்டி ஈட்டி யெழுபதென்னுமோர் பிரபந்தம்பாடத் தொடங்கியபோது முதலில் தமக்கிளமையிற் திருமுலைப்பாலூட்டிச் சகலகலாநிலையமென்னும் புத்தகத்தினைத்தந் தாட்கொண்ட கலைமகளாரைத் தியானித்துத் தாமுத்தேசித்த காரியத்தில் ஓரிடையூறு நேராதபடிக்கும் அப்பிரபந்தத்தைத் தமது நாவினின்று நிறைவேற்றுவிக்கும்படிக்கும் பாடியதாகக்கூறி, இதற்குத் திருட்டாந்த மப்பிரபந்தத்தின்கண் காப்புச்செய்யுள்ளாக வுள்ள

ஆயகலைக ளறுபத்துநான்கினையு
மேயவுணர்விக்குமென்ன[illegible]தூய
வுருப்பளிங்குபோல்வாளென்னுள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்குவாராதிடர்.

படிகநிறமும்பவளச்செவ்வாயுங்
கடிசமழ்பூந்தாமரைபோற்கையுந் - துடியிடையு
மல்லும்பகலுமனவரதமுந்துதித்தாற்
கல்லுஞ்சொல்லாதோகவி.

என்று மிவ்வெண்[illegible]பாக்களும் அந்நூலினிடையில் "உரைப்பாருரைக்கும்" என்பது முதல[illegible]ன சில கவித்துறைப்பாக்களுமென்றும், பின்னரச்சிரங்கள் சர்த்தமு[illegible]டாட்டி யெழுமாறு எழுப்பெழுப சென்னுமோ

பிரபந்தம்பாடத் தொடங்கியபோது அதற்குக் காப்புச்செய்யுளாகக் "கலைவாணிநீ" எனவெடுத்துச் "செங்குந்தருயிர்பெற்றிடவுந் தயைசெய்வாயே" என முடித்தவோர் செய்யுளுமென்றுந் தெரித்து விளக்கினார்கள். இவ்வாறு விளக்கியுங் கம்பரினத்தவர் கூறிய காதைகளில் கலைமகளாரவருக்குத் திருமுலைப்பால்தந் தாதரித்தது முதலான வருட்டிறக்கள் யாண்டுங் கேட்டிலராயிருந்தும் அவ்வேதியரென்செய்வர் பாவம்: ஓர் பூங்காவி லருமையாயு மதிவினோதமாயு முள்ள புட்பச் செடிகளினும் அநேகமாயு மற்பமாயுமுள்ள புற்பூடுகள் எங்கும் பெருகியிருப்பதுபோல, இப்பூமியின்க ணரியராயு மதிவைதிகராயு முள்ள முதன் மூவருணர்செயலேற்ற செங்குந்தர்களினும் அநேகராயு மவைதிகராயு முள்ள நான்காம் வருணர் எங்கும் பெருகி யிருப்பதால் அப்பெருங்கூட்டத்தினர் சொல்லுக்குமுன் இச்சிறு கூட்டத்தினர் சொல்லேறாது சிதைந்தது. இக்கலிகாலத்தன்மை கைதவர்க்கே யுரித்தாயிருக்கின்றமை கருதிக் கடைந்த கீரையிற் புலவாய்வாரைப்போல் இனியக்குட்டியை யெடுத் தாட்டுவிப்பதிற் பிரயோசனமில்லையென யாமும் விடுத்தாம்.

27. இக்கம்பர் பாட்டொன்றுக் காயிரம்பொன்றரின் பாடுவோமென அதற்கவள் தன்னிடத்துள்ள வைஞ்ஞூறு பொன்கொடுத்து அரைப்பாட்டுப் பெற்றதாகப் பெருமைபாராட்டிக் கூறுவர், இவ்வாறுகூறுவதி லிவருக்குச் சிறுமையே யெய்துமென் றுன்னிலர்போலும். ஆயினிவர் திலவணிக ரிலைவணிகர் கலைவணிகராதியர் போன்று கவிவணிகரோ? இவ்வுலகிற் கவிவாணர் சரித்திரமெனக் கணக்கிறந் துள்ளவற்றில் இத்தகைய கவிவியாபாரியைக் கண்டதேயில்லை, அல்லதிதுகாறு மொருவர் சொல்லக் கேட்டதுமில்லை. ஒருபொன்னென்பது செம்பொன்னேயாக அன்றி வெண்பொன்னேயாக, வெற்றொரும்பொன்னேனும் கிடைப்பதரிதாகி உண்டாட்டுக்குத் திண்டாட்டங்கொண்டு திரிந்தவிவர் ஒருபாட்டுக் காயிரம்பொன் கேட்டாரென்பதை யோசிக்கப்புகின் விசித்திரத்தை விளைப்பதன்றோ? இக்கம்பரேனைய கவிவாணர்களைப்போலாது "காசுக்குக்கம்பன்" என்னுந்தனியன் கருத்துக்கொப்ப யாவரிடத்துந் தாழ்வினிய மின்றிப் பொன்னுக்கே பாடுவோரெனப் பெயரெடுத்திருப்பினும், கிடைத்தமட்டிலன்றிக் காற் பொன்னுக்குக் காற்பாட்டும் அரைப்பொன்னுக் கரைப்பாட்டுமாகப்பாடுவதி லிவருக்கென்ன சிறப்பு? ஒருவனுற்றனக்குக் கிடைத்தது முந்திரிகைப் பொன்னாயின் முந்திரிகைப் பாட்டும் இம்மிப்பொன்னாயி னிம்மிப்பாட்டுமே பாடுவார்போலும். ஓர் பிரமாராக்கதசால் கட்டப்படுந்தோறு மிடிந்துபோவதான மட்சுவரைக்கட்டித் திரும்புகையில் மீட்டுமுன்போ லிடிதியத்தொடங்குவதைப் பார்த்து அஃதிடியாது

நிலைத்திருக்குமாறு தான்பாடிய முழுப்பாட்டுக்கு வேலியென்பவளிடத்தி
லெத்தனைப் பொன்பெற்ருர்? ஓர்போதுணவுக்கான நாழி நெல்லேயன்
றே? தனது நலத்தை விலைகொடுப்பவரிக்கெல்லாம் விற்றுப்பொருள்
சம்பாதிப்பவளான ஒரேழைத்தாசி கவிகளாயுள்ளோர்க்கெல்லாங்கலை
மகளாரது கிருபை யிருக்குமென்றும், அத்தகைய ருள்ளத்தில் கருணைவி
ளங்குமென்றும், அவ்வுள்ளத்தோரொருவரை வாழ்த்துதலாகப் பாவொரா
யின் வருமைநீங்கி மிகுதியான செல்வமுண்டாமென்றுங் கருதியல்லவோ
இவரைத் தன்பொருட்டோர் பாட்டுப்பாடும்படிக்குப் பிரார்த்தித்தாள்.
அதற்கிவர் தாசிகளிடத்தி லதிகபொருளிருக்குமாதலால் அதனைக் கவர
வேண்டுமெனக்கருதி நடத்தியகாரியத்தை யோசிக்கப்புகின், அக்கலைமக
ளாருடைய கிருபையுங் கருணைவிளங்கு முள்ளமுமற்றுத் தனக்குவித்தி
யாதானஞ்செய்த பிரமராக்கதனினத்து ளொருவனென்றே மதித்தல்
வேண்டுமன்றே? அப்பிரமராக்கதனும் பொருள்மிகத்தரு மாணாக்கரை
மதித்து அவர்கட்குக் கல்வியைக் கசடறக்கற்பித்து, அப்பொருளிற் சிறித
ளவுந்தரச் சக்தியற்று நெடுநாள் தன்னையடுத்து வழிபாடுசெய்திருந்த வ
றுமைவேதியனான மாணாக்கனொருவனை யவமதித்துக் கல்வியைச் சிறிது
மோதுவியாது அவனது சாபம்பெற்றுழன்றனனாதலின். பொதுவிற் கவி
களாயுள்ளோர் செல்வரை வருணித்தும்பாடி அவர்களாற் பொருள்முத
லிய பரிசில்களைப்பெற்று வாழுதல் வழக்கு. ஓரேழைத்தாசி தனக்குச்
செல்வம்விளையுமாறு இவரையோர் பெரியோனென நம்பித் தனக்கு வறு
மை முதலிய விச்சியாது வாழ்த்துதலாக வோர்பாட்டுப்பாடவேண்டு
மென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டால், அவள்பின்னர் குருதக்ஷிணை
யாதேனுங் கொடுத்தாலல்லது தன்னிச்சையா லிரக்கமின்றி இவ்வாறு
கேட்குந் தருகண்பாவியுந் தரையின்கணுண்டா முன்னரிவர் நெற்கூலிக்
குச் சுவர்கட்டி யச்சுவர் மீட் [illegible] தாடங்குவதைக்கண்டு "விற்கொ
ண்டபிறைநுதலாள் வேலிதருங்கூலி, நெற்கொண்டுபோமளவு நில்லாச்
செடுஞ்சுவரே" என்று பாடியதை யாலோசிக்கின், அக்கெடுஞ்சுவர் கூலி
நெல் வாங்கிப்போமளவு நின்று பின்னரிடியினு மிடிகவென்னுந் துரோ
சிந்தைகொண்டே பாடியதன்றே, இத்தகையாரைத் தருகண்பாவி யென்ப
தற்குச் சந்தேகமென்னை, இவரவ்வாறு துரோகசிந்தையைக்கொண்டு
பாடலைக் கூறினரேனும் அச்சுவரை யென்றுமிடியாது நிலைத்திருக்கச்செ
ய்தும், இவர் வித்தியாதனம் பெற்றபோது தன்பால் குருதக்ஷிணையின்
வருந்தியதை நோக்கி வடமொழிக்கணுள்ள சிராமன்கதையினைத் தெ
மொழியுட் கூறுவதே எனக்குக் குருதக்ஷிணையாமென்று கூறியு
ள்ள பிரமராக்கதன் இவரினுமேல்போலும், இரண்டன்மாட்டுந் துரோ
கசிந்தை யற்றிருத்தலின் அவ்வேழைத்தாசி யிவர்கேட்டபடி கொடுக்க

சத்தியின்றி, ஐந்நூறுபொன்னோ, அல்லதைந்துபொன்னோ, தான் பலநா[illegible] பலர்க்கு மனங்கொடுத்து மிதழ்கொடுத்து மபிமானத்தினைக்கொடுத்து [illegible]ந்து தனங்கொடுத்தும் வருந்திச் சம்பாதித்து வைத்திருந்த ஆடையாபரண முதலியவைகளை விற்றுப் பொன்னுச்சி இவ்வளவுதானென்னுற் கொடுக்கக் கூடுமென்று கூறிக் கொடுத்ததற்கு அப்பொன்னுக்குத்தக்கபடி யரைப்பாட்டே பாடினரென்றால், சில மகளாருளேக் கையாமலகம்போற பெற்றுள்ள தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வாரென்னுங் கவிச்சக்கிரவர்த்தியின் பிரபாவ மிகநன்று: மிகநன்று: அந்தோ? அவ்வரைப்பாட்டினாலேனு மவளடைந்த சுகமென்னை? பின்னரவள் புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையு மடித்துக்கொண்டு போனதுபோன்றும், வயிற்றுப்பிள்ளையை நம்பிக் கைப்பிள்ளையை நழுகவிட்டாற்போலவும், கையிலிருந்த பொருளெல்லாம்போய்ப் பணத்தைக்கொடுத்து வறுமையை வாங்கிக் கட்டக் கந்தைக்கும் உண்ணச்சோற்றிற்குமே வருந்தப்பட்டுக் கொண்டிருந்தாளெனில், ஐயையோ! ஈதென்ன பரிதாபம்!!

28. இச்செய்யுளுக்குக் காதை (கம்பர் சேரராசனுடைய பத்தினி வசிக்கும் அந்தப்புரத்திற்சென்று அங்கவ்வரசனுடைய சால்வையைப்போர்த்துக்கொண்டு அவன் சயனிக்குங் கட்டிலின்மீது படுத்துக்கொண்டிருக்கையில், அதுகண்ட வச்சேரராசபத்தினி அவரைத் தனது நாயகனென்றெண்ணி அருகிற்சேர்ந்து சயனித்திருந்தனள், அக்காலங்கு தற்செ[illegible]லாய்ச் சேரராசன்வந்து நோக்குகையில் அவர்பாடியது.) எனவெழுதி யச்சிற்பதித்து வழங்குவர். ஓ நண்பர்களே! இஃதிவ் வவத்தாரண்யத்துளெ[illegible]துக்காட்டும் பல வாடாசக்கதை[illegible]ளுள் மிக நல்லகதைதான், ஆனால் நீட்சி மாத்திரந்தானில்லை. ஆயினு நா[illegible]ாவ திவரது கதைக்கிற்கும் கீர்த்திக்கு மேற்கச் சிறிது நீட்டுவோ[illegible]ச் சற்றுாகித்துணர்மின்கள். அரண்புரம் - அந்தப்புரம் - என்னுமிவ்விரண்டுள், அரண்புரமென்பது அரசன் வசிக்கு மில்லமும் அந்தப்புரமென்பது அரசன்றேவி வசிக்கு மில்லமுமாம். இவற்றுள் - அரண்புரத்தை அரமனையெனவும் வழங்குவர். அந்தப்புர மெனற்பாலது, இரகசியத்தானமெனினும் ஏகாந்தத்தானமெனினும் பொருந்தும். இத்தகையதான இராணிவாசத்தானத்தில் பாங்கிகள் பாடினிகள் முதலிய ஸ்திரீசனமன்றிப் புருடசனங்களில் வாலிபப்பருவங் கடந்த அவள் புதல்வருங்கூடப் புகுதற்குரிய ராகாரென்றும், ஓர்கா லிரா[illegible]னுக்கு மிராணிக்கும் யாதுமுன்னிலையிலேனும்ஊடன் முதலிய கலக்கங்கள் நேருங்கால் அவைகளைத் தணித்தற் பொருட்டு அரசர்க்குறுதிச் சுற்றத்தினராகிய அந்தணாள ரருங்கவிப்புலவர் முதலாயினோர் அவனுணை வாயிலா யங்ஙனம் புகுதற்குரிய ராவரென்றும், அவ்வகை யாங்காலத்தும் அங்ஙனம் காவல்கொண்டுள்ள சேடியர்களால் இராணிசமுகத்திற் கறிவித்

து அவளுத்திரவுபெற்ற பின்னரே உட்புறஞ்செல்லக் கூடுமென்றும், அவ்வாறு கூடியபோதும் அங்ஙனமச் சேடியர்களால் விடப்பட[illegible]ளை ஓர் திரைச்சிலைக்குப் புறம்பிலிருந்தே தங்கள் வரவி[illegible]தலை இராசமகிஷிக் குணர்த்தவேண்டுமென்றும், இவ்வுணர்த்தன் முன்னிலையிலேனு மற்றெவ்வகைக் காரணத்தாலேலும் அவ்வுறதிச் சுற்றத்தினொருவனொருவன் இராக்கினியை நேரிற்கண்டு பேசியதாக இராசனுக்குத் தெரியவரின் அவ்வ தண்டிக்கதற்குரிய னல்லா விடத்து உடனே யவனுடல் மறுமாலை சூட்டப்படுவனென்றும், அவன் றண்டிக்கதற்குரிய னுயவிடத்து அவன் பட்டத்துத் தேவியே யானபோதிலும் "பத்தினி" என்னுமுரிமைபாட்டினைப் பரிச்சேதமிழந்தாளாவளென்றும் பல மிருதிகளினுற் பகரப்பட்டுள்ளன. இதற்குச் சாட்சி சதாகாலமும் ஆண்கலையொன்றனையே பாடுவோனுகிய ஓர் வண்ணக்கவிப் புலவன் ஓரரசன்மேலதனைப் பாடிமுடித்துப் பின்னாவனுணையால் பெண்கலையும் பாடத்தொடங்கி அவனுத்தல் செய்தாலோசிக்கையில் அவனது வண்ணப்பாவிசையைக் கேட்டுவந்து ஓர் சாளரத்தின் சார்பாய் நின்றுகொண்டிருந்த அவ்வரசன்றேவியையவன் கண்ணுற்றனனெனவும்,உடனே யவன் பாடியபெண்கலையில்முன்ன ராண்கலைபாடியபோது அரசன்தலையவ லக்ஷணங்கள் யாவுமமைந்தாற்போல அவள தவயவலக்ஷணங்கள் யாவு மமைந்தனவெனவும், அது கேட்ட வரசன் நிகழ்ந்த காரியமுணர்ந்து அப்புலவனுலவனுக்கு மறுமாலை சூட்டுவித்தனனெனவும் ஓர் சரிதையுண்டாகி; அதற்கத்தாக்ஷியாக வித்தமிழ் நா[illegible]ம் அப்புலவன் பாடிய வவ்வண்ணத்திற்கு (மறுமாலை சூட்டியவண்ணம்) எனப்பெயருண்டாய் வழங்கு[illegible]தன்றே? இவ்வாறுள்ளாளு மரசாது [illegible]க்கிசவ்தியு மதுபவயிலையும் அங்கையாமலகம்போ விருப்ப, இக்கம்ப[illegible]த்வரசனுக்கேனும் உறுதிச்சுற்றத்தினருளொருவரா? உறுதிக்குழுவினருளொருவரா? அல்ல துறுதித்துணைவருளேனு மொருவரா? எதினும் யாதொரு பற்றுமின்றி கடுத்தெருப்புலவராய் நான்காய்வருணத்தரையே நாப்பிளக்க வருணித்துப்பாடிப் பிழைப்புற்றழலுமிவர் அரசன்றேவிவசிக்கு மந்தப்புரத்தில் ஓரளுக்கில்லாமற் சென்று, அவ்வரசனுடைய சால்வையை அலக்ஷியமாகவெடுத்துப் போர்த்து, அவனு மவன்றேவியுஞ் சயனிக்கு மஞ்சத்தின்மீது அஞ்சுதலின்றிப்படுத்து, இராணியானவள் தன்னை யாலிங்கனஞ்செய்து சேர்தற்குரியனுண அருக்காதலனென்றெண்ணித் தனைச்சருகில்வந்து சயனித்தபோதும் அகமுமாக்கையு நடுங்கா ததியகிழ்வோடிருந் தனரெனில் இஃதெத்தகைய மித்தையென் றெண்ணத்தக்கது. அந்தோ! இது மித்தையல்லவே: என் வீணாய்க்க[illegible]டுகின்றீர். (கம்பர் சரித்திரத்து ளொருபகுதி) என[illegible]தைச் சற்றேறத்குறைய முப்பதுவருடகாலமாய் முரசுபோல்

முழங்கிவர நீர் கண்டுங்கேட்டு மிருப்பீரன்றே? அதிலச் சேரராசனுக்கும் இசகம்பருக்குமுள்ள நட்பென்ன தினையளவா? ஓர்பெரும் பனையளவாமே அக்கனகாபி லையைர்வருக்கு அடைப்பைக்காரனுயிருந்து இவர் சோழராசனேடு பிணங்கிச் சொல்லியகத சபதத்தினை நிறைவேற்றி இவரைக் கவுரவப்படுத்தினனெனில், அவனுக்கு மிவருக்குமுள்ள சுதந்திர நட்பு எத்தகையதோ வதைநீரே யோசித்துப்பாரும். ஆராலுஞ் செல்லற்கரிய அந்தப்புரத்துள்ள கட்டிலொன்றுதானு? அரமனையிலு மெத்தனையோகட்டில் அங்கங்கு மிருக்குமே, அதிலொன்றி லிவர்படுத்திருந்தாலாகாதா? அன்றியு மிதிகாசங்களுளொன்றாகிய மகாபாரதக்கதையில் துரியோதன மகாராசனனவன் றனது நண்பனுகிய கர்னனேடு தன் பத்தினி சொக்கட்டானுடித் தோற்குஞ்சமயத்தில் வர, அதுகண்டவ ளஞ்சியெழ, அக்கால் கர்னனவள் மூன்றானையை அதிற்கோர்த்துள்ள முத்துக்களுதிரப் பற்றியிர்க்க, அரவக்கொடியோன் சிரித்து அவளையவ்வாட்டத்திலிருத்தி முற்றுவித்துக்கர்னனைச் சந்தோஷிப்பித்த கதை இவ்வுலகனைத்துமறியுமே. நீர்மாத்திர மறியாததென்ன? இனிய நட்பாளராயுள்ளாரிருவரில் ஒருவன் நன்மையல்லாத காரியத்தை மற்றவனுக்குச் செய்யினும், அதனுல் தாம் கொண்டுள்ள நட்பினை விடுவரோ? ஒருக்காலும் விடாரென்பதற்கு,

இறப்பவேதீயசெயினுந்தன்னட்டார்
பொறுத்தறகுவதொன்றன்றோ—நிறக்கோங்
குருவவண்டார்க்குமுயர்வரைநாட
வொருவர்பொறையிருவர்நட்பு.

என்றுள்ள வான்றோர் வாக்கியஞ் சான்றன்றோ ஆ! ஆ! ஆ! சபாசு! நீர் சொல்லிய சரிதமு மதற்குச்சான்றாக நன்றாயிருக்கின்றது. இனி யிக்கம்பரைப்போ லொருவன் றனது நண்பன் பத்தினியோடு கட்டிலின்மீது படுத்திருந்த சரிதையும் இன்னுங் கேட்கிற் கலவி செய்தமுடித்த சரிதையுங் கழறுவீர்போலும். நீர் முன்புகூறிய சரிதைக்குச் சான்றாகக்கூறிய வான்றோரே,

மடிதிரைதந்திட்டவான்கதிர்முத்தங்
கடிவிசைகாலாய்க்கரையலைக்குஞ்சேர்ப்ப
விடுதற்கரியாரியல்பிலரேனெஞ்சஞ்
சுடுதற்குமூட்டியதீ.

எனக் கூறியிருக்கின்றனரே இதற் கென்சொல்லக்கடவீர்? இதைப்பற்றி யின்னும் வாதிக்கப்புகின் மிகப்பெருகுமாதலின் இம்மட்டில் நிறுத்தினும். இனியொருப்பதிப்பில் சேரராசனுடைய பத்தி[illegible] கம்பர் கலவிசெய்திருந்ததாகவே பதித்துக்கொள்ளும், இதனுலெமக்குண்டாகு நஷ்டம்

ளொன்றுமில்லை. ஆனாலவ்வளவு சுதந்திரத்தோடுஞ் சயனித்திருந்த கம்ப ராணர் சேரராசனைக்கண்டவுடன் இச்செய்யுளைக் கூறியது, அச்சங்கொண்டா? அன்புபாராட்டியா? அன்புபாராட்டிச் சொல்லியதானால் "தேனையார்செவ்விளநீர்தேராப்பழிசுமப்பர், நாரியார்தாமறிவார் நாமவசைகத்தாயை" என்றேனச்சமுற்றுச் சொல்லல்வேண்டும்?" அவ்வரசனுக்கு மிவருக்குமுள்ள நட்புநட்பிளவளவு மிலையாததானால், இவர்செய்கை யவனுக்குப்பழியாவதெங்ஙனம் அன்றியுமிவர்செய்கையைக்கண்டு தகாததாவெண்ணி யார் சேரராசனிடஞ்சென்று சொன்னது அவ்வாறு சொல்லினுங் தனதான்மார்த்த நண்பராகிய இவர்செய்கையை இனிதாவெண்ணியிராது. வன் மிகு சிரத்தோடு மதைக்காணவந்தனன் இவ்வாறு சிலர்சொல்லவும் நானதைக்கேட்டுச் சினந்து வரவு நேராவிடில், "கோணைவாய்ப்பொன் சொரியுங் கொல்லிமலைநன்னாடா, வூரைவாய்மூட வுலைமூடிதானிலையே." என்றேன் சொல்லி யமுதனர் இக்கம்பர் சயனித்தது அந்தப்புரக்கட்டிலில்லல அரமனைக் கட்டிலிலென்றால் அபத்தினிக ளாதியோர் குழூஉக் கொண்டிருக்குமத்தானத்தில் சுபத்தினிவரக்கூடுவதோ ஓ நண்பர்களே ! இச்செய்யுளின் கணமைந்த கருத்துக்கு மேற்சரிதையிற் கூறியவண்ணம் சேரநாட்டுப் பெண்டிரல்லாது சேரராசன் பத்தினியே சம்பந்தப்பட்டவளாயின், உடனேயவ னவளையு மிவரையு மொன்றாகக்குத்திவெட்டிச் சித்திரவதையல்லவோ செய்வன், இப்படி நாகரீகமற்ற நபுஞ்சகனுங்கூட நண்பினைப்பாராட்டி நாணொழிந்துபோவனோ ஐயா! நீரேன் வீணாய் நெஞ்சுலர்ந்துபோக நெக்கிநெக்கிப் [illegible]சுகிறீர் இத்தகைய காதைகட்கெல்லா மாதாரம் எந்த முதனூலின்கணுள்ளது முதனூல்களை யாதாரமாகக் கொண்டுள்ள முன்னையோர் காதைகளில் எத்தனையோ காதைகள்மாறி இயல்பற்றுச் சிதைந்தன. ஒன்று மற்ற விக்கதைக்கேன் உயிரையொட்டி வாதாடுகிறீர் உள்ளதை யில்லதாகவும் இல்லதை யுள்ளதாகவுங் கற்பித்துச்சாதிக்கு மிழிகுலமாக்களுடைய கொள்கை யாதெனில், உலகெல்லா மச்சியந்திர சாலைகள் உண்டெடுத்தோங்கின, அவற்றிற்பதிக்குங் கடிதவகைகளோ அதிமலைவோடு மகப்படுகின்றன, அப்பதிப்புக்கூலியோ மதிப்புக்குக் குறைந்துகூலி மல்லாடுகின்றது, நமக்கெது கடினம் அச்சிற்பதித் தவனியெங்கும் பரவச்செய்யலாம், அப்பாலனுபவமு மாதியுமே பெரிதாம், இது பொய்யா மெய்யாவெனக் கேட்பாரார் அதற்குச் சொல்வாரார் என்பதே யினுமெல்லாவற்றன்னும் உண்மையறிந்துள வுத்தமர்க்கு உள்ளதுள்ளதே இல்லதில்லதே. [illegible]வீனைய கயவர்கொள்கையைப்பற்றிக் கருதிக்கருதிக் கத்துவதினால் வரும் பயனென்னை இவ்வுலகினர்க்குள விவ்வொழுக்கவி றிசன்பவவுள்.

பூப்பதுகண்டபுணைமனைக்கிழத்தியை
நீராடியபினீராறுநாளுங்
கருவயிற்றுறூஉங்காலமாதலிற்
பிரிவுறப்பெறூஉம்பரத்தையிற்பிரிவோன்

எனவோர் விதியுளது. இவ்விதியுள் வரையறுத்துள்ள பன்னிரண்டு நாட்
களுள்ளும் தாமுற்பவித்தவாரம் - திதி - நட்சத்திரம்-விரதநாள் - அமாவா
சை அல்லது பூரணை - என்னுமைந்து நாள்கள்போக மற்றைய வேழுநா
ட்களே தமது மனைவியரைக் கூடவேண்டு நாட்களெனவும், இவ்விதி
யார்க்கும் பொதுவாயினும் வருணநான்கனுள் வைதிகராகிய முதன்மூவ
ருணர்க்கே சிறப்பாமெனவும், அம்மூவருணத்தருள்ளு மதனை முக்கியமா
கக்கொள்ளற்குரியார் நடுவருணத்தரெனவும், அக்நடுவருணத்தர் நானில
மாள்வோராய்ப் பலபோகபாக்கியங்களை யனுபவிப்போராகலின் அக்கால்
கலவியி விச்சைநேரின் கணிகையரையன்றிக் காந்தையரைக் கருத்திற்
கருதலு மாகாதெனவுங் கலைவலோர் கூறுவர். ஓகா லிவர்கள் வேறோர்
காரியார்த்தமாய்த் தங்கள் காந்தையர்வசிக்கும் அந்தவாரத்துட் செல்லவே
ண்டின் தங்களுரிமைப் பாங்கர்களால் அவர்களுரிமைப் பாங்கிகட் கறிவி
த்து அவர்களக் காந்தைய ருத்திரவுபெற்றறிவித்தபின்னரே அங்ஙனஞ்
செல்லவேண்டுமென்பதும், அவ்வாறு சென்றவிடத்தும் அயலவரைப்பேச
ற்றிரைச்சீலைக்கு வெளிப்புறத்திருக்[illegible]ச அவர்களோடுவசனித்தல் வேண்
டுமென்பதும் இராஜவமிச பாரம்பரி[illegible]விதி. இத்தகைய வந்தப்புரத்தில்
அவ்வரசர்கட்கு மவர்கள் காந்தையர்க்கு[illegible]ரிதான உடைகள் முதலியவற்
றை வேறோருடவர் தொடத்தான் றகுவரோ? அல்லது பார்க்கத்தான்
றகுவரோ? அற்றன்று-இக்கம்பருக்கு மாத்திரம் இராசம[illegible]
ன்றி அந்தப்புரஞ்செல்லவும், அங்கணுமுள்ள பல பொருள்களையெடுத்தனு
பவிக்கவும், அவள்தன்றலைவனோடு சயனிக்குங் கட்டிலில் தானேறிச்சய
னிக்கவுஞ் சுதந்திரமுண்டெனினும், இராசமகிஷி யிவரைத்தனது தலைவ
னென்றெண்ணிக்கூடச் சயனித்தாளென்பதென்ன விபரீதவசங்கதம்
கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தரைக் கொல்லப் புகழேந்தியார் கருங்கல்லை?
சுமந்துகொண்டு அவர் படுத்திருக்கு மந்தப்புரத்திற்போ யொளித்திருந்த
னரென்றும், அப்புகழேந்தியார் சிறைக்கணிருந்த நாலேந்துமாதகாலத்துள்
அம்பட்டன் முதலிய விழிகுலத்தவர்க்குக் கல்விபயிற்றிக் கூத்தனுரைவெ
திர்த்துப் பாடச்செய்து அவரை யவமானப்படுத்தி வைத்தனரென்றும்
ஒளவையா ரிக்கம்பவாணரிடத்திற் கொண்டுள்ள அரு[illegible]ருப்பு ம[illegible]றிய
மும் அருந்தமிழ்நாட்டினர் யாருமறிந்தனவாயிருக்க அவ[illegible]வரைக் கண்[illegible]
மாத்திரத்தில் நீட்டியகாலிரண்டையு மடக்கி ம[illegible]சய்வது வழக்க

மென்றும், இக்கம்பராற் பாடல்பெற விரும்பிய ஓர்கைக்கோளன் தன் பத்தினியைக்கொண் டழைப்பித்து ஓர் குறுக்கடி யேந்திச்சென் றச்சுறுத்தி அப்பாடல் பெற்றனனென்றுங் கற்பித்துள்ள எத்தனையோ கற்பனைக்கதைகளில் இக்கதையெம்மாத்திரம்? கல்வியறிவற்ற கலன்கழிமகளிருங் காதினாற்கேட்டவுடன் காறிக்காறியு மிழத்தக்கதான இக்கட்டுக்கதையினைப்பற்றி இனனும் வீணே விவகரிப்பதிற் பிரயோசனமின்மையறிக.

29. இராமாயணத்தைக் கூத்தர்பாடியதற் கேதுவும்விதமு மின்னனமாகச் சிலர் குலோத்துங்கச் சோழராசன் கம்பர்செய்த வக்காவியம் அவைதிகச்சம்பந்தத்தால் அசுத்தமாயதென வெறுத்துக் கூத்தனாரை யச்சம்பந்தமின்றிச் சுத்தகாவியமாக வேறொன்று பாடும்படி கேட்டுக்கொள்ள, அவர் பாலகாண்டமுத லுத்தரகாண்டம்வரைக்கும் பதினெண்ணாயிரஞ்செய்யுளிற் பாடிமுடித்து அவ்வரசனது சபைக்க ணரங்கேற்றி வைத்தனரெனக் கூறுவர். இவ்வாறவர் பாலகாண்டமுதலாக அக்கம்பரைப்போலதலமாகப்பாடியுள்ளாரேல் கடைக்காண்டமாகிய உத்தரகாண்டத்திற் பாயிரங்கூறார். சிலரவரைப்போல் கூத்தரு மகலமாகவே வேறோரிராமாயணம் பாடியதனாற்றான் அவர்பாடியதற்குக் கம்பராமாயணமென அவரபிதானத்தாலதுவழங்கப்பெற்றதென்றும், கம்பரக் கூத்தரிடத்தினின்று முத்தரகாண்டத்தை வாங்கியபின் அவரோ மற்றெவரோ அவர் பாலகாண்ட முகப்பிற் பாடிவைத்துள்ள பாயிரத்தை ஆய்ந்தெடுத்துச்சேர்த்து மற்றதைப் பகி[illegible]கரித்தனரென்றும் வற்புறுத்திக்கூ[illegible]வர். இதற்குக்காரண மென்னெனயூகிக்குமிடத்து, "கம்பரிராமாய[illegible]ம்பாடி யரங்கேற்றியது" எனவுள்ள கற்பனைக்காதையில் இனிப்பின்னால் சாதிக்கப்படும். வெறோர் காரியார்த் த[illegible]ள ஒருபொய்க்கதையை நம்பியே அவ்வாறு கூறுதல்போலும். அன்றியு மவர் பாலகாண்ட முகப்பிற் பாடியபாயிரத்தை யாவரோ ஆய்ந்தெடுத்துச் சேர்த்துக்கொண்டதாயின் அவர்பாடிய பதினெண்ணாயிரஞ் செய்யுள்களில் உத்தரகாண்டத்திற்குரிய வாயிரத்து நானூறு செய்யுட்கள்போக நீக்கிருப்பனவற்றிற் சில மற்றையராற் கண்டெடுக்கப்பட்டு நூற்றுக்கொரு செய்யுளாகவேனும் ஆயிரத்துக்கொரு செய்யுளாகவேனும் (நாரையூர் - நம்பியாண்டார் நம்பிகள் காலத்திற்குமுன் தேவாரத்திருமுறைகள் எந்தநிலைமையி லுலகில் வழங்கிவந்தனவோ அவ்வாறு) வழங்கி வரல் வேண்டுமன்றோ? கூத்தர் கம்பன் கவிக்கு முன் நமதுகவி சிறவா[illegible]ன்னுங் கருத்தால் அக்காவியத்தை யுருவி யெறியத் தலைப்பட்[illegible]வர் [illegible]யிலிட்டுச் சாம்பராக்காமையின். இக்கேள்விகள் பின்னு மெழத் த[illegible]லப்படுமென்று[illegible]ணர்ந்துளரேல் அக்கம்பராற் கைப்பற்றப்பட்ட உத்தரகாண்ட நீங்கலா[illegible]வை யெல்லாந் தீயிலிட்டே கொளுத்தி விட்டன

ரென அக்கற்பனைக் காதையிற் கைவைத்திருப்பர். உத்தரகாண்டத்து ள்ள பாயிரத்தையுங் கையாடாதொழிப்பர். இப்போ தென்செய்வர் பாவம் இவ்வினைத்தானுங் கூத்தர் கம்பரைப்போல் அகலகாவியமொன்று செய்து ளாரென்னுங் கூற்றும் ஓர் வாழைக்கிரண்டுகுலையுள வென்பார் கூற்றேயாம் ஓர்காவலரையன் வேண்டுகோளுக் கிணங்கிக் கூத்தர் பாடவியைந்து முடி த்துளரேல் பாரதத்தைப் பெருந்தேவனாரும் வில்லிபுத்தூராரும், நளசரித த்தை அதிவீரராமபாண்டியரும் புகழேந்தியாரும் பாடியதைப்போலக் காதையொன்றே யாயினுங் கவிகள் வேறாகவமைத்துப் பாடுதல் வேண் டும். இஃது கச்சியப்ப சிவாசாரிய ரியற்றிய கந்தபுராண மகலமாயிரு த்தலின் சிலர் வேண்டுகோளால் உபாசனார்த்தமாகச் சம்பந்த சரணாலயர் அதைச் சுருக்கிப்பாடியது போலப் பாடியதென்பதே எமது கொள்கை. அச்சுருக்கத்தினுக் கவர் உபாசன ராமாயணமெனப் பெயரிட்டிருக்கச் சில நூற்புரட்டரும் பேர்ப்புரட்டரும் "கம்பராமாயணக் கருப்பொருள்" என வதன் பெயரை மாற்றியதல்லாமல் அதை யாக்கியோன் பெயரையு மாற்றிக் கம்பரே சிலர் வேண்டுகோளாற் பாடியதெனத் தாபித்து வழங் குவதாயினர். என் செய்வது? ஊர் - சீர் - உற்றார் - பெற்றார் - மாதர் மகார் - சாதி - சமயம் - தருமம் - கருமம் - பாடை - பாடன் முதலிய பொருள்களெல்லாந் தம்மதென் றபிமானித்துக் காக்குந் தலைவரில்லாவழி இயற்கை திரிந்து கெடுமென்பது யாவரு முணர்ந்தபடியன்றோ? இவ்வுபா சன ராமாயணமுடிவில் இராமபிரான் முடிபுனைந்துலகாண்டதைக் கூறிய செய்யுளை முழுமோசஞ் செய்தனர், அதிலரசருக்கு முடி சூட்டுவோர் அவைதிகரான நான்காம் வருணத்தோனைக் கம்பரைப்போலக் குறித்திரா மையின். அஃது

சத்தியபெரியோர்தாயர்துணைவர்வேண்டிடவிசைந்தே
பத்திராசனத்திற்றேவிபங்கனுப்பரிதிவேந்த
ரொத்தணிமுடிவசிட்டனுண்கையாற்சூட்டச்சூடி
யித்தரையாவுமோம்பியினிதவீற்றிருந்தான்ராமன்.

என விருப்பக் கையெழுத்துப் பிரதிகளிற் கண்டாம்.

30. இராமாயணத்தி னுத்தரகாண்டங் கம்பருக்குக்கிடைத்த திவ் வனமாக திருவெண்ணைநல்லூர் சடையப்பிள்ளை யென்பவர் கம்பரை நோக்கி வடமொழிக்க ணுள்ள விராமாயணத்தைத் தமிழில் மொழிபெ யர்க்குமாறு கூறியும் அதிலவருக் குறைப்பு மக்களையும் பிறவாது அ[illegible] காளாய்க் காலஹரணம் பண்ணிக்கொண்டு வந்தாரென்றும், அ[illegible]ப் பிள்ளை குலோத்துங்கச் சோழராசனுக்கறிவிக்[illegible]க்காரியத்தி ல[illegible]

உரைவிடுக்கின் ஒருவர்க்கொருவர் துரிதத்தில் முடிக்க வேண்டுமென்னு மெண்ணத்தால் விரைவிலது நிறைவேறு மென்னுங் கருத்தைக் கொண்டு கூத்தரையுங் கம்பரையு மழைப்பித்து இருவரையு மதனைத் தனித்தனி பாட வாக்கியாபித்தன னென்றும், இவருள் கூத்த ரவ்விராமாயணத்துக் குரிய வேழுகாண்டங்களுள் ஐந்துகாண்டங்களைப் பாடி முடித்து ஆறுவது காண்டத்தினைத் தொடங்கிக் கடல்காண்படலம் பாடும்வரையில் கம்பர் காப்புச்செய்யுளும் பாடாதிருந்தனரென்றும், இப்படியவிருப்பதுணர்ந்த சடையப்பிள்ளை வேண்டுகோளால் அரசனவரை யழைப்பித்துக் கேட்டபோது கடல்காண்படலத்துக்கப்பால் சேதுபந்தனப்படலம் வரையிற் பாடியிருக்கின்றேனெனப் பொய்பேசி அப்படலத்தை மாத்திர மெழுபது செய்யுள்களாற்பாடி முடித்துக் கொண்டுவந்து பிரசங்கித்தனரென்றும், அவற்றுளோர் செய்யுளில் (துமி) என்னும் பதத்தைப்பற்றிக் கூத்தராக்ஷேபிக்க அதற்குக் கம்பர் கலைமகளாரைத் தியானிக்க அவரவர் பொருட்டிடையர் சேரியி லிடைச்சியாகவந்து மோர்கடைய அங்கரசனையுங் கூத்தரையு மவரழைத்துப்போய் (துமி) என்னும் பதத்தைப்பற்றி யுண்டான வாக்ஷேபனையை யொழித்தனரென்றும், அதன்பி னேறக்குறைய வாறுமாதத்தில் கூத்தர் மற்றிரண்டு காண்டங்களையும் பாடிமுடித்துக் கலைவாணி யருள்பெற்ற கம்பர் கவிக்குமுன் நமதுகவி மகிமைப்படவில்லையென்று வெறுப்புண்டாகித் தாம்பாடிய வக்காவியத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக வுருவிக் கிழித்தெறிந்துகொண் டிருந்தனரென்றும், அக்காலங்கனந் தற்செயலாகச் செல்லலுற்ற கம்பரதைக்கண்டு ஏன் வருந்திப்பாடியதைக் கிழித்தெறிகின்றீரெனக் கேட்டதற்கு வரகவியேகவி மற்றைக் கவி யென்னகவி யென்று கூறிக் குறையுங் கிழித்தற் கெத்தனிக்க அப்போதவர் கையிலிருந்த ஏட்டை யவர் வாங்கிப்பார்த்து உத்தரகாண்டமாயிருக்கக்கண்டு (நாமாறுகாண்டமாத்திரம் பாடி ஏழாவதற்கிதனை வைத்துக்கொள்ளின் யாதொரு வருத்தமு மின்றி நித மாயிரமாயிரமாகப் பல விலக்ஷணத்தோனிக்கப் பாடும் நமது வாக்குக்கு மிவர்வாக்குக்குமுள்ள தாரதம்மியம் உலகத்தாருக்குத் தெரியவருமென்னுங் கருத்தால்) அதனை மாத்திரந் தருமாறு கேட்டனரென்றும், அவரப்படியே செய்யுமென்று தர வோர் நல்லநாட்கொண்டு இராமாயணம் பாடத்தொடங்கிப் பதினாந்துபகலில் நித மெழுநூறாக பதினாயிரம் பாடலில் முடித்துவிட்டன ரென்றும் ஓர் கட்டுக்கதை யெட்டுத்திக்கும் பட்டப்பகல்போற் பிரகாசிக்கின்றது. இக்கட்டுக்கதையிற் கம்பரானவர் தனக்குத் தந்தையை யொப்பி அன்னவாதிகளைத்தந்தாதரித்துக் கல்விகற்பித்து மணவினையாதிகளை முடித்து ஆபத்துக்கெல்லா மருந்துணையாக விருந்துகாத்த சடையப்பிள்ளையின் விருப்பைச் சட்டைசெய்யாதவரா யிருந்ததன்றித் தனக்கு வித்தி

யாதானுஞ்செய்த வேதியகுரு வாக்கையுங் கடந்து நின்றபோதே "எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றிகொன்றமகற்கு" என்னு மிலக்கணத்திற் கிலக்கியமாயினர். இஃதிங்ஙனமாக - அச்சடையப்பிள்ளை சோழராசன் முன்னிலையிற் சொல்லுவித்தும் அதனையுங் கடந்தவராப் பின்னிருவரு நேரிலழைத்துக் கேட்டபோது "தன்னெஞ்சறிவது பொய்யற்கபொய்த்தபின், தன்னெஞ்சேதன்னைச்சுடும்" என்பதைத் தானுணர்ந்திருந்தும் பேசியபொய் "பொய்ம்மையும்வாய்மையிடத்தபுரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்" என்றபடி யார்க்கென்னதீங்கை யொழித்து நன்மையைத் தந்தது? அப்பொய்யால் பிறருக்கொரு நலமில்லாதபோதே தனது சுயநலத்தைக் கருதிக் கூறிய பொய்யாகித் தன்னையே சுடுமென்பதற் கையமென்னை? இதனாலன்றோ தேவர் "உள்ளத்தாற்பொய்யாதொழுகினுலகத்தா, ருள்ளத்துளெல்லாமுளன்" என மீண்டும் வற்புறுத்திக்கூறினர். இத்தகைய செய்ந்நன்றி மறக்கும் பொய்யனுக்குக் கலைவாணியின் கடாக்ஷ மிருப்பதென்ப தியாங்ஙனம்? அன்றியு மரசனக் காவியத்தை விரைவிற் பாடிமுடிக்கக் கம்பரையுங் கூத்தரையு நியமித்தானாயின் அதனைப் பப்பாதியாகப் பகிர்ந்துதந்து, (கந்தபுராணச் சப்தகாண்டங்களையுங் கச்சியப்பசிவாசாரியருங் கோனேரியப்ப நாவலருங் காஞ்சிப்புராண வுபய காண்டங்களையுஞ் சிவஞானசுவாமிகளுங் கச்சியப்ப முனிவரும் பகிர்ந்துகொண்டு பாடியதுபோலப்) பாடச்செய்தல் விதி. அவ்வாறின்றித் தனித்தனி பாடச்செய்தானென்பதற்குக் காரணம்யாது. அப்படிக்குச் சோழராச னிருவரையுந் தனித்தனி பாடச்செய்திருப்பனேல், கூத்தர்பாடி முடித்ததைப்போலச் சுத்தகாவியமாகவன்றோ விருத்தல் வேண்டும். அதிலவைதிகச்சம்பந்தங் கலந்திரு[illegible]மோ? கம்பர் தான் பேசிய பொய்க்கிணங்கப் பாடிவந்த சேதுபந்[illegible] பாட்டில் (துளி) என்னும் பதத்திற் காகுபெயராய்த் (துமி) எனப்பிரயோகித்திருப்பதில் கூத்தனு ரையங்கொண் டாக்ஷேபித்தன ரென்றால், இத்தகைய பிரயோகங்கள் பல விலக்கிய நூல்களில் எதுகையின்கண்ணு மோனையின்கண்ணு மின்னும் பல சீரின்கண்ணு மெத்தனையோ கண்டுந் தாமே நையாடியு மிருக்குமவருக்கு அதிற் சந்தேகம்வந்தது மிக வாச்சரியமே: அன்றியு மித்தகைய விகற்பங்கள் தானுணர்ந்துள்ள சிந்தாமணி முதலிய காவியங்களிலேயே செப்பரிதா யுள்ளன. இவைகட்கு விதிபோலெல்லாவிலக்கண நூல்களினு மெண்ணிலவாயுள. அவற்றையெல்லா மீண்டு விரிப்பிற் பெருகுமன்றே: அற்பகவிகளாயுள்ளோரு மறிந்தனவாய் திவாகர நிகண்டு முதலிய கருவி நூல்களிலுந் தெளிவாயுளவாத[illegible]. இத்தகையவோ ரற்பகாரியார்த்தமாய்க் கலைமகளா ரோரிடைச்சியா யிடையர்.சேரியின்கணெழுந்தருளி அச்சந்தேகத்தினைத் தீர்த்தது அதனி

லு மிக வாச்சரியமே: இத்தமிழ்நாட்டின்கணுள்ள விலக்கிய நூல்களில் இத்தகைய பிரயோகங்களுக்கெல்லாங் கலைமகளார் வந்துதான் கண்டிறக்கவேண்டும் போலும்.

அன்றியு மக்கம்பரென்னுங் கவிஞர் அருணகிரிநாதர் காளமேகப்புலவர் முதலானவர்களைப்போல் வரகவியா? அவதானங் கண்டசித்தி முதலியவைகளை நடத்த வல்ல சரகவியா? பொருளடி பாவணிமுதலியன கொடுத்து மற்றொருவன் பாடுகவென்றவுடனே பாட வல்ல ஆசுகவியா? பொருட்செல்வஞ் சொற்செல்வந் தொடை தொடைவிகற்பஞ்செறிய உருவகமுதலிய வலங்காரத்தொ டின்னிசைத்தாய் அமுதமுறப்பாடுவோனாகிய மதுரகவியா? மாலைமாற்று - சுழிகுளம் - ஏகபாதம் - எழுக்கூற்றிருக்கை - கூடசதுக்கம் - கோமூத்திரி - சித்திரப்பா - விசித்திரப்பா - சருப்பதோபத்திரம் - திரிபங்கி - சத்தபங்கி - நவபங்கி - இரதபந்தம் - அஷ்டநாகபந்தம் - முரசபந்தமுதலிய மிறைக்கவி தெரிந்து பாடத்தக்க சித்திரக்கவியா? பிள்ளைக்கவி - பரணி - கலம்பகம் - அகப்பொருள் - புறப்பொருள் - உலா உலாமடல் - வளமடல் - இசை - கூத்து - செவியறிவுறூஉ - வாயுறைவாழ்த்து - புறநிலைவாழ்த்து - இயன்மொழிவாழ்த்து - ஆற்றுப்படைமுதலிய விரித்துப்பாடும் பெருமிதம் வாய்ந்த வித்தாரகவியா? அல்லது வேறெந்தக் கவிகளிற் சிறந்தவர்? "விருத்தமென்னுமொண்பாவுக்குயர்கம்பன்" என்றபடி விருத்தம் பாடுவதிற் சிறந்தவர். அதுவுஞ் சிந்தாமணிமுதலிய பஞ்சகாவியங்களினின்றும் பொறுக்கிப் புனைந்த போலி விருத்தப்பாவே: இத்தகைய போலி விருத்தப்பாக்களைப் பிரமராக்கதனென்னு மோரலகையின் றுணையாற் பாடுங் கம்பரைத் தேவவருளாற் பாடும் வரகவியெனக் கருதி யஞ்சிக் கூத்தர் தாம் பாடிய விராமாயணத்தைக் கிழித்தெறிந்தனரென்றால், இப்புவியி லிதுகாறு மெத்தனையோ வரகவிகளிருந்து பாடிய பாக்களைக்கண்டு பயந்து எத்தனைபே ரெத்தனைப் பிரபந்தங்களைக் கிழித்தெறிந்தார்கள்? இடையில் வெறிபிடிக்கப்பட்ட வித்துவான்களுங்கூடத் தான்பாடிய பாக்களைக் கிழித்தெறிய மனங்கொள்ளாரே: அப்படி யவருண்மையாக் கடல்காண்படலம்வரையிற் பாடியிருந்து கம்பரதற்குமேல் சேதுபந்தனப் படலம் வரையிற் பாடியுள்ளேனெனப் பொய்சொல்லிப் பின்னர் பாடிவந்த வப்படலத்தில் தாம் (தூமி) என்பதற்குப் பொருள் தெரியாது மயங்கி அது முன்னிலையிற் கம்பர் கலைவாணியி னருள்பெற்ற வரகவியெனத் தெரிந்துகொண்டாரேல், அப்போதேயன்றோ தாம்பாடிய வரையிற் கிழித்தெறிதல்வேண்டும். அப்பா லாறுமாதம் வரையிற் கஷ்டப்பட்டு முன்பாடிய வைந்துகாண்டச் செய்யுள்களுக்கிரட்டியாஞ் செய்யுள்களைக் கொள்ளற்பாலனவாகிய மற்றை யிரண்டுகாண்டங்களை எவ்வத்

வீணே பாடல்வேண்டும். அந்தோ! இவைகளையெல்லா மதிவின்மிக்கார் யோசிக்குமிடத்து நம்பத்தக்கனவாமா? இத்தமிழ்நாட்டின்கண் கவிகளென வெளிப்படுவோ ரெத்தகையராயினும் இலக்கிய விலக்கணங்களில் தாம் கேட்ட கேள்விக் குத்தரஞ்சொல்லச் சத்தியிலராயின் அவர்களை யிவ்விருவராகச் சேர்த்து வெட்டியெறியும் வீரகவியெனவும், வெட்டுப்பட்டிறந்தவர்களை மீட்டு முயிர்பெற்றெழப் பாடவல்ல தெய்வகவியெனவும், இன்னும் பல பிரபாவங்க ளெண்ணிலவாகப்படைத்த கூத்தரோ தனதாயுள்வரையில் இராமாயணமொன்றே யன்றி வேறோரரிய அல்லது பெரிய நூலுஞ் செய்தறியாத கம்பரது போலிக்கவிக்கஞ்சுவர். ஏறக்குறைய நூறாண்டுக்குமுன் உபபுராணங்களுளொன்றாகிய பார்க்கவமென்னும் விநாயகபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்த கச்சியப்பமுனிவர் அப்புராணத்தை யிச்சென்னையின்கணுள்ள பிரசன்ன விநாயக ராலயத்தின்கண், பல பெரியோர் கவிவாணர் பிரபுக்க ளாதியரால் கூடப்பட்டிருந்த ஓர் மகாசபையி லரங்கேற்றத்தொடங்கி நடாத்திவருங்காலத்தில், அப்புராணத்தோர் படலத்துள் விண்டு விநாயகரை யுபாசித்த தரத்தைப் பற்றிச் சில வைண்ணவக்கவிகள் துராக்ஷேபஞ்செய்து அவ்வாக்ஷேபனைக்கு மேற்கோளாகக் கம்பராமாயணத்துட் சில செய்யுளை யெடுத்துக்காட்டவும், அம்முனிவ ரச்செய்யுள்களொவ்வொன்றுக்கும் எண்ணிலவான குற்றங்களைக்கூறி எட்டின்கண்ணு மெழுதுவித்துச் சாதித்தது இத்தமிழ்நாடனைத்து மறியுமே; இவ்வாறெழுதப்பட்டுள்ள வவ்வேட்டுக்குக் (கம்பராமாயணச் சங்கோத்தரதீபிகை) எனப்பெயரிட் டிக்கா லச்சிடப்பட்டு முளதன்றோ? இதனை யக்கூட்டுக்கதைப்புலவ ரறிந்திலர்போலும். அன்றியும் கம்பர் கூத்தரிராமாயணத்தின் கடைக்காண்டமாகிய உத்தரகாண்டத்தை நம்திராமாயணத்தோடு சேர்த்துவைக்கின் தமது வாக்குக்கு மிவர் வாக்குக்குமுள்ள தாரதம்மியம் வாசிப்போருக்கு நன்கு விளங்குமென் றெண்ணி அதனை மாத்திரங் கிழிக்கவொட்டாது வாங்கிச் சேர்த்துக்கொண்டாரெனில், இப்படி யவர் சேர்த்ததனால் விளங்குவது கம்ப ரிராமாயணக் கவியடங்கலு மேற்குறித்தபடி சீவகசிந்தாமணி முதலிய பஞ்சகாவியங்களின் சொன்னடை - பொருணடை - கற்பனை - கருத்து - சுவை - ஓசைமுதலானவைகளைப் பொறுக்கிப் புனைந்து அமைதிக வருண சம்பந்தமுங் கலந்துபாடிய அசத்தப்போலிக்கவிகளெனவும், கூத்த ரிராமாயணக்கவியடங்கலும் இத்தகைய யாபாசங்களின்றித் தாமே சுய வல்லபத்தாற் புனைந்து பாடிய சுத்தச் சீலக்கவிகளெனவு நன்கு விளங்குகின்றதேயன்றி வேறென்ன விளங்குகின்றது? கம்பரது கவிக்கெதிரே நமது கவி கவினசெய்ய மாட்டாதென்னக் கிழித்தெறியத் தலைப்பட்ட கூத்தர் "நாளொருகாண்டமே பாடி யேழாவதற்கிதனை வைத்துக்கொள்ளுகிறேன்" என வல்லுத்தரகா

ண்டத்தை யவர் கேட்டபோது அப்படியே செய்புமென்று கூறிச் சொரித்தாரெனில், தமது கவி யவர்கவிக்குமுன் தாழ்ந்துபோமென் றுள்ளினவர் எப்படி யதிலொரு கவியேனுங் கொடுப்பர்? உடனே கிழித்தெறிந்தனவற்றையும் பொறுக்கிச் சேர்த்து அவர்கண்முன்னர் தானே கொருப்பிவிட்டுத் திப்தியடைவரன்றோ? அந்தோ! இயற்கையிலேயே கம்பர் யாரிடத்தும் கடுஞ்சொல்லுங் களியாடலுங் கல்வி யிறுமாப்பு முள்ளோராய் இத்தமிழ்நாட்டின்கணுள்ள வேளாளர் முதலிய அவைதிகர் கூட்டத்தன்றி அந்தண ராசராதிய வைதிக ரவைக்கணோர் காலத்தேனுஞ் சன்மான பெருமானங்கள் பெற்றறியாத சழக்கராயிருக்கினும், தனது சம்ரக்ஷணை கர்த்தனாகிய கேளாளப்பிரபுவின் சொல்லையுந் தனக்கு வித்தியாதானஞ்செய்த அலகையுருவாகிய வேதிய குருவாணையையுங் கடந்தவரல்லர். ஓர் கால் மறந்தேனுங் கடப்பாரெனில் அவரது வாழ்நாட்கெல்லாம் வைப்புநிதி போன்ற அவ்விருவருடைய சகாயமுங் குறையும். இது குறையவே முன்னரவர்களால் தானடைந்துள்ள செல்வமுங் கல்வியும் விருத்தியாதல் யாங்ஙனம்? இவற்றையெல்லாங் கல்வி கேள்விகளிற் சிறந்து காட்சி யனுமானம் முவமை முதலிய எண்விதப் பிரமாணங்களாலும் ஒவ்வொரு விடயங்களையு மையந்திரிபறவாய்ந் துணரவல்ல கனவான் களுய்த்துணருமிடத்துக் கம்பர் கலைவாணியின் கடாக்ஷம் பெற்றவரெனவும் கூத்தரது பெருதவரெனவும், கம்பர் கவிகள் சுவைமிகுத்த வரகவிகளெனவும் கூத்தர் கவிக ளஃதின்றிய மரகவிகளெனவும், கம்பர் பதினைந்து பகலில் பதினாயிரஞ் செய்யுளையு மிக வெளிதாய்ப் பாடினரெனவும் கூத்த ரவற்றைப் பலவருடம் பகலுமிரவுமாய் மிக வருந்திப் பாடினரெனவும், இன்னு மித்தகைய [illegible] ருமைக ளெல்லாங் கம்பருக் கியற்கையா யுள்ளனவெனவுங் கூத்தருக்கவை செயற்கையினுமிலையாதெனவும், இவ்வுலகின்கணுள்ள [illegible] ய பேதையர்யாரு மயங்கி மேல்கீழாய் கீழ்மேலாய் மதிக்கும் வண்ணம் 'ஆனதோர்பரப்பிரமம்யானே யல்லதில்லையென் றறிவிலாப்பேதை, மானுடப்பெரும் பசுக்களையெல்லா மருட்டியேதிரிவஞ்சகன்' ஆகிய மாயனுக் கடிமைப்பட்டுள்ள சில வைணவ வேளாளராற் கற்பித்து வைத்த கட்டுக்கதையெனப் புலப்படுமென்பதற் கையமென்னை? இத்தகையதான கட்டுக்கதையினை இருங்குடியிற் பிறந்த பெருந்தகையாளர் இனிமேலு மித்தமிழ் நாடெங்குந் தலையெடுத் தாடாவகை ஓர் மரக்கலத்தி லேற்றிக்கொண்டு போய்க் கடலனைத்தையுந் தாண்டிச் சக்கிரவாளகிரிக்கப்பால் ஆழப்புதைத்து மீளக்கடவர்

31. இச்செய்யுளினீற்றடி முதலில் (சற்சூராளுங் கனவான்களாலு நிறைந்தசபை) என்னும் பொருள்பட "கஞ்சணியவரங்கம்" என நின்றத

னுள் மகரவொற்றை நீக்கி ரகரவொற்றைப் புணர்த்தி "கன்னியரைக்கர்"
என வாக்கி, இரண்டாமடியினீற்றில் "கம்பவாணன" என விருந்ததை
(கம்பநாடென் பெருநாடெக்காலத்து மில்லையாக "கம்பநாடன்" என
வேறுபடுத்தி, இக்காவிய வரங்கேற்றலுக்குக் கற்பித்துவைத்த கற்பனைக்
காதைக்கிணங்க இவைபோன்ற சில புரட்டுகளையும் பொய்களையுமமை
த்து மகிழ்கூர்ந்தனர். இஃதுள்ளூர்தோறு மெள்ளத்தருவதான ஊர்ப்
புரட்டென்ப. இத்தகைய ஊர்ப்புரட்டு பேர்ப்புரட்டு கவிப்புரட்டு காதைப்
புரட்டு எண்புரட்டு யெழுத்துப்புரட்டு சமயப்புரட்டு சாதிப்புரட்டு முதலி
யன விடைவிடாது செய்துவருந் தீயரையெல்லாம், இனி யித்தகைய புர
ட்டுகளெங்கும் பொங்கா வண்ணங்கொண்டுபோய் எல்லாத்தீய்க்கு மே
ருயுள்ள வடவைத்தீய்க் குணவாக்குவோர் யாண்டுமில்லையா? ஓ பரம்பொ
ருளே! பரித்தற்கரிய பொய்யெல்லாம் பசுமரத்தாணி யாய்விட்டனவே:
ஐயையோ!! இதென்ன விபரீதம்? இத்தமிழ் நாடெங்கும் வழங்கப்பட்டு
ள்ள "விநோதரசமஞ்சரி" என்னும் புத்தகத்தில் "கம்பர் தாம்பாடிய
விராமாயணத்தை ஸ்ரீரங்கநாதர் சந்நிதியி லரங்கேற்றச் செல்லுங்கால்
வைணவ சமயாசாரியர்களுக்குள்ளே பரமாசாரியராகிய ஸ்ரீமந்நாதமுனி
கள் கம்பர்பாடின ராமாயணத்தைக் கடாட்சித்தருளி அது சொற்சுவை
பொருட்சுவை செறிந்ததாயும் பகவத்விஷயமானதாயும் அற்புதமாயு மிரு
ப்பது நோக்கி இவருடைய புலமை கேவலம் மானுஷிகமா யிருக்கவில்லை
யென்று அதிசயித்து இந்தக்காவியத்தை அவசியம் பிரசித்தம் பண்ணுவிப்
பது நமது கடமையென்று திருவுளங்கொண்டு கம்பரைமண்டப
கைங்கரியம் ஒன்று செய்யச்சொல்லி நியமித்து அதையவர் செ
ய்து முடித்தவுடனே சுபதினம்பார்த்து அரங்கேற்ற எத்தனமாயிருக்
கையில் நம்பெருமாளாகிய ஸ்ரீரங்கநாதர் அர்ச்சகன்முகத்தால் [illegible]
த்துக் கம்பா! நீ நம் சடகோபனைப் பாடினையோ பா[illegible] நாம்
உனது ராமாயணத்தைத் திருவுளம் பற்றுவோம் இல்லாவிடில் அது நம
க்கு அங்கீகாரமாகாது பின்னாய் யென்று[illegible] ஸ்ரீரங்கநாதர் அருளிச்செய்
ததுகொண்டு கம்பர் ஆழ்வார்விஷயத்தில் நூறு கட்டளைக்கலித்துறை
யில் ஆழ்வாரந்தாதி அல்லது சடகோபரந்தாதியென ஓரந்தாதிபாடினார்."
எனப்பதித்து, அம்மண்டபமு மந்தாதியு நாளதுவரையும் அவரபிதானத்தா
லேயே வழங்கிவருகின்றனவே: நீரெ னூர்ப்புரட்டென்கிறீர்? ஆம்: ஆம்:
அரங்கநாதர்க் கவனியையாளு மரசர்களாலு மன்பர்களாலுஞ் சமைத்தன
மண்டபங்களோ அளவில. அதிலொன்று கம்பராமாயண வரங்கேற்ற
லென்னுங் காதைகட்டிய காலந்தொடங்கி அவரபிதானத்தால் வழங்கிற்
றலுமுண்மையே: அவர் பாடியதாகக்கூறுஞ் சடகோபரந்தாதியுஞ் சரஸ்
வதியந்தாதியைப்போல் அற்றேயாம். இதிலென்ன சந்தேகம்? பகலொ

ன்றுக் காயிரம்பாட்டும், பாட்டொன்றுக் காயிரம்பொன்னும் பதைக்கப்
பதைக்க வாங்குவோர்க்கு; அவ்விரண்டு காரியங்களையுஞ் செய்துமுடித்த
லரிதா? இத்தகைய சற்பத்திசெலுத்தியவருக்கு அரங்காதரேன் பிரத்தி
யக்ஷமா யெழுந்தளிக் கட்டளையிட்டிலர். அல்லதப்பிரத்தியக்ஷமாய் அசரீ
ரியாகவேனு மின்று முழங்கலாகாதா? ஓரர்ச்சகன் முகத்தா லாவிர்ப்பவி
த்து முழக்கியது அலகைக்கூத்தாயல்லவோ முடிந்தது. இஃதெவ்வாறு
யினுமாகுக; இராமாயணத்தைக் கம்பர்பாடி யரங்கேற்றிய தென்றுள்ள
கதையினைப்பற்றி யாமாங்காங்கெடுத்துக் காட்டியுள்ள பொய்களனைத்து
மெய்யாங்கால் இவ்விரண்டனையு மெய்யெனக்கொள்ளுக. இல்லையேல்
மேல் யாம்கூறியபடி அக்கட்டுக்கதையினையும் அதனைக் கழறித்திரியுங்
கைதவரையுங் கடையனலுக் கிரையாக்குக.

32. இச்செய்யுளில் ஔவை யெம்மன்னை உலகின்க ணகரவாசி
களாயுள்ள அந்தணர்முதலிய வைதிகர் மூவர்க்கு மியற்றலாகாத் தொழி
லாய், கொழுநதியி னூறுபாடுமுதலிய பதின்வகைச் சீவகொலைகள் நேர்
வதாய், பஞ்சமவிரனத் தீண்டப்படாராயுள்ள பண்ணையாட்களின் றுணை
யாலன்றியினிது முடியாததாய், வெயில்-மழை-பனி-காற்று முதலியவை
கட்குச் சோம்பாது வருந்தி முயறல் வேண்டுவதாய், எருஇடல்- பரம்படித்
தல்-நிலந்திருத்தல்- புழுதியாக்கல்-[illegible]செய்தல்-விதைவிதைத்தல்-நாறு
நடுதல்-நீர்பாய்ச்சல்-களைகட்டல்-பயிரோம்பல்-விளைவறுத்தல்- போர்வே
ய்தல்-பிணையடித்தல்-சொத்தல் பாத்தல் முதலிய வினைகளை யணிகலனுச
ப்பெற்றதாயுள்ள தொழிலினிக் கிடமாயிருப்பது நாடாதலால் அந்நாட்டி
ன்கணிருந் தத்தொழினின்முயனும் அவைதிகரான வேளாண்மாக்களை
"நாட்டார்" என்றும், இவ்வேளாண்மாக்களாதிகாலத் தயன்பதத்துதித்த
வேற்றத்தோடு நில்லாது அவ்வேற்றத்தினைக் குலாலராதிய பதினெண்
[illegible]விடுத்து அவரைச்சங்கம ருத்திரரென வோதித்தாங்
களோர் தறபத்தருத்திரகணிகையான கங்கையார் வரமக்களென்னுஞ் சரி
தையை வகுத்து ஒரேவகைத்த[illegible]றிப் பலவகைத்தான கொடி செடி புற்
பூடுக ணிலைறந்துள்ள [illegible]னநந்தை யொப்ப அந்நாடெங் மப்பதினெ
ண்குடிமாக்களோடு தாங்கள் சற்சூத்திரரெனப் பரவிநிற்றலால் "கங்கா
குலக்காட்டார்" என்றும், இக்குலத்தினர் முதன்மூவர்க் கேவல்செய்
வோராய் உழுதும்- பசுக்காத்தும்-காருகவினைகளாக்கியும்- குயிலுவத்தொ
ழில்செய்தும் பொருளீட்டி அப்பொருளைத் தம்மிடத்தவைதிகச்சம்பந்த
த்தால் நேரும் பவங்கள் சோரத்தேவர் "தென்புலத்தார் தெய்வம்விருந்
தொக்கலுறென்றாங், கைம்புலத்தாறோம்பறலை" என்றபடித் தாங்க
ளிம்மையிற்செய்யு மைம்பெரும் வேள்விகளோடு இவ்வேள்விகளின் பய
னுப் மறுமையின்க ணெய்தப்பெறும் பதவிக் குறுதுணையாகிய சிவத்தொ

ண்டையு மியற்றுவதான கைவளத்தை நாடி அதனையோரடி யீரடி மூவடி நாலடிகளைக்கொண்ட பாக்களாற்கூற வமையாதெனத் தனது கொள்கை சென்மட்டு முடிதற்கான ஓர் நெடும்பாவினாற் பாடத்தொடங்கின ரென பது தோன்ற "தன்கைவளநாடி வெகுட்டான வெண்கலிப்பாட்டால்" என்றும், அச்சிவத்தொண்டை வகித்தோர் திறத்தினைக்குறித்துள்ள முத னூல்கள் மூன்றனும் அவர்கள் குலத்தினைக் குறியாதிருக்கத் தானிலே மறைகாய்போல் ஒருவரிருவரோ டொழியாது வெள்ளிடை மலைபோற் கரவடமாய் என்மரைக்காட்டினரென்னுங் கருத்தால் "இக்கம்பனெடுஞ் சுவர்போற்காட்டாதன பலகாட்டியகொள்ளையில்" என்றும், இவ்வாறு கரவடஞ்செய்து காட்டிய தொண்டரெண்மருள் எயர்கோன் கலிக்காம நாயனருடைய திருத்தொண்டைக்கூறி அவருக்குப் பெண்கொடுத்த மானக்கஞ்சாரநாயனருந் தனித்தொண்டரறுபத்துமூவரு ளொருவராக அவருடைய திருத்தொண்டைக் குறித்துக் கூறுமைபற்றி "மறந்தொன்றை" என்றும், ஒருவரோதாமே யாவையுமுணரவல்ல தாம் அவ்வெண்மரில் (இப்போதச்சிட்டு வழங்கிவருந் திருத்தொண்டர் புராணத்துள்ளபடி) மூர்க்கநாயனருக்குப் பதில் வணிகராகிய மூர்த்திநாயனரென்னு மொருவரைக் குலமாற்றிக் கூறினரென்பது தோன்ற "மாற்றிமற்றொன்றை-என்றும், இம்மறப்பு மாற்றலுமுண்டாய் தான் படவெடுத்த நூலிற் பல குறைகுற்றங்கள் நேரக் கெடுத்ததற்கேது மயக்கமாதலின் அஃதந்நாட் காலையிற் கொண்ட பித்தமயக்கமென்னுங் கருத்தோ அல்லது மதுமயக்கமென்னுங் கருத்தோ அல்லது மதுமயக்கமென்னுங் கருத்தோ இருபொருளொட்டாய்வந்த வினைமுற்றில் "காலைவெறிக்கேட்டாற் கெடுத்தனனே" என்றுங்கூறினர். இவ்வா றௌவை யெம்மன்னை கம்பரது மறப்பையும் மாற்றலையும் பற்றிக்கூறிய வித்தனிச் செய்யுள் அந்நாள்தொட் டிந்நாள் காறு மியாண்டும் வழங்கவும் அவ்வவர் சொல்லவு நிற்றலின [illegible] வெழுபதென்னு நூலை இறந்தவிரண்டு செய்யுள்களொழிய வேனைய வறுபத்தெண் செய்யுள்களோடு இத்திருக்கை வழக்கென்னு நூலையு மச்சிட முயன்றகாலத்தில் அம்மறத்தை யமைக்கவும் மாற்றத்தைத் திருத்தவுங் கூடாசாய் உள்ளபடிக் கச்சிட்டு வழங்கினர். இந்நூலை யரங்கேற்றத்தொடங்கிய கம்பர் இத்தகைய குறையையுங் குற்றத்தையுங் கேட்டுணர்ந்தன்றே அவற்றையே யமைத்துக்கொள்ளவுந் திருத்திக்கொள்ளவுங் கூடாதவராயினரெனில், அவருக்குக் காலைவெறிக் கேடொன்று காரணமாய்நிற்றலி னவற்றை யாய்ந்துணராதவராய் அவ்வரங்கேற்றலைக் கேட்டிருந்த மற்றையர் ஔவை கூறியதிலையங்கொள்ளாவாறு அவ்வம்மைக்கு நமக்கு மெங்காலும் எழுபொருந்த மெனக்கூறி மகிழ்வித்தனர். இஃதிவனமாக-ஏரெழுபதுக் குரையெழுதியோர் இத்திருக்கை வழக்கத்திற்கு முன்னீவரைத் திருக்கின்றனரென இப்போதேயடியுர மமைத்துக்கொண்

டதன்றி, முன் பதிப்பினுளில்லாத இருபத்தேழு கலியடிகளை இக்கால் சில வேறுபாடுகளோ டச்சிட்டு வழங்கிவருந் திருத்தொண்டர் புராணத்திற் கியையவுந் தாங்கள் வைசியரெனக்கூறும் பெருங்கதை கட்டொக்கவும் ஏனைய சில நவீனக் கொள்கைகளிணங்கவும் பாடிச் சேர்த்துக்கொண்டதும் போதாமல், (இன்னு மித்திருக்கைவழக்கத்திற்குச் சிலர் கலியடி தொண்ணூற்றுறென்றுஞ் சிலர் நூற்றெட்டென்றுஞ் சொல்வதால் அவையுங்கிடைக்கி லிரண்டாப்பதிப்பிற் சேர்த்தச்சிடுவோம்.) என்றுதாரஞ்செய்துகொண்டனர். இனி யோர்கால் கலிச்சி ராயிரத்தெட்டோடும் ஓர் திருக்கைவழக்க மிருப்பதாக வெளிப்படும் போலும். அன்றியும்-(திருக்கைவழக்கமூலம் நல்ல பிரதியாய்க் கிடைத்தமையால் அதையுமித்த வேறெழுபதுரையுடனே கூட வச்சிட்டிருக்கின்றோம்) எனச் சாதித்தனர். இச்சாதனைப் பிரதி கிடைத்தது கீழது மேலதாய் மேலதுகீழதாய் மாற்றப்பட்டிருந்தே கிடைத்ததுபோலும். இந்தோ; இவையனைத்தையு மவர் மரபினருள்ளேயே ஆய்ந்துணரு மறிவினையுடையா ருய்த்துநோக்கின் அவைபனமேயன்றோ? இத்தகைய வவமானைக் கிருத்தியங்களுக் குடம்பட்டுளோ ரிவற்றோடு நில்லாது, மேற்கூறிய திருத்தொண்டர் புராணத்திற்குங் காஞ்சிமுதலிய தலபுராணங்கட்கும் உரைவரைந் தச்சிட்டுவழங்கவுத்தேசித்து நடாத்திவருஞ் சில வித்துவசிரோமணிகள்பால் பன்முறை பிரயாசை பாராட்டாமற் சென்று, அவற்றி லோரோவிடங்களில்தங்களை நான்காம் வருணத்தரெனக் காட்டியுள்ள பதங்களையெல்லாம் மூன்றும் வருணத்தரெனத் திருத்தி உரையெழுதும்படிக்கும் வெகுவாய் முயன்றார்கள். ஆனா லம்முயல்வு யாரிடத்துங் கைகூடாமற்போயது. திருக்கைவழக்கத்திற் குத்தேசித்திருந்த முயல்வுமாத்திரம் இதுகாறு நிறைவேறியேயிருக்கலாம். சிவகிருபையால் யாதுகாரணத்தாலோ உத்தேசித்திருந்த மூலபுருடா நிற்க முடிக்கும் புருடர்மாத்திரந் தனது நண்பராய் கச்சித்தலைச் செங்கோட்டத் துறவன்மனூர் திருநாகந்தையாரையும், அவருரைக்குச்சிறப்புப்பாயிரம ளிக்கத் திருத்துருத்தி- பொன்னிருடிக் கிழாரையுங் காணவேண்டி இப்பிரயாசையினை விட் டொழிந்து போயினர். இவ்வொழிந்த புருடரோர்கால் இன்றுகாறு மொழியாதிருக்கும் அம்மூலபுருடரிடம் அதனை நிறைவேற்றிக் கொடுத்திருப்பின், இன்னுஞ் சின்னாளி லதுவுமச்சிட்டு வெளிவரும் போலும்.

இஃதிம்மட்டில்-நிற்க "இக்கால் சிலவேறுபாடுகளோடச்சிட்டுவழங்கிவருந்திருத்தொண்டர் புராணம்" என மேற்குறித்துள்ளதை விவகரிக்குமிடத்து, அத்திருத்தொண்டர் புராணப் பாயிரத்துள் "அருவினை யமைத் திருத்தொண்டறிவருந், தெருளினிறி செப்புதற்காமெனின், வெருளின்மெய்ம் மொழிவானிழல்கூறிய, பொருளினுருமெனப்பு கல்வாமன்றே

என்றும், "மற்றிதற்குப்பதிகம் வன்றொண்டர்தாம், புற்றிடத்தெம் புராணரருளினாற் சொற்றமெய்த்திருத் தொண்டத்தொகையெனப், பெற்றநற்பதிகந்தொழப்பெற்றதால், அந்தமெய்ப்பதிகத்தடியார்களை, நந்தநாதனு நம்பியாண்டார் நம்பி, புந்தியாரப்புகன்றவகையினால், வந்தவாறுவழாமவியப்புவாம்." என்று முள்ளபடி தில்லையம்பலவர் (உலகெலாம்) என்ற சீரியாய் முதலெடுத்துத்தரப் பூர்வந்திருநாரையூர் - நம்பியாண்டார் நம்பிகள் - திருநாவலூர் - ஆளுடைய நம்பிகள் செய்தருளிய திருத்தொண்டத்தொகைக்குப் பொல்லாப்பிள்ளையாரிடம் பொருள்கேட்டு அவ்வத்தொண்டர்கள் செய்கையை வகைபெறப்பாடிய திருத்தொண்டர் கலித்துறையந்தாதியைக் குன்றத்தூர் - சேக்கிழார் சுவாமிகள் முதனூலாகக்கொண்டு தாம் விரிவிற்பாடி முடித்துளாராயின், நாரையூர் நம்பிகள் அத்திருத்தொண்டர்களுடைய வூர் பேர் குலம் குடி முதலியவற்றை எவ்வாறெவ்வளவிற்குறித்து அவர்கள் செய்கையை வகையுற வோதிவைத்தனரோ அவ்வாறே தாமுங் குறித்து விரிவுறப்பாடி முடித்தல்வேண்டும். அல்லது தில்லையம்பலவருடைய வருட்டிறத்தினால் அவர் குறித்திராதவைகளெல்லாமுங் குறித்துப்பாடி முடித்திருத்தல் வேண்டும். இவ்விரண்டுமின்றித் தாம்பாடிய வப்புராணத்தில்

திருமறையோர்புராணமவைபதின்மூன்றுசிவவே
 தியர்சரணவழிபட்டபுராண்மோரிரண்டு
குரைகழன்மாமாத்திரரொன்றறுவர்முடிமன்னர்
 குறுநிலமன்னவரைவர்வணிகர்குலத்தைவ
ரிருமைநெறிவேளாளர்பதின்மூவரிடைய
 ரிருவர்சாலியர்குயவர்தயிலவினையாளர்
பரதவர்சான்றார்வண்ணார்சிலைமறவர்நீசர்
 பாணரிவ்ரோரொருவராம்பகருங்காலே.

என்றும்,

அறுதிபெத்திருமரபுகுறித்துரையாப்புராண
 மவைகளொருபதின்மூன்றுதிருக்கூட்டந்தன்னின்
மறவிலவர்புநிபறிந்தகதையிரண்டுவந்த
 மரபறிந்தகதையிரண்டுபேரறியாக்கதையொன்
றறுமரபுதெரியாப்புராணமவையோரே
 ழோறியாக்கதையேழுபேரறியாக்கதையெட்
டிறுதியிலக்கக்கண்டதிருக்கூட்டமொன்றெண்
 ணித்தனையென்றறியாததிருக்கூட்டமெட்டே.

என்றுமதற்குச்சார்புநூலாய்ப் பிற்காலத்தவராற்கூறிய திருத்தொண்டர் புராணவரலாற்றிற் கண்டபடி யுள்ளனவே யெனில், அவ்வரலாற்றின் கண் மற்றொருபால்

ஓருலகோவொருதிசையோவொருபதியோதம்பி
    லொருமரபோவொருபெயரோவொருகாலத்தானே
பேருலகிலொருமைநெறிதருங்கதையோபன்மைப்
    பெருங்கதையோபேசொன்றோவல்லவேயிதனை
யேருலகெலாமுணர்ந்தோதற்கரியவன்னென்
    றிறைவன்முதலடியெடுத்துக்கொடுத்தருளக்கொண்டு
பாருலகினுமகணின்றெடுத்துக்கைநீட்டப்
    பாடிமுடித்தனர்தொண்டர்சீர்பரவவல்லார்.

எனவும்,

கருங்கடலைக்கைநீத்துக்கொளவெளிதுருக்கீர்
    கடற்கரையினுய்மணலையெண்ணியளவிடலாம்
பெருங்கடன்மேல்வருந்திரையையொன்றிரண்டென்றெண்ணிப்
    பிரித்தெழுதிக்கடையிலக்கம்பிரித்துவிடலாகுந்
தருங்கடலின்மீனையளவிடலாகும்வானத்
    தாரகையையளவிடலாஞ்சங்கரன்றமனு
சிரங்கொடிருத்தொண்டர்புராணத்தையளவிடகஞ்
    சேக்கிழார்க்கெளிதலதுதேவர்க்குமரிதே.

எனவுங் கூறியயாவு மொன்றுக்கொன்று முரணுப் பொய்ப்படுமொழிய மன்றோ? அச்சேக்கிழார் சுவாமிகளுக் கருண்மொழித்தேவரென்னுந் திருப்பெயரிருத்தலின் யாதுபயன்? அன்றியும் – நாரையூர் நம்பிகள் நாவலூர் நம்பிகளருளிய திருத்தொண்டத்தொகையினை வகைபெறவோதிய வந்தாதியிற் கண்டுள்ள தனியடியார்களறுபத்துமூவரில் அந்தணர் முதலாகப் பஞ்சமரீறாக வுறக்குறைய முப்பானடியார்க்கே மரபுகுறித்திருக்கின்றதன்றி அவருட் குத்திரு வொருவகுப்பாய்ச் சற்குத்திரரென்றுள்ள வேளாளரென்றாவது, காராளரென்றாவது, மண்மகாரென்றாவது, கங்கைமகாரென்றாவது, உழவரென்றாவது, மற்றக் கிழவரென்றாவது யாண்டு மொருவரையேனுங் குறித்திலர். அவர் குறித்துள்ள மரபுகளையு மாயப்புகின் அவ்வத்திருத்தொண்டர் செயலாதிகளாற் றெரித்சல் செய்யப்பட்டனவேயன்றி வேறன்று. இங்ஙனமாக வேளாண் மரபினரெனப் பதின்மூவரைக் குறித்திருப்ப தெங்ஙனமாம். இதனை யுய்த்துணரவுணர வியப்பினும் வியப்பேயன்றோ? அந்தோ! ஈதொரு வியப்பன்று: இவ்வுலகின்கண்

சாதியபிமானமுஞ் சமயாபிமானமுஞ் சந்நியாசிகட்குஞ் விடாவென்பது யாவரு முணர்ந்தபடியாயின், சிவானுபூதிமான்களாயினுங் கிரகஸ்தாசிரமங்கொண்டோளோர்க்கு அவ்வபிமான மெவ்வாறில்லாமற்போம். அந்தணகுல சிரேஷ்டரான நம்பியாண்டார் நம்பிகள் தாம்பாடிய வந்தாதிக்கண் மற்றைய மரபின் திருத்தொண்டரினு மேலாய்த் தமது மரபிற் பதின்மூன்று திருத்தொண்டரைக் குறித்துளாராகலின், வேளாண் குல சிரேஷ்டரான சேக்கிழார்சுவாமிகளுந் தமது மரபின் திருத்தொண்டரெனப் பதின்மூவரைக் குறித்துள்ளார். எங்களுஞ் சாரப்பெறாதார் சமயம் வாய்த்தபோதேனுஞ் சார விடந்தேடிக்கொள்ளுதல் முறைமையாமன்றோ? இதிற் றோடமென்னை? மேலும் - சேக்கிழார் சுவாமிகள்

என்றுமர்முனிவன்றொண்டர்செய்கையை
யன்றுசொன்னபடியாலடியவர்
துன்றுசீர்த்திருத்தொண்டத்தொகைவிரி
யின்றெனுத்ரவாலிங்கியம்புகேன்.

என்றபடி தாம் பூர்வ முபமன்னியமுனிவர் கைலையின்கண் மகரிஷிகட்கருளிய பக்தவிலாசத்தை முதனூலாகக் கொண்டோராதலால், அதிலத் திருத்தொண்டருள் யார்யார்க்குக் குலங்குறித்துள்ளாரோ அவ்வாறே தாமுங் குறித்தருளினர். இதற்கு யார் யாதுசொல்லக்கூடும். என்று லவ்வுபமன்னிய பக்தவிலாசமென்னு நூல் அம்முனிவராற் செய்யப்பட்ட நூலென இவ்வுலகினர் மயங்கி நம்புமாறும், அவ்வேளாண்டொண்டர் பதின்மூவரும் அத்திருத்தொண்டர் புராணத்தில் வேறூன்றி நிலைக்குமாறும், பிற்காலத்தா ரதற்குச் சார்புநூல்களாகத் தென்மொழியில் திருத்தொண்டர் புராணவரலாறெனவுந் திருத்தொண்டபுராண சாரமெனவும் பாடிவைத்த வக்காலத்தில், அதனை வடமொழியிற் செய்துவைத்ததேயன்றிச் சேக்கிழார் சுவாமிகளுக்கு அஃதொருவாற்றானு முதனூலாகாமை யறிக, இச்சுவாமிகள் கூறிய வச்செயுளின் கருத்தோ, "அவ்வுபமன்னியமுனிவர் கைலையின் கண் சிவத்தொண்டு செய்திருந்த ஆலால சுந்தரமூர்த்தி சுவாமிகள் வன்றொண்டராய்த் தென்றிசைக்கண் வந்து நடாத்தியருளியசெய்கையை அரபத்தர் முதலிய மகரிஷிகளுக் குணர்த்தியதால் அவ்வன்றொண்டர் சரிதையோ டவரியற்றியருளிய திருத்தொண்டத்தொகையின் விரியையும் யான் விருப்பத்தோடு கூறலுற்றேன்' என்றபடியேயன்றி வேறன்று. அகத்தியர் பக்தவிலாசமென்பது மிவ்வாறேயாம். ஆகவே யிச்செய்யுட் கடுத்துக்கூறிய விரண்டு செய்யுட்களின் கருத்தின்படி, திருத்தொண்டர் புராணத்திற்கு நம்பியாண்டார் நம்பிகளருளிய திருவந்தாதியே முதனூலென் றிவ்வுலகெலா மறிந்தபடியென் றுணர்க. உபமன்னிய பக்த

விலாசமேனும் அகத்தியர் பக்தவிலாசமேனுஞ் சேக்கிழார் சுவாமிகளரு
ளிய திருத்தொண்டர் புராணத்திற்கு முதனூலாயின். அவைகட்குப்பின்
நம்பியாண்டார் நம்பிகளருளிய திருவந்தாதிக்கும் முதனூலாக வேண்டு
மன்றோ? இப்படி முதனூல்கள் யாவுளும் வேளாண் டிருத்தொண்டரெ
னப் பதின்மூவரைக் குறித்துளவேல், கம்பர் தான்பாடிய திருக்கைவழக்
கத்தில் அவ்வேளாண்குலச் சிவத்தொண்டரெனக் கூறத்தொடங்கியோர்
எண்மரோ டொழிந்ததற்குக் காரணமென்னை? ஆதலி னவர் தனதாண்ட
கையாகிய வேளான்பிரபுவி னுட்கோளுணர்ந்து, அத்தொண்டரிற் சில
ரையமைத்தனரென்ப தொன்று: அல்லது தானே அவ்வேளாண் பிரபுவு
க்கு மவர்மரபினர்க்கு முவப்புண்டாக்குமாறு கருதியமைத்தனரென்ப தொ
ன்று: இவ்விரண்டிலேதேனுமாக - ஒரு வாற்றானுஞ் சேக்கிழார் சுவாமி
கள் தமது மரபினராகப் பதின்மூன்று திருத்தொண்டர்களையு மமைத்தா
ரெனல் பொருந்தாது. இனிக் கையெழுத்துப் பிரதியாய்ப் புராதனத்திரு
த்தொண்டர் புராணமொன்று வெளிவறின், ஈது மின்னுமுள சில பாப்
புரட்டுகளும் பாடபேதங்களுமு யாதாமோ வறிகிலம்,

இவ்வாறக்கம்ப ரிரண்டிலொன்று யமைத்தவற்றுள்ளும், (தில்லைவா
ழ்ந்தணரு ளொருவரும் சிவப்பிரகாசமுதலிய எண்வித சித்தாந்தநூல்க
ளோடு கோயிற்புராணமுஞ்செய்து ஸ்ரீமத் நடராசமூர்த்தி மற்றைய வந்த
ணர்களுக்கு நாமுமாபதி புத்தகப் பெட்டகத்து ளிருக்கின்றேமெனக்
கனவின்கணுரைக்கப்பெற்றவரும் அந்நடராசமூர்த்தியினுடைய திருமுக
ப்பாசுரத்தைப் பெற்றுப் பெத்தான் சாம்பானுக்கு முள்ளிச்செடிக்கு முத்
திகொடுத்தவருமாகிய) கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் செய்தரு
ளியதெனவுள்ள திருத்தொண்டர் புராணவரலாறில் "திருமறையோர்"
எனக் கூறப்பட்டுள்ள பாடலில் "வணிகர்குலத்தைவர்" என்றிருப்ப விவ்
வணிகர்குலத் திருத்தொண்ட ரைவருளொருவராய மூர்த்திநாயனாரைக்
கம்பர் காலைவெறிக் கேட்டால் தான்பாடிய திருக்கைவழக்கத்தில் வேளா
ண்குலத் திருத்தொண்டரு ளொருவராய மூர்க்கநாயனாருக்குப் பதில்
மாற்றிப்பாடிக் கெடுத்தனரென்பதையும், அதுபொருட் டௌவைப் பிராட்
டியார் கூறியபாடலின் பொருளையும், இன்று மம்மாற்றலே யெங்கு மெடு
த்துரைப்பதையும் பற்றி முன்னரே விளங்கவுரைத்துளேம். அக்காலவர்
செயல் காலைவெறிக்கேட்டால் லங்கனமாக இக்கால் மற்றப் பன்னிர
ண்டு வேளாண்குலத் திருத்தொண்டர்களையும் வேலையில்லாப்பாட்டால்
வைசியராக்கப்புகுந்த ஓர் புலவர் தானச்சிற் பதித்துவழங்கிய திருக்கை
வழக்கத்தில் பூர்வ வணிககுலத் திருத்தொண்டரி லொருவரையும் நூதன
வணிககுலத்திருத்தொண்டரி லிருவரையும் இன்னுந் தன்னைப்போற் பின்
வருங் கலிச்சீர்ப்புரட்டர்க் கிருக்கட்டுமென்று மெண்ணத்திறுலா,

இனித் தொண்ணூற்றாறிலேனு நூற்றெட்டிலேனுங் கலிச்சீர்கொண்டு திருக்கைவழக்கம் வெளிவருங்கால் மறையேசேர்த்ததச்சிறிதேலோ வென்னு முபாயத்தினாலோ, அவ்விருவகைக்குலத் திருத்தொண்டர் பேருக்கொரு வரோனு மிருவரேனு மிருக்கவைத்தல் தகுதியாமென்னுங் கருத்தினாலோ, திருத்தொண்டர் புராணவரலாறென்னு மந்நூலில்

காராள ரணிவயலி லுழுதுதங்கள் கையாரநட்டமுடிதிருந்திவிந்தப்,
பாராளுந் திறலரசர் கவித்தவெற்றிப் பசும்பொன்மணிமுடிதிருந்துங்கலைப்
பைபூண்ட, வேராலெண் டிசைவளர்க்கும் புகழ்வேளாளரேறடிக்குஞ்சிறு
கோலாற்றரணியாளச், சீராருமுடியரச ரிருந்துசெங்கோல் செலுத்துவர்
வேளாளர்புகழ்செப்பலாமோ.

என்றிவ்வகைத்தாய்ப் பலவிடத்துந் தங்குலத்தை யுயர்த்தி அக்குலத்தினுக் கியல்பாயுள்ள அவைதிகத்தினை மறைத்துவைத்த கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரதென்றுள்ள போலிவாக்குக் கொன்றுமில்லா தெழித்துவிடல் மாயன்றென்னு மானத்தினாலோ, மற்ற யாதுகாரணத்தாலோ மாறுபடுத்தாது நிறுத்தி: அக்காலப் போலித் திருத்தொண்டர் புராண வரலாறு சொல்லப்புகுந்தவர் "அறுதிபெற" என்னும் பாடலில் பேரிலாப்புராண மெட்டென்றும் ஊரிலாப்புராண மேழென்றும் பெருங்குலத்தின் சீரிலாப்புராண மாறென்றுங்கூறி அம்பலவாண ரருட்டிறத்தைப் பொய்யாக்கிவிட்டதுபோல் இக்காலிப்போலித் திருக்கைவழக்கத்தை யச்சிடப்புகுந்தவர் "திருமறையோர்" எனனும் பாடலில் வணிகர்குலத் தைவரென்றும் வேளாளர்குலத்துப் பதின்மூவரென்றுங் குறித்த் அப்போலிச் சந்தானுசிரியர் வாக்கையும் பொய்யாக்கிவிட்டனர். இஃதற்புதமற்பும்!! ஈடியர்வற்ற சிவானுபூதிமான்கள் பார்ப்பார்முதல் பஞ்சமீருயுள்ள எல்லாமரபுளு முன்னாரென்பது யாவரு முணர்ந்தபடியாயின், அத்தகைய திருத்தொண்டர் தரத்தைப்பற்றிச் செய்துள்ள குளறுபடிகளெல்லா மூய்த்துணருமிடத்து அளறு பிடிகளே: இவ்வளறுபிடிக்கோப்பான குளறுபிடிகளைப்பற்றிப் பிற்காலத்தவர்

ஏரிலாக்கதைகெடப்பொன்னம்பலவனேயெடுத்துக்கொடுத்த கலிற்
பேரிலாக்கதையெட்டூரிலாக்கதையேழும் பெருங்குலத்தின்
சீரிலாக்கதையாறும்வந்தவிதமெப்படியோசெப்பீர்பொய்யென்
பாரிலாக்கதைபடித்தபாவலிரருட்கேதுபழுதேயன்றோ.

எனவும்.

ஏரிலாதகதைசிவகன்கதையெனச்சபேசனருள்கொடுகிழா [வெந்துறப்
ஞெழிலதொடொண்டர்தொகைவகை யந்தாதியி[illegible]சைத்தகாதைவிரி

பாரில்விட்டதலதாநிலில்லதைபகர்ந்திலன்பரனளித்திடப்
பற்றிவிட்டனனென்றிற்சிலர்க்கிலதுபற்றிமற்றையர்தமக்குளே
பேரிலாதனவுமூரிலாதனவுமெட்டொடேழ்குலமிலாதன
பேசவாறெனலினைத்துமோர்ந்தவருட்பெற்றிக்கீதல்பிழையன் றுகொ
ளேரிலேலருழவரொருவரேனுமிலராகவும்பதின்மூவரைநிறீஇ
நிலைக்கப்பல்வகையசார்புநூல்கவினூநீணிலத்துதயமாகுமே.

எனவும்,

தொண்டர்க்குமுன்னூல்தொகையுமந்தாதியலா
லுண்டோவிரண்டாயுளவடநூல்-கொண்டவெலாங்
கோலிவரலாறுதிகூறிவாளாமகிழ்ந்த
போலியுமாபதிநூல்போல்.

எனவும்,

நாவலூரன்றொகைதேர்நாரையூரன்கருத்தை
மேவிக்கிழான்முன்விளம்பினனே-லாவலொடு
மெண்ணுக்கவேளாளனென்பாரொருவனுண்டோ
கண்ணுற்கண்டோதுவீர்காள்.

எனவும்,

கோளகனுக்கம்பன்குலனென்சதுர்த்தர்க்கே
தாளிலேலேலவர்க்குத்தாளெங்கே-நீளிவரைச்
சேக்கிழானுண்டுளனேற்செப்பவன்முனூலெனம்பி
பாக்குளேனுளப்படார்.

எனவும்,

நாற்பாற்குலத்தேருமிரண்டற்றுக்கடையேம்
மேற்பாலவரையினிதின்மேவினேக்-தோற்பானே
னென[illegible]றெண்ணித்தொண்டருளும்டாய்ப்பதின்மூவ
ரொன்றினரீதென்னகொள்ளேயோ.

எனவும்,

(இச்சரிதக் கவனக்குறிப்பிலங்கம் பத்தொன்பதில் "உச்சிக்குடுமி மெலிந்தனவே" எனவுங் கூறியிருத்த லெற்றினுக்கென் றறிவீடையோ ராய்ந்தெளிக

அன்றியுங் கம்பரென்னுங் கவிஞர் வேளாண்மரபினர் பொருட்டு ஏரெழுபது பாடிய சின்னாட்குப்பின் திருக்கைவழக்கம் பாடியதுபோல், கவிச்சக்கிரவர்த்தியாகிய கூத்தர் கைக்கோண்மரபினர் பொருட்டு ஈட்டியெழுபது பாடிய சின்னாட்குப்பின் புகழேந்திப்புலவர் பாடிய திருக்கைவழக்கத்தில் "உம்பர்தொழு"

நாவலூர்நம்பியெனுநாரையூர்நம்பியெனு
மேவுதிருநம்பியரான்மெச்சுங்கை-சேவினன்ற
னுதிரைதோதெண்ணிலடியவர்க்குப்பொன்னூறு
திதிரியவேயளிக்குந்தேசிகக்கை-நீதியொடு
வெம்பகையைவென்றுவிளைபொருளைமெய்யடியர்
தம்பொருளாயாக்குந்தயாளக்கை-யம்பொன்முடி
வன்றொண்டன்வேதண்டமன்னுமுனையோகாற்ற
மன்றொண்டையாங்குகைத்தமாண்புக்கை-யின்றொண்டு
செய்யுஞ்சிவபத்தர்சிந்தைகலங்கப்பழிக்கும்
வெய்யர்வெங்காவையரிவெற்றிக்கை-துய்யதமிழ்க்
கோவைபலதம்பெயரார்க்கூறமூவேந்தரிடந்
தேவைபொருள்கொண்டுபணிதேடுங்கை-யாவினைந்தா
டண்ணலுக்கென்றாய்மலரையாயாதுமோந்தாண்மூக்
கெண்ணலன்போற்றுண்டித்தவேற்றக்கை-தண்ணளியொன்
றில்லாரிற்றொண்டர்க்கென்றிட்டநெற்போர்கவர்கேள்
பல்லாரைவிண்ணேற்றும்பாழிக்கை-புல்லான்
பொரவிளைத்துவஞ்சகவாட்புத்தகம்போதிப்பான்
வரவிளைக்காதாருயிர்வண்கை-யிரவிகுல
மன்னுபுலகோம்பிமாந்தியச்சாலைதிறந்
தென்னுதன்றொண்டர்கொளைக்கிட்டகை-மின்னார்பொ
னம்பலவன்றாட்டுணையாயுமணிமுடியாய்
நம்பியணிந்தேயுலகாளுயக்கை-யப்புவியில்
வெள்விடையோற்காமலரைவீழ்த்தியதும்பிக்கையறக்
கொள்விடைகூரும்பரசாற்கொய்திகை-வெள்ளூறுபுல்
வீட்டிவிளக்கெரிக்குமின்பணிமூட்டச்சிகைகை
நீட்டிவிளக்கெரிக்குநேர்மைக்கை-நாட்டக்
குறையையமணர்கொளக்குண்டமெடுத்து
நிறைபுனல்செய்திட்டநிமலக்கை-மறைநெறியின்
மூவாயிரமதுவைமுல்லையாளுங்கைபுக்கு
நாவாலினிதுரைத்தநன்னயக்கை.

எனப் பதினான்கு திருத்தொண்டரை யமைத்திருப்பக் கையெழுத்துப் பிரதிகளிற கண்டாம். இக்கால் சின்னாட்குமுன் வெளிவந்த அச்சுப்பிரதியில் சோட்புலியடிகள் - முனையடுவார்சுவாமிகள் - செருத்துணைத்தேவர் - சத்திநாயனார் - என்னு மிந்நால்வரை நீக்கிப் பதித்துளது. இவ்வா றிந்நால்வரை நீக்கிப் பதித்ததற்குக் காரண முய்த்துணரு மிடத்துச்சில வாயிரவாண்டுகட்குமுன் வெளிவந்த திருத்தொண்டர் புராணத்தில் சில நூறாண்டுகட்குமுன் கற்பித்துவைத்த வேளாண்குலத் திருத்தொண்டர் பதின்மூவருள் இந்நால்வர் கலந்திருத்தலன்றி, அக்காலக்கற்பிதம் நிலைபெற உபமன்னிய முனிவரையு முமாபதி சிவாசாரியரையு நூலாசிரியராக்கிச் செய்துவைத்துள்ள முதனூல் சார்புநூல்களினும் விளங்கவமைத் திருத்தலினாற் போலும். ஆனால் சில வாயிரவாண்டுகட்குஞ்சில நூறாண்டுகட்கு மத்தியிலிருந்த கம்பவாணரேன் அந்நால்வரைக் கையாடிலரெனில், கற்பிதங்கள் யாவு மக்கம்பருக்குப் பிற்காலத்தன வெனக் கல்வியறிவில்லார்க்குங் கண்கூடாக விளங்குவதன்றி, அவற்றைப்பற்றி மேற்கூறிய வுதாரணச்செய்யுள்களே போதுமான சான்றாம். ஆயின் புகழேந்திப்புலவரால் செங்குந்தமரபினரெனக் குறித்துள்ள திருத்தொண்டர் பதினால்வருக்கேனு முதனூல் யாதெனில், இதுகாறும் விவகரித்துவந்த நியாயங்களாலு முதாரணங்களாலு நம்பியாண்டார் நம்பிகளொழிய உபமன்னியமுனிவரும் - அருண்மொழித்தேவரும் - தாமே நேரில் வேளாண்குலத் திருத்தொண்டர் பதின்மூவர்தனித்திருத்தொண்ட ரறுபத்துமூவருளிருக்கின்றனரெனக்கூறியுள்ளாரென்ப துண்மையாகி அத்திருத்தொண்டர்க் கவர்கள்செய்த நூல்முதனூலாம்போது, இப்பதினால்வர்க்குமவர்கள் நூலேமுதனூலாமென்பதற்கையமென்னை? அன்றியு மிப்பதினான்கு திருத்தொண்டர்களுஞ் செங்குந்தமரபினரென்பதற்குத் தனித்தனி யளவைகூறி நிறுத்த இவ்வனம் பெருகுமாதலினஞ்சி, இதற்கெவராலேனும் வினாவல் நேருழி விடைதருவாமென்றிம்மட்டில் நிறுத்தினாம். ஆனால் சின்னாட்குமுன் வேளாண் டிருத்தொண்டரெனவுள்ள பதின்மூவருளொருவராய வாயிலார் நாயனாருடைய நேர்பரம்பரையில் அறுபத்துமூன்றாவது சந்ததியார் யாமெனவெளிவந்தாரைப்போல் வெளிவரவும், அந்நாயனார்க் கருண்மொழித்தேவர் கூறிய சரிதம் பிற்பட்டொழிய அகலசரிதமொன்றை புதுக்கியதுபோல் புதுக்கவும், அதிற் சில வற்புதப்பாக்க ளமைத்ததுபோல வமைக்கவு மெம்மால் வியலா. அஃதேனெனில் - அச்சந்ததியாரும், அவர்கள் புதுக்கிய சரிதமும், அதிலமைந்துள வற்புதப்பாக்களும் வாயிலாரை யுடையனவாய் நிற்றலின் வழக்கின்றி முழங்குவது எமது நாயன்மா ரொவ்வொருவரும் வாயுளாராகலின் வழக்கு மெழுவாதன்றோ? இனிமேற்கா வேளைய நாயன்மார் மரபினராகிய அந்தணர் முதல்பஞ்சம ரீறாயுள்ள பேர்களும் இன்ன நாயன்மாருடைய நேர் பரம்பரையில் இத்தனையாவது சந்ததியார்

யாம், அவர்கள் சரித மிது, அவர்கள் பாடிய வற்புதப்பாக்களும் பிரபந்தங்களும் இவையிவையென வொவ்வொன்றாய் வெளிவரும்போலும். இங்ஙனம் வரவே யவ்வற்புதப் பாக்களும் பிரபந்தங்களும் அளவற்றனவாகிப் பதினோராந்திருமுறையிற் பராவி, இதுகாறு மொரேமுறையாயிருக்கு மது பல முறைகளாகிப் பன்னிரண்டு திருமுறைகளென்னு மெண்பறந்தொழியும்போலும். ஆ! ஆ! இது கேர்த்தியினு கேர்த்தி வெகுகேர்த்தி: வெகுகேர்த்தி:

இதுசாறுஞ் சேக்கிழார் சுவாமிகளருளிய திருத்தொண்டர் புராணத்திற்கண்டுள்ள தனித்திருத்தொண்ட ரறுபத்துமூவருள், அப்புராணத்திற்கு முதனூலாய் நாரையூர் நம்பிகளருளிய வந்தாதியில் மரபுகுறித்திராத திருத்தொண்டர் தரத்தைப்பற்றிப் பேசினும். இனியத் திருத்தொண்டரது தொகையடங்கலையு மிவ்வுலகின ருணர்ந்தேத்தி யுய்யுமாறு வெளிப்படுத்திய நாவலூர் நம்பிகள் திருமணஞ் செய்தருளப்பெற்ற கமலினியாரனிந்திதையாரென்னுங் கன்னியர் தரத்தைப்பற்றிச் சில பேசுவாம். இக்கன்னியரிருவரில் கமலினியாராகிய பரவை நாய்ச்சியாருடைய திருவவதாரத்தைப்பற்றித் திருத்தொண்டர் புராணத்தில் " கதிர்மணி பிறந்ததென்ன வுருத்திரகணிகை மாராம்பதியிலார் குலத்தில், கதித்தபூணேந்து கொங்கைக் கமலினியவதரித்தாள் " எனவும், அனிந்திதையாராகிய சங்கிலி நாய்ச்சியாருடைய திருவவதாரத்தைப்பற்றி,

நாலாங்குலத்திற்பெருகுநலமுடையார்வாழும்ஞாயிற்றின்
மேலாங்கொள்கைவேளாண்மைமிக்கதிருஞாயிறுகிழவர்
பாலாதரவுதருமகளாராகிப்பார்மேலவதரித்தார்
ஆலாலஞ்சேர்கருமிடற்றாரருளான்முன்னையநிந்திதையார்.

எனவுங் குறித்திருக்கின்றன. இவ்விருவரு முறையே வைதிககுலத்துளு மவைதிககுலத்துளு மவதரித்தமையின், முருகக்கடவுளுக்குத் தேவயானையம்மையும் வள்ளிநாயகியம்மையும்போலச் சுந்தரமூர்த்திக்கு ஞானசத்தியுங் கிரியா சத்தியும்போலும்: இதன் விரியைப் பின்வருமாற்றாற் றெள்ளிதினுணர்க. திருத்தொண்டர் புராணத்திற்கு முதனூலாகிய நம்பியாண்டார் நம்பிக ளந்தாதியில் பரவை நாய்ச்சியாரைப்பற்றி,

துணையுமளவுமில்லாதவன் றன்னருளே துணையாக்
கணையுங்கதிர்நெடுவேலுங்கறுத்தசயலிணையும்
பிணையுமிகர்கட்பரவையின்பேரமைத்தோளிரண்டு
மணையுமவன்றிருவாரூரனுகின்றவர்புதனே.

எனவும், சங்கிலி நாய்ச்சியாரைப்பற்றி,

> தருமணக்காதலன் வீயவேநூல்போனசங்கிலிபாற்
> பருமணக்காதலினாலொற்றியூருறைபுண்ணியன்றன்
> மிகுமலர்ப்பாதம்பணிந்தருளாலிவ்வியனுலக
> நகும்வழக்கேகன்மையாப்புணர்ந்தானாவூரரசே.

எனவுமுள. இவையிரண்டினுமவர்களவதரித்த குலமின்னதெனக் குறித்தில - அன்றியுமிப்பாக்களிரண்டனுள் முன்னையதிற் பாடபேதமும் பின்னையதிற் பாகப்புரட்டும் பதுங்கியுள்ளன. அவை பின்னுற் கூறித் தாபிக்கும் பலபேதத்தாலும் புரட்டாலும் பகிரங்கமாதலின் ஆண்டு கண்டுதெளிக. குன்றை முனிவராகிய சேக்கிழார் சுவாமிகள் பரவைநாய்ச்சியாரைப் பதியிலார் குலத்திலவதரித்த உருத்திரகணிகை யெனவுஞ் சங்கிலிநாய்ச்சியாரைச் சற்சூத்திரர் குலத்திலவதரித்த தவப்பெண்ணெனவு மேற்கூறியதால் அவர்கள் வரலா றென்னையெனின், உருத்திரகணிகை யென்னப்படுவோர் அவ்வுருத்திர மாங்கல்யதாரணரா யவர் திருத்தொண்டுக்காட்படுவோர். தவப்பெண்ணென்னப்படுவோர் அத்தாரணமின்றி யாட்படுவோர். இவருளிங்ஙன முருத்திரகணிகையரைப்பற்றி முதலிற் சில விவரிப்பாம். ஆண்பாலருட் சிலர் தேவாலயங்களில் நித்திய பிரமசரிய விரதராயிருந்து அவ்வாலயத்தொண்டுகளைச் செய்வதுபோலப் பெண்பாலாருளுஞ் சிலர் நித்திய கன்னியா விரதரா யங்ஙனமிருந்து தொண்டு செய்தல் மரபெனக்கருதி உத்தமக்குலத்தர் தமது தலைப்பெண்டிரை யவ்வாறு விடுக்க, அதிலவர்க ளாயுளுள்ளவளவுந் தேவதாசியர் தேவரடியர் தேவகணிகையரென்னுஞ் சிறப்புநாமங்களேற்று நித்திய கன்னியா விரதம் பூண்டு தமதொழுக்க நிலைகளிற் றவறாது நிற்பதே யவர்கள் வரலாறென்பதை,

> மாவடிச்செல்வருக்காண்பாலர்தா[illegible]ரின்மன்னுவபோற்
> றேவடித்தாதியர்பெண்பாலராகச்சிவார்ப்பணமாய்த்
> தூவடியாக்கன்னியர்தமினற்குலத்தோகையரைச்
> சேவடிக்காம்பணி செய்யவிட்டார்த்தல்சிறப்புடைத்தே.

என்னுந் தனியனாலறிக. இக்கன்னியருள் சிவாலயத்தொண்டுக் காட்பட்டோர் உருத்திரகணிகையென் றழைக்கப்படுவர். ஆனாலத் தனிச்செய்யுளில் பெண்பாலாருக்கே நித்திய கன்னியா விரதஞ் சொன்னதன்றி ஆண்பாலாருக் கின்மையால் இவ்வாண்பாலார் சிவபிரானுக்குத் தாதராகித் தொண்டுசெய்வதுபோல் இவர்கள் வாழ்க்கைத் துணைநலத்தராய் வந்த

பெண்பாலாரும் எனச் சிவபிரானுக்குத் தாதியராகித் தொண்டுசெய்பவ ராகுதனில், என்றுஞ் சிவபிரானைத்தீண்டி யருச்சித்தற்குரியசராகிய. ஆதிசைவர்க் கருகிருந்து தொண்டுசெய்யும் பெண்பாலார் மணவினை முடிந்தவராயின் சுவெச்சையினரல்ல ராகையால். பேதைப் பருவங் கடக்குமுன்னரே தங்கடாய் தந்தையரச் சிவத்தொண்டுக்கு விடுப்ப வந்து தங்களாயுளளவு நித்திய கன்னியா விரதராகவேயிருப்பவரன்றி மற்றையராகா. மேலுமிந் நித்தியகன்னியா விரதியர் சிவபிரானுடைய மாங்கிலியதாரணராகித் தமதாயுளளவு மவர் திருத்தொண்டுக்கே யாட்பட்டிருத்தல்போல, மணவினையால் வந்த கணவனால் மாங்கிலியதாரணராய்த் தங்களாயுளளவு மவன்றொண்டுக்கே யாட்பட்டிருக்கும் பெண்பாலார் "தெய்வந்தொழாள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்னும் பொய்யாமொழியின்படி யவனையே தொழற்குரியராகலானும், சிவாலயத் தொண்டுகளைச் செய்யற்குரியரான பெண்பாலார் புருஷ சம்பர்க்கமில்லாராயிருத்தல்வேண்டுமாகலானும், அத்தொண்டுகளுக்கு நித்தியகன்னியா விரதமேற்றோரே யருகராவரென்றுணர்க. ஆயினித்தகைய நித்திய கன்னியாவிரமேற்ற உருத்திரகணிகையரைச் சிவாலயங்களி லமைக்குமாறு வேதாகமங்களில் விதித்திருக்கின்றதோவெனின், சகல வேதாகமங்களினும் விதித்திருப்பதன்றி அவற்றின் மொழிபெயர்ப்பாகிய உபதேசகாண்டமென்னு நூலில்,

எந்தையீசனுக்கிமயமீன் றளித்தபைங்கிளிக்குந்
தந்திமாமுகற்காறிருதடம்புயத்தவற்குஞ்
சிந்தைகூர்தருசிவகணத்தவர்க்கெனச்சிறந்த
புந்திகூர்தருசிகரமுற்றாலயம்புரிவார்,

நீடுகோபுரமண்டபமுதலியநிரப்பி
யாடுவெண்டிரைத்திருக்குளஞ் சமைரயலக்
லூடுகூடவகெய்த்தீபவெண் சாந்திவையுதவி
மாடுநின்றெழுநறும்புகைமுதலியவகுப்பார்.

சாற்றுவெண்டுகில்வெண்குடைவாகனந்தராம்
பூத்தசெம்மணிப்பொலன்கலனுதிமையைப்பொருந்த
வார்த்தருந்தொழிற்றுதியரன்புடனளிப்பார்
சேற்றசெங்கொலாங்கழனிமற்றவர்க்கெனச்சேர்ப்பார்.

சங்குரைத்திடுமிவற்றினுட்டமக்கெனவியன்ற
தோங்குசிந்தையினொன்றிழைத்தார்களுமொலிசேர்

தேங்குசெஞ்சடையானுறை திருநெடுங்கயிலை
தாங்குமுச்சிவீற்றிருந்தொழியாவளந்தழைப்பார்,

எனவும், சேதுப்புராணத்தில்,

அருகுசேர்பாடலாடலபிஷேகவேளை தன்னின்
முருகுமுன்னியங்கள்காலமூன்றினுமுயங்கச்செய்வோர்
திருகுவெம்பவங்கணீக்கிச்சிறப்பினோடிமயவெற்பின்
மருகனுமிராமநாதன்வளர்சிவபுரத்தில் வாழ்வார்,

எனவும், காஞ்சிப்புராணத்தில்,

நலமிகும்பரிமாவாக்சனுடைக்கணிகைநல்லார்
நிலநகர்நாடுமற்றுநெடுமறைமாவின்மூலத்
தலைவனுக்கினிதுநல்குந்தவத்தினோர்கயிலைகண்ணி
யலகில்பல்லூழிவாழ்ந்தங்கரும் பெறல்வீடுசேர்வார்,

எனவும் விதித்திருக்கின்றன வற்றா லறிக.

ஆனாலவர்க ளுருத்திர கணிகையரென்பதற் கடையாளமாகப் பெறுங் குறியும், அக்குறியினு லவர்களடையப்பெறு முத்திரைகளும், அம்முத்திரைகளைக்கொண் டவர்களியற்றுந் தொண்டுகளும், அத்தொண்டுகளாலவர்கள் பெறுமுணவும், அவ்வுணவினையேற் றவர்கள் வசித்திருக்கு மிடமும், இவ்வனைத்தாலுமவர்க ளிம்மையினு மறுமையினு மடையும் பேறுமென்னையெனின்; சிவாலயங்களிலே சிவபிரானுக் கருச்சகராகி ஆதிசைவரென்றிருக்குங் குருக்கண்மார்கள் வேதாகமங்களில் விதித்திருக்கின்றபடி சிவசந்நிதானத்திலே அக்கினிகாரியமுதலான கிரியை முறையுடன் நித்திய கன்னியாவிரதராய் வந்தவர்களுக்கு அச்சிவபிரான் குறியாகிய மாங்கலியங்களைத் தரித்து அவரையே யவர்கட்குப் பதியென நிருமித்தல் வழக்கமாம். அவர்கள் தம்பாலுந் தம்மைக்கண்ட வாடவர்பாலு மிச்சையுண்டாகாதபடி தரித்துக்கொள்ளுஞ் சிவமுத்திரைகள் திருவெண்ணீறு உருத்திராக்கமணி கல்லாடையென்னுங் காவிவஸ்திரமுதலியவைகளும், செபம் பஞ்சாக்ஷரமுதலிய சிவமந்திரங்களும், தியானஞ் சிவத்தியானமும், தோத்திரஞ் சிவநாமாவளியுமாம். அவர்கள் செய்யுந் திருத்தொண்டுகள் திருவலகு திருமெழுகு திருக்கோல முதலியன விடுதல், தூபதீபார்த்திகளை விளக்கல், நறும்பூவெடுத்துத் தொடுத்தல், திருமஞ்சனதிரவியந்திருத்துதல், தளபாடங்களைச் சுத்திசெய்தல், சிவனடியார்க்கு வந்தனைவழிபாடுகளியற்றல், திருவாராதனவேளையினுந் திருவிழாக்காலத்தினும் திருத்

தகீதஞ்செய்தல் முதலியனவாம். அவர்கட்காகாரம் சிவநிவேதனப் பொருள்களாம். அவர்கள் வசித்திருக்குமிடந் தவமாடமென்னுங் கன்னியாமாடமாம். இத்தகைய வொழுக்கங்களோ டவர்க ளிம்மையில் நிலை குலையாது மரணபரியந்த மேற்கூறிய சிவத்தொண்டுகளியற்றி மறுமையில் முத்தியின்பங்களை யடைவார்கள். ஆனாலித்தகைய நித்திய கன்னியர் எந்தக்குலங்களில் நேரின் சிவாலயங்களி லமைத்துக்கொள்ளக் கூடுமெனில், சிவபரம்பரையு ளாதிசைவராயுள்ள சிவார்ச்சகருஞ் செங்குந்தரும் "இற்பழிக்கு, நாண்பண்ணலன்றி யெமகம்பன்றிருத் தொண்டை. யாண்பெண்ணடங்கலுஞ் செயம்பொறகை" என்ற வான்றோர் வாக்கியப்படி ஆண்பாலாரும் பெண்பாலாரு நித்திய பிரமசரிய விரதமும் நித்திய கன்னியாவிரதமுமில்லாமலே சிவாலயத் திருத்தொண்டு செய்யற்குரியராயிருத்தலின் இவர்கள் நிற்க, ஏனைய பிரமபரம்பரையுள் சங்கரவினத்தருந் தாழ்குலத்தருமொழிய மற்றச் சுத்த வருணத்தாரீன்ற நால்வகைப் பெண்டீரையு மமைத்துக்கொள்ளக்கூடும். இப்படிக்கின்றி யாவரேனுஞ் சங்கரவினத்தரீன்ற பெண்டீரையும் வியபிசாரங்களினாற் பிறந்த தாழ்குலப் பெண்டீரையுஞ் சிவாலயத் தொண்டுக்கு விடின், அவ்வாலயக் குருக்கண்மார்கள் அப்பெண்டீரையீன்ற தாய்தந்தையருடைய இனங் குலங் குணமுதலியவைகளை ஆய்ந்தறியாது சிவாகமவிதிப்படி தீக்ஷைமுறைமையால் சிவமாங்கிலியந்தரித்துச் சேர்த்துக்கொள்கின்றனர். பின்னரப்பெண்டீர் தாங்களிருக்கவேண்டு நிலைகளின்மாறிச் சிறு நரகத் துய்ச்செலாவணை வினையைத் தீர்க்கின்ற திருவெண்ணீற்றுக்குப் பதிலாக [illegible]யை வளர்க்கின்ற வாசனைத்திரவியங்களை யணிந்துகொள்ளுதற்கில்லையே முத்தியென்னும் புண்ணியப்பயனை வசமாக்குவிக்கும் உருத்திராக்க[illegible]க்குப் பதிலாகப் பத்தியற்ற பாவிகளை வசப்படுத்தும் பல வாபரணங்களைத் தரித்துக்கொள்ளுதற்கில்லையே சிவயோகத்தை வளர்க்குங் காவிவஸ்திரத்துக்குப்பதிலாகப் பவரோகத்தை வளர்க்கு நவநவமான வஸ்திரங்களை மாறிமாறி யணிந்துகொள்ளுதற்கில்லையே, எம்மையினு மின்பந்தரும் பஞ்சாக்ஷரமுதலான மந்திரங்களைச் செபஞ் செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாகச் செம்மையி லறஞ்செய்யாதரர் திரவியங்களைக் கவருதற்கான மந்திரங்களைச் செபஞ் செய்தற்கில்லையே, மடமையையொழிக்குஞ் சிவத்தியானத்திற்குப்பதிலாக விடபுருடர்களைத் தியானித்தற்கில்லையே, பேரின்பவாழ்வைப் பிரசாதிக்குஞ் சிவநாமாவளிகளைத் தோத்திரஞ் செய்தற்குப் பதிலாகச் சிற்றின்ப லீலாவிநோத கீர்த்தனைகளைப் பாடுதற்கில்லையே, பாபத்தைக்கெடுத்துப் பரமார்த்தத்தையடைவிக்கு மருந்துபோன்ற சிவப்பிரசாதத்திற்குப்பதிலாக அப்பரமார்த்தத்திற்கு விலக்காகிய மதுமாம் சாதிகளைப் புசித்தற்கில்லையே, தற்பதவுணர்ச்சியைக் கொடுப்பதான தவமாடத்

திலிருப்பதற்குப் பதிலாகத் தற்பதவுணர்ச்சியைக் கெடுத்துத் தனதான்ய சம்பத்தை விளைப்பதான தளமாடத்திலிருத்தற் கில்லையே, என்றின்னுமிவைமுதலான துராசார நடத்தைகளை நினைந்துகொண்டு தங்கட்கு நிருமித்துள்ள சிவத்தொண்டுகளைக் கவனியார்கள். மேற்சொல்லிய விழுப்பு நினைப்புகளோ டவர்கள் சிவமாங்கிலியந்தரித்துச் சிவாலயத்திருக்கின் அவ்வாலயத்தினுக்குள்ள விருத்தியாவுங் கெடுமென்றோ?

இதுகாறு நித்தியகன்னியரான தேவதாசிய ரிருக்கவேண்டு மொழுக்கநிலைகளைப்பற்றிக் கூறியவனைத்து முண்மையே. இத்தகைய நித்திய கன்னியரை உத்தமக்குலத்தா ரானதுகாறுஞ் சிவார்ப்பணஞ்செய்து வருகின்றார்களா? சிவார்ப்பணஞ் செய்யப்பட்டுள்ள வக்கன்னியர் தமதொழுக்கநிலையிலிருந்துகொண்டு சிவாலயத்தொண்டுகளைச் செய்துவருகின்றார்களாவெனில், பூர்வமுத்தமக்குலத்தராயுள்ளோர் தமது தலைப்பெண்டிரைச் சிவார்ப்பணஞ் செய்தேவந்தனர். சிவார்ப்பணஞ் செய்யப்பெற்ற கன்னியரும் ஒரோவிடங்களின் மாத்திரந் தமதொழுக்கநிலைகளிற் றவறாதிருக்கின்றனரெனக் கேட்டுளேம். ஏனைய பலவிடங்களில் மத்திம வதம குலத்தராயுள்ளோருந் தங்கள் தலைப்பெண்டிரைச் சிவார்ப்பணஞ்செய்யத்தலைப்பட்டபின் மேற்கூறியவா றிவர்கள் தாங்களிருக்கவேண்டு நிலைமைகளின் மாறப்பின்னர் எட்டியைச்சேர்ந்த விலவு மினிமையற்றதுபோல் முன்னவரு மின்னவராகி முடிந்தனர். ஆகவே சிலர் காலவேறுபாட்டாற் காமவெறியைக்கடத்தற் கரியராகி விபூதி யுருத்திராக்கதாரணராய் ஏரவுரி பட்டாடைமுதலியன தரித்துச் சிவாலயத்தொண்டில் வழாது தத்தம் [illegible]னும் வேறொருத்தமக் குலத்தேனும் ஓர் கணவனை மணவினையின்றிக்கூடி ஆயுள்காறுங் கற்புநிலை கலையாதவராகியும், பலர் சிவாலயத்தொண்டின்மாத்திர மவ்வாறிருந்து பின்னர் பரசுகவிச்சையை விளைப்பவைகளான சிவமுத்திரைகளையெல்லா மறவிடுத்து இகசுகவிச்சையை விளைப்பவைகளான திலதம் பரிமளப்பூச்சு சித்திரத்துகில் பொன்னணி முதலியவைகளை மிகத்தரித்து மணவினையற்ற பல கணவரை மாறியாறிக்கூடி ஆயுள்காறுங் கற்புநிலை கலைந்தவராகியும் தமக்கிச்சையான விடங்களில் வாழ்தற்காயினராதலால்; உத்தமக்குலத்தராயுள்ளோர் முன்போற்றமது கன்னியரைச் சிவார்ப்பணஞ்செய்வ தொழித்தனர். பின்னரிவ் விருவகும்பினருந் தம்பா லளவற்ற ஆண் பெண் சந்ததிகள் பெருகப்பெற்றுந் தமக்குள்ளேயே யொருவர்க்கொருவர் கொள்ளல் கொடுத்தலாதிய சம்பந்தங்களைச்செய்துகொண்டு, தமது தலைப்பெண்டிரைச் சாம்பிரதாயமுறைப்படி சிவார்ப்பணஞ்செய்து புத்திரபௌத்திர பாரம்பரியமாய்ப் புறம்பான

வோர் சங்கரவினத்தராகித் தமக்காதியாயுள்ள குலப்பெயர்கூறி விளங்கு வதாயினர். இவர்களைக்குறிப்பித்தன்றோ பூர்வம் பட்டினத்தடிகள்.

பெண்ணாகவந்தொருமாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனிறைவாகச்சியேகம்பனே.

எனக்கூறி முறையிட்டனர். இவர்களிலொருத்தியைக் கண்டன்றோ திரு வண்ணாமலைக்கண் சிவதரிசனார்த்தமாகச் சென்ற காசிராசனாகிய பிரதக் தன் "அன்னமோகிளியோ வமிர்தமோ திருவோ வமிர்தத்தையமரருக்களி த்த, வன்னமோகினியோ யிரதியோபிரமன்மனதினால் வகுத்தமேனகை யோ." என மோகங்கொண்டு புலம்பினான். இத்தகையர் சிவாலயங்களி லு மற்றத் தேவாலயங்களினு மிருக்கவொண்ணா தென்றன்றோமுன்னோ ருவொருவர்,

மாசில்லைதிகர்தமகளிரேகோயின்மாதராய்மருவினர்மேனு
டேசுரகாசிராசனுமவர்பா ,சிந்தைவைத்தலைந்தறையறிவே
மீசனேயின்றவைதிகமகளிரெய்தலுநெறிகுலைந்தந்த
தாசிகளெல்லாம்வேசிகளானார்தழைக்குமோ வாலயத்தருமம்.

எனவும், மற்றொருவர்

உத்தமக்குலத்துநித்யகன்னியராயுருத்திரகணிகையரென்ன
வோங்கிமுன்னாளிற்கோயில்சேர்மாடத்துற்றவன்முத்திரைதாங்கி
நித்தலுநிருத்தகீதமும்பணியுநிகழ்த்திநட்சிவப்பிரசாத
நேயராய்நின்றுமாசிலராகி நிறையருள்பெற்றனரின்னாள்
மத்திமக்குலாதிகன்னியரவர்தமாண்பினைமாய்க்கவம்மாட
மருவிப்பின்வதுவைவினையிலாவரரோர்வரனையே|மெறழிவதும்பலரை
கத்தியேயுழன்றுதிரிவதுமாகிகன்னினரிவைக்குச்சான்றோதி
னவிலுறும்பரவை சங்கிலிகுலத்தர்நண்ணுந்தேவடியவர்தாமே.

எனவுங் கூறியுள்ளார், இவர்கள் குலத்தினையேயன்றோ [illegible]ழார் சுவா மிகள் (பலவகைப் புலாலோடுங்கூடி யசுத்தமாயுள்ள சிப்பிகள்குலத்தில் ஒளியினையுடைய முத்துப்பிறந்தாற்போலப் பல நாயகரோடுங்கூடி யசுத் தமாயுள்ள உருத்திரகணிகையரென்னும் பதியிலார்குலத்திலவதரித்து) எனப் பொருள்விளங்குமாறு "கதிர்மணிபிறந்ததென்னவுருத்திரகணிகை மாரம்பதியிலார் குலத்திற்றோன்றி" எனப்பரவையாருடைய திருவவதார

தை முன்னிட்டும், (அவைதிக சம்பந்தமாய் சூத்திரகுலத்தினின்றும் பெருகு நலமுடையாராகிய பதினெண்குடிமாக்களால் நிறைந்துள்ள ஞாயிறென்னுந் திருப்பதியில் அக்குடிமாக்களினுமேலான கொள்கையராய் உருத்திரகணிகையென்னுங் கங்கையார் வரமக்களெனவிருக்கும் வேளாண்குலத்தில் ஞாயிறுகிழாரென்பவருக்கு மகளா யவதரித்து) எனப்பெருள் விளங்குமாறு,

> நாலாங்குலத்திற்பெருகுநலமுடையார்வாழுஞ்ஞாயிற்றின்
> மேலாங்கொள்கைவேளாண்மைமிக்கதிருஞாயிறுகிழவர்
> பாலாதரவுதருமகளாராகிப்பார்மேலவதரித்தார்.

எனச் சங்கிலியாருடைய திருவவதாரத்தை முன்னிட்டுங் கூறியருளினர். இத்தகைய விதிவிலக்கு பல்லாயிரவருடங்கட்கு முன்னேயே பரவியது போலும். ஆயின்குன்றை முனிவராகிய சேக்கிழார்சுவாமிகள் பரவையாவதரித்த குலத்தை உருத்திரகணிகையர் குலமெனவும் சங்கிலியாரவதரித்தகுலத்தை வேளாளர் குலமெனவுங் கூறியிருக்க இவ்வேளாண்மாக்கள் குலத்தையும் உருத்திரகணிகையர் குலமென்றதெவ்வாறு பொருந்துமெனில், அவைதிகத் தன்மையேற்ற நான்காம் வருணத்துள் சற்சூத்திரரென்னப்படும் வெளாண்மாக்கள் யாருங் கங்கையார் வரமக்களென்பதும், அக்கங்கையாருருத்திரமூர்த்தியை மணவினையின்றிக்கலந்த கணிகையென்பதும், இக்கணிகை யவ்வுருத்திரமூர்த்தியையன்றி ஏனையதேவர் மானுடர் பல்லாரையுங்கூடிப் பரம்பரை பெருகச்செய்வதுபோல் அவ்வேளாண்மாக்களும் "மண்ணிடிக்குமொட்டராய்" என்னுந் தனியனுக்கொப்ப உத்தம மத்திம வதமகுலத்தர் பல்லாரோடுங்கூடிப் பரம்பரை பெருகச்செய்வோரென்பதும், யாண்டும் யாவரு மறிந்தபடியன்றோ? ஆதலின் சிவாலயத்தொண்டுக் காட்பட்டதனால் உருத்திரகணிகையரென்னும் பெயரேற்றல் ஏனைய மரபுப்பெண்டிர்க்கெல்லாஞ் செயற்கையாயினும்வேளாண்மரபுப் பெண்டிர்க் கிங்ஙன மியற்கையாமென்க. இதற்குக் "கங்கைபெறுங்காரளர்" என்ற கம்பர்வாக்கே சான்றாதலறிக.

இஃதிவ்வாறாகத் திருத்தொண்டர் புராணத்திற்குப் பொழிப்புரை யெழுதப்[illegible]ரு புலவர் [illegible]யாருடைய திருவவதாரச் செய்யுளாகிய "கதிர்மணி பிறந்த[illegible]" என்பதின் பொழிப்புரையி னடியில் "உருத்திரகணிகைமாராகிய [illegible]குலம்" என்றதற்கு விரிவுரை யெழுதத்தொடங்கி ஏதோதோ தன்னுள்ளத்திற் றோன்றியபடிக்கெல்லாம் வரைந்து அவற்றினடியில் (சிவாகமங்களிலே தந்துவாயர் மரபிற்றோன்றுங் கன்னிகையையே உருத்திரப்பணைஞ்செய்ய விதித்தலால் அவர்சுத்ததல

முடையராதல் பெறப்பட்டது. தந்துவாயர் - இழைநக்கி நூனெருடு மேற்ற முடையோர். இவர் கைக்கோளரெனச் சிறந்திருக்கின்றனர். இக்குலத்தவர் தங்கள் குலத்திலோர் பெண்ணைச் சிவார்ப்பிதஞ் செய்துவரும் பெரும்பாக்கிய மெய்தி யிருக்கின்றனர். இவருக்கன்றி யேனைய குலத்தார்க் கதுசிறவாது. வீரவாகு தேவர் முதலிய விலக்கத்தொன்பதின்மரைத் தந்த நவசக்திகள் அம்மையினது நூ[illegible]லுதிர்ந்த நவமணிகளினின்றும் பிறந்து அவ்வம்மையாருக்குச் சேடிகளாயிருந்தாராகலின் அவர் குலத்தவரே யுருத்திரகணிகையராக உண்மைநூல்கள் விதிக்கும்) என்றெழுதியிருக்கின்றன ராதலால் இவற்றின்கருத் தென்னையெனின், அவைதிகரான ருத்திரருஞ் சங்கரரு மொழிய வேனையவைதிகர்யாருந் தங்கள் தலைப்பெண்டிரைப் பூர்வம் வேதாகம விதிப்படி சிவாலயங்களில் உருத்திரகணிகையாக வற்பிதஞ்செய்து வருவதுண்டென முன்னமே கூறினும். இப்படி சிவார்ப்பிதம் செய்யுமவ் வைதிக மரபினருள் செங்குந்தரு மொருவராகையால், பரவையார் செங்குந்த குலத்தாசிமனையிற் பிறந்தன ரென்பதி லவருக்கேனு மக்குலத்திலுக்கேனு முண்டாகுமிழுக்கென்னையுள. எக்கால் வைதிககுலத் தாசிகள் யாரும் அவைதிக குலத்தாசிகளோடு சம்பந்தப்பட்டுத் தங்கணிலைகளினின்றுந் தவறி மணவினையில்லாவாறு ஓர் வரனையேனும் பலவரரையேனுமடைந்து தாங்களோர் பதியிலார் குலத்தரென வழக்கிகேற்கத் தலைப்பட்டார்களோ, அன்றே தாங்கள் தமது பூர்வகுலச்சீரினின்று மொழிந்தார்கள். இங்ஙன மவர்கள் செயலைப்பற்றிவந்த "பதியிலார்குலம்" என்பதற்கு வேறுபொருளொன்னையுள. இத்தமிழ்நாட்டெல்லைக்கணுள்ள பெரும்புலவர்கள் அரிய பெரிய நூல்களுக் கைந்திலக்கணங்களும் விளங்கப் பதவுரை யெழுதி முடித்திருக்கின் அல்லதெழுதி முடித்துக்கொண்டிருக்கின் தானுமோ ருரையாசிரியனென்று பிறர் மதிக்கப் பெயரெடுக்கும் காரணமாய் வேறொரு நூலுக் குரையெழுதிமுடிக்கச் சத்தியின்றி அதே நூல்களுக்குப் பொழிப்புரையெனக் குருடன் கோலைக்கொண்டு வழிநடத்தல்போல அப்பதவுரையைத் தழுவி யெழுதிக்கொண்டு வருவதினும் எத்தனையோ சொல்வழு பொருள்வழு சொற்றொடர்வழு பதச்சேதவழு சந்திவழு சம்பந்தவழு தாற்பரியவழு சாம்பிரதாயவழு முதலிய எண்ணற்றவழுக்களோ டெழுதித் தன்னின்மிக்கா ரொருவருமில்லையெனத் தருக்கி நிற்கும் அப்புன்பள்ளிப் புலவர் திருத்தொண்டர் புராணத்திற்குச் சாம்பிர[illegible]யமாய்ப் பாடங் கேட்டுணர்ந்த தமிழ்நாவலர் சிகாமணிகளாகிய மழவை-மகாலிங்கையரவர்களியற்றிய பொழிப்புரையையும் திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலையாதீனம் - ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளியற்றிய பதவுரையையும் வேறுசில சில்லரைப்புலவர்க ளெழுதித்தரும் கையுரையையுஞ் சேர்த்துக்

கொண்டு புதுக்கி ஓர் நவீனப்பொழிப்புரை யெழுதத்தொடங்கியோர் அவ்வுரையாசிரியர்கள் அக்கதிர்மணியென்னுஞ் செய்யுட்களுள்ள "உருத்திர கணிகையர்" என்னும் பதத்திற்கு "வேசியர்க்கு வேறாய் மணவினையின்றி உயர்ந்தசாதிகளி லொருவனைக் கணவனாகக்கொண்டு பூசாகாலத்தில்சுத்த நிருத்தஞ்செய்யு மகளிர்கள்" என்றெழுதிவைத்தபடி தாறுமெழுதித்தொலையாமல் முற்றுணர்ந்த பெரியோரைப்போல் ஏதேதோ தன்மனம்போனபடிக்கெல்லாம் பிதற்றி யெழுதிவைத்தாரேல், உமாதேவியார் நூபரமணிகளினின்றும் அவருருவெளியாகத் தோன்றிய நவசத்திகளிடத்தில் சிவானுக்கிரகத்தால் நந்திகணத்தவ ரம்சத்தினராயுதித்த வீரவாகுதேவராதியர் வமிசத்தினராகிய செங்குந்தவீர மரபினரது கன்னிகையையே உருத்திரார்ப்பணஞ்செய்ய விதித்திருக்கின்ற சிவாகமங்களையும், அச்செங்குந்தவீரருக்குச் சிவபிரானுலாதியில் "மறிபுமிகுதிறலுமெழின்மானமுங்கையெனப்பெறுநம்மைந்தர்" என முதன்மூவருணத்தரது வைதிக நல்லொழுக்கத்தினரென்னும் பொருள்பட விடப்பட்டுள்ள கைக்கோளரென்னும் பெயரொழியத் தந்துவாயரென்னும் பெயரைக்காட்டு திகண்டாதிகளையும், இக்கைக்கோண்மரபினர்க்குப் பிற்காலத்தரால் "தாயரும்பன்ன" என்னு முதாரணச்செய்யுளின்படிக் கிடப்பட்டுள்ள தந்துவாயரென்னும் பெயர்க்கு இழைநக்கி நூனெருடு மேற்றமுடையோரெனப் பொருள்தருவதான இலக்கிய விலக்கணங்களையு மெங்ஙனந்தேடிக் கற்றார்? சிலநாட்குமுன் செய்யுள் ரூபமாயுள்ள காஞ்சிப்புராணத்தை வசனரூபமாக்கத் தொடங்கித்தலவிசேடப்படலத்தில் "விப்பிரர்கண்முதனால்வர்" என்னுஞ் செய்யுட்களுள்ள "நெய்தொழிலர்" என்னுமோர் பதத்திற்குக் கைக்கோளரெனப் பொருள்படுத்திய ஓர் பள்ளிப்புலவர்க்கிவர் பங்காளிப்புலவர்போலும். அன்றியும்-பழைய திவாகரத்திலின்றிப் புதிதாயச்சிட்ட திவாகரத்திற் சேர்த்துள்ள கைக்கோளரென்னும் பெயருக்கு உபபெயராகத் "தந்துவாயர் காருகர்கைக்கோளர்" என்றிருவகை நவீனப்பெயர் காட்டியதின் கருத்தென்னை? தந்துவாயரென்பதற்கு நெய்வாரென்பதுபொருளாயின், காருகரென்பதற்குப் பொருளென்னை? காருகரென்பதற்கு நெய்வாரென்பது பொருளாயின், தந்துவாயரென்பதற்குப் பொருளென்னை? இரண்டற்கு நெய்வாரென்பதே பொருளாயின், ஆன்றோர்கள் மிகைப்படக்கூறற் கேதுவென்னை? இவ்விருபெயருள் நெய்வாருக்கென நிகண்டில் "பொருந்தரேவ...ர்பொற்றா காருகாநெய்வார்போ" என்றுள்ளதில், தந்துவாயரென்னும் பெயரேன் சேர்ந்திலது? இவ்வுலகில் பஞ்சுநூல் கல்விநூலென்றிருபொருளொட்டுப்பெயராய் வந்த தந்துவை, ஆடைநெய்வோர் பயில்வதெப்படி அருங்கலையோர் அவேசர்பயில்வதெப்படி? கல்விநூலொன்றனை பேமனிதர்வாயாற் பயிலுதலன்றி, கன்னாற்கேட்டான்காதாற்கண்டா னென்ப

தற்கேய்ப்ப பஞ்சநூலை வாயாற்பயிலுநலுமுண்டோ? கைக்கோளரென்பதற்குந் தந்து வாயரென்பதற்கும் நெய்வோரெனப் பொருள்விரிக்கும் இப்புன்பள்ளிப் புலவர்கள் "மைக்கோலிற்பொலிகுழலை மண்ணைமாழையை மறந்தோ, மைக்கோளரிற் பொலிதலறிதேயோ வறிதேயோ, கைக்கோளே கலனுகைக்கருதுமிவற் குறுவாகின், மெய்க்கோள்கொணலடையாவும் விளக்க வருண்மேவுதியால்" எனவும், "பந்துவாய் தரும் வளைக்கைப்பாவையொடு பார்த்திவனற், றந்துவாயரையண்மித்தக வுரைசெய்தவமினைத்துஞ், சித்தும் வாயிலராகிச் செய்தறங்கள் பலயற்றி, யிந்துவாய்முகப் பெண்சேயின் றுரையீன்றவரொத்தார்." எனவும் வருமிலக்கியச் செய்யுள்களுக்கு எவ்வாறுரை யெழுதுவார்கள்? இவையனைத்தையுஞ் சற்று முய்த்துணராத வப்பள்ளிப்புலவர் தந்துவாயரென்பதற்கு இழைநாசகி நூனெருடு மேற்றமுடையோரெனப் பஞ்சவிலக்கணமும் பாக்கக் கற்றோராகையால் சிறி திழிவு சிறப்போடும் வேறொன்றைக் காட்டாது திருவள்ளுவ தேவர் வாக்கையே காட்டி மெய்ப்பித்ததை யோசிக்குமிடத்தில், இவர் மரபினுள்ளோர் மச்சமாம்சங்களை விற்பதினும் - மலக்குப்பைகளை வாருவதினும் - குருவி கொக்கு சுடுவதினும் - கூடைகட்டி விற்பதினும் - நண்டு நத்தை பிடிப்பதினும் - மிக நாட்டமு மேற்றமு முடையவர்களாயிருத்தல்போல, இவர் நக்கன் முதலிய தொழில்களில் மிக நாட்டமு மேற்றமு முடையவர்போலும்.

மேலுந் திருவள்ளுவ தேவ ரவதாரத்தைப்பற்றிக் கபிலதேவர் "தொண்டமண்டலத்தில் வண்டமிழ்மயிலை - பறையர்வீட்டில் வள்ளுவர்வளர்ந்தனர்" எனக் கூறியிருக்க வதைப் பிற்காலத்தவர் பல பிரதிகளைக்கொண்டாய்ந் தச்சிற்பதித்து மிருக்கப் "பண்டுகரிக்கால்வளவன்" என்னுந் தனிப்பாடலினது கருத்துக்கிசைய அத்திருவள்ளுவதேவர்க் கெத்தனையோ காலத்திற்குப் பின் தொண்டமண்டலத்திற் குடியேறிய துளுவவேளாளர் வீட்டில் வளர்ந்தனரெனக் கற்பித்து மற்றொருபதிப்பில் "தொண்டமண்டலத்தில் வண்டமிழ்மயிலைத் - துள்ளுவர்வீட்டில் வள்ளுவர்வளர்ந்தனர்" எனவும், வேறொருபதிப்பில் பின்னுமோரடியேற்றித் "தொண்டமண்டலத்தில் வண்டமிழ்மயிலையில் - நீளாண்மைக்கொளும்வேளாண்மரபுயர் - துள்ளுவரிடத்தில் வள்ளுவர்வளர்ந்தனர்' எனவுமாற்றி யச்சிட்டு வழங்குவதாலினர், அவருக்குப் பெண்கொடுக்கும் பெரும்பாக்கியத்[illegible]பெற்ற சற்சூத்திரகுலத்தினர். இனி நாளேறவேறப் பின்னும் பலவடிகளேறும்போலும். ஆறு லெம்மையு மடிமையாகவுடைய திருவள்ளுவதேவர் தரத்தைப்பற்றி எத்தனை யடிகளேறினு மிழுக்கின்று. இச்சற்சூத்திரரென்னும் வேளாண்குலத்தினர் தம்முன் முக்குலத்தோர்க்கும் எவ்விதம் பணிப்பின்

ளைகளாயினரோ, அவ்விதமே தங்கட்குப்பணிப்பிள்ளைகளா யிருப்பதன்றித்தம்மோடோர்குலத்தி லொக்கவுண்ணுந் தகைமையராகிய பறையர்வீட்டிலவர் வளர்ந்தனரென அவருட னொக்கப்பிறந்த கபிலதேவர் கூறியதில் என்ன குறைகண்டு மாற்றினர். அந்தோ! வண்ணார்வீட்டினுஞ் சாணார்வீட்டினும் வளர்ந்த உப்பைக்கு முறவைக்கும் பாணர்வீட்டினுங் குறவர்வீட்டினும் வளர்ந்த ஔவைக்கும் வள்ளிக்கும் வளர்ந்தவிடத்தை மாற்ற ஒருவரேனும் பொறுப்புள்ளோரில்லையா? திருவள்ளுவதேவரோடு பேதமற்றுதித்த சகோதரராகிய கபிலதேவர்க்கில்லாத வபிமானம், இடையில் பெண்கொடுத்து நேசித்த சம்பந்திகட்குண்டாயது மிகவற்புதம்! மிகவற்புதம்! இப்படி மாற்றியபடிக்கேயேனும் கபிலதேவர் கூறியபடிக்கேயேனும் அவரவ்வேளாளர் வீட்டின்கண்ணேயேனும் அவ்வேளாண் பறையர் வீட்டின்கண்ணேயேனும் வளர்ந்து வேளாண்குலப் பெண்ணையே விவாகஞ்செய்திருக்க, வேளாண்டொழிலாகிய உழுதலைவிரும்பாது நெய்தலைவிரும்பியதற்குக் காரணமென்னை? நொய்யளவாயினு நோய்செய்யுமற்றெல்லா, நெய்தொழில்செய்யுநலம்" என்றபடி யுழுதற்றொழில் பலமுகத்தும் பாவங்களை விளைப்பதெனவும் நெய்தற்றொழிற் கவையில்லையெனவுங்கருதிக் கையாடிவந்தனரேல் தம்பால் திருமான்முதலிய மும்முதற்றேவர்கள் வந்து தம்மையோர் சந்தேகங்கேட்ப அதற்கவ ரவர்களைநோக்கி,

பூவிலயனும்புரந்தரனும்பூவுலகைத்
தாவியளந்தோனுந்தாமிருக்க-நாவி
விழைநக்கிநூனெருடுமேழையறிவேனோ
குழைநக்கும்பிஞ்ஞகன்றன்கூத்து.

என்றோர் கவிகூறித் தாம்கையாடிவருகின்ற நெய்தற்றொழிலினிழிவித்தகையதென்றும் அத்தொழில் செய்வோருடைய வசுத்தம் இவ்வியல்புடையதென்றும் என்குறிப்பித்துக் காட்டினரெனில்; அத்திருமால்முதலிய தேவர்கள்மூவருமுடனே தமதுசந்தேகந்தீரப்பெற்றவர்களாய்அந்நாயனாரிடத்தினின்றும் விடைபெற்றுமீண்டுவருங்கால்வழியிற்பலபிரயாசையோடு பயிர்வேலைசெய்திருப்பவனும் நாயனாருக்குத் தனது புத்திரியைத் திருமணமுன்னிலையிற் கொடுத்து அவராற் பிரமோபதேசம் பெற்றவனுமாகிய ஓர் வே[illegible]க்கண்டு நீராரென்றுவினவ, அதற்கவன் பொய்யாமொழியைப் பூமியின்கணிறுத்தவந்து நெய்யார்தொழிலை நேசித்தவராகிய ஓளையாவுடைய வில்வாழ்க்கைக்கு வேண்டும் பதார்த்தங்களை யெய்யாமல் விளைத்துத் தருவோனாகிய பணிப்பிள்ளையென்ன, அதுகேட்ட தேவர்கள் வியந்தவர்களாய் இவன்திறத்தையுஞ் சற்றறிவோமென வெண்ணித் தமது சந்

தேசத்தை யங்நாயனாரைக் கேட்ட வண்ணமே அவனையுங் கேட்டார்கள். அதற்கவன் "மாலுமயனுமகவானுமேயிருப்ப, வாலுணி தோடேற்ற கூத்தாயுமதோ - சால, விதத்திற்பறையோடுண்டேர் பூட்டியேற்றின், குசத்திற் கைவிட்டுழுவேற்கு" என்று கூறலு மவர்களாச்சரியமெய்தி ஆசானுஞ்சிட னு மிப்படிக்கல்லவோ விருக்கவேண்டுமென்று சொல்லித் தமதிருக்கை நோக்கிச் சென்றார்களெனச் சிலபெரியோர் சொல்லக் கேள்வி. இப்படி யிவ்வேளாளன் கூறியதினும் அப்படி யங்நாயனார் கூறியதினும் அவ்வத்தொழிலின்கணுள்ள சுத்தமும சுத்தமும், அவற்றைச் செய்வாரடையும் பெருமையுஞ் சிறுமையும், அவற்றாற் சீவிப்போர்க்குநேரும் புண்ணியமும் பாவமும், அவற்றை முடிக்குமளவுமுள்ள சுகமுந் துக்கமும் இவ்வித்தன்மையவென் றறியவேண்டில் பதினாறுவது கவனக்குறிப்பை முற்றினுங் கண்டுதெளிக. முன்னர் திருவள்ளுவதேவர் சொன்னதாகக் கூறிய கவியையும் பின்னர் வேளாளன் சொன்னதாகக்கூறிய கவியையு மாலோசிக்குமிடத்து எத்தப்பாட்டுக் கெதிர்ப்பாட்டு பாடியது போன் றிருக்கின்றதேயெனில், திருவள்ளுவதேவர் பாட்டுத்தான நிசமென்பதெப்படி? முதற்றேவர் மூவருஞ் சந்தேகங் கேட்கவந்தது முழுநிசம். அதற்கவர் கூறிய பாட்டில் அரைநிசம், மற்றையவரையோ வெறும்புளுகே. இவர் கூறியபாட்டு,

பூவிலயனும்புரந்தரனும்பூவலகைத்
தாவியளந்தோனுந்தாமிருக்கப்-பாவி
லிழையொட்டியாடைநெயுமேழையறிவேனோ
குழையொட்டும்பிஞ்ஞகன்றன்கூத்து,

எனவிருந்ததாகப் பெரியோர் சொல்லக் கேட்டுளோம். நெய்வோர்நூலை நெருடற்குத் தகழியிற்றண்ணீரிருக்க அதைநாவினால் நக்குவதேன்? உழுவோ ரெருதையோட்டற்குத் கையிற்றாற்றுக்கோலிருக்க அதன்குதத்திற் கையிடுவதேன்? இவ்விரண்டு மசுத்தத்தொழிலாயினுஞ் சமயம்வாய்த்தபோது கல்வியறிவற்ற சில யேழைமாக்களின் செய்கையெனயாவரு மறிந்தபடியன்றோ? இதனாலத்தொழில்களுக்கு மத்தொழில்களைச் செய்வோருக்கும் ஏகசமனாயசுத்தங்கூறுவது முறையாமா? உழுதற்றொழிலு நெய்தற்றொழிலுஞ் சிறுபான்மை வணிகர்க்குஞ் பெரும்பான்மை சூத்திரர்க்கேயுரிய தொழிலாயிருக்க உழுதற்றொழிலைமாத்திர முயர்த்தி நெய்தற்றொழிலையிகழ்வதேனெனில், பூர்வக்கைக்கோளரிற் சில வெளியோர் சீவனார்த்தத்தின் பொருட்டும் தன[illegible]யல்பாயுள்ள சிவகாருணியத்தின்பொருட்டும்,

மாவடியிலேவிளங்கும்வல்லிகாமாட்சித்தாய்.
சேவடியிலேயுதித்தார்செங்குந்தரம்மானை.

சேவடியிலேயுதித்தார்செங்குந்தராமாயிற்
பாவடியினின்றுபசப்புவதேனம்மானை
பசித்தவருக்கன்னமிடப்பசப்பாரோவம்மானை.

என்ற விரட்டைப்புலவர் திருவம்மானைக்கொப்பக் கைத்தொழிலொன்று பெறவேண்டி உழுதற்றொழிலை யசுத்தமெனவும் பாவமெனவுந்தள்ளி நெய்தற்றொழிலைச் சுத்தமெனவுஞ் சுகிர்தமெனவுங்கொண்டு செய்துவருவதால், அதிலச் சூத்திரரு ளொருபகுதியாராகிய வெள்ளாளர் அசுத்தமுமிழிவுங் கற்பிக்கவேண்டி நாயனார் பாட்டையு நலமறப் புரட்டிக் கெடுத்தனர். அந்நாயனா ருழுதலினுஞ் சிறந்தது நெய்தலே யெனக்கொண்டு கையாடி வருபவராதலால், தம்பால்வந்த தேவர்கட்குத் தமதெளிமையைக் காட்டினரேயன்றித் தொழிலி லசுத்தங்காட்ட அவர்க்கவசியமில்லை. அன்றியுந் தோற்றத்தினுந் தொழிலினுஞ் சிறந்தோராகிய வத்தேவர்கட்குத் தோற்றத்தினுந் தொழிலினுந் தாழ்ந்தோரா யிருக்குந் தமதியல்பைக் காட்டினர். ஆனால் கைக்கோளர் சிவகாருண்யராய் அன்னதானமுதலிய செய்யவேண்டினோர் வேறெந்தத் தொழிலையேனுங் கைக்கொண்டு செய்யலாகாதோ வெனின், மற்றத் தொழில்களைக் கொண்டுசெய்யுந் தானங்கள் பசுவைக் கொன்று பாதுகைதானஞ் செய்வதற்கொப்பாமென வெண்ணியே யன்றோ? ஆயின் மேற்கூறிய திருவம்மானைச்செய்யுள் அச்சிட்டப்பட்டுள்ளபிரதிகளிலிருக்கின்றதோவெனின், அச்செங்குந்தர் மரபைப்பற்றி வசைப்பாடல்களைக் கற்பித்தச்சிடுதலேயன்றி இசைப்பாடல்களாகவிருப்பனவற்றையெல்லாம் எங்குந் தலைக்காட்டாதபடி யழித்ததலே தமது தொழிலாகவுடைய விழிகுலமாக்க ளிருக்குமளவு மேனிருக்கும்? அம்மரபினரு மவற்றை யபிமானித்தாய்ந்து தேடி யச்சிற் பதிக்க ஆவசியகமில்லராகி "மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் - கீழல்லார் கீழல்லவர்." என்றவத் தேவரது பொய்யாமொழிக்கிணங்க நம்மையு நாம் செய்யுந் தொழிலினையும் ஆரா ரெவ்வெவ்விதமாகப் பழிக்கினும் ஒருக்காலு மேல்கீழாக கீழ்மேலாக வெனநினைந்து வறிதிருக்கின்றனர். இவ்வாறில் பேன்யக்கள் - வறிதேயிருக்க இவர்கள் பாவவர்கள் வசைகற்பித் திசைகெடச்செய்தற்குக் காரணமென்னையெனின், இம்மூதுலகறிய முக்கியமாக மூன்றுகாரணமுள: அவற்று தமது குலத்தினராய் ஒர ரசவைக்கண் பிரசித்தி பெற்றிருந்த புகழேந்தியாரை இச்செங்குந்த குலத்தராகிய கூத்தனார் சிறைக்கண் வைப்பித்தழுங்கச்செய்த தொன்று. எக்காலுந் தம்மையுந் தம்பாற் குடிமக்களாயினோரையு மன்றித் தரணியின் கண் தொழுகுலத்தராகிய மூவரையுஞ் சற்றேனு மதித்துப்பாடாத கம்பவாணரை அக்கூத்தனார் சோழராசனவைக்கணவமானப்படுத்தி யூரைவிட்டோட்டி யலையச்செய்ததொன்று. அக்கம்பவாணர் தமது மரபைப்பற்றிப் பாடி வெகு சிறப்பண்டைந்திருந்த ஏரெழுப

தென்னுனு விளைத்துச்சிந்த அக்கூத்தனூரினிப் பின்னர் நிகழுஞ் சரிதை யிற் கூறுமாறு ஈட்டியெழுபதென்னுமோர் தெய்வீகப் பிரபந்தம் பாடிய தொன்று. இம்மூன்றுமே யக்கூத்தனூரையும், அவரதுகுலத்தையும், அக்குலத்தினர்செய்த நூல்களையும், அக்குலத்தினர் பொருட்டான்றோர்களாற்செய்யப்பட்டுள்ள பலவிசைக்கவிகளையும் பழிக்கவும் புறங்கூறவும் புரட்டவும் பொன்றுவிக்கவு மேதுவாயினவென்தறிக. ஆனாலவ் வேளாண் குலத்தருள்ளும் சற்பீசராகி எவற்றனுந் தாரதம்மியமுணர்வல்ல சிலர்மாத்திரம் "வேசையர்பகைக்கும் விற்பன்னர் பகைக்கும்வேரில்லை" என்னும் பழமொழியைக் கருதித்தங்கள் வேலைபார்த்திருப்பர். ஏனைய வேலையில் லாவீணராகிய பல துர்ப்பீசரே மேற்கூறிய வினைத்தொழில்களில் இடைவிடாது முயலுவர்.

இத்தகைய ரங்கெய்தற்றொழிலைப்பற்றியும், அதைக்கையாடிவருங் கைக்கோளரைப்பற்றியும், அக்கைக்கோளர்க்குத் தொன்றுதொட்டுள்ள பலவளங்களைப்பற்றியும், அவ்வளங்களைச்சிறப்பித்துள்ள பலபிரபந்தங்களைப்பற்றியும், அப்பிரபந்தங்களைப்பாடிய பல வித்துவான்களைப்பற்றியும் "காராளராயுள்ளார்" எனவும், "கைக்கோளர் செங்குந்தர்" எனவுமுள்ள தனியன்களின் கருத்துக்கிணங்க நாளதுகாறுஞ் செய்துவருகின்ற புரட்டுந்திருட்டு மளவில. இப்படியவ் வேளாண்மரபினரென்னும் சற்சூத்திரர் தம்முன் மூவகை மரபினரையுந் தம்பின் பலமரபினரையும் விடுத்துஇவை களெவற்றினுங் கலவாது சிவபரம்பரையாயுள்ள இக்கைக்கோண் மரபினரையே தங்கட்கியற்கையினுஞ் செயற்கையினு நெடுங்காலமாக விருத்தி யடைந்துள்ள வழுக்காற்றினால் புறம்பழித்துத் திரிவதைக்கண்ட பள்ளியருட் சிலர் பூர்வ மெலவரையும் பழித்தலின்றி மிகச்சாதுக்களா யிருந்ததை விடுத்து கையிலேட்டைப்பிடித்து வாசிக்கத் தலைப்பட்ட சிலகாலந்தொடங்கி "நண்டுகொழுத்தால்வளையிலிரா - பள்ளிகொழுத்தாற்பாயிலிரான்" என்பதற் கிலக்கியமாகச் சற்றே தலையெடுத் தாட்டிக்கொண்டு வருகின்றனர். இல்லாவிட்டால் திருத்தொண்டர்புராணத்திற்கு நவீனப் பொழிப்புரை யெழுதப்புகுந்த இப்புன் பள்ளிப் புலவன் கைக்கோளரேன்போர் இழைக்கினனெருடு மேற்றுடையோ னென்றும். இவர்தான்தந்துவாயரென்றும், இத்தந்துவாயர்தான் தாசிகளாகிய பதியிலார்குலத்தரென்றும் பிதற்றவரா? அத்திருத்தொண்டர் புராணத்திற்குச் சமஸ்கிருதபண்டிதர்களுந் தமிழ்த்தலைமைப்புலவர்களுமாயிருந்த ஓரிருவராற் செய்யப்பட்டுள்ள பதவுரையும் பொழிப்புரையும் பகிரங்கமாயிருக்க, இயற்கையிலேயே.சாதிவைஷம்மிய சிரேஷ்டரான யாழ்ப்பாணநல்லூர் ஆறுமுகநாவலர்

செய்த கத்தியரூபமொன்றையாண்டுங் கதித்துக் கத்திக்கொண்டிருக்க, அவர் கட்கப்படாத சிவாகமங்கள் முதலியன இவர்க் கெந்தக்குப்பத்திற் கிடைத்து எந்த வம்பட்டவுபாத்தியாயரிடத்திற் பாடங்கேட்டுணர்ந்தார். பொருள்வருவாய் காரணமாகவுந் தாமுமோ ருரையாசிரியரெனப் பிறர் மதிக்கப் பெயரெடுக்குமாறும் ஓர் நூற் குரையெழுதப்புகின், முன்னோருரை கட்குஞ் சாம்பிரதாயங்கட்கு முரண்படாம லெழுதல்வேண்டும். இவ்வாறின்றி மேல்வரைந்துள்ள கவனக் குறிப்பில் ஈதென்ன கொள்ளையோவென்றும் - தென்றமிழ் நாட்டிடை யென்றும் - மனுமுறையா லுலகோம்பு மன்னரென்றும்) உள்ளதனியன்களுக்கிணங்கச் சாதி வைஷம்மியமுஞ் சமய வைஷம்மியமுங்கொண்டு பல பிதற்றி, முன்னோர்செய்த நூல்களையும் பாக்களையுந் தங்கள் கொள்கைக்கிணங்க மாற்றிப் புரட்டி, பெரும்புலவருஞ் சிவானுபூதிமான்களும் வேறு சாதியரும் வேறு சமயத்தருமாயிருக்க அவர்களைத் தஞ்சாதியருந் தஞ்சமயத்தருமெனக்கதை கற்பித்து, இக்கதைக ளுண்மையன்றென்று மறுப்பின் இவை கலைமகளாருட்டிறத்தாற் சொன்னவையாதலால் மறுப்பவரைச்சபித்து மாட்டுவேமெனத் தண்டபாணியாகி, கல்வியறிவற்ற வாடவருங் கற்புநிலைதிரிந்த பெண்டிருங் கொண்டாடிப் பொருள்கொட்ட

அன்னவிற்பரமனருணையாலே
 யருத்தியொடுந்தொட்டுவிட்ட குறையினாலே
யென்றுமழியாச்சீர்பெற்றிரும்பு
 தெத்தனையோகாட்டியினிதிருந்தார்மேலோ
ரின்னாளிற்கல்விசிலகற்றலோடு
 மெல்லாமும்வல்லார்போலிமைத்துப்பாடி
முன்னாளின்மேலோரேயாமென்றோதி
 மூடர்வியக்கக்காண்டருடிப்பர்தாமே.

என்னுந் தனியன் கருத்தின்படி முன்னாளிலிருந்த நக்கீரதேவர் பொய்யாமொழிப்புலவர் அருணகிரிநாதர்முதலிய மேலோரே யாமெனமொழிந்து ஆக்கியோர் பெயரறியக்கூடாத நூல்களையு முரைகளையுந் தாங்களே யாக்கியோரெனவெழுதி யச்சிட்டு; ஆக்கியோர் பெயருள்ள நூல்களையு முரைகளையும் அவ்வாக்கியோரெமது குலமேயெனச் சாதித்து, இச்சாதனைமுதலியநிலைபெறுமாறு அந்நூல்களைத்தங்கள்கருத்துக் கிணங்கவெழுதிப்பழைமையாக்கிச் சென்னைக் கலாசாலையி லமைத்துத்திரியும் அவைதிகப்புல்லர் மெச்சச்செய்வதில் இப்புன்பன்னிப் புலவர்பெற்ற புனிதமென்னை? அந்தோ; பதியிலார் குலமென்பது பரத்தையர் குலமெனப் படிப்புணர்வற்ற பாமரருக்கும் வெளியாமேல், உருத்திர கணிகைமாராம் பதியிலார் குலமெ

ன்றதனால் சிவாகமவிதிப்படி நித்தியகன்னியா விரதமேற்ற உருத்திரக
ணிகையர் அவ்விரதத்தினின்றும் பிறழ்ந்து மணவினையின்றி யொருவனைக்
கணவனாகக்கொண்டு சிவாலயங்களிற் றொண்டுசெய்து மகளிர்குலமென்
பது முன்னையோர் கருத்துக்கு மனுபவத்திற்கு மிசைந்தபடியன்றோ?
இதனைவிடத் தம்முன்னையோர் கருத்துக்கு மனுபவத்திற்கு மிசைந்தபடி
யன்றோ? இதனைவிடுத் தம்முன்னையோரினு முற்றுமுணர்ந்தவர்போல்
தான் வடமொழியினுந் தென்மொழியினும் வல்லவரென யாவருமதித்துத்
தனது புன்றலையிலவர்கள் புரீடமூத்திர புரோக்ஷணம் பொற்புறச்செய்து
புகழுமாறு, இக்காலென்செயினுங் கேள்வியற்றகுலத்தர் கைக்கோளர்தா
னென்று கருதிக்கலன்கழிந்த மகளிருங் கைகொட்டி நகைக்கும்படி தன
து கையில் வந்தபடிக்கெல்லாங் கனமோடெழுதிவிட்டனர். அதற்கு
மறுப்பு "பள்ளிக்குப்பட்டாற்றெரியும் நண்டுக்குச்சுட்டாற்றெரியும்" என்
பதை யோசித்துச் சில வரைந்தனம். இப்புன்பள்ளிப் புலவர்கதை யிம்ம
ட்டில் நிறுத்தி, இனி முன்விடுத்த கதையையெடுத்து விதிப்படிமுடிப்பாம்

அருண்மொழித்தேவர் "உருத்திரகணிகை மாரம்பதியிலார்குலம்"
என்றதற்குப் (பதியிலார்—மற்றொரு நாயகனையு மில்லாராகிய, உருத்திர
கணிகைமாராம் குலம்—நித்திய கன்னியராகும் குலம்.) எனப் பதம்பிரித்
துப் பொருள்கூறி, நித்தியகன்னியர் வைதிககுலத்தரா யிருக்கவேண்
டுதலின் அவ்வைதிககுலம் பலவுளொருகுலமெனக்கொள்ளலாகாதே யெ
னின், எமது கொள்கையு மிதுவே: ஆனால் "சேற்றிற்பிறந்த செங்கழுநீர்"
என்பதுபோல் முதலில் "கதிர்மணிபிறந்ததென்ன" என வடைகொடுத்த
மையானும், வைதிககுலம் பலவாதலி னவற்றி லின்னகுலமெனக் குறி
யாமையானும், எம்முன்னையோ ரொருயர்குலத்தவனை மணவினையின்
றிய கணவனாகக்கொண்டு சிவபூசாகாலத்தில் சுத்த நிருத்தஞ்செய்யு மகளி
ரெனப் பொருள்படுத்தலானும், தனியே பதியிலாரென்போர் பரத்தைய
ரென வெளியாதலானும், உருத்திர கணிகையர்க் கிப்பரத்தையர் தன்மை
நாவலூர் நம்பிகள் காலத்திற்கு முன்னரே யுண்டாயிருந்தமை "கதிர்மணி
பிறந்ததென்ன" என்பதினால் விளங்குதலானும் எமது கொள்கைக்கிட
மின்று, என்செய்வாம்? இவ்வா றுருத்திரகணிகையர் பதியிலாராகிய பர
த்தையரைப்போல் எப்போது தமதொழுக்க நிலையினின்று மாறினார்க
ளோ—அப்போதவர்களை

முன்னமேயொருநாள்வடதிசைக்கிறையன்முழுமணிக்கங்கைநீர்த்துகிரவ
னின்னிலத்திழிக்தவிக்கிரனையாளுண்மையின்முருகவேணிகர்வான்
மன்னவர்நிறைந்தமகுடகோடிகளின்வயிரநாயகங்களாற்றேய்ந்த
பொன்னவிர்கழலான்றருமமுங்கழலான்புகழ்பெயர்பிரதத்தனென்பான்,

அரும்பவிழ்மலர்கொண்டருச்சனைபுரியவருணைநாயகர்திருக்கோயில்
விரும்பியுட்புகுந்துபணியுமவ்விடத்தில்விடத்தினுங்கொடியகூர்விழிபா
ளிரும்பையுமுருக்குமிசையினளொருத்தியிலங்கிழையாருடனொருபால்
கரும்பெனுமொழியாற்பாடுதல்கேட்டான் கண்டனன்வளைத்தவேள்கரும் [பை.

என்றபடி அளவற்ற புகழோடுங்கூடிய காசிராசன் கண்டு மோகித்தானன்றோ? ஆனலவ னவளைக்கண்டு மோகித்ததில் என்னபிழை யுண்டாகிய தெனில், அவ்வுத்திரகணிகையராவார் எத்தகைய வசுத்தராய்ப் பிறழினும் அவர்கள் சிவபிரானுடைய மங்கிலியதாரணம் பெற்றுச் சிவசொத்துக்களி லொன்றாயிருப்பவர்களாதலால் "என்னைமோகமதாய்த்தனதுநாட்டினிற் கொண்டேகுவானினைந்தனனதற்கு,முன்னமேகுரங்குமுகமதாயிருந்தான் முறுவலாயினதேவர்முகமும்" என்றபடி யவளைக்கண்டு காமவயத்தால் மோகித்ததோ டொழியாது தனது நாட்டினிற் கொண்டுபோகவு நினைத் தலுந் தனது பரிசனர் கண்டு நகைக்கும்படியாகக் குரங்குமுகம் பெற்றனன். பின்னர்

மந்திரக்கிழவரசனைவினவிமன்னவனினைத்தவாறதனால்
வந்தவித்துயரந்தவிர்ந்திடமலைமேன்மருந்தினைப்பணியெனவனுஞ்
சிந்துரக்குவடுங்கனகவாம்பரியுஞ்செழுமணிச்சிவிகையுந்தேருஞ்
சந்தனமணிந்ததனத்தினர்பலருந்தமணியக்கோயின்முன்விடுத்தான்.

பன்னருமிந்தப்பூசனைபுரிந்தான்பரமனுமவற்கருள்புரிந்தான் [ன்
இன்னரமொழியாள்விருப்பினலடைந்தகிலேசவானரமுகமொழிந்தா
நன்னிறமுகம்பெற்றிறையுநாடடைந்தானதலாலரன்பொருட்கவர
வுன்னியபாவம்பதின்மடங்கரும்பொனுதவினுற்றவிரும்

என்றபடி தனது மந்திராலோசனையால் பல யானைகள் குதிரைகள் சிவிகைகள் தேர்கள் முதலியவற்றோடு தான் கொண்டுபோக நினைந்த ஒருருத்திர கணிகைக்கு நேராய்த் தனது மரபிற் பெருகிய பல கன்னியரையும் உருத்திரார்ப்பணஞ்செய்து தனது சுயமுகம்பெற்று நாடுபோய்ச்சேர்ந்தான், ஆதலால் சிவ பொருளைத் தம்பொருளாக்க நினைந்ததினலுண்டான பாவத்தை அப்பொருளுக்குப் பதின்மடங்கதிகமான பொருள்களைக்கொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனில், அதனைக் கைக்கொண்டோர் பாவத்தைப்பற்றிக் கருதவும்படுமோ? பரிகாரங்களுமுளவோ? இல்லை: ஆதலால் -உருத்திரகணிகையர் தமதொழுக்கமாறி யசுத்தராயினும் சிவபிரானுடைய யாவராலு மிச்சிக்கப்படாத நின்மாலியப் பொருள்களு

ளொன்றானவராதலால், அவர்கள்பா லசுத்தங்கருதலும் அவர்களைக் கைக்கொள்ள நினைத்தலுங் கூடாது. உயர்குலத்தானாகிய வொருவன், கால வேறுபாட்டால் இழிகுலத்தான் றொழிலைச் செய்யினும், அத்தொழிலினா லவன் குலங் கெடுவதுண்டோ?

தருக்குறும்வனப்பிற்பிறர்க்குரியவரைத்தவ்வையிற்றங்கையிற்காண்க
வுருத்திரகணிகைமகளிரைத்தாயினுன்னுகவைணவமடவா
ரருப்பிளங்கொங்கைத்தாதிகண்மாட்டுமன்னதேயாகவிற்புணர்ச்சி
விருப்பினையவர்பான்மறப்பினுமெண்ணலோம்புகநன்னெறிவிழைவார்.

என்னுங் காஞ்சிப்புராணத் திருவிருத்தத்தையுங் கண்டுய்க.

ஆனால் சிவாலயங்களி லிக்கால் வைதிககுலத் தாசிகளெனவும் அவைதிககுலத் தாசிகளெனவு முள்ளவர்களில் வைதிககுலத்தாசிகள் எங்கும் பெருங்கூட்டத்தினராயும் ஏனையகுலத்தாசிகள் சிறுகூட்டத்தினராயு மிருப்பதற்குக் காரணமென்னையெனில், பூர்வமோர் சோழராசன் முதலிய தமிழ்வேந்தர் மூவருந் தம்முன்னோர்களாலுந் தம்மாலும் பல விடங்களிற் பிரதிட்டை செய்துஞ் சீரணோத்தாரணஞ் செய்துமுள சிவாலயங்கட்கு[illegible] தேவாலயங்கட்கும் பரிபாலன கர்த்தரையேற்படுத்தவேண்டித் தொண்டைநாட்டி லொன்றுகூடித் தமிழ்த்தேய மெங்குமுள பலவருணத்துள்ளுங் கல்வியறி வாற்றல்களிற் சிறந்த கனவான்கள் யாருமங்ஙனம் வருவதாக ஆங்காங்கு முரசறைவித்தனர். அதையுணர்ந்தபலகுலக்கனவான்களெல்லாந் தொண்டைநாட்டின்கண் வந்துசேர்ந்தனர். அப்போது மூவேந்தரு மந்திராலோசனைச் சபைக்குட்சென்று ஒருவரோடொருவராலோசிக்கையில் அம்மூவருட்டலைவனான சோழராசன் மற்றிருவரையுநோக்கி, தொன்றுதொட்டு சூரியவம்சத்தரு மனுகுலத்தவருமான எங்கள் முன்னோர்களோடு சம்பந்தப்பட்டு இராஜகாரியங்களினு மந்திராலோசனைகளினுஞ் சகாயராகி அவ்வக்காலங்களிற் செய்துள்ள தேவாலயப்பிரதிட்டை தேவாலய சீரணோத்தாரணமுதலியகாரியங்களைக் கூடவேயிருந்து நடாத்தி முடித்து எங்கட்கெல்லா மிம்மையிற் பெருங்கீர்த்தியு மறுமையிற் பேரின்ப வாழ்வு முண்டாதற்கேதுவான புண்ணியசீலர்கள் செங்குந்தவீர சிகாமணிகளேயாம். இவர்களே பூர்வந்தொடங்கி நாளதுசாறும் யாங்கள் செய்யத்தொடங்குங் காரியங்கட்கெல்லாம் வழிகாட்டிகள். ஆதலா லெங்கண் முன்னோர்களாலு மென்னாலும் பிரதிட்டை செய்தும் புதுக்கியுமுள்ள தேவாலயங்களையெல்லாம் பரிபாலனஞ்செய்து வருங்காரியத்தை அவர்களுக்கே கொடுப்பேன். உங்கள் முன்னோர்களாலு முங்களாலும் பிரதிட்டைசெய்தும் புதுக்கியுமுள்ள தேவாலய பரிபாலனத்தை உங்கட்கிஷ்டமான வருணத்தவர்க்குக் கொடுத்துவிடலாமென்றனன். அதற்கவ்விரு

வருஞ் சம்மதித்துச் சோழராசனோடு கொலுச்சபைக்கண்வர, பின் மூவேந்தருந் தங்கள் மந்திராலோசனைப்பிரகார மவ்வவர்களையழைத்து அவ்வத் தேவஸ்தானவதிகாரங்களைக் கொடுக்கவேண்டிய முறைமைப்படி கொடுத்தார்கள். அவ்வதிகாரங்களைப் பெற்றுமீண்ட பல வருணத்தரும் ஒருவரையொருவர் கலவாது தத்தமிடங்களிற்சென்று, தேவாலயகாரிய நடத்தற்கு வேண்டும் பரிசனர்களைத் தத்தங்குலத்திலேயே வகுத்துப் பரிபாலனஞ்செய்து வருவதானார்கள். இப்படி நடாத்திவருபவருள் "செங்குந்த மரபினர்க்குப் பாண்டியராசன் சேரராசன் தலங்களி னெண்ணிலும் பதின்மடங் கெண்ணுக்கு மேலான தலங்கள் சோழராசனாற் கொடுக்கப்பட்டுள்ளனவாதலால் அத்தலங்களுக்கெல்லாம் ஆங்காங்கவர்கள் தங்கள் குலத்திலேயே பரிசனரை நிருமித்துப் பரிபாலனஞ்செய்யப் புக்கியபோது அவர்கள் குலத்தினுக்குரிய தேவகணிகையரும் அத்தேவகணிகையர் வழியாய்வந்த குடும்பத்தினரும் ஏனைய ரெண்ணினும் பதின்மடங்கதிகமா"யிருக்குமன்றோ? அல்லாமலுஞ் செங்குந்தராயினோர் தங்கள் தேவதாசிகள் வருப்பிலுதித்த பிள்ளைகளை[illegible]ட் சங்கரவினத்தாக்கி, அவர்களெவ்வளவு தனதான்ய சம்பத்துகளையுடைய பிள்ளைகளாயும் எவ்வளவு நற்குண நற்செய்கைகளையுடைய[illegible]ண்டிராயு மிருப்பினுந் தம்முளவர்களை யொப்பச்சேர்த்து கலந்துகொள்ளாது தனியே விடுத்தி[illegible]க்தலால், அப்பெருங்கூட்டங் கரைவதெப்படி? ஏனைய மரபினரோவென்றால், தங்கள் தாசிகட்குண்டான பிள்ளைகளையும் பெண்டிரையும் அவ்வவர்களறிவாற்றலாதிய குணங்களை நாடித்த[illegible]மோடொப்பச் சேர்த்துக் கலந்துகொள்கின்றனர். இதனாற்றான் கைக்கோளர் தாசிகள் ஏனையர் தாசிகளையொப்பச் சிறுகூட்டமாயிலர். இவ்விகற்பத்தை யவ்வவற்றின் நுழைந்து நோக்கின் தெள்ளின்விளங்கும் இத்தகையகலப்பு கைக்கோளரில், சாதிசமயாசாரங்கடந்து தம்முன் சமானாதிக்கமற்று (வைதிகரான முதன் மூவருணத்தரோடு அவைதிகரான சூத்திரரையொப்ப) நெல்லும் புல்லும் போன்றிருந்து மெல்லமெல்லத் தலைமுறையேற்றத்தாற் கலக்க வெதிர்நோக்கி யிருப்பவருள்ளு மிருத்தலரிது. ஓர்கா லூழின்வசத்தாலுண்டாயின் மற்றைய மரபினருள் ஆயிரத்துக் கிம்மரபினருள் ஒன்றரிது. மேலுங் கைக்கோளரென்போர் எத்தகைய தொழிலுட் பிரவேசிக்கினும் ஏனைய மரபினரைப்போல் அந்தரங்கமாய்த் தனித்தனியேசென்று செய்துமுடித்துக்கொள்ளு மியல்பின்றித் தம்மினத்தவர் பலருடன் பகிரங்கமாய்ச்சென்று செய்துமுடித்துக்கொள்ளு மியல்பினராகலின் அவ்வருவித்தகைய கலப்பும், கொலை-குடி-பொய்-போர்-களவு-கலகமுதலானவை நேரின் உடனே வெளியரங்கமாகி அவர்கள் உசிக்கு நாடெங்கும் பரவலின்றி மறைந்துவிடலும் ஒருக்காலுமில்லை

பென்பதின்றுங்காணலாம். இதுபற்றியே கைக்கோளருடைய தாசிகள் தம்முட்டாமே மேம்பாடடையுமாறு

முத்தமிழ்வேந்தருமுன்னவன்கோயின்முறைகளைத்தங்
கைத்தலந்தந்தவருஞான்றயலார்க்கொருகாரியமும்
வைத்தறகாதெனவாண்பெண்ணடங்கலும்வாங்கிச்செய்தே
செத்திறவாச்சிறப்பெய்தினின்றார்களிச்செங்குந்தரே.

என்னுஞ் செய்யுளின் கருத்துக்கிணங்கத் தாமும் சில தேவாலயங்களைக் கைப்பற்றிப் பரிபாலனஞ்செய்து வருவதானார்கள். இவ்வாறெங்கும் பலுகிப்பெருமைபெறுந் தகையினர், எவ்வாறு மற்றையரைப்போலச் சிறுகூட்டத்தினராய்க் குன்றிச் சிதைவர்?

அன்றியுந் தேவகணிகையர் யாருந் தங்கட்குரிய ஒழுங்க நிலைகளிற் றவறு திருக்கின், அவர்களே யந்நிலைமைபெற விடுத்த மரபினர்க்கெல்லாம் இம்மையிற் பெரும்பு[illegible]ியப்பேறுங் கிடைக்குமன்றோ? அத்தேவதாசியரு மூலலிங்க னுள்ளவரையில் யாவராலு மதித்துத் துதிக்கப்பட்டு, மறு[illegible]ற் சாலோக சாமீப பதங்களை யடைவார்களே: அல்லது மணவினையின்றி யோருயர்குலக் கணவனையடைந்து கற்புநிலை கலையாது கடவுட் [illegible]டாண்டினைச் செய்திருக்கினும், ஒருவகையால் நற்கதியினைப்பெறலாமே: இவ்விரண்டு நிலைமைகளையும் விடுத்து வரைவின் மகளிரைப்போலாகிக் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பைப்போல் எங்கனும் யாங்களின்னகுலத் தாசிகளின்னகுலத் தாசிகளெனச் சொல்லிக்கொண்டு ஏனவ்வக் குலத்தின் பெருமையைக் கெடுக்கின்றார்கள்? அந்தோ! இன்னகுலத் தாசிகள் யாங்களெனப் பலகாற் சொல்லித் திரியினும் பழியில்லையே: அன்னியரென்றப லதை வன்னியரெனமாற்றி வழங்கும் பள்ளியராதிய சங்கரவினத்தரெல்லாந் தாங்கள் மேன்மையடைய வைதிகராகிய வேதியராதியோரிடத்தும் ஒவ்வோர் குற்றத்தைச்சொல்லித் திரிவது போன்றும், கள்ளர் கபடர் பொய்யர் புரட்டர் முதலிய கயவர்களெல்லாந் தங்கள் பல்லைப மறைக்கச் சற்குணசீலரா யிருப்போரிடத்தும் ஒவ்வோர் தீமையிருப்பதாகக்கூறிப்பழிப்பதுபோன்றும், கடிமணஞ்செய்த கணவனைவஞ்சித்துக் கள்ளப்புருடரோடுங்கூடிக் கலவிசெய்யும் வியபிசாரிகளெல்லாந் தங்கள் நடக்கை நலமாகக் கற்புடைப்பெண்டிர்மாட்டுங் கனத்த பிழைகளைக்கூறித் திருந்தியடைதல்போன்றும், காற்கல்வி யரைக்கல்வி கற்றலோடு முழுக்கல்வியாளரென வெளிப்பட்டு அட்டாவதானி முத்தமிழ்க்கவி சகலகலாபீடம் செந்தமிழ்ரத்னாகர முதலாகிய சிறப்புப் பெயர்களை ஒருவர்தராமலே வகிக்கும் பதிதர்களெல்லாந் தாங்கள் சிறப்ப

டையங் கசடறக்கற்ற வித்துவான்களிடத்தும் ஒவ்வோர் குறைசொல்லிக் கொண்டு மகிழ்வதுபோன்றும், வேசிகளிடத்தும் விபசாரிகளிடத்து முண்டாகித் தொண்டமண்டல வேளாளர் கார்காத்த வேளாளர் சோழிய வேளாளர் முதலிய உயர்குலப் பெயர்களை வகித்துத்திரியுங் கீழ்மக்களெல்லாம்தாங்கள் மேன்மக்களாக அவ்வுயர்குலத்தவரிடத்திலேயே ஒவ்வோர் துர்நடத்தைகளைக்காட்டி நொடிப்பதுபோன்றும், எவ்வகைப்பிரமாணத்தாலும் பதித்துவமென்பதின்றிப் பசுத்துவமேயாயுள்ள விண்டுவாதிய தேவர்களை வழிபடும் வைணவாதிய புறச்சமயிகளெல்லாந் தங்கள்சமயவிழுக்கு மறையச் சைவமாதிய சற்சமயங்களிடத்தும் ஒவ்வோர்தாழ்வுகூறித்தூஷிப்பதுபோன்றும், அத்தேவதாசிகள்யாரும் வீணே தேவமாதுகெலியதாரணராய் தமதுநலத்தை விலைகொடுப்பார் யார்க்கும் விற்பதல்லது அதற்காவாராகாதாரென்னும் வரைவிலாத மகளிரைப்போலப் பாவவேசிகளாகித்தம்மையிச்சித்துக் கலவிசெய்யவரும் புருடர்களிடத்தில்தம்மைமதித்துமயக்கிப்பற்பலபொருளை யிடைவிடாதளித் தாதரிக்குமாறு அவர்கள் மாதாபிதா மனைமக்கள் முதலிய சுற்றத்தினரிடத்தெல்லாம் ஒவ்வோரந்தரங்கக் குற்றங்களிருப்பனவாகக்கூறி அவர்களினும் பகிரங்கமாகிய யாங்களே எல்லாவிதத்தினு மேலானவர்களென நிச்சயிக்கச்செய்து பல பெருங்குடும்பங்களையெல்லா மழிக்கின்றார்களே: இத்தகைய பாவிகளைத் தேவாலயங்களில் பற்றறவொழித்துப் பூர்வமுத்தமக்குலத்தர் தமது பெண்களுக்குக் கல்வி முதலியன பயிற்றிக் கன்னிகையாங்கால் கடிமண நேருமவரையில் இருடியர் தொண்டுசெய்து நற்குண நற்செய்கைக ளடையுமாறு கன்னிமாடங்கட்டி விடுத்திருந்ததுபோல் இப்பவுமவ் வுத்தமகுலப் பெண்டிர்க்கு அக்கல்வி முதலியவற்றோடு ஆடல்பாடல் முதலியன கற்பித்துப் பூப்பு நேருமவரையில் தேவாலயத்தொண்டுக்கு விடப்படின், அதனா லப்பெண்கள் நற்குண நற்செய்கைகளை வாய்ந்து நல்ல கணவனைக்கூடி மணஞ்செய்யப்பெற்றுக் கற்புநிலையிற் கலங்காது விற்பனசீலராய் நிற்பரென்பதற்கும் அப்பெண்களுக்கித்த மரபினர்க்குப் பெருங்கீர்த்தி கிடைக்குமென்பதற்குஞ் சந்தேகமென்னை? இத்தகைய வேற்பாடேக்கரல் நடக்குமோ அக்காலெல்லாத்தேவாலயங்களு மெழில்பெற்றுச் சிறக்குமே.

இம்மட்டில் திருத்தொண்டர் புராணத்திற்கு முதனூலாகிய நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதியில் "துணையுமளவுமில்லாதவன்" என்னுஞ் செய்யுளிற்கண்ட கமலினியாரவதாரமாகிய பரவைநாய்ச்சியாருடைய மரபினரென்னும் உருத்திரகணிகையர் தரத்தைப்பற்றி விவகரித்ததை நிறுத்தி, இனி யிவ்வுருத்திரகணிகையரில் நின்றும் வேறாய்த் தவப்பெண்ணென நின்ற அனிந்திதையா ரவதாரமாகிய சங்கிலிநாய்ச்சியார் தரத்தைப்பற்றி

அத்திருவக்தாதியில் "தகும்மணக்காதலன்" எனவுள்ள செய்யுளின் கருத்தைப்பற்றிச் சில விவகரிப்பாம். அஃது-தங்குலத்திற்குத்தக்க மணமகனிறக்கஅதனால் மங்கல நாணிழந்து வைதவ்வியமடைந்த சங்கிலிநாய்ச்சியாரைத்தப்பிடத்துத் தித்தமணவிருப்பால் நாவலூர்நம்பிகள் சிவபெருமானுடைய திருவடிகளைவணங்கி இவ்வுலகினர் நகுதற்குரிய புல்லொழுக்கத்தையே நல்லொழுக்கமாகக்கொண்டு திருமணஞ்செய்தனரென்னும் கருத்தைக் குறித்திருக்கின்றது. இக்கருத்தை யூகிக்குமிடத்துச் சிவச்செயலால்மங்கலநாணிழந்து வைதவ்வியமடைந்த சங்கிலிநாய்ச்சியாருக் கூழ்துண்டலும் யானினிச் சிவபிரானுக் கடியளாய்த் தவப்பெண்டிர் அல்லது நித்திய கன்னியரென அவன் சினகரஞ் சேர்ந்திருத்தலே துணிபெனக்கொண்டு சென்றிருப்ப, அங்ஙன மவ்வூழ்துண்டவந்த நாவலூர்நம்பிக ளவரைக் கண்டு மணந்துகொண்டன ரென்பதேயாம். இம்மணத்தை நாவலூர் நம்பிகள் "இவ்வியனுலகநகும்வழக்கு" என்றதென்னையெனின், தாய்தந்தையர் தம்மிளங்கைம்மைப் பேதையர்க்குச் சுருதிமிருதிகளின் வழக்கால் வேறோர் மணமகனைக்குறித்து மறுமணஞ்செய்விக்க விழைவரேல் மங்கலநாணொடாரென்பதூஉம், அம்மங்கலநாணகற்றி வேறோர் மங்கலநாண்புதுக்கிப் புனைதல் விதியன்றென்பதூஉங் கொண்டென்க. ஆயினிவ் விதியின் படிக்கேனு மிவ்விதியைக் கடந்தேனு மறுமணஞ்செய்யப்பெற்ற கன்னிகை யென்னென் றழைக்கப்படுகிறாளெனில், "புனர்பூ" என்றழைக்கப் படுகிறாள். ஆயினிதற்குச் சுருதிமிருதிகளிலுள்ள பிரமாணங்கள் யாவெனில், "தஸ்மாதேகஸ்யபஹவீ-ஜாயாபவந்தியநந்தரம், நைகஸ்யைபஹவ ஸஹ-பதயயிதிஹிஸ்ருதிஹி. 1." இதன்பொருள்-ஒரு புருடனுக் கனேகமனைவிய ருண்டாயிருக்கின்றனர். ஒரு பெண்ணுக்குச் சமகாலத்தில் அநேகபுருட ருண்டாயிருப்பதில்லை. என்பது சுருதிவாக்கியப்பிரமாணம். "கிரஹணம்ஸஹஸப்தஸ்ய-பர்யாயாத்பஹூவோத்தவா, ஸ்யுரிதிபிரதிபத்யர்த்தம்-ப்ராஜாபத்யவசஸ்ததாம். 2." இதன்பொருள்-ஒருவனுக்குப்பின் மற்றொருவனுக அநேகபதிக ளுண்டாவரென்னுங் கருத்துதயமாதற்கே (ஸஹ) சப்தம் பிரயோகிக்கப்பட்டது. என்பதச்சுருதியிற் பிரஜாபத்ய வாக்கியப்பிரமாணம்.

ஸ்வாசேதக்ஷதயோனிஸ்யா-த்கதபிரத்யாகதாபிவா
பௌனர்ப்பவேனபர்த்ராஸா-புனஸ்ஸம்ஸ்காரமர்ஹதி-3.

இதன்பொருள் வைதவ்வியமடைந்த பெண் பூப்பாகாதவளாயிருக்கின் மற்றொருபதியை மணஞ்செய்து கொள்ளலாம். என்பது மநுமிருதி வாக்கியப்பிரமாணம்

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே-க்ளீபே ச பதிதே பதௌ
பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம்-பதிரந்யோ விதீயதே-4.

இதன்பொருள் கணவன் தேசாந்திரியாய் மறையினும், மரணமடையினும் சந்நியாசியாகிவிடினும், நபுஞ்சகனாயிருப்பினும், சாதிப்பிரஷ்டனாய்க்கெடினும், இவ்வைந்தாபத்துக்களினும் பெண்களுக்குப் புனர்விவாகஞ்செய்யலாம். என்பது பராசரிய மிருதி வாக்கியப்பிரமாணம்.-

பாணிக்ரஹே க்ருதே கன்யா - கேவலம் மந்த்ரஸம்ஸ்க்ருதா
ஸா சேதக்ஷதயோனிஸ்யா - த்புனஸ்ஸம்ஸ்காரமர்ஹதி-5.

இதன்பொருள் மந்திரத்தோடு விவாகமாத்திரஞ் செய்துகொண்ட பெண்ணுக்கு வைதவ்வியமுண்டானபோது அவள் பிரவிடையாகாதவளாயிருந்தால் அவளுக்குப் புனர்விவாகஞ்செய்யலாம், என்பது வாசிட்ட மிருதி வாக்கியப்பிரமாணம்.

தேயாந்யத்ரவிவாஹிதாபி சபலாத்
யாவித்தயோநிர்னசேத்-6.

இதன்பொருள் விவாகமானவளானாலும் புருஷசங்கமறியாதவளாகில் அவளைப் பலவந்தமாக மற்றொருவனுக்கு மறுமணஞ் செய்விக்கலாம். என்பது மார்த்தாண்ட மிருதிவாக்கியப்பிரமாணம்

உத்வாஹிதாபியாகன்யா நஸ்யாத்ஸம்பிராப்தமைதுனா
புனஸ்ஸம்ஸ்காரமர்ஹேத் - யதாகன்யாததைவஸா-7.

இதன்பொருள் விவாகஞ் செய்துகொண்டவளானாலும் புருஷசம்போகமறியாதவளாகில் கன்னிகைக்கு விவாகஞ்செய்வதுபோலவே அவளுக்குங் கன்னிகாதானச்சடங்கோடு விவாகஞ் செய்யலாம். என்பது நாரதமிருதி வாக்கியப்பிரமாணம். இவைகளைப்போ[illegible]லின்னு மனேகப்பிரமாணங்களுள. ஆனால் முன்னர் (தாய்தந்தையர் தம்மினங்கைம்மைப் பேதையர்க்குச் சுருதி மிருதிகளின் வ[illegible]க்கால் வேறோர் மணமகளைக்குறித்து மறுமணஞ் செய்விக்க விழைவரேல் மங்கலநாணொடார்) எனவு மெடுக்கி னிதனையே நாரையூர் நம்பிகள் "இவ்வியனுலகநகும்வழக்[illegible]" என்றதெனவுங் கூறியதற்குப் பிரமாண மு[illegible]டோவெனில், மேற்கூ[illegible]ய சுருதிமிருதிகளுக்கடுத்த

உத்திஷ்டநாரிஜிவ்லோகம் - கதாஸோரஸ்யமேத ஏஹி
ஹஸ்தக்ராஹஸ்ய திதிஷோ: - பத்யுர்ஜாயாத்வமாபஹூ-8.

என்னு மிம்மந்திரத்தையே பிரமாணமாகவைத்து அம்மங்கலநாணைக் க[illegible]யாது நிறுத்தப்படும். இம்மந்திரத்தின் கருத்தென்னையெனின், (இறந்தவனருகே யேன் விழுந்துகிடக்கிறாய்? விவாகஞ் செய்துகொள்ள வெழுந்

திரு, மறுமணஞ் செய்துகொள்பவனுக்குப் பாரியாவாய்) என்பதேயாம். ஆறாமிம் மந்திரத்தில் "மறுமணஞ் செய்துகொள்பவனுக்குப் பாரியாவாய்" என்றதனால் கணவனிழந்த பெண்ணைக் களத்திரமிழந்த புருடனுக்கே மறுமணஞ் செய்விக்க வேண்டுமோவெனில், இஃதது கூடா விஷயத்தில் ஊடாவிவாக மீமாம்சக்கருத்தேயன்றி வேறன்று. ஆயினித்தகைய விவாகமிப்பரதகண்டத்துள் எங்கு யார் நடத்தினார்கள்? நடத்தி யிருந்தால் வழக்கத்திலிராதோவெனில், பெண்களுக்கு வாலை-தருணி-பிரவிடை-விருத்தை என வகுத்திருக்கின்ற பருவநான்கனுள் ஐந்துமுதல் பதினொரு வயதளவும் வாலைப்பருவமாம். இவ்வாலைப்பருவத்தில் ஐந்துமுத லேழளவும் பேதையரெனவும் எட்டுமுதல் நான்களவும் பெதும்பையரெனவுங் கூறுப இப்பெதும்பைப்பருவத்தின் முடிவான பதினொருவயதளவிற் கடிமணநிறைவேறப்பெற்ற கன்னிகைகளாயிருப்பினும் அவர்கள் தமது கணவருடன் கூடி இன்பநலம்பெறத்தக்கோ ரல்லாமையானும், தங்கணவர்பால் நடந்துகொள்ள வேண்டிய கடப்பாடுகள் இவையிவையென்றறியாதவராகையானும், மகளிர்க்குணங்களாய நாணம் - மடம் - அச்சம்- பயிர்ப்பு - என்னும் நான்கனுள் நாணமென்னு முதற்குணத்தினையே சற்றும் வகியாச் செயலினரா யிருத்தலினானும், உண்டி யுடை முதலியனவு முற்றூராலாய்ந்திடக் கொள்ளுமேல யன்றித் தங்கள் சுயேச்சையா லவற்றைக் கொள்ளற்குரியா ராகாமையானும், "பெண்களுக் கெட்டுவயதுக்குமேல் பதினொருவயதுக்குள்ளாக விவாகஞ் செய்துமுடித்த லுத்தமம் அதற்குமேல் முடித்தல் யாவு மத்திமாதிகளிற் சேர்ந்தன" என்னும் விதிகளி லவர்கட்கவ் வுத்தமவிதியைக்கொண்டு நடத்திய விவாகத்தில் ஊழின்செயலால் தருணியராகித் தங்கணவரைக்கூடிக் கலக்குமுன் கைமை நேரின் மேற்கூறிய சுருதிமிருதிகளின் கருத்தின் படிக்கும்,

முருக்கைப்பழியிசழ்க்கைம்பேதையாகறபின்மூரியரு
திருக்கமறையுமனுவுமொப்பநறவிருடியரு
முருக்கொடுரைத்தவிதியோம்பியீர்மணமுற்றமைத்த
திருக்கில்குலத்தருச்சின்றிமுற்றுதசெயவென்பவே.

எனவும், "அறிவுடையோர்கண்ணுக்கணமையாவிருக்கா, மறுமாலைமாதர்த்தைவு" எனவும், "வேலியிற்மாதவிளைநிலம்போலுமே, தாலியின்மாதவர் தவம்" எனவும், "கைக்கடுங்கனற்கஞ்சிக்கவின்மாதர், தாமுடன்றீப்புகுந்தர்" எனவும், "கற்றறிந்தாண்மக்கள்கற்பித்தகற்புநிலை, தற்கின்றிப்பேதக்கோதான்" எனவும், "பதியையிழந்தமங்கைபன்மக்கட்டோய்தல், விதியோமறுமணமோமேல்" எனவும், "சந்ததியில்லாப்பொழ்திற்றையன் மறுமாலை கொள்ள, முந்துமனுவோர்துரைத்தார்முன்". எனவும், "சங்கரச்

சாதிதமைவிருத்திசெய்வதற்கு, மூந்துகைமைகாரணமாமுன்." எனவும், "விதவையர்க்கீர்மணம் வேண்டிடிற்செய்தன், மறைவிற்புணர்தலின் மாண்பு" எனவுங் கூறிய வான்றோர் கருத்தின்படிக்கும் பூர்வ மிப்பரதகண்டத்தில் அந்தணர் முதலிய வெல்லா வருணத்தரு மறுமணஞ் செய்துமுடித்தே வந்தனர். அதனு லாடவரு ளைம்பதுவயதுக்குமேல் அவ்வுத்தம விவாகத்தினைச் செய்துகொண்டு உடனே யிறந்த பலராலும், பதினறுவயதுக்குமே லவ்வுத்தம விவாகத்தினைச் செய்துகொண்டுசின்னுவிலிறந்த சிலராலுநேர்ந்தகைமைகள்மறுமணஞ்செய்யப்பெற்று, தங்கட்குத்தருணவயதுண்டானதுமுதல் விருத்தவயதாமளவுங்கற்புநிலைகலையாது காலங்கழித்தே வந்தனர்.

இதனை யாதாரமாகக்கொண்ட சிலவாடவர் தருணவயதினராய்த் தங்கள் கணவரைக்கூடிக் கலந்திருந்து பின்னர் கைமையடைந்த பெண்டிரையும் பிரவிடை வயதினராய்ப் பல மக்கட்பேறடைந்து வைதவ்வியமடைந்த பெண்டிரையுந் தம்மிச்சையால் மறுமணஞ்செய்து கொண்டு அல்லது மறுமணஞ் செய்வித்துத் தத்தமினத்தரோடு நாணமின்றிக் கலத்தல்செய்யத்தலைப்பட்டதன்றி, அப்பெண்டிர்கள்பா லுண்டாய மக்களையும் அவ்வினத்தாருள் கொள்ளல் கொடுத்தலாதிய சம்பந்தங்களைச் செய்யத்தலைப்பட்டனர். இவ்விதிவழு வீ...லுந் தம்முள் பலவகையாலும் விரோதமும் வினையமும் வீண்போரு முண்டாதலைநோக்கிய சில மரபினர், எவ்வாற்றானுங் கைமை மண மினிக் கூடாதெனக் கைவிட்டனர். அந்தணரொழிய வேனையருட் பெரும்பாலார் பெண்களுக்கு வாலைப்பருவ முற்றமுன் செய்யும் விவாகத்தினை நடத்துவ தொழித்தனர். ஆனாலவ் வந்தணரு மேனையரு மைம்பது வயதுக்குமேல் அத்தகைய விவாகத்தினைச் செய்துகொள்ளும் வழக்கத்தை நாளது காறு மொழித்திலர். இதனு லந்தண வருணப்பெண்டிருள் பெரும்பாலாரும், மற்றைய வருணப் பெண்டிருள் சிறுபாலாரும் கைமையாகி, காமப்பற்றினைக் கடத்தற்குங் கருதிய கருமத்தை முடித்தற்குங் கூடாதவராகி வியபசாரஞ் செய்யத் தலைப்பட்டனர். என் செய்வர் பாவம்? ஆனால் முதுக்கைமை யினத்தரைச் சங்கரவினத்தரோடு கூட்டி இளங்கைமை யினத்தரைச் சக்சவினத்தரோடுஞ் சேர்த்துக் கொள்ளுதற் கென்னதடையெனில், தடையின்று: இக்கால் வருண சிரேஷ்டரெனப்படுவோருள்ளேயே பெரும்பாலோர் தமதிளங் கைமைகட்கு உருவம் - குலம் - வன்னம் - கல்வி - செல்வம் - ஒழுக்கம் முதலியவற்றிலும் பரிதானமென்னும் பொருள் வருவாயிலும் பிரதமத்திற் குறைவின்றி வாய்க்கப்பெற்ற மணமகனைப்போல் இரண்டாவதில் வாய்க்கப்பெறுதலரிதாகையால், பெண்களுக்கு மறுமணஞ்செய்த மானத்தைக்காத்து வானத்தைப்பார்த்திருப்பதினும், மாங்கிலிய வறுகூலிவாங்கி மாட்சிமைப்பட

டாட்சிபெற்றிருப்பது மிகு நலமெனக்கருதி அச்செய்கையைக் கையறவிட்டார்கள். இதனாற் சிசுவத்தியுஞ் சிசுத்துரோகமு மெங்குமாயின. எவ்வாற்றானும் பொருள்வருவாயே போதுமெனக்கருதி அப்பொருளினுஞ்சிறந்தயான்வருவாயைச் சிறிதுமதியாத மதிகேடர்க்கு என்சொல்லியென்னும்? இன்றுங் கலிங்கம் கன்னடம் கொங்குமுதலிய தேயங்களில் பல மரபினர் கணவனையிழந்த கன்னிகைகட்கு மறுமணஞ் செய்வித்து வருவதன்றி, வடதேயத்தில் (இலிங்கபல்ஜலு-இலிங்காயதரு) என்கிற வமிசத்தில் (சிரயுக்தி) என்கிற மறுமண நடந்தேறியே வருகின்றது. தென்றேயத்திராம நாதபுரத்தைச்சேர்ந்த சிலவிடங்களில் அகமடையரெனவும் வேளாளரெனவுமுள்ள சில மரபினர் சுருதிமிருதிகளிற்கூறிய விதிகளுக்கு வி[illegible]தமாகத் தருணியாகவும் பிரவிடையாகவுமிருந்து புருஷசம்பர்க்கமும் பல புத்திரப்பேறுமடைந்து கணவனையிழந்த கைம்மைகட்செல்லா மறுமணஞ் செய்துவைக்கும் வழக்கத்தில் மாறாதிருந்தனர், இதற்குடம்பாடாகாத சிலவர் சின்னாளைக்குமுன் தங்களரச நியாயசபையி லொன்றுகூடி, இனி வாலைப்ப[illegible]வப் பெண்களுக்கே சுருதிமிருதிகளின் விதிப்படி மறுமணஞ் செய்விக்கவேண்டுமென்றித் தருணிமுதலிய முதுக்கைம்மைகள் தங்கள் சுயேச்சைகொண்டாவது பரேச்சைகொண்டாவது வேறு கணவனை மணத்தல் கூடாதென்றும், ஓர்கால் யாரே[illegible]னு மிக்கட்டளையைக் கடந்து மீறி நடப்பரேல் அவர்கள் தங்கள் மரபுளோ[illegible] கொள்ளல்கொடுத்தலாதிய சம்பந்தங்களற்றுக் குலப்பிரஷ்ட ராதற்குரிய ராவரென்றும் ஒரு[illegible]ட்டம் படிக்கை செய்யப்பட்டு அதுமுதல் நாளதுகாறுங் கிரமமாய் நடந்தேறி வருகின்றது. ஆயின் கைம்மைகள் மறுகணவனை மணக்கவேண்டியது சுசாதியிலா பிறசாதியிலாவெனில், சுசாதியில் மணத்தலுத்தமம். பிறசாதியில் மணத்தல் மத்திமம், சுசாதியிலேனும் பிறசாதியிலேனும் விதிப்படி செய்யு மணவினையாலின்[illegible]க் கூடுத லதமம். ஆனாலிம்மூவகையி லுத்தமம் நிற்க, மற்ற மத்திம வதமச்செய்கையால் அக்கைம்மைகளிடத்தில் மகார்களுண்டாயின் சிறப்படைவரோவெனில்; அவர்கள் சங்கரவினத்துளொருவரா யழைக்கப்பட்டாலும் பூர்வம் சந்திரவமிசக்ஷத்திரிய குலசிரேஷ்டரான திரிதராஷ்டிர மகாராஜனும் பாண்டுபூபதியும்போல் அவ்வவர்கள் தாரதம்மியத்[illegible]க்கேற்றபடி சிறப்படைவதற்குத் [illegible]டையென்னை? ஆயின் நாவலூர் நம்பிகள் அ[illegible]வகுல சிரேஷ்டராய், திருவவதாரஞ்செய்து வைதிககுல சிரேஷ்டரான பரவையாரையேயன்[illegible] அவைதிககுல சிரேஷ்டரான சங்கிலி[illegible]ரையுந் திருமணஞ் செய்துகொண்டதிற் பழியுண்டோவெனில், அத்[illegible]மணமிரண்டுந் திருவருட்பிரேரபணையால் நடந்துளதாயினும்,

தொந்தலாகொய்யும்[illegible]ாதுகூர்விழிமையலாலே
பைந்தொடிமடவார்தம்மைப்பார்த்தலாற்கயிலைவெற்பிற்

> சுந்தரன்பட்டகாதைய றிதிரேதுணர்மென்போதா
> லந்தணர்கீழ்களாவர்கீழ்களந்தணர்களாவர்.

என்ற வான்றோர்வாக்கியஞ் சான்றாயிருத்தலையுணர்ந் தடங்குக.

இம்மட்டில் லௌவை யெம்மன்னை 'நாட்டார்கஞ்சாகுலக்காட்டார்' என்றோதிய தனியனைப்பற்றி நடாத்திவந்த சம்பாஷணையி னிரண்டாவது பிரிவினீற்றில் (ஒருவாற்றானுஞ் சேக்கிழார்சுவாமிகள் தமது மரபினராக ப்பதின்மூன்று திருத்தொண்டர்களை யமைத்தாரெனல் பொருந்தாது.) என்றும், (இனிக் கையெழுத்துப் பிரதியாய்ப் புராதனத் திருத்தொண்டர் புராணமொன்று வெளிவரின் ஈது மின்னுமுள சில பாப்புரட்டுகளும் பாடபேதங்களும் யாதாமோ வறிகிலம்.) என்றுங்கூறியதால் [illegible]த்தயை திருத்தொண்டர் புராணத்திற்கும் இக்காலச்சிட்டுவழங்கிவரும் திருத் தொண்டர் புராணத்திற்கும் வித்தியாசங்கொண்டுள்ள பாவினங்களினும், பாப்புரட்டுகளினும் பாடபேதங்களினும் சிலவற்றையெடுத் திங்ஙனமெ ய்ப்பிக்க உம்மாற் கூடுமோவெனின், அந்நான்காம்வருணத் திருத்தொண் டர் புராணத்தன்றி ஏனைய மூதன்மூவருணத் திருத்தொண்டர் புராணத் தினும் இவைகட்கு மூதனூலாகிய நம்பியாண்டார் நம்பிக ளந்தாதியினுஞ் சிலவெடுத்து மெய்ப்பிக்க ஓர் கையெழுத்துத் திருத்தொண்டர்புராணம் (சாலிவாகன சகஞ ௧௭௰௧-ல் நிகழும் விகாரிஞ தைம ௨௨ சோம வாரம் சீர்காழி-அமிர்தலிங்கதேசிகரால் எழுதி நிறைவேறிற்று) எனவதனீற்றிற் கண்டுள்ளபடி. இதற்குநூற்றுப்பதினேழாவது வருடத்திலெழு திய பிரதியாய்க் கிடைத்தமையால், அதில் சிதல்களா லாங்காங்கு சிதைந் துஞ் சிந்தியுமுள பாடல்களும் அவற்றினடிகளுந் தளைகளும்போக ஏனை யவற்றுள் மேற்கூறிய தனியனில் "இக்கம்பநெடுஞ் சுவர்போற்காட்டா தனபலகாட்டிய கொள்ளையிற்காலை வெறிக்கேட்டான் மறந்தொன்றை மாற்றிமற்றொன்றைக்கெடுத்தனனே." என்றுள்ளபடி யவ்வெண்மரோ டைவராகிய பதின்மூன்று வேளாண்குலத்தரென வுள்ள திருத்தொண்டர் தரத்தினைப்பற்றி மாத்திரம் நம்பியாண்டார் நம்பிக ளந்தாதியாகிய மூத னூலையுங்காட்டி மெய்ப்பிக்கப்புகுமிட்த்து, இளையான்குடி மாறநாயனார் புராணம் கவி-க அடி-௩-புராதனம் (நம்பும் வாய்மையின் டிருமூது நற்குற வர் தவத்தினால்) எனவும், நூதனம் (நம்புமவாய்மையினீடுசூத்திர நற்குல ஞ்செய்தவத்தினால்) எனவும், விறன்மிண்ட நாயனார் புராணம் கவி - ௬ அடி-௨-பு-ம் (அப்பொற்பதியினிடைச் சைவவ[illegible]தியோங்கவவதரித்தார்) எனவும், நூ-ம் (அப்பொற்பதியினிடை வேளாண்குலத்தை விளக்கவவ தரித்தார்) எனவும், மானக்கஞ்சாற நாயனார் புராணம் கவி-௭-அடி-க—௩ மூறைறயே பு-ம் (அப்பதியிற் புலியாளுமரசர் சேனாபதியாம்) எனவும்,

நூ - ம் "அப்பதியிற்குலப்பதியாயரசர்சேனுபதியாம்" எனவும், பு - ம்
"மெய்ப்பொருளையறிந்துணர்ந்தார் விழுமியவார்தவத்தோர்க்கு" எனவும்,
நூ - ம் "மெய்ப்பொருளையறிந்துணர்ந்தார்விழுமியவேளாண்குடிமை" எ
னவும், அரிவாட்டாயநாயனுர் புராணம் கவி - ௪ - அடி - ௪ - பு - ம் "மி
க்கசெல்வத்தர்மேதகுசீர்த்தியார்" எனவும், நூ - ம் மிக்கசெல்வத்துவே
ளாண்டலைமையார்" எனவும், திருநாவுக்கரசுநாயனுர் புராணக் கவி- ௧௫
௨௨ - அடி - ௩ - ௪ - ௨ - முறையே பு - ம் "விலக்கின்மறையொழுக்க
த்தின்மேதக்கநிலையாளர்" எனவும், நூ - ம் "விலக்கின்மனையொழுக்கத்
தின்மேதக்கநிலைவேளாண்" எனவும், பு - ம் குலத்தின்கணரும்பெருமை
க்குறுக்கையர்தங்குடிவிளங்கும்" எனவும், "நூ - ம் "குலத்தின்கண்வரும்
பெருமைக்குறுக்கையர்தங்குடிவிளங்கும்" எனவும், பு - ம் "முன்னுகவொ
த்தகுலமுதல்வர்மூதறிவுடையார்" எனவும், நூ - ம் "முன்னுகவொத்தகு
லமுதல்வேளாண்குடித்தலைவர்" எனவும், ஏயர்கோன் கலிக்காமநாயனுர்
புராணம் கவி - ௫ - அடி - ௪ - பு - ம் "பொன்னிநாடர்க்குப்புகலிடமாய
பொற்பினதால்" எனவும், நூ - ம் "பொன்னிநாட்டுவேளாண்மையிலுயர்
ந்தபொற்பினதால்" எனவும், மூர்க்கநாயனுர் புராணம் கவி - ௨ - அடி -
௪ - பு - ம் "தம்பற்றுடையநிலையாளர்தம்மிற்றலைமைசார்ந்துள்ளார்" என
வும், நூ - ம் "தம்பற்றுடையநிலைவேளாண்குலத்திற்றலைமைசார்ந்துள்
ளார்" எனவும், சாக்கியநாயனுர் புராணம் கவி - ௨ - அடி - ௧ - ௨ - பு-ம்
"மாளாதவளச்சங்கமங்கையின்மெய்த்தகவெனுநற் - கோளார்செய்தவத்துதி
த்துக்கோளில்பொருடெரிந்துணர்ந்து" எனவும், நூ - ம் "தாளாளர்திருச்
சங்கமங்கையினிற்றகவுடைய - வேளாளர்குலத்துதித்தார்மிக்கபொருடெ
ரிந்துணர்ந்து" எனவும், சத்திநாயனுர் புராணம் கவி - ௨ - அடி - ௧ - பு-ம்
"வரிஞ்சியூரினில்வாய்மையுந்தூய்மையும்" எனவும், நூ - ம் "வரிஞ்சியூரி
னில்வாய்மைவேளாண்குலம்" எனவும், வாயிலார்நாயனுர் புராணம் கவி -
௯ - அடி - ௨ - பு - ம் "தொன்மைநீடியதூயவர்நாடொறும்" எனவும், நூ - ம்
"தொன்மைநீடியசூத்திரத்தொல்குலம்" எனவும், முனையடுவார்நாயனுர்
புராணம் கவி - ௬ - அடி - ௧ - பு - ம் "விளங்கும்வண்மைமிகுமபயன்வெ
ன்றித்தானைக்கொருமுதல்வர்" எனவும், நூ - ம் "விளங்கும்வண்மைமிக்
குள்ளவேளாண்டலைமைக்குடிமுதல்வர்" எனவும், செருத்துணைநாயனுர்
புராணம் கவி - ௨ - அடி - ௧ - பு - ம் "சீரின்விளக்குமப்பதியிற்றிருந்து
மொழுக்கின்நிலைநின்ற" எனவும், நூ - ம் "சீரின்விளங்குமப்பதியிற்றிருந்
துவேளாண்குடிமுதல்வர்" எனவும், கோட்புலிநாயனுர் புராணம் கவி - ௧
அடி - ௧ - பு - ம் "நலம்பெருகுஞ்சோணுட்டுநாட்டியத்தான்குடிநீற்ற"
எனவும், நூ - ம் "நலம்பெருகுஞ்சோணுட்டுநாட்டியத்தான்குடிவேளா

ண்" எனவும் வருவனவற்றானுணர்க. இவைகட்கு முறையே நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி

இயலாவிடைச்சென்றமாதவர்க்கின்னமுதாவிதைத்த
வயலார்முளைவித்துவாரிமனையலக்கால்வறுத்துச்
செயலார்பயிர்விழுத்தீங்கறியாக்குமவன்செழுநீர்க்
கயலாரிளையான்குடியுடைமாறனென்கற்பகமே.

எனவும்,

பேசும்பெருமையவ்வாரூரனையும்பிரானவனு
மீசன்றனையும்புறகுதட்டென்றவனீசனுக்கே
நேசனெனக்குப்பிரான்மனைக்கேபுகநீடுதென்றல்
வீசும்பொழிற்றிருச்செங்குன்றமேயவிறன்மிண்டனே.

எனவும்,

கலச்சுழலைக்கன்னி[illegible]புதிய்விகமழ்குழலை
நலசெய்தவத்தவன்பஞ்சவடிக்கிவைநல்கெனலு
மலசுமெனக்கருதாதவர்கூந்தலரிந்தளித்தான்
மலைசெய்மதிற்கஞ்சைமானக்கஞ்சாறனெனும்வள்ளலே.

எனவும்,

வள்ளற்பிராற்கமுதேந்திவருவோனுகலுமிங்கே
வெள்ளச்சடையாயமுதுசெய்யாவிடிலென்றலையைத்
தள்ளத்தருமென்றுவாட்பூட்டியதடங்கையினன்கா
ணள்ளற்பழனக்கணமங்கலத்தரிவாட்டாயனே.

எனவும்,

நற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தன்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றுப்பிறப்பறவீரட்டர்பெய்கழற்கு
ளுற்றவனுற்றவிடமடையாரிடவொள்ளமுதாத்
துற்றவனூரினுவக்கரசெனுந்தூமணியே.

மணியினைமாமறைக்காட்டுமருந்தினைவண்மொழியாற்
றிணியனநீள்கதவந்திறப்பித்தனதெண்கடலிற்
பிணியனவன்கன்மிதப்பித்தசைவப்பெருநெறிக்கே
யணியனநாவுக்கரையர்பிரான்றனருந்தமிழே.

எனவும்,

கொற்றத்திறலெந்தைதந்தைதன்றந்தையெங்கூட்டமெல்லாந்
தெற்றச்சடையாய்நினதடியேந்திகழ்வன்றொண்டனே

மற்றிப்பிணிதவிர்ப்பானென்றடைவாளுருவியங்கோய்
செற்றுத்தவிர்கலிக்காமன்குடியேயர்சிர்க்குடியே.

எனவும்,

தண்டலைசூழ்திருவேற்காட்டீர்மன்னன்றகுகவற்றூற்
கொண்டவல்லாயம்வன்சூதரைவென்றமுன்கொண்டபொருள்
மூண்டநன்னீற்றனடியவர்க்கீபவன்மூர்க்கனென்பர்
நண்டலைநீர்ரொண்குடந்தையின்மேவுநற்குதனையே.

எனவும்,

[illegible]டனவாடையன்சாக்கியன்மாக்கற்றடவரையின்
மகுடனந்தாக்கக்குழைந்ததிண்டோளவனம்பர்செம்பொன்
நிசழ்தருமேனியிற்செங்கலெறிந்துசிவபுரத்துப்
புகழ்தரப்புக்கவனூர்சங்கமங்கைபுவனியிலே.

எனவும்,

திரிவில்லவர்தம்மடியரைத்தன்முல[illegible]சொன்ன
திருவில்லவரையங்காவரிவோன்றிருந்தா[illegible]வெல்லும்
வரிவில்லவன்வயற்செங்கழுநீரின்மருவு[illegible]தன்ற
றெருவில்விரைகமழுந்தென்வரிஞ்சைத்திகழ்சத்தியே.

எனவும்,

மாறுவருளரன்றன்னைமன்னவாலயத்திருத்தி
யாறுவறிவாமொளிவிளக்கேற்றியகமலராம்
வீறுமலரளித்தன்பெனுமெய்யமிர்தங்கொடுத்தான்
வீறூர்மயிலையுள்வாயிலானென்றுவிளம்புவரே.

எனவும்,

என்றுவிளம்புவர்நீரோதிபஞ்சுமீனையடுவோ
னென்றுமமருளழிக்கவர்க்காக்கூலியேற்றெறிந்து
வென்றபெருஞ்செல்வமெல்லாங்கனகன்மேருவென்னுங்
குன்றம்வளைத்தசிலையான்றமர்க்குக்கொடுத்தனனே.

எனவும்,

கழிநீள்கடனஞ்சியின்றூர்க்கிருந்தகடிமலரை
மொழிமின்புகழ்கழற்கிங்கன்றன்றேறவிமுன்மோத்தலுமே
யெழினீள்குமிழ்மலரூக்கரிந்தானென்றியப்புவராஞ்
செழுநீர்மருகனன்னாட்டமர்தஞ்சைச்செருத்துணையே.

எனவும்,

பெற்றமுமர்த்தோன்விரையாக்கலிபிழைத்தோர்தமது
சுற்றமறக்குந்தொழிற்றிருநாட்டியத்தான்குடிக்கோன்
குற்றமறக்குநங்கோட்புலிநாவற்குரிசிலருள்
பெற்றபருட்கடலென்றுலகேத்தும்பெருந்தகையே.

எனவும் வருவனவற்றாலறிக. இதுகாறு மிவ்வந்தாதிக்கு மப்புராணங்கட்குமுள்ள பாக்களினது வித்தியாசங்களைப்பற்றிக் கூறினும். இனி யிவ்விரண்டினுமுள்ள பாப்புரட்டுகளைப்பற்றியும் பாடபேதங்களைப் பற்றியும் சிலகூறுவாம். அந்தாதி கவி - 40-அடி-3-புராதனம் "பிணையுநிகர்கட்பரவை யின்பேரமைத்தோளிரண்டுந்" எனவும், நூதனம் பிணையுநிகர்த்தகட் சங்கிலிபேரமைத்தோளிரண்டும்." எனவும், கவி.- 69 - அடி-1-பு-ம் "தருமணக்காதலன் வீயவே நூல்போனசங்கிலிபால்." எனவும். நூ - ம் "தருமகட்பேசிஞேன்வீயவே நூல் போனசங்கிலிபால்." எனவும், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம் கவி - 215 - அடி - 4 - பு-ம் சிந்தைவிரும்பிமகட்பேசி விடுத்தார்சிலருஞ் சென்றிசைத்தார்" எனவும், கவி - 216 - அடி - 2 - 3 - 4 - பு - ம்.

ஏதமெய்தாவகைமக[illegible]ார்க்கிசைத்துமன்றலியற்றநா
டீதங்கிழைத்தான்போன்றிறப்பச்செப்பிமுடித்தாருடனிறந்தார்
மாதராரைப்பெற்றார்மற்றதனைக்கண்டுமௌனமருண்டார்:

எனவும், நூ - ம்,

ஏதமெய்தாவகைமொழிந்துபோக்கவவராங்கெய்தாமுன்
றீதங்கிழைத்தேயிறந்தான்போற்செல்லவிடுத்தாருடன்சென்றார்
மாதராரைப்பெற்றார்மற்றதனைக்கேட்டுமௌனமருண்டார்.

எனவும், கவி-உகஎ-அடி-க௨௩-பு-ம்.

தையலார்சங்கிலியார்தந்திறத்தேசாடத்தக்காவினையை
யுய்யவேண்டுநினைவுடையாருளாரோவென்றங்குலகறிய.

எனவும், நூ-ம்.

தையலார்ச[illegible]கிலியார்தந்திறத்துப்பேசத்தகாவார்த்தை
யுய்யவேண்டுநினைவுடையாருளாயாரென்றங்குல[illegible]றிய.

எனவும் வருவனவன்றி, எனைய புராணங்கடோறும் பாடபேதங்கள் பலவாயுளவாதலின் இவ்வனம் விரியுமென்றஞ்சி இம்மட்டில் நிறுத்தினும், அவற்றை யினி வெளிவரு மப்புராதனத்திற் காண்க.

இதுகாறுங் கம்பனென்னுங் கவிஞர் வேளாளர் தரத்தைக் குறித்துப் பாடிய திருக்கைவழக்கமென்னுநூ லரங்கேற்றன் முன்னிலையில் விளைந்த

சம்பாஷணைகளின் விரியை இனி தொகுத்துக் கூறுமிடத்துக் குன்றை முனிவராகிய சேக்கிழார்சுவாமிகள் நாவலூர் நம்பிகளருளிய திருத்தொண்டத்தொகைப் பதிகத்தை முதனூலாகக்கொண்டு நாரையூர் நம்பிகள் வகைபெறவோதிய திருவந்தாதிக்கிணங்க விரித்துத் திருத்தொண்டர்புராணம் பாடினரொன்பதூஉம், அத்திருத்தொண்டர் புராணத்தில் தனித்திருத்தொண்டரறுபத்து மூவருள் மரபுகுறித்திராத பல திருத்தொண்டர் வரலாற்றினை யாய்ந்து கம்பரவ் வேளாளர் திருக்கைவழக்கத்தில் எண்மரையும் புகழேந்தியார் செங்குந்தர் திருக்கைவழக்கத்தில் பதினல்வரையு மமைத்தனரென்பதூஉம், இவர்கட்குப் பிற்காலத்தினர் அவ்வேளாண் டிருத்தொண்டரெண்மரோ டைவரைக்கலந்து ஆகப்பதின்மூவரையுந் திருத்தொண்டர்புராணத்திலேற்றி அதற்காதாரமாக உபமன்னியர் பக்தவிலாசம் அகத்தியர் பக்தவிலாசம் திருத்தொண்டர் புராணசாரம் திருத்தொண்டர் புராணவரலாறு முதலியனசெய்து முறையே உபமன்னியமுனிவர் அகத்தியமுனிவர் உமாபதி சிவாசாரியா ரியற்றியதெனக் கற்பித்துவைத்தனரென்பதூஉம், கமலினியா ரனிந்திதையா ரவதாரமாகிய பரவையார் சங்கிலியாரென்னு மெமதம்மைய ரிருவரும் உமாதேவியாருடைய மறக்கருணை பெற்றவராகலின் இவருள் பரவையார் யாதொரு நாயகனையு மணவாது நித்திய கன்னியரான உருத்திரகணிகை மாருக்கும் வைதிககுலத்தி லவதரித்திருப்பச் சங்கிலியா ரிவ்வுருத்திர கணிகைமார்க் கதிதேவதையாகிய கங்கையார் வரபக்களாய் வேளாள்ரென்ச் சொல்லநின்ற அவைதிககுலத்தி லவதரித்திருப்ப எமதப்பராகிய நாவலூர் நம்பிகளும் சிவபிரானுடைய மறக்கருணை பெற்றவராகலின் தாம் ஆதிசைவ வேதியர்குலத்தி லவதரித்துந் தமது குலவிதிமாறி அவ்விருவரையுந் திருமணஞ்செய்தன ரென்பதூஉம், அவ்விருவரில் தாய்தந்தையராற்கொடுக்க நிச்சயித்துச்செய்த மணமகனிறக்க வைதவ்வியமடைந்து மங்கலநாணு மிழந்தவரான சங்கிலியாரை அந்நாவலூர் நம்பிகள் மணந்தது இவ்வியனுலக நகும் வழக்கேயன்றி வைதவ்வியமடையினு மங்கலநாணிழவாது நிற்குங் கன்னிகையை விதிப்படி மணஞ்செய்துகொள்ளுதல் இவ்வியனுலக நகும்வழக்கன்றென்பதூஉம் சித்தமாயின.

33. இங்கே கம்பருக்கும் அஞ்சனாட்சிக்குமுள்ள நண்பு இவ்வாராகத்தான்பாடிய விசாயணத்தை அரங்கர் கோயிலின்முனரங்கேற்றச்சென்றபோது அங்஗ுனமிருந்த வைணவரவரைநோக்கி உமது குமாரன் அம்பிகாபதியும் சிறந்த வித்துவானாகையால் அவன் கையொப்பமும் வேண்டுமென்ன அதற்கவர் "முன்னே பிறந்தகாதைப்பார்க்கிலும் பின்னேமுளைத்தகொம்புவலியுடையதல்லவா" என்றெண்ணித் தன்னிடத்துள்ள கற்றுச்சொல்லிகளில் இருவரையனுப்பி அவனை வருவித்துக் கையொப்பங்கே

ட்க அவனிக்காவியத்தில எனக்கென்ன வாஸ்பதமிருக்கின்றதென வினவ அப்படி வினவியோன் மழலைச்சொன்மாறாத வோர்மகவாகி ஆளுடையபிள்ளையாரைப்போல் ஆண்டொருமூன்றேயுள்ளாநாய் அவ்வாண்டிலேயே வப்பிள்ளையாரைப்போல் அருந்தமிழ்பாடும் பெருந்தகையாளனுயு மிருந்தமையால் அவ்விராமாயணத்துள் சளசள-களகள-கொளகொள-கிளுகிளு-என வீரடுக்கொலியாய்வரும் பாடல்களைக்கூற அதற்கவன் சந்தோஷித்து நாம் கைமொப்பமும் அல்லது சாற்றுக்கவி கொடுப்பது விசேஷமல்லவென்று தோத்திரமாக "கம்பனுடனுமை" என்னுஞ்செய்யுளைக் கூறினனென்றாற்போல, இவ்வஞ்சனுட்சியும் கம்பனையு மவர்காவியத்தையும் வெகுவாய்க் கொண்டாடி அக்காவியத்தில் தனக்குமோராஸ்பதமிருக்கக்கேட்டு ஸ்தோத்திரமாக "அம்பராவணிசடை" என்னுஞ் செய்யுளைக்கூறினளாம் ஆனல் தில்லைவாழந்தணரும் திருநறுங்கொண்டைச் சைனரும் மாவண்டூர்ச்சருமானும் கையொப்பத்தோ டொழிந்தார்களாம். ஆ! ஆ! இதுவியப்பினும் வியப்பு: இப்படி யொவ்வொருவரும் தங்கட்கோ ராஸ்பதமுளதோவென்றுகேட்க அவருண்டென்றுகூறியவற்றுள் அவர்களடைந்த கீர்த்தியென்னையோ? அமணதேவர்களை யாராதிப்பவரென்றும், இரும்படிக்கு மிழிதொழிலரென்றும், நிலையற்ற நெஞ்சினரென்றும், எதுமறியா விளம்பிள்ளையென்றும் அவ்வவர்கள் சமயாசாரத்தையுஞ் சாதித்தொழிலையும் முதறிவின்மையையும் இழிவுச்சிறப்பாயெடுத் தேசியதேயன்றோ? இஃது தழவனை யூரடிமைப்பயலே! ஆயனையாமேக்கிப்பயலெ! ஒச்சனை யுடுக்குத்தட்டிப்பயலே! மங்கலியை மயிர்பிடுங்கிப்பயலே! என் றென்னுதல் போலன்றோ? இவ்வாறு தங்கட்கக் காவியத்தில் ஆஸ்பதமிருக்கக்கண்டு கையொப்பமுந் துதிகவியுஞ் செய்தனோர் (அக்காவியம் சைவேதிகாசமாயிருப்ப அதனை வைணவேதிகாசமாக்கவும் அவரையு மம்மதத்தவரெனச் சாதிக்கவும் எத்தனையோ துதிகவிகளும் பாயிரக்கவிகளும் அதற்கேற்றபடி பாடிவைத்ததன்றிக் கம்பா அரங்கநாதர் வேண்டுகோளால் சடகோபரந்தாதியும் பாடியதாகவொன்று பாடிவைத்தபடி) ஒவ்வோர்சாற்றுக்கவியும் பாடியதாக அமைக்காது விட்டதற்குக் காரணம் யாதோவறிகிலம். இவ்வுலகிலிக்கால் ஒரவதானமுஞ் செய்யவறியாதான் அட்டாவதானியென்றும், ஓர்வண்ணமு மோதவறியாதான் வண்ணக் களஞ்சியமென்றும், ஓர் தமிழையு முணர்ந்தறியாதான் முத்தமிழ்க் கவியென்றும், ஓரிலக்கணமுங் கேட்டறியாதான் பஞ்சவிலக்கணியென்றுந் தமக்குத்தாமே பெயர்வகித்துத் அவ்வகித்தலுக்கேற்ப அவரையொத்தசிலரால் அளவற்ற சாற்றுக்கவிகளைப்பெற்றும் அளவற்ற சாற்றுக்கவிகளை அவ்வவர்க்குத் தாம்கொடுத்தும் அசாசனப் பிரக்யாதி யடைகின்றார்களே; இயற்கையிலேயே யெவ்வாமும் வல்ல இக்கம்பவாணருக்கு நாலொரு சாற்றுக்கவியேனும் பாடி நாட்

டிவைக்கலாகாதா? அன்றியும் விநோதரசமஞ்சரி யென்னும் புத்தகத்திற் கண்டுள்ளபடி பொற்களந்தை புகழேந்திப்புலவர் இக்கம்பருக்கு நண்பராய்த் தாம்பாடிய நளவெண்பாவிற் பல துராக்ஷேபனைகள்செய்த கூத்தருக்குப் பகைவராயிருக்க, அனைவரைத் திருவரங்கத்து வைணவர் அவரிடங் கையொப்பம் வாங்கிவரும்படிக்குக் குறித்திலர்? மறந்தனர்போலும்; அல்லது சங்கமிருந்த பாண்டிநாட்டுச் சமஸ்தான வித்துவானாயிருந்து, பின்னரந் நாடுமுதலிய வெல்லாநாடுகளுக்குந் தலையாய சோழமாநாட்டுச் சமஸ்தானவித்துவானாகி, கவிச்சக்ரவர்த்தியாகிய கூத்தருக்குக் கவின்றுணைவராயிருந்தனராகலின்; இவர் பள்ளிக்குப்பத்துக் கம்பட்ட வுபாத்தியாயரென்பதுபோல உழவர்நத்தத்திற் கோச்ச வுபாத்தியாயரா யிருத்தலைப்பற்றிக் கையொப்பங்கிடைத்த லரிதென்று கைவிட்டனர் போலும். இவையெல்லா மிம்மட்டில் நிற்க - இக்கம்பர் தான்பாடிய மும்மணிக்கோவையை வேளாளப்பிரபு அலக்ஷியஞ்செய்து கிழித்துத் தன்முகத்தெதிரி லெறிந்தபோது, இன்றோடு நமக்கு மிவர்க்குமுள்ளசம்பந்தம் அற்றுப்போய்விட்டதே இனியெங்குச்சென் றெவ்வாறு பிழைப்போம் எனத்துக்கித்த தெற்றினுக்கு? முன்னர் பாண்டியதேசாதிபதி சந்தோஷித்து இத்தகைய வித்வசிரோன்மணி கால்நடையாய்ப் போகவரவிருத்தல் புகழல்லவென் றபிமானித்து யானைத்தந்தத்தால் விசாலமான தொட்டிசமைத்துக் கணைக்குப் பொற்றகடு சித்திரித்து வேய்ந்து அடியிலே நீலரத்தினத்தாற் கால்கடந்து பொருத்தி மரகதரத்தினத்தாற் குமிழ் நிரைத்து மேலுக்கு விசித்திரமாகிய சரிகை முகமற் பன்னுங்கு விரித்துநெருங்க முத்துக்குச்சுத்தூக்கி கணையினிருபுறமும் தங்கத்தாற் சிங்கவுருவமைத்து அதற் கதியுசிதமாகக் கொத்துவேலைசெய்து கண்ணுக்கு நீலமும் பல்லுக்கு வச்சிரமும் வாய்க்குப் பத்மராகமுமழுத்திக் கொடுத்த விலையுயர்ந்த பல்லக்கும், குடகதேசாதிபதிகொடுத்த சப்தலக்ஷணங்களமைந்த ஒருகடகம் யானைகளும், சிந்துதேசாதிபதிகொடுத்த நூறுத்தமச்சாதிக் குதிரைகளும், மாறுவாடிதேசத்தரசன்கொடுத்த இருபதொட்டகங்களும், காஸ்மீரதேசாதிபதிகொடுத்த ஒவ்வொன் றாயிர மிரண்டாயிரம் விலையேறப்பெற்ற உயர்ந்த பத்துச் சால்வைகளும், ஆந்திரதேசாதிபதிகொடுத்த பல கண்டவாள எருதுக்களும், கூர்ச்சர தேசாதிபதிகொடுத்த நவரத்நாபரணங்களும் முடிவில் சோழதேசாதிபதியாகிய குலோத்துங்கனால் அலங்கரிக்கப்பெற்ற விலையுயர்ந்த பட்டாங்களும், சங்குசக்கரக்கடுக்கனும், நவரத்தினக்கண்டியும், வச்சிரப்பதக்கமும், ஆணிமுத்துமாலையும், தங்கக்காப்புகொலுசும் எங்கேபோய்விட்டன? ஒவ்வொன்றைத் தனித்தனி விற்றுச் சீவித்தாலும் சாங்காலமளவுங் குறைவில்லையே; அன்றியும் பலவகை நத்தக் கிராமாதிபதியாகிய அவ்வேளாளப்பிரபு வருடந்தோறுங் கொடுத்துவரும் பத்துசரகை

சன்னைச்சம்பாநெல் பிராணன் போமளவு மிருக்கின்றதே: அவர் மஹாராசாக்கள் பலர்முன்னிலையில் இவர்க்குத் தந்தத்தோடெங் கொடுத்தவதனை என்னகோப மிருந்தபோதிலு மீட்டுக்கொள்ளுவரா? ஓ நல்லறிவிற்சிறந்த நண்பர்களே ; இப்படிக்கெல்லா மிக்கம்பருக் குண்டாகியுள்ளனவாய்ப் பலராற் பிதற்றிவருஞ் சரிதைகளை யுய்த்துநோக்குமிடத்தில், ஆங்கிலேய 1891-வது வருடம் திராவிட பாஷையினு மாங்கிலேய பாஷையினுந் தேர்ச்சிபெற்ற B.A. முதலிய பட்டங்களடைந்துள்ளஒருவரால் "அமரம்பேடு வீராசாமிசெட்டியார் கம்பர் சரித்திரத்தை விநோதரசமஞ்சரி யென்னும் புத்தகத்தி லெழுதியிருக்கிறார், அது வறிதே போது போக்குவார்க் குபயோகமாக விநோதமா யெழுதப்பட்ட தொன்றன்றி உண்மையென்று கொள்ளற்க." என்றோர் பரீக்ஷைப்புத்தகத்திற் பதிப்பித்தபடி, எல்லாம் பொய்யேயன்றி மெய்யென்பதற்கு ஒருவாற்றானுஞ் சான்றின்மை யறிக.

34. இச்செய்யுளொன்றனைக் கூத்தர்முதலின் மறத்தாற்றாலும் பின்ன ரறத்தாற்றானு மாற்றிக் கூறியதற்கே திங்ஙனமாக-இதற்குக்காதை கம்பராணவர் முன்னோர் கைக்கோளன் மனைவியால் களவுப்புணர்ச்சிசெய்யக்கருதிச்சென்று அவள் கணவனோர் குறுந்தடிகோண் டடிக்க நேர்ந்தபோது பாடியதெனப் பிதற்றிய பாடலுக்கொப்ப, அவரே மற்றொருகால் வலைஞன்வீட்டினு மதுகருதிச்சென் றகப்பட்டுக் கொண்டபோது பாடியதெனப் பிதற்றி,

> இருளையிருள்விழுங்கியெவ்விட முந்தோன்று
> திருவிழியுங்கோல்வழியேயேக - வருமிரவில்
> வந்ததுண்டுசேர்ந்ததில்லைமாலேயல்லாமலே
> யந்தமனையுந்தன்மனையே.

எனப் பின்னிரண்டடியையும் வேறுபட மாற்றிவழங்குவர். இதன் முன்னிரண்டடிக்கும் பின்னிரண்டடிக்கு முள்ள சொற்சுவை பொருட்சுவைகளைத் தூக்கிப்பார்க்க, அக்காதையின் சம்பந்தம் தலைதூரமாதலை ஆன்ற வறிவுடையோ ராய்ந்துதெளிக. ஆயினுமக் கம்பரானவர் களவுப்புணர்ச்சியைக் கருதிக் கைக்கோளன் வீட்டினும் வலைஞன்வீட்டினு நுழைந்து-அவ்வவ்வீட்டின் றலையரா லறையப்பட்டாரென்பதும் ஒரு புகழோ? ஆனல்,

> செந்நெல்லாலாயசெழுமுளை மற்றுமச்
> செந்நெல்லேயாகிவிளை தலா- லந்நெல்
> வயனிறையக்காய்க்கும் வளவயலூர
> மகனறிவுதந்தையறிவு.

என்ற வான்றோர்வாக்கின்படி, அவர்தந்தை விதவைகளேயராயிருந்த சாம்பிரதாயத்தைக் கைவிடாமல் வியபிசாரிகளேயரா யிருந்தன ரென்பதை விளக்கிப் புகழ்ந்ததுபோலும். அந்தோ! அவர்க்கெங்கு மிலாச்சிங்காரத் தோடுங் கற்பித்துவைத்த இரண்டு கடுக்கன்களின் கனமுங் காம்பீரியமும் கமரிற்கவிழ்த்த காராவின்பா லாய்விட்டனவே; இத்தகைய விழிதொழில்களைக் கொண்டோனே ஒருவனை யீடெயர்வற்றவனெனப் பலகாலும் பலராற் புகழ்ந்துகொள்ளுவது! இதுவெகுநேர்த்தி வெகுநேர்த்தி.

35. இச்சரிதையின் விரிவைப் பூர்வம் கைலாயபரம்பரை மெய்கண்ட சந்தானம் சிற்றம்பலநாடிக ளாதீனம், நாவினான் மழுவேந்து ஞானப்பிரகாசவள்ளலா ரருளிச்செய்த "வீரநாராயணர்விஜயம்" என்னு நூலினுட் கண்டுதெளிக.

36. இந்நாட்டினர் தலைகொடுத்தற் கஞ்சினராதலால் நாளதுகாறும் "தலைகொடாமரபினர்" என வழங்கநின்று, மற்றைய நாட்டினரோடு மணவினையாதிகளிற் சம்பந்தங்களைப் பெறாது திருமலைநாயக்கன் பட்டினத்திற் கருகே தங் குலவொழுக்கங்களிற் குன்றாது தனியே யிருப்பவ ரென்றறிக.

37. இதற்குமுன்னச்சிற் பதித்துள்ள பிரதியினும் கன்னபாரம்பரையினும் சிக்காதன வருவாயிருந்த சிரங்கள் யாவும் அவ்வவற்றி னுடல்களையொட்டிக்கொள்ளுதற்கெழுமாறு "எழுப்பெழுபது" என வேறோர் பிரபந்தம் திருவாய்மலர்ந்தருளியதாகப் பதித்தும் வழங்கியுமிற்றலால், யாமுமதனை முன்னரோரோவிடங்களில் வழிபடலாயினோம். ஆலோசிக்குமிடத்துக் கூத்தரது வேண்டுகோளுக்கும் அச்சிரங்களின் ஒன்றுகைக்கும் இச்செய்யு ளொன்றே யநுகரணமாகநிற்றலால், இதனாலேயே யச்சிரங்கள்யாவு மெழும்பிப் போய்த் தத்தமுடல்களோ டொட்டிக்கொண்டன வென்பது திண்ணம். அன்றியுமக் கூத்தர் கட்டளைக் கிணங்கிப் பன்னாட்டினர் சிரங்கொய்த நாளில் அவர்க்கன்னியனாகிய ஓர் வன்னியனும் பெரும்புகழ்பெறுமாறு தனது சிரங்கொய்து தர அதுவுமத் தொகையுட்கலந்து பின்னரெழாமையின் அதற்கென வேறோரெழுப்பெழுபது பாடி அதனையுயிர்ப்பித்தனரெனவும், இவ்வா றுயிர்த்தெழுந்தோர்யாரும் அவ்வரசினின்கண் பலவெகுமதிகளும் விருதுகளும்பெற் றானந்தச் செருக்குற் றாடியபோது அக்கூத்தர் "களிப்பெழுபது" என்றோர் பிரபந்தமும் பாடினரெனவும் வழங்குவர். இவையனைத்தும் "உலைவாய்க்கோரேவழி ஊர்வாய்க்கோ பலவழி" என்வும், "[illegible]தையிற்பேச்சு சாட்சிக்கிசைச்சு" எனவும் வழங்கும் பழமொழி[illegible] உறுதிப்படுத்துவ.

38. இக்கங்கணமொன்றே சுயபூஜிதகங்கணம் பரதூஷணகங்கணம் எள விருவகைத்தாகி, அவ்வேளாளருள் சற்பீசராயுள்ளோர் சுயபூஜித கங்கணத்தையும் துற்பீசராயுள்ளோர் பரதூஷண கங்கணத்தையுமேற்று நடத்தி யுள்ள காரியங்களைக் கூற, ஆதிசேடனைப்போ லாயிரநாக்களைப் படைக்கினு மமையா. எழுதவென்றாலோ வெண்ணிலவான வேடுகளினு மடங்கா. இருந்து மற்றவைகளை யெண்ணிட வென்றாலும், உள்ள முடம்பேலாங்கொள்ளினும் போதா. அவற்றுள் மறப்பெனும் பகைவன் வாய் மடுத்தமை போக எமது நெஞ்சுள் நின்றனவற்றை இவ்வவத்தாரண்யத்தில் இதற்கு முன்னும் பின்னு மெடுத்துக்காட்டிய சிற்சில காரணகாரிய முகத்தானே தெள்ளிதின் விளக்கியுள்ளே மாயினும், சற்பீசருடைய சுயபூஜித கங்கணம் இவையிவை யெனவும் துற்பீசருடைய பரதூஷண கங்கணம் இவை யிவை யெனவும் தெள்ளியோ ரறிந்துகொள்ளுமாறு இங்ஙன மெம்மாற் கூடியவளவிற் பகுத்துக்காட்டுதும். முதலாவது சற்பீசருடைய சுயபூஜித கங்கணம் - இதிகாசாதியிறைமைகொணூல்களில் - தங்குலச்சீரைத்தகைபெற நிறுவியும், நிகண்டாதிகளாய் நிகழ்கருவிநூல்களில் - வைதிகப்பால்ராய் வரைந்துவிளங்கியும், நாற்குலக்கடையாய் நணுநுநாணி - முக்குலக்கடையாய் மொழிந்துநூலியற்றியும், தொண்டருண் மறையோர் தொகைக்கிணையாகி - மிண்டவந்நூற்பா வினிநசில்திருத்தியும், மற்றிவைமெய்யா குறவிருவடநூல் - பற்றிலர்செய்த பான்மையாய் விதித்தும், சார்புநூலாகச் சாரம்வரலாறென் - றோர்தில்லைமறையோ னுரைத்ததென்றூனுற்றியும், ஒதிவைமுதலா வுள்ளபற்புதுமையின் சாதனமாயிரு சதகந்திருமித்தும், இப்படிப் பல பத்தியரூபங்களிற் புணர்த்தல் புரட்டல் புதுக்கல் முதலியனவற்றைச் செய்ததும் போதாமல்; கத்தியரூபங்களாய் ஔவையார் சரித்திரமெனவும், அதிலௌவையார் ஓர் பாவின் முன்னிலையில் சோழனுக்குமுன் ஒட்டக்கூத்தரை யவமதித்துப் புகழேந்தியை மதித்தனரெனவும், கம்பர் சரித்திரத்து ளொருபகுதி யெனவும், அதில் கலைமகளாரைக் கம்பர் வருவித்தது ஒர் மகிமைகாட்டி சரஸ்வதியந்தாதி பாடினரெனவும், கம்பரி ராமாணம்பாடி யரங்கேற்றியதெனவும், அதில் கம்பர் கவிக்குமுன் நமது கவி பரிமளிக்காதென ஒட்டக்கூத்தர் தாம்பாடிய காவியத்தைக் கிழித்தெரிந்தனரெனவும், ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண்பேசிய சரித்திரமெனவும், அதில் புகழேந்திப் புலவர் சிறைக்கணிருந்த இழிகுலத்தருக்குக் கல்வி பயிற்றி அரசன்முன் கூத்தரை அவமானப்படுத்தினரெனவும், புகழேந்திப்புலவர் நளவெண்பா பாடியதெனவும், அதிலாட்சேபஞ்செய்த கூத்தனை கம்பரெதிர்த்துப்பேசி வாய்மூடச்செய்தனரெனவும் இப்படி பலகதைகளை கற்பித்து வரைந்து வைத்ததேயாம்.

இரண்டாவது துற்பீசருடைய பரதூஷண சங்கணமோவெனில்-அச்சற்பீசரால் புணர்த்தியும் புரட்டியும் புதுக்கியுமுள்ள பத்தியருபங்களையும் ஒவ்வோர் காதைமுன்னிலையிற் கற்பித்துவைத்த கத்தியரூபங்களையும் ஆதாரமாகக்கொண்டு, தமக்கினியரு[illegible]வினத்தருமான கம்பரையும் புகழேந்தியையும் சிலகாரணத்தால் மறத்தாற்றினலாண்ட அறத்தாறுகடவர் வருட்கடலாகிய கூத்தரையும் அவரினத்தரையும்-புறம்பழித்தெங்கும் புலம்பித்திரிதலொடு-புராதன நூல்களிற்பொரித்துவைத்திருத்தலும், இசைக்கதைவிசைக்கவி யெடுத்தெறிந்தடுத்தேற்ற வசைக்கந்த கவிகளைவரைந்து வெளிவிடுத்தலும், கைத்தொழிலாப் பேணகவின்புண்ணியத்ததா - நெய்த்தொழிலதனைநீசமென்றேசலும், ஆன்றோர் பெயரையு மரும்பெருநூலையுஞ்- சான்றோருமாற்றித்தம்மதென்றிசைத்தலும், குலநலங்கடந்தோர் கொள்கையைக்கூறி- நலனுறுமவரையுநாடொறும் பழித்தலும், கூத்தரேமுன்னோர்செய்கோதில் பன்னூல்களைப் - பார்த்திடிலக்கணம் பஞ்சினிற் சிதைத்தலும், பொய்க்கோடமச்குப் பொன்றிடுமென்றே- கைக்கோளரென்று கழறவாயுளர்தலும், ஆகிய வித்தகைய புன்றொழில்களை இடைவிடாது நடத்திக்கொண் டிருப்பதோடு; அக்கைக்கோளரைக் காணும்போதும், அவர்களைப்பற்றிப் பேசும்போதும், அவர்களுடைய வரலாறும் பிரபாவமும்சற்றுமறியாத பலரிடத்தில் தாங்கள்மரபினும்தொழிலினும்நெறியினும்நேயத்தினும்,கடைபட்டவராயும்,பவத்தொழிலினராயும்- புன்னெறியினராயும் - புலையர்நேயராயுமிருந்தும்- முற்பட்டவராயும்-புண்ணியத்தொழிலினராயும்-நன்னெறியினராயும்-நற்சனர்நேயராயுமிருக்குமவர்களைக்கீழ்மக்களென்றும், அவர்களோடு கேண்மைசெய்தல் கூடாதென்றும், இவ்வாறு பலகூறித் தம்மை[illegible]தாமே மேலாக்கிக்கொண்டு; "கற்றனவுங் கண்ணகன்றசாயலுமிற் பிறப்பும்-பக்கத்தார்பாராட்டப்பாடெய்துந்-தானுரைப்பின்-மைத்துனர் பல்கிமருத்திற்றணியாத - பித்தனென்றெள்ளப்படும்." என்ற வான்றோர் வாக்கியத்திற்கிலக்காகுவர். இவருளும் யாதேனுமோர்முன்னிலையிற் பெருஞ்செல்வமெய்திடப் பெறமேருராயின,

பெருநடை தாம்பெறினும்பெற்றிபிழையா
தொருநடையராகுவர்சான்றோர்-பெருநடை
பெற்றக்கடைத்தும்பி[illegible]க் கருவிநன்றுடை
வற்றுமொருநடைகீழ்.

என்று மூதுமொழிக்கி[illegible]ங்க வேறு வேறு நடையினராகித் தம்மைப்பிறர் மதிக்குமாறு பல நூல்களையுஞ்சற்பித்து வழங்குவர்.

கோடேந்தகலல்குற்பெண்டிர்தம்பெண்ணீர்மை
சேடியர்போலச்செய்றேற்றூர் - கூடிப்
புதுப்பெருக்கம்போலத்தம்பெண்ணீர்மைகாட்டி
மதித்திறப்பர்மற்றையவர்.

என்றும்,

மைதீர்பசும்பொன்மேன்மாடமணியழுத்திச்
செய்ததெனினுஞ்செருப்புத்தன்காற்கேயா
மெய்தியசெல்வத்தராயினுங்கீழ்களைச்
செய்தொழிலாற்காணப்படும்.

என்னுங்கூறிய பெரியோர் கருத்தை இவர்களறியார்போலும். இப்படியிவர்கள் தம்மைத்தாமே சிறப்பித்துக்கொள்வதோடு நில்லாது அக்கைக்கோண் மரபினரைக் கண்டபோதுங் கேட்டபோதும் பழைய பகைமை பாராட்டி அவதூறுபேசித் திரியினும், அவர்கள்

கடித்துக்கரும்பினைக்கண்டகரநூறி
யிடித்துநீர்கொள்ளினுமின்சுவைத்தேயாகும்
வடுப்படவைதிறந்தக்கண்ணுங்குடிப்பிறந்தார்
கூறார்தம்வாயிற்சிதைந்து,

என்னும் பெரியோர் வாக்கியத்தைப் பேணி வறிதே யிருக்கவிருக்க, இவர்களிடைவிடாது செய்துவருஞ் சின்மிஷங்களளவிலவாம்.

பூர்வம் தில்லைவாழந்தணருளொருஞ் சந்தானகுரவருளொருவராகிய உமாபதி சிவாசாரியார்காலத்தில், அத்தில்லையி லரசாண்டிருந்த திரியம்பகச் சோழராஜன் அவரது பத்திமையையும் அதனால் விளங்குந் தெய்வீகத் தன்மைகளையு நன்குணர்ந்து, அவரிடத்தில் தனக்குற்ற மெய்யன்பின் மேம்பாட்டால் சிவிகை-கவிகை-திருச்சின்னம்-சாமரம்-பகற்றீவட்டி-என்னுமிவைகளை விருதாகக்கொடுத்து உபசரித்து வந்தான். அங்ஙனமிருக்க ஒரு நாள் உமாபதி சிவம் தாமக்காலேற்றுள்ள கட்டளையாகிய ஸ்ரீ நடராசப் பெருமானது உச்சிக்காலபூசையை முடிக்குமாறு அச்சினங்களோடு சென்று முடித்துவிட்டுச் சிவிகை மீதாரோகணித்து, வெண்கொற்றக் குடை நிழற்றவும் திருச்சின்னமூதவும் வெண்சாமரை யிரட்டவும் பகற்றீவட்டி பிடித்துவரவும் தமது மாளிகைநோக்கிச் செல்லுகையில், எதிர்ப்பட் டெழுந்தருளிவரும் சந்தானகுரவரு ளொருவரும் அவதாரச்சிரேஷ்டருமாகிய மறைஞான சம்பந்த சிவாசாரியார் அவர்வருகின்ற வாடம்பரத்தைக் கண்

றூற்று, ஏனையா பகர்குருடரே! என்றுரைத்துக் கூவினர். அதுகேட்ட உமாபதி சிவம் திடுக்கிட்டுத் திடீரென்று சிவிகையினின்று மிழிந்து தண்டாகாரமாகப் பணிந்தெழுந்து அவரைப் பின்றொடர்ந்து செல்ல, அவரோடும் வார்த்தையாடிக்கொண்டு சென்ற மறைஞான சம்பந்தர்க்குத் தீபனமுண்டாக, அக்கால் தாம் சென்றுகொண்டிருந்த விடம் செங்குந்தர் வீதியா யிருப்பக்கண்டு உமாபதிசிவத்தை நோக்கி, சிவகுமாரானுசர்களா

கிய செங்குந்தர்கள் வீதி யிதுவாகையால் இவர்களிடத்து நம்பசியைத்தீர்த்துக்கொள்ளுவோமாயின் சிவப்பிரசாதமாகுமென்று கூறி, அங்கு நூற்பாவை விரித்துக்கொண்டிருந்த செங்குந்தர்களிடஞ்சென்று ஆகாரந்தருமின்னென்னக் கேட்டனர். அதுகேட்ட செங்குந்தர்கள் துணுக்குற்று, சுவாமிகளே! தேவரீ ரடியேங்கள் குடிலுக் கெழுந்தருளின் அறுசுவையோடுங்கூடிய வமுதுபடைக்க ஆவலுடையோ மாயினேமென்று கூறினார்கள். அது வினவிய மறைஞானசம்பந்தர் அங்கச் செங்குந்தர்கள் நூல் தோய்ப்பதற்காகக் கொணர்ந்து வைத்திருந்த புல்லரிசிக் கூழினை நோக்கி இதை வார்க்கத் தடையாதென்று வினவ, அதற்கவர்கள் - அந்தோ! இது யாங்கள் நூல் தோய்ப்பதற்குக் கொணர்ந்த உப்பற்ற புல்லரிசிக்கூழென்றோத, அதற்கவர் நீங்கள் கரத்தாற் பரிசித்தயாவும் தேவாமுதத்தினுஞ் சிறந்த சிவப்பிரசாதமாகு மாகையால் இன்னுந் தடைகூறாது முகந்து பெய்யுமென்று கட்டளையிட, அவர்களக் கட்டளையை மறுக்கக் கூடாதவர்களாகி அவ்வாறேமுகந் தவர்கரத்திற் பெய்தார்கள். அதையவ ருண்ணுகையில் அவர் முழங்கையிரண்டினும் வழிந்தகூழை அருகிலிருந்த உமாபதி சிவாசாரியார் தமது கைகளையேந்திப் பிடித்து மாறிமாறியுண்டனர். அத்தருணத்தி லவ்வழியே யெழுந்தருளிய ஏனைய தீக்ஷிதர்களிற்சிலர் அதனைக் கண்ணுற் றருவருத்துச்செல்ல, அப்பால் தமதாசிரியரையரிதிற்பிரிந் தில்லடைந்த உமாபதி சிவம் தமதுவழக்கப்படி மறுதினம் உச்சிக்கால பூசைக்குச் சபைநோக்கிப் போக, முன்னை மறைஞான சம்பந்தரின் முழங்கையால் வடிந்த கூழைக்குடிக்கையிற் கண்ட தீக்ஷிதர்கள் அவரைச்சபைக்குட் செல்லவொட்டாது தடுக்க, உடனேயவர் சிதம்பரத்திற்கடுத்த கொற்றவன்குடி யென்னும் ஊரிற்சென்று வசித்துத் தம்தான்மார்த்தமாயுள்ள சபாநாயகரைத் தினமு மானதத்தாற் பூசித்துக்கொண்டிருந்தார். அப்பால் சிலநாட்சென்றபின் ஆனித்திருமஞ்சன மகோற்சவம் நேரிட, அதின்துவசாரோகணோற்சவம் அவ்வூராளும் சோழராசனுடைய தாகையால் அஃது சற்றுமேறா திருக்கக்கண்ட அவ்வரசன் வருந்தி, அடியேன் யாதோர் தவறுமின்றி அரசசெலுத்தி வருகையில் இவ்விதமாகத் துவசாரோகணம் தடைபடவேண்டிய காரணமென்னையோ? எம்பெருமானே!

அனைய நிவிக்க வேண்டுமென்று துதித்துக் கண்கலுழ்ந்து நின்றான். அக்கால் நடராசப்பெருமான் திருவுளமிரங்கி, ஓ வளவ, நமது தீக்ஷிதர்கள் உமாபதி யிடத்தில் அசுத்தமெண்ணித் துரத்திவிட்டதை நீ கவனிக்காமையால் இவ்வித விடையூறு நேர்ந்தது, இப்போதே கொற்றவன்குடிக்குச் சென்று அவனையு மவனாசிரியனுக்குக் சூழ்வார்த்த செங்குந்தர்களையு மழைத்துவந்து ஏற்றுவித்தா லேறுமென்று அசரீரிவாக்கருளினர். அதுகேட்ட திரியம்பகச்சோழன் ஆனந்த பரவசனாய்த் தில்லைவாழந்தணர்களுடன் சென்று உமாபதி சிவாசாரியரையும் செங்குந்தத் தலைவர்களையும் நடேசப்பெருமான் திருவருளுப் பாட்டினைக் கூறி யழைத்துவந்து துவசாரோகணஞ் செய்வித்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, அதற்குச் செங்குந்தர்கள் சம்மதித்தார்களாயினும் அதுவரையி லவ்வரசனால் அவ்வுத்சவத்திற்கெனச் செலவு செய்துள்ள பொருட்டொகை யெவ்வளவோ அவ்வளவையு மவனுக்குக் கொடுத்துவிட்டு அவனது பட்டுக்கொடியை விலக்கித் தங்கள் காவிக்கொடியை நிறுத்தி உமாபதி சிவத்தால் "கொடிக்கவி" எனவோர் பிரபந்தம் பாடுவித்து அம்மகோற்சவத்தை மிகவற்புதத்தோடு நிறைவேற்றினார்கள். அன்றுமுத லின்றுகாறும் அத்துவசாரோகண மகோற்சவம் அச்செங்குந்தகுல திலகர்களாலேயே நிறைவேறி வருகின்றதென்பது பிரத்தியக்ஷமா யிருத்தலையேனுங் கண்டுணராத மூர்க்கர்களுக்கென்சொல்லி யென்னும்? இவ்வுலகின்க ணெல்லாத்தலங்களினு முள்ள சிவகலைகள் யாவும் அர்த்தசாமத்தில்வந் தொடுங்குதற்குரிய முத்தித்தலமாகிய அத்தலைமைத்தலத்தில், "உலகோர்மெச்ச - பொருந்துதிருச் சிற்றம்பலந்தன்னைச் செம்பொன்னான் மேயுங்கை - யுற்றவர்த்தசாமத்திலுள்வாயில் - தெற்றி - புனைமுந்திரையதனைப்போடுங்கை" என்ற வான்றோர் வாக்கின்படி நாளதுகாறு மவர்கள் செய்துவரும் அர்த்தசாமபூஜை காலசந்திபூசை துசாரோகண மகோற்சவம் சூரசம்மாரமகோற்சவ முதலிய கயிங்கரியங்களையும், ஏனைய பலதலங்களினும் அவர்கள் பூர்வநடாத்தியும் நாளதுகாறு நடாத்திக்கொண்டுமுள்ள கயிங்கரியங்களையும், அவர்களுடைய பிரதாபங்களைப்பற்றியும் அவர்கள் செய்துவருஞ் சிவபுண்ணியங்களைப் பற்றியும் ஆங்காங்கு செப்பேடுகளினும் சிலைகளினும் பொறித்துத் தாபித்துள்ள சாதனங்களையும் இவர்க ளழுக்காறுகொண் டிருண்ட கண்களாற் காணப்பெறாவிடினும் அயலவர் கண்டு கொண்டாடலை யாரறியாதார்? இவற்றையெல்லா நேராகவே கண்டுங்கேட்டும் அவர்களைப் பழித்துரைத்தலே தங்கள் பாரம்பரியப் பெற்றியாகவுடைய இழிகுலமாக்களது கண்கணக் கட்டுகள் யாவும் அற்பமாக்களது புரட்டு மூத்திரங்கள் போயும் அங்கணக்கட்டே.

இவ்வுலகின்கணுள்ள அவ்வெழு குலமாக்களுளும் உத்தமர் மத்திமரதமரென மூவகையோருளராகலின் அவருத்தமாதமரிவ்வங்கண கங்கணச் சட்டுக் குரியோராயினும் ஏனைய முதலிருவர் கொள்கை யெத்தகையவெனிக், ஏறக் குறைய வெண்பது வருடத்திற்குமுன் தொண்டமண்டலத்தில், திருமயிலாப்பூரில் இவ்வேளாண்குலதிலகராய் தமிழ்த் தலைமைப்புலமையோடு தாச்சி-அருணாசலமுதலியாரென ஒருவரிருந்தனர். அவர் வருடந்தோறுஞ் சமயாசாரியர்களுடைய திருநக்ஷத்திர தினத்தில் சங்கமாராதனஞ் செய்து வருவர். அக்கால் தம்மினத்தினரையும் செங்குந்தரையும் வருவித்துத் தனித்தனி வெவ்வேறு தானங்களி லிருத்திச் சங்கமர்பூசை முடிந்தபின் செங்குந்தரையும் பூசித்து, இருவரிடத்தும் பிரசாதமேற்றுத் தமது பெண்டிர்பிள்ளைகட்கெல்லாம் அதனைப் பகிர்ந்தளித்து மிகுந்துள்ளதைத் தாமேற்றுப் பின்னர் தம்மினத்தரோடிருந்து புசிப்பர். இவற்றைப் பலகால் கண்டுள்ள அவ்வினத்தார் நாமசெங்குந்தரைஇத்தகைய காரியங்கட்கு வருவித்தலும் அவர்களோடு சமபோஜனஞ் செய்தலுமே கூடாமையாயிருக்க, அவர் கரத்தாற்றீண்டிய சோற்றினை நாமேற்குதல் தகுதியோவென்று வினவினர். அதற்கவரவர்களை நோக்கி, ஓ நண்பர்களே! இவ்வுலகின்கணயனாற் படைக்கப்பட்டுப் பூர்வ மநுக்களாற் பிரித்து வகுத்துள்ள குலங்களுள் நான்குளும் நாம் இழிகுலத்தேம். நாமோ முதன் மூவர்க் கேவல்செய்வோ ராவேம். அச்செங்குந்தர்களோ சிவசம்பந்தர்களாய் அம்முதன் மூவர்க ளொழுக்கங்களை யேற்று அதனாற் கைக்கோளரெனப் பெயர்பெற்ற ஓர் குலத்தினராகலின், அவர்கள் பூர்வமிருந்த நிலைமைப்படிக் கிருக்கின் நம்மிடத்தில் நீர்வாங்கி யருந்தவு நினைப்பரோ? உயிர்போக நேரினும் தம்போற் சிவசம்பந்திகளான ஆதிசைவ வேதியரிடத்தல்லாமல் ஏனைய வேதியரிடத்து மேற்கார்களே: அவர்கள் கரத்தாற் பரிசித்த வன்னம் சிவப்பிரசாத மாகுமென்பதற்கு எத்தனையோ சான்றுள. ஆதலி னவர்களைப் பழித்தோர்கள் அண்டிற்கரிய நரகினுக் காளாகுவர். இந்நாவலந்தீவில் முத்தமிழ்வேந்தரது காலம் என்று முடிந்ததோ அன்றே,

சத்துவம்புத்திவித்தைசதுர்விதார்த்தங்களான்
வித்தனைவிதமுஞ்செல்வமில்லையேலில்லையாகும்
சத்துவம்புத்திவித்தைசதுர்விதார்த்தங்களான
வித்தனைவிதமுஞ்செல்வமெய்திடிலெய்துமன்றே.

எனவும்,

கதிரவனிலையேற்கண்ணிற்காண்பனமறையுமாபோல்
நிதியமொன்றிலையேலியார்க்குநீதிமெய்ஞ்ஞானபோதம்

துதிபெறுங்கீர்த்தியான்மைசூழ்ச்சிமந்திரவிசாரம்
சதிரபிமானமெல்லாந்தன்னிலே மறைந்துபோமால்.

னவுமுள்ள பெரியோர் வாக்கின்படி, தங்கள் சிரனைத்துங்குன்றி இடிந்துபோனார்கள். இப்படி காலபலம் போதாது கன்றியுள்ளவர்களை இவ்வா றிழித்துரைத்தல் அறிவின்மை யாகுமென்றுகூறி, அவர்கள் கொள்கையைக் கண்டித்தனர். இவ்வாறெத்தனையோ உத்தமர்கள் அவனுக்கு முன்னும் பின்னு மிருந்துளோர். மத்திமரோவென்றால்-அச்செங்குந்த மரபினருடையபிரபாவமித்தகையதெனத் தெரிந்து, அவர்களைப்பற்றித் தூஷித்தலுந் துதித்தலுமற்றுச் சும்மாவிருப்பர்கள். அதமர்களோ குன்றினை நோக்கிக் குக்கன்குரைப்பதுபோற்குரைக்கக் கங்கணங்கட்டிக்கொள்ளுவர். இந்தக் கங்கணத்தால் வரும்பயன் என்னையெனில் - மனுமிருதிகளாதிய முதனூல்களிலும், இதிகாசபுராணாதி களாகிய வழிநூல்களினும், இவற்றினின்றுந் திரட்டி மொழிபெயர்த்துள்ள சார்பு நூல்களினும் இப்பரதகண்டத்து மானவர்க்கெல்லாம் வகுத்திருக்கும் வருணங்கள் நால்வகையென்றும், இந்நால் வருணத்தினருக்குந் தனித்தனி வகுத்திருக்குந் தொழில்கள் அறுவகையென்றும், இவ்வறுவகைத் தொழில்களுள் முதன்மூவரே வைதிகத் தொழில்களுக் குரியரென்றும், பின்னவரன்னோர்க்குரிய லௌகிகத் தொழில்களுக் கேவலராயிருந்து முடித்தற்குரியரென்றும், இவ்வுலகுண்டான நாடொட்டங்கி பாரம்பரிய நியாயமாய் எங்கும் பராவி வழங்கிக்கொண்டிருக்க? இக்கால் சில வருடத்திற்குமுன் அச்சார்பு நூல்களு ளொன்றாய்த் திவாகரம் பிங்கலந்தை முதலியவைகளுக்கு வழிநூலாயுள்ள சூடாமணி நிகண்டில், அந்தப்பின்னவராகிய சூத்திரருக்குரிய அறுதொழிலைப்பற்றி

வசியர்மூவகையுளார்க்குவகுத்தமுத்தொழில்களான
பசுவோம்பல்பொருளையீட்டல்பாரிலேருழுதலோடு
இசையமுன்மூவர்க்கேவல்குயிலுவத்தொழிலியற்றல்
அசைவில்காருகவினைகளாக்கல்சூத்திரருக்காறே.

எனவும்,

பட்டுநூல்பருத்திநூலைப்பதனமைத்தாடையாக்கல்
ஒட்டியேசுமத்தலோடேயுழத்தல்காருகத்தின்செய்கை
கொட்டவேயூதலெல்லாங்குயிலுவத்தொழிலின்செய்கை
இட்டசாதிகளுக்கன்றேயிறைமுறைவகுத்தவாறே.

எனவுங் கூறியிருந்ததை,

வசியர்தந்தொழில்களாறுள்வருத்தமுத்தொழில்களான
பசுவோம்பல்பொருளீட்டல்பயிரிடல்புராணமாதி
நசையுறவோதலீதனண்ணுமந்தணர்முன்னோர்க்கு
வசைறவிரனுகூலம்மாம்வகைத்தொழில்சூத்திரர்க்காம்.

எனமாற்றி அடுத் தவரது காருகவினைகளைப் பற்றியும் குயிலுவத் தொழில்களைப்பற்றியு மிருந்த கவிகளை நீக்கி வேறு பெயர்த்தொழித் தச்சிட்டுக்கொண்டதும், இப்படி யிதற்கு முன்னும் திருத்தொண்டர் புராணமுதலியவற்றில் சிலமாற்றியு மொழித்து மச்சிட்டுக்கொண்டதும், இவ்வாறு மாற்றியொழித்தனவற்றிற் கெல்லாம் சார்புநூல்கள் பல செய்துகொண்டதும், வெளியாகி, இவற்றையெல்லாங் கண்டுணர்ந்த வினையவருணத்தர் யாரும் இவையாவும் அபத்தம்: அபத்தம்: அபத்தம்: என முக்காற்கூறி அவற்றின் முகத்திலுமிழவுங்கொண்டு பயனென்றேயன்றி வேறில்லை. இவர்கூல் மேற்கூறிய மனுமிருதிமுதலிய முதனூல்களும், அவற்றின் வழிநூல்களில் "பின்னவரினிதிடுமூரல்- கொட்டியகுருதியாதலாற் பின்னோரிடத்துணல்குறிப்பினுமாகா." என்றும் "பின்னவரிடத்தில்- அறம்பயில்கின்ஞைகற்றுளோரவர் பாலரும் பொருளேற்றுளோரவர்பால் - பெறும்பொருளதனால் வேள்வியாற்றுனர்கள் பிழைப்பரு நரகிடைச்சேர்வார்" என்று முள்ள சான்றுகளு முறைகெட்டொழியுமோ? இப்படிக்கெல்லா மாற்றியு மொழித்துந் தம்வருணத்துள்ள குறைதைத் தவிர்த்து நிறைவு பெறச்செய்துகொண்டார் "தாமடங்கத்தங்குலம் விளங்கும்" என்பதற்கேற்ப வறிதேயிராது, யாதினும் குறைவின்றிக் குன்றுபோலுள்ள குலத்தரைக்குறைத்தலினாலன்றோ இவ்வவத்தாரண்யதகன மடலுற்றெழுந்தது அக்காலந் நிகண்டுமுதலிய கருவிநூல்களிற் குறித்திருக்கின்ற சூத்திரர்க்கும் இக்கால் விளங்குஞ் சூத்திரர்க்கும் கல்வி செல்வம் நாகரிகம் நடைமுதலியயாவும் வேறுபட்டிருத்தலின் அவற்றையவ்வாறு மாற்றவேண்டியது மறைக்கவேண்டியதுந் தருமமாவதன்றி, அச்சூத்திரர் பால் அந்தணர்முதலிய வைதிகர் ஓதவும்-உண்ணவும்-ஏற்கவும்-இழையவும் - நடுவிருவருணத்தர் நாஸ்தியாய் விட்டால் என்ன தடையுளதெனில்? இக்காலக் கல்வி முதலியவற்றில் மேம்பாடடைந்துள்ள பஞ்சம வருணத்தரையும் ஓர் பரம வருணத்தரென மாற்றவேண்டுவதே தருமமாவதன்றி, அவர்கள்பாலு மந்தணர் முதலிய வைதிகர் ஓதவு முண்ணவு மேற்கவு மிழையவுந் தடையின்று. தடையின்று முக்காலுளுந்தடையின்று. இஃதிக்கால் நிறைவேறிவருதலும்பிரசித்தநிச்சயம். இதனாலன்றோ உலகமெங்கும் வைதிகநிலைகள் குன

தீ மனுமுறைகள் மாறித் தவநெறிகள் தவறித் தெய்வீகமொழிந்து சத்திய த்திறங்கள் தலைமயக்குற்று வருணாச்சிரம தருமங்கள் வகைகெட்டுச் சிதை ந்தன? இனி யிக்கலியி லேயாயிரவருடப் பிரளயத்துள் ஏதேது யாதாதா குமோ ? ஓ பரம்பொருளே! அறிகிலம்; அறிகிலம்:

39. இதிலிரண்டாமடி "கலைதந்தார்வணிகருக்குச் சேவஞ்செய்தி டவென்றேகையிற்றந்தார்." எனவும் பாடம். இப்பாடங் கொள்ளுமிட த்து, "கலைதந்தார்" என்பதனை "தந்தார்கலை" எனமாற்றி, பஞ்சுநூலார்ந்த டைலயெனப் பொருள்படுத்துக.

40. இவ்வெண்பாவின் வரலா றிவ்வாராக - ஒட்டக்கூத்தர் தமது கவி கம்பரது கவிக்குமுன் சற்று மிராஜசபைக் கேறாது குன்றிப் பவகா வு மதிப்பற்றுப் போவதால் அக்கம்ப ரிறக்குமாறு தாம்பாடியதெனவும், பின்ன ரதனால் தாமே யிறக்க இவர் மனைமக்களாதிய சுற்றத்தினர் அவர் பாற்சென்று வேண்ட

இன்றல்லோ கம்பனிருந்தானென் கவிதை
யின்றல்லோ ராசசபைக்கேறாதா - லின்றல்லோ
பூமடந்தைவாழப்புவிமடந்தைவீற்றிருக்க
நாமடந்தை நூல்பூட்டினாள்.

எனமாற்றி யுயிர்ப்பித்தன ரெனவுங் காதை கற்பித்து மாற்றி வழங்குவர். எக்காலு மவைதிகராகிய வேளாளர் சந்தத்தினும் - வன்னியர்குப்பத்தி னும் - கொல்லருலைக்கூடத்தினும் - வண்ணார்துறையினும் - நாவிதர்கூட் த்தினும் - பஞ்சமர் சேரியினுமேயன்றி, வைதிகராகிய வேதியர்காரத்தி னும் - வேந்தர்சபையிலும் - வைசியராவணத்தினும் - கனவினுமெட்டிப் பார்த்தறியாதவர் கம்பரொருவரேயென அவரது காதையினாலுங் கவியி னாலுமே அங்கையாமலகம்போல் விளங்கியிருக்க; அவரா லெந்த விராஜச பையில் இக்கூத்தரது கவிதை ஏறுமந் சிதைந்தது? இத்தகைய காதையை க் கற்பித்து இவ்வெண்பாவிற் "கூத்தன்" என்றிருந்ததை "கம்பன்" என மாற்றியோர், அத்தகைய காதையொன்றுங் கற்பித் தழலாகாதா? எத்தகை ய தேவசபையின்கண்ணும் சிரபூஷணமாய் விளங்கத்தக்க கூத்தனார் கவி தைகள் இராஜசபைக்கேறுதலோ வரிது? இவ்வெண்பாவினால் கம்பருக் கு நேர்ந்த பழியை ஒட்டக்கூத்தரே யொழித்துக் காத்தன ரென்பதி ற்கு,

- தஞ்சமென

...ந்தடைக்தார்தன் கவியையமாற்றுங்கைமாற்றலர்க்கு
மூந்தையடையாளந்தொண்மூட்டுங்கை - செந்துவர்வாய்த்

தம்பலத்தையங்கவர்வாய்தன்னிலளிக்குங்கை
கம்பனுக்குவந்தகடும்பழியை - வெம்பலின்றி

மங்கும்படிக்கவன்பாமாற்றியுயிர்[illegible]ங்கை
செங்குந்தமேந்திச்சிவக்குங்கை.

எனவிருப்பதோடு,

பூமியந்தரசொர்க்கமெங்கும்வெங்கதிர்வீசபுண்டரிகவெய்யோனையே
பொங்குகின்றகட்டியிடுராதிருரனைப்பொருந்துவென்றேகொன்றிடர்
சேமியிற்ப்ரலோகசூரியரென்னும்பெயரைசேயருடனேபடைத்தோர்
சித்[illegible]னருள்பெற்றபேராளர்சலியாமலேநிலையாண்மையுள்ளபெரியோர்
தேமருவுகாளிகைத்தாளம்பறித்தவர்கள்தென்னனுடனேசேர்னைத்
[illegible]றைகொண்டகெப்பீரர்கம்பனென்கவிமுனுள்தீமைகவிபாடிவிழவும்
யா[illegible]நவுமறமொழித்தாருவிரளித்தேந்தல்பண்டிதர்சொலப்பெற்றுளோர்
[illegible]ராயீதுக[illegible]விலங்காதபுகழார்மிக்கபண்புளோர்கைக்கோளரே.

எனத் திருச்செய்ஞலூர் ஞானப்பிரகாசவள்ளலாரியற்றிய செங்குந்தர் திருக்கைவழக்கத்தினும், அவர் மாணாக்கர்-திருநாகை - மூத்துச்குமாரதேசிகரியற்றிய செங்குந்தர் புகழ்மாலையினும், இன்னும் பலநூல்களினும் சான்றிரு[illegible]தலைச் சற்று முணர்திலர்போலும். ஆயின் புகழேந்தியா ரியற்றிய திரு[illegible]கைவழக்கத் தில்லையே யெனில், இக்காதை ய[illegible]நூ லியற்றியதற்குப் பின்னடைந்துள்ள தாகலின், இதற்குமுன்னடைந்[illegible]ள்ள அக்கம்பரிராமாயணத்தைப்பற்றி "உச்சிதமாங் [illegible] காவியத்திற்றீங்குபுரிகம்பன்குடைகாள - மாவியற்றுப் போகச்செ யாண்மைக்கை," என [illegible]ிவ்வொருகாதையோடொழிந்தன ரென்றறிக.

41. இவ்வெண்பாவுக்கு மிதற்குமுன் இராசனெழுதியனுப்பிய வெண்பாவுக்குங் காதை இவ்வாறாக - இக்கம்பர் சோழராஜனுக்கு அவனிலுமேலான சேரராஜனை அடைப்பைக்காரனு மிருக்கத்தக்க தோழமை கொண்டபின் மிகப்பிரியராயினரென்றும், அதுமுதலவன் தன்னிடத்துள்ள கூத்தர் முதலிய வித்துவான்களினும் இவரை மேலாக வைத்துக்கொண்டு இவர்பாடிய இராமாயணத்தை அரங்கேற்றுவித்துச் சிவிகை முதலிய புல பல வெகுமானங்கள் தந்து சன்மானித்தனனென்றுங் கற்பித்துவைத்த காதை கனப்படுமாறு; இவர் குமாரனாகிய அம்பிகாபதி அச் சோழராஜன் மகளையே அந்தரங்கமாய்க் கலந்திருந்தனனெனக் கற்பித்து அக்கற்பிதத்திற்கிணங்க இரண்டு வெண்பாக்களையும் சொல்லினிமை மு[illegible]னலற மாற்றிக்கெடுத்தனர். எவ்வகையாய் மாற்றினும் கூத்தரே கவிச

ளாயுள்ளோரை யெல்லாம் ஆதரிக்கவு மாக்கினை செய்யவுமான முறை
மையைக் கைக்கொண்ட கவிச்சக்ரவர்த்தி யென்பது தெள்ளிதின் விளங்
குவதன்றோ?

42. இவ்வாறு கழுவின்க ணேற்றப்பெற்ற அம்பிகாபதிக்கு (முன்
னரிவன் களவுப்புணர்ச்சியறிய அரசன் விருந்திட்டபோது பதார்த்தவட்
டிலை யேந்திவந்த அவன் மகளைக்கண்டு பாடிய வெண்பாவிற் பாதி கேட்
ட கம்பர் அவ்விருந்திற் றன்மகனுக் கபாயம்வருமென் றஞ்சிக் கலைமகளா
ரைத் தியானஞ்செய்ய உடனே யவரோர் கிழவியுருவங்கொண்டுதெருவில்
கொட்டிக்கிழங்கு விற்றுக்கொண்டுவர அதைப் பொறுத்தி மற்றைப் பாதி
யைத் தான் பாடி முடித்து அரசன் முயல்வுகெடச் செய்யவும், அப்பா
லரசனவனை யானையின்காலி விடரச்செய்தபோது அவனந்த யானையை
நோக்கி

வெங்கண்சிவந்துவெடி வான்முறுக்கிவெகுண்டெழுந்தே
னுங்கம்பிளக்கவருங்களிறேயன் றிரணியனைப்
பங்கம்படவுரங்கீண்டேயுதிரம்பருகுநர
சிங்கமிருக்குதுகாண்கெடுவாயென் றன்சிந்தையிலே.

என்றோர் கவிகூறித் தப்பித்துக்கொள்ளவுங் கிருபைகூர்ந்த அச்சரச்வதி
தேவியாரும் இந்நரசிங்கப் பெருமாளும் அத்தருணமெங்கே போய்விட்
டார்கள்? உடனே யக்கழுவை நீறுக்கி அது நாற்புறத்துஞ் சிதைந்து பறந்
துபோகவன்றோ செய்தல்வேண்டும். இவ்வாறு வெண்பாவிலரைப்பு
ளுகும் கவித்துறையில் முழுப்புளுகுங் கற்பித்த கவிகளுக்கு, எங்கு யார்
யாதேமாறுவார்களென மேகத்துலாவும் வாலகமற்ற கவிகளைத் தானெ
ப்பிடல் வேண்டும். அவ்வம்பிகாபதியை யீன்ற கம்பராவது தான்பாடிய
இராமாயணத்துள்ள நாகாஸ்திரப் படலத்தை வாசித்து அரவாலிறந்த இல்
லையந்தணருடைய பிள்ளையை எழுப்பியது போன்று, பிரமாஸ்திரப் பட
லத்தை வாசித்து இறக்காமற் செய்துகொள்ள லாகாதா? அவன் கழுவி
லேறப்பெற்றதைத் தான் சற்றேனுந் தெரிந்திலர் என்செய்வர் பாவம்!

43. இத்தமிழ்வழங்கு மண்டிலங்களிலுள்ள கவிகளுக்குள் கல்வியி
ற் பெரியனென்றும் மகா கவியென்றும் பேர்படைத்த கம்பவாணர் தனது
பிராணவியோக மானவித மிவ்வாறாக - இவர் தனது மகனையு மனைவி
யையு மிழந்தபின் இல்லறவாழ்க்கையை வேப்புக்கு நிகராக வெறுத்திருக்
குங்கால் சோழராஜ குமாரன் தனது வித்தியாசாலையினின்று வீடுநோக்
கிச் செல்லுகையில் அவனை யோர் காட்டானை தூரத்திவந்ததென்றும்,

அதற்குப் பயந்த வச்சிறுவன் இவர் வீட்டின்கணுழைந் தொளித்தனனென்றும், அதுகண்ட தான் தனது குமாரனைக் கழுவின்கணேற்றிய சோழராஜன்மீ திருந்த வஞ்சினத்தால் காட்டானைவிடினுங் கவியானை விடுமோவெனக்கூறி அவ்வரசிளங்குமரனைப் பிடித்துத் தனதெழுத்தாணியாற் குத்திக்கொன்றனரென்றும், அதைச் சிலராற் கேட்டுணர்ந்த சோழராஜன் இவரைக்கொல்லச் சமயம்பார்த் திருந்தனனென்றும், ஓர்காலச்சோழராஜன் காவிரியாற்றங் கரையோரமாயக் கால்நடைகொண்டு யோகையில் இவரைக்கண்டானென்றும், அப்போதவ னிவரையழைத்துச் சிலதூரம்படகேறிப்போவோம் வருகின்றீரா வெனக் கேட்டானென்றும், அதற்கிவரிசைந்தேறினரென்றும், இடைவழியிற் சோழராஜன் தனதிடது கரத்தில் வில்லையும் வலதுகரத்தி லம்பையும் வைத்துக்கொண்டு இப்போது நான் யாரைப்போலிருக்கின்றேனெனக் கேட்டானென்றும், அவற்கிவர் நீர் கோதண்டராம மூர்த்தியைப்போ லிருக்கின்றீரெனக் கூறினரென்றும், ஆனால் நீ ராவணனாகவேண்டுமெனக்கூறி அவ்வில்லி லவ்வம்பினைத்தொடுத்து இவர் மார்புக்குக் குறிபார்த் தெய்தனனென்றும், அப்போதிவ ரிவ்வெண்பாவைக் கூறிச்சபித்து எவ்வாறோ பிராணன்றப்பிப் பாண்டி நாடடைந்து வறுமை மேலிட்டவராய் இராமநாதபுரத்தை யடைந்து அறுபதாவது வயதிலே காலவியோக மாயினரென்றும், அப்போதிவர் சரீரத்தை வைணவமதாசாரப்படி சமாதியில் வைக்கப்பட்டதென்றும், அச்சமாதித்தானத்தை வைணவர்கள் பூசிக்கின்றார்களென்றும், அன்றியு மாரேனுந் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு வைக்கும்போது அவ்விடத்திற் கூட்டிப்போய்ச் சிறிது மண் கிள்ளிக் காரைத்துக் கல்வி வருமாறு அவர்களைப் பருகச்செய்வது வழக்கமென்றும், ஈளதுகாறுங் கம்பவாணர் சிறஞ்சீவிப் பதவியினராய விபீஷணாழ்வாரோடு இலங்கைத்திபத்தி லிருக்கின்றனரென்றும், இவரது பிற்காலச்சரிதை பிரகாசமாய் வழங்கிவருகின்றது. இவையனைத்து மிவர தன்மையான முற்காலச்சரிதைக்கு முரணாயிருத்தலின் அம்முரண்களை யிங்ஙனம் வீற்றுவீற்று யெடுத்துக்காட்ட விரியுமென்றஞ்சியும், இதுகாறும் பல வவத்தாரண்யங்களைப்பற்றி ஆலோசித்தாலோசித்தெமதகமும் அவற்றிற் பல மறப்பெனும் பகைவனால் மாய்ந்தவைபோகச் சிலவற்றை வரைந்துவரைந் தெமதுகரமும் இளைத்துச் சலித்தெழாமைக் கெஞ்சியும் ஒருவாறெடுத்துக் காட்டுதும்.

அம்பிகாபதி சோழராஜன் மகளையேதான் நேசித்துக் களவுப்புணர்ச்சிசெய் திருந்தனனென்பதைப்பற்றி முன்னரே மறுத்துளோம். இங்ஙனமச்சோழராஜனேயாயினு மாகுக, அல்லது பாண்டிநாட்டின்கணோர் சிற்றரசனேயாயினு மாகுக. ஓராஜனாயினேனுந் தன் குமாரனுக்குக் கல்விபயிற்றுவிக்கவேண்டில், அவ்வரசன் சமுகத்திலேயே எத்தனைபேர் வாசல்

வித்வான்களா யிருப்பார்களென்பது யாவருமறிந்தபடி. ஒ..ங்கையவரை யேயவனுக்குப் போதகாசிரிய ராக்கிவைப்பது பூர்வசம்பிரதாயம். ஓர் வித்தியாசாலை யென்பது, ஏனைய குடிகளின்மக்க ளொன்றுகூடிக் கல்வி பயிலுமிடமாம். ஆகவே யரசர் மக்கள் கல்விபயிலு மிடத்துக்கு வேறுபேரின்றி யதுவே யாயினும், அஃதவ ரரண்மனைக்கண்ணே வேறோர்பால் தாபிக்கப்பட்டிருக்கும். ஏனைய வித்தியாசாலைகள் பொதுவாய் ஊர்க்கண்ணே வயங்கும். இத்தகைய வித்தியாசாலைகளினொன்றில் ஓர்இராஜகுமாரனாயினோன் கல்வி பயிலவருங் கடமையுடையவனல்லன். ஓர்கா லுடையவனேயாயினும், அவ்விராஜனுக்குத் துணைவராயுள்ள அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் முதலாயினோருடைய குமாரர்களுடன் அத்தகைய வித்தியாசாலைக்குப் பலகாவலோடும் வாகனாருடனுமே வருவதொழிந்து தனியே குடிசனப்பிள்ளைகள் வருவதுபோன்று வரத்தக்கவனல்லன். அக்குடிசனப் பிள்ளைகளுள்ளும் கூடியமாத்திரந் தனவான்களுடைய பிள்ளைகளாயின், அவர்கள் நட்டார் நயந்தாரின் பிள்ளைகளோடுங்கூடித் தங்கட்கியைன்ற வாகனாருடராய்ச் செல்வதை நாமிக்காலுங் காணப்பெற்றுளேம். இத்தகையவரைக் காட்டானை துரத்திவருதலும், அதற்கவர்களஞ்சித் தங்கள் வாகனத்தை விட்டிழிந்து திக்கொலொருவராயோடிப் பதுங்கலும், அச்சமயங் கம்பர் அரசன் பிள்ளையைக் குத்திவதைத்தலும், அஃதுணர்ந்த வரசன் கம்பரைத்தன்னினும் வலியனெனவெண்ணி வறிதேயிருத்தலும், வேறோர் சமயத் தவ்வரச னாற்றங்கரை வழியாய்ச் செல்லுழிக் கம்பரைக் காண நேர்தலும், இவரை யவ்வரசன் தன்னோடு படகேறிவரக் கோரலும் அதற்கிவர் வேறொன்றுஞ் சிந்தியாது உடனே சம்மதித் தேறலும், அக்கால் மிகுவஞ்சினத்தோடு மார்புருகவெய்த அவ்வரச னம்புக்கு மிகு வறுமையான் மெலிந்திருந்த விவர் தப்புதலும், இவ்வாறு தப்பிய தனியாவரான விவரைக் குழுவாளனான கோமான் இவரினு மெலியனாகிவிடுத்துச் செல்லலும் வியப்பினும் வியப்பு விப்பிராயோக வியப்பு. இனி யிவ்வியப்பெவ்வாறாயினுமாகுக, அவ்வாறே யிவர்தப்பியோடி ஆயுள்முடிந்திறந்தோ அல்லதவ் வம்பினாலேயே மாண்டோ வைணவமதாசாரப்படி இவர் சரீரம் சமாதிசெய்யப்பெற்றதும், அச்சமாதித் தானம் நாளது காறும் வைணவர்களாற் பூசிக்கப்படுவதும், இக்கா லெப்பயனுமற்ற எண்ணற்றசமாதிகளை எழுமதிமாக்கள் இரவும்பகலும்பூசித்து இருபோதுமிறவாவிளக்குகளேற்றி வருதலை யெண்ணுமிடத்து ஓராச்சரியமன்று, இஃதபிமானம். இவ்வுலகில்சர்வசங்கபரித்தியாகராய் சைதன்னியநிலைவாய்க்கப்பெற்ற சாட்குண்ணியமூர்த்திகளுடைய சமாதியே சமாதியன்றி, இத்தகைய வபிமானச் சமாதிகளும், தத்தம்வருணாச்சிரமங்களுக்கேற்ற முறைதப்பாதுவைக்கப்படும். பல்சமாதிகளும், எரிக்க முட்டையுங் கட்டையுஞ்சேகரித்தற்கியலாதுவைத்த எளிய

மாக்கள் ச[illegible]லும், இப்பூமிக் கெருவாகவும் நாய்நரியாதிகட் கிரையாக
வும் வைத்தசமாதிகளேயாம். இம்மூன்றி லொன்றாயுள்ள கம்பவாணர்
சமாதித்தானத்தின்கண் சிறிதுமண் கிள்ளிக்கரைத்துச் சிறுவர்
கட்குக் கல்வி விர்த்தியாமாறு அவர்கள் தாய்தந்தையருண்பிக்குந்தொழில்
சில தேவஸ்தானங்களிலும் பிறத்தானங்களினு நாளது காறும், சிரநோய
கலத்திலிட விபொத்தலும் - திருமணங் கூடச் செடிமுடியிடுதலும் - மக்
களைப்பயக்க மண்ணடுப்பமைத்தலும் - வளம்பெறக்கமரில் வழியப்பால்
விடுதலு மாகிய பல பேதைமாக்களின் பெருமையற்ற அற்பத்தொழில்
களி லொன்றேயாம்.

[illegible]ன்றியும் கம்பவா[illegible]ர் என்றுஞ் சிரஞ்சீவியாய் இலங்கைத் தீபத்தி
லிரு[illegible]கின்ற விபீஷணாழ்வாரோடு இன்று மிருக்கின்றாரென்ப தொன்று.
சி[illegible]ட்குமுன் விவேகிகளுட் சிலர் "விநோதரசமஞ்சரி யென்னும் புத்த
கத்தில் கம்பரைப்பற்றிச் [illegible] கதைகள் யாவும் போதுபோக்கற்கு வி
நோதமாக வெழுதப்பட்டனவே யன்றி உண்மையென்று கொள்ளற்க"
வெனப் பரீக்ஷைப் புத்தகங்களிற் பதித்துப் பிரசுரஞ்செய்ததுபோன்று, அத்
தகையருட் சிலர் இதைப்பற்றியும் "அது நம்பத்தக்கதென்று நாம் நினைக்
கவில்லை." என மறுத்து வேறோர் தனிப்புத்தகத்தில் பதித்திருக்கின்ற
னர். ஆயினு மித்தகைய பதவி

> கொடுக்கின்றோர்கள்பாற்குறைவையாதியானெனுங்குதர்க்கம்
> விடுக்கின்றோர்களைப்பிரிகிலாதுள்ளன்புவிடாதே
> யடுக்கின்றோர்களுக்கிரங்கிடுந்தண்டமிழலங்கல்
> தொடுக்கின்றோர்களைச்சோதியாததுபரஞ்சோதி.

என்ற வான்றோர் கருத்தின்படி இவர்க்கு யாதொரு சோதனையுமின்றி
கிடைத்தற்குத் தடையின்று ஆனலந்தணராதிய வைதிகர் யாரும் அநுதி
னமும் பூசித்துப் பாராயணஞ் செய்யத்தக்க மகாவிதிகாசத்துள் பஞ்சா
மிர்தத்தில் நஞ்சாரு மதுவையெடுத்து அஞ்சாதுவிடுத்தது போன்று அவை
திகச் சம்பந்தங்கலந்தி, அதுமுதலெல்லா விதத்திலும் எஞ்சாநின்றவே
ந்துலைக் தவத்தைப்பட்டிறந்த விவருக்கு எவ்வாறுகிடைக்கும். இதுகா
றும் கம்பவாணருற்பவந் தொடங்கிக் காலவியோகமானவரையில் யாம்
கூத்தர் சரித்திரத்திற் கூறிய கர்சக்காதையும், இவரையபிமானித்த வை
ணவரும் வேளாளரும்கலதைக்கிரையொப்ப ஒருவாறின்றிப் பலவாறாய்
ஒன்றுக்கொன்று முரணுங் கூறியுள்ள கற்பனைக்காதையும், இவ்விரண்
டையு மறிவின்மிக்காராய்ந்து இவற்றினுண்மையைப் அங்கையாமலகமென
க் கண்டுணரக் காட்டிய அவத்தாரணயமுமிவ்வாறாக? உதயதாரகைப் பத்

திராவிபரும் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழாசிரியரு... ...தாசிவம் பிள்ளை யவர்களாலியற்றிய "பாவலர்சரித்திரதீபகம்" என்னும் புத்தகத்தில் இக்கம்பர் சரிதத்தின் முடிவில் "இராமாயணந்தவிரதையும் சடகோபரந்தாதியையுந் தவிரச் சரஸ்வதிமாலை காஞ்சிபுராணம் - காஞ்சிப்பிள்ளைத்தமிழ் - சோழக்குறவஞ்சி - ஏரெழுபது - சிலையெழுபது - திருக்கைவழக்கம் - என்னும் பிறபாடல்களையும் கம்பர்பாடினார்." எனக் கூறினர். அன்றியு மிதற்கடுத்து "கம்பர் தென்மதுரையிலே மூன்னூறு தமிழ்புலவர்களோடு சங்கப்பலகையேறி யிருந்தாரென்றும், விஷ்ணுசமயப் புலவரொருவர் "கண்ணன்கழலிணை" என்னும் பாசுரத்தை ஒரு மூறியிலே யெழுதி அதைச் சங்கப்பலகையி லேற்றக்கொடுக்க அது கம்பரையு மற்றப்புலவரையுந் தள்ளிவீழ்த்தித் தனியே பீடத்து வீற்றிருந்த தென்றும், அதன்பின் கம்பர் "ஈயாடுவதோ" என்னும் விருத்தத்தாற் கண்ணனைப் புகழ்ந்தாரென்றும், மற்றைப்புலவரு மெழுந்துபாடித் துதித்தனரென்றும் ஒரு கதையுளது." எனவுங் கூறினர். ...வர் அப்பாவலர் சரித்திர தீபகமென்னு நூன்முகப்பிற் கூறிய பாயி...த்தில், "கண்டவற்றையுங் கேட்டவற்றையுமன்றி நவமாயுந் துணிவாயும் யாதுங்கற்பித்திலம், ஒட்டக்கூத்தர் கம்பராதிய சிலபாவலர் சரித்திரங்களுக்கு விநோதரசமஞ்சரி ஆக்கியோராதியாம் சில வித்துவாமிசர்க்குக் கடமைப்பட்டிருக்கின்றோம்," என வவையடக்கங் கூறியு...ளாராகலின், இவ்விரண்டிற்கு மவருத்திரவாதி யல்லரென்பது வெளி.

ஆனாலிவ் விரண்டினுண் முதலாவதில் இராமாயணக் கருப்பொருளைக் கம்பர் பாடினரென்பதைக் கண்டேனுங் கேட்டேனு மிலர்போலும். இராமாயணம் - ஏரெழுபது - சிலையெழுபது - திருக்கைவழக்கம் - இவைகளைக் கம்பர் பாடினரென்பது யாண்டும் பிரசித்த நிச்சயம். சடகோபரந்தாதியைப் பற்றியும் சரஸ்வதியந்தாதியைப் பற்றியும் யாமுன்னரே வரைந்துளோம். சோழக்குறவஞ்சியென்றொரு நூலுண்டாயிருப்பதும் அந்நூற்றலைவர் வேறெவருமின்றிச் சோழராசர்களா...வே யிருப்பது முண்மையாயின், அதனை யாக்கியோர் கம்பரல்லரென்பதற்கு ...வளாளரைப்பாடியவாயால் வேந்தரைப்பாடேன்" என்றவிச் சொற்றொடர்களே சான்றாம். காஞ்சிப்புராணமும் காஞ்சிப்பிள்ளைத்தமிழும் கம்பர் பாடினரென்பதைப்பற்றி, சிவக்கியான சுவாமிகளையும் கச்சியப்பமுனிவரையு மழைத்துக்கொண்டு திருவாவடுதுறை யாதீனப் பண்டார சந்நிதிகள் தான் வந்து தீர்மானஞ்செய்துகொள்ளல் வேண்டும். இது பட்டப்பகற் றிருட்டாதலின் இதைப்பற்றிப் போராட எம்மாலாவதன்று. இரண்டாவதில் (இரகுமகாராசன் விவாகத்தில் இராமரானவர் வந்த வேந்தர்களை யெல்லாம் விசாரித்து மரியாதைசெய் திருந்தனர்.) என்பதற்கொப்பக் கம்பர்

தெல்லாருரையின் கண் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பது பேருள்ள முதற் சங்க மிருந்த காலத்தில் முந்நூறு புலவர்களோடு தானுமச் சங்கப்பலகை யிலேறி யிருந்தனரென்பதைப் பற்றியும், விநோதரசமஞ்சரி யென்னும் புத்தகத்திலும் "கம்ப ராமாயணம்பாடி யரங்கேற்றியது" எனவருமோர் கற்பனைக் காதையி னிடையில் விளக்கியுள்ள ஓர் விற்பனக்காதையில் சில வைணவர் குருகூரடிகளின் பாசுர மெழுதியவோர் முறியை அப்பலகை யின்மீது வைக்க அஃதம் முறியை மாத்திரமேந்தி அதிலிருந்த கம்பராதி யாம் புலவர்களைக் கீழேவீழ்த்த உடனே யவர்களெழுந்து நிசயித்து அக்கு ருகூ ரடிகளையு மவர் திருவாய்மொழியையு மவமதித்திருந்த கருவமீங்கி அவ்வவருந் தனித்தனி துதிக்க அத்துதிகவிபலவும்

ஈசமங்குருகையோசெய்யதிருப்பாற்கடலோ
நாமம்பராங்குசமோநாரணமோ – தாமம்
துளவோவகுளமோதோளிரண்டோநான்கு
முளவோபெருமானுனக்கு.

என்றெழுத்து சொல் சீர் தளை முதலியவற்றோடு கருத்தும் ஒன்றாக்கொ ன்று சிறிதும் பேதமில்லா திருந்தனவென்பதைப் பற்றியும், இம்முதற் சங்கத்திற்குப்பின் நாற்பத்தொன்பான் புலவர்களோடு கடைச்சங்க மிகழ் ந்த காலத்திலிருந்த திருவள்ளுவரென்பவர் பாடிய திருக்குறளுக்கு அச்சங்கத் தினர் எழுத்து முதலியவுங் கருத்தும் வேறுவேறாகப்பாடி யமைத்த ஓர் மாலைபோன்ற இம்முந்நூறு புலவர்களும் வேறுவேறாய் ஓர் தண்டகமெ னவன் பாடியமைத்தில ரென்பதைப் பற்றியும், அப்படி வேறுவேறின்றி எழுத்து முதலிய வொன்றாயிருப்பினும் கருத்து வேறாகியும் கருத்தொன் றேயாகி எழுத்துமுதலிய வேறாயிருப்பினும் ஒன்றுக்கொன்று வியப்பினை தாராதாருமன்றிப் பள்ளியிற் சிறியர் பாடமோதுதல்போல் ஒருபுலவர் பாடியதையே மற்றப்புலவரு முறையே பாடினரென்பது தனித்தனிபாட ப் பிரயோசனமென்றுண்டோ வென்பதைப்பற்றியும், திருவள்ளுவதேவர் திருவாய்மொழியைத் திரவிட வேதமெனவும் ஔவையாரதனை மறுத்துக் கீர்வாணவேதமெனவும் இடைக்காடரவ்விரண்டையு மறுத்து வேதமே யெனவும் தனித்தனி பிரயாசையின்றி மூன்றுகவி சொன்னதற்குக் காரணம் யாதென்பதைப் பற்றியும், இவை யாவு மெவ்வாறாயினும் கம்பநாடரானவர் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதுபே ரிருந்த முதற் சங்கத்தையும் ஐம்பத்தொன்பதுபே ரிருந்த இடைச் சங்கத்தையும் நாற்பத்தொன்பதுபே ரிருந்த கடைச் சங்கத்தையுங் கடந்து எச்சங்கமற்றென்குங் கவிச்சக்ரவர்த்தியின் சங்கமேயாயிருந்த காலம் வரையிலிருந்து அப்பா லறுபதாவது வயதிற் காலவியோகமாயினரெனில்

இம்மூன்று சங்கமு மிருந்தது மொழிந்ததும் இவ்வறுமதுவருடத்திற்குள் ளாகத்தானே வென்பதைப்பற்றியு முண்டாயுள்ள சந்தேகங்களையெல்லாம்; இக்காலிச்சென்னையம்பதிக்கண் ஆளுகையின்மிக்க வரங்கிலேய துரைத்தனத்தாராலேற்படுத்தியுள்ள சகலகலாநிலைய வித்தியாசாலைகளில் தலைமைப்புலமை நடாத்திவரும் தண்டமிழ்க்கல்விச்சங்கத்தினரே தக்கபடியாய்ந்து தீர்த்திடுதல்வேண்டும். இவற்றுள் கம்பரைப்பற்றியுள்ளவிடயங்கள்யாவுங் கண்கட்டுவித்தையின் விடயங்களா யிருப்பினுந்திருக்குருகூரடிகளின் திருவாய்மொழியி னேர்பாதித்தை அச்சங்கமேயன்றி வற்றெச் சங்கமேனுங் கடக்கவல்லதோவெனின், முதற்சங்கத்தில் முந்நூறு புலவர்களோடிருந்த கம்பர் அவர்களுடன் தானும் வீழ்ந்தபோது பாடியதெனவுள்ள "ஈயாடுவதோ" என்னுமோர் தனியன்கருத்துக்கொக்கவும் அரங்கநாதருடையவருளுப்பட்டால் அக்கம்பர் பாடியதெனவுள்ள சடகோபரந்தாதியில் 'வேதத்தின் முன்செல்க' என்னு முதற்பாடலின் கருத்துக்கிணங்கவும் இம்மூவுலகையு மோரடியாயளந்த திருவிக்ரமமூர்த்தியினுடைய திருவடியே கடக்காதெனில் எச்சங்கமுமதற் கெம்மாத்திரம்? அதற் கித்தகைய கதையுங்கற்பிக்க வேண்டுமோ?

அநுபந்தங்கள்.

—)o(—

12. வது அட்டவணையினீற்றில் – "அன்றியுமச் செயங்கொண்டா னென்பவர் குலோத்துங்க சோழராஜனுடைய சமஸ்தான மந்திரிகளி[illegible]ருவரென்றும், ஆசுமுதலிய நாற்கவிகளையும் பாடவல்லவரென்று[illegible], ஔவை-கூத்தர்-புகழேந்தி-கம்பராதியாம் புலவர்களோடு தானுமொரு[illegible]ந்தனரென்றும், சூரியவமிச க்ஷத்திரியரென்றும். அதனால் செயங்கொண் சோழனென்னும் பெயர் அவர்க்கு வழங்குமென்றும், [illegible] நூதன[illegible]க்காலத்து கற்பித்து வழங்குவர். எத்தனையோ காதைகளை இசைபெறக் [illegible]பிக்கவல்லோர் ஔவையாதியாம் வித்துவசிரோமணிகளோடு தானுங்க[illegible]ந்து சம்பாஷித்ததாக ஓர் காதையேனுங் கற்பித்துவிடலாகாதா? ஓராதரவுமின்றிக் கூறுவதில் உறுதிகொள்ளுவ தெப்படி? இவரோர் சிறந்த கவியேயாயினும் க்ஷத்திரிய வமிசத்தரா யிருத்தலின் அதிவீரராமபாண்டியனைப்போல் அருநூல்கள் பாடுவதற்கும் அங்கர்கோனைப்போல் அரும்பொரு ளீவதற்கும் உரியராவரன்றி, ஏனையவந்தணராதிய கவிகளைப் போல் ஒருவரிடத்துத்தான் எற்குந்தொழிற்குரிய ராகாரென்பது யாவரு

மூணர்ந்தபடியாயின் அவரோ ரவிராயன்மேற் பிரபந்தம்பாடிப் பரிசுபெறு
தல் யாங்ஙனம்.'' என்பதைச் சேர்த்துக்கொள்ளுக.

29. இதில் "அறந்தாங்குநீபவரசு'' என்பதை மாற்றக் கருதியோர்
"தொண்ட'' என்பதற்குப் பதில் "தாங்கும்" என கூறிதே மிகைபடவமை
த்துக் கெடுத்தனர். அங்கிபத்தாருக்குரிய செங்குந்தர் பூர்வம் தொண்ட
நாட்டின்க ணரசாண்டமை அதனிராசதானியாகிய காஞ்சியிலும் கமலா
லயம் சிதம்பரமுதலிய தலங்களிலுமுள்ள சிலாசாசனங்கள் செப்பேடுக
ளாதியவற்றில் சந்தேகமறக் காணலாம்.

30. "கொமான்களப்பாளன் கொல்யானைபோமாறு'' எனவும் பா
[illegible]. இதற்குக்காதை - இராமாயணவரங்கேற்றுதலைப்பற்றிக் குலோத்துங்
க[illegible]ழன் சபைக்கண் சென்றவக்கால் அவன் றனக்குப் பாததாடனஞ்
செய்யப் பத்தடிதூர நடந்து வந்ததாகத் தானே "நடந்தாயே நாலாரடி''
எனவுருக்திக்கூறியதற் கெதிர்மன்றயா[illegible], எழுடிதூர மெதிர்கொண்டுவந்து
தனக்கவன் மரியாதை செய்தபோ[illegible]பாடிய தெனக்கற்பித்து உரைவரை
ந்[illegible]னர். ([illegible]ர் காலடிக்கவெழுந்ததை மற்கொருகா லிணைக்கவுமெழும்)என்
பதான்றேரு[illegible] வாக்கியமே யாயினும், அவ்வெண்பாவின்கணுள்ள பதினே
ந்து சீரில் [illegible]ருசீரிலாவது தனக் கத்தகைய மரியாதைசெய்த சீர் அந்தரங்க
வுரையாயாவ தாலோசிக்க அணுவளவு மில்லையென்பதை அறிவுடை
யோர் கண்டுதெளிக.

இத்தீபிகையின் 166-வது பக்கத்தில் (சாரங்கபாணியர்) என்றுள்ள
வோரிருபொருட் சிலேடை வெண்பா வைக்காளமேகப்புலவர்பாடிய
[illegible] கழறுவர். இவர்பாடியுள்ள வெத்தனையோ சித்திரவிசி
த்திரப்பா[illegible]களின் அருமை பெருமைகளைப் பார்க்க ஈதோர் பெரிதாய்
[illegible]க்கதன்றும். ஆனாலத்தகைய பாக்களும் (வசைபாடக் காளமே
கம்) என்றபடி யாதேனுமோர் வசையினத் தனவாகிய சொல்லையும் பொ
ருளையுங் கருத்தையும் வகித்திருப்பனவா யிருக்குமே யன்றி, இத்தகைய
வாழ்த்தலும் வணங்கலும் போற்றலும் புகழ்தலுமான இசையினத்தன
வாகிய பாக்கள் பாடத் தானே முயலினும் இவர்பெற்றுள்ள வரசேலத்தால்
அத்தகையன வவர்வாக்கில் நேர்வதில்லையென்பது வெளி.

செங்குந்தமன்னர்குலதீபிகை.

குலவொழுக்கம்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சின்மய சிதாகாச கன சிவசொரூபமாய் விளங்கும் ஸ்ரீ கைலாயபதி திருக்காப்பமைந்த அபரசிவமாகிய நந்திகணத்தவருப், உலகமாதாவாகிய காமாக்ஷியம்மையார் திருவடி நூபுர நவரத்தினொன்பது சத்திமார் புத்திரரான நவவீரர்களது மரபினரும், தேவகண்டகராகிய சூரபதுமனாதி அவுணரை வதஞ்செய்யுமாறு சரவணத்துதித்த ஸ்ரீ சண்முகதேவர் சகோதரரும், குந்தவேற்கையினரும், விண்குடியேற்றினவரும், மனுமாந்தாதா வழித்தோன்றலின் விரத வரப்பிரசாதரும், திசாவிஜயப் பிரதாபரும், இயமனைவென்றவரும், ஈழங் கேரளமாதிய தேயங்களை வென்று சந்தான மாந்தருவாதிய பதித்துக் கொணர்ந்த [illegible]க்கிரமரும், வலாசுரனது வலங்கெடுத்துத் தேவேந்திரனை வலாரியென்றழைத்தவரும், சத்தவிடங்க விமானங்களைத் தியாகமேற்றுத் திருவாரூராதிய சத்த தலங்களில் தாபித்த ஸ்தாபகரும், திருவாலங்காட்டடிகளோடு சம நிருத்தஞ் செய்ய வெழுந்த காளியின் கைத்தாளம் பறித்துப் பங்கம் புரிந்தவரும், தில்லை மாகாளியின் தேரோடச் செய்தவரும், உலக கண்டகனாகிய வல்லாளனை வென்று அவன் மனைவிக்கு மாங்கிலியப் பிச்சை கொடுத்துப் புகழ்பெற்ற வீரநாராயணராதி துவாதசவீரர் மரபினரும், ஒட்டக்கூத்தரென்னுங் கவிச்சக்ரவர்த்திக்கு ஆயிரத்தெண்டலையறுத்து வைத்துச் சிரச்சிங்காதனமிட்டு இன்றும் புவியரசராலுங் கவியரசராலும் புகழ்ப்பெற்ற ஈட்டியெழுபதென்னும் திருவருட் பிரபந்தங் கேட்டவரும், நீ விலங்காத நன்னடையரும், சிவதன்ம பரிபாலகரும், வேதோப நிடதாகம சாத்திர புராணேதிகாச சுயாதிகாரரும், ஓராயிரத்துத் தொள்ளாயிரவராய் ஊழிமுதல் பெயர்பெற்று நின்ற பெருமையரும், இன்னு மித்தகைய பல பெரும் பிரபாவங்களைப் படைத்து மாவடியில் தேவசிங்காசனாதிபர்களாக விளக்கும் காஞ்சிநாடாதிய எழுபத்திரண்டு நாடாதிக்யருமாகப் பெருஞ் சிறப்புற்றோங்கிய செங்குந்த வரசசிகாமணிக ளனைவருக்கும் பன்முறை வணங்கிச் செய்துகொள்ளும் விஞ்ஞாபனம்.

சைவாகமம் இருபத்தெட்டனுள் இருபத்து நான்காவது சந்தான
சருவோத்தமத்தின் உபபேதம் பதினொன்றனுள்
எட்டாவது சிவதருமோத்திரத்தில்,

தடுத்த தண்ணியன் பாற்கொள்க சாத்திரங்
கொடுக்குந் தேசிகன் றங்குலத் தில்லையே
லடுத்த வன்னிய னேயரு கன்றெழிற்
கொடுக்கொ ணாபர மார்த்தங் கொடுப்பதே.

(இதன் பதப்பொருள்)

சாத்திரங் கொடுக்குந் தேசிகன் றங்குலத் தில்லையேல் = சருதிமஹா வாக்கியமாகிய ஞானோபதேசஞ் செய்யுங் குரு தங்கள் தங்கள் குலத்தில் இல்லையாகில்; தழித்த தன்னியன்பாற்கொள்க = தனக்குக் கீழாக நீங்கிய வருணத்தாசாரியனிடம் பெற்றுக்கொள்ளலாம்; பரமார்த்தங்கொடுப்பது அடுத்தவன்னியனேயருகன் = ஞானோபதேசஞ் செய்யப் பிராமணனுக்கு அரசனும் அரசனுக்கு வைசியனும் வைசியனுக்குச் சூத்திரனும் தக்கவன்; அன்னியன்றொழில்கொடுக்கொணு = தங்கள்தங்கள் குலத்திலுள்ள சமயாசாரியர் அல்லாமல் அன்னியகுலத்துக் குருவானவன் கருமோபதேசஞ் செய்யக்கூடாது; என்று [illegible]கப்பெருமான் அகத்தியமஹாமுனிவருக்குப் போதித்திருக்கின்றார்.

தன் குலத்தில்லையேல் என்றதனால், ஞானோபதேசமுந் தங்கள் தங்கள் குலத்திலேயே பெறுதல் சிறப்புடை[illegible]த்தென்பது கருத்து.

அன்[illegible]ம் அச்சிவதருமோத்திரத்தில் மேற்கூறிய ஞானோபதேச கருமோப[illegible]கட்கு முதன்மையான ஸ்ரீ பஞ்சாக்கர வுச்சரிப்பைப்பற்றி (அந்தக்கர[illegible]ங்கள் ஒருமிக்க ஓம் என்னும் பதத்தில் நின்ற பொருளாகிய சிவத்தை அறிந்தவர்களே வேதமுதலாகிய நூல்களிற் சொல்லும் பொருள்களைவயும் உணர்ந்தவர்கள். ஆதலாற் பார்ப்பார்முதலிய நால்வருணத்தருள் மாதரும் முதன் மூ[illegible]ருத்தரவு கடவாத சூத்திரரும் அந்த வேதமாதாவாகிய பிரணவத்தை நீக்கி நின்ற ஐந்தெழுத்தையுமே யுச்சரிக்க [illegible] என்னும் பொருள் தோன்ற,

கவி

ஓமென்னும்பதப்பொருளை யுணர்ந்தார்தாமே
யுணர்ந்தாரும்வேதாதி யொருமைகூற
வோமென்னும்பதமொழித் தஞ்செழுத்துமாதர்க்
கொழுங்குலைடய சூத்திரர்க்குமுரைக்கலாமே,

எனக் கூறியிருத்தலால் சிவபரம்பரையராய் வைதிக நல்லொழுக்கமேற்று அவ் வைந்தெழுத்தையும் பிரணவ சகிதத்துடன் உச்சரித்தற் குரியராகிய காம் பிரமபரம்பரையராய் அவைதிகப் புல்லொழுக்க மேற்று அவற்றை உச்சரிக்கப் பெறாத நான்காம் வருணத்தராகிய சூத்திரரிடத்தில் எவ்வாறுபதேசம் பெறக்கூடும்.

இத்தகைய சான்றுகள் இன்னும் மநுநூல் முதலிய பலநூல்களிலிருந்தும் அவற்றை யுணர்ந் தொழியாது சிலநாளைக்குமுன் சிதம்பரத்திற் சூரசம்மார உற்சவ நடத்தும் நம்மவர்களுக்கும் வேளாளருக்கும் நடந்த கலகத்தைப்பற்றி மஹாராணியவர்களது அரசநியாய சபையில், தோற்பன தொடர்ந்த எதிரிகள் நாங்கள் இவர்களுக்குக் குருவாக விருத்தலால் எங்களுக்கு அடங்கினவர்கள் இவர்களென்று அச்சமில்லாமல் சொன்னார்கள். அதுகேட்ட நம்மவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பூர்வகாலந் தொடங்கி இதுகாறும் எங்கள் குலத்தவருக்குள்ளே ஸ்ரீ கந்தநாத ரம்சமாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வள்ளலா ராதீன சைவசமய தீக்ஷாகுருபீடம் அளவில்லாச் சிறப்புற்றோங்கி எம்மவர்கள [illegible] யநாடாகிய காஞ்சிபுரத்தி லிருக்கின்றது, அப்பரம்பரையில்தான் [illegible] பொழுதும் எல்லா நாட்டிலுமுள்ள நாங்கள் சீடர்களாக உள்ளபடியே ஒருபடித்தாய் தீக்ஷைபெற்றுக்கொண்டு வருகின்றோம், அந்தக்குருபீடமன்றி இந்தச்சூத்திரராகிய வேளாளர் எங்களுக்குக் குருவன்றென மறுத்து அதற்குச்சான்றுமில்லை தீக்ஷாதாளையும் அவ்வேளாளப்பண்டாரங்களையுமே சொல்லுவித்தார்கள்: இவ்வுண்மையானது நியாயத்தலத்தில் நம்மவர்கள் பக்ஷத்திலேயே விளங்கிவெற்றியுண்டாக்கியதன்றோ !

இவர்கள் இப்படிச் சொல்வதற்கு காரணம் என்னெனயூகிப்போம் ! நம்மவர் வசிக்குஞ் சில சிறியநகரங்களில் சாதிப்பெயர் சொல்லாமல் சைவர் சைவர் என்னும் பண்டாரங்கள்போய் நாங்கள் செங்குந்தர் குலத்திற் பிறந்த குருபீடமே, எங்களுக்குச் சிதம்பரத்திலுள்ள அம்பலவாணமுதலியார் சம்பந்திதான், காஞ்சிபுரத்திலுள்ள நல்ல கம்பமுதலியார் எங்கள் சாதிதான், என்று அவர்களறியாத ஊரைக்கூறி எற்றி ஏமாந்தவர்களுக்குத்தீக்ஷைசெய்து வருகின்றார்போலும்.

சிதம்பர நகரச்செங்குந்தர்கள் நியாயத்தலத்தில் வழக்குமுடிந்தபின் இப்படி ஏமாற்றுவோரை எங்குந்துரவியோட்டி, அப்பண்டாரங்கள் துர்ப்போதனைக்குள்ளாகி அறியாமையால் மயக்குற்றவர்களாக நடை நழுவிய இரண்டொருவருக்கும் நமது குலகுருவாகிய கச்சி ஆளவந்த வள்ளலாராதீனம் ஸ்ரீ கச்சபேஸ்வர தேசிகரை வரவழைத்துத் தீக்ஷை செய்வித்துச் சீர்திருத்திச் சொல்லற்கரிய சுகத்திலிருத்தினார்கள்.

இவ்வண்ணமே இன்னமும் நம்மவர்களிற் சிலர் அவ்வேளாளப் பண்டாரங்களின் வசப்பட்டு மதிமயங்கித் தியங்கி வசைக்கோள் நீர்ந்திருத்தலை மாற்றிவிட அந்தந்த நாட்டிலுமுள்ள விவேகிகளாகிய முதன்மையாளர்

அதிச் சீக்கிரத்தில் யூகிப்பது ஆவசியகமாம். அஃதேனெனில் அடியில் வரும் பிரதான வினாவிடைகளை ஊகித்துணர்மின்கள்.

வினா — குருவாகக்கொள்ளப்பிறசாதியாராகுமா?

விடை — தன் தந்தை உத்தமகுரு, தன் குலத்தான் மத்திமகுரு, அன்னியகுலத்தன் அதமகுரு என்று காமிகாகப்பிரமாணம் உண்டு. இவற்றுள் உத்தமம், மத்திமம், கொள்ளத்தக்கது, அதமம் தள்ளத்தக்கது ஆதலால் அன்னியசாதி குருத்துவங் கூடாது.

வினா — நமக்குப் பிறசாதி குரு விருத்தலால் வரும் பிழை என்னை?

விடை — தேவேந்திரனுக்கு யாகஞ்செய்யக் குலகுருவாகிய பிரகஸ்பதி பகவானிருக்க அவரை நீக்கி அன்னியனான துவட்டா புத்திரனென்னும் முச்சென்னி விச்சுவாவைக் குருவாக வைத்துக்கொண்டதினால் வந்த பெருந்துக்கமே சாட்சி. மேலும் அவர்கள் மனம் வேறு வாக்கு வேறாக விருந்து தமக்கென்னில் ஓர்விதமும் உட்பகையால் பிறருக்கென்னில் ஓர்விதமும் செய்வதன்றி, குருவென்கிற தானம் உயர்வெனவுஞ் சீடனென்கிற தானந் தாழ்வெனவும் நினைத்து மந்திர தந்திர உபசார முதலியனவும் மதிப்பின்றிச் செய்வதாலும், இதைப்பார்ப்பவர்களுக்கு அசங்கிதமாகத் தோன்றுவதாலும் இம்மையில் பழிப்பும், அதிற் சிக்குண்டவர் தத்தமக்குரிய ஒழுக்கமாறி வேற்றொழுக்கம் பூண்டிருப்பதால் மறுமையிற் பாவமும் வரும் ஆதலால் அன்னியசாதி குருத்துவங் கூடாது.

வினா — அவர்கள் ஆதிதொடங்கி இருந்தவர்களா? இடையில் வந்தவர்களா? அவர்களெத்தன்மை யுடையவர்கள், நாமெத்தன்மை யுடையவர்கள்?

விடை — வேதமுஞ் சிவாகமமும் அட்டாதசப்புராணமுஞ் சிவபெருமானிடங் கேட்டுச் சனற்குமாரர் முதலிய இருடிகளுக்குப் போதித்துப் பூமியிற் பரவச்செய்த நந்தியெம் பெருமானே வீரவாகுதேவராக அவதரித்து மனுகுலவிரத வரப்பிரசாதமாகப் பூவுலகில் வந்திருந்ததால், அவரது புத்திரமணிகளாகிய அனகருத்திரியரைக் குருபீடமாக அநாதியே மாவடித்தேவசிங்காதனத்தி லிருத்தினர்; அவ்வழித்தாய் நடந்தேறி வந்ததேயன்றி வேறில்லை. அப்பண்டாரங்கள் ஆதி தொடங்கி இருந்தவர்கள் அன்று. சுமார் எழுநூற்றுச் சில்லரை யாண்டில் காஞ்சிபுரத்தை யரசாண்ட சுக கலியரணிச்சோழன் அரசனாகவுஞ் செங்குந்தர் மந்திரிகளாகவும் இருந்த காலத்தில், பிரமபரம்பரையுளே நான்காம் வருணத்தரான சூத்திரருள்

வலங்கை இடங்கை யென்னுங் கலகம் சேர்ந்ததற்கு முன்னும் பின்னுஞ் சிவபரம்பரையராண் நம்மவரோடுஞ் சந்திக்க இடம்பெறாமல் இப்போது சில நாளைக்குமுன் யாசகமூலமாய் வந்து குருவென்கிறார்கள் போலும்; ஆதலால் அவர்கள் இடையில் வந்தவர்களே; அவர்கள் சைவரென்னில் சைவரென்னும் ஒரு சாதியுண்டா? இல்லை, பின்னென்னென்றால் வேளாளரென்கிறார்கள், அவ்வேளாளர் நான்காம் வருணத்தராயும் நம்மவர்கள் இரண்டாம் வருணத்தராயும் இருக்குந் தாரதம்மியத்தால் அவர்கள் குருத்துவம் நம்மவர்க்குக் கூடாது.

வினா — சாதிபேதங் கூடாதென்பது துறவறத்தாருக்கா; இல்லறத்தாருக்கா?

விடை — துறவிகள் சாதி குலம் ஆசாரங்கடந்தவர்கள் ஆதலால், பசி மசிவனே எம்மரபினனாக வந்து ஞானோபதேசஞ் செய்வனே என்னும் பிரமாணத்தால் அவர்களுக்குச் சாதிபேதங் கூடாது. இல்லறத்தான் மனைவியாதிய பந்தங்களோடுங் கூடியிருப்பவன், இவன் சாதி குலம் குடிப்பிறப்பு ஆசாரம் முதலியவற்றில் ஒன்றிலேனும் வழுவாதிருத்தல்வேண்டும் என்பதால் அன்னியசாதி குருத்துவங் கூடாது.

வினா — இது நம்முன்னோர்கள் கருத்துக்கிசைந்ததா அன்று?

விடை — திருக்கைலாயத்தில் தேவதனுவுடனிருந்து பின்னர் பூமியில் அயோனிசராய் மானவ தனுவுடன் வந்து தம்மக்களுக்குத் தாமே குருமூர்த்தமாக விருந்து மற்றுமுள்ள சிறப்புகளுஞ் செய்துவைத்ததால், அன்னியரைக் குருவாகக்கோடல் நம்முன்னோர்கள் கருத்துக்கிசைந்ததன்று.

வினா — ஆசாரியரின்றி யருளடையலாகுமா?

விடை — ஆசாரியரின்றி யருளடைதலாகாதாயினும் தொழிலிற் சிறந்தது பாவமில்லா நெய்தற்றொழில் என்றபடி, குருவிற் சிறந்தவர் தம்மரபினது நிலைமாறாக் குலகுரு வாதலால் நமது மரபில் அநாதியாகவே வந்துள்ள குருபீடங்களில் தற்காலம் காஞ்சிபுரம் பிள்ளையார்ப்பாளையம் கச்சி ஆளவந்த வள்ளலாராதினத் திருமடத்தில் சைவ சமயாசாரியர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சதாசிவதேசிகரும், கணபதி தேசிகரும் சிவசங்கர தேசிகரும், திருவாலங்காட்டுக் கார்க்கோடக மடாலய வாசாரியர் திருமழிசை ஸ்ரீ-ல ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகரும்; படப்பை காட்டு மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு சுவாமி தேசிகரும், சோம்பாக்கம் கைலாயபுரி மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞான த்தி தேசிகரும், பெருநகர் கணபதி மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ பரஞ்சோதி

தேசிகருமாக ஆங்காங்கு குலகுருவிருக்கத் தங்கள் கைக்கு எட்டினமட்டில் பொருள் பறிப்பதில் தீர்க்கமாயும் மந்திரதந்திரங்களைச் சொல்வதில் வழுவழுப்பாயுந் திரிகின்றவர்களால் சிவானுக்கிரகம் பெறக்கூடுமா! ஆதலால் அன்னிய சாதி குருத்துவங் கூடாது.

வினா — இப்போதிருக்கும் குருவை நீக்கினால் குருத்துரோகமாகாதா?

விடை — முற்காலத்தில் சில குக்கிராமங்களி லுள்ளவர்கள் தங்கள் ஆசாரியர் காஞ்சிபுரம் திருவாலங்காடு படப்பை இப்படிப்பட்ட இடத்திலிருக்கிறார்கள் என்று கேள்விபட்டாலும் வருந்தி நடந்து செல்ல வேண்டுவதால், அதெங்கிருக்கின்றதோ நாம் அதைக்காண்பது அரிது என நினைப்பார்கள். அவ்வாசாரியரேனும், சதா சிஷ்யயாத்திரையில் இல்லாமல் ஓர் அசந்தர்ப்பத்தால் இருந்தவிடத்திலேயே சிலகாலம் இருந்துவிட்டால், மீட்டும் ஒவ்வொருவரையுங் கடந்து ஒவ்வோர் சிஷ்யரைக் காணப் பத்திருபது வருடஞ் செல்லும். இவ்வித காரணத்தால் கல்வி இழந்த சில சீடர்கள் தங்கள் ஊருக்கு ஒரு குரு வந்தால் தீக்ஷையில்வைத்த விருப்ப விசேடத்தால் எங்கள் குரு நெடுநாளாகக் காணோம், இவர் யாவரோ எங்களுக்குத் தெரியாது, எங்கள் தகப்பனுருக்குத் தீக்ஷை செய்துவிட்டுப் போயினராம், என்று சொல்லிவந்தவர் யாவரென்றும் விசாரியாமல் இவருங்குருதானே இவரிடத்தில் தீக்ஷை செய்து கொள்ளுவோமென்று மாறிப் போய் விடுவார்கள். இப்படி தவறுவது அறியாமையால் வந்த தோஷம் ஆதலால் அவர்கள் அந்தக் குருவை விட்டுவிட்டுத் தங்கள் குருவை யடைந்து பிராயசித்தப் பூர்வகமாகத் தீக்ஷை செய்துகொண்டால் முன் செய்த குருத்துரோகமாகிய அத்தோஷம் நீங்கி நல்லறிவுதித்துச் சுகமடைவார்களே யன்றித் துரோகிகளாகார்கள்.

வினா — ஆயினும் மூதாதையர் வழக்கமாற்றுவது முறையாகுமா?

விடை — அன்னியகுருவை யடைவது யாவர்தான் ஒப்புவார்கள்! அந்தணர்குரு, அரசர்குரு, வணிகர்குரு, ஏனைய வருணர்குரு, இவர்களிடம் அவ்வவர் சாதியாரன்றி மற்றையர் மாறி நிலைபிறழ்வரோ! நமது மரபில் மாறிவிட்டதென்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ! இதைவிட நம்போற் சிவபரம்பரையராகிய ஆதிசைவப் பிராமணகுருவை யடைந்தால் தீங்கில்லை. ஆகவால் தகப்பன் பாட்டன் தவறினதை நீக்கித் தன் குல குருவை யடைவது முறையாம்.

வினா — ஆயின் இவ்வன்னிய குருத்துவம் எக்காலத்தேற்பட்டது?

விடை — இடையில் சில கொடுங்கோன் மன்னரால் பலமுறையும் நேரிட்ட கலகத்தில் அச்சுகெட்டுத் தச்சுமாறி உலகம் புரண்டு நிற்கையில், நம்மரபினரில் சிலர் தவறிச் சூத்திரரிடம் தீக்ஷை செய்துகொண்டார்கள் போலும்.

இவ்விதந் தவறிநடப்பது தகுதியல்லவென்று தெளிந்தவர் சொல்லக் கேட்டும் மீட்டுந் தகாதவிடம் புகுதல் தருமமோ! இதுபற்றி சூத்திரரைக் குருவாக வைத்துக்கொண்டு அவரிடத்தில் புருஷார்த்தந் தரத்தக்க சாத்திரங் கேட்டவர், சாத்திரவழி தீக்ஷைபெற்றவர், அரிய பொருள் யாசித்தவர், அப்பொருள் வாங்கி யாகஞ்செய்தவர், விழுந்து பிழைத்துக் கரையேறுவதற்கு அரிதாகிய நரகத்தை யடைவார்கள் என்னும் பொருள் தோன்ற

கவி

பின்னவருடத்தில் அறம்பயில்விஞ்ஞைகற்றுளோரவர்பா
 லரும்பொருளேற்றுளோரவர்பால்
பெறும்பொருளதனல்வேள்வியாற்றுனர்கள்
 பிழைப்பருநரகிடைச்சேர்வார்.

என விதித்த காசிகாண்டம் இல்லொழுக்கங் கூறிய அத்தியாயம் 28 கவியையும்;

அவர்களிடங் குருப்பிரசாதமென்று சோற்றைவாங்கித் தின்பவரைப்பற்றி (சாத்திரவாராய்ச்சியால் உள்ளந்தெளிந்த வேதியர் இட்ட சோறு தேவாமிர்தமாகும், க்ஷத்திரியரிட்ட சோறு மகிழ்ச்சியைத் தரத்தக்க பாற்சோறாகும், வைசியர் இட்ட சோறு நல்லபலனைக் கொடுக்கத்தக்க சோறாகும், சூத்திரர் இனிதாயிட்டதேனும் அது இரத்தங்கலந்த சோறாகும், ஆதலால் சூத்திரர் சோற்றை மனதிலும் நினைத்தல் கூடாது) என்னு பொருள் தோன்ற

கவி

உட்டெளிமறையோரளித்தசோறமிர்தம்வேந்தர்சோறுவந்தபாலடிசில்
எட்டியரளித்தவடிசினல்லடிசில்பின்னவரினிதிடுமூரல்
கொட்டியகுருதியாதலால்பின்னோரிடத்துணல்குறிப்பினுமாகா.

என விதித்த ஷை அத்தியாயம் 35 வது கவியையும் பாருங்கள்.

மேலும், நமது முன்னோர்கள் பூர்வம் இந்நாவலந்தீவெங்கும் சிவாலய குருலயங்களைத் தாபித்து அவற்றிற்கு எல்லாம் தாங்களே தருமகர்த்தர்

ச[illegible]விருந்து பரிபாலித்து வந்தார்களென்பதற்கு, ஈட்டி யெழுபதென்னூர் திருவருட் பிரபந்தத்தில்

கவி

விட்டங்கமேழாதிவீதிவிடங்கமாரூர்வெண்காடு
நடங்கொளூர்தில்லைமதூர்பஞ்சனன்னதிசாய்க்காடு
மிடங்கொண்மாகாளமேழுமிடைமருதூர்செங்காடுந்
தொடங்கியதருமவாட்சிச்செங்குந்தத்தொகுதிவாழி.

என்பது சான்றாக விருந்தும், அத்தருமவாட்சியை யாதுகாரணத்தாலோ அன்னியர் கைக்கொள்ள விடுத்து ஆலோசியாதிருப்பது! இஃதற்புதம்! அற்புதம்! அற்புதம்!

அன்றியும் நம்மவர்கள் ஒவ்வோரூரினும் அத்தேவாலய பரிபாலன நிமித்தம் மடம் தடம் நந்தவனங்கள் முதலிய உண்டாக்கி அந்த ஒவ்வொன்றுக்கும் நம்மவர்களென்றே சொல்லி யேமாற்றித் திரிந்து கொண்டிருந்த ஒவ்வொரு வேளாளப்பண்டாரங்களையேனும் வீரசைவப் பண்டாரங்களை யேனும் வைத்து, மடத்திற்கு அலகிட்டு மெழுகிட்டுத் தீபம் வைக்கவும் பூஞ்சோலைக்குக் கொத்தித்தண்ணீர்பாய்ச்சிப் பூவெடுத்துத்தொடுத்து சகொடுக்கவும் உத்தரவு செய்வார்கள்; அவ[illegible] சிலநாள் செல்லச்செல்ல மடத்தாண்டியாய், மடத்தையராய், மடத்துச்சாமியாராய் உத்தரவு கடந்து நடப்பார்கள். அவர்களைத் தண்டிக்கப் போனால் நாங்கள் நெடுங்காலம் இந்தமடத்தில் தானே இருக்கிறோம், மடம் எங்களுடையதே என்பதல்லாமல் நாங்களுங் குருவுதானென்று சொல்லுவார்கள். பூவாண்டிகளும் அவ்வண்ணமே. பின்னர் பலநாள் செல்ல அவைகளில் சில எவராலும் பரிபாலித்தலற்று உருமாறிச் சீரணிக்கின்றன. இது எவ்வளவு பெருங்கேடு பாருங்கள்.

இப்படிப்பட்ட சங்கடங்கள் நேரிடாதபடி நமது மரபில் ஒருவனை யேற்படுத்தி அவனுக்கு அவ்வாண்டிகளுக்கு நடப்பிக்குஞ் சம்பளமும் அன்னமுந் தராமே: அப்புண்ணியத் தொழில் இழிந்ததென்றே நம்மவர்கள் அத்தொழிலுக்கமைய உட்படாதிருப்பது! அல்லது இவனுக்கு நாம் [illegible] பொருள் கொடுக்க வேண்டுமென்னும் பொறாமையினாலோ நம்மினத்தவரை நமது காரியங்களில் வைக்காதிருப்பது! அன்றியும் நமது மரபைப் பற்றிப் பிறசாதிப் பெரியோரால் கூறியுள்ள திருக்கைவழக்கத்தில்

-இற்பழிக்கு :

நாண்பண்ணலன்றியெமநம்பன்றிருத்தொண்டை
யாண்பெண்ணடங்கலுஞ்செயம்பொற்கை.

எனவும், மாலையில்,

முத்தமிழ்சேர்ந்தரெம்முன்னவன்கோயின்முறைகளைத்தங்
கைத்திலந்தந்தவஞ்ஞான்றயலார்க்கொருகாரியமும்
வைத்தறசாதெனவாண்பெண்ணடங்கலும்வாங்கிச்செய்தே
செத்திறவாச்சிறப்பெய்தினின்றார்களிச்செங்குந்தரே.

எனவு மிருப்பனவற்றையேனும் உணரலாகாதா? திருவிரிஞ்சை, திருப்பு த்தூர், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், முதலிய பலவிடங்களிலுள்ள அம்மட முதலியவைகளுக்கு இவ்வித வழக்கு நேரிட்டது யாவருக்குந் தெரிந்த விஷயமே,

நம்மவர்கள் திருக்கழுக்குன்றத்தில் பக்ஷிக்கு அன்னமூட்டும் பணியை அநேககாலம் நடத்தினார்கள். அப்படி நடத்தினவர்கள் இடையில் ஒரு தென்னாட்டுப் பண்டாரத்தை ஆளாக்கிவைத்து, பலநாள் விட்டு சுமார் முப்பது வருடத்திற்குமுன் கேட்க நாங்கள்தான் பக்ஷிக்கு அன்னம் கொடுப்பவர்கள் என்றான். அதற்கு நியாயத்தலத்தில் வழக்கிட அப்பண்டா ரம் என்னசென்றே சத்தியஞ் செய்தான். அதனாலதை விட்டுவிட்டார் கள். இது பிரத்தியக்ஷமான காரியம்.

அம்பாழிமூழ்கியொருகற்பமெலாங்கிடக்கினுமென்னாழலினின்றும்
வெம்பாமேவெளிக்காலுண்டேட்காலைவெளியில்விடாதிருந்தாலென்னே
வம்பாருமிதழியணிவேணியனார்வேதமலைவலம்வந்தீண்டுஞ்
சம்பாதிக்கருமதளிக்குஞ்சயக்குந்தீம்போல்வினவந்தாராவன்றே.

என்று ஈட்டியெழுபதாகிய திருவருட் பாசுரத்தும் "கழுக்குன்றிற் சம்பா திக்கமுதூட்டுங் கைக்கோளர்" என்று வீரநாராயணர் விசயத்துஞ் சொ ல்லவழங்கிவருகின்றது. இதுவே இங்ஙனமாகில அன்னியரைக் குருவா கக் கோடலால் அனந்தங் கெடுதி வந்ததும் வருகிறதும் வருவதுமாகவே முடியுமன்றோ.

நமது மஹாராணியவர்கள் செங்கோலில் சீர்திருந்தாதவர்கள் ஒரு வருமில்லை, நாம் குலத்தருமங்கெட நடப்பதால் வருங்கெடுதி இவ்வள வு என்றறிவிக்கக்கூடாது "குலங்கெடவேவருகின்ற குலத்தருமங்கேடு

சரும் - நலங்கெடவேகுலம்பாவநன்னும்" என்னுங் கீதையின் கருத்தை யுணர்ந்து, செங்குந்தர் திருக்கைவழக்கத்தில்

-மேவு
பிறவியினூடே குலசீர்பேணியிருமைப்
பிறவியினூடொல்காப்பெருங்கை - மறைநூதல

வோதுவித்தகத்தொழிலையுற்றுமடைந்தார்க்கவற்றை
யோதுவித்துமந்தணச்சிரொன்றுங்கை - பூதமுனாய்

வேட்டுவித்தகத்தொழிலைவேட்டுமடைந்தார்க்கவற்றை
வேட்டுவித்துநல்வினைகொள்வேதனக்கை - நேட்டமுறு

மூத்தரசைவத்தீக்கையோடுசமயாதியவா
மூத்திறத்தீக்கைப்பரவுமுத்திரக்கை.

எனவும் செங்குந்தர் மாலையில்

ஞானகைத்தீக்கையுட்டன்மைதசமயமுயன்றளிப்பத்
தாவில்விசேடநிருவாணந்தங்குலத்தந்தணர்கை
பரவ[illegible]த்தர்பன்முறையாய்ந்துபரிந்தளிப்பத்
[illegible]ருமெச்சப்பெற்றோங்கிநிற்பார்கள[illegible]ங்குந்தரே,

எனவும்,

செங்குந்தர்மரபுவிளக்கத்தில்

சமையவிசேடநிருவாணதீக்கைதரித்துட
னமையபிடேகமும்பெற்றங்கவர்குலத்தாசிரியரா
யிமையமுதற்கொடுசேதுவரைக்குமினிதுறைந்து
இமையவிலக்கெனயாண்டும்விளங்குவர்செங்குந்தரே.

எனவுங் கூறியுள்ளன வற்றைப் பரியாலோசனை செய்யுங்கள்,

செங்குந்த வாசாரியர்களாயினோர் ஆன்மார்த்தப் பூசனையால் சிவபெருமானை உருக்கத்தோடு வணங்க வறியாத சீடர்கள் மலபந்தங்களையும் தங்களால் உபதேசிக்கப்பெற்ற வண்ணம் பஞ்சாக்ஷரத[illegible]ளத்தில் நினைத்து வெள்ளிய திருநீற்றை ஈசானமாதிய மந்திரங்களால் சிரசாதி இடங்களில் விருப்பத்துடன் தரிக்கவறியாத சீடர்கள் மலபந்தங்களையும, தாம்தந்தசமயம் விசேஷம் நிருவாணமென்கிற தீக்ஷாவல்லமையி[illegible]றல் நீட்

ளை மனமாகி "சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாய்" என்றபடி சிவானந்தத்தி லழுந்தி அவ்வானந்தத்தால் கண்ணீர் ததும்ப முதல்வனிடத்து நடனங்கொள்ள வறியாத சீடர்கள் மலபந்தங்களையும், பரார்த்தப் பூசனையால் சிவாலயங்களை வலஞ்செய்ய வறியாத சீடர்கள் மலபந்தங்களையும் சிக்ஷைசெய்து சிவதீக்ஷை செய்வரென்னும் பொருள்தோன்றத் திருவருட்பிரபந்தமாகிய நட்டி எழுபதில்

உருக்கொடுபணியாதாரையுளத்திலெழுத்தையுன்னிப்
பெருக்கொடுதவளநீற்றைப்பேணியேயணியாதாரைத்
தருக்கொடுநின்றுகண்ணீர்ததும்பமுன்னுடாதாரைத்
திருக்கோயில்வலம்வாராரைச்சினத்தொடும்பொருஞ்செங்குந்தம்.

என்றும், கன்மபந்தங்களைச் சிக்ஷைசெய்து சிவதீக்ஷை முடித்து அக்கன்ம பந்தங்கணீங்கவே மனோவாக்குக் காயமென்னுந் திரிகரணங்களு மொத்துச் சத்திநிபாதமெய்தச் சிவலோக மடைவித்து இரக்ஷிப்பரென்னும், பொருள் தோன்ற மீண்டுமப் பிரபந்தத்தில்.

கூவிளையிதழிதும்பைகொண்டருச்சித்தபேர்க்கும்
மூவர்தம்பாடலோதிமுன்னின்றுபணிந்தபேர்க்கும்
ஆவலோடஞ்செழுத்தையகத்துளேநினைந்தபேர்க்கும்
தேவநாடாளவைக்குந்திருக்கைவேற்றுணைச்செங்குந்தம்.

என்றுங் கூறியுள்ள பாசுரங்களின் விருத்தியுரையைத் தெளிவுபெறக்காட்ட இது ஒழுக்கமாதலால் சுருக்கிக் காட்டினோம்; இக்குல ஒழுக்கத்தின் உட்கருத்தை ஆங்காங்கு ஒவ்வொருவரும் யூகித்துப் பாருங்கள். இதைக் கண்ட வுடனே நம்மவர்களாயுள்ள அனைவரும் சிவாலய குகாலயங்கள் தோறும் நடத்திவந்து கைசோரவிட்ட தருமபரிபாலனங்களையும், அவ்வாலயங்களின் பொருட்டமைத்துள்ள மடம் தடம் நந்தவன முதலியவைகளில் தக்கவர்களை வைத்து ஜீரணோத்தாரணஞ் செய்யவேண்டிய முறைமைகளையும் கவனித்து; நம்மவர்களில் சிலருக்குள்ள பிரசாதிப்பண்டாரங்கள் எங்கிருந்தாலும் அதிக விரைவில் நீக்கிப் பிறகுருவென்னுங் குற்றம் போக்கிக் குலகுருவென்னுங் குணத்தை யுண்டாக்குவீர்களென்று திருவருளைச் சிந்திக்கின்றனம்.

கல்யாணச்சடங்கு.

விவாக நிச்சயமான பின்பு முதலில் பிள்ளையின் வில், வாள், கட்டி, இவற்றை மணமகளைத் தொடுவித்து அசன்பின் க்ஷத்திரியச் சின்னங்

தோடு மணமகனை சிங்காரித்து குதிரைமேலிருத்தி ஊர்கோலம் வந்து பெண்வீட்டுக்குப்போய் சாஸ்திர விதிப்படி கல்யாணஞ்செய்தல், சிறு பான்மையாய் பிள்ளைவீட்டிலுஞ் செய்வதுண்டு.

கவனிப்பு:— நான்கு வருணத்தாருக்குரிய சடங்காச்சாரங்கள் சிற்சில விடங்களில் அந்தந்த தேசாச்சாரம் போல் சில மாறியும் அன்னிய ஜாதி ஆச்சாரம் கலந்தும் தற்காலம் மாறுபட்டிருக்கின்றன வாகையால், சாஸ்திர விதிப்படி கல்யாணஞ் செய்வது நம் குலகுருவைக் கொண்டாவது அல்லது ஆதிசைவப் பிராமணக் குருவைக் கொண்டாவது செய்வித்தால் அவர்கள் சாஸ்திர ஒழுங்காகவும் சீர்முதலான வரிசைக்கிரமங்களையும் செய்து நடத்திவைப்பார்கள். அப்பொழுது கண்டு தெளியலாம். இவற்றை விவரித்து எழுதப்புகின் விரியுமாதலால் சுருக்கி எழுதலாயிற்று.

ஜனனகாலத்தில் செய்யும்சடங்கு.

கர்ப்பாதனம், பும்சவனம், சீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், சந்திரிதித்தல், அன்னப்பிராசனம், சூடாகர்ணம், வித்தியாரம்பம், உபநயனம், என்பவைகளாம்.

(1) கர்ப்பாதனம் = பெண் ருதுவானபின்பு மணமகனும் மணமகளும் ஒன்றுபடச் செய்யும் சடங்கு.

(2) பும்சவனம் = (பூச்சூடல்) கர்ப்பம் தரித்த 3-வது அல்லது 5-வது மாதத்தில் எந்தப்பகலில் புருஷ நக்ஷத்திரத்துடன் சந்திரன் கூடியிருக்கிறானோ அந்தப் பகலில் பும்சவன சடங்கு செய்தல்.

(3) சீமந்தம் = கர்ப்பம் அசைவுறும் காலம் தொடங்கி பிரசவமாகுமுன் செய்யும் சடங்கு.

(4) ஜாதகர்மம் = குழந்தை பிறந்தவுடன் ஜோதிஷ சாஸ்திர விதிப்படி பிறந்த நாள் நட்சத்திரங்கள் முதலியவற்றை எழுதுவித்து பிராமணர்கட்கு தானம் கொடுத்தல் முதலிய சடங்கு.

குறிப்பு.— மகவைப்பெற்ற தாய்க்கு 10 நாள் அறையில் தீட்டிருக்கின்றனுமையால் 10 வது நாளில் வீடுவாசல் சுத்திசெய்து பாண்டமுதலியவற்றை சுத்திசெய்து 12 நாள் தாயையும் மகவையும் ஸ்நானம் செய்வித்து

நீட்டுக்கழித்து தன் குலகுருவைக்கொண்டாவது அல்லது ஆதிசைவ பிரா மணக்குருவைக் கொண்டாவது புண்ணியாகவசனம் செய்வித்தல் இக்காலங்களில் பந்துமித்திரர்களையும் வரவழைத்து அவர்களையும் ஸ்நானம் செய்துவித்து விருந்திட்டு சந்தோஷம் கொண்டாடுதல்.

(5) நாமகரணம்= 10, 12, நாட்களில் சுபமுகூர்த்தத்தில் மகவுக்குப் பெயரிடுதலுக்குரிய சடங்கு க்ஷத்திரியர்க்குரியப் பலத்தைக் குறிக்கும் பெயர்களையாவது அல்லது பக்தி சப்பந்தமாய் தங்கள் இஷ்ட தேவதையின் பெயர்களை பெண்கட்கும் இடுதல்,

குறிப்பு.— பிராமணனுக்கு மங்களகரமான பெயர் — ஸர்மன்.
க்ஷத்திரியனுக்கு பராக்கிரமானபெயர் — வர்மன்.
வைசியனுக்கு தனத்துவமானபெயர் — குப்தன்.
சூத்திரனுக்கு அடிமையானபெயர் — தாசன்.

பெண்களுக்கு நாமகரண மிடும்போது அஃது மங்களகரமாயும் தீர்க்காக்ஷரத்தை யுடையதாயும், அன்னியரால் சுலபமாகக் கூப்பிடுவதாயும் ஆசீர்வாதத்தைத் தருவதாயு மிருத்தல் வேண்டும்.

இவ்வகையானப் பெயரிடல் வேண்டுமென்று ஸ்மிருதிப்பிரமாணம்.

(6) சந்திமிதித்தல்= குழந்தையைப அது பிறந்த கிரகத்தினின்றும் வேற்றிடத்திற்கு எடுத்துக்கொண்டு போகுதல் சந்தி மிதித்தல் என்னப்படும்.

குறிப்பு.— இஃது குழந்தை பிறந்த 3-வது மாதத்தில் சூரியனையும் 4-வது மாதத்தில் சந்திரனையும் பார்க்கவேண்டி கோயிலுக்குப் போய் வருதல்.

(7) அன்னப்பிராசனம்= குழந்தைக்கு பல் முளைத்தவுடனே யாவது அல்லது ஒருவருஷத்திலேயாவது விதிப்படி தாயின் மடிமீது உட்கார வைத்து அன்னம் உண்பித்தலாகிய சடங்கு.

(8) சூடாகர்ணம்= குழந்தைக்கு ஒருவருடம் அல்லது 3-வருடமானபின்பு பிறந்த காலத்திலுள்ள தலையயிரை வாங்கி காதுகுத்தல் முதலிய சடங்கு செய்தல்.

(9) வித்தியாரம்பம்= பிள்ளைக்கு 5 வயதில் நல்லநாளில் விதிப்படி வித்தியாப்பியாசமும் தனுர்வித்தியாப்பியாசமும் செய்வித்தல், தனுர்வித்தைக்குப்பதிலாக தற்காலம் சாமசாத வித்தையை சற்பிக்கின்றார்கள்,

(10) உபநயனம்= (இதன்பொருள்) ஆச்சாரிக்குச் சமீபமாய்ச் சேர்ப்பித்தல். பூநூல் தரித்தல் முதல் மூவருணத்தாருக்கும் உரியது. பிராமணர் 7 வயது முதல் 11 வயது வரைக்கும், க்ஷத்திரியர் 11 வயது முதல் 22 வயது வரைக்கும், வைசியர் 12 வயது முதல் 24 வயது வரைக்கும் உபநயனம் செய்து கொள்ளலாம். இங்ஙனம் செய்யத்தவறினவர்கள் விராத்தியர்களென்னப்படுவார்கள். இவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்து தரிப்பதுமுண்டு.

பூநூல் தரிக்கவேண்டிய விதி.

நூற்கப்பட்ட முப்பரியை யுடைய இழைகள் கூடி இடதுதோழின் மேலிருந்து வலது தொளின்கீழ் தோங்கத்தக்க பூநூலை பிராமணன் பருத்தி நூலினாலும் க்ஷத்திரியன் பட்டுநூலினாலும் வைசியன் ஆட்டுமயிரினாலும் தரிக்கக்கடவன்; மேற்கூறியவை கிடையாவழி மூன்றிணை நூலினாலாயினும் தரித்துக்கொள்ள வேண்டுமென்பது வேதவிதி.

மணம்புரியாதவர்கள் ஓர் சூத்திரத்தையும் மணம்புரிந்தவர்கள் இரண்டு சூத்திரத்தையும் தரித்தல் விதி ஆடையங்கப் பிராயச்சித்தார்த்தமாக மற்றொன்று சேர்த்து மூன்று முடி தரித்தலும் வழக்குகின்றது.

சவசங்கள் செய்கிறகாலங்களில் மாலையாகத் தொங்குகின்ற பூநூலைமுதுகின்புறமாக இடல்வேண்டும். அல்லது வலதுசெவியிற் சுத்தவேண்டும்.

ஆடையாபரணங்கள்

ஆண்மக்களுக்கு

அரை சல்லடம்கட்டி அதின்பேரில் வஸ்திரமுடித்தி அங்கி தரித்து கிரீடம்தரித்தல் அல்லது தலைக்குப்பாகை தரித்தல், வாகுவலயம் வீரகெண்டை கடுக்கன் ஆழிமுதலியன,

பெண்களுக்கு.

சிற்றுடை, பாவாடை, புடவை, கம்மல், மூக்குத்தி, காதோலை, அட்டிகை, காரை, தண்டை, சலங்கை, காப்பு, கொலுசு, கர்ணபூ முதலியன,

குறிப்பு:—ஆடையாபரணங்கள் காலத்திற்குத் தக்கபடி மாறுபடுகின்றன.

ஜாதிக்குரிய பட்டப் பெயர்களாவன

பிராமணனுக்கு சர்மரென்றும், க்ஷத்திரியருக்கு, வர்மரென்றும், வைசியருக்கு, குப்தரென்றும், சூத்திரருக்கு, தாசரென்றும் பட்டப்பெயர்கள். அந்தந்த ஜாதிக்குரிய தொழிலைக்குறிக்கும்படி இடுதல்வேண்டுமென்று மனுகூறுவதுபோல் க்ஷத்திரியருக்கு அதிகாரத்தையும் எஜமானத்துவத்தையும் வீரத்துவத்தையும் குறிக்கும் பட்டப்பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன.

அவையாவன.— வர்மர், நாயகர், பூபதி, கோமான், தேவர், வளவர், செம்பியர், கச்சிராயர், நாயனர், முனிவர், சேனைத்தலைவர், முதலியார், வீரர், தேசிகர்.

குறிப்பு.— மாவடி சிங்காசனத்தில் அரசு வீற்றிருந்தபோது மகுடப்பெயர் — ஆண்டவர்.

மரணகாலச்சடங்கு.

பிராணன்போனபின்பு தீக்ஷை பெற்றவர்களாயிருந்தால் விதிப்படி தீக்ஷை இறக்கி பணிச்சவர்களைக் கொண்டு பல்லக்கு அல்லது பாடைகட்டுவித்து அதன்பேரில் சவத்தை வைத்து புலிக்கொடி, கோழிக்கொடி, விற்கொடி. வில்மணி, பஞ்சவன்னை விருதுமுதலிய க்ஷத்திரிய சின்னங்களோடு மயானத்திற்குச் சென்று சமாதியாயினும் தகனமாயினும் செய்வது வழக்கம்.

தகனம் செய்தவர்கள் மறுநாளும் சமாதிசெய்தவர்கள் மூன்றுவது நாளிலும் பால்தெளித்தல், எட்டாம் நாளில் சமீபத்திலுள்ள பந்துக்கள் யாவரும் வந்து இறந்தவர்க்குப் பண்டுபலகாரங்கள் படைத்து துக்கம் கொண்டாடுவது வழக்கம்.

கருமாந்த காலத்தை பந்து மித்திரர்களுக்குத் தெரிவித்தல், பத்தாம் நாள் பிராமணரும், பனிரண்டாம்நாள் க்ஷத்திரியரும், பதினைந்தாம்நாள் வைசியரும், முப்பதாம்நாள் சூத்திரரும் கருமாதிச்சடங்குச் செய்யவேண